ஸ்ரீமத் பகவத் கீதை

19-3



ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-4

ஸ்ரீமத் பகவத்கீதை

॥ श्रीमद्भगवद्गीता ॥

(ஸ்ரீராமகிருஷ்ண தீபம் என்னும் உரையுடன் கூடியது)

ஆறுவது பதிப்பு

உரை ஆசிரியர்

"அண்ணா"

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் : : சென்னை–600004.

© பிரசுரம்: ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

முதல் வெளியீடு 1945
மறு பதிப்புக்கள் 1948, 1949,
1957, 1965.
and 1974

VI—3M/3C/2-74

விலை
சாதா பைண்டு ரூ. 8-00
காலிகோ பைண்டு ரூ. 9-50

அச்சிட்டோர்:
பாரதி விஜயம் பிரஸ்
சென்னை - 600005.

பொருளடக்கம்

அனுபந்தம்

குறிகளின் விளக்கம்

உச்சரிப்புக் குறிகள் : கொட்டை எழுத்து

க	ग	'கங்கை' என்பதில் போல
ட	ड	'குடம்' ,,
த	द	'பாதம்' ,,
ப	ब	'இன்பம்' ,,
ரு	ऋ	'எருது' ,,
ச	श	'பாசம்' ,,
:		ஹ, ஹி, ஹு ...ராம: = ராமஹ ; ஸ்ரீ: = ஸ்ரீஹி. பாண்டு: = பாண்டுஹு ; என்றவாறு ஈற்றெழுத்துடன் ஒத்துவரும். 'க: கிம்' = கஹ, கிம்.
ऽ	—	' அ ' தொக்கு நிற்கும்.

மற்றக் குறிகள்

உ-ம்.—உதாரணம்.
அது.—அல்லது, அதாவது.
அ.—அவயவப்பொருள்
ஒ.—ஒப்பிடுக.
மு.—முதலியன.
கீ.—ஸ்ரீமத் பகவத் கீதை.
ம. பா.—மகாபாரதம்.
பாக.—ஸ்ரீமத் பாகவதம்
ரா. கி.—ஸ்ரீ ராமகிருஷ்ணர்
சு.—சுலோகம்.
கே.—கேள்வி
வி.—விடை
கீ.ஸ.—கீதார்த்த ஸங்க்ரகம் (ஆளவந்தார்மூலத்தை வேதாந்த தேசிகர் தமிழில் பாடியது.)

கு.—குறிப்பு.
கீ. வெ.—பகவத் கீதை வெண்பா (முத்து ஐயர்)
ப. கீ. ப.-பட்டனர்கீதை பரமார்த்த தரிசனம்
ஈச. உப.—ஈசாவாஸ்ய உபநிஷத்.
கே. உப,—கேன ,,
கட. உப.—ப்ரச்ன ,,
மு. உப. முண்டக ,,
மா. உப.—மாண்டூக்ய ,,
தை. உப.—தைத்திரீய ,,
ஐ. உப. ஐதரேய ,,
சா. உப. சாந்தோக்ய ,,
ப்ரு.உப. -ப்ருஹதாரண்ய
ச்வே. உப.—ச்வேதாச்வதர ,,

வன்பற் றறுக்கு மருந்தென் று மாயவன் தானுரைத்த
இன்பக் கடலமு தாமென நின் றவிக் கீதைதன்னே
அன்பர்க் குரைப்பவர் கேட்பவர் ஆதரித் தோதுமவர்
துன்பக் கடலில் துளங்குகை நீங்கித் துலங்குவரே.

(கீ ஸ.)

ओं

आत्मसमर्पणम्

स्वरूपनिरूपणहेतवे

श्री शिवानन्दगुरवे नमः ॥

ஓம

ஆத்ம ஸமர்ப்பணம்

ஸ்வரூப நிரூபண ஹேதவே

ஸ்ரீ சிவானந்த குரவே நம: ||

ஓம்

ஸ்வரூப விளக்கத்திற்குக் காரணமாகிய

ஸ்ரீ சிவானந்த குருவிற்கு நமஸ்காரம்.

முகவுரை

ஸ்ரீமத் பகவத்கீதையின் ஒவ்வோர் அத்தியாயத்தின் முடிவிலும் அதன் பெருமையை விளக்கும் முத்திரை உளது—'இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸு உபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுன ஸம்வாதே' என்று. வேதத்தின் சிரத்தில் உள்ளதுதான் உபநிஷத்து எனப்படுவது; ஆனால் கீதைக்கும் அந்த உயர்ந்த ஸ்தானம் அளிக்கப்படுகிறது. மகாபாரதம் ஐந்தாவது வேதம் எனப் போற்றப்படுவதால் அதற்கும் ஓர் உபநிஷத்து வேண்டும் என்று வேதவியாஸர் பகவத்கீதோபநிஷத்தை அதில் வைத்தார்போலும். இது பிரம்மவித்தையாயும் தலை சிறந்த யோகசாஸ்திரமாயும் ஜீவாத்ம பரமாத்ம ஸம்பாஷணையாயும் விளங்குகின்றது.

ஸ்ரீ சங்கராசாரியார் கீதாபாஷ்யத்தின் முகவுரையில், 'ஸமஸ்த-வேதார்த்த ஸார-ஸங்க்ரஹபூதம்' என இதைக் கூறியுள்ளார். இது இந்துக்களின் எந்த ஒரு தனி வகுப்பினருடையதும் அன்று. எல்லோருக்கும் பொது. இந்துக்களுக்கு மட்டும் அன்று. உலக ஆஸ்திக மக்கள் அனைவருக்கும் பொது. பகவான் தம் பெருமையை அர்ஜுனனுக்குக்காட்ட விசுவரூபத்தை எடுத்துக் கொண்டாற்போல் பகவத்கீதையும் தன் கருத்தைப் பரப்ப ஆயிரமாயிரம் வடிவங்களில் உலகத்தில் உள்ள பாஷைகளிலெல்லாம் உலவிவருகின்றது.

மகாபாரதப்போர் ஆரம்பிக்குமுன் வேதவியாஸர் திருதராஷ்டிரரிடம் வந்து, 'நீ யுத்தத்தைக் காண விரும்பினால் இருக்குமிடத்திலிருந்தே பார்க்கும் சக்தியை உனக்கு அளிக்கிறேன்' என்றார். திருதராஷ்டிரர், 'நான் காண விரும்பவில்லை. உம்மிடம் இருந்து அங்ஙனம் காணும் சக்தியைப் பெற்ற ஒருவர்

எனக்கு அனைத்தையும் வர்ணிக்கட்டும், அதுபோதும்' என்றார். ஸஞ்ஜயருக்கு வியாஸர் அந்தச் சக்தியை அருளவே, அவர் அவ்வப்பொழுது நிகழ்ந்ததைத் திருதராஷ்டிரருக்கு விரிவாகக் கூறலானார். பத்தாவது நாள் போரில் பீஷ்மர் அடிபட்டு அம்புப் படுக்கையில் சயனித்தபின் ஆதியிலிருந்து மீண்டும் அனைத்தையும் கூறும்படி திருதராஷ்டிரர் கேட்கவே, ஸஞ்ஜயர் கீதையைப் பதினோராவது நாள் எடுத்துரைத்ததாக மகாபாரதம் கூறுகிறது.

இரு சேனைகளும் போருக்கு ஆயத்தமாகி அணி வகுத்து நின்றதும் தருமபுத்திரர், 'துரியோதனனுடைய சேனைக்கு அதிபதியாக பீஷ்மர் இருக்கையில் நாம் எப்படி ஜயிக்கப்போகிறோம்?' என்று மனங் கலங்கி நிற்கவே, அர்ஜுனன் அவரையும் பிறரையும் நோக்கி, (யுத்த்யத்த்வ-மனஹங்காரா யதோ தர்மஸ்-ததோ ஜய:) அகங்காரமில்லாமல் பகவானை நம்பிப் போர் புரியுங்கள்; எங்கே தருமம் இருக்கிறதோ அங்கே வெற்றி நிச்சயம்' என்றான்.

பின்பு அர்ஜுனனுக்கு நன்மையைக் கோரிக் கிருஷ்ணன் துர்க்காதேவியைப் பிரார்த்திக்கச் சொன்னார். அர்ஜுனன் பின்வருமாறு துதித்தான்:

நமஸ்தே ஸித்தஸேனானி ஆர்யே மந்தரவாஸினி |
குமாரி காளி காபாலி கபிலே க்ருஷ்ணபிங்கலே ||
பத்ரகாளி நமஸ்துப்யம் தாரிணி வரவர்ணினி |...
ஸ்வாஹாகார: ஸ்வதா சைவ கலா காஷ்டா ஸரஸ்வதீ ||
ஸாவித்ரீ வேதமாதா ச ததா வேதாந்த உச்யதே |
ஸ்துதாஸி த்வம் மஹாதேவி விசுத்தேனாந்த-ராத்மனா ||
ஜயோ பவது மே நித்யம் த்வத்ப்ரஸாதாத் ரணாஜிரே ||

19-3

இங்ஙனம் துதித்தபின் மறுபடி தேரில் ஏறிக் கிருஷ்ணன் பக்கத்தில் அர்ஜுனன் நின்ருன். இருவரும சங்கநாதம் செய்தனர்.

> தத: ச்வேதைர்-ஹயைர் யுக்தே மஹதி
> ஸ்யந்தனே ஸ்திதௌ |
> மாதவ: பாண்டவச்சைவ திவ்யௌ சங்கௌ
> ப்ரதத்மது: ||

இதை ஒரு தியான சுலோகமாகக் கொள்ளலாம். வெள்ளைக் குதிரைகள் பூட்டி வெள்ளைச் சேலையால் அலங்கரித்து ஆஞ்ஜனேயக் கொடியுடன் விளங்கியது அர்ஜுனனுடைய தேர். அதன்மேல் அர்ஜுனனும் கிருஷ்ணனும் காட்சியளிக்கின்றனர். அர்ஜுனன் ஜீவாத்மாவுக்குப் பிரதிநிதி; கிருஷ்ணன் பரமாத்மா. அவர் அர்ஜுனனுக்குமட்டும் சாரதியல்லர். அடியார் அனைவருக்குமே சாரதி. சரீரமே தேர் ; இந்திரியங்களே குதிரைகள் ; ஸம்ஸார வாழ்க்கையே யுத்தம்.

அர்ஜுனன் தேர்த்தட்டில் நின்று இரு சேனைகளையும் பார்வையிட்டபின் தர்மபுத்திரர் கலங்கியதைவிட அதிகமாகக் கலங்கினுன். ‘எனது கை கால்கள் நடுங்குகின்றன ; வாய் உலர்கிறது. கையிலிருந்து காண்டீவம் நழுவுறகிது. உடம்பு எரிகிறது. எனக்கு வெற்றி வேண்டாம். கொல்லப்பட்டாலும் எதிரில் உள்ளவர்களை நான் கொல்லமாட்டேன்’ என்று கூறி, வில்லையும் அம்பையும் எறிந்துவிட்டுத் தேர்த்தட்டில் சாய்ந்தான். இது அர்ஜுன விஷாத யோகம் எனப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒருபோதாவது இப்படிப்பட்ட நிலை வரும். வாழ்க்கையே பயனற்றதாகவும் உலகே இருள் சூழ்ந்ததாகவும் நமக்கு நாமாகவே செய்துகொள்ளக்கூடியது ஏதும் இல்லையென்றும் ஆண்டவன் கையைப் பிடித்து

அழைத்துச் சென்றாலன்றி ஓர் அடியும் எடுத்து வைக்க முடியாதென்றும் தோன்றும். அப்படிப்பட்ட துன்பமானது பூமியை விதைப்புக்குத் தயாராக்கும் மழைபோன்று உள்ளத்தை ஞானப்பயிருக்கு உரிய தாக்குகிறது. 'துன்பம் என்னும் வாயில் வழியாகத் தான் ஞானமாகிற அரண்மனையில் பிரவேசிக்கக் கூடும்' என்பதைக் காட்டவே கீதைக்கு வாயிற்படி போல் அமைகிறது முதல் அத்தியாயமாகிற அர்ஜுன விஷாத யோகம்.

தகாத நிலையில் தகாத இடத்தில் கலக்கமடைந்த அர்ஜுனனைப் பார்த்துப் பகவான் கூறுகிறார்: 'பேடித் தனத்தை அடையாதே. உனக்கு இது சிறிதும் பொருந்தாது. அற்பமான மனத்தளர்ச்சியை ஒழித்து எழுந்திரு.'

'க்லைப்யம்மா ஸ்ம கம: பார்த்த நைதத் த்வய்யுபபத்யதே|
க்ஷுத்ரம் ஹ்ருதய-தௌர்ப்பல்யம் த்யக்த்வோத்
திஷ்ட்ட பரந்தப ||'

இது அர்ஜுனனுக்குக் கூறியது மட்டும் அன்று; பகவானுடைய சொல்லிற்குச் செவிசாய்க்கும் ஒவ்வொருவருக்கும் கேட்கும் ஒலி இது. துக்கத்தில் ஆழ்ந்த ஜீவனைத் தட்டி எழுப்பிப் புத்துயிர் அளிக்கும் மந்திரம் இது. இதே மந்திரந்தான் கடோபநிஷத்தில் வரும்: 'உத்திஷ்ட்டத ஜாக்ரத ப்ராப்ய வரான் நிபோதத' என்பதும். 'உலகில் பாவம் என்பது உண்டு என்றால் அதுதான் பயமும் பலஹீனமும். இந்த ஒரு சுலோகத்தை ஒருவன் படித்தால் அவன் கீதை முழுவதையும் படித்த பலனை எய்துகிறான். இதில் கீதையின் முழு ரகசியமும் ஆழ்ந்து உறைகிறது' என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

'வாழ்க்கைப் பிரயாணத்தை வெற்றியுடன் நடத்துவதற்கு ரயில் பிரயாணம் செய்பவன், முதலில் டிக்கெட்டு வாங்கிப் பத்திரமாக வைத்துக்கொள்வது

போல், ஆத்மாவைப்பற்றிய அறிவை அடைதல் வேண்டும்' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேசித்துள்ளார். அவ்வகையில் கீதை முதல்முதலில் இவ்வறிவைப் புகட்டுகிறது. 'ஆத்மா வெட்டொணாதது, எரிக்கொணாதது, நனைக்கொணாதது, உலர்த்தவொணாதது, அழிவற்றது, எங்குமுளது, என்றுமுளது, நிலைபெற்றது, அசைவில்லாதது. மனிதன் எவ்வாறு நைந்துபோன துணிகளை எறிந்துவிட்டு, வேறு புதியவற்றை எடுத்துக்கொள்ளுகிறானோ அவ்வாறே நைந்துபோன உடலங்களை விட்டு வேறு புதியவற்றை அடைகிறான்'. இந்த ஞானத்தில் நிலைபெற்றவன் 'ஸ்திதப்ரக்ஞன்' எனப்படுகிறான். இவனே பக்த சிரேஷ்டனும் த்ரிகுணாதீதனும் ஆகின்றான். இவனே வாழ்க்கையில் உயர்ந்த இன்பத்தை எய்துபவன் ஆவான். (ஸ சாந்தி மாப்னோதி ந காம காமீ) ஆசையைப் பின்பற்றிச் செல்லுபவன் எவனும் இன்பத்தையும் சாந்தியையும் அடையமாட்டான்.

பகவத்கீதையின் முதல் ஆறு அத்தியாயங்களில் கருமத்தைப் பயனில் பற்றின்றி பிரம்மார்ப்பணமாகச் செய்யும் மார்க்கமும் நடு ஆறு அத்தியாயங்களில் பக்தி மார்க்கமும் கடைசி ஆறு அத்தியாயங்களில் ஞான மார்க்கமும் கூறப்படுகின்றன. அல்லது முதலில் யாகமும் இடையில் யோகமும் முடிவில் தியாகமும் உபதேசிக்கப்படுகின்றன என்றும் கொள்ளலாம். பிரம்மார்ப்பணமாகச் செய்யப்படும் கர்ம யோகமே யாகம். அக்கினியை வளர்த்து அதில் ஆஹுதியைச் செய்வதுமட்டும் யாகமாய்விடாது. பொருளைத் தரும வழியில் சேர்த்துப் பிறர்க்குப் பயன்படும்படி செலவிடுவோர், தவத்தைச் செய்வோர், வேதம் ஓதி உணர்ந்து பிறர்க்கும் கற்பிப்போர் எல்லோருமே யாகம் செய்பவர்கள் தாம். (ஸர்வேப்யே தே யக்ஞவித:) எல்லோருமே யாகத்தின் ரகசி

யத்தை உணர்ந்தவர்கள். யாகம் இல்லாதவர்க்கு இவ்வுலகமே இல்லை ; அவ்வுலகு எங்ஙனம்? யாகத்திற்காகப் பகவதர்ப்பணமாகச் செய்யப்படாத கருமத்தினின்றே இவ்வுலகிற்குப் பந்தம் ஏற்படுகிறது.

உதாரணமாக, 'ஒவ்வொரு வீட்டிலும் தினந்தோறும் சமையல் செய்யப்படுகிறது. இதைப் புருஷனும் மனைவியும் தங்களுடைய திருப்திக்காக மட்டும் என்று எண்ணிச் செய்வார்களானால் அவர்கள் பாவிகள், பாவத்தை உண்கிறார்கள் (புஞ்ஜதே தே த்வகம் பாபா யே பசந்த்யாத்மகாரணாத்)' என்கிறார் பகவான். அதிதிகளுக்கு உணவளித்துக் குழந்தைகளை நடமாடும் தெய்வங்களாய்க் கருதிப்போஷித்து, வயதானவர்களை உபசரித்து, எல்லோரும் உண்டபின் எஞ்சியதை உட்கொள்பவர்களுக்கு அவ்வுணவு பிரஸாதமாகி அவர்களைப் புனிதமாக்குகிறது. இங்ஙனம் அன்றாட வாழ்க்கையே ஒரு யாகமாக வேண்டும். அப்பொழுது, 'யாகம் செய்யவில்லை' என்ற குற்றம் நம்மைச் சாராது. ஓர் ஆசிரியன் மாணவனுடைய மனதாகிற தீக்கொழுந்தில் கல்வியை ஹோமம் செய்தால் அது அவன் செய்யும் யாகம். ஒரு மந்திரத்தை நன்றாக ஜபம் செய்தால் அது ஜபயக்ஞம். கீதையைப் பாராயணம் செய்வது ஞானயக்ஞம். இங்ஙனம் யாகத்திற்கு விரிவான பொருளைக் கீதை கூறுகிறது. இப்படிச் செய்யப்பட்ட யாகம், யோகத்திற்கு வழி காட்டுகிறது.

யோகமாவது இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கிப் பகவானிடம் நிலை நிறுத்துவது.

'பார்ப்பா னகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் முண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே'

என்று யோகத்தின் உண்மையைத் திருமூல நாயனுர் விளக்குகிருர். தியானயோக முறையை விரிவாகக் கீதை ஆருவது அத்தியாயம் வர்ணிக்கிறது. பிரம்ம சரிய விரதத்தைக் கைக்கொண்டு, ஆஹார விஹார ஒழுக்கத்துடன் சுத்தமான இடத்தில் தகுந்த ஆசனத்தில் அமர்ந்து, மனத்தை ஒருமுகப்படுத்திப் பகவானை தியானம் செய்து பழகவேண்டும். இப்படிச் சிரத்தையுடனும் பக்தியுடனும் அப்பியாசம் செய்பவன் பகவானைத் தொட்டுப்பார்ப்பதுபோன்ற அநுபவத்தையும் (ப்ரஹ்மஸம்ஸ்பர்சம்) எல்லையில்லாத ஆனந்தத்தையும் எய்துவான். 'கண்டே னவர்திருப் பாதம் கண்டறியாதன கண்டேன்' என்ற ஆனந்தக் களிப்பு ஏற்படும். அதை அடைந்த பிறகு ஒருவன் எந்த லாபத்தையும் அதைவிட அதிகமாய் எண்ணமாட்டான். எவ்வளவு பெரிய துன்பம் வந்தாலும் அசையமாட்டான். (யம் லப்த்வா சாபரம் லாபம் மன்யதே நாதிகம் தத: | யஸ்மிம்-ஸ்திதோ ந து:க்கேன குருணுபி விசால்யதே||)

இப்படிப்பட்ட யோகி, தவசிகளைவிட உயர்ந்தவன்; கற்ருேரைவிட உயர்ந்தவன்; கருமம் செய்வோரை விட உயர்ந்தவன். சிரத்தையுடன் பகவானிடம் பக்தி செய்பவன் யோகிகளிற் சிறந்தவன். இந்தப் பக்தி யோகம் கீதையின் இருதயஸ்தானம். இது ராஜ வித்தை ; இரகசியங்களுக்குள் சிறந்தது; உத்தமமானது ; பரிசுத்தமளிப்பது ; நேரில் கண்டு அநுபவிக்கக் கூடியது; தருமத்தினின்று பிறழாதது ; அநுஷ்டித்தற்கு மிக எளியது. 'பக்தியுடன் ஒரு பச்சிலையோ பூவோ பழமோ ஒருதுளி தீர்த்தமோ எவன் எனக்கு அர்ப்பிக்கிருனே அதை நான் மகிழ்ச்சியுடன் ஏற்கிறேன்' என்கிருர் பகவான். அவர் கேட்பது சொல்பம்; அதனுல்தான், 'இந்த மார்க்கம் (ஸுஸுகம் கர்த்தும்) அநுஷ்டித்தற்கு மிக எளியது' என்று கூறியது. இது யாவர்க்கும் இயலும். பாவிகளும் ஆசார ஹீனர்

களும்கூட இம் மார்க்கத்தால் விரைவில் உயர் நிலையை எய்தலாம்.

பகவானை அன்புடன் வழிபடுவோர் அவர் அளிக்கும் ஞானக்கண் கொண்டு அர்ஜுனன் விசுவரூபத்தை தரிசித்தாற்போல் அவருடைய திருவுருவைக் காணுதல் கூடும். 'எனது உண்மையான ஸ்வரூபத்தைப் பக்தி ஒன்றினுல்தான் அறியலாம்; அங்ஙனம் அறிந்தவன் விரைவில் என்னிடம் ஒன்றுபடுகிறுன்' என்று கூறுகிறுர் பகவான்.

'பக்த்யா மாமபிஜாநாதி யாவான் யச்சாஸ்மி தத்வத: |
ததோ மாம் தத்வதோ ஜ்ஞாத்வா விசதே ததனந்தரம்||'

இப்படி யாகமும் யோகமும் சித்தி பெற்ருல் அதுவே தியாகம். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் 'கீதா, கீதா' என்று தொடர்ச்சியாகச் சொன்னுல் 'தாகீ தாகீ' அல்லது 'த்யாகீ, த்யாகீ' என்று வரும் தியாகியாயிருப்பதுதான் கீதையின் முடிவான உபதேசம் என்பார்.

யாகம் செய்யும்போது, 'நான் யாகம் செய்கிறேன்; நான் தானம் செய்கிறேன்' என்ற அகங்காரம் நம்மையும் அறியாமல் மனத்தில் புகுந்துகொள்ளக் கூடும். யோகம் செய்யும்போது நான் யோகி, எனக்குப் பிறர் மரியாதை செய்யவேண்டும்' என்ற எண்ணம் வரக்கூடும். ஸந்நியாஸிக்குக் கூட, 'நான் பற்றெழிந்தவன்' என்ற அஹங்காரம் வரலாம். உடைமையைத் தியாகம் செய்தால் போதாது. 'செய்தவன் நான்' என்ற எண்ணத்தையும் தியாகம் செய்யவேண்டும். 'ஸர்வகர்ம-பலத்யாகம் ப்ராஹுஸ்-த்யாகம் விசக்ஷணு:' இதைத்தான் மகாத்மா காந்தி கீதைக்கு எழுதின விளக்கத்தில், 'அனுஸக்தியோகம்' என்று கூறினுர். இதுதான் கீதையின் முடிவான உபதேசம்; யாகத்திற்கும் யோகத்திற்கும் இதுதான்

பலன். இதுதான் கீதையின் சரம சுலோகத்தின் கருத்து.

'ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ |
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா
சுச: ||'

'எல்லா அறங்களையும் விட்டொழிந்திங் கென்றனையே
நல்லாய் சரண்புகுக நானுன்னை—அல்லல்தரு
பாவங்க ளின்முற்றும் பற்றறவே வீடுவிப்பேன்
மேவுதுயர் எல்லாம் விடு.'

ஸம்ஸ்கிருதத்தில் அதிகப் பயிற்சி இல்லாதவர்களுக்கும் பகவத்கீதையின் சீரிய கருத்துக்களைத் தமிழில் விளக்குவதற்காக இந்நூல் வெளியிடப்படுகிறது. மூலம் முதலில் நாகர எழுத்திலும் அதன் அடியில் தமிழ் எழுத்திலும் அச்சிடப்பட்டிருப்பதுடன் பதவுரையும் வியாக்கியானக் குறிப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒப்பிட்டுப் படிப்பதற்கு உபயோகமாயிருக்கும் வகையில் உபநிஷதங்கள், நாரத பக்தி ஸூத்ரம், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திவ்யப் பிரபந்தம், திருக்குறள், தாயுமானவர் பாடல், ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மொழிகள் முதலியவற்றினின்றும் மேற்கோள்களும் உவமைகளும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

நூலைப் பரிசோதித்துப் பிழைகளைத் திருத்துவதில் உதவிய பிரம்மஸ்ரீ வழுத்தூர் ராஜகோபால சர்மா அவர்களுக்கும் இதைப் படித்துப் பயன் படுத்தி என் முயற்சியை ஸார்த்தகமாக்கும் அன்பர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லம்
மயிலாப்பூர், சென்னை-4
குரோதிஞ பங்குனிமீ 21உ
3—4—1965.

உரையாசிரியர்.



क्लैब्यं मा स्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते ।
क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परंतप ॥

(गीता २-३)

श्रीः

श्रीकृष्णाय परब्रह्मणे नमः

॥ श्रीमद्भगवद्गीता ध्यानश्लोकाः ॥

नमोऽस्तु ते व्यास विशालबुद्धे फुल्लारविंदायत-पत्रनेत्र ।
येन त्वया भारततैलपूर्णः प्रज्वालितो ज्ञानमयः प्रदीपः ॥ १ ॥
प्रपन्न-पारिजाताय तोत्र-वेत्रैक-पाणये ।
ज्ञानमुद्राय कृष्णाय गीतामृतदुहे नमः ॥ २ ॥

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரஹ்மணே நம :

ஸ்ரீமத் பகவத்கீதா த்யானச்லோகா :

நமோ஽ஸ்து தே வ்யாஸ விசாலபுத்தே புல்லார
[விந்தாயத-பத்ரநேத்ர |
யேன த்வயா பாரததைல-பூர்ண: ப்ரஜ்வாலிதோ
[ஜ்ஞானமய: ப்ரதீப: ||
ப்ரபன்ன-பாரிஜாதாய தோத்ர-வேத்ரைக-பாணயே |
ஜ்ஞானமுத்ராய க்ருஷ்ணாய கீதாம்ருததுஹே நம: || 2 ||

ஸ்ரீமத் பகவத்கீதை தியான சுலோகங்கள்

1. (விசாலபுத்தே)விசாலமான புத்தியுடையவரும் புல்லாரவிந்தாயத-பத்ரநேத்ர) மலர்ந்த தாமரை யிதழ் போன்று பரந்த கண்களை யுடையவருமான (வ்யாஸ) வியாஸரே! (தே) உமக்கு (நம: அஸ்து) நமஸ்காரம். (பாரத-தைலபூர்ண :) பாரதம் எனும் எண்ணெய்யால் நிறைந்த (ஜ்ஞானமய:) ஞானமயமான (ப்ரதீப:) சிறந்த விளக்கு (யேன த்வயா ப்ரஜ்வாலித:) உம்மா லல்லவா ஏற்றிவைக்கப்பட்டது!

2. (ப்ரபன்ன-பாரிஜாதாய) சரணடைந்தவர்

---

1. பகவானால் உபதேசிக்கப்பட்ட தர்மத்தை எல்லா முணர்ந்த வேதவியாஸர் (கிருஷ்ண த்வைபாயனர்) எழுநூறு சுலோ கங்களில் தொகுத்துக்கூறினார். கீதையை எழுதிவைத்த வியாஸர்,

सर्वोपनिषदो गावो दोग्धा गोपालनन्दनः ।
पार्थो वत्सः सुधीर्भोक्ता दुग्धं गीतामृतं महत् ॥ ३ ॥
वसुदेवसुतं देवं कंसचाणूर-मर्दनम् ।
देवकी-परमानन्दं कृष्णं वंदे जगद्गुरुम् ॥ ४ ॥

ஸர்வோபநிஷதோ காவோ தோக்தா கோபால-நந்தன: |
பார்த்தோ வத்ஸ: ஸுதீர்ப்போக்தா துக்தங் கீதாம்
ருதம் மஹத் || 3 ||
வஸுதேவஸுதம் தேவம் கம்ஸசாணூர-மர்த்தனம் |
தேவகீ-பரமானந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்தரும் ||4||

களுக்கு விரும்பியதை அளிக்கும் பாரிஜாத விருக்ஷமாகவும் (தோத்ர-வேத்ரைக-பாணயே) ஒரு கையில் சாட்டை ஏந்தியவனாகவும், (ஜ்ஞான - முத்ராய) ஞான முத்திரை காட்டுபவனாகவும் (கீதாம்ருததுஹே) கீதையெனும் அமுதத்தைக் கறப்பவனாகவும் விளங்கும் (க்ருஷ்ணாய) கிருஷ்ணனுக்கு (நம:) நமஸ்காரம்.

3. (ஸர்வோபநிஷத:) எல்லா உபநிஷதங்களும் (காவ:) பசுக்கள்; (கோபாலநந்தன:) இடையா பிள்ளையாகிய கிருஷ்ணன் (தோக்தா) பால் கறப்பவன்; (பார்த்த:) அர்ஜுனன் (வத்ஸ:) கன்று; (துக்தம்) கறந்தபால் (மஹத்) சிறந்த (கீதாம்ருதம்) கீதையெனும் அமுதம்; (போக்தா) அருந்துவோன் (ஸுதீ:) நல்ல புத்திமான்.

4. (வஸுதேவஸுதம்) வசுதேவபுத்திரனும், (கம்ஸசாணூர-மர்த்தனம்) கம்ஸன் சாணூரன் இவர்களை வதைத்தவனும் (தேவகீ-பரமானந்தம்) தேவகிககுப் பரமானந்தத்தை யளிப்பவனும் (ஜகத்குரும்) உலககுருவும் (தேவம்) தெய்வமும் ஆகிய (க்ருஷ்ணம்) கிருஷ்ணனை (வந்தே) வணங்குகின்றேன்.

கீதையைக் கேட்ட அர்ஜுனன், கீதையை உபதேசித்த பகவான் மூவருக்கும் கிருஷ்ணன் என்ற பெயர் பொதுவாய் அமைந்ததும் அவர்களின் ஒற்றுமையைக் காட்டுகின்றது.

श्रीः

॥ श्रीमद्भगवद्गीता ॥

॥ प्रथमोऽध्यायः ॥

(अर्जुनविषादयोगः)

धृतराष्ट्र उवाच—

धर्मक्षेत्रे कुरुक्षेत्रे समवेता युयुत्सवः ।
मामकाः पाण्डवाश्चैव किमकुर्वत सञ्जय ॥ १ ॥

ஸ்ரீ:

ஸ்ரீமத் பகவத்கீதை

முதல் அத்தியாயம்

(அர்ஜுன விஷாதயோகம்)

த்ருதராஷ்ட்ர உவாச—

தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ: |
மாமகா: பாண்டவாச்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய || 1 ||

திருதராஷ்டிரர் கூறியது—

1. (ஸஞ்ஜய) ஸஞ்ஜயா! (யுயுத்ஸவ:) போருக்கு முனைந்துள்ள (மாமகா:) என் புத்திரர்களும் (பாண்டவா: ச) பாண்டு புத்திரர்களும் (தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே) தரும பூமியாகிய குருக்ஷேத்திரத்தில் (ஸமவேதா: ஏவ) கூடினவர்களாய் (கிம அகுர்வத) என்ன செய்தார்கள்?

---

1. குருக்ஷேத்திரம்—பெரியவர்கள் தவஞ்செய்த புண்ணிய பூமியாதலின், யுத்தத்தின் முடிவில் தருமம் ஜயிக்கும் என்பது உணர்த்தப்படுகின்றது. இதனால் திருதராஷ்டிரனுடைய கலவரமும் குறிக்கப்படும்.

மாமகா :—அகங்காரமும் மமகாரமும் நிறைந்த நூற்றுவர்.

பாண்டவா :—தருமம், வீரியம், பலம், ஞானம், வைராக்கியம் முதலிய நற்குணங்கள் நிறைந்த ஐவர்.

सञ्जय उवाच—

दृष्ट्वा तु पाण्डवानीकं व्यूढं दुर्योधनस्तदा ।
आचार्य-मुपसङ्गम्य-राजा वचन-मब्रवीत् ॥ २ ॥

ஸஞ்ஜய உவாச—

த்ருஷ்ட்வா து பாண்டவானீகம் வ்யூடம் துர்யோதனஸ்-
ததா |
ஆசார்ய-முபஸங்கம்ய ராஜா வசன-மப்ரவீத் || 2 ||

ஸஞ்ஜயர் கூறியது—

2. (ராஜா துர்யோதன:) துரியோதன ராஜா (பாண்டவானீகம்) பாண்டவர் சேனை (வ்யூடம்) அணி வகுத்து நிற்பதை (த்ருஷ்ட்வா) பார்த்து (ததா து) அப்போது (ஆசார்யம்) துரோணாசாரியரை (உபஸங்கம்ய) சமீபித்து (வசனம்) இவ்வார்த்தையை (அப்ரவீத்) சொன்னான்.

குருக்ஷேத்திரத்தில் அன்று நடந்த போர் போலவே, நமது தேகமாகிய க்ஷேத்திரத்தில் நற்குணங்களுக்கும் தீய குணங்களுக்கும் என்றும் போர் நிகழ்கின்றது. மமகாரத்தால் அகக்கண் குருடாகிய ஜீவன் ஞானக்கண் பெற்ற குருவை நோக்கி இந்த யுத்தத்தின் போக்கையறிய விரும்புகிறான் என்பது உட்கருத்து.

மஹாபாரதக் கதை ஸம்பந்தம்—

பாரதப்போர் நிகழ்வதென்று தீர்மானமானதும் துரியோதனன் கிருஷ்ணனை உதவி கேட்க துவாரகை சென்றான். அவருடைய அரண்மனை சென்றபோது கிருஷ்ணன் சயனத்திலிருந்தார். துரியோதனன் தலைப்புரத்தில் ஓர் ஆசனத்திலமர்ந்தான். அதே சமயம் அர்ஜுனனும் கிருஷ்ணனைக் காணவந்து கால்புறத்தில் உட்கார்ந்தான். கிருஷ்ணன் கண்விழித்ததும் அர்ஜுனனைப் பார்த்தார். துரியோதனனும் முன் வந்து "உன் உதவி நாடி வந்தேன்; நான் அர்ஜுனனுக்கு முன்பே வந்தேன்; நாங்கள் இருவரும் உனக்குச் சமமாயினும் நான் முன்பு வந்ததால் இப்போரில் எனக்குத் தான் உதவிபுரியவேண்டும்" என்றான்.

கிருஷ்ணன், "நீ முன் வந்தாய்; நான் முன் அர்ஜுனனைப் பார்த்தேன்; இருவருக்கும் உதவுவேன்; ஒருவனுக்கு என்னுடைய

पश्यैतां पाण्डुपुत्राणा-माचार्य महतीं चमूम् ।
व्यूढां द्रुपदपुत्रेण तव शिष्येण धीमता ॥ ३ ॥

பச்யைதாம் பாண்டு·புத்ராணு-மாசார்ய மஹதீஞ் சமூம் |
வ்யூடாம் த்ருபதபுத்ரேண தவ சிஷ்யேண தீமதா || 3 ||

3. (ஆசார்ய) ஆசாரியரே! (தவ) உம்முடைய (தீமதா சிஷ்யேண) புததிமானுன சிஷ்யனும் (த்ருபத புத்ரேண) துருபத புத்திரனுமாகிய—திருஷ்டத்யும் னனுல்—(வ்யூடாம்) அணிவகுத்து நிறுத்தப்பட்டுள்ள (பாண்டு புத்ராணும்) பாண்டுபுத்திரர்களுடைய(ஏதாம்) இந்த (மஹதீம்) பெரிய (சமூம்) சேனையை(பச்ய) பாரும்.

ஒரு அக்ஷௌஹிணி சேனையைத் தருகிறேன்; மற்றவனுக்கு நான் தனியாக உதவி செய்கிறேன்; ஆனுல் நான் ஆயுதம் எடுத்துச் சண்டை போடமாட்டேன். சிறுவன் இச்சையை முன பூர்த்தி செய்ய வேண்டியது சாஸ்திரம். ஆகையால் அர்ஜுனு! உன் விருப்பம் என்ன?" என்ருர். அர்ஜுனன் கிருஷ்ணனையே வேண்டினுன். துரியோதனன் அவர் சேனையைப்பெற்று சந்தோஷமாய்ச் சென்ருன்.

பிறகு கிருஷ்ணன் அர்ஜுனனை நோக்கி, "சேனையைவிட்டுத் தனியாக என்னைக் கொண்டதில் என்ன பயன்?" என்ருர். அர்ஜுனன். "உன் அருள் எனக்குப் போதும். ஆயுதம் எடுக்காவிடினும் என் தேரை ஓட்டிப் போரை நடத்திவை. வெகுநாளாய் உன்னை ஸாரதியாகப் பெறவேண்டும் என்ற ஆசை எனக்குண்டு" என்ருன். கிருஷ்ணன், "அப்படியேயாகுக" என்ருர்.

கொடிய யுத்தமும் ஆரம்பமாயிற்று. பத்தாவது நாள் போரில் பீஷ்மர் தேரினின்று வீழ்ததப்பட்டு யுத்தத்தினின்று நீங்கி அம்புப் படுக்கையில்சயனித்து மரணத்தை எதிர்நோக்கியிருக்கலானுர். இச் சமாசாரத்தை ஸஞ்ஜயர் திருதராஷ்டிரரிடம் சென்று கூறியபோது திருதராஷ்டிரர் மிகவும் துக்கித்து, யுத்த விவரங்களை விஸ்தாரமாய் வர்ணிக்கும்படி கேட்டார். வியாஸருடைய அனுக்ரஹத்தால் தூரத்தில் நடப்பவற்றை மனக்கண்ணில் காணும் சக்தி பெற்றிருந்த ஸஞ்ஜயர் எல்லாவற்றையும் உணர்ந்திருந்தாராதலால். போர் ஆரம்பித்தது முதல் வர்ணிக்கத் தொடங்கினுர். இதில் பகவத்கீதை

अत्र शूरा महेष्वासा भीमार्जुन-समा युधि ।
युयुधानो विराटश्च द्रुपदश्च महारथः ॥ ४ ॥
धृष्टकेतुश्चेकितानः काशिराजश्च वीर्यवान्
पुरुजित्कुन्तिभोजश्च शैब्यश्च नरपुङ्गवः ॥ ५ ॥

அத்ர ஸூரா மஹேஷ்வாஸா பீமார்ஜுன-ஸமா யுதி ।
யுயுதானோ விராடச்ச த்ருபதச்ச மஹாரத: ॥ 4 ॥
த்ருஷ்டகேதுச் சேகிதான: காசி-ராஜச்ச வீர்யவான் ।
புருஜித் குந்தி-போஜச்ச சைப்யச்ச நரபுங்கவ: ॥ 5 ॥

4-6. (அத்ர) இங்கே (மஹேஷ்வாஸா:) பெரிய வில்லாளிகளும் (யுதி) யுத்தத்தில் (பீமார்ஜுன-ஸமா:) பீமனுக்கும் அர்ஜுனனுக்கும் சமமான (சூரா:) சூரர்களும்—உளர். (யுயுதான:) ஸாத்யகி, (விராட: ச) விராடன் (மஹாரத: த்ருபத: ச) மஹாரதனுன துரு

முதல் அத்தியாயம் ஆரம்பம். இது மஹா பாரதம் பீஷ்ம பருவத்தில் இருபத்தைந்தாவது அத்தியாயம்.

அத்தியாயத்தின் பெயர்—அர்ஜுனனுடைய (விஷாதம்) மனக்குழப்பத்தைக் கூறுவதால் இவ்வத்தியாயம் அர்ஜுன விஷாத யோகம் எனப்படும்.

3. **மஹதீஞ் சமூம்**— துரியோதனின் சேனை பதினொரு அக்ஷௌஹிணி; பாண்டவர் சேனை ஏழு அக்ஷௌஹிணி; எனினும் பொருமையால் எதிரி சேனையை 'மிகப் பெரியது' என்று கூறினுன்.

உம்முடைய சிஷ்யனுகிய துருபத புத்திரன்—துருபதனிடம் துரோணருக்கு துவேஷம். அவனுடைய புத்திரன் திருஷ்டத்யும்னன் வஞ்சனையால் இவரிடம் வில்வித்தை கற்றுக்கொண்டு இப்போது இவரையே எதிர்த்து நிற்கிருன். துரியோதனன் இதையெல்லாங் குறிப்பால் உணர்த்தித் துரோணர் மனத்தில் கோபத்தீயை மூட்ட முயல்கின்ருன்.

4-6. (யுயுதானன்)**ஸாத்யகி**—யாதவகுலத்துச் சிற்றரசன், சினியின் புத்திரன். கிருஷ்ணனிடம் மிகுந்த பிரியமுள்ளவன். அர்ஜுனனுடைய சிஷ்யன்.

திருஷ்டகேது—சேதி நாட்டரசன். சிசுபாலனுடைய புத்திரன்

युधामन्युश्च विक्रान्त उत्तमौजाश्च वीर्यवान् ।
सौभद्रो द्रौपदेयाश्च सर्व एव महारथाः ॥ ६ ॥
अस्माकं तु विशिष्टा ये तान्निबोध द्विजोत्तम ।
नायका मम सैन्यस्य संज्ञार्थं तान् ब्रवीमि ते ॥ ७ ॥

யுதாமன்யுச்ச விக்ராந்த உத்தமௌஜாச்ச வீர்யவான் |
ஸௌபத்ரோ த்ரௌபதேயாச்ச ஸர்வ ஏவமஹாரதா:||
அஸ்மாகந்து விசிஷ்டா யே தாந்-நிபோத
த்விஜோத்தம |
நாயகா மம ஸைன்யஸ்ய ஸம்ஜ்ஞார்த்தம் தான்
ப்ரவீமி தே || 7 ||

பதன் (த்ருஷ்டகேது:) திருஷ்டகேது, (சேகிதான:) சேகிதான ராஜா, (வீர்யவான் காசிராஜச்ச) வீரியவானுன காசி ராஜா. (புருஜித்) புருஜித்து, (குந்திபோஜச்ச) குந்திபோஜன் (நரபுங்கவ: சைப்யச்ச) நரசிரேஷ்டனுன சைப்யன். (விக்ராந்த: யுதாமன்யு:) பலவானுன யுதாமன்யு, (வீர்யவான் உத்தமௌஜாச்ச) வீரியவானுன உத்தமௌஜன் (ஸௌபத்ர:) சுபத்திரையின் புத்திரனுன அபிமன்யு (த்ரௌபதேயாச்ச) த்ரௌபதியின் புத்திரர்கள்; (ஸர்வே ஏவ) எல்லோருமே (மஹாரதா:) மஹாரதர்கள்.

7. (த்விஜோத்தம) பிராம்மண சிரேஷ்டரே! (அஸ்மாகந்து) நமக்குள் (யே) எவர்கள் (விசிஷ்டா:)

சேகிதானன்—விருஷ்ணி குலத்து வீரன். பாண்டவர் சேனையில் ஏழு சேஞ நாயகர்களுள் ஒருவன்.

புருஜித் குந்திபோஜன்—இருவரும் குந்திதேவியின் சகோதரர்கள்.

சைப்யன்—யுதிஷ்டிரருடைய மாமனுர்.

யுதாமன்யு, உத்தமௌஜன்—பாஞ்சால ராஜவம்சத்தைச் சார்ந்த வீரர்கள். இங்ஙனம் துரியோதனன் குறிப்பிட்டுக் காட்டியவரில் பலர் பின் துரோணர் கையிலேயே மரணமெய்தினர்.

भवान् भीष्मश्च कर्णश्च कृपश्च समितिञ्जयः ।
अश्वत्थामा विकर्णश्च सौमदत्तिस्तथैव च ॥ ८ ॥
अन्ये च बहवः शूरा मदर्थे त्यक्तजीविताः ।
नानाशस्त्र-प्रहरणाः सर्वे युद्ध-विशारदाः ॥ ९ ॥

பவான் பீஷ்மச்ச கர்ணச்ச க்ருபச்ச ஸமிதிஞ்ஜய: |
அச்வத்தாமா விகர்ணச்ச ஸௌமதத்திஸ்-ததைவ ச || 8 ||
அன்யே ச பஹவ: சூரா மதர்த்தே த்யக்த-ஜீவிதா: |
நாநாசஸ்த்ர-ப்ரஹரணா: ஸர்வே யுத்த-விசாரதா: || 9 ||

முக்கியஸ்தர்களோ, (மம) என்னுடைய (ஸைன்யஸ்ய) சேனைக்கு (நாயகா:) நாயகர்களோ, (தான்) அவர்களை (நிபோத) கவனியும். (தே) உமக்கு (ஸம்ஜ்ஞார்த்தம்) குறிப்பிடும் பொருட்டு (தான்) அவர்களை (ப்ரவீமி) கூறுகிறேன்.

8. (பவான்) தாங்கள், (பீஷ்மச்ச) பீஷ்மர், (கர்ணச்ச) கர்ணன், (ஸமிதிஞ்ஜய: க்ருப: ச) யுத்தத்தில் ஜயமே பெறும் கிருபாசாரியா், (அச்வத்தாமா) அசு வத்தாமா, (விகர்ண: ச) விகர்ணன், (ஸௌமதத்தி:) சோமதத்தனுடைய புத்திரன் பூரிசிரவசு, (ததைவ ச) அவ்வாறே;

9. (அன்யே ச) இன்னும் (பஹவ: சூரா:) பல சூரர்கள் (மதர்த்தே) என் பொருட்டு (த்யக்த-ஜீவிதா:)

---

7. **பிராம்மண சிரேஷ்டரே!** 'நீர் வில் வித்தையில் ஆசிரியராயினும் பிராம்மணராதலால் போர் முனையில் உம் கல்வி பயன்படாது' என்ற கருத்து இச்சொல்லில் தோன்றுகிறது.

8. **விகர்ணன்**—திருதராஷ்டிரருடைய மூன்றுவது குமாரன், நீதிமான்.

ஸௌமதத்தி—பாஹ்லிக நாட்டரசன் ஸோமதத்தன் மகன். 'ஸௌமதத்திர்-ஜயத்ரத:' என்றும் பாடம்.

अपर्याप्तं तदस्माकं बलं भीष्माभिरक्षितम् ।
पर्याप्तं त्विदमेतेषां बलं भीमाभिरक्षितम् ॥ १० ॥

அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் பீஷ்மாபிரக்ஷிதம் |
பர்யாப்தம் த்வித-மேதேஷாம் பலம் பீமாபிரக்ஷிதம்
|| 10 ||

உயிரைக் கொடுத்தவர்கள், (நாநாசஸ்த்ர-ப்ரஹரணா:) பல ஆயுதங்களைத் தரித்தவர்கள், (ஸர்வே) எல்லோரும் (யுத்த-விசாரதா:) யுத்தத்தில் கைதேர்ந்தவர்கள்.

10. (பீஷ்மாபிரக்ஷிதம்) பீஷ்மரால் காக்கப்பட்ட (அஸ்மாகம்) நம்முடைய (தத்பலம்) அந்த சேனை (அபர்யாப்தம்) வெற்றி பெறுவதற்குப் போதாது; (து) ஆனால் (பீமாபிரக்ஷிதம்) பீமனால் காக்கப்பட்ட (ஏதேஷாம்) பாண்டவர்களுடைய (இதம் பலம்) இந்தச் சேனை (பர்யாப்தம்) போதுமான சக்தியுடையது.

த்யக்தஜீவிதா :—ஏற்கெனவே உயிரை இழந்தவர்கள் என்ற அர்த்தம் அதில் தோன்றுவதால் துரியோதனன் தன்னையறியாமல தன்னைச் சார்ந்த வீரர்களின் அழிவையே பேசியதாய்க் காணப் படும்.

10. அபர்யாப்தம்—இப்பேர்ப்பட்ட வீரர்களை உடையதாயினும் பீஷ்மரால் காக்கப்பட்டதாயினும் நமது சேனை அவர்களுடன் போர் புரிவதற்கு சாமார்த்தியமில்லாதது போல் காண்கின்றது. 'பீஷ்மர் இரு பக்கத்திலும் பக்ஷத்தையுடையவர், பீமனோ முழு மனதையும் தன் பக்கத்தில் வைத்தவன். ஆகையால் பீமனால் காக்கப்பட்ட பாண்டவ சேனையே சிறியதாயினும் ஜயம் பெறத் தக்கதாய் காண்கின்றது'.—ஸ்ரீதரர்.

பீமன் கௌரவர் நூற்றுவரையுங் கொல்வதாய்ச் சபதம் செய்தவன். துரியோதனனுக்கு உண்மையில் அவனிடம் பயம் அதிகம். பீஷ்மரோ பாண்டவர்களைக் கொல்லேன் எனச் சபதம் செய்தவர்.

अयनेषु च सर्वेषु यथाभाग मवस्थिताः ।
भीष्म-मेवाभिरक्षन्तु भवन्तः सर्व एव हि ॥ ११ ॥
तस्य सञ्जनयन् हर्षं कुरुवृद्धः पितामहः ।
सिंहनादं विनद्योच्चैः शङ्खं दध्मौ प्रतापवान् ॥ १२ ॥

அயனேஷு ச ஸர்வேஷு யதா-பாக-மவஸ்திதா: |
பீஷ்மமேவாபிரக்ஷந்து பவந்த: ஸர்வ ஏவ ஹி || 11 ||
தஸ்ய ஸஞ்ஜனயன் ஹர்ஷம் குருவ்ருத்த: பிதாமஹ: |
ஸிம்ஹநாதம் விநத்யோச்சை: சங்கம் தத்மௌ
ப்ரதாபவான் || 12 ||

---

11. (பவந்தঃ ஸர்வ ஏவ ஹி) நீங்கள் எல்லோரும் (ஸர்வேஷு அயனேஷு ச) எல்லா அணிகளின் முன்னிலையிலும் (யதா பாகம்) அவரவர்களிடத்தில் (அவஸ்திதா:) நின்றுகொண்டு (பீஷ்மமேவ) பீஷ்மரையே (அபிரக்ஷந்து) செவ்வையாய்க் காக்கு வேண்டும்.

12. (ப்ரதாபவான்) சத்துருக்களைத் தபிக்கச் செய்பவரும் (குருவ்ருத்த:) குருவம்சத்துப் பெரிய கிழவரும் (பிதாமஹ:) பாட்டனருமாகிய பீஷ்மர் (தஸ்ய) அந்த துரியோதனனுக்கு (ஹர்ஷம்) ஸந்தோஷத்தை (ஸஞ்ஜனயன்) உண்டாக்கிக் கொண்டு (உச்சை:) உரத்த குரலில் (ஸிம்ஹநாதம் விநத்ய) சிங்கத்தைப் போல் கர்ஜித்து (சங்கம்) சங்கத்தை (தத்மௌ) ஊதினார்.

---

12. இதனால் முதன் முதலில் யுத்தத்தைத் தொடங்குபவரும் துரியோதனுதியரே என்று காணப்படுகிறது.

ततः शङ्खाश्च भेर्यश्च पणवानक-गोमुखाः ।
सहसैवाभ्यहन्यन्त स शब्दस्तुमुलोऽभवत् ॥ १३ ॥
ततः श्वेतै-र्हयैर्युक्ते महति स्यन्दने स्थितौ ।
माधवः पाण्डवश्चैव दिव्यौ शङ्खौ प्रदध्मतुः ॥ १४ ॥

தத: சங்காச்ச பேர்யச்ச பணவானக-கோமுகா: |
ஸஹஸைவாப்யஹன்யந்த ஸ சப்தஸ்-துமுலோ
ऽபவத் || 13 ||
தத: ச்வேதைர்-ஹயைர்-யுக்தே மஹதி ஸ்யந்தனே
ஸ்திதெள |
மாதவ: பாண்டவச்-சைவ திவ்யெள சங்கெள ப்ரதத்
மது: || 14 ||

---

13. (தத:) பிறகு (சங்கா: ச) சங்குகளும் (பேர்ய: ச) பேரிகளும் (பணவானக-கோமுகா:) மத்தளங்களும் தப்பட்டைகளும் கொம்புகளும் (ஸஹஸா ஏவ) உடனே (அப்யஹன்யந்த) முழங்கத் தொடங்கின; (ஸ: சப்த:) அந்த ஒலி (துமுல:) பெரியதாக (அபவத்) வளர்ந்தது.

14. (தத:) பிறகு (ச்வேதை:) வெண்மையான (ஹயைர்-யுக்தே) குதிரைகள் பூட்டின (மஹதி ஸ்யந்தனே) பெரிய தேரின் மேல் (ஸ்திதெள) நின்றுகொண்டு (மாதவ: பாண்டவச்சைவ) கிருஷ்ணனும் அர்ஜுனனும் (திவ்யெள சங்கெள) தெய்விகமான சங்குகளை (ப்ரதத்மது:) நன்றாய் ஊதினார்கள்.

---

14. தத: ச்வேதை:—இந்த சுலோகத்தை தியானத்துக்குரியதாய்க் கொள்ளலாம். ஐந்து வெள்ளைக் குதிரை பூட்டின தேர் ஐந்து திருந்திய புலன்களையுடைய சிறந்த மனிதசரீரம். அதற்குடையவன் ஜீவான்மா. அவன் உள்ளம் வெள்ளையானால் அவனுக்குப் பரமாத்மா ஸாரதியாக அமைகின்றான். இருதயமாகிற தேர்த்தட்டில் இணை பிரியாது இருவரும் நிற்பதை அகக்கண்ணால் காண வேண்டும்.

पाञ्चजन्यं हृषीकेशो देवदत्तं धनञ्जयः ।
पौण्ड्रं दध्मौ महाशङ्खं भीमकर्मा वृकोदरः ॥ १५ ॥

अनन्तविजयं राजा कुन्तीपुत्रो युधिष्ठिरः ।
नकुलः सहदेवश्च सुघोष-मणिपुष्पकौ ॥ १६ ॥

பாஞ்சஜன்யம் ஹ்ருஷீகேசோ தேவதத்தம் தனஞ்ஜய:|
பௌண்ட்ரம் தத்மௌ மஹாசங்கம் பீமகர்மா வ்ருகோதர: || 15 ||

அனந்தவிஜயம் ராஜா குந்தீபுத்ரோ யுதிஷ்டிர: |
நகுல: ஸஹதேவச்ச ஸுகோஷ-மணிபுஷ்பகௌ || 16 ||

---

15. (ஹ்ருஷீகேச:) கிருஷ்ணன் (பாஞ்சஜன்யம்) பாஞ்சஜன்யம் எனும் சங்கை (தத்மௌ) ஊதினார். (தனஞ்ஜய:) அர்ஜுனன் (தேவதத்தம்) தேவதத்தம் எனும் சங்கையும் (பீமகர்மா வ்ருகோதர:) பயங்கரச் செயலும் பெருவயிறுமுடைய பீமன் (மஹாசங்கம் பௌண்ட்ரம்) பௌண்டரம் எனும் பெரிய சங்கையும்—ஊதினார்கள்.

16. (குந்தீபுத்ர: ராஜா யுதிஷ்டிர:) குந்தீ புத்திரனான யுதிஷ்டிரராஜா (அனந்தவிஜயம்) அனந்த விஜயம் என்னும் சங்கையும் (நகுல: ஸஹதேவ: ச) நகுல ஸஹதேவர்கள் (ஸுகோஷ-மணிபுஷ்பகௌ) ஸுகோஷம் மணிபுஷ்பகம் எனும் சங்குகளையும் (தத்மௌ) ஊதினார்கள்.

'வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை'. வெள்ளை உள்ளத் தூய்மைக்கு அறிகுறி.

15. வ்ருகோதர:—ஸர்வபக்ஷம் என்றும் வ்ருகம் என்றும் பெயருள்ள அக்கினியை வயிற்றிலுடையவன்.

काश्यश्च परमेष्वासः शिखण्डी च महारथः ।
धृष्टद्युम्नो विराटश्च सात्यकिश्चापराजितः ॥ १७ ॥
द्रुपदो द्रौपदेयाश्च सर्वशः पृथिवीपते ।
सौभद्रश्च महाबाहुः शङ्खान् दध्मुः पृथक् पृथक् ॥ १८ ॥
स घोषो धार्तराष्ट्राणां हृदयानि व्यदारयत् ।
नभश्च पृथिवीं चैव तुमुलो व्यनुनादयन् ॥ १९ ॥

காச்யச்ச பரமேஷ்வாஸ: சிகண்டீ ச மஹாரத: |
த்ருஷ்டத்யும்னோ விராடச்ச ஸாத்யகிச்சா-
பராஜித: || 17 ||
த்ருபதோ த்ரௌபதேயாச்ச ஸர்வச: ப்ருதிவீபதே |
ஸௌபத்ரச்ச மஹாபாஹு: சங்கான் தத்மு: ப்ருதக்
ப்ருதக் || 18 ||
ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணும் ஹ்ருதயானி
வ்யதாரயத் |
நபச்ச ப்ருதிவீஞ்சைவ துமுலோ வ்யனுநாதயன் || 19 ||

17-18. (ப்ருதிவீபதே) திருதராஷ்டிர மஹாராஜா! (பரமேஷ்வாஸ:) வில்லாளிகளிற் சிறந்த (காச்ய:) காசி ராஜனும் (மஹாரத: சிகண்டீ ச) சிறந்த தேராளியான சிகண்டியும் (த்ருஷ்டத்யும்ன:) திருஷ்டத்யும்னனும் (விராட: ச) விராடனும் (அபராஜித:), பிறரால் ஜயிக்க முடியாத (ஸாத்யகி: ச) ஸாத்யகியும் (த்ருபத:) துருபதனும் (த்ரௌபதேயா: ச) துரௌபதி புத்திரர்களும் (மஹாபாஹு:) தோள்வலியுடைய (ஸௌபத்ர:ச) சுபத்ரையின் குமாரன் அபிமன்யுவும் (ஸர்வச:) ஒவ்வொரு திசையிலும் (ப்ருதக் ப்ருதக்) தனித்தனியே (சங்கான் தத்மு:) சங்குகளை முழங்கினார்கள்.

17-19. வ்யதாரயத் (இருதயங்களைப் பிளந்தது) இதனால்

अथ व्यवस्थितान्दृष्ट्वा धार्तराष्ट्रान् कपिध्वजः ।
प्रवृत्ते शस्त्रसंपाते धनुरुद्यम्य पाण्डवः ॥ २० ॥

அத வ்யவஸ்திதான் த்ருஷ்ட்வா தார்த்தராஷ்ட்ரான் கபித்வஜ: |
ப்ரவ்ருத்தே சஸ்த்ரஸம்பாதே தனுருத்யம்ய பாண்டவ: || 20 ||

---

19. (நப: ச) ஆகாயத்தையும் (ப்ருதிவீஞ்சைவ) பூமியையும் (வ்யனுநாதயன்) எதிரொலிகளால் நிரப்புகின்ற (ஸ:) அந்த (துமுல: கோஷ:) ஆரவார ஒலி (தார்த்தராஷ்ட்ரான்) துரியோதனுதியருடைய (ஹ்ருதயானி) இருதயங்களை (வ்யதாரயத்) பிளந்தது,

20. (மஹீபதே) மஹாராஜா! (அத) அதற்குப் பிறகு (கபித்வஜ:) குரங்குக் கொடியோனுன (பாண்டவ:) அர்ஜுனன் (வ்யவஸ்திதான்) எதிர் நின்ற (தார்த்தராஷ்ட்ரான்) துரியோதனுதியரை (த்ருஷ்ட்வா) பார்த்து, (சஸ்த்ரஸம்பாதே ப்ரவ்ருத்தே) ஆயுதங்களை ப்ரயோகிக்கும் தருணம் வந்ததும் (தனு:) வில்லை (உத்யம்ய) எடுத்துக்கொண்டு (ததா) அப்போது (ஹ்ருஷீகேசம்) கிருஷ்ணனிடம் (இதம் வாக்யம் ஆஹ) இந்த வார்த்தையைச் சொன்னுன்.

துரியோதனுதியருடைய தோல்வி நிச்சயம் என்பது சொல்லாமல் சொன்னதாகும்.

சிகண்டி—பிறவியில் (காசி ராஜனுடைய) பெண் (அம்பை); பின் வரப் பிரசாதத்தால் ஆண்தன்மை பெற்று துருபதனிடம் வீரனுய் விளங்கினுன். எனினும் பீஷ்மர் இவனை ஆண்பிள்ளையாக மதிக்கவில்லை. அவனுடன் போர் புரியவும் விரும்பவில்லை. இவன் முன் நின்றபோது பீஷ்மர் ஆயுதத்தை யெடுக்காமலிருக்க அப்போது அர்ஜுனன் அவரை வீழ்த்தினுன்.

20. **கபித்வஜ:**—இராமாவதாரத்தில் குரங்கு பகவானுக்குப் பிரியம். இங்கு பகவானுக்குப் பிரியமான சிநேகிதனுக்குக் குரங்குக் கொடி. அக்கொடியில் அமைந்த உருவத்தில் ஹனுமார் பீமனு

हृषीकेशं तदा वाक्यमिदमाह महीपते ।
अर्जुन उवाच—
सेनयोरुभयोर्मध्ये रथं स्थापय मेऽच्युत ॥ २१ ॥
यावदेतान्निरीक्षेऽहं योद्धुकामानवस्थितान् ।
कैर्मया सह योद्धव्यमस्मिन् रणसमुद्यमे ॥ २२ ॥

ஹ்ருஷீகேசம் ததா வாக்ய-மித-மாஹ மஹீபதே |
அர்ஜுன உவாச—
ஸேனயோ-ருபயோர்-மத்யே ரதம் ஸ்தாபய மே
ऽச்யுத || 21 ||
யாவதேதாந் நிரீக்ஷேऽஹம் யோத்துகாமா-
னவஸ்திதான் |
கைர்-மயா ஸஹ யோத்தவ்ய-மஸ்மின் ரண-
ஸமுத்யமே || 22 ||

அர்ஜுனன் கூறியது—

21-23. (அச்யுத) க்ருஷ்ணு! (அஸ்மின்) இந்த (ரணஸமுத்யமே) யுத்த ஆரம்பத்தில் (யாவத்) எது வரை—நின்று பார்த்தால்—(அஹம்) நான் அவஸ்தி தான்) கூடிநிற்கிற (யோத்துகாமான்) யுத்தத்தில் ஆவலுள்ள (ஏதான்) இவர்களை (நிரீக்ஷே) நன்ருய்ப் பார்ப்பேனே (கை:ஸஹ) யாருடன் கூட (மயா) என்னுல் (யோத்தவ்யம்) யுத்தம் செய்யவேண்டுமோ (அத்ர யுத்தே) இந்த யுத்தத்தில் (துர்ப்புத்தே:) கெட்ட புத்தியுள்ள (தார்த்தராஷ்ட்ரஸ்ய) திருதராஷ்ட்ர புத்திரனுக்கு (ப்ரிய-சிகீர்ஷவ:) பிரியத்தைச் செய்ய விரும்பி (ஏதே யே) எந்த ஜனங்கள் (ஸமாகதா:) வந்திருக்கிருர்களோ (யோத்ஸ்யமானுன்) யுத்தஞ்

டைய பிரார்த்தனைக்கிணங்கி உயிர்க்களையுடன் எழுந்தருளிப் பாண்டவர்க்குத் தோன்ருத் துணையாய் விளங்கினுர் என்பது பாரதக் கதை.

योत्स्यमाना-नवेक्षेऽहं य एतेऽत्र समागताः ।
धार्तराष्ट्रस्य दुर्बुद्धे-र्युद्धे प्रियचिकीर्षवः ॥ २३ ॥
सञ्जय उवाच—
एवमुक्तो हृषीकेशो गुडाकेशेन भारत ।
सेनयोरुभयोर्मध्ये स्थापयित्वा रथोत्तमम् ॥ २४ ॥
भीष्म-द्रोण-प्रमुखतः सर्वेषां च महीक्षिताम् ।
उवाच पार्थ पश्यैतान् समवेतान् कुरूनिति ॥ २५ ॥

யோத்ஸ்யமாநா-நவேக்ஷேऽஹம் ய ஏதேऽத்ர
ஸமாகதா: |
தார்த்தராஷ்ட்ரஸ்ய துர்ப்புத்தேர் யுத்தே ப்ரிய-
சிகீர்ஷவ: || 23 ||
ஸஞ்ஜய உவாச—
ஏவமுக்தோ ஹ்ருஷீகேசோ குடாகேசேன பாரத |
ஸேனயோ-ருபயோர் மத்யே ஸ்தாபயித்வா
ரதோத்தமம் || 24 ||
பீஷ்ம-த்ரோண-ப்ரமுகத: ஸர்வேஷாஞ் ச
மஹீக்ஷிதாம் |
உவாச பார்த்த பச்யைதான் ஸமவேதான்
குரூனிதி || 25 ||

———

செய்யப்போகின்ற அவர்களை (அஹம்) நான் (அவேக்ஷே) எப்படி நன்ருய்ப் பார்ப்பேனே அப்படி (உபயோ : ஸேனயோ: மத்யே) இரு சேனைகளுக்கும் மத்தியில் (மே ரதம்) என்னுடைய தேரை (ஸ்தாபய) நிறுத்தும்.

ஸஞ்ஜயர் கூறியது—

24-25. (பாரத) திருதராஷ்டிரா! (குடாகேசேன) தூக்கத்தை ஜயித்த அர்ஜுனனுல் (ஏவம்) இவ்வாறு (உக்த:) சொல்லப்பட்டு (ஹ்ருஷீகேச:) ஸ்ரீ பகவான்

तत्रापश्यत्स्थितान्पार्थः पितॄनथ पितामहान् ।
आचार्यान्मातुलान्भ्रातॄन्पुत्रान्पौत्रान्सखींस्तथा ॥२६॥

தத்ராபச்யத் ஸ்திதான் பார்த்த: பித்ரூனத
பிதாமஹான் |
ஆசார்யான் மாதுலான் ப்ராத்ரூன் புத்ரான்
பௌத்ரான் ஸகீன் ஸ்ததா || 26 ||

(உபயோ:) இரண்டு (ஸேனயோ:) ஸேனைக்கும் (மத்யே) நடுவில் (பீஷ்ம-த்ரோண ப்ரமுகத:) பீஷ்மர் துரோணர் இவர்களுக்கு எதிராகவும் (ஸர்வேஷாம் மஹீக்ஷிதாஞ்ச) எல்லா அரசர்களுக்கும் எதிராகவும் (ரதோத்தமம்) சிறந்த ரதத்தை (ஸ்தாபயித்வா) நிறுத்தி (பார்த்த) அர்ஜுனா! (ஸமவேதான்) கூடியுள்ள (ஏதான்) இந்த (குரூன்) கௌரவர்களை (பச்ய) பார் (இதி) என்று (உவாச) கூறினார்.

26. (அத) பிறகு (பார்த்த:) அர்ஜுனன் (தத்ர) அங்கே (உபயோ: ஸேனயோ: அபி) இரு சேனைகளிலும் (ஸ்திதான்) இருந்த (பித்ரூன்) தகப்பன்மாரையும் (பிதாமஹான்) பாட்டன்மாரையும் (ஆசார்யான்) குருமாரையும் (மாதுலான்) மாமன்மாரையும் (ப்ராத்ரூன்) சகோதரர்களையும் (புத்ரான்) பிள்ளைகளையும் (பௌத்ரான்) பேரன்மாரையும் (ஸகீன்) தோழர்

ஒ—ஸபதி ஸகி-வசோ நிசம்ய மத்யே
நிஜபரயோர் பலயோ ரதம ப்ரவேச்ய |
ஸ்திதவதி பரஸைநிகாயு-ரக்ஷ்ணா
ஹ்ருதவதி பார்த்த-ஸகே ரதிர்-மமாஸ்து ||

தன் சிநேகிதன் வார்த்தையால் இருசேனைகளின் மத்தியில் தேரை நிறுத்தி, எதிரிகளின் சேனையின் உயிரைத் தன் கண் பார்வையால் எவர் கவர்ந்தாரோ அந்தப் பார்த்தஸாரதியிடம் என் அன்பு நிலை பெறட்டும். (பீஷ்மர் : பாக. 1.9.35)

26. அர்ஜுனன் தண்டனைக்குரிய எதிரிகளாக அவர்களை அச்சமயம் கண்டிருக்க வேண்டுமேயன்றி உறவு முறையில் கருதி

श्वशुरान् सुहृदश्चैव सेनयो रुभयो-रपि ।
तान् समीक्ष्य स कौन्तेयः सर्वान् बन्धू-नवस्थितान् ॥ २७ ॥
कृपया परयाऽऽविष्टो विषीद न्निदमब्रवीत् ।

ச்வசுரான் ஸுஹ்ருதச்சைவ ஸேனயோ-ருபயோரபி |
தான் ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய: ஸர்வான் பந்தூ-
னவஸ்திதான் || 27 ||
க்ருபயா பரயாऽऽவிஷ்டோ விஷீதன்-னிதமப்ரவீத் |

களையும் (ததா) அவ்வாறே (ச்வசுரான்) மாமனர்களை யும் (ஸுஹ்ருதச்சைவ) சிறந்த நண்பர்களையும் (அபச்யத்) பார்த்தான்.

27. (ஸ: கௌந்தேய:) குந்தீபுத்ரனை அவ்வர் ஜுனன் (அவஸ்திதான்) நின்ற (தான் ஸர்வான்) அந்த எல்லா (பந்தூன்) உறவினர்களையும் (ஸமீக்ஷ்ய) நன்ருய்ப் பார்த்துவிட்டு (பரயா) அதிகமான (க்ருபயா) கருணையால் (ஆவிஷ்ட:) மனந்தளர்ந்து (விஷீதன்) விசனமடைந்து (இதம்) இதை (அப்ரவீத்) சொன்னுன்.

யிருக்கக்கூடாது. நியாயாதிபதி தன் பிள்ளையாயினும் குற்றம் செய்தால் தண்டிக்கவேண்டியவனே. அப்போது பிள்ளையையுங் குற்றவாளியாய்க் காணவேண்டுமேயன்றி பிள்ளையாய்க் காண்பது கூடாது.

27. அர்ஜுனனும் பயப்படுகிருன். துரியோதனனும் பயப் படுகிருன். ஆனுல் இருவர் பயமும் வேறுபாடானவை. அர்ஜுனன் தருமம் அழியுமோ என்று பயப்படுகிருன். துரியோதனன் தன்னா லம் கெடுமோ என்று பயப்படுகிருன்.

ஒ—அர்ஜுனன் உத்தியோக பருவத்தில் கூறுவது :—
ந சாஹங் காமயே பாபம் அபி கீட பிபீலயோ: |
கிம் புனர் ஜ்ஞாதிஷு வதம் காமயேயங் கதஞ்சன |
ஏததர்த்தம் மயா தாத பஞ்சக்ராமா வ்ருதா: புரா ||

अर्जुन उवाच—

दृष्ट्वेमं स्वजनं कृष्ण युयुत्सुं समुपस्थितम् ॥ २८ ॥

सीदन्ति मम गात्राणि मुखं च परिशुष्यति ।

वेपथुश्च शरीरे मे रोमहर्षश्च जायते ॥ २९ ॥

गाण्डीवं स्रंसते हस्तात्त्वक्चैव परिदह्यते ।

न च शक्नोम्यवस्थातुं भ्रमतीव च मे मनः ॥ ३० ॥

அர்ஜுன உவாச—

த்ருஷ்ட்வேமம் ஸ்வஜனம் க்ருஷ்ண யுயுத்ஸும்
ஸமுபஸ்திதம் ॥ 28 ॥

ஸீதந்தி மம காத்ராணி முகஞ்ச பரிசுஷ்யதி ।
வேபதுச்ச சரீரே மே ரோமஹர்ஷச்ச ஜாயதே ॥ 29 ॥

காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக்சைவ
பரிதஹ்யதே ।
ந ச சக்னோம்யவஸ்தாதும் ப்ரமதீவ ச மே மன: ॥ 30 ॥

அர்ஜுனன் கூறியது—

28-29. (க்ருஷ்ண) கிருஷ்ண! (யுயுத்ஸும்) போர் புரிய விரும்பி (ஸமுபஸதிதம்) கூடியிருக்கிற (இமம் ஸ்வஜனம்) இந்த உறவினர்களை (த்ருஷ்ட்வா) பார்த்து (மம) என்னுடைய (காத்ராணி) அவயவங்கள் (ஸீதந்தி) சோர்வடைகின்றன; (முகஞ்ச) வாயும் (பரிசுஷ்யதி) உலர்கின்றது; (மே சரீரே) என் உடலில் (வேபதுச்ச) நடுக்கமும் (ரோமஹர்ஷச்ச) மயிர்க் கூச்சலும் (ஜாயதே) உண்டாகிறது

30. (ஹஸ்தாத்) கையிலிருந்து (காண்டீவஞ்ச) காண்டீவமும் (ஸ்ரம்ஸதே) நழுவுகிறது. (த்வக்ச ஏவ) உடம்பின் மேல் தோலும் (பரிதஹ்யதே) எங்கும்

28-29-ல் உடலைத் துக்கம் பீடித்ததும், 30-31-ல் மனத்தையும் துக்கம் சூழ்ந்துகொண்டதும் கூறப்படுகின்றன.

निमित्तानि च पश्यामि विपरीतानि केशव ।
न च श्रेयोऽनुपश्यामि हत्वा स्वजन-माहवे ॥ ३१ ॥
न काङ्क्षे विजयं कृष्ण न च राज्यं सुखानि च ।
किं नो राज्येन गोविन्द किं भोगै-र्जीवितेन वा ॥ ३२ ॥

நிமித்தானி ச பச்யாமி விபரீதானி கேசவ |
ந ச ச்ரேயோऽனுபச்யாமி ஹத்வா ஸ்வஜன-
மாஹவே || 31 ||
ந காங்க்ஷே விஜயங் க்ருஷ்ண ந ச ராஜ்யம்
ஸுகானி ச |
கிந்நோ ராஜ்யேன கோவிந்த கிம் போகைர் ஜீவிதேன
வா || 32 ||

எரிகிறது. (அவஸ்தாதும்) நிற்பதற்கும் (ந ச சக்னோமி) சக்தியற்றவனாயிருக்கிறேன். (மே மன:) என் மனம் (ப்ரமதீவ ச) நிலையற்றுச் சுழல்வது போலுந் தோன்றுகிறது.

31. (கேசவ) கிருஷ்ணா! (விபரீதானி நிமித்தானி ச) தாறுமாறான அபசகுனங்களையும் (பச்யாமி) பார்க்கிறேன். (ஆஹவே) யுத்தத்தில் (ஸ்வஜநம்) சொந்த ஜனங்களை (ஹத்வா) கொன்று (ச்ரேயச்ச) ஒரு நன்மையையும் (ந அனுபச்யாமி) நான் காணவில்லை.

32. (க்ருஷ்ண) கிருஷ்ணா! (விஜயம்) வெற்றியை (ந காங்க்ஷே) நான் விரும்பவில்லை; (ராஜ்யஞ்ச) அரசையும் (ஸுகானிச) சுகங்களையும் (ந ச) அப்படியே; (கோவிந்த) கிருஷ்ணா (ந:) நமக்கு (ராஜ்யேன) அரசால் (கிம்) என்ன பயன்? (போகை:) போகங்களாலும் (ஜீவிதேன வா) வாழ்க்கையாலுந்தான் (கிம்) என்ன பயன்?

येषामर्थे काङ्क्षितं नो राज्यं भोगाः सुखानि च ।
त इमेऽवस्थिता युद्धे प्राणांस्त्यक्त्वा धनानि च ॥ ३३ ॥
आचार्याः पितरः पुत्रास्तथैव च पितामहाः ।
मातुलाः श्वशुराः पौत्राः स्यालाः संबन्धिन-स्तथा ॥ ३४ ॥

யேஷாமர்த்தே காங்க்ஷிதங் நோ ராஜ்யம் போகா : ஸுகானி ச |
த இமே ऽவஸ்த்திதா யுத்தே ப்ராணும்ஸ் த்யக்த்வா தனானி ச || 33 ||
ஆசார்யா : பிதர : புத்ராஸ்-ததைவ ச பிதாமஹா: |
மாதுலா: ச்வசுரா : பௌத்ரா : ஸ்யாலா : ஸம்பந்தினஸ்-ததா || 34 ||

---

33. (யேஷாம் அர்த்தே) எவர்களின் பொருட்டு (ந:) நமக்கு (ராஜ்யம்) அரசு (காங்க்ஷிதம்) விரும்பத் தக்கதோ, (போகா : ஸுகானி ச) போகங்களும் சுகங்களும் விரும்பத்தக்கனவோ (த இமே) அவர்களே இங்கு (யுத்தே) யுத்தத்தில் (ப்ராணுன் தனானி ச) உயிரையும் பொருளேயும் (த்யக்த்வா) துறந்து (அவஸ்த்திதா:) கூடி நிற்கின்றனர்.

34. (ஆசார்யா:) உபாத்யாயர்கள் (பிதர:) தகப்பன்மார்கள் (புத்ரா:) பிள்ளேகள் (ததைவ ச) அவ்வாறே (பிதாமஹா:) பாட்டன்மார்கள் (பௌத்ரா:) பேரன்மார்கள்; (ததா) அவ்வாறே (மாதுலா:) அம்மான்மார்கள் (ச்வசுரா:) மாமனுர்கள் (ஸ்யாலா:) மைத்துனர்கள் (ஸம்பந்தின:) ஸம்பந்திமார்கள்.

एतान्न हन्तुमिच्छामि घ्नतोऽपि मधुसूदन ।
अपि त्रैलोक्य-राज्यस्य हेतोः किं नु महीकृते ॥ ३५ ॥
निहत्य धार्तराष्ट्रान्नः का प्रीतिः स्याज्जनार्दन ।
पापमेवाश्रये-दस्मान् हत्वैता-नाततायिनः ॥ ३६ ॥

ஏதாந் ந ஹந்து-மிச்சாமி க்னதோபி மதுஸூதன |
அபி த்ரைலோக்ய-ராஜ்யஸ்ய ஹேதோ : கிந் நு
மஹீக்ருதே || 35 ||
நிஹத்ய தார்த்தராஷ்ட்ராந்ந : கா ப்ரீதி : ஸ்யாஜ்-
ஜனார்த்தன |
பாபமேவாச்ரயே-தஸ்மான் ஹத்வைதா-
னாததாயின : || 36 ||

---

35. (க்னதோபி) என்னைக் கொல்லுபவர்களாயினும் (ஏதான்) இவர்களை (மதுஸூதன) கிருஷ்ணா! (த்ரைலோக்ய ராஜ்யஸ்ய அபி ஹேதோ:) மூவுலகையும் ஆளும் பொருட்டும் (ந ஹந்தும் இச்சாமி) நான் கொல்ல விரும்பவில்லை. (கிந் நு மஹீக்ருதே) இந்த பூமியால் ஆவதென்ன ?

36. (ஜனார்த்தன) கிருஷ்ணா! (தார்த்தராஷ்ட்ரான்) திருதராஷ்டிரர் பிள்ளைகளை (நிஹத்ய) கொன்று (ந:) நமக்கு (கா) என்ன (ப்ரீதி:) ஸந்தோஷம் (ஸ்யாத்) ஏற்படப் போகிறது? (ஏதான்) இந்த (ஆததாயின:) கொடும் பாவிகளை (ஹத்வா) கொன்று (அஸ்மான்) நம்மை (பாபம் ஏவ) பாவமே (ஆச்ரயேத்) சேரும்.

---

36. ஆததாயின :—

அக்னிதோ கரதச்சைவ சஸ்த்ரபாணிர்த் தனாபஹ: |
க்ஷேத்ர-தார-ஹரச்சைவ ஷடேதே ஹ்யாததாயிந: ||

தீ வைப்பவன், விஷம் வைப்பவன், ஆயுதங்கொண்டு ஆயுதமில்லாதவரைக் கொல்பவன், பிறர் பொருளை அபகரிப்பவன், பிறர் பூமியை அபகரிப்பவன், பிறர் மனைவியை அபகரிப்பவன்—இவ்வறு வரும் ஆததாயிகள் எனப்படுவர்.

तस्मान्नार्हा वयं हन्तुं धार्तराष्ट्रान् स्वबान्धवान् ।
स्वजनं हि कथं हत्वा सुखिनः स्याम माधव ॥ ३७ ॥
यद्यप्येते न पश्यन्ति लोभोपहत-चेतसः ।
कुलक्षयकृतं दोषं मित्रद्रोहे च पातकम् ॥ ३८ ॥
कथं न ज्ञेय मस्माभिः पापा-दस्मा-न्निवर्तितुम् ।
कुलक्षयकृतं दोषं प्रपश्यद्भि-र्जनार्दन ॥ ३९ ॥

தஸ்மாந்-நார்ஹா வயம் ஹந்தும் தார்த்தராஷ்ட்ரான் ஸ்வபாந்தவான் |
ஸ்வஜனம் ஹி கதம் ஹத்வா ஸுகின: ஸ்யாம மாதவ || 37 ||
யத்யப்யேதே ந பச்யந்தி லோபோபஹத-சேதஸ: |
குலக்ஷய-க்ருதங் தோஷம் மித்ரத்ரோஹே ச பாதகம் || 38 ||
கதங் ந ஜ்ஞேயமஸ்மாபி: பாபாதஸ்மாங்-நிவர்த்திதும் |
குலக்ஷயக்ருதங் தோஷம் ப்ரபச்யத்பிர் ஜனார்த்தன || 39 ||

37. (தஸ்மாத்) ஆகையால் (ஸ்வபாந்தவான்) நமது உறவினர்களாகிய (தார்த்தராஷ்ட்ரான்) திருதராஷ்டிரர் பிள்ளைகளை (வயம்) நாம் (ஹந்தும்) கொல்வதற்கு (ந அர்ஹா:) தகுதியுடையவர்கள் அல்ல. (மாதவ) கிருஷ்ண! (ஸ்வஜனம்) உறவினர்களை (ஹத்வா) கொன்று (கதம் ஹி) எங்ஙனம் (ஸுகின:) சுகம் எய்தியவர்களாய் (ஸ்யாம) ஆவோம்?

38-39. (லோபோபஹத-சேதஸ:) பேராசையால் விவேகம் இழந்தவர்களான (ஏதே) இவர்கள் (குலக்ஷய

38-39 ஓ (அக்ரோதேன ஜயேத் க்ரோதம் அஸாதும் ஸாதுனா ஜயேத | ஜயேத் கதர்யான் தானேன ஜயேத் ஸத்யேன

कुलक्षये प्रणश्यन्ति कुलधर्माः सनातनाः ।
धर्मे नष्टे कुलं कृत्स्न-मधर्मो ऽभिभवत्युत ॥ ४० ॥

குலக்ஷயே ப்ரணச்யந்தி குலதர்மா : ஸநாதநா: |
தர்மே நஷ்டே குலங் க்ருத்ஸ்ன-மதர்மோ
ऽபிபவத்யுத || 40 ||

க்ருதங் தோஷம்) குலநாசத்தால் விளையுங் கெடுதலே யும் (மித்ரத்ரோஹே ச பாதகம்) நண்பர்களுக்குத் தீமை செய்வதால் விளையும் பாவத்தையும் (ந பச்யந்தி யத்யபி) காணவில்லை என்றாலும், (ஜனார்த்தன !) கிருஷ்ணா ! (குலக்ஷயக்ருதங் தோஷம்) குல நாசத்தால் விளையுங்கெடுதலை (ப்ரபச்யத்பி:) தெளிவுறக் காண்பவர்களான (அஸ்மாபி:) நம்மால் (அஸ்மாத் பாபாத்) இந்தப் பாவத்தினின்று (நிவர்த்திதும்) விலகுவதற்கு (கதம்) எங்ஙனம் (ந ஜ்ஞேயம்) அறியப்படாமற் போகலாம்?

40. (குலக்ஷயே) குலம் நாசமடையும்போது (ஸநாதநா:) தொன்று தொட்டுவந்த (குலதர்மா:) குல தருமங்கள் (ப்ரணச்யந்தி) நாசமடையும்; (உத) மேலும் (தர்மே நஷ்டே) தருமம் அழிந்தால், (க்ருத்ஸ்னம் குலம்) குலம் முழுதும் (அதர்ம:) அதருமம் (அபிபவதி) பரவி நிற்கும்.

சான்றுதம் || கோபமின்மையால் கோபத்தை ஜயிக்கவேண்டும். கெட்டவனை நல்ல செயலால் ஜயிக்கவேண்டும். கொடியவனைத் தானத்தால் ஜயிக்கவேண்டும். பொய்யை மெய்யாலே ஜயிக்க வேண்டும்.—(ம.பா.உத். 38. 73-74).

40. குலதர்மா :—

ஒ.—தர்மோ தாரயதி ப்ரஜா :—பிரஜைகளைத் தாங்கிக் காப்பது தருமம்.

अधर्माभिभवात् कृष्ण प्रदुष्यन्ति कुलस्त्रियः ।
स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसङ्करः ॥ ४१ ॥
सङ्करो नरकायैव कुलघ्नानां कुलस्य च ।
पतन्ति पितरो ह्येषां लुप्त-पिण्डोदक-क्रियाः ॥ ४२ ॥

அதர்மாபிபவாத் க்ருஷ்ண ப்ரதுஷ்யந்தி குலஸ்த்ரிய: |
ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே
வர்ணஸங்கர : || 41 ||

ஸங்கரோ நரகாயைவ குலக்னானாம் குலஸ்ய ச |
பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்த-பிண்டோதக-
க்ரியா : || 42 ||

---

41. (க்ருஷ்ண) கிருஷ்ணா ! (அதர்மாபிபவாத்) அதருமம் பரவுவதால், (குலஸ்த்ரிய:) குலப் பெண்கள் (ப்ரதுஷ்யந்தி) கற்பை இழந்து கெட்டுப் போவர் ; (வார்ஷ்ணேய) வ்ருஷ்ணி குலத்துதித்த கிருஷ்ணா ! (ஸ்த்ரீஷு துஷ்டாஸு) பெண்கள் கெட்டால் (வர்ண ஸங்கர:) ஜாதிக் கலப்பு (ஜாயதே) ஏற்படும்.

42. (ஸங்கர:) ஜாதிக் கலப்பு (குலக்னானம்) குலத்தை நாசம் செய்தோருக்கும் (குலஸ்ய ச) நாசமடைந்த குலத்துக்கும் (நரகாய ஏவ ஹி) நரகத்திற்கே யாகும் அன்றோ ! (ஏஷாம்) இவர்களுடைய (பிதர:) பிதிர்க்கள் (லுப்த-பிண்டோதக-க்ரியா:) பிண்டம் தர்ப்பணம் முதலிய கிரியைகள் இன்றி (பதந்தி) வீழ்கின்றார்கள்.

दोषैरेतैः कुलघ्नानां वर्णसङ्कर-कारकैः ।
उत्साद्यन्ते जातिधर्माः कुलधर्माश्च शाश्वताः ॥ ४३ ॥

उत्सन्न-कुलधर्माणां मनुष्याणां जनार्दन ।
नरके नियतं वासो भवतीत्यनुशुश्रुम ॥ ४४ ॥

தோஷை-ரேதை : குலக்னாநாம் வர்ணஸங்கர-
காரகை: |
உத்ஸாத்யந்தே ஜாதிதர்மா: குலதர்மாச்ச
சாச்வதா: || 43 ||
உத்ஸன்ன குலதர்மாணாம் மனுஷ்யாணாஞ்
ஜனார்த்தன |
நரகே நியதம் வாஸோ பவதீத்-யனுசுச்ரும் || 44 ||

---

43. (குலக்னாநாம்) குலமழித்த பாதகர்களின் (வர்ண-ஸங்கர-காரகை:) ஜாதிக்கலப்பை விளேக்கும் (ஏதை : தோஷை:) இந்தக் கொடுஞ் செயல்களால் (சாச்வதா:) தொன்றுதொட்டு வந்த (ஜாதி-தர்மா:) ஜாதி தருமங்களும் (குலதர்மாச்ச) குல தருமங்களும் (உத்ஸாத்யந்தே) அழிவடைகின்றன.

44. (ஜனார்த்தன) ஜனார்த்தன! (உத்ஸன்ன குல தர்மாணாம் மனுஷ்யாணாம்) குலவொழுக்கஞ் சிதைந்த மனிதர்க்கு (நியதம்) நிலேயான (நரகே வாஸ:) நரக வாஸம் (பவதி) ஏற்படுகின்றது (இதி) என்று (அனு சுச்ரும) கேள்விப்பட்டுள்ளோம்.

अहो बत महत्पापं कर्तुं व्यवसिता वयम् ।
यद्राज्य-सुखलोभेन हन्तुं स्वजन-मुद्यताः ॥ ४५ ॥
यदि मामप्रतीकार-मशस्त्रं शस्त्रपाणयः ।
धार्तराष्ट्रा रणे हन्यु-स्तन्मे क्षेमतरं भवेत् ॥ ४६ ॥

அஹோ பத மஹத் பாபம் கர்த்தும் வ்யவஸிதா வயம் |
யத்-ராஜ்ய-ஸுக-லோபேன ஹந்தும் ஸ்வஜன-
முத்யதா: || 45 ||
யதி மாமப்ரதீகார-மசஸ்த்ரம் சஸ்த்ரபாணய: |
தார்த்தராஷ்ட்ரா ரணே ஹன்யுஸ்-தன்மே க்ஷேமதரம்
பவேத் || 46 ||

---

45. (யத்) எந்த (ராஜ்யஸுக லோபேன) அரச இன்பத்தில் பேராசை கொண்டு (ஸ்வஜனம்) உறவினரை (ஹந்தும்) கொல்வதற்கு (உத்யதா:) முன்வந்தோமோ, அக்காரணத்தால், (அஹோ பத) அந்தோ! (மஹத்பாபம்) பெரும் பாவத்தை (கர்த்தும்) செய்வதற்கு (வயம்) நாம் (வ்யவஸிதா:) துணிந்தவர்களாயினோம்.

46. (அப்ரதீகாரப்) எதிர்த்துப் போராடாதவனையும் (அசஸ்த்ரம்) ஆயுதமில்லாதவனையும் உள்ள (மாம்) என்னை (சஸ்த்ர-பாணய:) ஆயுத மேந்திய (தார்த்தராஷ்ட்ரா:) திருதராஷ்ட்ர புத்ரர்கள் (ரணே) போர்க்களத்தில் (ஹன்யு: யதி) கொல்லுவரேல் (தத்) அது (மே) எனக்கு (க்ஷேமதரம் பவேத்) அதிக நன்மை தருவதாக ஆகும்.

'க்ஷேமதரம்'—'ப்ரியதரம்'—பா. பே.

सञ्जय उवाच—
एवमुक्त्वाऽर्जुनः संख्ये रथोपस्थ उपाविशत् ।
विसृज्य सशरं चापं शोक-संविग्न-मानसः ॥ ४७ ॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादेऽर्जुनविषादयोगो नाम
प्रथमोऽध्यायः ॥

ஸஞ்ஜய உவாச—
ஏவமுக்த்வா ऽர்ஜுன: ஸங்க்யே ரதோபஸ்த
உபாவிசத் ||
விஸ்ருஜ்ய ஸசரம் சாபம் சோக-ஸம்விக்ன-
மானஸ: || 47 ||
இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம
வித்யாயாம்
யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுனஸம்வாதே
அர்ஜுன விஷாதயோகோ நாம
ப்ரதமோऽத்யாய: ||

ஸஞ்ஜயர் கூறியது—

47. (அர்ஜுன:) அர்ஜுனன் (ஏவம்) இவ்வாறு (உக்த்வா) கூறிவிட்டு (ஸங்க்யே) போர்க்களத்தில் (ஸசரம்) அம்புடன் கூடிய (சாபம்) வில்லை (விஸ்ருஜ்ய)

விஷாதயோகம்—(அநித்யமஸுகம் லோகம் கீ. 9·33) உலகம் அழிவுடையது சுகமில்லாதது என்ற அறிவும் வைராக்கியமும் துன்பத்தினின்றே தோன்றுவதால், ஞானோதயத்திற்கு அடிப்படையாகத் துன்பமும் வேண்டுவதாம். அதனால் அர்ஜுனனுடைய (விஷாதம்) மனக்கலக்கம் யோக சாஸ்திரத்தின் முதற்படியாயிற்று.

எறிந்துவிட்டு (சோக-ஸம்விக்ன-மானஸ:) பொங்குந் துயரத்தால் மனமுடைந்தவனாய் (ரதோபஸ்தே) தேர்த் தட்டின்மேல் (உபாவிசத்) உட்கார்ந்து விட்டான்.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திரமாயும்
ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸம்பா
ஷணையாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத்கீதை
எனும் உபநிஷத்தில் அர்ஜுன விஷாத
யோகம் என்று பெயர் பெற்ற
முதல் அத்தியாயம் முற்றும்.

அத்தியாயத்தின் விஷயச் சுருக்கம்—

திருதராஷ்டிர மகாராஜா யுத்தத்தின் போக்கை அறிய விரும்பி விரிவாய் வர்ணிக்கும்படி ஸஞ்ஜயரை வேண்ட அவர் வர்ணிக்கத் தொடங்குதல்; துரியோதனன் பொறாமையாலும் பயத்தாலும் துரோணாசாரியரிடம் பேசியதும், பீஷ்மரிடம் அவநம்பிக்கையால் அவரை நன்றாக கவனித்துக் காக்கும்படி கூறியதும்; போர்த் துவக்க முழக்கம்; பாண்டவர் சங்க நாதத்தால் துரியோதனாதியர் மனம் கலங்குதல். இருசேனைக்கும் நடுவில் அர்ஜுனன் தேரை பகவான் நிறுத்துதல்; பந்துக்களின் நாசம் ஏற்படும் என்றும், தருமம் அழியும் என்றும் பயந்து அர்ஜுனன் மனம் குழம்பிப் புலம்பித் தேர்த்தட்டில் சோர்ந்து வீழ்தல்.

நெருப்பைத் தூண்டிவிட்டபின் ஆஹுதி செய்வதுபோலும், புண்ணைப் பழுக்கவைத்து அறுப்பதுபோலும் மனக்கிளர்ச்சிக்குப் பின் உபதேசம்.

குருநிலத்திலே விசயன் கூடியதன் பாட்டன்
வருகுரவர் மாமன் முதல் மற்றும்—அறியதமர்
யாவரையுங் கண்டிவரை எவ்வாறு கொல்வனென
மேவு துயர் கூறுமிது மிக்கு. —கீ. வெ

॥ द्वितीयोऽध्यायः ॥

(साङ्ख्ययोगः)

सञ्जय उवाच—

तं तथा कृपयाऽऽविष्ट-मश्रुपूर्णाकुलेक्षणम् ।
विषीदन्त-मिदं वाक्य-मुवाच मधुसूदनः ॥ १ ॥ ४८ ॥

இரண்டாம் அத்தியாயம்

(ஸாங்கிய யோகம்)

ஸஞ்ஜய உவாச—

தம் ததா க்ருபயாவிஷ்ட-மச்ருபூர்ணுகுலேக்ஷணம் |
விஷீதந்த-மிதம் வாக்ய-முவாச மதுஸூதன : || 1 || (48)

ஸஞ்ஜயர் கூறியது—

1. (மதுஸூதன:) கிருஷ்ணன் (ததா) அவ்வாறு (க்ருபயா) இரக்கத்தால் (ஆவிஷ்டம்) மனங்கரைந்தவனும் (அச்ரு-பூர்ணுகுலேக்ஷணம்) கண்ணீரால் மறைந்த பார்வையுடையவனும (விஷீதந்தம்) துக்கிப்பவனுமான (தம்) அந்த அர்ஜுனனை நோக்கி (இதம்) இந்த (வாக்யம்) வார்த்தையை (உவாச) கூறினுர்.

ஓ—அஸ்த்தான-ஸ்நேஹ-காருண்ய-தர்மாதர்ம-தியாகுலம்
பார்த்தம் ப்ரபங்ந-முத்திச்ய சாஸ்த்ராவதரணங் க்ருதம் ||

—கீ. ஸ.

உகவையடைந்த உறவுடையார் உறவற்ற அந்நாள்
தகவுடை அன்பு கரை புரளத் தருமத்தளவில்
மிகவுள மஞ்சி விழுந்தடி சேர்ந்த விசயனுக்கோர்
நகையுடன் உண்மை உரைக்க அமர்ந்தனர் நாரணரே.

—கீ.ஸ.

அத்தியாயத்தின் பெயர்—

ஸாங்க்ய யோக ஸாதனத்தில், ஆத்ம ஸ்வரூபத்தின் சிரவணம், மனனம், நிதித்தியாஸனம் முக்கியமான அம்சங்கள். இவைகள் இங்கு விளக்கப்படுவதால் இவ்வத்தியாயத்திற்கு "ஸாங்க்ய யோகம்" என்ற பெயர் அமைந்தது.

श्रीभगवानुवाच—
कुतस्त्वा कश्मल-मिदं विषमे समुपस्थितम् ।
अनार्यजुष्ट-मस्वर्ग्य-मकीर्तिकर-मर्जुन ॥ २ ॥ ४९ ॥
क्लैब्यं मा स्म गमः पार्थ नैतत्त्वय्युपपद्यते ।
क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परन्तप ॥ ३ ॥ ५० ॥

ஸ்ரீபகவானுவாச—
குதஸ்த்வா கச்மல-மிதம் விஷமே ஸமுபஸ்த்திதம் |
அநார்யஜுஷ்ட-மஸ்வர்க்ய-மகீர்த்திகர-மர்ஜுந
|| 2 || (49)
க்லைப்யம் மாஸ்மகம: பார்த்த நைதத் த்வய்யுபபத்யதே |
க்ஷுத்ரம் ஹ்ருதய-தௌர்ப்பல்யந் த்யக்த்வோத்
திஷ்ட்ட பரந்தப || 3 ||

ஸ்ரீ பகவான் கூறியது—

2. (அர்ஜுன) அர்ஜுனா! (விஷமே) இந்தச் சிக்கலான நிலையில் (இதம்) இந்த (அனார்யஜுஷ்டம்) மேல்மக்களுக் கொவ்வாததும் (அஸ்வர்க்யம்) வானவர் நாட்டின் வழியை யடைப்பதும் (அகீர்த்திகரம்) பழிக்கிடமானதும் ஆகிய (கச்மலம்) மனக் குழப்பம் (த்வா) உன்னை (குத:) எங்கிருந்து (ஸமுபஸ்த்திதம்) வந்தடைந்தது?

3: (பரந்தப) எதிரிகளை எரிப்பவனாகிய (பார்த்த) அர்ஜுனா! (க்லைப்யம்) பேடித்தனத்தை (மாஸ்மகம:)

---

2. **கச்மலம்**— அழுக்கு. அர்ஜுனன் வெளுப்பு நிறமும் பரிசுத்தமான செய்கைகளும் உடையவன்; அவனிடம் 'கச்மலம்' ஒவ்வாது.

ஓ—ப்ருதிவ்யாம் சதுரந்தாயாம் வர்ணோ மே துர்லப: ஸம: |
கரோமி கர்ம-சுத்தஞ் ச தேன மாம் அர்ஜுனம் விது: ||

என் நிறமும் சிறந்தது, கருமமும் சுத்தம். ஆகையால் என்னை அர்ஜுனன் என்பர்.

अर्जुन उवाच—
कथं भीष्म-महं सङ्ख्ये द्रोणं च मधुसूदन ।
इषुभिः प्रतियोत्स्यामि पूजार्हावरिसूदन ॥ ४ ॥ ५१ ॥

அர்ஜுன உவாச
கதம் பீஷ்ம-மஹம் ஸங்க்யே த்ரோணஞ்ச
மதுஸூதன |
இஷுபி: ப்ரதியோத்ஸ்யாமி பூஜார்ஹாவரிஸூதன |
|| 4 || (51)

அடையாதே. (ஏதத்) இது (த்வயி) உன்னிடத்தில் (ந உபபத்யதே) சிறிதும் பொருந்தாது. (க்ஷுத்ரம்) அற்பமான (ஹிருதய தௌர்ப்பல்யம்) மனத் தளர்ச்சியை (த்யக்த்வா) ஒழித்து (உத்திஷ்ட்ட) எழுந்திரு.

அர்ஜுனன் கூறியது—

4. (மதுஸூதன! அரிஸூதன!) மது என்ற அரக்கனைப் போக்கியவனும் எதிரிகளை ஒழித்தவனும் ஆகிய கிருஷ்ணா! (அஹம்) நான் (பூஜார்ஹௌ) பூஜிக்கத் தகுந்த (பீஷ்மம்) பீஷ்மரையும் (த்ரோணஞ்ச) துரோணரையும் (இஷுபி:) அம்புகளைக் கொண்டு (கதம்) எவ்வாறு (ஸங்க்யே) யுத்தத்தில் (ப்ரதியோத் ஸ்யாமி) எதிர்த்துப் போர் புரிவேன்?

---

3. உலகில் பாவம் என்பது உண்டு என்றால் அதுதான் பயமும் பலஹீனமும். இந்த ஒரு சுலோகத்தை ஒருவன் படித்தால் கீதை முழுவதும் படித்த பயன் எய்துகிறான். இந்த ஒரு சுலோகத் தில் கீதையின் ரஹஸ்யம் ஆழ்ந்து உறைகின்றது.

—விவேகானந்தர்

உத்திஷ்ட்ட—இது துக்கத்தில் ஆழ்ந்த ஜீவனைத் தட்டியெழுப்பும் மந்திரம்.

ஓ—(உத்திஷ்ட்டத, ஜாக்ரத)எழுந்திரு, விழித்துக்கொள். —கட. உப.

இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்.'-(ஆண்டாள்.)

गुरू-नहत्वा हि महानुभावान्
श्रेयो भोक्तुं भैक्ष्य-मपीह लोके ।
हत्वाऽर्थकामांस्तु गुरू-निहैव
भुञ्जीय भोगान् रुधिरप्रदिग्धान् ॥ ५ ॥ ५२ ॥
न चैतद्विद्मः कतरन्नो गरीयो
यद्वा जयेम यदि वा नो जयेयुः ।

குரூ-னஹத்வா ஹி மஹானுபாவான்
ச்ரேயோ போக்தும் பைக்ஷ்யமபீஹ லோகே |
ஹத்வார்த்தகாமாம்ஸ்து குரூ-னிஹைவ
புஞ்ஜீய போகான் ருதிர-ப்ரதிக்தான் || 5 || (52)
நசைதத்-வித்ம: கதரந்நோ கரீயோ
யத்வா ஜயேம யதி வா நோ ஜயேயு: |

5. (மஹானுபாவான்) போற்றுதற்குரியவரான (குரூன்) ஆசிரியர்களை (அஹத்வா) கொல்லாமல் (இஹலோகே) இவ்வுலகில் (பைக்ஷ்யம் அபி போக்தும்) பிச்சை புகுந்துண்ணுதலும் (ச்ரேய: ஹி) சிறந்த தன்றோ? (து) அன்றி (குரூன்) ஆசிரியர்களை (ஹத்வா) கொன்றால் (இஹைவ) இங்கேயே (ருதிர ப்ரதிக்தான்) இரத்தந் தோய்ந்த (அர்த்த காமான் போகான்) பொருளையும் இன்பங்களையும் போகங்களையும் (புஞ்ஜீய) அனுபவித்தவனாவேன்.

6. (யத்வா ஜயேம) நாம் ஜயிக்கலாம் (யதிவா ந: ஜயேயு:) அல்லது நம்மை அவர்கள் ஜயிக்கலாம்

5. ரத்தந்தோய்ந்து—கொல்லாமையால் இங்கேயே ஸ்வர்க்கம் போலும், கொல்லுவதால் இங்கேயே நரகம் போலும் ஆகும்.

6. யுத்தம் ஸ்வதர்மமாதலால் நல்லது, ஹிம்சை இருத்தலால் தீது. ஸ்வதர்மத்தை விடுதல் தீது எனினும் ஹிம்சையின்மையால் நல்லது. இது அர்ஜுனனுடைய தர்மஸங்கடம்.

यानेव हत्वा न जिजीविषाम-
स्तेऽवस्थिताः प्रमुखे धार्तराष्ट्राः ॥ ६ ॥ ५३ ॥
कार्पण्यदोषोपहत स्वभावः
पृच्छामि त्वां धर्मसम्मूढचेताः ।
यच्छ्रेयः स्यान्निश्चितं ब्रूहि तन्मे
शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम् ॥ ७ ॥ ५४ ॥

யாநேவ ஹத்வா ந ஜிஜீவிஷாமஸ்-
தே ऽவஸ்திதா: ப்ரமுகே தார்த்தராஷ்ட்ரா: || 6 ||
கார்ப்பண்ய-தோஷோபஹத-ஸ்வபாவ:
ப்ருச்சாமி த்வாம் தர்ம-ஸம்மூடசேதா: |
யச்ச்ரேயஸ்யாந்-நிச்சிதம் ப்ரூஹி தன்மே
சிஷ்யஸ்தேऽஹம் சாதி மாம் த்வாம் ப்ரபன்னம் || 7 ||

(ந:) நமக்கு (கதரத்) இரண்டுள் எது (கரீய:) சிறந்தது என்று (ஏதத்) இதை (நசவித்ம:) நான் உணரவில்லை. (யா நேவஹத்வா) எவர்களைக்கொன்று (ந ஜிஜீவிஷாம:) நாம் உயிர்வாழ விரும்போமோ (தே தார்த்தராஷ்ட்ரா:) அந்த திருதராஷ்ட்ர புத்ரர்கள் (ப்ரமுகே) முன்னெதிர்த்து (அவஸ்திதா:) நிற்கின்றனர்.

7. (கார்ப்பண்ய-தோஷோபஹத - ஸ்வபாவ:) இரக்கத்தால் இயற்கை குணங்களை இழந்தவனும் (தர்ம-ஸம்மூட-சேதா:) கடமையில் புத்தி திகைத்தவனும் ஆகிய நான் (த்வாம்) உன்னை (ப்ருச்சாமி) கேட்கிறேன்; (மே) எனக்கு (யத்) எது (ச்ரேய:) சிறந்த நன்மையளிக்க கூடியதாக (ஸ்யாத்) இருக்குமோ (தத்) அதை (நிச்சிதம்) நிச்சயித்து (ப்ரூஹி) கூறு; (அஹம்) நான் (தே) உன்னுடைய (சிஷ்ய:) சிஷ்யன்; (த்வாம்) உன்னை (ப்ரபன்னம்) பிரபத்தி செய்த—சரண் புகுந்த—(மாம்) என்னை (சாதி) கட்டளையிடு.

---

7. கார்ப்பண்யம்—'கிருபணத்தன்மை'—ஏழ்மை, லோபம், மனத்தின் நொய்மை, பேடித்தனம், இரக்கம், ஆத்மஞானமில்லாத.

**न हि प्रपश्यामि ममापनुद्याद् यच्छोक-मुच्छोषण-मिन्द्रियाणाम् ।
अवाप्य भूमावसपत्नमृद्धं राज्यं सुराणामपि चाधिपत्यम् ॥ ८ ॥**

ந ஹி ப்ரபச்யாமி மமாபனுத்யாத்
யச்சோக-முச்சோஷண-மிந்த்ரியாணும் |
அவாப்ய பூமாவஸபத்னம் ருத்தம்
ராஜ்யம் ஸுராணு-மபி சாதிபத்யம் || 8 || (55)

---

8. (பூமௌ) பூமியில் (அஸபத்னம்) எதிரியில்லாததும் (ருத்தம்) எல்லா வளமைகளும் உடையதும் ஆகிய (ராஜ்யம்) அரசும் (ஸுராணும் அபி ஆதிபத்யஞ்ச) தேவர்களுடைய ஆள்கையும் (அவாப்ய) அடைந்தும் (மம) என்னுடைய (இந்த்ரியாணும்) புலன்களை (உச்சோஷணம்) உலர்த்தி வாட்டும் (சோகம்) விசனத்தை (யத் அபனுத்யாத்) எது போக்குமோ அதை (ந ஹி ப்ரபச்யாமி) நான் காணவில்லை.

வாழ்வு—அர்ஜுனன் இங்கு இச்சொல்லால் தன் நிலைமையைக் கூறுதலால் இரக்கத்தால் ஏற்பட்ட மன நொய்மை எனும் அர்த்தந்தான் பொருந்தும்; அர்ஜுனன் ஏழையுமன்று, லோபியுமன்று. பேடியுமன்று. **ப்ரபத்தி**—பகவான் ஸர்வசக்திமான், ஸர்வஜ்ஞன், ஸர்வாந்தர்யாமி, பரமபந்து என்றுணர்ந்து அவனிடம் உடல் பொருள் ஆவியனைத்தும் ஸமர்ப்பணம் செய்தல். இது **சரணுகதி** என்றும் **ஆத்மநிக்ஷேபம்** என்றும் **ஸந்நியாஸம்** என்றும், **ஸர்வகர்ம-பலத்யாகம்** என்றும் கூறப்படும். கீதா சாஸ்திரம் உண்மையில் இங்குதான் ஆரம்பிக்கின்றது; சரமச்லோகம் என வழங்கும் ஸர்வதர்மான் பரித்யஜ்ய என்ற 18-69ல் பூர்த்தியாகின்றது.

ஓ—அன்றேயென் றணுவியு முடலு முடைமையெல்லாமுங்
குன்றே யனையா யென்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோரிடை யூறெனக்குண்டோ எண்டோண் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே.
(திருவாசகம்)

ஓ—சரணுகதி செய்வோர் இரண்டு வகை யாவர், குரங்குக் குட்டிகளைப் போலும், பூனைக்குட்டிகளைப்போலும். குரங்குக்குட்டி

सञ्जय उवाच—

एवमुक्त्वा हृषीकेशं गुडाकेशः परन्तपः ।
न योत्स्य इति गोविन्द-मुक्त्वा तूष्णीं बभूव ह ॥ ९ ॥ ५६ ॥
तमुवाच हृषीकेशः प्रहसन्निव भारत ।
सेनयो-रुभयो-र्मध्ये विषीदन्त मिदं वचः ॥ १० ॥ ५७ ॥

ஸஞ்ஜய உவாச—

ஏவமுக்த்வா ஹ்ருஷீகேசம் குடாகேச: பரந்தப: |
ந யோத்ஸ்ய இதி கோவிந்த-முக்த்வா தூஷ்ணீம்
பபூவ ஹ || 9 || (56)
தமுவாச ஹ்ருஷீகேச: ப்ரஹஸன்னிவ பாரத |
ஸேனயோ-ருபயோர்-மத்யே விஷீதந்த-மிதம் வச: ||10||

ஸஞ்ஜயர் கூறியது—

9. (பரந்தப:) எதிரிகளை எரிப்பவனும் (குடாகேச:) தூக்கத்தையும் சோம்பலையும் ஜயித்தவனும் ஆகிய அர்ஜுனன் (ஹ்ருஷீகேசம்) புலன்களை யாளபவனாகிய கிருஷ்ணனை நோக்கி (ஏவம்) இவ்வாறு (உக்த்வா) சொல்லிவிட்டு, (ந யோத்ஸ்யே இதி) போர் புரிய மாட்டேன் என்றும் (கோவிந்தம் உக்த்வா) கிருஷ்ணனிடம் சொல்லி (தூஷ்ணீம்) மௌனமாக (பபூவ ஹ) இருந்தான்.

10. (பாரத)—எவன்பேரால் இந்நாடு பாரதநாடு எனப்படுகிறதோ அந்த பரத மஹாராஜன் வம்சத்தில்

தன் தாயைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுகிறது; பூனைக் குட்டியோ தாயைப் பிடித்துக்கொள்ளச் சக்தியற்றதாய் விட்ட இடத்திலேயே கிடக்கிறது. குரங்குக்குட்டி தன் பிடிப்பை விடுமானால் கீழே விழுந்து காயமுறும். பூனைக் குட்டியைத் தாயே தூக்கிச் செல்வதால் அவ்வித அபாயத்துக்குள்ளாவதில்லை. **(ரா. கி.)**

9. மௌனமாக இருந்தான்—மௌனமாயிருந்தால் தான் பகவான் அந்தரங்கத்தில் உரைப்பதைக் கேட்க முடியும்.

श्रीभगवानुवाच –
अशोच्या-नन्वशोचस्त्वं प्रज्ञावादांश्च भाषसे ।
गतासू-नगतासूंश्च नानुशोचन्ति पण्डिताः ॥ ११ ॥५८ ॥

ஸ்ரீபகவானுவாச—
அசோச்யா-னன்வசோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ச்ச பாஷஸே |
கதாஸூ-நகதாஸூம்ச்ச நானுசோசந்தி பண்டிதா: ||11||

உதித்த—திருதராஷ்டிரா! (உபயோ: ஸேனயோ:) இரு சேனைகளுக்கும் (மத்யே) மத்தியில (விஷீதந்தம்) வருந்தி நிற்கும் (தம்) அந்த அர்ஜுனனை நோக்கி (ஹ்ருஷீகேச:) கிருஷ்ணன் (ப்ரஹஸன்னிவ) புன்முறுவல் பூத்தவன் போல் (இதம் வச:) இந்த வார்த்தையை (உவாச) சொன்னார்.

ஸ்ரீ பகவான் கூறியது—

11. (த்வம) நீ (அசோச்யான்) துக்கிக்கத் தகாதவர்களைக் குறித்து (அன்வசோச:) துக்கிக்கின்றாய், (ப்ரஜ்ஞாவாதான் ச) ஞான வார்த்தைகளையும்

---

10. ப்ரஹஸன்னிவ—கண்ணன் எந்த ஸங்கடத்தையும் புன்சிரிப்பிலேயே போக்குபவன்.

ஓ—கோபத்திலே யொரு சொல்லிற் சிறித்துக்
குலுங்கிடச் செய்திடுவான்—மனஸ்
தாபத்திலே யொன்று செய்து மகிழ்ச்சி
தளிர்த்திடச் செய்திடுவான்—பெரும்
ஆபத்தினில் வந்து பக்கத்திலே நின்
றதனை விலக்கிடுவான். —(பாரதி)

11. அகதாஸூன்

ஓ—செத்துக்கிடக்கும் பிணந்தனின்மேல் இனிச்சாகும் பிணங்
கிடந்து கத்துங்கணக் கென்னகாண் கச்சி ஏகம்பனே.
—(பட்டினத்தார்)

ப்ரஜ்ஞாவாதாம்ச்ச—சூரனைப்போல் பேசுகின்றான், கோழையைப்போல் பதறுகின்றான்; நான் சரணாகதன், சிஷ்யன், சொன்ன

न त्वेवाहं जातु नासं न त्वं नेमे जनाधिपाः ।
न चैव न भविष्यामः सर्वे वयमतः परम् ॥ १२ ॥ ५९ ॥
देहिनोऽस्मिन् यथा देहे कौमारं यौवनं जरा ।
तथा देहान्तरप्राप्ति-र्धीरस्तत्र न मुह्यति ॥ १३ ॥ ६० ॥

நத்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜனுதிபா: |
ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே-வய-மத: பரம் ||12|| (59)
தேஹிஞே஽ஸ்மின் யதா தேஹே கௌமாரம்
யௌவனம் ஜரா |
ததா தேஹாந்தர-ப்ராப்திர் தீரஸ்-தத்ர ந முஹ்யதி ||13||

(பாஷஸே) பேசுகிருய், (பண்டிதா:) ஞானிகள் (கதாஸூன்) உயிரிழந்தவர்களைக் குறித்தோ (அகதாஸூன் ச) உயிரிழக்காதவர்களைக் குறித்தோ (ந அனுசோசந்தி) துக்கப்படமாட்டார்கள்.

12. (அஹம்) நான் (ஜாது) ஒரு போதும் (ந து ஆஸம்) இல்லாமலிருந்தது என்பது (ந ஏவ) இல்லை; (ந த்வம் ஏவ) நீயும் அவ்வாறே இல்லாமலிருந்ததில்லை; (அத: பரம்) இனிமேலும் (ஸர்வே வயம்) நாமெல்லோரும் (ந பவிஷ்யாம: ச) இல்லாமல் போவோம் என்பதும் (ந ஏவ) இல்லவே இல்லை.

13, (தேஹின:) உடலில் உறையும் ஆன்மாவுக்கு (அஸ்மின் தேஹே) இவ்வுடலில் (கௌமாரம்) குழந்தைப் பருவம் (யௌவனம்) இளமை (ஜரா)

படி செய்கிறேன் என்கின்ருன், யுத்தம் செய்யமாட்டேன் என்ற தீர்மானத்தையும் கைவிடவில்லை:—இதைச் சுட்டிக்காட்டி பகவான் நகைப்பவர் போல் காண்கின்ருர்.

12. ப்ராஜ்ஞுவந் நாபிபாஷஸே என்பது காஷ்மீர பாடம்.

13. இளமையிலிருந்து முதுமைக்கு மாறும்போது எங்ஙனம் தொடர்பு கெடவில்லையோ அங்ஙனமே ஒரு சரீரத்தைவிட்டு மற்ருென்றுக்கு மாறும்போதும் தொடர்பு கெடாது.

मात्रास्पर्शास्तु कौन्तेय शीतोष्ण-सुखदुःखदाः ।
आगमापायिनोऽनित्यास्तांस्तितिक्षस्व भारत ॥ १४ ॥ ६१ ॥
यं हि न व्यथयन्त्येते पुरुषं पुरुषर्षभ ।
समदुःखसुखं धीरं सोऽमृतत्वाय कल्पते ॥ १५ ॥ ६२ ॥

மாத்ரா-ஸ்பர்சாஸ்து கௌந்தேய சீதோஷ்ண-
ஸுகதுக்கதா: |
ஆகமாபாயினோऽநித்யாஸ்-தாம்ஸ்-திதிக்ஷஸ்வ பாரத ||
யம் ஹி ந வ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ஷப |
ஸம-து:க்க-ஸுகம் தீரம் ஸோऽம்ருதத்வாய கல்பதே
|| 15 || (62)

மூப்பு (யதா) எப்படியோ, (ததா) அப்படியே (தேஹாந்தரப்ராப்தி:) வேறு உடல் அடைதலும்; (தத்ர) அதில் (தீர:) ஞானி (ந முஹ்யதி) மயங்குவதில்லை.

14. (கௌந்தேய) குந்தியின் மகனான அர்ஜுனா! (மாத்ரா-ஸ்பர்சாஸ்து) புலன்கள் தத்தம் விஷயங்களுடன்கூடும் நிலைகளே (சீதோஷ்ண ஸுகது:க்கதா:) குளிர் வெப்பம் இன்பம் துன்பம் எனும் உணர்ச்சிகளைத் தருகின்றன; (ஆகமாபாயின:) அவை தோன்றி மறைபவை. (அநித்யா:) நிலையற்றவை; (பாரத) பரத வம்சத்துதித்தோனே! (தான்) அவற்றை (திதிக்ஷஸ்வ) பொறுத்துக்கொள்.

15. (புருஷர்ஷப) ஆண்மையிற் சிறந்தவனே! (ஏதே) இவைகள் (ஸமது:க்கஸுகம்) இன்ப துன்பங்களைச் சமமாய்க் கொண்டவனும் (தீரம்) திடசித்தமுடையவனுமாகிய (யம் புருஷம்) எந்தப் புருஷனை (ந வ்யதயந்தி) கலக்காவோ (ஸ: ஹி) அவனன்றோ (அம்ருதத்வாய) அழிவில்லா நிலையாகிய வீடு பெறுதற்கு (கல்பதே) உரியவனாகிறான்.

नासतो विद्यते भावो नाभावो विद्यते सतः ।
उभयोरपि दृष्टोऽन्त-स्त्वनयो-स्तत्त्वदर्शिभिः ॥ १६ ॥ ६३ ॥

अविनाशि तु तद्विद्धि येन सर्व-मिदं ततम् ।
विनाश-मव्ययस्यास्य न कश्चित् कर्तुमर्हति ॥ १७ ॥ ६४ ॥

நாஸதோ வித்யதே பாவோ நாபாவோ வித்யதே ஸத: |
உபயோரபி த்ருஷ்டோऽந்தஸ்-த்வனயோஸ்-
தத்வதர்சிபி: || 16 || (63)

அவிநாசி து தத்வித்தி யேந ஸர்வ-மிதந்-ததம் |
விநாச-மவ்யயஸ்யாஸ்ய ந கச்சித் கர்த்து-மர்ஹதி
|| 17 || (64)

---

16. (அஸத:) இல்லாப் பொருளுக்கு (பாவ:) இருப்பு (ந வித்யதே) உண்டாகாது; (ஸத:) உண்மைப் பொருளுக்கு (அபாவ: அபி) இன்மையும் (ந வித்யதே) உண்டாகாது; (அனயோ: உபயோ:) இவ்விரண்டினுடைய (அந்த:) முடிவான கருத்து (தத்வதர்சிபி:) உண்மையை உணர்ந்தவர்களால் (த்ருஷ்ட: து) காணப்பட்டதன்றோ?

17. (இதம் ஸர்வம்) இவ்வனைத்தும் (யேந) எதனுல் (ததம்) நிறைந்துளதோ, (தத்) அது (து) நிச்சயமாக (அவிஞசி) அழிவற்றது, என்று (வித்தி) உணர்வாய். (அஸ்ய அவ்யயஸ்ய) இந்த மாறுதலிலாப் பொருளுக்கு (விநாசம்) அழிவை (கர்த்தும்) செய்வதற்கு (கச்சித்) எவனும் (ந அர்ஹதி) ஸமர்த்தனல்லன்.

---

16. அஸத:—காணப்படுவதெல்லாம் அஸத் (அனுத்மா); காண்பவன் ஸத் (ஆத்மா).

अन्तवन्त इमे देहा नित्यस्योक्ताः शरीरिणः ।
अनाशिनोऽप्रमेयस्य तस्माद्युध्यस्व भारत ॥ १८ ॥ ॥६५॥
य एनं वेत्ति हन्तारं यश्चैनं मन्यते हतम् ।
उभौ तौ न विजानीतो नायं हन्ति न हन्यते ॥१९॥ ॥६६॥

அந்தவந்த இமே தேஹா நித்யஸ்யோக்தா: சரீரிண: |
அநாசிநோ ऽப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத|| 18||
ய ஏனம் வேத்தி ஹந்தாரம் யச்சைனம் மன்யதே
ஹதம் |
உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந
ஹன்யதே || 19 || (66)

18. (நித்யஸ்ய) என்றும் உளதாய் (அநாசிந:) அழிவில்லாததாய் (அப்ரமேயஸ்ய) அளவிறந்ததாய் உள்ள (சரீரிண:) ஆன்மாவினுடைய (இமே தேஹா:) இவ்வுடல்கள் (அந்தவந்த:) முடிவுடையவை என்று (உக்தா:) கூறப்பட்டன; (பாரத) பாரத! (தஸ்மாத்) ஆகையால் (யுத்யஸ்வ) போர் புரிவாய்.

19. (ய:) எவன் (ஏனம்) இந்த ஆன்மாவை (ஹந்தாரம்) கொல்லுபவனாக (வேத்தி) உணர்கிறானோ (ச) அன்றியும் (ய:) எவன் (ஏனம்) இதை (ஹதம்) கொல்லப்படுவதாக (மன்யதே) நினைக்கிறானோ; (உபௌ தௌ) அவ்விருவரும் (ந விஜாநீத:) உண்மை உணர்ந்தவர்களல்லர். (அயம்) இது (ந ஹந்தி) கொல்வதில்லை, (ந ஹன்யதே) கொல்லப்படுவதும் இல்லை.

19. ஒ—கட உபநிஷத்து 2. 18.

न जायते म्रियते वा कदाचिन्नायं भूत्वा भविता वा न भूयः ।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे ॥२०॥
वेदाऽविनाशिनं नित्यं य एनमजमव्ययम् ।
कथं स पुरुषः पार्थ कं घातयति हन्ति कम् ॥२१॥ ॥६८॥

ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்
நாயம் பூத்வா பவிதா வா ந பூய: |
அஜோ நித்ய: சாச்வதோऽயம் புராணோ
ந ஹன்யதே ஹன்யமானே சரீரே || 20 || (67)

வேதாऽவிநாசினம் நித்யம் ய ஏனமஜமவ்யயம் |
கதம் ஸ புருஷ: பார்த்த கம காதயதி ஹந்தி கம் || 21 ||

---

20. (அயம்) இது (கதாசித்) ஒரு போதும் (ந ஜாயதே) பிறப்பதில்லை; (வா) அல்லது (ம்ரியதே) இறப்பதுமில்லை; (ந பூத்வா) இல்லாமலிருந்து (பூய:) மறுபடியும் (ந பவிதா வா) உண்டாவதும் இல்லை. (அஜ:) பிறப்பற்றது, (நித்ய:) என்று முள்ளது. (சாச்வத:) அழியாதது (புராண:) பழமையானது, (சரீரே ஹன்யமானே) சரீரம் கொல்லப்பட்டால் (அயம்) இது (ந ஹன்யதே) கொல்லப்படுவதில்லை.

21. (பார்த்த) பார்த்தா! (ய:) எவன் (ஏனம்) இதை (அவிநாசினம்) அழிவற்றதாகவும் (நித்யம்) என்றுமுள்ளதாகவும் (அஜம்) பிறப்பற்றதாகவும் (அவ்யயம்) மாறுபாடற்றதாகவும் (வேத) அறிகின்றனே (ஸ: புருஷ:) அந்தப் புருஷன் (கதம்) எங்ஙனம்

---

20. ஒ—கட உபநிஷத்து 2. 19.

22. ஒ—பாம்பும் அதன் மேற்சட்டையும் வெவ்வேறானவை. அது போல ஆத்மாவும் சரீரமும் வெவ்வேறானவை. (ரா. கி.)

கே. ஆத்மா எங்கும் நிறைந்து போக்குவரவற்றதா யிருக்கையில், ஒரு சரீரத்தை விட்டு மற்றொரு சரீரத்தை யடைவதெங்ஙனம்?

वासांसि जीर्णानि यथा विहाय नवानि गृह्णाति नरोऽपराणि ।
तथा शरीराणि विहाय जीर्णान्यन्यानि संयाति नवानि देही ॥
नैनं छिन्दन्ति शस्त्राणि नैनं दहति पावकः ।
न चैनं क्लेदयन्त्यापो न शोषयति मारुतः ॥ २३ ॥ ॥ ७० ॥

வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய
நவானி க்ருஹ்ணாதி நரோऽபராணி |
ததா சரீராணி விஹாய ஜீர்ணான்-
யன்யானி ஸம்யாதி நவானி தேஹீ || 22 || (69)

நைனஞ் சிந்தந்தி சஸ்த்ராணி நைனந் தஹதி பாவக: |
ந சைனங் க்லேதயந்த்யாபோ ந சோஷயதி மாருத:
|| 23 || (70)

(கம்) எவனை (ஹந்தி) கொல்வான், (கம்) எவனை (காதயதி) கொல்விப்பான்?

22. (நர:) மனிதன் (யதா) எவ்வாறு (ஜீர்ணானி) நைந்துபோன (வாஸாம்ஸி) துணிகளை (விஹாய) எறிந்து விட்டு (அபராணி நவானி) வேறு புதியவற்றை (க்ருஹ்ணாதி) எடுத்துக் கொள்ளுகிறானோ (ததா) அவ்வாறே (தேஹீ) உடலில் உறைபவன் (ஜீர்ணானி) நைந்துபோன (சரீராணி) உடலங்களை (விஹாய) விட்டு விட்டு (அன்யானி நவானி) வேறு புதியவற்றை (ஸம்யாதி) அடைகிறான்.

23. (சஸ்த்ராணி) ஆயுதங்கள் (ஏனம்) இவ்வான்மாவை (ந சிந்தந்தி) சிதைக்கமாட்டா; (பாவக:) தீ (ஏனம்) இதை (ந தஹதி) எரிக்காது; (ஆப:) தண்ணீர் (ஏனம்) இதை (ந க்லேதயந்தி) நனைக்காது; (மாருத: ச) காற்றும் (ந சோஷயதி) உலர்த்தாது.

வி. உண்மையில் ஒரு சரீரத்தை விடுவதும் மற்றொன்றை அடைவதும் ஆத்மாவுக்கு இல்லைதான்; சூரியன் உதிப்பதுமில்லை,

अच्छेद्योऽय-मदाह्योऽय-मक्लेद्यो ऽशोष्य एव च ।
नित्यः सर्वगतः स्थाणु-रचलोऽयं सनातनः ॥ २४ ॥ ॥७१॥
अव्यक्तोऽय-मचिन्त्योऽय-मविकार्योऽय-मुच्यते ।
तस्मादेवं विदित्वैनं नानुशोचितु-मर्हसि ॥ २५ ॥ ॥७२॥

அச்சேத்யோ-஽யமதாஹ்யோய-மக்லேத்யோ-஽சோஷ்ய ஏவ ச |
நித்ய: ஸர்வகத: ஸ்தாணு-ரசலோயம் ஸநாதன: || 24 ||
அவ்யக்தோ஽ய-மசிந்த்யோ஽ய-மவிகார்யோ஽ய-முச்யதே |
தஸ்மாதேவம் விதித்வைனம் நானுசோசிது மர்ஹஸி ||

24. (அயம்) இது (அச்சேத்ய:) வெட்டொணுதது; (அயம்) இது (அதாஹ்ய:) எரிக்கொணுதது; (அக்லேத்ய:) நனைக்கொணுதது; (அசோஷ்ய: ஏவ ச) உலர்த்தவும் ஒண்ணுததே. (அயம்) இது (நித்ய:) அழிவற்றது. (ஸர்வகத:) எங்குமுளது, (ஸ்தாணு:) நிலைபெற்றது. (அசல:) அசைவில்லாதது. (ஸநாதன:) என்றுமுளது.

25. (அயம்) இது (அவ்யக்த:) புலன்களுக் கெட்டாதது, (அயம்) இது (அசிந்த்ய:) மனதுக் கெட்டாதது. (அயம்) இது (அவிகார்ய:) மாற்ற முடியாதது என (உச்யதே) கூறப்படுகிறது. (தஸ்மாத்) ஆகையால் (ஏனம்) இதை (ஏவம்) இவ்வாறு (விதித்வா) அறிந்து (அனுசோசிதும்) துக்கிப்பதற்கு (ந அர்ஹஸி) நீ உரியவனில்லை.

அஸ்தமிப்பதுமில்லை; ஆனல் பூமியிலுள்ள நமக்கு அவ்வாறு தோன்றுகிறது. அப்படியே பிறப்பிறப்பற்ற ஆச்மா பிரகிருதி ஸம்பந்தத்தால் சரீரத்தில் புகுவது போலும், சரீரத்தை விடுவது போலும் தோன்றுகிறது.

24. கூறியதையே கூறுவது இங்கு குற்றமாகாது. ஆத்ம விஷயம் அறிவதற்கு மிகக் கடினமாதலால் பகவான் வெவ்வேறு

अथ चैनं नित्यजातं नित्यं वा मन्यसे मृतम् ।
तथापि त्वं महाबाहो नैनं शोचितु-मर्हसि ॥ २६ ॥ ॥ ७३ ॥
जातस्य हि ध्रुवो मृत्युर्ध्रुवं जन्म मृतस्य च ।
तस्मा-दपरिहार्येऽर्थे न त्वं शोचितु-मर्हसि ॥ २७ ॥ ॥ ७४ ॥

அத சைனம் நித்யஜாதம் நித்யம் வா மன்யஸே
ம்ருதம் |
ததாபி த்வம் மஹாபாஹோ நைனம் சோசிது-
மர்ஹஸி || 26 || (73)
ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுர்-த்ருவம் ஜன்ம
ம்ருதஸ்ய ச |
தஸ்மா-தபரிஹார்யேऽர்த்தே ந த்வம் சோசிது-
மர்ஹஸி || 27 || (74)

---

26. (அத ச) அன்றி (ஏனம்) இதை (நித்ய ஜாதம்) எப்போதும் பிறப்பதாயும் (நித்யம் ம்ருதம்) எப்போதும் இறப்பதாயும் (மன்யஸே வா) நீ நினைத்தாய் எனினும் (ததாபி) அப்போதும் (மஹாபாஹோ) வெற்றித்தோள் படைத்தோனே! (த்வம்) நீ (ஏனம்) இதைக்குறித்து (சோசிதும்) துக்கப்படுவதற்கு (ந அர்ஹஸி) உரியவனில்லை.

27. (ஜாதஸ்ய) பிறந்தவனுக்கு (ம்ருத்யு:) சாவு (த்ருவ: ஹி) நிச்சயமன்றோ? (ம்ருதஸ்ய ச) இறந்தவனுக்கும் (ஜன்ம) பிறப்பு (த்ருவம்) நிச்சயம். (தஸமாத்) ஆகையால் (அபரிஹார்யே அர்த்தே) தவிர்க்க முடியாத விஷயத்தில் (த்வம்) நீ (சோசிதும்) துக்கிப்பதற்கு (ந அர்ஹஸி) உரியவனில்லை.

வசனங்களால் திடப்படும்படி உபதேசிக்கிறார். ஒரே மந்திரத்தைத் திருப்பித் திருப்பி ஜபம் செய்வதும் இக்காரணத்தாலேயே. ஒ— "ஆவ்ருத்திரஸக்ருத் உபதேசாத்'. 'உருவேறத் திருவேறும்'.

27. ஒருவரும் சாகாத வீட்டிலிருந்து கடுகு வாங்கி வந்தால்

अव्यक्तादीनि भूतानि व्यक्त-मध्यानि भारत ।
अव्यक्त-निधनान्येव तत्र का परिदेवना ॥ २८ ॥ ॥ ७५ ॥

आश्चर्यवत्पश्यति कश्चिदेनं आश्चर्यवद्वदति तथैव चान्यः ।
आश्चर्यवच्चैन-मन्यः शृणोति श्रुत्वाप्येनं वेद न चैव कश्चित् ॥२९॥

அவ்யக்தாதீனி பூதானி வ்யக்த-மத்யானி பாரத |
அவ்யக்த-நிதனான்யேவ தத்ர கா பரிதேவனா || 28 ||(75)

ஆச்சர்யவத் பச்யதி கச்சிதேனம்
ஆச்சர்யவத்-வததி ததைவ சான்ய: |
ஆச்சர்யவச்சைன-மன்ய: ச்ருணோதி
ச்ருத்வாப்யேனம் வேத ந சைவ கச்சித் || 29 || (76)

---

28. பாரத) பாரதா! (பூதானி) பொருள்கள் (அவ்யக்தாதீனி) தோன்றாமை முதலாயும் (வ்யக்தமத்யானி) தோற்றம் இடையாயும் (அவ்யக்த-நிதனான்யேவ) தோன்றாமையே முடிவாயும் உடையன. (தத்ர) ஆங்கு (கா பரிதேவனா) பரிதவித்தல் ஏன்?

29. (கச்சித்) எவனோ ஒருவன் (ஏனம்) இதை (ஆச்சர்யவத்) ஆச்சரியம்போல் (பச்யதி) காண்கிறான்; (ததா ஏவ ச) அவ்வாறே மேலும் (அன்ய:) வேறொருவன் (ஆச்சர்யவத்) ஆச்சரியம்போல் (வததி) பேசுகிறான்; (அன்ய: ச) மற்றுமொருவன் (ஏனம்) இதை (ஆச்சர்யவத்) ஆச்சர்யம்போல் (ச்ருணோதி) கேட்

இறந்த குழந்தையைப் பிழைப்பிக்கலாம் என்று புத்தர் கூறியதை ஒப்பிடுக.

28. ஒ—அதர்சனாதாபதித: புனச்சாதர்சனம் கத: |
நாஸௌ தவ ந தஸ்ய த்வம் வ்ருதா கா பரிதேவனா ||

காணாத நிலையிலிருந்து வந்தவன் காணா நிலைக்கே சென்றான். அவன் உன்னுடையவனல்லன். நீயும் அவனுடையவனில்லை. வீண் புலம்பல் ஏன்? (ம. பா. ஸ்திரீ. 2-13.)

29. ஒ—கட. உப. 2-7; கீ 7-3—'மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு—'

देही नित्य-मवध्योऽयं देहे सर्वस्य भारत ।
तस्मात् सर्वाणि भूतानि न त्वं शोचितु-मर्हसि ॥ ३० ॥ ॥७७॥
स्वधर्ममपि चावेक्ष्य न विकम्पितु-मर्हसि ।
धर्म्याद्धि युद्धाच्छ्रेयोऽन्यत् क्षत्रियस्य न विद्यते ॥३१॥ ॥७८॥

தேஹீ நித்ய-மவத்யோऽயம் தேஹே ஸர்வஸ்ய பாரத |
தஸ்மாத் ஸர்வாணி பூதானி ந த்வம் சோசிது-
மர்ஹஸி || 30 || (77)
ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய ந விகம்பிது-மர்ஹஸி |
தர்ம்யாத்தி யுத்தாச்-ச்ரேயோऽன்யத் க்ஷத்ரியஸ்ய ந
வித்யதே || 31 || (78)

கிருன் ; (கச்சித் ச) எவனும் (ச்ருத்வாபி) கேட்டும் (ஏனம்) இதை (ந வேத ஏவ) அறியவே இல்லை.

30. (பாரத) பாரதா ! (ஸர்வஸ்ய தேஹே) எல்லா உடலிலும் (அயம் தேஹீ) இந்த ஆன்மா (நித்யம் அவத்ய:) என்றும் மரணமில்லாதவன். (தஸ்மாத்) ஆகையால் (த்வம்) நீ (ஸர்வாணி பூதானி) எவ்வுயிர் களிடத்தும் (சோசிதும்) துக்கிப்பதற்கு (ந அர்ஹஸி) உரியவனில்லை.

31. (ஸ்வதர்மம் அபி ச) உனக்குரிய தருமத்தை யும் (அவேக்ஷ்ய) நோக்குமிடத்து (விகம்பிதும்) பின்னி டுவதற்கு (ந அர்ஹஸி) உரியவனல்லை. (ஹி) ஏனெனில் (தர்ம்யாத் யுத்தாத்) தர்மத்தினின்று பிறழாத யுத்தத்தைவிட (அன்யத்)வேறென்று (ச்ரேய:) சிறந்தது (க்ஷத்ரியஸ்ய) க்ஷத்ரியனுக்கு (ந வித்யதே) இல்லை.

यदृच्छया चोपपन्नं स्वर्गद्वार-मपावृतम् ।
सुखिनः क्षत्रियाः पार्थ लभन्ते युद्ध-मीदृशम् ॥ ३२ ॥ ॥७९॥
अथ चेत्त्वमिमं धर्म्यं संग्रामं न करिष्यसि ।
ततः स्वधर्मं कीर्तिञ्च हित्वा पाप-मवाप्स्यसि ॥ ३३ ॥ ॥८०॥
अकीर्तिञ्चापि भूतानि कथयिष्यन्ति तेऽव्ययाम् ।
संभावितस्य चाकीर्ति-र्मरणा-दतिरिच्यते ॥ ३४ ॥ ॥ ८१ ॥

யத்ருச்சயா சோபபன்னம் ஸ்வர்க்கத்வார-மபாவ்ருதம் |
ஸுகின: க்ஷத்ரியா: பார்த்த லபந்தே யுத்த-மீத்ருசம் || 32 || (79)
அத சேத் த்வமிமம் தர்ம்யம் ஸங்க்ராமம் ந கரிஷ்யஸி |
தத: ஸ்வதர்மம் கீர்த்திஞ் ச ஹித்வா பாப-மவாப்ஸ்யஸி || 33 || (80)
அகீர்த்திஞ்சாபி பூதானி கதயிஷ்யந்தி தேऽவ்யயாம் |
ஸம்பாவிதஸ்ய சாகீர்த்திர்-மரணா-ததிரிச்யதே || 34 ||

---

32. (பார்த்த) பார்த்தா! (யத்ருச்சயா) தற்செயலாய் (உபபன்னம்) வாய்த்ததும் (அபாவ்ருதம்) திறக்கப்பட்ட (ஸ்வர்க்கத்வாரம்) ஸ்வர்க்க வாசல் போன்றதுமாகிய (ஈத்ருசம்) இதுபோன்ற (யுத்தம்) யுத்தத்தை (ஸுகின:) பாக்கியவான்களான (க்ஷத்ரியா: ச) க்ஷத்திரியர்களே (லபந்தே) அடைவார்கள்.

33. (அத) ஆனால் (த்வம்) நீ (இமம்) இந்த (தர்ம்யம்) தர்மத்தினின்று பிறழாத (ஸங்க்ராமம்) யுத்தத்தை (ந கரிஷ்யஸி சேத்) செய்யாவிட்டால் (தத:) அதனால் (ஸ்வதர்மம்) உனக்குரிய தருமத்தையும் (கீர்த்திம் ச) புகழையும் (ஹித்வா) விட்டு விலகி (பாபம்) தீவினையை (அவாப்ஸ்யஸி) அடைவாய்.

34. (அபி ச) மேலும் (பூதானி) உலகத்துளோர் (தே) உன்னுடைய (அவ்யயாம்) என்றும் அழியாத

भयाद्रणा-दुपरतं मंस्यन्ते त्वां महारथाः ।
येषां च त्वं बहुमतो भूत्वा यास्यसि लाघवम् ॥३५॥ ॥८२॥
अवाच्य-वादांश्च बहून् वदिष्यन्ति तवाहिताः ।
निन्दन्तस्तव सामर्थ्यं ततो दुःखतरं नु किम् ॥ ३६ ॥ ॥८३॥

பயாத்ரணு-துபரதம் மம்ஸ்யந்தே த்வாம் மஹாரதா: |
யேஷாஞ் ச த்வம் பஹுமதோ பூத்வா யாஸ்யஸி
லாகவம் || 35 || (82)
அவாச்ய-வாதாம்ச்ச பஹூன் வதிஷ்யந்தி தவாஹிதா: |
நிந்தந்தஸ்-தவ ஸாமர்த்யம் ததோ து:க்கதரம் நு கிம்
|| 36 || (83)

(அகீர்த்திம்) பழியை (கதயிஷ்யந்தி) பேசுவார்கள். (ஸம்பாவிதஸ்ய) நல்ல புகழ்பெற்றவனுக்கு (அகீர்த்தி:) பழிச்சொல் (மரணுத் ச) சாவைக் காட்டிலும் (அதிரிச்யதே) அதிகமாகும்

35. (மஹாரதா: ச) சிறந்த தேராளிகளும் (த்வாம்) உன்னை (பயாத்) பயத்தால் (ரணுத்) போரிலிருந்து (உபரதம்) பின் வாங்கியவனுய் (மம்ஸ்யந்தே) கருதுவார்கள். (யேஷாம்) இவாகளுக்கு (த்வம்) நீ (பஹுமத:) வெகுமானிக்கத் தகுந்தவனுக (பூத்வா) இருந்து (லாகவம்) எளிமையை (யாஸ்யஸி) அடைவாய்.

36. (தவ) உன்னுடைய (அஹிதா: ச) சத்துருக்களும் (தவ) உன்னுடைய (ஸாமர்த்யம்) திறமையை (நிந்தந்த:) இகழ்ந்து (பஹூன்) பல (அவாச்யவாதான்) சொல்லத்தகாத வார்த்தைகளை (வதிஷ்யந்தி) சொல்லுவார்கள். (தத:) அதைவிட (து:க்கதரம்) துன்பம் மிகுந்தது (நு கிம்) யாது?

हतो वा प्राप्स्यसि स्वर्गं जित्वा वा भोक्ष्यसे महीम् ।
तस्मा-दुत्तिष्ठ कौन्तेय युद्धाय कृतनिश्चयः ॥ ३७ ॥ ॥ ८४ ॥

सुखदुःखे समे कृत्वा लाभालाभौ जयाजयौ ।
ततो युद्धाय युज्यस्व नैवं पाप-मवाप्स्यसि ॥ ३८ ॥ ॥ ८५ ॥

ஹதோ வா ப்ராப்ஸ்யஸி ஸ்வர்க்கம் ஜித்வா வா
போக்ஷ்யஸே மஹீம் |
தஸ்மா-துத்திஷ்ட்ட கௌந்தேய யுத்தாய க்ருதநிச்சய:||
ஸுகதுःக்கே ஸமே க்ருத்வா லாபாலாபௌ
ஜயாஜயௌ |
ததோ யுத்தாய யுஜ்யஸ்வ நைவம் பாப-மவாப்ஸ்யஸி
|| 38 || (85)

---

37. (ஹதோ வா) கொல்லப் பட்டாலோ (ஸ்வர்க்கம்) ஸ்வர்க்கத்தை (ப்ராப்ஸ்யஸி) அடைவாய்; (ஜித்வா வா) ஜயித்தாலோ (மஹீம்) பூமியை (போக்ஷ்யஸே) அனுபவிப்பாய்; (தஸ்மாத்) ஆகையால் (கௌந்தேய) குந்தீபுத்ரா ! (யுத்தாய) போருக்கு (க்ருதநிச்சய:) துணிந்தவனாக (உத்திஷ்ட்ட) எழுந்திரு.

38. (ஸுகது:க்கே) இன்ப துன்பங்களையும் (லாபாலாபௌ) லாப நஷ்டங்களையும் (ஜயாஜயௌ) வெற்றி தோல்விகளையும் (ஸமே க்ருத்வா) சமமாகச் செய்து (தத:) பிறகு (யுத்தாய) போருக்கு (யுஜ்யஸ்வ) முயல்வாய். (ஏவம்) இங்ஙனம் (பாபம்) பாவத்தை (ந அவாப்ஸ்யஸி) அடையமாட்டாய்.

एषा तेऽभिहिता सांख्ये बुद्धिर्योगे त्विमां शृणु ।
बुद्ध्या युक्तो यया पार्थ कर्मबन्धं प्रहास्यसि ॥ ३९ ॥ ॥८६॥
नेहाभिक्रम-नाशोऽस्ति प्रत्यवायो न विद्यते ।
स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् ॥ ४० ॥ ॥८७॥

ஏஷா தேऽபிஹிதா ஸாங்க்யே புத்திர்-யோகே த்விமாம் ச்ருணு |
புத்த்யா யுக்தோ யயா பார்த்த கர்மபந்தம் ப்ரஹாஸ்யஸி || 39 || (86)
நேஹாபிக்ரம-நாசோऽஸ்தி ப்ரத்யவாயோ ந வித்யதே |
ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத் || 40 || (87)

---

39. (ஸாங்க்யே) ஸாங்கிய விஷயத்தில் (ஏஷா) இந்த (புத்தி:) புத்தியானது (தே) உனக்கு (அபிஹிதா) சொல்லப்பட்டது; (யோகே து) இனி யோக விஷயத்தில் (இமாம்) இதை (ச்ருணு) கேள்: (பார்த்த) பார்த்தா! (யயா) இந்த (புத்த்யா) புத்தியுடன் (யுக்த:) கூடியவனாய் (கர்மபந்தம்) கருமத்தளையை (ப்ரஹாஸ்யஸி) அறுத்துவிடுவாய்.

40. (இஹ) இதில் (அபிக்ரமநாச:) முயற்சி வீணுதல் (நாஸ்தி) இல்லை; (ப்ரத்யவாய:) எதிரிடை

---

39. 'ஸாங்க்யே':—ஸாங்க்யம் என்பது ஆத்மானுத்ம விசாரம். யோகம் என்பது அதற்குபாயமான கர்மயோகம்; கர்மங்களை பகவதர்ப்பணமாகச் செய்து நடு நிலைமை வகித்தல்.

"ஸாங்க்யத்துக்குச் சமமான ஞானம் இல்லை. யோகத்துக்குச் சமமான பலம் இல்லை; இவ்விரண்டும் ஒன்றே என்று அறியத் தக்கது." (யாஜ்ஞவல்க்யர்.)

இந்த யோகத்தையே பகவான் ஸமத்வயோகம், புத்தியோகம், ததர்த்த கர்மம், மதர்த்தகர்மம், மத்கர்மம் எனும் சொற்களால் மேலே குறிக்கின்றார்.

व्यवसायात्मिका बुद्धि-रेकेह कुरुनन्दन ।

बहुशाखा ह्यनन्ताश्च बुद्धयोऽव्यवसायिनाम् ॥ ४१ ॥ ॥८८॥

வ்யவஸாயாத்மிகா புத்தி-ரேகேஹ குருநந்தன |

பஹுசாகா ஹ்யனந்தாச்ச புத்தயோ ऽவ்யவஸாயினும் || 41 || (88)

யான பலன் (ந வித்யதே) உண்டாகாது. (அஸ்ய தர்மஸ்ய) இந்த தருமத்தின் (ஸ்வல்பம் அபி) சிறிதும் கூட (மஹத: பயாத்) பெரிய பயத்தினின்றும் (த்ராயதே) காப்பாற்றும்.

41. (குருநந்தன) அர்ஜுனு! (இஹ) இதில் (வ்யவஸாயாத்மிகா) நிச்சயவடிவமான (புத்தி:) புத்தி (ஏகா) ஒன்றே! (அவ்யவஸாயினும்) நிச்சயமொன்றில்லாதவர்க்கு (புத்தய:) புத்திகள் (பஹு-சாகா:) பல கிளைகளையுடையனவும் (அனந்தா: ச) முடிவில்லாதனவும் (ஹி) அன்ருே.

---

40. அபிக்ரம-நாச :—பயிர்த்தொழிலில் சில சமயம் முயற்சி விணுவது போலும் (ப்ரத்யவாய:) நோயின் சிகித்ஸையில் தவறுதலால் மருந்து நோயை வளர்ப்பது போலும் நிஷ்காம கர்மத்தால் முயற்சி வீணுதலும் விபரீத பலனும் ஒருபோதும் இல்லை.

பெரிய பயத்தினின்றுங் காப்பாற்றும் :—ஸமபுத்தி அப்பியாஸத்தால் நிலைத்தால் அது அந்திய காலத்திலும் தவருமல் நின்று ஜீவனைப் பிரம்ம நிர்வாணத்தில் சேர்ப்பிக்கின்றது (2-72): அப்பியாஸக் குறைவால் தவறினுலும் மறு ஜன்மத்தில் ஜீவனை யோகத்தில் அவனறியாமலேயே கூட்டுவித்து நற்கதியை நாளடைவில் எய்துவிக்கின்றது: இம்முயற்சி ஒரு போதும் வீண்போவதில்லை. (6. 41-45)

यामिमां पुष्पितां वाचं प्रवदन्त्यविपश्चितः ।
वेदवादरताः पार्थ नान्यदस्तीति-वादिनः ॥ ४२ ॥ ॥ ८९ ॥
कामात्मानः स्वर्गपरा जन्मकर्म-फलप्रदाम् ।
क्रियाविशेष-बहुलां भोगैश्वर्यगतिं प्रति ॥ ४३ ॥ ॥ ९० ॥

யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவதந்த்யவிபச்சித: |
வேதவாதரதா: பார்த்த நான்யதஸ்தீதி-வாதின: || 42 ||
காமாத்மான: ஸ்வர்க்கபரா ஜன்மகர்ம-பலப்ரதாம் |
க்ரியாவிசேஷ-பஹுலாம் போகைச்வர்ய-கதிம் ப்ரதி || 43 || (90)

42–43. (பார்த்த) பார்த்தா! (அவிபச்சித:) அறிவீனர் (வேதவாதரதா:) வேதத்தின் அர்த்தவாதத்தில் பற்றுடையவராய் (அன்யத்) வேறு (நாஸ்தி) இல்லை (இதி) என்று (வாதின:) வாதஞ் செய்பவராய் (காமாத்மான:) ஆசை நிறைந்த மனத்தினராய் (ஸ்வர்க்கபரா:) ஸ்வர்க்கத்தையே மேலாகக் கொண்டவராய் (போகைச்வர்யகதிம் ப்ரதி) இன்ப நுகர்ச்சிக்காகவும் உயர் பதவிக்காகவும் (ஜன்மகர்ம-பலப்ரதாம்) ஜன்மத்தையே தொழிலின் பயனாகக் கொண்டதும் (க்ரியாவிசேஷபஹுலாம்) விசேஷமானதும் விரிவான

---

42. 'வேதவாதரதா:'—ஒ மாம்பழங்களைச் சாப்பிடு; தோட்டத்தில் எத்தனையாயிரம் மரங்கள், எத்தனை கோடி இலைகள் என்று கணக்கிடுவதில் பயன் என்ன? தத்துவ வாதங்கள் உன் வாழ்க்கையை மாற்றுமா?

கழுகு ஆகாயத்தில் வெகு உயரத்தில் பறக்கின்றது. ஆயினும் அது எந்தக் குழியில் எந்தப் பிணம் கிடக்கிறதென்று கீழ் நோக்கிய வண்ணமாக இருக்கும். அது போல சாஸ்திரங்களைக் கற்றவராயிருப்பினும் பலர் கீழ்நோக்குடைவராய்ப் பெண்ணாசை பொன்னாசைகளாகிற உலகப் பற்றுகளால் பந்தப்பட்ட மனமுடையவராக இருக்கின்றனர். ஆதலால் அவர்கள் உண்மை ஞானத்தைப் பெறுவதில்லை. (ரா. கி.)

भोगैश्वर्य-प्रसक्तानां तयापहृत-चेतसाम् ।
व्यवसायात्मिका बुद्धिः समाधौ न विधीयते ॥ ४४ ॥ ॥९१॥
त्रैगुण्य-विषया वेदा निस्त्रैगुण्यो भवार्जुन ।
निर्द्वन्द्वो नित्य-सत्त्वस्थो निर्योगक्षेम आत्मवान् ॥४५॥ ॥९२॥

போகைச்வர்ய-ப்ரஸக்தானும் தயாபஹ்ருத-சேதஸாம் |
வ்யவஸாயாத்மிகா புத்தி: ஸமாதௌ ந விதீயதே
|| 44 || (91)
த்ரைகுண்ய-விஷயா வேதா நிஸ்த்ரைகுண்யோ
பவார்ஜுன |
நிர்த்வந்த்வோ நித்ய-ஸத்வஸதோ நிர்யோகக்ஷேம
ஆத்மவான் || (45)

துமான கிரியைகளைப் பற்றியதுமாகிய (யாம் இமாம் புஷ்பிதாம் வாசம்) எந்த இவ்வாறுன பூப்போன்ற வார்த்தைகள் உண்டோ அவற்றை (ப்ரவதந்தி) இனிதாகத் தொடர்ந்து பேசுவார்கள்.

44. (போகைச்வர்ய-ப்ரஸக்தானும்) இன்பநுகர்ச்சியிலும் உயர் பதவியிலும் ஆழ்ந்த பற்றுடையவர்களும் (தயா) அதனுல் (அபஹ்ருத சேதஸாம்) விவேகத்தை இழந்தவரும் ஆகிய இவர்கட்கு (வ்யவஸாயாத்மிகா) நிச்சயமான (புத்தி:) புத்தி (ஸமாதௌ) உள்ளத்தில் (ந விதீயதே) உதியாது.

45. (வேதா:) வேதங்கள் (த்ரைகுண்ய விஷயா:) முக்குணங்களைப் பற்றியவை. (அர்ஜுன) அர்ஜுன!

---

45. நிஸ்த்ரைகுண்ய:—ஒ—கீதை 14. 21-26.

ஒ. நூல் உரை போதகாசிரியர் மூவரும் முக்குணவசத்தான் முறை பிறழ்ந்தவரே.

यावानर्थ उदपाने सर्वतः संप्लुतोदके ।
तावान् सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ॥ ४६ ॥ ॥ ९३ ॥

யாவனர்த்த உதபானே ஸர்வத: ஸம்ப்லுதோதகே |
தாவான் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய
விஜாநத: || 46 || (93)

(நிஸ்த்ரைகுண்ய:) முக்குணத்தைக் கடந்தவனாய் (நிர்த்வந்த்வ:) இருமைகளை ஜயித்தவனாய் (நித்யஸத்வஸ்த:) நிலைபெற்ற மனதுடையவனாய் (நிர்யோகக்ஷேம:) பொருளை ஈட்டுதலிலும் போற்றுதலிலும் அலையாத மனத்தினனாய் (ஆத்மவான்) உடல் நாட்டம் விட்டு உள் நாட்டம் உடையவனாய் (பவ) இரு.

46. (ஸர்வத:) எங்கும் (ஸம்ப்லுதோதகே) பரந்து பெருகிய நீர் நிலையில் (உதபானே) பருகுதற்குரிய சிற்றூறலில் உள்ள (அர்த்த:) பயன் (யாவான்) எங்ஙனம் அடங்கியுள்ளதோ (தாவான்) அங்ஙனமே (விஜானத:) கற்றுணர்ந்த (ப்ராஹ்மணஸ்ய) பிராம்மணனுக்கு (ஸர்வேஷு வேதேஷு) வேதம் அனைத்திலுமாம்.

நித்ய ஸத்வஸ்த:—நித்யஸத்வம் என்பது ஸச்சிதானந்தப் பரம்பொருள், அதை இடாவிடாது சிந்திப்பவனே நித்யஸத்வஸ்தன். இங்கே ஸத்வம் என்பது ஸத்வகுணம் அன்று; 'ஏனெனில் நிஸ்த்ரைகுண்ய:' எனும் பதத்துடன் வருகின்றது.

நிர்யோகக்ஷேம:—எப் பொருளையும் அடையவேண்டும் என்றோ, அடைந்தபின் பிரிந்து போகாமல் காக்கவேண்டும் என்றோ இச்சையில்லாமல் 'வருவனவெல்லாம் வருக வாராதெலா மொழிக' என்றிருப்பவன்.

ஆத்மவான்:—எவனுடைய மனமும் புத்தியும் இந்திரியங்களும் தன் வசப்பட்டனவோ அவன் ஆத்மவான்.

46. ஒ—கங்கைக் கரையிலுள்ளவன் குடிநீருக்குக் கிணறு தேடமாட்டான். சூரியன் உதித்துவிட்டால் விளக்கு வேண்டியதில்லை. மந்தமாருதம் வீசுகையில் விசிறி தேவையில்லை. (ரா. கி.)

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।
मा कर्मफलहेतुर्भू-र्मा ते सङ्गोऽस्त्वकर्मणि ॥ ४७ ॥ ॥ ९४ ॥

கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன |
மா கர்மபலஹேதுர்ப்பூர்-மா தே ஸங்கோऽஸ்த்வகர்மணி
|| 47 || (94)

47. (கர்மணி ஏவ) கருமத்திலேயே (தே) உனக்கு (அதிகார:) அதிகாரம்; (கதாசன) ஒருபோதும் (பலேஷு) பயனில் (மா) இல்லை; (கர்மபல ஹேது:) பயனைக் கருதிக் கருமம் செய்பவனாக (மா பூ:) இராதே; (அகர்மணி) செயலின்மையில்

47. ஒ—கீதை 18, 7-9; 18. 14-16. ஒரு விதையை விதைக்க நமக்கு உரிமை உண்டு. அது இன்ன மரமாக வளர வேண்டும் என்று விரும்ப உரிமை இல்லை. அதனுடைய இயற்கைப் படி அது வளர்ந்து பலனளிக்கும். நம்முடைய ஒவ்வொரு செயலும் அப்படியே.

உ-ம். நாம் உண்மை பேசுவது கடமை. அதனால் இன்ன பயன் விளையவேண்டும் என்று விரும்புவது அறிவின்மை. அப் பயன் விளையாதெனின் உண்மை பேசாது விடுத்தலும், கருதிய பயனைப் பொய் பேசி எய்தலாம் என்று துணிதலும் முற்றுந்தவறு. (ஒ—அரிச்சந்திரன், தசரதன்.)

கேள்வி—முக்தியை விரும்பிக் கர்மம் செய்தலும் தவறு?

விடை—மற்ற ஆசைகளைவிட இது சிறந்ததாயினும் இதுவும் உத்தமம் அன்று. முக்தியிலும் ஆசையைவிட்டவனே முக்தியை எளிதில் அடைவான்.

ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்
ஆசைப்படப்பட ஆய் வருந்துன்பம்
ஆசைவிடவிட ஆனந்தமாமே. (திருமந்திரம்)

இதுவே புண்ணியத்துக்கும் அப்பாற்பட்ட 'அனாமயம் பதம்' (2-51).

ஒ. முயற்சி உலகில் நாம் அரசர். பயன் உலகில் கடவுள் ஒருவரே அரசு புரிகின்றார். (காந்தியடிகள்)

योगस्थः कुरु कर्माणि सङ्गं त्यक्त्वा धनञ्जय ।
सिद्ध्यसिद्ध्योः समो भूत्वा समत्वं योग उच्यते ॥ ४८ ॥
दूरेण ह्यवरं कर्म बुद्धियोगा-द्धनञ्जय ।
बुद्धौ शरणमन्विच्छ कृपणाः फलहेतवः ॥ ४९ ॥ ॥ ९६ ॥

யோகஸ்த: குரு கர்மாணி ஸங்கம் த்யக்த்வா
தனஞ்ஜய |
ஸித்த்யஸித்த்யோ:ஸமோ **பூ**த்வா ஸமத்வம் யோக
உச்யதே || (48) || (95)

தூரேண ஹ்யவரம் கர்ம **புத்தி**யோகாத் தனஞ்ஜய !
புத்தௌ சரணமன்விச்ச க்ருபணு: பலஹேதவ:
|| 49 || (96)

(தே) உனக்கு (ஸங்க:) பற்றும் (மா அஸ்து) ஏற்பட வேண்டாம்.

48. (தனஞ்ஜய) தனஞ்ஜயா! (யோகஸ்த:) யோகத்தில் நிலைபெற்று (ஸங்கம்) பற்றை (த்யக்த்வா) விட்டு (ஸித்த்யஸித்த்யோ:) வெற்றி தோல்விகளில் (ஸம:) ஸமமாக (**பூ**த்வா) இருந்துகொண்டு (கர்மாணி) கருமங்களை (குரு) செய்வாய். (ஸமத்வம்) ஸம நிலைமையே (யோக:) யோகம் என்று (உச்யதே) சொல்லப்படுகிறது.

49. (தனஞ்ஜய) தனஞ்ஜயா! (புத்தியோகாத்) ஸம புத்தியுடன் செய்யும் நிஷ்காம கருமத்தைவிட (கர்ம) காம்ய கருமம் (தூரேண ஹ்யவரம்) வெகுதூரம்

---

48. **'ஸமத்வம் யோக உச்யதே'** இதனால் யோகத்தின் முக்கிய லக்ஷணம் கூறப்பட்டது.

49. **க்ருபணு:**—'எவன் அழிவற்ற பொருளை விசாரிக்காமல் இவ்வுலகத்தில் நின்று இறக்கிறானோ அவன் கிருபணன்'.
(பிருஹதாரண்யக உபநிஷத்து.)

बुद्धियुक्तो जहातीह उभे सुकृतदुष्कृते ।
तस्मा-द्योगाय युज्यस्व योगः कर्मसु कौशलम् ॥५०॥ ॥९७॥

புத்தியுக்தோ ஜஹாதீஹ உபே ஸுக்ருத-துஷ்க்ருதே |
தஸ்மாத் யோகாய யுஜ்யஸ்வ யோக: கர்மஸு
கௌசலம் || 50 || (97)

கீழ்பட்டதன்றோ? **(புத்தௌ)** ஸமத்வ புத்தி யோகத்தில் **(சரணம்)** சரண் புகுதலை (அன்விச்ச) விரும்பு; (பல ஹேதவ:) பயனைக்கருதிக் கருமம் செய்பவர் (க்ருபணு:) லோபிகள்.

50. **(புத்தியுக்த:)** ஸமபுத்தியுடன் கூடினவன் (இஹ) இல்வாழ்க்கையில் **(உபே ஸுக்ருததுஷ்க்ருதே)** புண்ணியம் பாவம் இரண்டையும் (ஜஹாதி) விடுகின்றான். (தஸ்மாத்) ஆகையால் (யோகாய) யோகத்திற்காக (யுஜ்யஸ்வ) முயற்சி செய்வாய். (யோக:) யோகம் (கர்மஸு) கருமத்தில் (கௌசலம்) ஸாமர்த்தியம் ஆகும்.

பெரும் பேற்றை எய்துதற்குரிய மனித ஜன்மத்தையடைந்தும் அதை அற்பமான பயனைக் கருதி வீணுக்குவோர் தீனர்கள்.

சரணம்—‘ அபயப்ராப்தி காரணம் ’.

50. **‘ யோக: கர்மஸு கௌசலம் ’**—ஸமத்துவமே யோகம் என்று ஏற்கனவே கூறியதினின்று இது வேறன்று. எக்கர்மம் செய்யினும் ஸமபுத்தியுடன் செய்தால் புண்ணிய பாவம் தொடராது. இது கர்மத்தில் ஸாமர்த்தியம், (கர்மபலன் கை கூடும் வரையில் ஸாமர்த்தியமாய்ச் செய்வதே கர்மயோகம் என்று இதை மாற்றிக் கருத்துக்கொள்ளுதல் பொருந்தாது.)

பலாப்பழத்தை உரிக்கும்போது கையில் எண்ணெய் தடவிக் கொண்டால் பிசின் ஒட்டாது. அதுபோல் மனதில் யோகம் கூடியவனைக் கர்ம பலன் ஒட்டாது.

कर्मजं बुद्धियुक्ता हि फलं त्यक्त्वा मनीषिणः ।
जन्मबन्ध-विनिर्मुक्ताः पदं गच्छन्त्यनामयम् ॥५१॥ ॥९८॥
यदा ते मोहकलिलं बुद्धि-र्व्यतितरिष्यति ।
तदा गन्तासि निर्वेदं श्रोतव्यस्य श्रुतस्य च ॥५२॥ ॥९९॥

கர்மஜம் **புத்தி**யுக்தா ஹி பலம் த்யக்த்வா மனீஷிண: |
ஜன்மபந்த-விநிர்முக்தா: பதம் கச்சந்த்யனாமயம்
|| 51 || (98)

யதா தே மோஹகலிலம் **புத்தி**ர்-வ்யதிதரிஷ்யதி |
ததா கந்தாஸி நிர்வேதம் ச்ரோதவ்யஸ்ய ச்ருதஸ்ய ச
|| 52 || (99)

---

51. (**புத்தி**யுக்தா:) ஸமபுத்தியுடன் கூடிய (மனீஷிண:) அறிஞர் (கர்மஜம் பலம்) வினைப் பயனை (த்யக்த்வா) துறந்து (ஜன்ம பந்த விநிர்முக்தா:) பிறவித் தளையினின்று விடுபட்டு (அனாமயம்) துக்க மற்ற (பதம்) நிலையை (ஹி) நிச்சயமாக (கச்சந்தி) அடைகின்றனர்.

52. (யதா) எப்பொழுது (தே) உன்னுடைய (**புத்தி**:) புத்தி (மோஹகலிலம்) மோகமாகிற கலக்கததை (வ்யதிதரிஷ்யதி) கடந்து செல்லுமோ (ததா) அப்போது (ச்ரோதவ்யஸ்ய) கேட்கவேண்டியதிலும் (ச்ருதஸ்ய ச) கேட்டதிலும் (நிர்வேதம்) விருப்பின்மையை (கந்தாஸி) அடைவாய்.

---

51. **ஜன்மபந்த-விநிர்முக்தா** :—(ஜீவந்த ஏவ ஜன்ம-பந்த-விநிர்முக்தா : ஸந்த :) உயிர் வாழும்போதே பிறவித்தளையினின்று விடுபட்ட ஜீவன் முக்தர்களாய்.

53. கர்மம் எதுவரை? அந்தக்கரண சுத்தி ஏற்படும் வரை. அந்தக்கரண சுத்தி எப்படித் தெரியும்? வைராக்கியம் உதித்தலே இதற்கடையாளம்.

श्रुति-विप्रतिपन्ना ते यदा स्थास्यति निश्चला ।
समाधावचला बुद्धिस्तदा योग-मवाप्स्यसि ॥ ५३ ॥ ॥१००॥

ச்ருதி-விப்ரதிபன்ஞ தே யதா ஸ்தாஸ்யதி நிச்சலா |
ஸமாதாவசலா புத்திஸ்-ததா யோக-மவாப்ஸ்யஸி
|| 53 || (100)

53. (யதா) எப்பொழுது (தே) உன்னுடைய (ச்ருதிவிப்ரதிபன்ஞ) பல பொருளுங் கேட்டுப் பலவாக் கலங்கும் (புத்தி:) புத்தி (அசலா) அசைவற்று (ஸமாதௌ) ஆன்மாவில் (நிச்சலா) நிலேயாக (ஸ்தாஸ்யதி) நிற்குமோ, (ததா) அப்போது (யோகம்) யோகத்தை (அவாப்ஸ்யஸி) அடைவாய்.

52-53. பல நூல்களேப் படித்தால் பகவத்பிரேமை உண்டாகி விடுமா? பஞ்சாங்கத்தில் இவ்வளவு மழை பெய்யும் என்று குறிப்பிட்டிருக்கிறது; பஞ்சாங்கத்தைக் கசக்கிப் பிழிந்தால் ஒரு துளி ஜலங்கூட வராது. (ரா. கி.)

ஆழமில்லாத குளத்தில் நீர் குடிக்கவேண்டுமாஞல் அதைக் கலக்காமல் மெதுவாகக் குடிக்கவேண்டும். கலக்கி விட்டால் அடியிலுள்ள சேறு மேலே கிளம்பி விடும். சாஸ்திரங்களேப்பற்றி வீண் வாதத்தில் இறங்கிஞல் உன் மூளே கலங்கிவிடும், (ரா. கி.)

தர்மக்கிரந்தங்களெல்லாம் ஈசுவரனே நாடும் வழியைச்சொல்லுகின்றன. வழி தெரிந்தபின் அவனிடம் செல்ல முயற்சிதான் அடுத்துச் செய்யவேண்டிய காரியம். அதைச் செய்யாமல் கிரந்தத்தை மட்டும் திருப்பித் திருப்பி வாசிப்பதால் என்ன உபயோகமுண்டாகப் போகிறது? (ரா. கி.)

ச்ருதி—இவ்வுலகிலும் ஸ்வர்க்காதி உலகங்களிலும் இஷ்டப்பிராப்திக்காகவும், அநிஷ்ட நிவிருத்திக்காகவும் வேதத்தின் கர்ம காண்டத்திலும் பிற நூல்களிலும் கூறப்பட்ட கர்மங்களின் கேள்வி.

யோகம்—யோகம் எனும் சொல் இடத்துக்குத் தக்கபடி பின் வரும் கருத்துக்களேக் குறிக்கும்.

(1) கர்ம யோகம், ஸமத்வ யோகம் அல்லது புத்தி யோகம். 2-48)

अर्जुन उवाच—
स्थितप्रज्ञस्य का भाषा समाधिस्थस्य केशव ।
स्थितधीः किं प्रभाषेत किमासीत व्रजेत किम् ॥५४॥ ॥१०१॥

அர்ஜுன உவாச—
ஸ்திதப்ரஜ்ஞஸ்ய கா பாஷா ஸமாதிஸ்தஸ்ய கேசவ |
ஸ்திததீ: கிம் ப்ரபாஷேத கிமாஸீத வ்ரஜேத கிம்
|| 54 || (101)

அர்ஜுனன் கூறியது—
(கேசவ) கேசவா! (ஸ்திதப்ரஜ்ஞஸ்ய) ஞானம் நிலைத்து (ஸமாதிஸ்தஸ்ய) ஸமாதியில் நிற்பவனுடைய (பாஷா) வர்ணனை (கா) என்ன? (ஸ்திததீ:) அந்த ஸ்திதப்ரஜ்ஞன் (கிம் ப்ரபாஷேத) எவ்வாறு பேசுவான்? (கிம் ஆஸீத) எப்படி இருப்பான்? (கிம் வ்ரஜேத) எங்ஙனம் நடப்பான்?

---

(2) பகவத் ப்ராப்தியில் (து:க்க-ஸம்யோக-வியோகம்) எல்லாத் துன்பங்களின் தொடர்பும் அறுதல். (6. 23)

(3) தியான யோகம், அப்பியாஸ யோகம் அல்லது அஷ்டாங்க யோகம். (6. 19.)

(4) விபூதி யோகம், பகவானுடைய பெருமையை எல்லாப் பொருட்களிலும் கண்டும் கேட்டும் ஆனந்தித்தல். (அத். 10.)

(5) பக்தி யோகம். (அத். 12.)

(6) ஸாங்க்ய யோகம். (அத். 2, அத். 13.)

'யோகி' எனும் பதமும் மேற்கூறியவாறே இடத்துக்குத் தக்கபடி வெவ்வேறு கருத்துடையதாகும், பகவான் (10-17), ஆத்மஞானி (6-32); ஸித்த பக்தன் (12-14), நிஷ்காமகர்ம யோகி (5-11), ஸாங்கிய யோகி (5-24), பக்தி யோகி (8-14) ஸாதகன் (6-45), தியான யோகி (6-10), ஸகாமகர்ம யோகி (6-25.)

54-55. 'மனோகதான்'—ஒ—கீ. 6-42—'ஸங்கல்ப-ப்ரபவான் காமான்'. பசி, துக்கம் முதலியவற்றை முற்றும் விலக்க

श्रीभगवानुवाच—
प्रजहाति यदा कामान् सर्वान् पार्थ मनोगतान् ।
आत्मन्येवात्मना तुष्टः स्थितप्रज्ञ-स्तदोच्यते ॥५५॥ ॥१०२॥

ஸ்ரீபகவானுவாச—
ப்ரஜஹாதி யதா காமான் ஸர்வான் பார்த்த மனோ
கதான் |
ஆத்மன்யேவாத்மனா துஷ்ட: ஸ்திதப்ரஜ்ஞஸ்-
ததோச்யதே || 55 ||

ஸ்ரீபகவான் கூறியது—

55. (பார்த்த) பார்த்தா! (யதா) எப்பொழுது (மனோகதான்) மனத்திலடங்கிய (காமான்) ஆசைகள் (ஸர்வான்) அனைத்தையும் (ப்ரஜஹாதி) துரத்தள்ளுகின்றானோ, (ஆத்மனி ஏவ) ஆத்மாவினிடத்திலேயே (ஆத்மனா) ஆத்மாவினால் (துஷ்ட:) உள் மகிழ்ச்சி நிறைந்த அவன் (ததா) அப்போது (ஸ்திதப்ரஜ்ஞ:) ஸ்திதப்ரஜ்ஞன் என்று (உச்யதே) சொல்லப்படுகிறான்.

இயலாது. மனதில் ஸங்கல்பத்தால் எழும் ஆசைகளே இங்கு குறிக்கப்பட்டன.

ஓ—நுனியில் பிளவையுடைய நூல் ஊசியின் காது வழியே செல்லாது. அதைப்போல ஆசைகள் அற்பமிருந்தாலும் ஒருவன் ஈசுவர ஸந்நிதானத்தை அடையமாட்டான். (ரா. கி.)

நடையுடை பாவனைகளில் ஸ்திதப்ரஜ்ஞனுக்கும் பிறருக்கும் ஒற்றுமை வேற்றுமைகள் யாவை என்னும் விஷயம் இவ்வத்தியாயம் முடியும் வரை இனி விளக்கப்படும்.

दुःखेष्वनुद्विग्नमनाः सुखेषु विगतस्पृहः ।
वीतरागभयक्रोधः स्थितधी-र्मुनिरुच्यते ॥ ५६ ॥ ॥ १०३ ॥
यः सर्वत्रानभिस्नेह-स्तत्तत्प्राप्य शुभाशुभम् ।
नाभिनन्दति न द्वेष्टि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५७ ॥ ॥ १०४ ॥

து:க்கேஷ்-வனுத்விக்னமனா: ஸுகேஷு விகத-ஸ்ப்ருஹ: |
வீதராகபயக்ரோத: ஸ்திததீர்-முனிருச்யதே || 56 || (103)

ய:ஸர்வத்ராநபிஸ்நேஹஸ்-தத்தத்-ப்ராப்ய சுபாசுபம் |
நாபிநந்ததி ந த்வேஷ்டி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா || 57 || (104)

---

56. (து:க்கேஷு) துன்பத்தில் (அனுத்விக்னமனா:) துடியாத மனத்தினனாய் (ஸுகேஷு) இன்பத்தில் (விகதஸ்ப்ருஹ:) ஆசை எழாதவனாய் (வீதராகபயக்ரோத:) விருப்பம், பயம், கோபம் இல்லாதவனாய் இருப்பவனே (ஸ்திததீ:) ஞானம் நிலைபெற்ற (முனி:) முனிவன் என (உச்யதே) சொல்லப்படுகிறான்.

57. (ய:) எவன் (ஸர்வத்ர) எல்லா இடத்திலும் (அனபிஸ்நேஹ:) பற்றில்லாதவனாய் (தத் தத்) அந்த அந்த (சுபாசுபம்) நன்மை தீமைகளை (ப்ராப்ய) அடைந்து (ந அபிநந்ததி) ஸந்தோஷத்தால் பூரிப்பதில்லையோ (ந த்வேஷ்டி) துக்கத்தால் வெறுப்பதில்லையோ (தஸ்ய) அவனுடைய (ப்ரஜ்ஞா) ஞானம் (ப்ரதிஷ்டிதா) உறுதியாய் நிலைபெற்றதாகும்.

56-58. ஸ்திதப்ரஜ்ஞன் என்ன பேசுவான் எப்படி இருப்பான் என்றால், விஷய சுகங்களில் பற்றில்லாததாலும், பயம், கோபம் முதலியன இல்லாமலிருப்பதாலும், அவன் உலக விஷயங்களைப் பற்றி மிகைபடப்பேசான். வந்தவைகளை ஸமாதானமாகப் பெற்று,

यदा संहरते चायं कूर्मोऽङ्गानीव सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्य-स्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ५८ ॥ ॥१०५॥

யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோऽங்கானீவ ஸர்வச: |
இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்யஸ்-தஸ்ய ப்ரஜ்ஞா
ப்ரதிஷ்டிதா || (105)

---

58. (யதா) எப்போது (ச) மேலும் (அயம்) இந்த யோகி (கூர்ம:) ஆமையானது (அங்கானி இவ) தன் அங்கங்கங்களைச் செய்வது போல (இந்த்ரியாணி) புலன்களை (இந்த்ரியார்த்தேப்ய:) இந்திரிய விஷயங் களினின்று (ஸர்வச:) எல்லாவகையிலும் (ஸம்ஹரதே) உள்ளே இழுத்துக் கொள்கின்றானோ (தஸ்ய) அவ னுடைய (ப்ரஜ்ஞா) ஞானம் (ப்ரதிஷ்டிதா) உறுதியாக நிலைபெற்றதாகும்.

தேக யாத்திரைக்கு அத்தியாவசியமானதை மட்டும் கவனித்து, ஐம்பொறிகளையும் அடக்கி மனதையும் வாக்கையும் அடக்கிய வனாய் இருப்பான்.

குறிப்பு—கிருதார்த்தனுடைய லக்ஷணங்கள் எவையோ அவையே முமுக்ஷுவுக்கு ஸாதனங்களாக உபதேசிக்கப்படுவன.

'ஸர்வத்ரைவ அத்யாத்ம சாஸ்த்ரே க்ருதார்த்த-லக்ஷணானி யானி தான்-யேவ ஸாதனான்-யுபதிச்யந்தே யத்ன-ஸாத்யத்வாத்' (சங்கரர்)

57. மலர்ந்த புஷ்பம் வாடிப் போகிறது. மலர்ச்சியைப் புகழ் வதும் வாடுதலை இகழ்வதும் வேண்டா.

58. மனம் ஒரு பெண்ணைப் போன்றது. கலியாணம் செய்து புக்ககத்துக்கு அனுப்புவது போல பரமாத்மாவிடம் அதை - ஒப்பு விக்க வேண்டும். குழந்தையைப் பெற்றபின் பிறந்தகத்தில் நாட்டங் குறைவதுபோல் ஞானம் பிறந்தபின் மனதுக்கு உலக நாட்டம் குறையும்.

विषया विनिवर्तन्ते निराहारस्य देहिनः ।
रसवर्जं रसोऽप्यस्य परं दृष्ट्वा निवर्तते ॥ ५९ ॥ ॥ १०६ ॥

விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹின: |
ரஸவர்ஜம் ரஸோ௨ப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா
நிவர்த்ததே || 59 || (106)

---

59. (நிராஹாரஸ்ய தேஹின:) உணவை ஒழித்தவனுக்கு (விஷயா:) பொருள்கள் (விநிவர்த்தந்தே) ஒழிவடைகின்றன—(ரஸவர்ஜம்) ருசி ஒன்று நீங்கலாக; (ரஸ: அபி) ருசியும் (பரம்) பரம்பொருளை (த்ருஷ்டவா) கண்டதன் பின் (அஸ்ய) இவனுக்கு (நிவர்த்ததே) ஒழிவடைகிறது.

---

59. 'நிராஹாரஸ்ய'—ஆஹாரம் என்றால் வயிற்றுக்கு இடப்படும் உணவு மட்டுமன்று; அந்தந்த இந்திரிய விஷயம் அதற்கு ஆஹாரமாம்.

'ரஸவர்ஜம்—ரஸம் என்றால் நாவில் உணரப்படும் சுவை மட்டுமன்று; ஒவ்வொரு இந்திரியத்திலும் ரஸம் உண்டு. விஷயத்தில் ராகம ரஸம் எனப்படும். (ஒ—நகைச்சுவை, பாட்டுச் சுவை மு.) அந்தந்த விஷயத்தை வெறுத்துத் தள்ளினாலும் அதிலுள்ள சுவை மட்டும் நீங்காது நிற்கும்.

உ-ம். ஒரு நோயாளி தன் நாக்கையும் மற்ற இந்திரியங்களையும் நோயின் கொடுமையாலோ வேறு காரணத்தாலோ அடக்குதல் கூடும். ஆனால் அந்த அடக்கம் இந்திரிய ஜயமாகாது; நோய் நீங்கியதும் இந்திரியங்கள் மனத்தை மறுபடி கவர்ந்து செல்லும். அவ்வாறானதுதான் ஐசுவரியம், அணிமாதி ஸித்திகள் முதலியவற்றைப் பெறுவதற்காகச் செய்யப்படுந் தவமும். அசுரர்களும் தவஞ்செய்யவில்லையா?

பரம்பொருளைக் கண்டபின்பே ஆசைகள் அறவே ஒழியும். சூரியன் முன்னிலையில் விளக்கொளியை ஒருவருந் தேடுவதில்லையன்றோ?

यततो ह्यपि कौन्तेय पुरुषस्य विपश्चितः ।
इन्द्रियाणि प्रमाथीनि हरन्ति प्रसभं मनः ॥ ६० ॥ ॥ १०७ ॥
तानि सर्वाणि संयम्य युक्त आसीत मत्परः ।
वशे हि यस्येन्द्रियाणि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ ६१ ॥ ॥१०८॥

யததோ ஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபச்சித: |
இந்த்ரியாணி ப்ரமாதீனி ஹரந்தி ப்ரஸபம் மன: || 60 ||

தானி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பர: |
வசே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா
ப்ரதிஷ்டிதா || 61 ||

---

60. (கௌந்தேய) குந்தியின் மகனே! (யதத:) முயற்சியுடையவனும் (விபச்சித:) நல்லறிவுடையவனும் ஆகிய (புருஷஸ்ய அபி) புருஷனிடத்தும் (ப்ரமாதீனி) கலக்குறச் செய்யும் (இந்த்ரியாணி) இந்திரியங்கள் (ப்ரஸபம்) பலாத்காரமாய் (மன:) மனத்தை (ஹரந்தி) இழுத்துச் செல்கின்றன (ஹி) அன்றே?

61. (யுக்த:) நிலைபெற்ற மனத்தினன் (தானி) அவை (ஸர்வாணி) யாவற்றையும் (ஸம்யம்ய) செவ்வனே அடக்கி (மத்பர:) என்னையே உயர் பொருளாய்க் கருதி (ஆஸீத) அமைவுற இருக்க வேண்டும். (யஸ்ய)

---

60. ஒ—(1) யஸ்த்-வவிஜ்ஞானவான்
பவத்-யயுக்தேன மனஸா ஸதா |
தஸ்யேந்த்ரியாண்-யவச்யானி
துஷ்டாச்வா இவ ஸாரதே: || (கட. உப.)

(2) 'பலவானிந்த்ரியக்ராமோ வித்வாம்ஸமபி கர்ஷதி'
(ம. பா.)

'ப்ரமாதீனி'—தயிரை மத்து கடைவதுபோல மனதை இந்திரியங்கள் மாறி மாறிச் சிதறச்செய்வன.

61. **'வசே ஹி யஸ்யேந்த்ரியாணி'**—எதைப் பார்க்கக் கூடாது, எதைக் கேட்கக்கூடாது, எதை உண்ணக்கூடாது, எதை

ध्यायतो विषयान् पुंसः सङ्गस्तेषूपजायते ।
सङ्गात् सञ्जायते कामः कामात् क्रोधोऽभिजायते ॥ ६२ ॥

த்யாயதோ விஷயான் பும்ஸ: ஸங்கஸ்-
தேஷூபஜாயதே |
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத்
க்ரோதோ஽பிஜாயதே || 62 || (109)

எவனுடைய (இந்த்ரியாணி) இந்திரியங்கள் (வசே) தன் வசப்பட்டனவோ (தஸ்ய) அவனுடைய (ப்ரஜ்ஞாஹி) ஞானமே (ப்ரதிஷ்டிதா) உறுதியானது,

62. (விஷயான்) பொருள்களை (த்யாயத:) உற்று நினைக்கின்ற (பும்ஸ:) புருஷனுக்கு (தேஷூ) அவற்றினிடம் (ஸங்க:) பற்று (உபஜாயதே) உண்டாகின்றது; (ஸங்காத்) பற்றினின்று (காம:) ஆசை (ஸஞ்ஜாயதே) தோன்றுகின்றது; (காமாத்) ஆசையினின்று (க்ரோத:) கோபம் (அபிஜாயதே) பிறக்கின்றது.

முகரக்கூடாது, எதைத் தொடக்கூடாது என்று புத்தியால் யோசித்து நிச்சயித்தபடி இந்திரியங்கள் ஜீவாத்மாவுக்கு அடங்கிச் சேவை செய்யவேண்டும்.

ஒ—அஜீரணத்தால் அவஸ்தைப் படும்போதும், பட்டினி கிடக்க விரும்பும் போதும், இன்சுவைப் பண்டங்களைக் கண்டதும் நோயாளியின் நாக்கில் ஜலம் ஊறும். அதுபோல ஆசைகளைத் தள்ள முயற்சி செய்பவன் மனமும் செல்வத்தையும் உலக இன்பங்களையும் கண்டதும் தடுமாறுவது ஸகஜம். (ரா. கி.)

ஒ—(விகார-ஹேதௌ ஸதி விக்ரியந்தே யேஷாம் ந சேதாம்ஸி த ஏவ தீரா:) மனம் கலைவதற்குக் காரணம் உள்ளபோதும் எவர்களுடைய மனம் கலையவில்லையோ அவர்களே தீரர்கள்.

(குமார ஸம்பவம். 1·59)

62. கெடுதிக்குக் காரணம் விஷயத்தியானம்; பிழைக்கக் காரணம் பகவத்தியானம்.

क्रोधाद्भवति संमोहः संमोहात् स्मृतिविभ्रमः ।
स्मृतिभ्रंशाद् बुद्धिनाशो बुद्धिनाशात् प्रणश्यति ॥६३॥ ॥११०॥

रागद्वेष-वियुक्तैस्तु विषया-निन्द्रियैश्चरन् ।
आत्मवश्यै-र्विधेयात्मा प्रसाद-मधिगच्छति ॥ ६४ ॥॥ १११ ॥

க்ரோதாத் பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத்
ஸ்ம்ருதிவிப்ரம: |
ஸ்ம்ருதிப்ரம்சாத் புத்திநாசோ புத்திநாசாத் ப்ரணச்யதி
|| 63 || (110)

ராகத்வேஷ-வியுக்தைஸ்து விஷயா-னிந்த்ரியைச்சரன் |
ஆத்மவச்யைர்-விதேயாத்மா ப்ரஸாத-மதிகச்சதி|| 64 ||

---

63. (க்ரோதாத்) கோபத்தினின்று (ஸம்மோஹ:) பெருமோகம் (பவதி) உண்டாகின்றது; (ஸம்மோஹாத்) பெரு மோகத்தினின்று (ஸ்ம்ருதிவிப்ரம:) நன்னினைவின் கேடு விளைகின்றது; (ஸ்ம்ருதிப்ரம்சாத்) நன்னினைவு கெட்டதனால் (புத்திநாச:) புத்தி நாசம் ஏற்படுகின்றது; (புத்தி நாசாத்) புத்தி நாசத்தினால் (பரணச்யதி) முற்றும் அழிகின்றான்.

64. (து) ஆனால் (ராகத்வேஷ வியுக்தை:) விருப்பு வெறுப்பற்றவையும் (ஆத்மவச்யை:) தன்

---

63. **கோபம்**—தடைபெற்ற ஆசையே கோபமாய் மாறுகின்றது; ஓடுகின்ற தண்ணீர் தடைபெற்றவுடனே நுரைத்துச் சுழன்று பாய்வதுபோல.

ஸ்ம்ருதி—சாஸ்திரத்தாலும் ஆசார்யனாலும் உபதேசிக்கப் பட்ட ஞானம்.

புத்திநாச:—கார்யாகார்ய விவேகத்தின் அழிவு.

ப்ரணச்யதி—புருஷார்த்தத்தை எய்துவதற்குத் தகுதியை இழந்து விடுகிறான்.

64. இந்திரிய அடக்கத்தால் ஏற்படும் ப்ரஸாதம்.

प्रसादे सर्वदुःखानां हानि-रस्योपजायते ।
प्रसन्न-चेतसो ह्याशु बुद्धिः पर्यवतिष्ठते ॥ ६५ ॥ ॥ ११२ ॥
नास्ति बुद्धि-रयुक्तस्य न चायुक्तस्य भावना ।
न चाभावयतः शान्ति-रशान्तस्य कुतः सुखम् ॥६६॥ ॥११३॥

ப்ரஸாதே ஸர்வது:க்கானும் ஹானி-ரஸ்யோபஜாயதே |
ப்ரஸன்ன-சேதஸோ ஹ்யாசு **புத்தி:** ப்ர்யவதிஷ்டதே
|| 65 || (112)
நாஸ்தி **புத்தி**-ரயுக்தஸ்ய ந சாயுக்தஸ்ய **பா**வனு !
ந சா**பா**வயத: சாந்தி-ரசாந்தஸ்ய குத: ஸுகம் || 66 ||

வயமானவையும் ஆகிய (இந்த்ரியை:) இந்திரியங்களால் (விஷயான்) பொருள்களை (சரன்) அனுபவித்துக்கொண்டு (விதேயாத்மா) தன்னடக்கம பெற்றவன் (ப்ரஸாதம்) உள்ளத் தெளிவை (அதிகச்சதி) எய்துகின்ருன்.

65. (ப்ரஸாதே) உள்ளத் தெளிவில் (அஸ்ய) இவனுடைய (ஸர்வ து:க்கானும்) எல்லாத் துன்பங்களுக்கும் (ஹானி:) அழிவு (உபஜாயதே) ஏற்படுகின்றது; (ப்ரஸன்னசேதஸ:) தெளிந்த மன முடையவனுக்கு (ஆசு) சீக்கிரத்தில் (**புத்தி:**) புத்தி (ப்ர்யவதிஷ்ட்டதே ஹி) தடுமாற்றமின்றி நன்கு நிலைபெறுகின்றது.

66. (அயுக்தஸ்ய) நிலைபெறுதவனுக்கு (**புத்தி:**) விவேகம் (நாஸ்தி) இல்லை; (அயுக்தஸ்ய) நிலைபெறுத

ஓ— பார்ப்பானகத்திலே பாற்பசு வைந்துண்டு
மேய்ப்பாருமின்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரு முண்டாய் வெறியு மடங்கினுற்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே.
(திருமந்திரம்)

ப்ரஸாதம்—உள்ளத்தில் ஆத்மானுபவத்தால் ஏற்படும் தெளிவும் சாந்தியும் ஆனந்தமும்.

इन्द्रियाणां हि चरतां यन्मनोऽनुविधीयते ।
तदस्य हरति प्रज्ञां वायु-र्नावमिवांभसि ॥ ६७ ॥ ॥ ११४ ॥

இந்த்ரியாணும் ஹி சரதாம் யன்மனோऽனுவிதீயதே |
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்-நாவமிவாம்பஸி || 67 ||

வனுக்கு (பாவனு ச) ஆன்மசிந்தையும் (ந) இல்லை; (ச) மேலும், (அபாவயத:) ஆன்மசிந்தை யில்லாதவனுக்கு (சாந்தி:) மன்வமைதி (ந) இல்லை; (அசாந்தஸ்ய) மனவமைதி இல்லாதவனுக்கு (ஸுகம்) இன்பம் (குத:) எங்ஙனம்?

67. (ஹி) ஏனெனில் (சரதாம்) அலைகின்ற (இந்த்ரியாணும்) இந்திரியங்களுக்கு (யத்) எந்த (மன:) மனம் (அனுவிதீயதே) அனுகூலமாய்ப் பின் செல்கின்றதோ (தத்) அது (அஸ்ய) இவனுடைய (ப்ரஜ்ஞாம்) விவேகத்தை (வாயு:) காற்றுனது (அம்பஸி) நீரின்மேல் (நாவம் இவ) படகைப்போல் (ஹரதி) கவர்ந்து செல்கின்றது.

---

66. சாந்தி—ஒ—நித்யோऽநித்யானும் சேதனச்சேதனுனும்
ஏகோ பஹூனும் யோ விததாதி காமான்
தமாத்மஸ்தம் யேऽனுபச்யந்தி தீராஸ்-
தேஷாம் சாந்தி: சாச்வதீ நேதரேஷாம் ||

எவன் அநித்தியத்திடை நித்தியமாயும், சேதனர்களிடை சேதனமாயும், பலவற்றிடை ஒன்றுயும், ஆன்மாவில் உறைபவனுயும் இருந்து கொண்டு அவரவர் ஆசைகளை யளிக்கின்ருனே அவனைத் தொடர்ந்து காண்பவர்க்கே சாந்தி உண்டு, மற்றவர்க்கில்லை, (கட. உப. 5-13)

ஆசையை அடிமை கொண்டவனுக்கு உலகம் அடிமை.

67. ஒ—மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறி கடலோடும் போது
மதனெனும் பாறை தாக்கி மறியும் போதறிய வொண்ணுது
உனையுனு முணர்வை நல்கா யொற்றியூருடைய கோவே.
(அப்பர் தேவாரம்)

तस्माद्यस्य महाबाहो निगृहीतानि सर्वशः ।
इन्द्रियाणीन्द्रियार्थेभ्य-स्तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥६८॥ ॥११५॥
या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी ।
यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः ॥ ६९ ॥

தஸ்மாத் யஸ்ய மஹாபாஹோ நிக்ருஹீதானி ஸர்வச: |
இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்யஸ்-தஸ்ய ப்ரஜ்ஞா
ப்ரதிஷ்டிதா || (115)

யா நிசா ஸர்வபூதாநும் தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ |
யஸ்யாம் ஜாக்ரதி பூதானி ஸா நிசா பச்யதோ முனே:
|| 69 || (116)

---

68. (தஸ்மாத்) ஆகையால் (மஹாபாஹோ) தோள்வலி படைத்தவனே! (யஸ்ய) எவனுடைய (இந்த்ரியார்த்தேப்ய:) இந்திரிய விஷயங்களினின்று (இந்த்ரியாணி) இந்திரியங்கள் (ஸர்வச:) முற்றும் (நிக்ருஹீதானி) அடக்கப்பெற்றனவோ (தஸ்ய) அவனுடைய (ப்ரஜ்ஞா) ஞானம் (ப்ரதிஷ்டிதா) நிலை பெற்றது.

69. (ஸர்வபூதாநும்) எல்லாப் பிராணிகளுக்கும் (யா) எது (நிசா) இரவோ (தஸ்யாம்) அதில் (ஸம்யமீ)

---

68. ஒ—உள்ளே இருக்கும் ஜனங்கள் விழித்துக் கொண்டிருக்கும் வீட்டில் திருடர் நுழைவதில்லை. நீ விழித்துக் கொண்டிருந்தால் உன் உள்ளத்தில் கெட்ட எண்ணங்கள் நுழையமாட்டா.

அவிழ்த்து விடப்பட்ட யானையானது மரங்களையும் செடிகளையும் வேரோடு பிடுங்கிக்கொண்டு போகிறது. ஆனால் அதன் பாகன் அங்குசத்தால் அதன் தலையில் குத்தினதும் அது சாந்தமாகி விடுகிறது. அதுபோல அடக்கியாளாத மனம் வீண் எண்ணங்களில் ஓடுகிறது. விவேகம் என்ற அங்குசத்தால் இடிக்கப்பட்டதும் அது சாந்தமாக அமைகின்றது. (ரா. கி)

69. 'உத்திஷ்ட்டத ஜாக்ரத' என்று உபநிஷத்தும், 'இனித் தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்' என்று திருப்பாவையும்

आपूर्यमाण-मचलप्रतिष्ठं-समुद्रमापः प्रविशन्ति यद्वत् ।
तद्वत्कामा यं प्रविशन्ति सर्वे स शान्ति-माप्नोति न कामकामी ॥

ஆபூர்யமாண-மசல·ப்ரதிஷ்டம்
ஸமுத்ரமாப: ப்ரவிசந்தி யத்வத் |
தத்வத் காமா யம் ப்ரவிசந்தி ஸர்வே
ஸ சாந்தி-மாப்னோதி ந காமகாமீ || 70 || (117)

மனமடங்கிய முனிவன் (ஜாகர்த்தி) விழிப்புடையவனு யிருக்கிறான் ; (யஸ்யாம்) எதில் (பூதானி) பிராணிகள் (ஜாக்ரதி) விழிப்புடையனவோ (ஸா) அது (பச்யத:) உண்மையைக் காணும் (முனே:) முனிவனுக்கு (நிசா) இரவாம்.

70. (ஆபூர்யமாணம்) எங்கும் நிரம்பியதும் (அசல ப்ரதிஷ்டம்) நிலைகுலையாததும் ஆகிய (ஸமுத்ரம்) ஸமுத்திரத்தை (ஆப:) நதிகள் (யத்வத்) எவ்வாறு (ப்ரவிசந்தி) அடைகின்றனவோ (தத்வத்) அவ்வாறு (ஸர்வே காமா:) ஆசைகளெல்லாம் (யம்) எவனை (ப்ரவிசந்தி) அடைகின்றனவோ (ஸ:) அவன் (சாந்திம்) அமைதியை (ஆப்னோதி) எய்துகிறான் ; (காமகாமீ) ஆசைகளைத் தொடர்பவன் (ந) எய்தான்.

கூறியது அஜ்ஞான இருளில் ஆழ்ந்து உறங்குபவர்களைக் குறித்தே. அவர்கள் இவ்வுலகில் விழிப்புடையவராயினும் அவ்வுலகில் உறங்குபவரேயாவர்.

உ-ம். வௌவாலின் வாழ்வுக்குப் பகல் இரவாகவும், இரவு பகலாகவும் மாறுகிறது.

உறக்கத்துக்கும் விழிப்புக்கும் உள்ள சம்பந்தமே பிழைக்கும் உண்மைக்கும்.

மனது இருவகைப்படும். காம ஸங்கல்ப முடையது (அசுத்தம்); காமமில்லாதது (சுத்தம்)

70. ஒ—' ஆப்னோதி ஸ்வாராஜ்யம்.,.......' (தை. உப. சீக்ஷா வல்லி)

विहाय कामान् यः सर्वान् पुमांश्चरति निस्पृहः ।
निर्ममो निरहङ्कारः स शान्ति-मधिगच्छति ॥ ७१ ॥ ॥११८॥

एषा ब्राह्मी स्थितिः पार्थ नैनां प्राप्य विमुह्यति ।
स्थित्वास्या-मन्तकालेऽपि ब्रह्मनिर्वाण-मृच्छति ॥ ७२ ॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादेसाङ्ख्ययोगो नाम
द्वितीयो ध्यायः ॥

விஹாய காமான் ய: ஸர்வான் புமாம்ச்சரதி
நிஸ்ப்ருஹ: |
நிர்மமோ நிரஹங்கார: ஸ சாந்தி-மதிகச்சதி ||71|| (118)
ஏஷா ப்ராஹ்மீஸ்திதி: பார்த்த நைனும் ப்ராப்ய
விமுஹ்யதி |
ஸ்தித்வாஸ்யா-மந்தகாலே஽பி ப்ரஹ்மநிர்வாணம்
ருச்சதி || 72 || (119)

இதி ஸ்ரீமத் பகவத்கீதா ஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம
வித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்
ஜுனஸம்வாதே ஸாங்க்யயோகோ நாம
த்விதீயோ஽த்யாய: ||

---

71. (ய:) எந்த (புமான்) புருஷன் (ஸர்வான் காமான்) எல்லா ஆசைகளையும் (விஹாய) விட்டு (நிஸ்ப்ருஹ:) பற்றில்லாதவனுய் (நிரஹங்கார: நிர்மம:) 'நான்' 'என்னுடையது' என்பதில்லாதவனுய் (சரதி) சஞ்சரிக்கின்ருனே (ஸ:) அவன் (சாந்திம்) அமைதியை (அதிகச்சதி) எய்துகிருன்.

72. (பார்த்த) பார்த்தா! (ஏஷா) இதுவே (ப்ராஹ்மீ ஸ்திதி:) பிரம்மத்துடன் ஒன்றுபட்ட நிலை;

(ஏனும்) இதை (ப்ராப்ய) அடைந்து (ந விமுஹ்யதி) ஒருவன் மோகத்தில் அழுந்தமாட்டான். (அந்தகாலே அபி) கடைசி காலத்திலும் (அஸ்யாம்) இதில் (ஸ்தித்வா) நின்று (ப்ரஹ்ம நிர்வாணம்) ப்ரஹ்மத்தில் கலந்து போக்குவரவற்ற முக்தி நிலையை (ருச்சதி) அடைகிறுன்.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திர மாயும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸம்

பாஷணையாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத்கீதை
என்னும் உபநிஷத்தில் ஸாங்கியயோகம்
என்று பெயர் பெற்ற இரண்டாவது
அத்தியாயம் முற்றும்.

---

71. ஒ—அவதூதருக்குப் பருந்து உபகுருவான கதை.—'உலகப் பற்றுகளாகிய சுமையை மனிதன் கீழே போடாதவரை அவனுல் உலக சஞ்சலங்களினின்று தப்பித்துக் கொள்ள முடியா தென்றும் அவனுக்கு மனச் சமாதானமே இராதென்றும் நீ எனக்குக் கற்பித்தாய்' என்று அவதூதர் பருந்தை நோக்கிக் கூறினர். (பருந்தின் வாயில் மாம்சத் துண்டு இருந்த வரை மற்றப் பறவைகள் அதைத் தொடர்ந்து உபத்ரவம் செய்தன.) (ரா. கி)

72. 'அந்தகாலே'— ஒ—கீ. 8.5-7.

சோகமுறு பார்த்தன் துயரொழியப் பேரருளால்
தேகமொடு தேகியியல் தேற்றியவன்—மோகம்
களைந்தருளும் கண்ணன் கனிவாய்ச்சொல் கற்பார்
உளந்தடுமா ருதுயர்வார் ஊங்கு. (கீ. வெ.)

அத்தியாய விஷயச் சுருக்கம்—

அர்ஜுனனுடைய மனக்குழப்ப வர்ணனை. பகவான் அது அர்ஜுனனுக்கு ஒவ்வாததென்றுகூறி அவனை எழுந்திருக்கச் சொல்லுதல். பூஜைக்குரியவர்களைக்கொன்று அரசாளுவதைவிடப் பிச்சையெடுத்தல் மேல் என்றும், ஆனால் தனக்கு எது நன்மையோ அதை பகவானே தீர்மானிக்க வேண்டும் என்று சொல்லி அர்ஜுனன் பகவானிடத்தில் சிஷ்யனாகச் சரணாகதியடைதல். பின்னும் 'யுத்தம் செய்யமாட்டேன்' என்று தானே தீர்மானித்துக் கொண்டு மௌனமாயிருக்க பகவான் அர்ஜுனன் முன்னுக்குப் பின் ஒவ்வாத பேச்சுக்களைப் பேசுவதைக் கண்டு புன்முறுவல் செய்து அவன் மயக்கத்தை நீக்க ஆத்ம தத்துவத்தை உபதேசிக்க ஆரம்பிக்கிறார் (2, 11). ஆத்மா பிறப்பற்றது, மாறுதலில்லாதது. எங்குமிருப்பது, என்று முள்ளது; கிழிந்துபோன வஸ்திரங்களை எறிந்து விட்டுப் புது வஸ்திரங்களை மனிதன் தரிப்பதுபோல், பட்டுப்போன சரீரங்களைவிட்டுப் புதுச் சரீரங்களில் புகுகின்றது. இங்ஙனம் ஆத்ம தத்துவத்தை ஆய்ந்து உணர்ந்தாலன்றிச் சோகம் நீங்காது.

இந்த 'ஸாங்கிய புத்தி' யுடன் கூடியவன் உலகில் எப்படிக் கர்மங்களைச் செய்து வாழவேண்டும் என்பதை **யோக புத்தி** என்று மேலே பகவான் **வர்ணிக்கிறார்**. கர்மக்கட்டினின்று விடுவிக்கும் நிஷ்காமகர்ம யோகத்தின் பெருமையையும், அதை உணராது ஆசைவாய்ப்பட்டுச் செய்யும் காம்ய கர்மங்களின் சிறுமையும் கூறப்படுகின்றது. யோகத்தின் லக்ஷணம் 'ஸமத்வம்'; இந்த ஸமத்வமே கர்மயோகியின் 'ஸாமர்த்தியம்'. பின் கேள்வியாலும் அனுபவத்தாலும் நிலைபெற்ற புத்தியுடைய ஸ்திதப்ரஜ்ஞனுடைய லக்ஷணத்தைக் கூறி அத்தியாயம் முடிவு.

॥ तृतीयोऽध्यायः ॥

(कर्मयोगः)

अर्जुन उवाच—

ज्यायसी चेत्कर्मणस्ते मता बुद्धि-र्जनार्दन।
तत्किं कर्मणि घोरे मां नियोजयसि केशव ॥ १ ॥ ॥१२०॥

மூன்றும் அத்தியாயம்

(கர்ம யோகம்)

அர்ஜுன உவாச—

ஜ்யாயஸீ சேத் கர்மணஸ்தே மதா புத்திர்-ஜனார்த்தன|
தத் கிம் கர்மணி கோரே மாம் நியோஜயஸி கேசவ
|| 1 || (120)

அர்ஜுனன் கூறியது—

(1) (ஜனார்த்தன) ஜனார்த்தன! (கர்மண:) கருமத்தைக் காட்டிலும் (புத்தி:) ஞானம் (ஜ்யாயஸீ) மேலானது என்று (தே) உன்னுடைய (மதா சேத்) கருத்து எனில், (தத்) அப்போது (கிம்) ஏன் (கேசவ) கேசவா! (கோரே) கொடிய (கர்மணி) கருமத்தில் (மாம்) என்னை (நியோஜயஸி) ஏவுகின்றாய்?

கீதா சாஸ்திரம் முழுதும் இரண்டாம் அத்தியாயத்தில் அடக்கம். அத். 3. 4ல் நிஷ்காம கர்மமும், 5ல் ஸர்வகர்ம ஸந்நியாஸமும் 6ல் தியானம் கூடுதலும் விரிவாகக் கூறப்படும்.

"ப்ரஜஹாதி யதா காமான்" (2-55.) தொடங்கி "ஏஷா ப்ராஹ்மீ ஸ்திதி:" (2-72) என்றவரை ஸாங்கிய புத்தியின் பெருமை கூறப்பட்டது. "கர்மண்யேவாதிகாரஸ்தே" (2-49.) என்று உபதேசித்த கர்மயோகத்தை ஸாங்கியத்துக்குச் சமமாக உயர்த்திக் கூறவில்லை என்று அர்ஜுனன் கருதுவதால் இங்கே கேள்வி பிறக்கிறது.

கோர்வையும் அத்தியாயத்தின பெயரும்—2-39ல் 'புத்திர் யோகேத்விமாம் ச்ருணு' என்று ஆரம்பித்து 'ததா யோகமவாப்ஸ்யஸி' என்று 2-53 வரை எந்தக் கர்மயோகமானது ஸமபுத்தியுடன்

व्यामिश्रेणेव वाक्येन बुद्धिं मोहयसीव मे ।
तदेकं वद निश्चित्य येन श्रेयोऽहमाप्नुयाम् ॥ २ ॥ ॥१२१॥
श्रीभगवानुवाच—
लोकेऽस्मिन्द्विविधा निष्ठा पुरा प्रोक्ता मयानघ ।
ज्ञानयोगेन साङ्ख्यानां कर्मयोगेन योगिनाम् ॥ ३ ॥ ॥१२२॥

வ்யாமிச்ரேணேவ வாக்யேன புத்திம் மோஹயஸீவ
மே |
ததேகம் வத நிச்சித்ய யேன ச்ரேயோऽஹ-மாப்னுயாம்
|| 2 || (121)

ஸ்ரீபகவானுவாச—
லோகேऽஸ்மின் த்விவிதா நிஷ்டா புரா ப்ரோக்தா
மயானக |
ஜ்ஞானயோகேன ஸாங்க்யானும் கர்மயோகேன
யோகினும் || 3 || (122)

---

2. (வ்யாமிச்ரேண இவ) குழப்புவது போன்ற (வாக்யேன) வாக்கால் (மே) என்னுடைய (புத்திம்) அறிவை (மோஹயஸி இவ) மயக்குகிறவன் போல் காண்கிருய். (யேன) எதனுல் (அஹம்) நான் (ச்ரேய:) உயர் நலத்தை (ஆப்னுயாம்) அடைவேனே (தத் ஏகம்) அந்த ஒன்றை (நிச்சித்ய) நிச்சயித்து (வத) கூறியருள்வாய்.

ஸ்ரீபகவான் கூறியது—

3. (அனக) பாபமற்றவனே! (அஸ்மின் லோகே) இவ்வுலகில் (த்விவிதா) இருவகையான (நிஷ்டா)

அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்று சுருக்கிக் கூறப்பட்டதோ அதுவே இங்கு விரித்துக் கூறப்படுவதால் இவ்வத்தியாயம் **கர்மயோகம்** எனப் பெயர் பெற்றது.

2. (பரமகாருணிகஸ்ய தவ மோஹகத்வம் நாஸ்த்யேவ ததாபி ப்ராந்த்யா மமைவம் பாதீதி இவ சப்தேனேக்தம்) பரமகாரு

न कर्मणा-मनारम्भा-न्नैष्कर्म्यं पुरुषोऽश्नुते ।
न च संन्यसनादेव सिद्धिं समधिगच्छति ॥ ४ ॥ ॥१२३॥

ந கர்மணு-மனரம்பாந்-நைஷ்கர்ம்யம் புருஷோऽச்னுதே|
ந ச ஸங்ந்யஸனதேவ ஸித்திம் ஸமதிகச்சதி || 4 ||

நிஷ்டை (புரா) ஆதியில் (மயா) என்னுல் (ப்ரோக்தா) கூறப்பட்டது—(ஜ்ஞான யோகேன) ஞானயோகத்தால் (ஸாங்க்யானும்) ஸாங்கியர்க்கும் (கர்மயோகேன) கருமயோகத்தால் (யோகினும்) கருமயோகிகட்கும்.

4. (புருஷ:) புருஷன் (கர்மணும் அனரம்பாத்) கருமங்களைத் தொடங்காததால் (நைஷ்கர்ம்யம்) கருமத்திலிருந்து விடுபட்ட நிலையை (ந அச்னுதே) அனுபவிப்பதில்லை; (ச) மேலும் (ஸங்ந்யஸனத் ஏவ) கருமத்தை விட்டொழித்தலாலேயே (ஸித்திம்) ஸித்தியை (ந ஸமதிகச்சதி) அடைகிறதும் இல்லை.

ணிகனுன உனக்கு மயக்க வேண்டும் என்று இராது; என்றுலும் என் அறிவு சுழல்வதால் எனக்கு அப்படித் தோன்றுகிறது எனக் குறிப்பிடுவது 'இவ' எனும் சொல். —ஸ்ரீதரர்.

3. புரா—முன் அவதாரங்களில் அல்லது முன் கல்பங்களில்.

'த்விவிதா நிஷ்டா':—பிரவிருத்தி மார்க்கம், நிவிருத்தி மார்க்கம். பிரவிருத்தி மார்க்கத்தில் நின்ற ஞானிகள் ஜனகாதியர்; நிவிருத்தி மார்க்கத்தில் நின்ற ஞானிகள் ஸனகாதியர்.

ஒ—மானஸா மே ஸுதா யுஷ்மத் பூர்வஜாஸ்-ஸநகாதய: |
சேருர்-விஹாயஸா லோகான் லோகேஷு விகத-
ஸ்ப்ருஹா: ||
ஸனகஞ்ச ஸனந்தஞ்ச ஸனுதன-மதாத்மபூ: |
ஸனத்குமாரஞ்ச முநீந் நிஷ்க்ரியா-னூர்த்வரேதஸ: ||
(பாகவதம்)

4. ஒ—'யதி கர்மாகரணேன முக்தி: ஸ்யாத் ஸ்தாவராணும்' —கர்மம் செய்யாமையிலேயே முக்தி வரும் என்றுல் தாவரப் பொருள்களுக்கு வரவேண்டும். (ஸ்ரீ மத்வர்.)

न हि कश्चित् क्षणमपि जातु तिष्ठत्यकर्मकृत् ।
कार्यते ह्यवशः कर्म सर्वः प्रकृतिजैर्गुणैः ॥ ५ ॥ ॥ १२४ ॥
कर्मेन्द्रियाणि संयम्य य आस्ते मनसा स्मरन् ।
इन्द्रियार्थान्विमूढात्मा मिथ्याचारः स उच्यते ॥ ६ ॥ ॥१२५॥

ந ஹி கச்சித் க்ஷணமபி ஜாது திஷ்ட்டத்-யகர்மக்ருத் |
கார்யதே ஹ்யவச: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜைர்-குணை:
|| 5 || (124)

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா
ஸ்மரன் |
இந்த்ரியார்த்தான் விமூடாத்மா மித்யாசார: ஸ
உச்யதே || 6 || (125)

---

5. (ஜாது) ஒருபோதும் (க்ஷணம் அபி) விஞடி கூட (கச்சித்) எவனும் (அகர்மக்ருத்) ஒரு கருமமும் செய்யாதவனுக (ந ஹி திஷ்ட்டதி) நிற்பதில்லை யன்றே? (ப்ரக்ருதிஜை:) இயற்கையிற் பிறந்த (குணை:) குணங்களால் (ஸர்வ:) எல்லாரும் (அவச:) தம்மை யறியாமல் (கர்ம கார்யதே) தொழிலில் இயக்குவிக்கப் படுகின்றனர்.

6. (ய:) எவன் (கர்மேந்த்ரியாணி) கர்மேந்திரியங் களை (ஸம்யம்ய) அடக்கிவிட்டு, (இந்த்ரியார்த்தான்)

ஒ—கீ. 6-3. (ஆருருக்ஷுவுக்கும் ஆரூடனுக்கும் வித்தியாசம்.) ஞான யோகத்தில் முயல்பவன் கர்மத்தை விடுதல் தவறல்ல வெனினும் கர்ம ஸந்நியாசத்தாலேயே ஞானத்தின் பரிபக்குவத்தை அடைந்துவிடுவதில்லை.

5. கச்சித் (எவனும்)—ஜீவன்முக்தன் நீங்கலாக. ஜீவன் முக்தன் பிறர் நோக்கத்துக்குக் கர்மவசப்பட்டவனுய்த் தோன்றினும், அவன் உண்மையில் குணுதீதனே.

கர்மேந்திரியங்கள்—கீதையில் ஞானேந்திரியங்களைப் பிரித்து கூறுததால் இங்கு பத்து இந்திரியங்களும் குறிப்பு.

यस्त्विन्द्रियाणि मनसा नियम्यारभतेऽर्जुन ।
कर्मेन्द्रियैः कर्मयोग-मसक्तः स विशिष्यते ॥ ७ ॥ ॥ १२६ ॥

யஸ்த்விந்த்ரியாணி மனஸா நியம்யாரபதே ऽர்ஜுன |
கர்மேந்த்ரியை: கர்மயோக-மஸக்த: ஸ விசிஷ்யதே
|| 7 || (126)

இந்திரியங்கள் நாடும் பொருள்களை (மனஸா) மனத்தால் (ஸ்மரன்) நினைத்துக்கொண்டு (ஆஸ்தே) இருக்கிறானோ (ஸ:) அந்த (விமூடாத்மா) பெரும் மூடன் (மித்யாசார:) பொய்யொழுக்க முடையவன் என்று (உச்யதே) சொல்லப்படுவான்.

7. (அர்ஜுன) அர்ஜுனா! (து) ஆனால் (ய:) எவன் (இந்த்ரியாணி) ஐம்பொறிகளையும் (மனஸா) மனத்தால் (நியம்ய) நன்கு அடக்கி (அஸக்த:) பற்றின்றி (கர்மேந்த்ரியை:) கர்மேந்திரியங்களால் (கர்மயோகம்) கருமயோகத்தை (ஆரபதே) தொடங்குகின்றானோ (ஸ:) அவன் (விசிஷ்யதே) சிறந்தவன்.

---

6. ஓ—நீ ஜபமாலை உருட்டலாம், நெற்றியில் நீரணியலாம், நீண்ட ஜடை தரிக்கலாம்; ஆனால் உன் உள்ளத்தில் கொடிய விஷமிருக்கையில் நீ எங்ஙனம் கடவுளைக் காண்பாய்? (கபீர்தாஸ்)

கேள்வி—பகவத்தியானம் செய்ய முயல்பவன் இந்திரியங்களை அடக்க முயல்கின்றான். அவை எளிதில் அடங்குவதில்லை. அம்முயற்சியும் பொய்யொழுக்கத்தில் சேர்ந்ததா?

விடை—அது பொய்யொழுக்கமன்று. மனமடங்குவதற்குச் சாதனம். ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும். மனத்தின் அடக்கத்தைக் கருதாமல் இந்திரியங்களை மட்டும் அடக்கிவிட்டதாய் வேஷம் போடுதல் பொய்யொழுக்கம். இப்படிப்பட்டவனுடைய அடக்கமும், தியானமும், பிரார்த்தனையும் பிறர் தன்னைப் போற்றுவதற்காகவும் பிறரைத் தான் அடக்குவதற்காகவும் ஏற்பட்ட அசுர ஸம்பத்து.

உ-ம். 'ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு'.

7. ஆசாரக் கள்ளனை விடக் கர்மயோகி சிறந்தவன் என்று

नियतं कुरु कर्म त्वं कर्म ज्यायो ह्यकर्मणः ।
शरीरयात्रापि च ते न प्रसिद्ध्येदकर्मणः ॥ ८ ॥ ॥ १२७ ॥
यज्ञार्थात् कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबन्धनः ।
तदर्थं कर्म कौन्तेय मुक्तसङ्गः समाचर ॥ ९ ॥ ॥ १२८ ॥

நியதம் குரு கர்ம த்வம் கர்ம ஜ்யாயோ ஹ்யகர்மண: |
சரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்யே-தகர்மண: || 8 || (127)
யஜ்ஞார்த்தாத் கர்மணோऽன்யத்ர லோகோऽயம் கர்ம பந்தன: |
ததர்த்தம் கர்ம கௌந்தேய முக்தஸங்க: ஸமாசர || 9 ||

---

8. (த்வம்) நீ (நியதம்) விதிக்கப்பட்டுள்ள (கர்ம) கடமையை (குரு) செய்; (அகர்மண:) கருமம் செய்யாமையினும் (கர்ம) கருமம் செய்தல் (ஜ்யாய: ஹி) சிறந்தது அன்றோ; (அகர்மண:) கருமம் செய்யாத நிலையில் (தே) உனக்கு (சரீரயாத்ரா அபி ச) உடலை நடத்துதலும்கூட (ந ப்ரஸித்யேத்) முடியாமற்போகும்.

9. (யஜ்ஞார்த்தாத்) யஜ்ஞத்திற்காக அதாவது பகவதர்ப்பணமாக உள்ள (கர்மண:) கருமத்தினின்று (அன்யத்ர) விலகிய விடத்தில் (அயம்) இந்த (லோக:) உலகம (கர்மபந்தன:) கருமக் கட்டுடைத்து; (கௌந்தேய) அர்ஜுனா! (ததர்த்தம்) யஜ்ஞத்தின் பொருட்டு (முக்தஸங்க:) பற்றற்றவனாய் (கர்ம) கர்மத்தை (ஸமாசர) செவ்வனே செய்வாய்.

பொருள் கூறுதல் ஒவ்வாது. அது ஒரு புண்ணியவானைப் பார்த்து அவன் ஒரு பாபியைவிட மேலானவன் என்பது போல் இருக்கும். காமம் செய்யும் அனைவரினும் கர்மயோகி சிறந்தவன் என்பது கருத்து.

8. **கர்மம் செய்யாமையினும் செய்தல் சிறந்தது**— தமோ குணத்துக்கு அடிமைப்பட்டு கர்மத்தில் முயற்சியில்லாதவனைக் கருதுமிடத்து ரஜோகுணத்தால் தூண்டப்பட்டுக் காம்யகர்மம் செய்பவனும் சிறந்தவனேயாவான்.

सहयज्ञाः प्रजाः सृष्ट्वा पुरोवाच प्रजापतिः ।
अनेन प्रसविष्यध्व-मेष वोऽस्त्विष्टकामधुक् ॥ १० ॥ ॥१२९॥
देवान् भावयतानेन ते देवा भावयन्तु वः ।
परस्परं भावयन्तः श्रेयः पर-मवाप्स्यथ ॥ ११ ॥ ॥१३०॥

ஸஹயஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி:|
அனேன ப்ரஸவிஷ்யத்வ-மேஷவோऽஸ்த்விஷ்டகாம
துக் || 10 || (129)
தேவான் பாவயதானேன தே தேவா பாவயந்து வ: |
பரஸ்பரம் பாவயந்த: ச்ரேய: பர-மவாப்ஸ்யத || 11 || (130)

---

10. (புரா) ஆதியில் (ப்ரஜாபதி:) பிரம்மா (ஸஹ யஜ்ஞா:) யக்ஞங்களுடன் (ப்ரஜா:) மனிதர்களை (ஸ்ருஷ்ட்வா) சிருஷ்டித்து (உவாச) கூறினர்:— (அனேன) இதனுல் (ப்ரஸவிஷ்யத்வம்) வளர்ச்சியடைவீர்கள்; (ஏஷ:) இது (வ:) உங்களுக்கு (இஷ்டகாம துக்) விரும்பியதை அளிக்கும் காமதேனுவாக (அஸ்து) இருக்கட்டும்.

11. (அனேன) இதனுல் (தேவான்) தேவர்களை (பாவயத) போற்றுங்கள்; (தே) அந்த (தேவா:) தேவர்கள் (வ:) உங்களை (பாவயந்து) போற்றட்டும்; (பரஸ்பரம்) ஒருவரையொருவர் (பாவயந்த:) போற்றுபவர்களாய் (பரம்) உயர்ந்த (ச்ரேய:) நன்மையை (அவாப்ஸ்யத) அடைவீர்கள்.

---

9. யஜ்ஞ:—பூஜை, தவம், யாகம், தியாகம், வேதம், விஷ்ணு.

11. இங்கு கூறியது தேவயஜ்ஞம். இதை 'உபலக்ஷணமாக'க் கொண்டு அவ்வாறே ரிஷிகள், பிதிருக்கள், மனிதர்கள், பசுபக்ஷி முதலிய ஸகல ஜீவராசிகளையும் போற்றி வாழவேண்டும் என்பது கருத்து.

इष्टान् भोगान्हि वो देवा दास्यन्ते यज्ञ-भाविताः ।
तैर्दत्ता-नप्रदायैभ्यो यो भुङ्क्ते स्तेन एव सः ॥ १२ ॥
यज्ञशिष्टाशिनः सन्तो मुच्यन्ते सर्वकिल्बिषैः ।
भुञ्जते ते त्वघं पापा ये पचन्त्यात्मकारणात् ॥ १३ ॥

இஷ்டான் போகான் ஹி வோ தேவா தாஸ்யந்தே
யஜ்ஞ-பாவிதா: |
தைர்-தத்தா-னப்ரதாயைப்யோ யோ புங்க்தே ஸ்தேன
ஏவ ஸ: ||12|| (131)
யஜ்ஞசிஷ்டாசின: ஸந்தோ முச்யந்தே ஸர்வ-கில்
பிஷை: ||
புஞ்ஜதே தே த்வகம் பாபா யே பசந்த்-யாத்மகாரணாத்
|| 13 || (132)

---

12. (தேவா:) தேவர்கள் (யஜ்ஞபாவிதா:) வேள்வியால் போற்றப்பட்டு (இஷ்டான்) விரும்பிய (போகான்) இன்பப் பொருள்களை (வ:) உங்களுக்கு (தாஸ்யந்தே) அளிப்பார்கள்; (தை:) அவர்களால் (தத்தான்) கொடுக்கப்பட்டவற்றை (ஏப்ய:) அவர்களுக்கு (அப்ரதாய) கொடுக்காமல் (ய:) எவன் (புங்க்தே) அனுபவிக்கின்றானோ (ஸ:) அவன் (ஸ்தேன: ஏவ ஹி) திருடனேயன்றோ?

13. (யஜ்ஞசிஷ்டாசின:) யக்ஞம் செய்து மிஞ்சியதை உண்ணும் (ஸந்த:) சாதுக்கள் (ஸர்வகில்பிஷை:) எல்லாப் பாவங்களினின்றும் (முச்யந்தே) விடுபடுகின்றனர்; (து) ஆனால் (யே) எவர்கள் (ஆத்ம காரணாத்) தமக்கெனவே (பசந்தி) சமைக்கின்றார்களோ (தே) அந்த (பாபா:) பாவிகள் (அகம்) பாவத்தையே (புஞ்ஜதே) உண்கின்றார்கள்.

---

13. கிருஹஸ்தர்களுக்கு ஐந்து யஜ்ஞங்கள் நித்ய கர்மங்களாக விதிக்கப் பட்டிருக்கின்றன. (1) தேவ யஜ்ஞம்—தேவ

अन्नाद्भवन्ति भूतानि पर्जन्या-दन्नसम्भवः ।
यज्ञाद्भवति पर्जन्यो यज्ञः कर्म-समुद्भवः ॥ १४ ॥ ॥१३३॥
कर्म ब्रह्मोद्भवं विद्धि ब्रह्माक्षरसमुद्भवम् ।
तस्मात् सर्वगतं ब्रह्म नित्यं यज्ञे प्रतिष्ठितम् ॥ १५ ॥ ॥१३४॥

அன்னாத்-பவந்தி பூதானி பர்ஜன்யா-தன்னஸம்பவ: |
யஜ்ஞாத்-பவதி பர்ஜன்யோ யஜ்ஞ: கர்மஸமுத்பவ:
|| 14 || (133)
கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி ப்ரஹ்மாக்ஷரஸமுத்பவம்|
தஸ்மாத் ஸர்வகதம் ப்ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்ட்டிதம் (134)

---

14. (பூதானி) பிராணிகள் (அன்னாத்) உணவி னின்று (பவந்தி) உண்டாகின்றன, (அன்னஸம்பவ:) உணவு உண்டாதல் (பர்ஜன்யாத்) மழையினின்று; (பர்ஜன்ய:) மழை (யஜ்ஞாத்) யக்ஞத்தினின்று (பவதி) உண்டாகிறது; (யக்ஞ:) யக்ஞம் (கர்ம ஸமுத்பவ:) கர்மத்தினின்று உண்டாகிறது.

15. (கர்ம) கர்மம் (ப்ரஹ்மோத்பவம்) வேதத்தி னின்று உண்டானதாக (வித்தி) அறிவாய்; (ப்ரஹ்ம)

பூஜை (2) ப்ரம்ம யஜ்ஞம்—வேதம் ஓதுதலும் ஓதுவித்தலும் (3) பித்ரு யஜ்ஞம்—முன்னோர்களைக் குறித்துத் தர்ப்பணம் (4) மனுஷ்ய யஜ்ஞம்-பசித்தோர்க்கு இரங்கி அன்னமிட்டுபசரித்தல் (5) பூத யஜ்ஞம்—ஈ எறும்புவரை எல்லா ஜீவராசிகளுக்கும் நன்மையே கருதிக் காப்பாற்றுதல்.

ஒ—எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணியிரங்கவு நின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே. (தாயுமானவர்)
'தே த்வகம் புஞ்ஜதே' என்றும் பாடம்.

14. 'யஜ்ஞாத்பவதி பர்ஜன்ய:' — ஒ — நல்லாரொருவ ருளரேல் அவர் பொருட்டெல்லார்க்கும் பெய்யும் மழை. தியாக புத்தியுடன் செய்யப்படுங் கர்மமே யாகம் அல்லது யஜ்ஞம்.

एवं प्रवर्तितं चक्रं नानुवर्तयतीह यः ।
अघायु-रिन्द्रियारामो मोघं पार्थ स जीवति ॥ १६ ॥ ॥१३५॥

ஏவம் ப்ரவர்த்திதம் சக்ரம் நானுவர்த்தயதீஹ ய: |
அகாயு-ரிந்த்ரியாராமோ மோகம் பார்த்த ஸ ஜீவதி
|| 16 || (135)

வேதமோ (அக்ஷரஸமுத்பவம்) அழிவற்ற பரம் பொருளினின்று தோன்றியது; (தஸ்மாத்) ஆகையால் (ஸர்வகதம்) எங்கும் பரவிய (ப்ரஹ்ம) வேதம் (யஜ்ஞே) யக்ஞத்தில் (நித்யம்) எப்போதும் (ப்ரதிஷ்ட்டிதம்) நிலைபெற்றுள்ளது.

16. (பார்த்த) பார்த்தா! (ய:) எவன் (இஹ) இங்கு (ஏவம்) இவ்வாறு (ப்ரவர்த்திதம்) சுழன்று வரும் (சக்ரம்) சக்கரததை (ந அனுவர்த்தயதி) பின்பற்றிச் செல்வதில்லையோ (ஸ:) அவன் (இந்த்ரியாராம:) விஷய சுகத்தைப் போற்றுபவனும் (அகாயு:) பாவத்தில் ஆயுளைப் போக்குபவனும் (மோகம்) வீணாக (ஜீவதி) வாழ்கின்றான்.

---

16. **சக்ரம்** :—யஜ்ஞம் — மழை — அன்னம் — ஜீவராசிகள் (மனிதன்)—வேதம்—யஜ்ஞம். வேதம் யஜ்ஞத்தில் தோன்றி யஜ்ஞத்தில் நிலைபெற்றிருக்கிறது. (தியாகரூபமான) யஜ்ஞமே பகவானுக்குச் சிறந்த பூஜை. யாகத்திலிருந்து தோன்றின யஜ்ஞ மூர்த்தியான ஸ்ரீ ராமன் உலகுக்கு வழி காட்டத் தியாக மூர்த்தியாய் விளங்கியது தியானிக்கத் தகும்.

உமி நீக்கிய அரிசியை விதைத்தால் அது முளைப்பதில்லை. அதுபோல தருமம் நிலைத்து வளர்வதற்குக் கிரியைகளும் சடங்குகளும் அவசியம். (ரா. கி.)

यस्त्वात्मरतिरेव स्या-दात्मतृप्तश्च मानवः ।
आत्मन्येव च संतुष्ट-स्तस्य कार्यं न विद्यते ॥१७॥ ॥१३६॥
नैव तस्य कृतेनार्थो नाकृतेनेह कश्चन ।
न चास्य सर्वभूतेषु कश्चिदर्थव्यपाश्रयः ॥ १८ ॥ ॥१३७॥

யஸ்த்-வாத்மரதி-ரேவ ஸ்யா-தாத்மத்ருப்தச்ச மானவ: |
ஆத்மன்யேவ ச ஸந்துஷ்டஸ்-தஸ்ய கார்யம் ந
வித்யதே || 17 || (136)
நைவ தஸ்ய க்ருதேனார்த்தோ நாக்ருதேனேஹ
கச்சன |
ந சாஸ்ய ஸர்வபூதேஷு கச்சிதர்த்த-வ்யபாச்ரய: ||18||

---

17. (து) ஆனல் (ய: மானவ:) எந்த மனிதன் (ஆத்மரதி: ஏவ) ஆன்மாவிலேயே இன்புற்றவனுக (ஆத்மத்ருப்தச்ச) ஆன்மாவிலேயே திருப்தியடைந்தவனுக (ஆத்மனி ஏவ) ஆன்மாவிலேயே (ஸந்துஷ்ட: ச) ஸந்தோஷத்தைப் பெற்றவனுக (ஸ்யாத்) உள்ளவனே (தஸ்ய) அவனுக்கு (கார்யம்) செய்யவேண்டிய கர்மம் (ந வித்யதே) ஒன்றும் இல்லை.

18. (தஸ்ய) அவனுக்கு (இஹ) இங்கே (க்ருதேன) ஒரு கர்மத்தைச் செய்ததால் (அர்த்த:) பயன்

---

17. ஒ—யாவானர்த்த உதபானே—(கீதை 2-46.)
கங்கைக் கரையிலுள்ளவன் கிணறு தேடுவானேன்? (ரா. கி.)
'வேண்டார்கள் கன்மம் விமலனுக்காட்பட்டோர்
வேண்டார்கள் கன்ம மதிலிச்சையற்றேர்' (திருமந்திரம்)
'வேண்டுதல் வேண்டாமையிலா னடிசேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பையில' (திருக்குறள்)

18. கருமத் தொடர்பு முற்றும் நீங்கிய நிலை ஒன்று உண்டு என்பதும் அந்நிலை எய்தினல் இங்கேயே முக்தி என்பதும் துணிபு.

ஒ—ஜ்ஞாநாம்ருதேன த்ருப்தஸ்ய க்ருதக்ருத்யஸ்ய யோகின:|
ந சாஸ்தி கிஞ்சித் கர்த்தவ்யம் அஸ்திசேந் ந ஸ தத்வவித் ||
—உத்தரகீதை 1.23

तस्मा-दसक्तः सततं कार्यं कर्म समाचर ।
असक्तो ह्याचरन् कर्म परमाप्नोति पूरुषः ॥ १९ ॥ ॥ १३८ ॥
कर्मणैव हि संसिद्धि-मास्थिता जनकादयः ।
लोकसंग्रह-मेवापि संपश्यन् कर्तु-मर्हसि ॥ २० ॥ ॥ १३९ ॥

தஸ்மா-தஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர |
அஸக்தோ ஹ்யாசரன் கர்ம பரமாப்னோதி பூருஷ:
|| 19 || (138)
கர்மணைவ ஹி ஸம்ஸித்தி-மாஸ்திதா ஜனகாதய: |
லோகஸங்க்ரஹ-மேவாபி ஸம்பச்யன் கர்த்து-மர்ஹஸி
|| 20 || (139)

(ந) இல்லை ; (அக்ருதேன) ஒன்றைச் செய்யாததாலும் (கச்சன) எப்பயனும் (ந ஏவ) இல்லைதான் ; (அஸ்ய) இவனுக்கு (ஸர்வபூதேஷு) எல்லாப் பொருளிலும் (அர்த்தவ்யபாச்ரய: ச) பயனைக் கருதி நாடத்தகுந்தது (ந கச்சித்) ஒன்றும் இல்லை.

19. (தஸ்மாத்) ஆகையால் (அஸக்த:) பற்றற்ற வனாக (ஸததம்) எப்போதும் (கார்யம் கர்ம) செய்ய வேண்டிய கர்மத்தை (ஸமாசர) செவ்வனே செய் ; (ஹி) ஏனெனில் (அஸக்த:) பற்றில்லாமல் (கர்ம) கர்மத்தை (ஆசரன்) அனுஷ்டித்து (பூருஷ:) புருஷன் (பரம்) உயர்நலத்தை (ஆப்னோதி) எய்துகிறான்.

20. (ஜனகாதய:) ஜனகன் முதலானோர்கள் (கர்மணா ஏவ) கர்மத்தாலேயே (ஸம்ஸித்திம்) உயர்ந்த

---

20. லோகஸங்க்ரஹம் — உலகத்தை நல்வழிப் படுத்தி அதனால் வேற்றுமைகளைப் போக்கி ஒற்றுமையை வளர்ப்பது.

ஒ—உலக வாழ்க்கையிலிருந்து கொண்டே ஆத்ம ஞானத்தைப் பெற்றவர்க்கு உதாரணமாக ஜனங்கள் எப்போதும் ஜனக மஹாராஜரைச் சொல்லுகின்றனர். மானிட ஜீவிய சரித்திரம்

यद्यदाचरति श्रेष्ठ-स्तत्तदेवेतरो जनः।
स यत्प्रमाणं कुरुते लोक-स्तदनुवर्तते ॥ २१ ॥ ॥ १४० ॥

யத்ய-தாசரதி ச்ரேஷ்ட்டஸ்-தத்ததேவேதரோ ஜன: |
ஸ யத் ப்ரமாணம் குருதே லோகஸ்-ததனுவர்த்ததே
|| 21 || (140)

சித்தியை (ஆஸ்திதா: ஹி) அடைந்தனர் அன்றோ! (அபி) மேலும் (லோகஸங்க்ரஹம்) உலகை நல்வழிப் படுத்துதலை (ஸம்பச்யன்) கருதியும் (கர்த்தும் அர்ஹஸி ஏவ) கர்மத்தைச் செய்தற்கே உரியவனாகிறாய்.

21. (ச்ரேஷ்ட்ட:) பெரியோன் (யத் யத்) எது எதை (ஆசரதி) அனுஷ்டிக்கிறானோ (தத் ததேவ) அதனையே (இதர:) ஏனைய (ஜன:) ஜனங்களும்—பின் பற்றுகின்றனர். (ஸ:) அவன் (யத்) எதை (ப்ரமாணம்) மதிப்புள்ளதாக (குருதே) செய்கிறானோ (தத்) அதை (லோக:) உலகம் (அனுவர்த்ததே) பின்பற்றுகிறது.

முழுவதிலும் இந்த உதாரணம் ஒன்றேதான் காணப்படுகிறது. நீ உலகில் இருந்துகொண்டே ஜனகரைப் போல் இருப்பதாக நினைத்து ஏமாந்துவிடாதே. பல மக்களைப் பெறுவதாலேயே பலருக்கு 'ஜனகர்' (பிதா) எனும் பெயர் பொருத்தமாகும்; ஜனகரைப் போன்று ஞானம் பெற்றதாலன்று. அந்த ஞானம் அரிதினும் அரிது. (ரா. கி.)

ஜனகாதய :—இக்ஷ்வாகு, ரகு, திலீபன், அச்வபதி, ப்ரஹ்லாதன், அம்பரீஷன் முதலியவர்கள்.

ஓ—விவேகீ ஸர்வதா முக்த: குர்வதோ நாஸ்தி கர்த்ருதா ।
அலேபவாத-மாச்ரித்ய ஶ்ரீக்ருஷ்ண-ஜநகௌ யதா ||
(ஆனந்தகிரி: கட. உப. 2.19.

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किञ्चन ।
नानवाप्त-मवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥ २२ ॥ ॥ १४१ ॥
यदि ह्यहं न वर्तेयं जातु कर्म-ण्यतन्द्रितः ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥ २३ ॥ ॥ १४२ ॥

ந மே பார்த்தாஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சன |
நாநவாப்த-மவாப்தவ்யம் வர்த்த ஏவ ச கர்மணி || 22 ||

யதி ஹ்யஹம் ந வர்த்தேயம் ஜாது கர்மண்-யதந்த்ரித:
மம வர்த்மானுவர்த்தந்தே மனுஷ்யா: பார்த்த ஸர்வச: || 23 || (142)

---

22. (பார்த்த) பார்த்தா! (கர்த்தவ்யம்) செய்ய வேண்டிய கர்மம் (மே) எனக்கு (திரிஷுலோகேஷு) மூவுலகிலும் (கிஞ்சன) ஒரு சிறிதும் (ந அஸ்தி) இல்லை; (அநவாப்தம்) அடையப்படாததாய் (அவாப்தவ்யம்) இனி அடைதற்குரியதாயும் (ந) ஒன்றும் இல்லை; (ச) எனினும் (கர்மணி) கர்மத்தில் (வர்த்தே ஏவ) முயன்று கொண்டே இருக்கிறேன்.

23. (பார்த்த) பார்த்தா! (அஹம்) நான் (ஜாது) எப்போதும் (அதந்த்ரித:) அயர்வின்றி (கர்மணி) கர்மத்

---

22. ஒ—"ஆக்கியளித்துத் துடைக்கும்—தொழில் அத்தனை வைத்தும் எள்ளத்தனையேனும் தாக்கற நிற்கும் சமர்த்தன் — உள்ள சாக்ஷியைச் சிந்திக்கத் தக்கது தோழி" (தாயுமானவர்).

13—வது நாள் யுத்தத்தில் கிருஷ்ணன் பிள்ளைகளை துரியோதனன் கொன்ருன். கிருஷ்ணன் துக்கிக்கவில்லை.

ஒ—"காடுவாழ் சாதியுமாகப் பெற்ருன்."
(நாச்சியார் திருமொழி 12.8).

उत्सीदेयु-रिमे लोका न कुर्यां कर्म चेदहम् ।
सङ्करस्य च कर्ता स्या-मुपहन्या-मिमाः प्रजाः ॥ २४ ॥ ॥१४३॥

உத்ஸீதேயு-ரிமே லோகா ந குர்யாம் கர்ம சேதஹம் |
ஸங்கரஸ்ய ச கர்த்தா ஸ்யா-முபஹன்யா-மிமா: ப்ரஜா:
|| 24 || (143)

தில் (யதி ந வர்த்தேயம்) முயலாமற் போனால், (ஹி) நிச்சயமாக (மனுஷ்யா:) மனிதர்கள் (மம) என்னுடைய (வர்த்ம) நெறியை (ஸர்வச:) எவ்வகையினும் (அனு வர்த்தந்தே) பின் தொடர்வர்.

24. (அஹம்) நான் (கர்ம) கர்மத்தை (ந குர்யாம் சேத்) செய்யாமற் போனால் (இமே லோகா:) இவ்வுலகங்கள் (உத்ஸீதேயு:) அழிந்து போம். (ச) மேலும் (ஸங்கரஸ்ய) கலக்கத்திற்கும் — ஜாதிக் குழப்பத்திற்கும் — (கர்த்தா ஸ்யாம்) கர்த்தா ஆவேன்; (இமா: ப்ரஜா:) இந்த ஜனங்களை (உபஹன்யாம்) அழித்தவனும் ஆய்விடுவேன்.

---

23. ஒ—திலகமண் தோயவையன் திருவடி வணங்கிப் பின்னர்
நிலவு மெய்ப்புளகம் போர்த்து நிரம்புறத் தழுவிக்
கொண்டான்
குலமறைத் தலைவனென்றுங் கூர்ந்தமெய் நட்பனென்றும்
மலர் தலையுலகங் கூறும் வாய்மை காத்தருளினனே.
(குசேலோபாக்யானம்.)

ஒ—'ஆசாரப்ரபவோ தர்மோ தர்மஸ்ய ப்ரபு-ரச்யுத:'
(விஷ்ணுஸஹஸ்ரநாமம்.)

24. 'ஸங்கரஸ்ய ச கர்த்தா ஸ்யாம்'—அர்ஜுனன் பயந்து கூறிய 'ஜாயதே வர்ண ஸங்கர:' என்ற சொல்லுக்கு இங்கே விடை காணப்படுகிறது.

सक्ताः कर्म-ण्यविद्वांसो यथा कुर्वन्ति भारत ।
कुर्या-द्विद्वां-स्तथासक्त-श्चिकीर्षु-र्लोकसंग्रहम् ॥ २५॥ ॥ १४४ ॥
न बुद्धिभेदं जनये-दज्ञानां कर्मसङ्गिनाम् ।
जोषयेत् सर्वकर्माणि विद्वान् युक्तः समाचरन् ॥ २६ ॥ ॥१४५॥

ஸக்தா: கர்மண்-யவித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத |
குர்யாத் வித்வாம்ஸ்-ததாஸக்தச்-சிகீர்ஷுர்-லோக
ஸங்க்ரஹம் || 25 ||

ந புத்திபேதம் ஜனயே-தஜ்ஞானும் கர்மஸங்கினும் |
ஜோஷயேத் ஸர்வகர்மாணி வித்வான் யுக்த:
ஸமாசரன் || 26 || (145)

---

25. (பாரத) பாரதா! (கர்மணி) கர்மத்தில் (ஸக்தா:) பற்றுள்ள (அவித்வாம்ஸ:) பாமரர் (யதா) எவ்வாறு (குர்வந்தி) செய்கின்றனரோ (ததா) அவ்வாறே (வித்வான்) ஞானியும் (லோக ஸங்க்ரஹம்) உலகை நல்வழிப்படுத்துவதை (சிகீர்ஷு:) செய்ய விரும்பி (அஸக்த:) பற்றில்லாமல் (குர்யாத்) கர்மம் செய்தல் வேண்டும்.

26. (கர்மஸங்கினும்) கர்மத்தில் பற்றுள்ள (அஜ்ஞானும்) அவிவேகிகளிடம் (புத்திபேதம்) புத்தி மாருட்டத்தை (ந ஜனயேத்) உண்டாக்கக் கூடாது;

---

25. ஒ—'கடிக்காதே; ஆனல் உன்னை இம்சிக்க வந்தவரைக் கண்டு சீறு' என்று ஒரு நல்ல பாம்புக்குச் சாது செய்த உபதேசம் சிந்திக்கத் தக்கது. (ரா. கி.)

ஞானிகளிடத்தும் ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் கோபங் தாபம் தோன்றலாம். ஆனல் அது நீர் வடுப்போன்று மறைந்து போம். அவர்களுக்கும் பிறர்க்கும் அது துன்பம் செய்யாது.

அவித்வான்—கர்மபல காமி; வித்வான்—கர்மபல தியாகி.

26. உ-ம். குழந்தைகள் பொம்மை வைத்து விளையாடுதல் அவர்கள் அறிவு வளர்ச்சிக்கவசியம் என்று உணர்ந்து பெரியோர்

प्रकृतेः क्रियमाणानि गुणैः कर्माणि सर्वशः ।
अहङ्कार-विमूढात्मा कर्ताहमिति मन्यते ॥ २७ ॥ ॥ १४६ ॥

ப்ரக்ருதே: க்ரியமாணானி குணை: கர்மாணி ஸர்வச: |
அஹங்கார-விமூடாத்மா கர்த்தாஹமிதி மன்யதே
|| 27 || (146)

(வித்வான்) அறிவாளி (யுக்த:) ஸமபுத்தியுடன் கூடினவனாய் (ஸர்வ கர்மாணி) எல்லாக் கருமங்களேயும் (ஸமாசரன்) தான் அனுஷ்டித்து, (ஜோஷயேத்) பிறரையும் அக் கருமங்களில் கூட்டி வைக்கவேண்டும்.

27. (ப்ரக்ருதே:) பிரகிருதியின் (குணை:) குணங்களால் (ஸர்வச:) எங்கும் (கர்மாணி) கர்மங்கள் (க்ரியமாணானி) செய்யப்படுகின்றன; (அஹங்கார-விமூடாத்மா) அகங்காரத்தால் அறிவிழந்தவன் (அஹம்) தான் (கர்த்தா இதி) செய்பவன் என்று (மன்யதே) நினைக்கிருன்.

அதைத் தடுக்கக் கூடாது. குழந்தைகளுக்குப் பொம்மையும் வாங்கிக் கொடுத்துத் தாமும் சேர்ந்து விளையாடி உத்ஸாகப்படுத்துதலே அழகு.

ஜோஷயேத்—'யோஜயேத்' என்றும் பாடம்.

27. "ப்ரக்ருதே......" குழந்தைகள் அழுவதும், சிரிப்பதும், உண்பதும், உறங்குவதும் போலும்.

அலைகளும், சாரலும், நுரையும், ஸமுத்திரத்தில் தோன்றுவது போலும்.

குணகர்ம விபாகம்—ஸத்வம், ரஜஸ், தமஸ் எனும் முக்குணங்களின் இயக்கததால் ஏற்படும் வெவ்வேறுன செயல்களின் பாகுபாடு. (அத். 14. குணத்ரய விபாகயோகம் இதை விரிவாய்க் கூறும்.)

'நான் கர்த்தா' என்ற எண்ணம் உன் மனத்திலிருந்தால் நீ ஒரு போதும் ஈசுவரனைக் காணமாட்டாய்.

तत्त्ववित्तु महाबाहो गुण-कर्म-विभागयोः ।
गुणा गुणेषु वर्तन्त इति मत्वा न सज्जते ॥ २८ ॥ ॥ १४७ ॥

प्रकृते र्गुण-संमूढाः सज्जन्ते गुणकर्मसु ।
तानकृत्स्नविदो मन्दान् कृत्स्नविन्न विचालयेत् ॥२९॥ ॥१४८॥

தத்வவித்து மஹாபாஹோ குணகர்மவிபாகயோ:
குணு குணேஷு வர்த்தந்த இதி மத்வா ந ஸஜ்ஜதே
|| 28 || (147)

ப்ரக்ருதேர்-குணஸம்மூடா: ஸஜ்ஜந்தே குணகர்மஸு |
தானக்ருத்ஸ்னவிதோ மந்தான் க்ருத்ஸ்னவிந் ந
விசாலயேத் || 29 ||

---

28. (து) ஆனல் (மஹாபாஹோ) தோள்வலி படைத்தோனே! (குணகர்ம - விபாகயோ:) குண கர்மங்களின் பாகுபாடுகளில் (தத்வவித்) உண்மை யுணர்ந்தவன் (குணு:) ஐம்பொறி வடிவான குணங்கள் (குணேஷு) ஐம்புலன் வடிவான பொருட்களில் (வர்த்தந்தே) இயங்குகின்றன (இதி) என்று (மத்வா) அறிந்து (ந ஸஜ்ஜதே) பற்றடைய மாட்டான்.

29. (ப்ரக்ருதே:) பிரகிருதியின் (குணஸம்மூடா:) குணத்தில் அறிவில்லாதவர்கள் (குணகர்மஸு) குணத்தொழிலில் (ஸஜ்ஜந்தே) பற்றடைகின்றனர்; (தான்) அந்த (அக்ருத்ஸ்னவித:) குறைந்த அறிவின ராகிய (மந்தான்) மூடர்களை (க்ருத்ஸ்னவித்) நிறைந்த அறிவினன் (ந விசாலயேத்) நிலைகெடும்படி செய்யக் கூடாது.

---

29. ஒ—தே கில மந்தா: ச்ரேஷ்ட-ஜனுசாரானுவர்த்தின: கர்ம யோகா - துத்தித-மேனம் த்ருஷ்ட்வா கர்மயோகாத் ப்ரசலிதமன ஸோ பவேயு: | அத:, ச்ரேஷ்ட: ஸ்வயமபி கர்மயோகே திஷ்டன் ஆத்ம யாதாத்ம்ய ஜ்ஞானேன, ஆத்மனோऽகர்த்ருத்வ-மனுஸந்த

मयि सर्वाणि कर्माणि संन्यस्याध्यात्म-चेतसा ।
निराशी-र्निर्ममो भूत्वा युध्यस्व विगत-ज्वरः ॥३०॥ ॥१४९॥

மயி ஸர்வாணி கர்மாணி ஸங்ந்யஸ்யாத்யாத்ம-
சேதஸா ।
நிராசீர்-நிர்மமோ **பூ**த்வா யுத்யஸ்வ விகத-ஜ்வர: || 30 ||

---

30. (ஸர்வாணி) எல்லா (கர்மாணி) கர்மங்களை யும் (மயி) என்னிடத்தில் (ஸங்ந்யஸ்ய) ஸமர்ப்பணம் செய்து (அத்யாத்ம சேதஸா) தான் ஆன்மா என்ற அறிவுடன (நிராசீ:) ஆசையில்லாதவனாய் (நிர்மம:) என்னுடையது என்ற பற்றில்லாதவனாய் (**பூ**த்வா) இருந்துகொண்டு (விகதஜ்வர:) மனக்கொதிப்பு முற்றும் நீங்கியவனாய் (யுத்யஸ்வ) போர் புரிவாய்.

தான:, கர்மயோக ஏவாத்மாவலோகனே நிரபேக்ஷ ஸாதனமிதி தர்சயித்வா, தான் அக்ருத்ஸ்னவிதோ ஜோஷயேத் ||

பெரியோரைப் பின்பற்றி நடக்கும் மந்த அதிகாரிகள் கர்ம யோகத்தை விட்டு மேல் சென்றுவிட்ட சிரேஷ்டனைப் பார்த்து கர்ம யோகத்தினின்று நழுவிய மனமுடையவராவர். ஆகையால் சிரேஷ் டன் கர்மயோகத்தில் நின்று ஆத்ம ஞானம் உள்ளபடி பெற்றவனாய், ஆத்மா கர்த்தாவன்று என்பதை இடைவிடாதுணர்பவனாய், ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குக் கர்மயோகமே சிறந்த சாதனமென்று பிறர்க் குக் காட்டுபவனாய் இருந்துகொண்டு, முழுதும் உணராத அதிகாரி களைக் கர்மயோகத்தில் கூட்டுவித்தல் வேண்டும். (ஸ்ரீராமானுஜர்)

ஓ—நிச்சய-தார்ட்யா - தூர்த்வம் சாஸ்த்ர - ரக்ஷணம்—பக்தி திடப்பட்ட பின்னும் சாஸ்த்ரத்தையனுஷ்டித்துக் காட்டும் பொருட்டு. (நாரத பக்தி ஸூத்ரம்.)

30. யுத்த்யஸ்வ—எல்லாக் கர்மமும் தாழ்ந்த குணங்களுடன் போர் வடிவாகவே நிகழ்கின்றது. இப்போரின் கருவிகள் இம்சை வடிவிலும் அஹிம்சை வடிவிலும் அமையலாம். அஹிம்சை முறையே சிறந்தவன் கைக்கொள்ளும் கருவி. பகவான் பாரதப் போரில் ஆயுதம் எடுப்பதில்லையென்ற சபதம் சிந்திக்கத்தக்கது.

விகதஜ்வர:—ஆசை-மமதை, விருப்பு-வெறுப்பு, சுகம்-துக்கம் முதலிய மனக் கிளர்ச்சிகளை அறவே துறந்து.

ये मे मतमिदं नित्य-मनुतिष्ठन्ति मानवाः ।
श्रद्धावन्तो ऽनसूयन्तो मुच्यन्ते तेऽपि कर्मभिः ॥३१॥ ॥१५०॥
येत्वेत-दभ्यसूयन्तो नानुतिष्ठन्ति मे मतम् ।
सर्वज्ञान-विमूढांस्तान्विद्धि नष्टानचेतसः ॥ ३२ ॥ ॥ १५१ ॥

யே மே மதமிதம் நித்ய-மனுதிஷ்டந்தி மானவா: |
ச்ரத்தாவந்தோ ऽனஸூயந்தோ முச்யந்தே தேऽபி கர்மபி: || 31 || (150)
யேத்வேத-தப்யஸூயந்தோ நானுதிஷ்டந்தி மே மதம் |
ஸர்வஜ்ஞான-விமூடாம்ஸ்-தான் வித்தி நஷ்டா-னசேதஸ: || 32 || (151)

31. (ச்ரத்தாவந்த:) சிரத்தையுடையவர்களாகவும் (அனஸூயந்த:) பொருமையில்லாதவர்களாகவும் (யே) எந்த (மானவா:) மனிதர்கள் (மே) என்னுடைய (இதம்) இந்த (மதம்) மதத்தை (நித்யம்) எப்போதும் (அனுதிஷ்டந்தி) அனுஷ்டிக்கின்ருர்களோ (தே அபி) அவர்களும் (கர்மபி:) கருமக்கட்டினின்று (முச்யந்தே) விடுபடுகின்றனர்.

32. (து) ஆனல் (யே) எவர்கள் (மே) என்னுடைய (ஏதந்மதம்) இந்த மதத்தை (அப்யஸூயந்த:)

31. ஒ—வாழ்க்கையாகிய கப்பலின் திசையறி கருவியாகிய மனம கடவுளையே எப்போதும் நோக்கி நிற்குமாகில் ஆபத்து வராமல் காக்கும். (ரா. கி.)

ஒ—சிரத்தையில்லாதவர்களுக்கு பகவத் விஷயங்களில் விருப்பங் கிடையாது. பக்தி விஷயங்களைப் பேசும் போது இவர்கள் பொறுமையுடன் கேட்க மனமிராமல் "எப்போது திரும்பிப் போகிறது?" என்று எண்ணுவார்கள். பக்தர்கள் "கொஞ்சம் பொறு" என்ருல், "நல்லது நீங்கள் பேசிவிட்டு வாருங்கள், நாங்கள் படகில் காத்திருக்கிறேம்" என்று எழுந்து போய் விடுவார்கள். —ரா.கி.

सदृशं चेष्टते स्वस्याः प्रकृते-र्ज्ञानवानपि ।
प्रकृतिं यान्ति भूतानि निग्रहः किं करिष्यति ॥३३॥ ॥१५२॥

ஸத்ருசம் சேஷ்டதே ஸ்வஸ்யா:ப்ரக்ருதேர்-ஜ்ஞான வானபி |
ப்ரக்ருதிம் யாந்தி பூதானி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி || 33 || (152)

குறை கூறி நிந்திப்பவர்களாய் (ந அனுதிஷ்ட்டந்தி) பின்பற்றுவதில்லையோ (ஸர்வஜ்ஞான விமூடான்) நல்லறிவனைத்தும் மழுங்கியவராயும (அசேதஸ:) அவிவேகிகளாயும் உள்ள (தான்) அவர்களை (நஷ்டான்) நாசத்தை அடைந்தவர்களாய்—இப்பிறவியை வீணுக்கியவர்களாய்—(வித்தி) அறி.

33. (ஜ்ஞானவான் அபி) ஞானவானுங்கூட (ஸ்வஸ்யா:) தன்னுடைய (ப்ரக்ருதே:) இயற்கைக்கு (ஸத்ருசம்) ஒத்தபடியே (சேஷ்டதே) நடந்திடுவான்; (பூதானி) தோன்றியவையெல்லாம் (ப்ரக்ருதிம்) இயற்கையைப்பற்றி (யாந்தி) ஒழுகுகின்றன. (நிக்ரஹ:) அடக்கும் முயற்சி (கிம் கரிஷ்யதி) என்ன செய்ய வல்லது?

---

32. அஸூயை, சிரத்தை, அனுஷ்டானம் என்பன வரிசையாக மூன்று படிகள்.

சிரத்தை—17-வது ச்ரத்தாத்ரய விபாக யோகத்தில் இது செவ்வையாய் விளக்கப்படும்.

33. ப்ரக்ருதி—'பூர்வக்ருத தர்மாதர்மாதி ஸம்ஸ்கார:' (சங்கரர்)

உ-ம். சீட்டாட்டத்தில் விழும் சீட்டுப்போல் நமது பிறவி நிலையும் பிரகிருதியும். அற்பமான சீட்டைக் கொண்டும் கெட்டிக்காரன் ஆட்டத்தில் ஜயிக்கக் கூடும். அதுபோல் மதியால் விதியை வெல்லலாம்.

इन्द्रियस्ये-न्द्रियस्यार्थे रागद्वेषौ व्यवस्थितौ ।
तयोर्न वश-मागच्छे-त्तौ ह्यस्य परिपन्थिनौ ॥ ३४ ॥ ॥१५३॥
श्रेयान् स्वधर्मो विगुणः परधर्मात् स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥ ३५ ॥ ॥ १५४ ॥

இந்த்ரியஸ்யே-ந்த்ரியஸ்யார்த்தே ராகத்வேஷௌ
வ்யவஸ்திதௌ |
தயோர் ந வசமாகச்சேத் தௌ ஹ்யஸ்ய பரிபந்திநௌ
|| 34 || (153)
ச்ரேயான் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வனுஷ்ட்
டிதாத் |
ஸ்வதர்மே நிதனம் ச்ரேய: பரதர்மோ பயாவஹ: || 35 ||

---

34. (இந்த்ரியஸ்ய இந்த்ரியஸ்ய) ஒவ்வொரு இந்திரியத்தினுடைய (அர்த்தே) விஷயத்திலும் (ராகத்வேஷௌ) விருப்பு வெறுப்புக்கள் (வ்யவஸ்திதௌ) உட்புகுந்து நிற்கின்றன ; (தயோ:) அவற்றின் (வசம்) வசமாக (ந ஆகச்சேத்) செல்லுதல் கூடாது. (தௌ) அவை (ஹி) நிச்சயமாக (அஸ்ய) இவனுக்கு (பரிபந்திநௌ) நேர் விரோதிகள்.

35. (ஸு அனுஷ்டிதாத்) நன்கு அனுஷ்டிக்கப் பட்ட (பரதர்மாத்) பிறனுடைய தருமத்தைக் காட்டிலும், (விகுண:) குணமற்றதாயினும் (ஸ்வதர்ம:) தன்னுடைய தருமம் (ச்ரேயான்) சிறந்ததாம். (ஸ்வதர்மே)

---

34. ஒ—பாம்புக்கு முன் தவளை கூத்தாடலாம் ; ஆனால் பாம்பு தவளையை விழுங்காமல் பார்த்துக்கொள். படகு தண்ணீரில் இருக்கலாம் ; ஆனால் படகுக்குள் தண்ணீர் வரக்கூடாது. (ரா. கி.)

வாழ்க்கையாகிற ஆற்றின் இழுப்பு முன்வினை ; சுழிகளும் பாறைகளும் ராகத்வேஷங்கள் ; அவைகளிடம் அகப்படாமல் ஸ்வ தருமம் எனும் படகில் ஏறச் சொல்லுகிறார் பகவான்.

தன்னுடைய தருமத்தில் (நிதனம்) சாவும் (ச்ரேய:) நலமாகும்; (பரதர்ம:) பிறனுடைய தருமம் (பயாவஹ:) பயத்தைத் தருவதாகும்.

ஒ—அஞ்சு மடக்கடக்கென்ப ரறிவிலர்
அஞ்சுமடக்கு மமரரு மங்கிலை
அஞ்சுமடக்கி னசேதனமா மென்றிட்டு
அஞ்சுமடக்கா அறிவறிந்தேனே. (திருமந்திரம்)

தனக்கு ஏற்பட்ட கர்மாவைச் செய்கையில் இந்திரியங்களுக்கும் விஷயங்களுக்கும் கூடுதலும் பிரிதலும் ஏற்படுந்தோறும் எவ்வஸ்துவிலும் எப் பிராணியிடத்தும், விருப்பு வெறிப்பின்றி, வெற்றி தோல்வியிலும், லாப நஷ்டத்திலும், ஸம நோக்குடன் நிற்றலே யோகிக்குச் சிறந்த துணை. விருப்பும் வெறுப்புமே பெரும் பகை.

35 க்ஷத்ரியனுக்குரிய தன் கடமையைச் செய்வதை வெறுத்துப் பிரிதொரு தொழிலை ஏற்க அர்ஜுனன் விரும்பியதால் இந்த உபதேசம். மனம் விரும்பினும் வெறுக்கினும் பொருட்படுத்தாமல் கடமையில் நிலைதவருமல் நிற்பவனே சிறந்தவன்.

கேள்வி—ஸ்வதர்மம் என்ருல் என்ன ?

விடை—அவரவர் பிறந்து வசிக்கும் தேசம், காலம், ஜாதி, ஆசிரமம் முதலியவற்றை அனுசரித்து ஆங்காங்கு சாஸ்திரம் அவரவர்க்குரியதாய் விதிக்கும் கர்மம் ஸ்வதர்மம் எனப்படும். நோயாளிகளுக்கும் நோயற்றவர்களுக்கும் தேசம், காலம், வயது இவைகளையனுசரித்து வைத்திய நூல்கள் ஆஹாரத்தையும் மருந்தையும் நிர்ணயித்துக் கூறுவதுபோல் தர்மசாஸ்திரங்களும் கர்மங்களைக் கூறுவனவாகும்.

பொய், சூது, திருட்டு, இம்சை இவை எவர்க்கும் ஸ்வதர்மம் அன்று; இவை (நிஷித்தகாமா) எல்லோருக்கும் விலக்கு. ஆசையின் பூர்த்திக்காகச் செய்யப்படும் காம்ய கர்மங்களும் எவர்க்கும் கட்டாயமன்று. அத்யயனம், தானம், தவம் போன்ற நித்யகர்மங்களே ஸ்வதர்மம். மேலும் எல்லா ஜாதிக்கும் எல்லாக் காலத்துக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஈசுவர பக்தி, உண்மையுரைத்தல், அண்டியவரைக் காத்தல், தாய் தகப்பன் சேவை, ஐம்புலனடக்கம், பிரம்மச்சரியம், அஹிம்சை, சந்தோஷம், தயை, பொறுமை, சுத்தம் இவையெல்லாம் முக்கியமான ஸ்வதர்மம்.

ஸ்வதர்மத்தில் சாவும் நலம்—உயிர் போவதாயிருந்தாலும் தர்மத்தைக் கைவிடலாகாது.

உ-ம். சிபி, பிரஹ்லாதன், அரிச்சந்திரன்.

अर्जुन उवाच—
अथ केन प्रयुक्तोऽयं पापं चरति पूरुषः ।
अनिच्छन्नपि वार्ष्णेय बलादिव नियोजितः ॥ ३६ ॥ ॥१५५॥

அர்ஜுன உவாச—
அத கேன ப்ரயுக்தோऽயம் பாபம் சரதி பூருஷ: |
அனிச்சன்னபி வார்ஷ்ணேய பலாதிவ நியோஜித:|| 36

அர்ஜுனன் கூறியது—

36. (வார்ஷ்ணேய) விருஷ்ணி குலத்தோனே—கிருஷ்ணு! (அத) ஆயின், (அனிச்சன்னபி) விருப்பம் இல்லாதவனுயினுங்கூட (அயம்) இந்த (பூருஷ:) புருஷன் (கேன) எதனுல் (ப்ரயுக்த:) ஏவப்பட்டு (பலாத்) பலாத்காரமாக (நியோஜித: இவ) புகுத்தப் பட்டவன்போல் (பாபம்) பாவத்தை (சரதி) செய் கிருன்?

ஒ—விவேகானந்தர்: கர்மயோகம். அத். 3.

ஒ—தர்மம் நித்யமானது, சுகதுக்கம் அநித்யமானது; ஜீவன் நித்யமானவன், ஜீவனம் அநித்யமானது; ஆகையால் காமத் தாலும், பயத்தாலும், லோபத்தாலும், உயிரைக் காப்பதற்காகவுங் கூட தர்மத்தைக் கைவிடக்கூடாது. (ம. பா. ஸ்வர்க்கா. 5-63.)

உ-ம். தேள் ஒன்று கங்கையில் மிதந்து சென்றது. ஒரு ஸந்நியாஸி அதை வெளியே எடுத்துவிட முயன்ருர். அவரைக் கொட்டிவிட்டு மறுபடி நீரில் விழுந்தது. பல முறை இப்படி நிகழ்ந்தது. இதைக் கண்டவர்கள அது கொட்டுவது வலிக்க வில்லையா? ஏன் அதை எடுக்கவேண்டும்? என்றனர். 'உயிர் போகுந் தருவாயிலும் அது தன் ஸ்வபாவத்தை விடவில்லை. நான் மட்டும் அதன் கொட்டுவலிக்குப் பயந்து ஏன் என் ஸ்வதர்மமாகிய ஜீவகாருண்யத்தை விடவேண்டும்?' என்ருர் ஸந்நியாஸி.

36. நோயாளி அபத்தியம் செய்வது போல், தவறென்த் தெரிந்தும் மனிதன் அதர்மம் செய்கிருன். பகவான் இவ்வாறு மனிதனைப் பாவத்தில் புகுத்துகிருனு? அல்லது அது மனிதனுடைய பிராரப்தமா? அல்லது இவ்விரண்டுமின்றி வேறு காரணமா என்பது கேள்வி.

श्रीभगवानुवाच—

काम एष क्रोध एष रजोगुण-समुद्भवः ।
महाशनो महापाप्मा विद्धयेन-मिह वैरिणम् ॥३७॥ ॥१५६॥

ஸ்ரீபகவானுவாச—

காம ஏஷ க்ரோத ஏஷ ரஜோகுண-ஸமுத்பவ: |
மஹாசனோ மஹாபாப்மா வித்த்யேந-மிஹ வைரிணம்
|| 37 || (156)

ஸ்ரீபகவான் கூறியது—

37. (ஏஷ:) இது (காம:) காமம்; (ஏஷ:) இது (க்ரோத:) கோபம்; (ரஜோகுண ஸமுத்பவ:) ரஜோ குணத்தில் உதித்தது; (மஹாசன:) பெருந்தீனி வேண்டுவது; (மஹாபாப்மா) கொடிய பாவத்தை விளைவிப்பது; (இஹ) இவ்வுலகில் (ஏனம்) இதை (வைரிணம்) சத்துருவாக (வித்தி) அறிவாய்.

---

37. **காமம் க்ரோதம்**—ஒ—ஒரு மனிதன் ஒரு நாயைச் சீராட்டி வந்தான். அதைப் பார்த்த ஒரு சாது, நாய்க்கு அப்படி இடங்கொடுக்கலாகாது, என்ருர். அன்று முதல் அத்துடன் உறவை விட்டான். ஆனல் அதை உணராத நாய் வந்து மடியில் ஏறும். பல முறை கண்டிக்கப்பட்ட பிறகு தான் அது மடியில் ஏறுவதை நிறுத்திற்று. உன் மனம் அப்படிப்பட்ட நாய் (ரா. கி.)

ஒ—யமஸ்ய காமஸ்ய ச தாரதம்யம் விசார்யமாணே மஹதஸ்தி
[லோகே |
ஹிதம் கரோத்யஸ்ய யமோऽப்ரிய:ஸன் காமஸ்த்வனர்த்தம்
[குருதே ப்ரிய:ஸன் ||

யமனுக்கும் காமனுக்கும் விசாரிக்குமிடத்து மிகுந்த தாரதம்யம். யமன் பிரியமற்றவனைப் போலிருந்து இவனுக்கு நன்மையைச் செய்கிருன்; காமன் பிரியமுள்ளவனைப் போலிருந்து தீமையைச் செய்கிருன். (சங்கரர்.)

இவனைத் தீமையில் புகுத்துவது பிராரப்தமுமன்று; பகவத் சங்கல்பமுமன்று. பிராரப்தம் முன் வினையின் அனுபவத்துடன் முடிவுறும்; பகவான் பரமதயாளுவாகையால் பாவத்தில் செலுத்த

धूमेनाव्रियते वह्नि-र्यथादर्शो मलेन च ।
यथोल्बेनावृतो गर्भ-स्तथा तेनेदमावृतम् ॥ ३८ ॥ ॥ १५७ ॥
आवृतं ज्ञान-मेतेन ज्ञानिनो नित्यवैरिणा ।
कामरूपेण कौन्तेय दुष्पूरेणानलेन च ॥ ३९ ॥ ॥ १५८ ॥

தூமேனுவ்ரியதே வஹ்னிர்-யதாதர்சோ மலேன ச |
யதோல்பேனுவ்ருதோ கர்ப்பஸ்-ததா தேனேத-
மாவ்ருதம் || 38 || (157)
ஆவ்ருதம் ஜ்ஞான-மேதேன ஜ்ஞானினே
நித்யவைரிணு |
காமரூபேண கௌந்தேய துஷ்பூரேணுனலேன ச ||39||

38. (யதா) எப்படி (வஹ்னி:) தீயானது (தூமேன) புகையால் (ஆவ்ரியதே) மறைக்கப்படுகிறதோ; (ஆதர்ச:) கண்ணடி (மலேன) அழுக்கால் —எப்படி மறைக்கப்படுகிறதோ, (யதா) எப்படி (கர்ப்ப:) கருவானது (உல்பேன ச) கருப்பையாலும் (ஆவ்ருத:) மறைக்கப்படுகிறதோ; (ததா) அப்படியே (தேன) அக்காமத்தால் (இதம) இந்த ஞானம் (ஆவ்ருதம்) மறைக்கப்பட்டிருக்கிறது.

39. (கௌந்தேய) குந்தீபுத்ரா! — அர்ஜுனு! (ஜ்ஞானின:) ஞானியர்க்கு (நித்யவைரிணு) என்றும்

மாட்டார். காமமே மனிதனைப் பாவத்தில் பலாத்காரமாய்க் கவர்ந்து செல்வது.

ஒ—காம: க்ரோதச்ச லோபச்ச தேஹே திஷ்டந்தி தஸ்கரா: ||
ஞானரத்னுபஹாராய தஸ்மாஜ்ஜாக்ரத ஜாக்ரத ||

38. மூன்று உபமானங்களும் படிப்படியாக ஸாத்விக, ராஜஸ, தாமஸ குணங்களால் ஏற்படும் ஆவரணங்களைக் குறிப்பனவாம்; ஒன்றைவிட ஒன்று தடித்தது.

39. ஒ—ந ஜாது காம: காமானு-முபபோகேன சாம்யதி |
ஹவிஷா க்ருஷ்ண-வர்த்மேவ பூய ஏவாபிவர்த்ததே ||

इन्द्रियाणि मनोबुद्धि-रस्याधिष्ठान-मुच्यते ।
एतै-र्विमोहयत्येष ज्ञान-मावृत्य देहिनम् ॥ ४० ॥ ॥ १५९ ॥

இந்த்ரியாணி மனோ-புத்தி ரஸ்யாதிஷ்ட்டான-
முச்யதே |
ஏதைர்-விமோஹயத்யேஷ ஜ்ஞான-மாவ்ருத்ய
தேஹினம் || 40 ||

பகையாயும் (காமரூபேண) காமம் என்னும் உருவம் உடையதாயும், (துஷ்பூரேண ச) பூர்த்தி செய்விக்க இயலாததாயும் உள்ள (ஏதேன அனலேன) இந்த ஆசைத் தீயால் (ஜ்ஞானம்) அறிவானது (ஆவ்ருதம்) மறைக்கப்பட்டிருக்கிறது.

40. (இந்த்ரியாணி) இந்திரியங்கள் (மன:) மனம் (புத்தி:) புத்தி என்னும் இவை (அஸ்ய) இதற்கு (அதிஷ்ட்டானம்) இருப்பிடம் என்று (உச்யதே) சொல்லப்படுகிறது. (ஏஷ:) இது (ஏதை:) இவற்றால் (ஜ்ஞானம்) அறிவை (ஆவ்ருத்ய) மறைத்து (தேஹினம்) உடலில் உறையும் ஜீவனை (விமோஹயதி) பல விதமாய் மயக்குகின்றது.

---

40. குறிப்பு—மனத்தில் பூர்வகர்ம வாசனையாகிய வித்தினின்று முதன் முதலில் முளைபோல் கிளம்புவது வ்ருத்தி (காமக்ரோதம்); பின் மரம்போல் வளர்ந்த நிலையில் அதுவே ப்ரவ்ருத்தி (ராகத்வேஷம்). முளையிலேயே கிள்ளவேண்டும்: விருத்தியையே நாசம் செய்ய வேண்டும்.

ஒ—யோக: சித்தவ்ருத்தி-நிரோத:—யோகம் என்பது சித்த விருத்தியை அடக்குதல். (பதஞ்ஜலி.

तस्मात्त्व-मिन्द्रिया-ण्यादौ नियम्य भरतर्षभ ।
पाप्मानं प्रजहि ह्येनं ज्ञानविज्ञान-नाशनम् ॥ ४१ ॥ ॥१६०॥

தஸ்மாத் த்வமிந்த்ரியாண்-யாதௌ நியம்ய பரதர்ஷப |
பாப்மானம் ப்ரஜஹி ஹ்யேனம் ஜ்ஞானவிஜ்ஞான-
நாசனம் || (160)

---

41. (பரதர்ஷப) பரதவம்சத்திற் சிறந்தோனே! —அர்ஜுனா! (தஸ்மாத்) ஆகையால் (த்வம்) நீ (ஆதௌ) முதலில் (இந்த்ரியாணி) இந்திரியங்களை (நியம்ய) வசப்படுத்திக் கொண்டு (ஜ்ஞான விஜ்ஞான நாசனம்) அறிவையும் அனுபூதியையும் நாசம் செய்வதும் (பாப்மானம்) பாவத்தில் சேர்ப்பதும் ஆகிய (ஏனம்) இதை (ஹி) தவறுமல் (ப்ரஜஹி) கொன்று ஒழிப்பாய்.

---

41. ஆதௌ — ஆரம்பத்திலேயே — ஒ — ஞானத்தையும், பக்தியையும் முதலில் சம்பாதித்துக்கொண்டு உலகில் பிரவேசிக்க வேண்டும். கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில் பிரவேசிக்குமுன் பாதரக்ஷைகளை அணிந்துகொள்ள வேண்டும். (ரா. கி.)

இளமையிலேயே மனம் இறைவனிடம் செலுத்தப்பட வேண்டும்.

ஆழமுள்ள கிணற்றின் விளிம்பில் நிற்பவன் அதனுள் விழுந்து விடாமல் இருப்பதற்காக ஜாக்கிரதையாக இருப்பதைப்போல உலகத்தின ஆசாபாசங்களில் விழாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். விழுந்து விட்டால் காயம் படாமலும், அழுக்குப்படாமலும் வெளிவருவது அசாத்தியம். (ரா. கி.)

கேள்வி—இந்திரியங்களை எவ்வுபாயத்தால் வசப்படுத்தல் கூடும்?

விடை—அப்பியாசத்தாலும் வைராக்கியத்தாலும் (6-35). சுகமெனக் கருதுவதெல்லாம் அநித்யமாயும் துக்கத்தில் முடிவதாயும் உள்ளதெனக் கண்டு இவ்வுலக இன்பங்களையும் வேறுலக இன்பங்களையும், உமிழ்ந்ததை மீண்டும் விழுங்க விரும்பாதவாறு வெறுத்தல் **வைராக்கியம்.** பகவானுடைய நாமம், குணம், ரூபம், சரித்திரம் இவற்றைக் கேட்டல், சிந்தித்தல், பேசுதல், லோக ஸங்க்ரஹத்திற்காகக் கர்மங்களைச் செய்து பகவதர்ப்பணம் செய்தல், இவை

इन्द्रियाणि पराण्याहु-रिन्द्रियेभ्यः परं मनः ।
मनसस्तु परा बुद्धियों बुद्धेः परतस्तु सः ॥ ४२ ॥ ॥ १६१ ॥

இந்த்ரியாணி பராண்யாஹுˉ-ரிந்த்ரியேப்ய: பரம் மன: |
மனஸஸ்து பரா **புத்திர்** யோ **புத்தே**: பரதஸ்து ஸ:|| 42

---

42. (இந்த்ரியாணி) இந்திரியங்கள் (பராணி) மேலானவை என்று (ஆஹுˉ:) கூறுவர்; (இந்த்ரியேப்ய:) இந்திரியங்களினும் (பரம்) மேலானது (மன:) மனம்; (மனஸஸ்து) மனத்தினும் (பரா) மேலானது (**புத்தி**:) புத்தி; (ய:) எவன் (**புத்தே**:) புத்திக்கும் (பரதஃது) அப்பால் உள்ளவனே அவன் (ஸ:) ஆத்மா.

அப்பியாசம். இவ்வுபாயங்களால் இந்திரியங்களையும் மனத்தையும் வசப்படுத்தலாம்.

ஜ்ஞான விஜ்ஞான நாசனம்—இங்கு நாசம் செய்தல் என்ருல் மறைத்தல் என்றுதான் பொருள். (38, 40.) ஏனெனில் ஞானத்தை முற்றும் அழிக்கும் சக்தி காமத்துக்கு இல்லை. காமம் நீங்கிய போது, மேகத்தினின்று வெளிவந்த சூரியனைப்போல் ஞானம் மறுபடி நன்கு பிரகாசிக்கின்றது.

42 "ஸ:" அவன் என்றதைக் காமத்திற்கு அன்வயிக்க வேண்டும். புத்திமானையும் காமம் ஜயிக்கக் கூடியது.

(ராமானுஜர்).

ஒ—கட. உப. 1-3 : 3. 4. (ஆத்மானம் ரதினம் வித்தி.)

ஆத்மாவை யஜமானனாகவும், சரீரத்தைத் தேராகவும், புத்தியை ஸாரதியாகவும், மனதைக் கடிவாளமாகவும் அறி. இந்திரியங்களைக் குதிரைகளென்றும், விஷயங்களை மார்க்கமென்றும், சரீரம், இந்திரியங்கள், மனம் இவற்றுடன் கூடிய ஆத்மாவை ஸம்ஸாரி (போக்தா) என்றும் விவேகிகள் கூறுகிருர்கள்.

கேள்வி—2-60ல் இந்திரியக் கூட்டம் மனதைக்கூட பலாத்காரமாய் இழுத்துச் செல்லும் வலிமையுடையதாய்க் கூறப்பட்டது. இங்கு மனம் இந்திரியக் கூட்டத்தைவிட மேலானதாய்க் கூறப்பட்டது. இது எங்ஙனம்?

விடை—தேரில் கட்டின குதிரை வசப்படாவிட்டால் கடிவாளத்தையும் ஸாரதியையும் இழுத்துக்கொண்டு செல்லும். உண்மை

एवं बुद्धेः परं बुद्ध्वा संस्तभ्यात्मानमात्मना ।
जहि शत्रुं महाबाहो कामरूपं दुरासदम् ॥ ४३ ॥ ॥ १६२ ॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादे कर्मयोगो नाम
तृतीयोऽध्यायः ॥

ஏவம் புத்தே: பரம் புத்த்வா ஸம்ஸ்தப்யாத்மான-
மாத்மனு |
ஜஹி சத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம்
|| 43 || (162)

இதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யா
யாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணர்ஜுனஸம்வாதே
கர்மயோகோ நாம த்ருதீயோऽத்யாய: ||

---

43. (மஹாபாஹோ) தோள்வலி படைத்த அர்ஜுன! (ஏவம்) இவ்வாறு (புத்தே:) புத்திக்கும் (பரம்) மேலானதை (புத்த்வா) அறிந்து (ஆத்மனு) நிச்சயரூபமான புத்தியால் (ஆத்மானம்) சஞ்சலரூபமான மனத்தையும் இந்திரியங்களையும் (ஸம்ஸ்தப்ய) அடக்கி நிலை நிறுத்தி (காமரூபம்) காமத்தை உருவாக உடையதும் (துராஸதம்) பிடிபடாததுமாகிய (சத்ரும்) பகையை (ஜஹி) நாசம் செய்.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திர
மாயும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும்
ஸம்பாஷணையாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத்
கீதை என்னும் உபநிஷத்தில் கர்மயோகம்
என்று பெயர் பெற்ற
மூன்ருவது அத்தியாயம் முற்றும்.

யில் கடிவாளத்தைக்கொண்டு குதிரையை ஸாரதி அடக்கி நடத்தப் பயிலுதல் வேண்டும். அது கூடும். அப்போதுதான் ஸாரதியின் மேன்மை விளங்கும்.

43. ஓ—

வாராய் நெஞ்சே உன்றன் துன்மார்க்கம் யாவையும் வைத்துக்
காராய் அடிக்கடி சுற்றுகின்றாய் ! உன்னவலமதிக் [கட்டிங்
கோராயிரம் புத்தி சொன்னாலு மோர்கிலை ; ஓ கெடுவாய் !
பாராயுனைக் கொல்லுவேன் வெல்லுவேன் அருட்பாங்கு
கொண்டே. (தாயுமானவர்.)

முதலில் அவனிடம் பக்தியைப் பெற்றுக்கொள். அப்பால் உனக்கு எல்லாம் எளிதில் கை கூடும். அவனிடம் பக்தியில்லாத கர்மம் துணையற்றதாதலால் பயன்படாது. (ரா. கி.)

ஒன்றுக்குப் பின் பூஜ்யம் சேர்த்தால் 10, ஆகிறது ; இன்னொரு பூஜ்யம் சேர்த்தால் நூறு ஆகிறது. முன் ஒன்று இல்லாத பூஜ்யத திற்கு மதிப்பில்லை. கடவுளே அந்த ஒன்று. (ரா கி.)

உண்மையில் காமத்திற்கு ஒரு சக்தியும் இல்லை. ஆத்மாவின் சக்தியால் சக்திபெற்ற புத்தி மனம் இந்திரியங்களின் சக்தியைக் கவர்ந்து சக்தியுடையதாய்த் தோன்றுவது காமம். புத்தியும் மனமும் ஆத்மாவினிடம் திரும்பும்போது காமம் சக்தியற்று மடி கின்றது.

அத்தியாய விஷயச் சுருக்கம்—

கர்மத்திலும் ஞானம் சிறந்ததாயின் என்னை ஏன் கர்மத்தைச் செய்யச் சொல்லுகிறீரென்று அர்ஜுனன் பகவானைக் கேட்டல். கர்மயோகத்துக்கும் ஞான யோகத்துக்கும் அதிகாரிகள் வேறென்னல். ஆத்ம ஞானமில்லாதவனுக்கு ஆத்மஞானத்துக்குச் சாதனமாகக் கர்மயோகத்தின் அவசியத்தைக் கூறுதல். ஆத்மஞான மெய்தியவனுக்குக் கர்மம் அனவசியமெனல். எனினும் ஞானியும் ஈசுவரார்ப்பணமாக லோக ஸங்க்ரஹத்தின் பொருட்டுக் கர்மம் செய்தல் உண்டு எனல். பயனில் இச்சையைவிட்டு ஸ்வதர்மத் தைச் செய்ய வேண்டும் என்று அர்ஜுனன் கேள்விக்கு முடிவான பதிலளித்தல்.

இச்சையில்லாவிடினும் தன் வயமின்றிப் பாவத்தில் மனிதனுக் குப் பிரவிருத்தி ஏற்படக் காரணம் யாதென்று அர்ஜுனன் கேட்டல். எல்லாக் கெடுதிக்கும் முதற்காரணம் காமம் என்றும் அந்தக் கொடும் பகையை ஆதியிலேயே இந்த்ரிய நிக்ரஹத்தாலும் இந்திரியங்கட்கப்பால் இருதயத்திலுறையும் இறைவனருளாலும் வெல்ல வேண்டுமெனல்.

முக்திநெறி யென்று மொழியு மவற் றுட்கன்மம்
சித்தி பெறு ஆடவர்க்குச் சேருமென—அத்தன்
புகன்றருளும் போதவுரை புந்தியுறக் கொள்வார்க்
ககன்றிடுமே வெவ்வினைக்கட் டாங்கு. (கீ. வெ.)

॥ चतुर्थोऽध्यायः ॥

(ज्ञानकर्मसन्न्यासयोगः)

श्रीभगवानुवाच—
इमं विवस्वते योगं प्रोक्तवा-नह-मव्ययम् ।
विवस्वान् मनवे प्राह मनुरिक्ष्वाकवे ऽब्रवीत् ॥१॥ ॥१६३॥

நான்காம் அத்தியாயம்
(ஞானகர்ம ஸங்ந்யாஸ யோகம்)

ஸ்ரீபகவானுவாச—
இமம் விவஸ்வதேயோகம் ப்ரோக்தவா-னஹமவ்யயம்|
விவஸ்வான் மனவே ப்ராஹ மனு-ரிக்ஷ்வாகவே
஽ப்ரவீத் ‖ 1 ‖ (163)

ஸ்ரீ பகவான் கூறியது—

1. (அஹம்) நான் (விவஸ்வதே) விவஸ்வானுக்கு (இமம்) இந்த (அவ்யயம்) அழிவற்ற (யோகம) யோகத்தை (ப்ரோக்தவான்) உபதேசித்தேன்; (விவஸ்வான்) விவஸ்வான் (மனவே) மனுவுக்கு (ப்ராஹ) உரைத்தார்; (மனு:) மனு (இக்ஷ்வாகவே) இக்ஷ்வாகுவுககு (அப்ரவீத்) உரைத்தார்.

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்—

இவ்வதத்தியாயம் பகவதவதார ரஹஸ்ய ஞானத்தையும் அதை யடைந்தவர் கர்மயோகத்தால் கர்ம ஸங்கியாஸத்தை எய்தும் வகையையும் தொகுத்துக் கூறுவதால், 'ஞானகர்ம ஸங்ந்யாஸ யோகம்' எனப் பெயர் பெற்றது.

கோர்வை—மூன்றுவது அத்தியாயத்தில், அனுதியான மார்க்கங்கள் ஞானயோகம், கர்மயோகம் என இரண்டெனக் கூறிக் கர்மயோகத்தை பகவான் விரித்துரைத்தார். 3. 30-ல் ஆசையும் மமதையும் விட்டுத் தனக்கர்ப்பணமாகக் கருமம் செய்யவேண்டுமென உபதேசித்தார். பகவானுடைய ஸ்வரூபத்தை எங்ஙனம் அறிதல் வேண்டும், கர்மாவை எப்படி அர்ப்பணம் செய்தல் வேண்டும் எனும் விஷயங்கள் இனி விளக்கப்படுகின்றன.

1. **விவஸ்வான்**—சூரியபகவான்; **மனு**—விவஸ்வானுடைய புத்திரஞகிய வைவஸ்வதமனு; **இக்ஷ்வாகு**—சூரியகுலத்து மூல புருஷன்.

एवं परम्परा-प्राप्त-मिमं राजर्षयो विदुः ।
स कालेनेह महता योगो नष्टः परंतप ॥ २ ॥ ॥ १६४ ॥

स एवायं मया तेऽद्य योगः प्रोक्तः पुरातनः ।
भक्तोऽसि मे सखा चेति रहस्यं ह्येत-दुत्तमम् ॥३॥ ॥१६५॥

ஏவம் பரம்பரா-ப்ராப்த-மிமம் ராஜர்ஷயோ விது: |
ஸ காலேனேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப || 2 ||
ஸ ஏவாயம் மயா தேऽத்ய யோக: ப்ரோக்த: புராதன: |
பக்தோऽஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேத-
துத்தமம் || 3 || (165)

---

2. (ஏவம்) இவ்வாறு (பரம்பரா ப்ராப்தம்) பரம்பரையாக வந்த (இமம்) இதை (ராஜர்ஷய:) ராஜரிஷிகள் (விது:) அறிந்திருந்தனர். (பரந்தப) சத்துருகளைத் தவிக்கச் செய்வோனே! (இஹ) இவ்வுலகில் (ஸ: யோக:) அந்த யோகம் (மஹதா காலேன) நாளடைவில் (நஷ்ட:) மறைந்து போயிற்று.

3. (மே) எனக்கு (பக்த: ஸகா ச) பக்தனும் நண்பனுமாக (அஸி) நீ இருக்கிருய் (இதி) என்று (ஸ:) அந்த (புராதன:) பழமையான (யோக ஏவ அயம்) யோகமே ஆகிய இது (அத்ய) இன்று (மயா) என்னுல் (தே) உனக்கு (ப்ரோக்த:) கூறப்பட்டது. (ஹி)

---

2. **ராஜ ரிஷிகள்**—பிராம்மணர்கள் வெகுவாய் ஸாங்கிய நிஷ்டை கூடி பிரம்ம ரிஷிகளானவாறு, அரசர்களிற் சிறந்தோர் இங்கு கூறிய கரும நிஷ்டையைக் கூடி ராஜரிஷிகளாயினர். அரசனுகிய அர்ஜுனன் முன்னோர்களான ராஜரிஷிகளைப் பின்பற்ற வேண்டுமென்பது கருத்து.

3. **ரஹஸ்யம்**—விலையுயர்ந்த பொருளை ரஹஸ்யத்தில் வைத்துக் காப்பது போலும் தக்கவர்களிடமே கொடுப்பது போலும், இந்த உயர்ந்த வித்தையும் ஜாக்கிரதையுடன் காப்பாற்றித் தக்கவர்களிடமே கொடுக்கத் தகுந்தது என்பது கருத்து.

अर्जुन उवाच—
अपरं भवतो जन्म परं जन्म विवस्वतः ।
कथमेत-द्विजानीयां त्वमादौ प्रोक्तवानिति ॥ ४ ॥ ॥ १६६ ॥
श्रीभगवानुवाच—
बहूनि मे व्यतीतानि जन्मानि तव चार्जुन ।
तान्यहं वेद सर्वाणि न त्वं वेत्थ परंतप ॥ ५ ॥ ॥ १६७ ॥

அர்ஜுன உவாச—
அபரம் பவதோ ஜன்ம பரம் ஜன்ம விவஸ்வத: |
கதமேதத்-விஜானீயாம் த்வமாதௌ ப்ரோக்தவானிதி
|| 4 || (166)

ஸ்ரீபகவானுவாச—
பஹூனி மே வ்யதீதானி ஜன்மானி தவ சார்ஜுன |
தான்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப
|| 5 || (167)

உண்மையில் (ஏதத்) இது (உத்தமம்) உத்தமமான (ரஹஸ்யம்) மறைபொருள்.

அர்ஜுனன் கூறியது—

4. (பவத:) உன்னுடைய (ஜன்ம) பிறப்பு (அபரம்) பின்பு, (விவஸ்வத:) விவஸ்வானுடைய (ஜன்ம) பிறப்பு (பரம்) முன்பு;—அங்ஙனமிருக்க—(த்வம்) நீ (ஆதௌ) ஆதியில் (ப்ரோக்தவான் இதி) உபதேசித்தாய் என்னும் (ஏதத்) இதை (கதம்) எங்ஙனம் (விஜானீயாம்) நான் கருத்திற் கொள்வது?

ஸ்ரீ பகவான் கூறியது—

5. (பரந்தப) எதிரிகளைத் தவிக்கச் செய்வோனே! (அர்ஜுன) அர்ஜுனா! (மே) எனக்கும் (தவ ச) உனக்-

---

5. உ-ம்.—முன் நர நாராயணவதாரம். அது அர்ஜுனனுக்கு ஞாபகமில்லை.

अजोऽपि सन्नव्ययात्मा भूताना-मीश्वरोऽपि सन् ।
प्रकृतिं स्वामधिष्ठाय संभवा-म्यात्ममायया ॥ ६ ॥ ॥ १६८ ॥

அஜோऽபி ஸன்னவ்யயாத்மா பூதாநு-மீச்வரோऽபி ஸன் |
ப்ரக்ருதிம் ஸ்வா-மதிஷ்ட்டாய ஸம்பவாம்யாத்ம மாயயா || 6 || (168)

கும் (பஹூனி) எத்தனையோ (ஜன்மானி) ஜன்மங்கள் (வ்யதீதானி) சென்றுவிட்டன ; (அஹம்) நான் (தானி) அவை (ஸர்வாணி) எல்லாவற்றையும் (வேத) அறிவேன் ; (த்வம்) நீ (ந வேத்த) அறியமாட்டாய்.

6. (அஜ: அபி ஸன்) பிறப்பற்றவனுயிருந்தும், (அவ்யயாத்மா) மாறுபாடற்றவனுகவும் (பூதானும்) உண்டாயினவற்றிற்கெல்லாம (ஈச்வர: அபி ஸன்) ஈசனுகவும் இருந்தும் (ஸ்வாம்) என்னுடைய (ப்ரக்ருதிம்) பிரகிருதியை (அதிஷ்ட்டாய) வசப்படுத்திக் கொண்டு (ஆத்மமாயயா) என் மாயையினுல் (ஸம்பவாமி) தோன்றுகிறேன்.

ஒ—அஹமாதிர் ஹி தேவானும்...(10. 2.)

ஒ—உத்பத்திஞ்ச விநாசஞ்ச பூதாநு-மாகதிங்கதிம் |
வேத்தி வித்யா-மவித்யாஞ்ச ஸ வாச்யோ பகவானிதி ||

ஒ—நீரும் நீர்க் குமிழியும் ஒன்றேயாம். அக்குமிழி ஜலத்திலேயே தோன்றி ஜலத்திலேயே மிதந்து, கடைசியில் ஜலத்தோடேயே இரண்டறக் கலந்து போகின்றது. அதுபோல ஜீவாத்மா பரமாத்மா என்ற இரண்டும் ஒன்றேயாம். அளவு மாத்திரத்தால் தான் அவைகளுக்குள் வித்தியாசம் ஏற்படுகின்றது. ஒன்றுக்கு அளவுண்டு. மற்றென்று அளவற்றது. ஒன்று சார்புடையது; மற்றென்று சுயேச்சை உடையது.

ப்ரக்ருதிம் ஸ்வாம்—இது மூலப்பிரகிருதி. ஸம்ஸாரத்தின் உற்பத்தி ஸ்தானம். (9. 7. 8.)

ஆத்ம மாயயா—இது யோகமாயை. பகவானுடைய ஐசுவரிய சக்தி. (ஒ—7. 25.)

यदा यदा हि धर्मस्य ग्लानि-र्भवति भारत ।
अभ्युत्थान-मधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥७॥ ॥१६९॥

யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்ப்-பவதி பாரத |
அப்ப்யுத்தான-மதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்-
யஹம் || 7 || (169)

---

7. (பாரத) பாரதா! (யதா யதா) எவ்வெப்போது (தர்மஸ்ய) தருமத்திற்கு (க்லானி:) குறைவும் (அதர் மஸ்ய) அதருமத்திற்கு (அப்ப்யுத்தானம்) எழுச்சியும் (பவதி) உண்டாகிறதோ (ததா) அப்போது (அஹம்) நான் (ஆத்மானம்) என்னை (ஸ்ருஜாமி) படைத்துக் கொள்கிறேன்.

---

6. **ஸம்பவாமி**—'தேஹவானிவ, ஜாத இவ, ந லோகவத்' ஜீவர்களைப்போல் கருமவசத்தால் பிரகிருதி வயப்பட்டுப் பிறவாமல் நாடகத்தில் வேஷதாரிபோல், பகவான் தன்னிச்சையால் பிறந்தவன் போலத் தோன்றுகின்றான். (சங்கரர்)

ஒ.—நிசீதே தம உத்பூதே ஜாயமானே ஜனார்த்தனே |
தேவக்யாம் தேவரூபிண்யாம் விஷ்ணு: ஸர்வ குஹாசய:||

எல்லோருடைய உள்ளத்திலும் மறைந்துறைபவன் என்றோ ஒரு நாள் காட்சியளிப்பான். அதுவே கிருஷ்ணவதாரம். அன்று அவதரித்தது மட்டும போதாது. இன்று அவதரிக்க வேண்டும். அவன் இரவில் அவதரித்தான்; சிறையில் அவதரித்தான். இருளும் துன்பமுங்கூட அவன் அவதரிக்க அனுகூலம் போலும். இருளே இல்லாவிட்டால் வெளிச்சத்தின் பெருமை தெரியாது. அவன் அவதரித்ததும் விலங்கு தெரிக்கின்றது. சிறைக் கதவு தானே திறந்து விடுகின்றது.

ஒ. 'பித்யதே ஹ்ருதயக்ரந்திச் சித்யந்தே ஸர்வஸம்சயா:'— மு. உப. (2. 2. 9.)

ஆகாயத்தில் உறையும் சந்திரனைக் கிழக்கு திக்குப் பெற்றது போல் தேவகி கண்ணனைப் பெற்றாள்.

7. **யதா யதா**—பகவான் இச்சமயத்தில் இவ்விடத்தில் அவ தரிப்பான், வேறு சமயத்தில் வேறிடத்தில் அவதரிக்க மாட்டான் என்று எவரும் வரையறுக்க இயலாது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्म-संस्थापनार्थाय संभवामि युगे युगे ॥ ८ ॥ ॥ १७० ॥
जन्म कर्म च मे दिव्यमेवं यो वेत्ति तत्त्वतः ।
त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन ॥९॥ ॥१७१॥

பரித்ராணாய ஸாதூனும் விநாசாய ச துஷ்க்ருதாம் |
தர்ம-ஸம்ஸ்த்தாபனுர்த்தாய ஸம்பவாமி யுகே யுகே
|| 8 || (170)
ஜன்ம கர்ம ச மே திவ்ய-மேவம் யோ வேத்தி தத்வத:|
த்யக்த்வா தேஹம் புனர்-ஜன்ம நைதி மாமேதி
ஸோऽர்ஜுன || (171)

---

8. (ஸாதூனும்) ஸாதுக்களை (பரித்ராணாய) காத்தற்கும் (துஷ்க்ருதாம்) துஷ்டர்களை (விநாசாய ச) அழித்தற்கும் (தர்மஸம்ஸ்தாபனுர்த்தாய) தருமத்தை நிலைநாட்டுவதற்கும் (யுகே யுகே) யுகந்தோறும் (ஸம்பவாமி) வந்துதிப்பேன்.

9. (அர்ஜுன) அர்ஜுனு! (ஏவம்) இவ்வண்ணம் (மே) என்னுடைய (திவ்யம்) அப்ராக்ருதமான (ஜன்ம)

---

8. ஒ—பெரிதும் வலியதுமான நீராவிக்கப்பல் அதன் பின்னே யுள்ள சிறு படகுகளையும் தோணிகளையும் இழுத்துக்கொண்டு ஜலத்தின்மீது வெகு வேகமாகப் போவதுபோல், லோக ஸம்ரக்ஷகர் அவதரிக்கும்போது, ஆயிரக்கணக்கான ஜனங்களை மாயையாகிற ஸமுத்திரத்தைத் தாண்டுவித்து, அப்பால் உள்ளதொரு அபாய மற்ற துறைமுகத்துக்குச் சுலபமாய்க் கொண்டு சேர்க்கிருர்.
(ரா. கி.)

ஒ—தர்ம ஏவ ஹதோ ஹந்தி, தர்மோ ரக்ஷதி ரக்ஷித: ||

ஸாது—அஹிம்ஸை, ஸத்தியம் முதலிய நற்குணங்களும், தானம் தவம் முதலிய நற்செய்கைகளும் உடையவன்.

விநாசாய ச துஷ்க்ருதாம்—பகவான் துஷ்டர்களைத் தண்டித்தலும், நோயாளிக்கு வைத்தியன் அவசியமாயின் சுட்டும் அறுத்தும் சிகிச்சை செய்வது போல் அனுக்ரஹமேயாம்,

वीत-राग-भय-क्रोधा मन्मया मामुपाश्रिताः ।
बहवो ज्ञानतपसा पूता मद्भाव-मागताः ॥ १० ॥ ॥ १७२ ॥

வீத-ராக-பய-க்ரோதா மன்மயா மாமுபாச்ரிதா: |
பஹவோ ஜ்ஞானதபஸா பூதா மத்பாவ-மாகதா:
|| 10 || (172)

ஜன்மத்தையும் (கர்ம ச) கருமத்தையும் (தத்வத:) உள்ளபடி (ய:) எவன் (வேத்தி) அறிகிருனோ (ஸ:) அவன் (தேஹம்) உடலை (த்யக்த்வா) விட்டு (புன:) மறுபடியும் (ஜன்ம) பிறவியை (ந ஏதி) அடைய மாட்டான், (மாம் ஏதி) என்னை வந்தடைவான்.

10. (வீதராகபயக்ரோதா:) ஆசையும், பயமும், கோபமும் இல்லாதவர்களும் (மன்மயா:) என் மயமான வர்களும் (மாமுபாச்ரிதா:) என்னைச் சரணடைந்தவர் களும் (பஹவ:) பலர் (ஜ்ஞான-தபஸா) ஞானமாகிய தவத்தால் (பூதா:) பரிசுத்தர்களாய் (மத்பாவம்) என் தன்மையை (ஆகதா:) அடைந்திருக்கிருர்கள்.

---

9. புனர்ஜன்ம ந வித்யதே—கரும வசத்தால் பிறப்பதில்லை. பகவானைப் போல் இச்சையால் உலகில் அவதரிக்கலாம.

உ-ம்.—நாரதாதி மஹரிஷிகள்.

10. நெருப்பில் இட்ட இரும்புருண்டை நெருப்பின் உஷ்ணத்தை யும் பிரகாசத்தையும் பெற்று நெருப்புமயமாக ஆவதுபோல், ஜீவன் ஈசுவரனைப்போல் ஞானத்தையும் ஆனந்தத்தையும் எய்துகிருன். ஒ—கீ. 6. 30-32.

ஜ்ஞான-தபஸா-பகவானுடைய ஜன்ம கருமங்களின் உண்மை களை உணர்ந்து இடைவிடாது சிந்தித்து, அறம் மறம் இரண்டும் தத்தம் முழு வலிமையோடு போர்புரியும் காட்சியைக் காணுதல்.

ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम् ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥ ११ ॥ ॥ १७३ ॥
काङ्क्षन्तः कर्मणां सिद्धिं यजन्त इह देवताः ।
क्षिप्रं हि मानुषे लोके सिद्धि-र्भवति कर्मजा ॥ १२ ॥ ॥ १७४ ॥

யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்-ததைவ பஜாம்யஹம் |
மம வர்த்மானுவர்த்தந்தே மனுஷ்யா: பார்த்த ஸர்வச: || 11 || (173)
காங்க்ஷந்த: கர்மணும் ஸித்திம் யஜந்த இஹ தேவதா: |
க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸித்திர்ப்-பவதி கர்மஜா || 12 || (174)

---

11. (யே) எவர்கள் (யதா) எவ்வாறு (மாம்) என்னை (ப்ரபத்யந்தே) நாடுகின்றூர்களோ (தான்) அவர்களை (ததா ஏவ) அவ்வாறே (அஹம்) நான் (பஜாமி) அனுக்ரகிக்கிறேன். (பார்த்த) பார்த்தா (மனுஷ்யா:) மனிதர்கள் (ஸர்வச:) எவ்வகையிலும் (மம) என்னுடைய (வர்த்ம) வழியையே (அனுவர்த்தந்தே) அனுசரிக்கின்றூர்கள்.

12. (கர்மணும்) கருமங்களின் (ஸித்திம்) பயன் கைகூடுதலை (காங்க்ஷந்த:) அவாவுகின்றவர்களாய்

---

11. ஓ—தமர் உகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமர் உகந்த தெப்பேர் மற்றப்பேர்—தமர் உகந்தது
எவ்வண்ணம் சிந்தித் திமையாதிருப்பரேல்
அவ்வண்ணம் ஆழியானும்.

—திவ்யப்ரபந்தம்—முதல் திருவந்தாதி 44.

'யதா மத் ததா பத்' மதியெப்படியோ வழியப்படி. (ரா. கி.)

ஈசுவரன் கற்பக விருக்ஷத்துக் கொப்பானவன், அவனையண்டி அவரவர் விரும்பியதை அடைகின்றனர். ஓ—சதுர்விதா பஜந்தே மாம். (கீ. 7. 16.)

चातुर्वर्ण्यं मया सृष्टं गुण-कर्म-विभागशः ।
तस्य कर्तारमपि मां विद्धयकर्तार-मव्ययम् ॥१३॥ ॥१७५॥

சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குண-கர்ம விபாகச: |
தஸ்ய கர்த்தாரமபி மாம் வித்த்யகர்த்தார-மவ்யயம்
|| 13 || (175)

(இஹ) இவ்வுலகில் (தேவதா:) தேவதைகளை (யஜந்தே) வழிபடுகிறார்கள் ; (ஹி) ஏனெனில் (மானுஷேலோகே) மனித உலகில் (கர்மஜா ஸித்தி:) கருமத்தின் பயன் கைகூடுதல் (க்ஷிப்ரம்) சீக்கிரத்தில் (பவதி) உண்டாகின்றது.

13. (மயா) என்னால் (குணகர்ம விபாகச:) குணங்களுக்குத் தக்கபடி கருமங்களை வகுத்து (சாதுர் வர்ண்யம்) நான்கு வருண முறைப்பாடு (ஸ்ருஷ்டம்) சிருஷ்டிக்கப்பட்டது. (தஸ்ய) அதன் (கர்த்தாரமபி) கர்த்தாவாக இருப்பினும் (மாம்) என்னை (அவ்யயம்) மாறுபாடில்லாத (அகர்த்தாரம்) அகர்த்தாவாக (வித்தி) அறி.

12-13. இந்த மனித உலகு கருமபூமி எனப்படும். கரும மார்க்கத்தில் படிப்படியாய் எளிதில் மேலேற பகவானால் வர்ணங்களும் அவற்றிற்குரிய கடமைகளும் ஏற்படுத்தப்பட்டன.

ஓ—சமய கோடிகளெலாந் தந்தெய்வம் எந்தெய்வமென்று
எங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
(தாயுமானவர்)

ஓ—விக்ரஹாராதனத்தில் ஏதாவது தவறுகள் இருக்குமானால் அவ்வித ஆராதனை தனக்கு என்பது ஈசுவரனுக்குத் தெரியாதா? அன்புடன் செய்யும் அந்த ஆராதனை எப்படி செய்யப்படினும் அவன் அங்கீகரிப்பான். (ரா. கி)

ஒரே வஸ்துவான தண்ணீரைச் சிலர் **ஜலம்** என்றும், சிலர் **அக்வா** என்றும் சிலர் **பானி** என்றும் கூறுவதுபோல் பரம்பொருள் ஒன்றையே சிலர் **கடவுள்** என்றும், சிலர் **அல்லா** என்றும், சிலர் **ஹரி** என்றும் அழைக்கின்றனர். (ரா. கி.)

न मां कर्माणि लिम्पन्ति न मे कर्मफले स्पृहा ।
इति मां योऽभिजानाति कर्मभिर्न स बध्यते ॥१४॥ ॥१७६॥
एवं ज्ञात्वा कृतं कर्म पूर्वैरपि मुमुक्षुभिः ।
कुरु कर्मैव तस्मात्त्वं पूर्वैः पूर्वतरं कृतम् ॥ १५ ॥ ॥ १७७ ॥

ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலே ஸ்ப்ருஹா|
இதி மாம் யோऽபிஜாநாதி கர்மபிர் ந ஸ பத்யதே
|| 14 || (176)
ஏவம் ஜ்ஞாத்வா க்ருதம் கர்ம பூர்வைரபி முமுக்ஷுபி:|
குரு கர்மைவ தஸ்மாத் த்வம் பூர்வை: பூர்வதரம்
க்ருதம் || 15 || (177)

---

14. (கர்மாணி) கருமங்கள் (மாம்) என்னை (ந லிம்பந்தி) பற்றமாட்டா என்றும் (மே) எனக்கு (கர்ம பலே) கரும பலனில் (ஸ்ப்ருஹா) ஆசை (ந) இல்லை (இதி) என்றும் (ய:) எவன் (மாம்) என்னை (அபி ஜாநாதி) நன்கறிகின்றானோ (ஸ:) அவன் (கர்மபி:) கருமங்களால் (ந பத்யதே) கட்டப்படுவதில்லை.

15. (ஏவம்) இவ்வாறு (ஜ்ஞாத்வா) உணர்ந்து (முமுக்ஷுபி:) மோக்ஷ இச்சையுடைய (பூர்வை: அபி) முன்னோர்களாலும் (கர்ம) கருமம் (க்ருதம்) செய்யப் பட்டது. (தஸ்மாத்) ஆகையால் (த்வம்) நீ (பூர்வை:)

ஒரு ஆற்றில் குளிக்கும் துறைகள் பல இருக்கின்றன. உலகிலுள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட துறைகளில் ஒன்றாகும். உன்னுடையது உயர்ந்தது, மற்றவை தாழ்ந்தவை என்று சொல்லாதே. (ரா. கி.)

ஈசுவரனுடைய நாமங்கள் அனந்தம், ரூபங்களும் அனந்தம். நீ எந்த நாமரூபத்துடன் அவனை அறிய உள்ளன்புடன் விரும்புகிறாயோ அந்த நாம ரூபத்துடன் அவன் உனக்குப் புலப்படுவான். (ரா. கி.)

ஓ—ஆகாசாத் பதிதந் தோயம் யதா கச்சதி ஸாகரம் |
ஸர்வதேவ-நமஸ்கார: கேசவம் ப்ரதி கச்சதி ||

किं कर्म किमकर्मेति कवयोऽप्यत्र मोहिताः ।
तत्ते कर्म प्रवक्ष्यामि यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात्॥१६॥ ॥१७८॥
कर्मणो ह्यपि बोद्धव्यं बोद्धव्यं च विकर्मणः ।
अकर्मणश्च बोद्धव्यं गहना कर्मणो गतिः ॥१७॥ ॥१७९॥

கிம் கர்ம கிமகர்மேதி கவயோ ऽப்யத்ர மோஹிதா: |
தத் தே கர்ம ப்ரவக்ஷ்யாமி யஜ்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸே
ऽசுபாத் || 16 ||
கர்மணோ ஹ்யபி போத்தவ்யம் போத்தவ்யஞ்ச
விகர்மண: |
அகர்மணச்ச போத்தவ்யம் கஹநா கர்மணோ கதி: ||17||

முன்னோர்களால் (பூர்வதரம் க்ருதம்) முன் செய்த வண்ணம் (கர்ம ஏவ) கருமத்தையே (குரு) செய்.

16. (கிம்) எது (கர்ம) கருமம், (கிம்) எது (அகர்ம) அகருமம் (இதி) என்று (அத்ர) இவ்விஷயத்தில் (கவய: அபி) சிறந்த அறிவாளிகளும் (மோஹிதா:) மயங்குகின்றனர். (யத்) எதை (ஜ்ஞாத்வா) உணர்ந்து (அசுபாத்) தீமையினின்று (மோக்ஷ்யஸே) விடுபடுவாயோ (தத்) அந்த (கர்ம) கருமத்தை (தே) உனக்கு (ப்ரவக்ஷ்யாமி) எடுத்துரைக்கின்றேன்.

17. (கர்மண: ஹி அபி) விதிக்கப்பட்ட கருமத்தைப் பற்றியும் (போத்தவ்யம்) அறியவேண்டிய

வித்தி அகர்த்தாரம்—ஒ—கி. 9. 5-10 ; 13-33.

தாமரைப் பூவும் முள்ளிப்பூவும் மலர்வதும், ஒட்டுமாங்கனியும் எட்டிப் பழமும் பழுப்பதும் சூரிய வெப்பத்தாலும் ஒளியாலுமே. எனினும் அவற்றின் குணதோஷங்கள் சூரியனைத் தொடரா.

15. ஏவம் ஜ்ஞாத்வா—‘யத்யனாத்மஜ்ஞஸ்த்வம் ததா ஆத்ம சுத்த்யர்த்தம், தத்வவிச்சேல்-லோகஸங்க்ரஹார்த்தம்’. ஞானம் எய்தாதவனாயின் ஆத்ம சுத்திக்காகவும், ஞானம் எய்தியவனாயின் லோகஸங்க்ரகத்திற்காகவும். (சங்கரர்)

कर्मण्यकर्म यः पश्ये-दकर्मणि च कर्म यः ।
स बुद्धिमान् मनुष्येषु स युक्तः कृत्स्नकर्मकृत् ॥ १८ ॥ ॥ १८० ॥

கர்மண்யகர்ம ய: பச்யே-தகர்மணி ச கர்ம ய: |
ஸ புத்திமான் மனுஷ்யேஷு ஸ யுக்த: க்ருத்ஸ்ன
கர்மக்ருத் || 18 || (180)

துண்டு; (விகர்மண:) விலக்கப்பட்ட கருமத்தைப் பற்றியும் (**போத்தவ்யம்**) அறியவேண்டியதுண்டு; (அகர்மணச்ச) கருமமின்மையைப் பற்றியும் (**போத்தவ்யம்**) அறியவேண்டியதுண்டு; (கர்மண:) கருமத்தின் (கதி:) போக்கானது (கஹனு) உணர்தற்கெளிதன்று.

18. (கர்மணி) கருமம் செய்தலில் (அகர்ம) கருமஞ் செய்யாத நிலையையும் (அகர்மணி) கருமஞ் செய்யாத நிலையில் (கர்ம ச) கருமம் நிகழ்தலையும் (ய:) எவன் (பச்யேத்) காண்கின்ருனே (ஸ:) அவன் (மனுஷ்யேஷு) மனிதர்களுக்குள் (**புத்திமான்**) புத்தியிற் சிறந்தவன்; (ஸ:) அவன் (யுக்த:) யோகி; (க்ருத்ஸ்னகர்மக்ருத்) செய்யவேண்டுவன அனைத்தும் செய்து முடித்தவன்.

---

18. ஒரு மனிதனுடைய ஆன்ம சக்தி உன்னத நிலையடையும்போது அவன தன் எண்ணங்களைப் பேச வேண்டியதில்லை. செயலில் முயல வேண்டியதில்லை. ஆனல் அவன் எண்ணங்கள் தாமே உலகில் அரிய பெரிய செயல்களைச் செய்விக்கும். அவற்றில் அவனுக்குப் பற்று இல்லை.

ஒ—நிவ்ருத்திரபி மூடஸ்ய ப்ரவ்ருத்தி-ருபஜாயதே |
ப்ரவ்ருத்திரபி தீரஸ்ய நிவ்ருத்திபல-பாகினீ ||

—அஷ்டாவக்ர கீதை.

यस्य सर्वे समारम्भाः कामसङ्कल्प-वर्जिताः ।
ज्ञानाग्नि-दग्धकर्माणं तमाहुः पण्डितं बुधाः ॥१९॥ ॥१८१॥
त्यक्त्वा कर्मफलासङ्गं नित्यतृप्तो निराश्रयः ।
कर्मण्यभि-प्रवृत्तोऽपि नैव किञ्चित् करोति सः ॥२०॥ ॥१८२॥

யஸ்ய ஸர்வே ஸமாரம்பா: காமஸங்கல்ப-வர்ஜிதா: |
ஜ்ஞானக்னி-தக்தகர்மாணம் தமாஹு: பண்டிதம் புதா:
|| 19 || (181)

த்யக்த்வா கர்ம-பலாஸங்கம் நித்யத்ருப்தோ நிராச்ரய: |
கர்மண்யபி-ப்ரவ்ருத்தோऽபி நைவ கிஞ்சித் கரோதி ஸ:
|| 20 || (182)

---

19. (யஸ்ய) எவனுடைய (ஸர்வே) எல்லா (ஸமாரம்பா:) கருமங்களும் (காமஸங்கல்பவர்ஜிதா:) ஆசையும் அதற்குக் காரணமான ஸங்கல்பமும் அற்றனவோ (ஜ்ஞானக்னி-தக்த கர்மாணம்) ஞானத் தீயில் பொசுங்கிய வினைகளையுடைய (தம்) அவனை (புதா:) அறிவாளிகள் (பண்டிதம்) பண்டிதன் என்று (ஆஹு:) கூறுவர்.

20. (ஸ:) அவன் (கர்மபலாஸங்கம்) கரும பலனில் பற்றை (த்யக்த்வா) விட்டு (நித்யத்ருப்த:) எப்போதும் திருப்தியுள்ள மனத்தினனாய் (நிராச்ரய:) வேறொன்றையும் சாராதவனாய் (கர்மணி) கருமாவில் (அபிப்ரவ்ருத்த: அபி) ஊன்றியிருப்பினுங்கூட (கிஞ்சித்) ஒன்றையும் (ந கரோதி ஏவ) செய்யாதவனே.

---

19. 'ப்ரவ்ருத்தேனசேல் - லோகஸங்க்ரஹார்த்தம் நிவ்ருத்தேனசேஜ்-ஜீவன்மாத்ரார்த்தம்.' பிரவிருத்தியுடையவனாயின் லோக ஸங்க்ரஹத்திற்காகவும் நிவிருத்தனாயின் ஜீவதாரணைக்காக மட்டும கருமம். (சங்கரர்).

निराशी-र्यतचित्तात्मा त्यक्त-सर्व-परिग्रहः ।
शारीरं केवलं कर्म कुर्व-न्नाप्नोति किल्बिषम् ॥ २१ ॥ ॥१८३॥
यदृच्छा-लाभ-संतुष्टो द्वन्द्वातीतो विमत्सरः ।
समः सिद्धावसिद्धौ च कृत्वापि न निबध्यते ॥२२॥ ॥१८४॥
गतसङ्गस्य मुक्तस्य ज्ञानावस्थित-चेतसः ।
यज्ञायाचरतः कर्म समग्रं प्रविलीयते ॥ २३ ॥ ॥ १८५ ॥

நிராசீர்-யதசித்தாத்மா த்யக்த-ஸர்வ-பரிக்ரஹ: |
சாரீரம் கேவலம் கர்ம குர்வந்-நாப்னோதி கில்பிஷம்||21
யத்ருச்சா-லாப-ஸந்துஷ்டோ த்வந்த்வாதீதோ
விமத்ஸர : |
ஸம: ஸித்தாவஸித்தௌ ச க்ருத்வாபி ந நிபத்யதே|| 22
கதஸங்கஸ்ய முக்தஸ்ய ஜ்ஞானவஸ்தித-சேதஸ : |
யஜ்ஞாயாசரத: கர்ம ஸமக்ரம் ப்ரவிலீயதே ||23|| (185)

---

21. (நிராசீ:) ஆசையற்றவனும் (யதசித்தாத்மா) உள்ளத்தையும் உடலையும் அடக்கியவனும (த்யக்த ஸர்வபரிக்ரஹ:) உடைமைகளை எல்லாம் உதறித் தள்ளியவனும் ஆகியவன் (சாரீரம் கேவலம் கர்ம) உடலுக்கு இன்றியமையாத கருமாவை மட்டும் (குர்வன்) செய்து (கில்பிஷம்) தீமையை (ந ஆப்னோதி) அடைவதில்லை.

22. (யத்ருச்சாலாப - ஸந்துஷ்ட:) தானாகக் கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷமடைபவனும் (த்வந்த்வாதீத:) இரட்டைகளைக் கடந்தவனும் (விமத்ஸர:) பொறாமை இல்லாதவனும் (ஸித்தாவஸித்தௌ ச) வெற்றியிலும் தோல்வியிலும் (ஸம:) சமமாக இருப்பவனும் (க்ருத்வா அபி) கருமம் செய்யினும் (ந நிபத்யதே) கட்டுப்படுவதில்லை.

23. (கதஸங்கஸ்ய) பற்றற்றவனும் (முக்தஸ்ய) முக்தனும் (ஜ்ஞானவஸ்தித சேதஸ:) ஞானத்தில் நிலை

ब्रह्मार्पणं ब्रह्म हवि-र्ब्रह्माग्नौ ब्रह्मणा हुतम् ।
ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्म-समाधिना ॥ २४ ॥ ॥ १८६ ॥
दैवमेवापरे यज्ञं योगिनः पर्युपासते ।
ब्रह्माग्नावपरे यज्ञं यज्ञेनैवोपजुह्वति ॥ २५ ॥ ॥१८७॥

ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்ம ஹவிர்-ப்ரஹ்மாக்னௌ
ப்ரஹ்மணா ஹுதம் |
ப்ரஹ்மைவ தேன கந்தவ்யம் ப்ரஹ்மகர்ம-ஸமாதினா ||
தைவமேவாபரே யஜ்ஞம் யோகின: பர்யுபாஸதே |
ப்ரஹ்மாக்னாவபரே யஜ்ஞம் யஜ்ஞேனைவோபஜுஹ்வதி||

பெற்ற மனத்தினனாய் உள்ளவனுடைய (கர்ம) கருமம் (யஜ்ஞாய) யக்ஞத்தின் பொருட்டு (ஆசரத:) செய்யப்பட்டு (ஸமக்ரம்) முழுதும் (ப்ரவிலீயதே) கரைந்து போகின்றது.

24. (ப்ரஹ்ம அர்ப்பணம்) அர்ப்பணம் பிரம்மம், (ப்ரஹ்மஹவி:) அர்ப்பிக்கப்படும் பொருளும் பிரம்மம்; (ப்ரஹ்மாக்னௌ) அக்கினியாகிற பிரம்மத்தில் (ப்ரஹ்மணா ஹுதம்) பிரம்மத்தாலேயே ஹோமம் செய்யப்படுகிறது; (ப்ரஹ்மகர்ம ஸமாதினா) கருமமாகிய பிரம்மத்தில் ஸமாதி எய்தும் (தேன) அவனால் (ப்ரஹ்ம ஏவ) பிரம்மமே (கந்தவ்யம்) அடையப்படும் பொருள்.

25. (அபரே யோகின:) வேறு யோகிகள் (தைவம்) தேவதைகட்குரியதான (யஜ்ஞம் ஏவ)

---

24. நற்கருமம் செய்கையில் தவறு நேர்ந்தால் என்ன கதி? எல்லாம் பிரம்மமே என்றிருக்கில் தவறினும் தோஷமில்லை. பூமியில் தடுக்கி விழுந்தால் பூமியே சரண். 'பூமௌ ஸ்கலித-பாதானாம் பூமிரேவாவலம்பனம்.

25. கர்ம நிஷ்டர்கள் தேவர்களைக் குறித்து யஜ்ஞம் செய்வர். ஞான நிஷ்டர்கள் 'ப்ரஹ்மைவாஹம்' என்று ஐக்யாநுஸந்தானம் செய்திருப்பர்.

श्रोत्रादीनीन्द्रियाण्यन्ये संयमाग्निषु जुह्वति ।
शब्दादीन्विषयानन्य इन्द्रियाग्निषु जुह्वति ॥२६॥ ॥१८८॥
सर्वाणीन्द्रिय-कर्माणि प्राणकर्माणि चापरे ।
आत्मसंयमयोगाग्नौ जुह्वति ज्ञानदीपिते ॥ २७ ॥ ॥ १८९ ॥

ச்ரோத்ராதீனீந்த்ரியாண்-யன்யே ஸம்யமாக்னிஷு
ஜுஹ்வதி |
சப்தாதீன் விஷயானன்ய இந்த்ரியாக்னிஷு ஜுஹ்வதி
|| 26 || (188)
ஸர்வாணீந்த்ரிய-கர்மாணி ப்ராண-கர்மாணி சாபரே |
ஆத்மஸம்யம-யோகாக்னௌ ஜுஹ்வதி ஜ்ஞான-
தீபிதே || 27 || (189)

யஜ்ஞத்தையே (பர்யுபாஸதே) பரிவுடன் செய்கின்றனா; (அபரே) மற்றும் சிலர் (ப்ரஹ்மாக்னௌ) பிரம்மமாகிற அக்னியில் (யஜ்ஞம்) ஆன்மாவாகிற அவியை (யஜ்ஞேன ஏவ) ஆன்மாவைக் கொண்டே (உபஜுஹ்வதி) ஹோமம் செய்கின்றனர்.

26. (அன்யே) இன்னொரு சாரார் (ஸம்யமாக்னிஷு) அடக்க மெனும் அக்னியில் (ச்ரோத்ராதீனி இந்த்ரியாணி) செவி முதலிய பொறிகளை (ஜுஹ்வதி) ஹோமம் செய்கின்றனர்; (அன்யே) பிறர் (சப்தாதீன்) சப்தம் முதலிய (விஷயான்) விஷயங்களை (இந்த்ரியாக்னிஷு) பொறிகளாகிற அக்னியில் (ஜுஹ்வதி) ஹோமம் செய்கின்றனர்.

27. (அபரே) சிலர் (ஜ்ஞானதீபிதே) ஞானத்தால் மூண்டெரியும் (ஆத்மஸம்யம-யோகாக்னௌ)

---

26. **ஸம்யமம்** — த்யானம், தாரணை, ஸமாதி இம்மூன்றும் சேர்ந்து ஸம்யமம் எனப்படும்.

27. 'ஸோபாதிகம் ஜீவம் நிருபாதிகாத்ம-ரூபே ஜுஹ்வதி' —நீலகண்டர்.

द्रव्ययज्ञा-स्तपोयज्ञा योगयज्ञा-स्तथापरे ।
स्वाध्याय-ज्ञानयज्ञाश्च यतयः संशितव्रताः ॥२८॥ ॥१९०॥
अपाने जुह्वति प्राणं प्राणेऽपानं तथापरे ।
प्राणापानगती रुद्ध्वा प्राणायाम-परायणाः ॥२९॥ ॥१९१॥

த்ரவ்யயஜ்ஞாஸ்-தபோயஜ்ஞா யோகயஜ்ஞாஸ்-
ததாபரே |
ஸ்வாத்யாய-ஜ்ஞானயஜ்ஞாச்ச யதய: ஸம்சித-வ்ரதா:
|| 28 || (190)
அபானே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேऽபானம்
ததாபரே |
ப்ராணாபானகதீ ருத்த்வா ப்ராணாயாம-பராயணா: || 29 ||

ஆன்மாவிடம் ஒடுங்கும் யோக முயற்சியாகிற அக்னியில் (ஸர்வாணி) எல்லா (இந்த்ரிய-கர்மாணி) இந்திரியத் தொழில்களையும் (ப்ராண கர்மாணி ச) பிராணனின் தொழில்களையும் (ஜுஹ்வதி) ஹோமம் செய்கின்றனர்.

28. (ததா) அவ்வாறே (த்ரவ்ய யஜ்ஞா:) தானமாகிய யஜ்ஞத்தைச் செய்வோர், (தபோ யஜ்ஞா:) தவமாகிய யஜ்ஞத்தைச் செய்வோர், (யோகயஜ்ஞா:) யோகமாகிய யஜ்ஞத்தைச் செய்வோர் (ஸ்வாத்யாய ஜ்ஞானயஜ்ஞாச்ச) வேத மோதுதலும் உணர்தலுமாகிய யஜ்ஞத்தைச் செய்வோர் (யதய:) விடாமுயற்சியுடையோர் (ஸம்சிதவ்ரதா:) கடுந்தவம் புரிவோர் (அபரே) ஏனையோர்.

29. (ததா) அவ்வாறே (அபரே) இன்னும் சிலர் (அபானே) உள்ளே உலவும் மூச்சுக் காற்றில்

---

28. **தபோயஜ்ஞா:—ஒ—கீ. 17. 14: 16.**
ஸம்சிதவ்ரதா:—கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிரம்மசரியம், ஏலாமை இவ்வைந்தும் மஹாவிரதம் எனப்படுவன.

अपरे नियताहाराः प्राणान् प्राणेषु जुह्वति ।
सर्वेऽप्येते यज्ञविदो यज्ञक्षपित-कल्मषाः ॥ ३० ॥ ॥ १९२ ॥
यज्ञशिष्टामृतभुजो यान्ति ब्रह्म सनातनम् ।
नायं लोकोऽस्त्ययज्ञस्य कुतोऽन्यः कुरुसत्तम ॥ ३१ ॥ ॥ १९३ ॥

அபரே நியதாஹாரா: ப்ராணுன் ப்ராணேஷு ஜுஹ்வதி |
ஸர்வேப்யேதே யஜ்ஞவிதோ யஜ்ஞக்ஷபித-கல்மஷா: ||
யஜ்ஞசிஷ்டாம்ருதபுஜோ யாந்தி ப்ரஹ்ம ஸநாதனம் |
நாயம லோகோऽஸ்த்யயஜ்ஞஸ்ய குதோऽன்ய: குருஸத்தம || 31 || (193)

(ப்ராணம்) வெளிக் காற்றையும், (ப்ராணே) வெளிக் காற்றில் (அபானம்) உள் மூச்சுக் காற்றையும் (ஜுஹ்வதி) ஹோமம் செய்கின்றனர். (ப்ராணுபான கதீ ருத்த்வா) மூச்சுக் காற்றின் உட்போக்கையும் வெளிப் போக்கையும் தடுத்து (ப்ராணுயாம பராயணு:) பிராணனைக் கட்டி நிறுத்துவதை மேலாகக் கொள் வோர் சிலர்.

30. (அபரே) வேறு சிலர் (நியதாஹாரா:) அளவான உணவுடையவர்களாய் (ப்ராணுன்) பிராண வாயுக்களை (ப்ராணேஷு) பிராண வாயுக்களில் (ஜுஹ்வதி) ஹோமம் செய்கின்றனர். (ஸர்வே அபி ஏதே) இவர்கள் எல்லோருமே (யஜ்ஞவித:) யஜ்ஞத்தை உணர்ந்தவர்கள்; (யஜ்ஞக்ஷபித கல்மஷா:) யஜ்ஞத்தால் பாவந்தேயப் பெற்றவர்கள்.

31. (குருஸத்தம) குருவம்சத்திற் சிறந்தவனே! (யஜ்ஞசிஷ்டாம்ருத-புஜ:) யஜ்ஞம் செய்து எஞ்சிய

---

30. **நியதாஹாரா:**—அல்ப ஆஹாரமுடையோர் பிராணனையே பிராணனில் ஹோமம் செய்தவராகின்றனர். (மத்வாசாரியார்.)

एवं बहुविधा यज्ञा वितता ब्रह्मणो मुखे ।
कर्मजान्विद्धि तान् सर्वानेवं ज्ञात्वा विमोक्ष्यसे॥३२॥ ॥१९४॥
श्रेयान् द्रव्यमयाद्यज्ञा-ज्ज्ञानयज्ञः परंतप ।
सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते ॥ ३३ ॥ ॥ १९५ ॥

ஏவம் பஹுவிதா யஜ்ஞா விததா ப்ரஹ்மணோ முகே |
கர்மஜான் வித்தி தான் ஸர்வான் ஏவம் ஜ்ஞாத்வா
விமோக்ஷயஸே ||
ச்ரேயான் த்ரவ்யமயாத்-யஜ்ஞாத் ஜ்ஞானயஜ்ஞ:
பரந்தப |
ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞானே பரிஸமாப்யதே ||

இன்னமுதை உண்ணுவோர் (ப்ரஹ்ம ஸநாதனம்) அழிவற்ற பிரம்மத்தை (யாந்தி) அடைகின்றனர். (அயஜ்ஞஸ்ய) யஜ்ஞம் இல்லாதவர்க்கு (அயம் லோக:) இவ்வுலகே (நாஸ்தி) இல்லை ; (அன்ய:) வேறு (குத:) எங்ஙனம்?

32. (ப்ரஹ்மண:) வேதத்தின் (முகே) வாயிலாக (ஏவம்) இவ்வாறு (பஹுவிதா:) பலவிதமான (யஜ்ஞா:) யஜ்ஞங்கள் (விததா:) விரிந்துள்ளன. (தான்) அவை (ஸர்வான்) எல்லாவற்றையும் (கர்மஜான்) கர்மத்திலுள்ளவை என்று (வித்தி) உணர்வாய்; (ஏவம்) இவ்வாறு (ஜ்ஞாத்வா) உணர்ந்து (விமோக்ஷயஸே) விடுபடுவாய்.

33. (பரந்தப) எதிரிகளைத் தவிக்கச் செய்வோனே! (த்ரவ்யமயாத்) பொருள் மயமான (யஜ்ஞாத்)

---

31. இவ்வுலகு—அறம், பொருள், இன்பம்: ‘அன்ய:’ (வேறு) என்றது வீடு அல்லது மோக்ஷம்.

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिन-स्तत्त्वदर्शिनः ॥ ३४ ॥ ॥१९६॥

தத்வித்தி ப்ரணிபாதேனே பரிப்ரச்னேன ஸேவயா |
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞானம் ஜ்ஞானினஸ்-
தத்வதர்சின: || 34 || (196)

யஜ்ஞத்தைக் காட்டிலும் (ஜ்ஞானயஜ்ஞ:) ஞானயஜ்ஞும் (ச்ரேயான்) சிறந்ததாம். (பார்த்த) பார்த்தா! (ஸர்வம் அகிலம் கர்ம) மிச்சமின்றி எல்லாக் கர்மமும் (ஜ்ஞானே) ஞானத்தில் (பரிஸமாப்யதே) பூர்த்தியடைகிறது.

34. (ப்ரணிபாதேன) பணிவாலும் (பரிப்ரச்னேன) பரிவு மிகுந்த கேள்வியாலும் (ஸேவயா) சேவையாலும் (தத்) அதை (வித்தி) அறிக; (தத்வதர்சின:) மெய்ப்பொருள் கண்ட (ஜ்ஞானின:) ஞானிகள் (தே) உனக்கு (ஜ்ஞானம்)ஞானத்தை (உபதேக்ஷ்யந்தி) உபதேசிப்பார்கள்.

---

33. 'ஸர்வம் கர்ம, ஜ்ஞானே மோக்ஷஸாதனே, ஸர்வத: ஸம்ப்லுதோதக-ஸ்தானீயே பரிஸமாப்யதே அந்தர்ப்பவதீத்யர்த்த: (சங்.)

34. ஓ—சாந்தா மஹாந்தோ நிவஸந்தி ஸந்தோ
வஸந்தவல் லோகஹிதம் சரந்த: |
தீர்ணா: ஸ்வயம் பீம-பவார்ணவம் ஜனா-
னஹேதுனான்யானபி தாரயந்த: || –விவேகசூடாமணி
39. (சங்)

ஓ. பழங்கள் நிறைந்த மரம் எப்போதும் கனத்தினால் தழைந்து தொங்கும். நீ மேன்மையடைய விரும்பினால் பெரியோரிடம் பணிவாய் இரு. (ரா. கி.)

यज्ज्ञात्वा न पुन-र्मोह-मेवं यास्यसि पाण्डव ।
येन भूतान्यशेषेण द्रक्ष्य-स्यात्मन्यथो मयि ॥ ३५ ॥ ॥१९७॥
अपि चेदसि पापेभ्यः सर्वेभ्यः पापकृत्तमः ।
सर्वं ज्ञान-प्लवेनैव वृजिनं संतरिष्यसि ॥ ३६ ॥ ॥ १९८ ॥

யத் ஜ்ஞாத்வா ந புனர்-மோஹ-மேவம் யாஸ்யஸி
பாண்டவ |
யேன பூதான்-யசேஷேண த்ரக்ஷ்யஸ்-யாத்மன்யதோ
மயி || 35 ||
அபி சேதஸி பாபேப்ய: ஸர்வேப்ய: பாபக்ருத்தம: |
ஸர்வம் ஜ்ஞான-ப்லவேனைவ வ்ருஜினம்
ஸந்தரிஷ்யஸி || 36 || (198)

---

35. (பாண்டவ) பாண்டவா ! (யத்) இந்த ஞானத்தை (ஜ்ஞாத்வா) அறிந்து (புன:) மறுபடியும் (ஏவம்) இவ்வாறு (மோஹம்)மோகத்தை (ந யாஸ்யஸி) அடையமாட்டாய்; (யேன) இதனல் (அசேஷேண பூதானி) மிச்சமின்றி எல்லா உயிர்களையும் (ஆத்மனி) உன்னிடத்தும் (அதோ) மேலும் (மயி) என்னிடத்தும் (த்ரக்ஷ்யஸி) காண்பாய்.

36. (ஸர்வேப்ய:) எல்லா (பாபேப்ய: அபி) பாவிகளுள்ளும் (பாபக்ருத்தம: அஸி சேத்) நீ மிகக் கொடும்பாவியாயிருப்பினும் (ஸர்வம்) எல்லா (வ்ருஜினம்) பாவத்தையும் (ஜ்ஞானப்லவேன ஏவ) ஞானமெனும் படகு ஒன்றினுலேயே (ஸந்தரிஷ்யஸி) நன்கு கடந்திடுவாய்.

यथैधांसि समिद्धोऽग्नि-र्भस्मसात् कुरुतेऽर्जुन ।
ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात् कुरुते तथा ॥३७॥ ॥१९९॥
न हि ज्ञानेन सदृशं पवित्र-मिह विद्यते ।
तत्स्वयं योग-संसिद्धः कालेनात्मनि विन्दति ॥३८॥ ॥२००॥

யதைதாம்ஸி ஸமித்தோக்னிர்-பஸ்மஸாத்
குருதேऽர்ஜுன |
ஜ்ஞானக்னி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே
ததா || 37 || (199)

ந ஹி ஜ்ஞானேன ஸத்ருசம் பவித்ர-மிஹ வித்யதே |
தத்ஸ்வயம் யோக-ஸம்ஸித்த: காலேனாத்மனி
விந்ததி || 38 || (200)

---

37. (அர்ஜுன) அர்ஜுனா! (யதா) எவ்வாறு (ஸமித்த:) மண்டி யெரிகின்ற (அக்னி:) தீ (ஏதாம்ஸி) விறகை (பஸ்மஸாத்) சாம்பலாக (குருதே) செய்யுமோ, (ததா) அவ்வாறே (ஜ்ஞானக்னி:) ஞானத்தீ (ஸர்வ கர்மாணி) எல்லாக் கருமத்தையும் (பஸ்மஸாத்) சாம்பலாக (குருதே) செய்துவிடும்.

38. (இஹ) இவ்வுலகில் (ஜ்ஞானேன) ஞானத்துக்கு (ஸத்ருசம்) ஸமமாக (பவித்ரம்) பரிசுத்தம் செய்யும் பொருள் (ந வித்யதே ஹி) இல்லையன்றோ? (காலேன) நாளடைவில் (யோகஸம்ஸித்த:) யோகத்

37. ஸர்வகர்மாணி—பிராரப்தம் நீங்கலாக எல்லாக் கருமங்களையும்

ஒ—'போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்'
(திருப்பாவை)

ஒ—அநேக வருஷமாய் இருட்டாய்க் கிடந்த ஒரு அறையில் ஒரு தீக்குச்சியைக் கிழித்தா- உடனே இருட்டு ஓடிப்போவது போல், ஆண்டவனுடைய அருள் உண்டானல் அநேக ஜன்மங்களில் செய்த பாவம் போயொழியும். (ரா. கி.)

श्रद्धावाँ-ल्लभते ज्ञानं तत्परः संयतेन्द्रियः ।
ज्ञानं लब्ध्वा परां शान्ति-मचिरेणाधिगच्छति ॥३९॥ ॥२०१॥
अज्ञश्चाश्रद्दधानश्च संशयात्मा विनश्यति ।
नायं लोकोऽस्ति न परो न सुखं संशयात्मनः॥४०॥ ॥२०२॥

ச்ரத்தாவான் லபதே ஜ்ஞானம் தத்பர:
ஸம்யதேந்த்ரிய: |
ஜ்ஞானம் லப்த்வா பராம் சாந்திமசிரேணாதி
கச்சதி || 39 || (201)

அஜ்ஞச்சாச்ரத்ததானச்ச ஸம்சயாத்மா விநச்யதி |
நாயம் லோகோ஽ஸ்தி ந பரோ ந ஸுகம் ஸம்சயாத்மன:||

———

தில் சித்தி எய்திப் பக்குவமடைந்தவன் (ஆத்மனி) தன்னிடத்தில் (ஸ்வயம்) தானாகவே (தத்) அதை (விந்ததி) பெறுகிறான்.

39. (தத்பர:) அதையே மேலாகக் கருத்திற் கொண்டவனும் (ஸம்யதேந்த்ரிய:) இந்திரியங்களை நன்கடக்கியவனும் ஆகிய (ச்ரத்தாவான்) சிரத்தை பொருந்தியவன் (ஜ்ஞானம்) ஞானத்தை (லபதே) அடைகிறான். (ஜ்ஞானம்) ஞானத்தை (லப்த்வா) அடைந்து (அசிரேண) தாமதமின்றி (பராம் சாந்திம்) சாந்தியாகிற பரம பதத்தை (அதிகச்சதி) அடைகிறான்.

40. (அஜ்ஞ: ச) ஞானமில்லாதவனும் (அச்ரத்த தான: ச) சிரத்தையில்லாதவனும் (ஸம்சயாத்மா)

———

38. காலேன—ஒ—உலகப்பற்று மிகுந்து இருக்கும் வரையில் பெரும்பாலும் ஞான உபதேசம் பயன்படுவதில்லை. உலகப்பற்று சற்றுத் தளர்ந்ததும உபதேசம் பயன் கொடுக்கக்கூடிய காலம் வந்ததென்னலாம். அப்போது ஞானோதயம் ஏற்படும். (ரா. கி.)

39. அசிரேண—இதை 38ல் கூறிய 'காலேன' என்னும் கருத்துடன் ஒப்பிடவும். ஞானம் எய்துதற்கு நீண்டகாலப்பயிற்சி

—9

योगसंन्यस्त-कर्माणं ज्ञानसंछिन्न-संशयम् ।
आत्मवन्तं न कर्माणि निबध्नन्ति धनञ्जय ॥४१॥ ॥२०३॥

யோக-ஸங்ந்யஸ்த - கர்மாணம் ஜ்ஞான - ஸஞ்ச்சின்ன-ஸம்சயம் |
ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்னந்தி தனஞ்ஜய
|| 41 || (203)

ஸம்சய சித்தமுடையவனும் (விநச்யதி) நாசமடைகிறான். (ஸம்சயாத்மன:) ஸம்சய சித்தமுடையவனுக்கு (அயம் லோக:) இவ்வுலகு (நாஸ்தி) இல்லை, (ந பர:) வேறு உலகும் இல்லை; (ந ச ஸுகம்) சுகமும் இல்லை.

41. (தனஞ்ஜய) தனஞ்ஜயா! (யோக ஸங்ந்யஸ்த கர்மாணம்) யோகத்தால் கருமத்தை ஒழித்தவனும் (ஜ்ஞான ஸஞ்ச்சின்ன ஸம்யசம்) ஞானத்தால் ஸம்சயத்தைப் பிளந்தவனும் (ஆத்மவந்தம்) ஆத்மாவிடம் நிலைபெற்றவனுமாகியவனை (கர்மாணி) கருமங்கள் (ந நிபத்த்னந்தி) கட்டுப்படுத்தமாட்டா.

தேவை. ஞானம் எய்திய பின் முக்தி விரைவில் இந்த ஜன்மத்திலேயே (ப்ராரப்தம் நசித்ததும்) எய்தப்படும்.

40. ஸம்சயாத்மா—ஒ—கிணறு வெட்ட விரும்பிய ஒருவன் பத்தடி ஒரு இடத்திலும் இருபதடி மற்றோரிடத்திலும், முப்பதடி இன்னோரிடத்திலுமாக வெவ்வேறு இடங்களில் வெட்டிக் கடைசியில் வெறுப்புடன் கிணறு வெட்டும் யோசனையை விட்டுவிட்டான். ஒன்றிலும் திடநம்பிக்கை இல்லாதவர்களுடைய விஷயமும் இப்படித்தான். சந்தேகம் கொள்ளாமல் ஒரே வஸ்துவின் மீது உறுதியான நம்பிக்கை வைத்து மனவொருமைப்பட்டிருந்தால் ஜயமுண்டாவதற்கு தடையே இல்லை. (ரா. கி.)

तस्मा-दज्ञान-संभूतं हृत्स्थं ज्ञानासिनात्मनः ।
छित्त्वैनं संशयं योग-मातिष्ठोत्तिष्ठ भारत ॥ ४२ ॥ ॥ २०४ ॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादे ज्ञानकर्मसन्न्यासयोगो नाम
चतुर्थोऽध्यायः ॥

தஸ்மா-தஜ்ஞான-ஸம்பூதம் ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞாஞஸி
ஞத்மன: |
ச்சித்வைனம் ஸம்சயம்யோக-மாதிஷ்டோத்திஷ்ட
பாரத || 204 ||

இதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸூ ப்ரஹ்மவித்யா
யாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீகிருஷ்ணார்ஜுனஸம்வாதே
ஜ்ஞானகர்மஸங்ந்யாஸ யோகோ நாம
சதுர்த்தோऽத்யாய: ||

---

42. (தஸ்மாத்) ஆகையால் (அஜ்ஞானஸம்பூதம்) அஞ்ஞானத்திலிருந்து பிறந்ததும் (ஹ்ருத்ஸ்தம்) உள்ளத்தில் உறைவதும் ஆகிய (ஏனம்) இந்த (ஆத்மன:) ஆத்மாவைப்பற்றிய (ஸம்சயம்) ஸம்சயத்தை (ஜ்ஞாஞஸிஞ) ஞானமெனும் வாளால் (ச்சித்வா) வெட்டி (யோகம்) யோகத்தில் (ஆதிஷ்ட) நிலைபெறுதி (பாரத) பாரதா! (உத்திஷ்ட) எழுந்திரு.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக
சாஸ்திரமாயும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுன
னுக்கும் ஸம்பாஷணையாயும் விளங்கும்
ஸ்ரீமத் பகவத்கீதை என்னும் உபநிஷத்தில் ஞான
கர்ம ஸங்ந்யாஸயோகம் என்று பெயர் பெற்ற
நான்காவது அத்தியாயம் முற்றும்.

அத்தியாயத்தின் விஷயச் சுருக்கம்—

நரனுக்கும் நாராயணனுக்கும் (ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும்) உள்ள ஒற்றுமை வேற்றுமைகள், பகவானுடைய ஜன்மகர்ம ரஹஸ்யங்களை உள்ளபடி உணர்வதால் முக்தி, உள்ளபடி உணர்ந்து பூஜிப்பவர்களுக்கும் உலக சுகங்களை விரும்பித் தேவதைகளை உபாசிப்பவர்களுக்கும் வேறுபாடு. பகவான் எல்லாவற்றையும் ஆக்கியளிப்பவராயினும் எதிலும் பற்றின்றி நிற்பவர்; இதை உணர்ந்தோர்க்குக் கருமத்தளை இல்லை. முன்னைய முமுக்ஷுக்கள் இங்ஙனம் வாழ்ந்தனரெனக் கூறி அர்ஜுனன் அவர்களைப்போலக் கருமம் புரிந்து வாழவேண்டும் எனல். கர்மா, அகர்மா, விகர்மா. கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்பவன் முற்றுமுணர்ந்த ஞானி. கர்ம ப்ரஹ்மார்ப்பணம். யஜ்ஞங்கள் பலவகை. திரவிய யஜ்ஞத்தைவிட ஞான யஜ்ஞமே சிறந்தது. ஞானிகளிடம் சென்று கேள்வியாலும் பணிவிடையாலும் உபதேசம் பெறுதலின் அவசியம். ஞானம் பாவ சமுத்திரத்தைத் தாண்டுவிக்கும் படகு போன்றது, ஞானம் கருமமாகிய மலத்தை எரிக்கும் தீ போன்றது. இதில் சிரத்தையில்லாதவனும் நம்பிக்கையில்லாதவனும் அழிவுறுகிறான். "ஞானமாகிற உடைவாளின் உதவி கொண்டு அஞ்ஞானத்திலுதித்த சந்தேகங்களை வெட்டியொழித்துக் கருமயோகத்தில் நிலைபெற்று நிமிர்ந்து நில்" என்று அர்ஜுனனுக்குக் கூறி பகவான் முடிக்கிறார்.

ஆன்மாவுக்கோர் செயலு மில்லையவை யாவும் உடல்
தான் மருவு மென்னும் தகைதன்னைப்—பான்மையினால்
ஓருவதே ஞானமென உற்றிறைவன் ஓதியதைத்
தேருவதே தீவினைக்குத் தீ. (கீ. வெ.)

॥ पञ्चमोऽध्यायः ॥
(सन्न्यासयोगः)

अर्जुन उवाच—
सन्न्यासं कर्मणां कृष्ण पुनर्योगं च शंससि ।
यच्छ्रेय एतयो-रेकं तन्मे ब्रूहि सुनिश्चितम् ॥ १ ॥ ॥ २०५ ॥

ஐந்தாம் அத்தியாயம்
(ஸங்ந்யாஸ யோகம்)

அர்ஜுன உவாச—
ஸங்ந்யாஸம் கர்மணும் க்ருஷ்ண புனர்-யோகஞ்ச
ஶம்ஸஸி |
யச்ச்ரேய ஏதயோ-ரேகம் தன்மே ப்ரூஹி
ஸுநிச்சிதம் || 1 || (205)

அர்ஜுனன் கூறியது—

1. (க்ருஷ்ண) கிருஷ்ண! (கர்மணும் ஸங்ந்யாஸம்) கருமத்தைக் கைவிடுதலையும் (புன:) மேலும் (யோகஞ்ச) கூடுதலையும் (ஶம்ஸஸி) புகழ்கின்றாய்; (ஏதயோ:) இவ்விரண்டுள் (யத்) எது (ச்ரேய:) சிறந்ததோ (தத்) அந்த (ஏகம்) ஒன்றை (ஸுநிச்சிதம்) நன்கு நிச்சயித்து (மே) எனக்கு (ப்ருஹி) கூறு.

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்—

அத். 3ல் கர்மயோகத்தின் தத்துவமும், 4ல் கர்மத்தை யஜ்ஞமாகவும பிரம்மார்ப்பணமாகவும் செய்வதால் கர்மக்கட்டினின்று விடுதலையும் கூறப்பட்டது. இதனல் ஸாதகன் உயர்ந்த ஞானத்துக்கும் ஸந்நியாஸத்துக்கும் அதிகாரியாகின்ருன், அந்த ஞானத்தைத் தத்துவதரிசிகளிடம் பணிவிடையாலுங் கேள்வியாலும் பெறுதல் வேண்டும் என்றுங் கூறப்பட்டது. இந்த ஞானமே 'ஸாங்க்ய யோகம்' அல்லது 'ஸங்ந்யாஸயோகம்' எனப்படுவது. இதைத்தான் அத். 2ல் ஆதியில் பகவான் சுருக்கமாய்க் கூறினர். அதுவே மீண்டுங் தெளிவாக அத். 5ல் கூறப்படுகிறது. இக்காரணத்தால் இவ்வத்தியாயம் 'ஸங்ந்யாஸயோகம்' எனப்படும். இதைக் 'கர்மஸங்ந்யாஸயோகம்' என்று கூறுவாருமுண்டு.

श्रीभगवानुवाच—
सन्न्यासः कर्मयोगश्च निःश्रेयसकरा-वुभौ ।
तयोस्तु कर्मसन्न्यासात् कर्मयोगो विशिष्यते ॥२॥ ॥२०६॥
ज्ञेयः स नित्य-सन्न्यासी यो न द्वेष्टि न काङ्क्षति ।
निर्द्वन्द्वो हि महाबाहो सुखं बन्धात् प्रमुच्यते ॥३॥ ॥२०७॥

ஸ்ரீ பகவானுவாச—
ஸந்ந்யாஸ: கர்மயோகச்ச நி:ச்ரேயஸகரா-வுபௌ |
தயோஸ்து கர்ம-ஸந்ந்யாஸாத் கர்மயோகோ
விசிஷ்யதே || 2 || (206)
ஜ்ஞேய: ஸ நித்ய ஸந்ந்யாஸீ யோ ந த்வேஷ்டி ந
காங்க்ஷதி |
நிர்த்வந்த்வோ ஹி மஹாபாஹோ ஸுகம் பந்தாத்
ப்ரமுச்யதே || 3 || (207)

ஸ்ரீ பகவான் கூறியது—

2. (ஸந்ந்யாஸ:) விடுதலும் (கர்மயோக: ச) கர்மத்தைக் கூடுதலும் (உபௌ) இரண்டும் (நி:ச்ரேயஸகரௌ) உயர் நலனை யளிப்பனவே; (தயோஸ்து) அவற்றுள் (கர்மஸந்ந்யாஸாத்) கருமத்தை விடுதலினும் (கர்மயோக:) கருமத்தைக் கூடுதலே (விசிஷ்யதே) சிறந்தது.

3. (ய:) எவன் (ந த்வேஷ்டி) வெறுப்பதில்லையோ (ந காங்க்ஷதி) விரும்புவதில்லையோ (ஸ:) அவன் (நித்ய

---

1. கீ. 4-வது அத்தியாயத்தில் 33-41ல் கர்ம ஸந்ந்யாஸத்தைச் சிறப்பித்துக் கூறி 42ல் மறுபடியும் கர்மயோகத்தைக் கூறியதாய்த் தோன்றியதால் இந்தக் கேள்வி பிறக்கின்றது.

2. இதில் அடங்கிய விடைக்கு முக்கிய காரணம் 6-வது சுலோகத்தில் காணப்படும்.

साङ्ख्ययोगौ पृथग्बालाः प्रवदन्ति न पण्डिताः ।
एकम-प्यास्थितः सम्य-गुभयो-र्विन्दते फलम् ॥४॥ ॥२०८॥
यत्साङ्ख्यैः प्राप्यते स्थानं तद्योगैरपि गम्यते ।
एकं साङ्ख्यं च योगं च यः पश्यति स पश्यति ॥५॥ ॥२०९॥

ஸாங்க்ய-யோகௌ ப்ருதக்பாலா: ப்ரவதந்தி ந பண்டிதா: |
ஏகமப்-யாஸ்தித:ஸம்ய-குபயோர்-விந்ததே பலம் || 4 ||
யத் ஸாங்க்யை: ப்ராப்யதே ஸ்தானம் தத்யோகை-ரபி கம்யதே |
ஏகம் ஸாங்க்யஞ்ச யோகஞ்ச ய: பச்யதி ஸ பச்யதி || 5 ||

ஸங்ந்யாஸீ) என்றுந் துறவியே என (ஜ்ஞேய:) அறிதற்குரியவன். (மஹாபாஹோ (பெருந்தோள் படைத்தோனே! (ஹி) நிச்சயமாக (நிர்த்வந்த்வ:) இரட்டைகளினின்று விடுபட்டவன் (பந்தாத்) கருமக கட்டினின்று (ஸுகம்) எளிதில் (ப்ரமுச்யதே) விடுபடுகின்ருன்.

4. (பாலா:) அறிவிற் சிறுவர் (ஸாங்க்ய யோகௌ) ஸாங்கியமும யோகமும் (ப்ருதக்) வெவ்வேறென (ப்ரவதந்தி) கூறுவர்; (ந பண்டிதா:) பண்டிதர் கூருர்; (ஏகம் அபி) ஒன்றிலேனும் (ஸம்யக்) நன்ருக (ஆஸ்தித:) நிலைபெற்ருேன் (உபயோ:) இரண்டினுடைய (பலம்) பயனையும் (விந்ததே) பெறுகிருன்.

5. (ஸாங்க்யை:) ஸாங்கியர்களால் (யத்) எந்த (ஸ்தானம்) நிலை (ப்ராப்யதே) அடையப்படுகிறதோ (யோகை: அபி) யோகிகளாலும் (தத்) அந்நிலையே (கம்யதே) அடையப்படுகிறது. (ஸாங்க்யஞ்ச) ஸாங்கியமும் (யோகஞ்ச) யோகமும் (ஏகம்) ஒன்று என (ய:) எவன் (பச்யதி) பார்க்கிருனே (ஸ:) அவன் (பச்யதி) பார்க்கிருன்.

सन्न्यासस्तु महाबाहो दुःखमाप्तु-मयोगतः ।
योगयुक्तो मुनिर्ब्रह्म नचिरेणाधिगच्छति ॥ ६ ॥ ॥ २१० ॥
योगयुक्तो विशुद्धात्मा विजितात्मा जितेन्द्रियः ।
सर्वभूतात्मभूतात्मा कुर्वन्नपि न लिप्यते ॥ ७ ॥ ॥ २११ ॥

ஸந்ந்யாஸஸ்து மஹாபாஹோ து:க்கமாப்து-
மயோகத: |
யோகயுக்தோ முனிர்-ப்ரஹ்ம நசிரேணுதிகச்சதி
|| 6 || (210)

யோகயுக்தோ விசுத்தாத்மா விஜிதாத்மா ஜிதேந்த்ரிய: |
ஸர்வபூதாத்ம-பூதாத்மா குர்வந்நபி ந லிப்யதே
|| 7 || (211)

---

6. (மஹாபாஹோ) பெருந்தோள் படைத்தோனே! (அயோகத:) யோகத்தாலன்றி (ஸந்ந்யாஸ:) ஸந்நியாஸம் (ஆப்தும்) அடைதற்கு (து:க்கம்) அரிது; (து) ஆனுல் (யோக யுக்த:) யோகத்தைக் கூடிய (முனி:) முனிவன் (ந சிரேண) விரைவில் (ப்ரஹ்ம) பிரம்மத்தை (அதிகச்சதி) அடைகிருன்.

7. (யோக யுக்த:) யோகத்தைக் கூடியவனும் (விசுத்தாத்மா) உள்ளத் தூய்மை எய்தியவனும் (விஜிதாத்மா) உடலை ஜயித்தவனும் (ஜிதேந்த்ரிய:) இந்திரியங்களை அடக்கியவனும் (ஸர்வபூதாத்ம பூதாத்மா) எவ்வுயிரிலும் தன்னையே காண்பவனும் ஆகியவன் (குர்வன் அபி) கருமங்களைச் செய்தபோதிலும் (ந லிப்யதே) அதனுல் தொடப்படுவதில்லை.

नैव किञ्चित् करोमीति युक्तो मन्येत तत्त्ववित् ।
पश्यञ्शृण्वन् स्पृशञ्जिघ्र-न्नश्नन्गच्छन् स्वपञ्श्वसन्॥८॥॥२१२॥
प्रलपन्विसृजन् गृह्णन्नुन्मिष-न्निमिषन्नपि ।
इन्द्रियाणीन्द्रियार्थेषु वर्तन्त इति धारयन् ॥ ९ ॥ ॥२१३॥

நைவ கிஞ்சித் கரோமீதி யுக்தோ மன்யேத தத்வவித் |
பச்யன் ச்ருண்வன் ஸ்ப்ருசன் ஜிக்ரன்-னச்னன் கச்சன்
ஸ்வபன் ச்வஸன் || 8 || (212)

ப்ரலபன் விஸ்ருஜன் க்ருஹ்ணன்-னுன்மிஷந்
நிமிஷன்னபி |
இந்த்ரியாணீந்த்ரியார்த்தேஷு வர்த்தந்த இதி
தாரயன் || 9 || (213)

---

8. (பச்யன்) கண்டாலும், (ச்ருண்வன்) கேட்டாலும் (ஸ்ப்ருசன்) தொட்டாலும் (ஜிக்ரன்) முகர்ந்தாலும் (அச்னன்) உண்டாலும் (கச்சன்) சென்றாலும், (ஸ்வபன்) தூங்கினாலும் (ச்வஸன்) மூச்சுவிட்டாலும் (தத்வவித்) மெய்யறிவுடைய (யுக்த:) யோகி (கிஞ்சித்) ஒன்றையும் (நைவ கரோமி இதி) தான் செய்யவில்லை என்று (மன்யதே) எண்ணவேண்டும்.

9. (ப்ரலபன்) பேசினாலும் (விஸ்ருஜன்) விட்டாலும் (க்ருஹ்ணன்) பற்றிக்கொண்டாலும் (உன்

---

8. அதோ அவல் இடிக்கும் ஸ்திரீயைப் பார். அவள் எத்தனை காரியங்களில் கருத்தாயிருக்கிறாள். உரலில் கிடக்கும் அவலை ஒரு கையால் கிளறி விட்டுக்கொண்டு, மற்றொரு கையால் குழந்தையை அணைத்துப் பால் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். அதே சமயத்தில் அவலை விற்பதற்கும் பேரம் பேசிக் கொண்டிருக்கிறாள். இப்படி பல வேலைகளினிடையும் அவள் மனதுமட்டும் உலக்கை கையில் விழுந்து காயமுண்டாக்காமலிருக்கும் விஷயத்தில் நிற்கிறது. அவ்வாறே உலகில் நீ வாழும்போது உலகத் துன்பம் உன்னைப் புண்படுத்தாமலிருக்க ஈசுவரனை எப்போதும் நினைத்துக்கொண்டிரு. (ரா. கி.)

ब्रह्मण्याधाय कर्माणि सङ्गं त्यक्त्वा करोति यः ।
लिप्यते न स पापेन पद्मपत्र-मिवाम्भसा ॥ १० ॥ ॥२१४॥

ப்ரஹ்மண்-யாதாய கர்மாணி ஸங்கம் த்யக்த்வா கரோதி ய: |
லிப்யதே ந ஸ பாபேன பத்மபத்ர-மிவாம்பஸா || 10 || (214)

மிஷன்) கண்விழித்தாலும் (நிமிஷன்) கண் மூடினு லும் (அபி) கூட (இந்த்ரியாணி) இந்திரியங்கள் (இந்த்ரியார்த்தேஷு) இந்திரிய விஷயங்களில் (வர்த் தந்தே) செல்லுகின்றன (இதி) என்று (தாரயன்) நிச்சயமுடையவனுய்—ஒன்றையும் தான் செய்ய வில்லை என்று எண்ணவேண்டும்.

10. (ய:) எவன் (கர்மாணி) கருமங்களை (ப்ரஹ் மணி) பிரம்மத்தினிடத்தில் (ஆதாய) வைத்து (ஸங்கம்) பற்றை (த்யக்த்வா) விட்டு (கரோதி) செய்கின்ருனே (ஸ:) அவன் (அம்பஸா) நீரினுல் (பத்மபத்ரம் இவ) தாமரை இலைபோல் (பாபேன) பாவத்தால் (ந லிப்யதே) பற்றப்படுவதில்லை.

---

9. ஒ—துஞ்சும்போ தழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்ரும்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணு வென்னு நாமம். (திருமங்கையாழ்வார்)

ஒ—சாட்டையிற் பம்பர சாலம் போலெல்லாம்
ஆட்டுவானிறை யென வறிந்து நெஞ்சமே
தேட்ட மொன்றற வருட் செயலினிற்றியேல்
வீட்டறந் துறவற மிரண்டு மேன்மையே. (தாயுமானவர்)

कायेन मनसा बुद्ध्या केवलै-रिन्द्रियैरपि ।
योगिनः कर्म कुर्वन्ति सङ्गं त्यक्त्वात्मशुद्धये ॥११॥ ॥२१५॥
युक्तः कर्मफलं त्यक्त्वा शान्ति-माप्नोति नैष्ठिकीम् ।
अयुक्तः कामकारेण फले सक्तो निबध्यते ॥ १२ ॥ ॥२१६॥

காயேன மனஸா புத்த்யா கேவலை-ரிந்த்ரியைரபி |
யோகின: கர்ம குர்வந்தி ஸங்கம் த்யக்த்வாத்ம-
ஶுத்தயே || 11 || (215)
யுக்த: கர்மபலம் த்யக்த்வா ஶாந்தி-மாப்னோதி
நைஷ்ட்டிகீம் |
அயுக்த: காமகாரேண பலே ஸக்தோ நிபத்யதே || 12 ||

---

11. (யோகின:) யோகிகள் (ஸங்கம்) பற்றை (த்யக்த்வா) விட்டு (ஆத்மஶுத்தயே) உள்ளத்தைப் பரிசுத்தமாக்கும் பொருட்டு (கேவலை:) தான் என்ற பாவனை இல்லாத (காயேன) உடலாலோ (மனஸா) மனத்தாலோ (புத்த்யா) புத்தியாலோ, (இந்த்ரியைரபி) இந்திரியங்களாலோ (கர்ம குர்வந்தி) கருமம் செய்கின்றனர்.

12. (யுக்த:) யோகத்தைக் கூடியவன் (கர்ம பலம்) கருமத்தின் பயனை (த்யக்த்வா) விட்டு (நைஷ்ட்டிகீம்) நிஷ்டையினால் உண்டாகும் (ஶாந்திம்) மன வமைதியை (ஆப்னோதி) அடைகிறான்; (அயுக்த:) யோகத்தைக் கூடாதவன் (காமகாரேண) ஆசையின் தூண்டுதலால் (பலே) பயனில் (ஸக்த:) பற்றுக் கொண்டு (நிபத்யதே) கட்டப்படுகிறான்.

---

11. **கேவலை:**—அஹங்கார மமகாரமின்றி ஈசுவரார்ப்பணமாக மட்டும். தங்களுக்கென ஒரு பலனையும் இச்சியாமல்.

12. **நைஷ்டிகீம் சாந்திம்**—இச்சாந்தி படிப்படியாய வருவது—(1) ஸத்வசுத்தி (2) ஞானோதயம் (3) கர்மஸந்ந்யாஸம் (4) ஞானம் நிலைத்தல்—அதனால் சாந்தி. (சங்கரர்.)

सर्वकर्माणि मनसा सन्न्यस्यास्ते सुखं वशी ।
नवद्वारे पुरे देही नैव कुर्वन्न कारयन् ॥ १३ ॥ ॥२१७॥
न कर्तृत्वं न कर्माणि लोकस्य सृजति प्रभुः ।
न कर्मफल-संयोगं स्वभावस्तु प्रवर्तते ॥ १४ ॥ ॥२१८॥

ஸர்வகர்மாணி மனஸா ஸந்ந்யஸ்யாஸ்தே ஸுகம் வசீ |
நவத்வாரே புரே தேஹீ நைவ குர்வந் ந காரயன்
|| 13 || (217)

ந கர்த்ருத்வம் ந கர்மாணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு: |
ந கர்மபல-ஸம்யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்த்ததே
|| 14 || (218)

---

13. (வசீ) இந்திரியங்களை வசப்படுத்திய (தேஹீ) புருஷன் (மனஸா) மனத்தால் (ஸர்வகர்மாணி) எல்லாக் கருமங்களையும் (ஸந்ந்யஸ்ய) துறந்து (ஸுகம்) சுகமாக (நவத்வாரே) ஒன்பது வாயிலுடைய (புரே) புரியில் (நைவ குர்வன்) ஒன்றும் செய்யாமலும் (ந காரயன்) செய்விக்காமலும் (ஆஸ்தே) இருக்கின்றான்.

14. (ப்ரபு:) இறைவன் (கர்த்ருத்வம்) கர்த்தாவாயிருத்தலை (லோகஸ்ய) உலகத்தார்க்கு (ந ஸ்ருஜதி) சிருஷ்டிக்கவில்லை; (ந கர்மாணி) கருமங்களையும் சிருஷ்டிக்கவில்லை, (ந கர்மபல ஸம்யோகம்) கருமத்

---

13. ஸர்வகர்மாணி—(i) நித்யகர்மா (செய்யவேண்டுவதும் செய்யா விட்டால் பாவத்தை விளைவிப்பதும்). (ii) நைமித்திகம் (ஒரு நிமித்தத்தைக் குறித்துச் செய்வது.) (iii) காம்யம் (ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள). (iv) நிஷித்தம் (விலக்கப்பட்ட கர்மாக்கள்.)

14. புகையானது சுவரைக் கரியாக்குமே தவிர, ஆகாய வெளியைக் கரியாக்காது. அதுபோல கருமங்கள் ஆத்மாவைச் சேரா. (ரா. கி.)

नादत्ते कस्यचित् पापं न चैव सुकृतं विभुः ।
अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः ॥ १५ ॥ ॥२१९ ॥

நாதத்தே கஸ்யசித் பாபம் ந சைவ ஸுக்ருதம் விபு:|
அஜ்ஞானே-ஞவ்ருதம் ஜ்ஞானம் தேன முஹ்யந்தி
ஜந்தவ: || 15 ||

தின் பயன் கூடுதலேயும் சிருஷ்டிக்கவில்லே, (து) ஆனுல் (ஸ்வபாவ:) இயற்கை (ப்ரவர்த்ததே) இயக்கு விக்கின்றது.

15. (விபு:) கடவுள் (கஸ்யசித்) எவருடைய (பாபம்) பாவத்தையும் (ந ஆதத்தே) ஏற்றுக்கொள் வதில்லே; (ஸுக்ருதம் ச) புண்ணியத்தையும் (ந ஏவ) அவ்வாறே ஏற்றுக்கொள்வதில்லே—; (அஜ்ஞானேன) அஜ்ஞானத்திஞல் (ஜ்ஞானம்) ஞானமானது (ஆவ்ருதம்) மறைக்கப்பட்டுள்ளது; (தேன) அதஞல் (ஜந்தவ:) பிராணிகள் (முஹ்யந்தி) மோகத்தை யடைகின்றன.

---

15. ஒ—நன்மை தீமைகளோடு பிரம்மம் சம்பந்தப்படுகிற தில்லே. அது விளக்கின் ஒளிப்பிழம்பைப் போன்றது. அவ் விளக்கின் வெளிச்சத்தில் ஒருவன் பாகவதத்தைப் படிக்கலாம்; அவ்வெளிச்சத்தின் உதவியைக்கொண்டே பிறரைக் கெடுக்க வேண்டி ஒரு பொய்ப்பத்திரத்தை எழுதினுலும் எழுதலாம். (ரா. கி.)

சூரிய உதய அஸ்தமனம் பூமியில் வசிக்கும் நம்மைக்குறித்து ஏற்படினும் உண்மையில் சூரியனுக்கு உதயமும் அஸ்தமனமும் இல்லே. அது வியவஹாரத்தில் பேசப்படினும் பரமார்த்தத்தில் உண்மையல்ல.

பகவான் நமது புத்திக்குப்பின் நின்று வழிகாட்டுகிருர். குயவனைப்போல் தட்டிக்கொட்டிச் சரிப்படுத்துவதில்லே. (விநேபா)

ज्ञानेन तु तदज्ञानं येषां नाशित-मात्मनः ।
तेषा-मादित्यव-ज्ज्ञानं प्रकाशयति तत्परम् ॥१६॥ ॥२२०॥
तद्बुद्ध्य-स्तदात्मान-स्तन्निष्ठा-स्तत्परायणाः ।
गच्छन्त्यपुन-रावृत्तिं ज्ञाननिर्धूत-कल्मषाः ॥ १७ ॥ ॥२२१॥

ஜ்ஞானேன து தத‌ஜ்ஞானம் யேஷாம் நாசித-
மாத்மன: |
தேஷா-மாதித்யவத் ஜ்ஞானம் ப்ரகாசயதி தத்பரம்
|| 16 || (220)
தத்புத்தயஸ்-ததாத்மானஸ்-தந்நிஷ்ட்டாஸ்-
தத்பராயணா: |
கச்சந்த்-யபுனராவ்ருத்திம் ஜ்ஞானநிர்த்தூத-கல்மஷா:
|| 17 || (221)

---

16. (து) ஆனால் (ஆத்மன: ஜ்ஞானேன) ஆத்ம ஞானத்தால் (யேஷாம்) எவர்களுடைய (தத் அஜ்ஞானம்) அந்த அஞ்ஞானம் (நாசிதம்) அழிவுற்றதோ (தேஷாம்) அவர்களுக்கு (ஜ்ஞானம்) ஞானமானது (ஆதித்யவத்) சூரியனைப்போல (தத்பரம்) அந்தப் பரம் பொருளை (ப்ரகாசயதி) விளங்கச் செய்கின்றது.

17. (தத்புத்தய:) அதில் புத்தியுடையவராய் (ததாத்மான:) அதையே ஆன்மாவாய்க் கொண்டவராய் (தந்நிஷ்டா:) அதில் நிலைபெற்றவராய் (தத்பராயணா:) அதையே சிறந்த புகலிடமாய்க் கருதுபவராய் (ஜ்ஞான நிர்த்தூதகல்மஷா:) ஞானத்தால் பாவம் உதறித் தள்ளப்பட்டவர்கள் (அபுனராவ்ருத்திம்) திரும்பிவராத நிலையை (கச்சந்தி) எய்துகின்றனர்.

---

16. ஒ— அனேகமாயிரம் வருஷங்களாக இருட்டாக இருந்த அறையொன்றில் ஒரு தீபம் கொண்டுவரப்பட்டவுடனே அது பிரகாசமடைவதுபோல், ஞான தீபத்தால் ஜீவன் பிரகாசமடைந்து கற்பகோடி காலத்திய அஞ்ஞானத்தைப் போக்கிக்கொள்கின்றான். (ரா. கி.)

विद्या-विनय-संपन्ने ब्राह्मणे गवि हस्तिनि ।
शुनि चैव श्वपाके च पण्डिताः समदर्शिनः ॥ १८ ॥ ॥२२२॥

வித்யா-விநய-ஸம்பன்னே ப்ராஹ்மணே கவி ஹஸ்தினி |
சுனி சைவ ச்வபாகே ச பண்டிதா: ஸமதர்சின: || 18 || (222)

---

18. (வித்யாவிநய ஸம்பன்னே) கல்வியும் அடக்கமும் நிறைந்த (ப்ராஹ்மணே) பிராம்மணனிடத்தும் (கவி) பசுவினிடத்தும் (ஹஸ்தினி) யானையிடத்தும் (சுனி ச) நாயினிடத்தும் (ஏவ ச்வபாகே ச) அவ்வாறே நாயை உண்ணும் புலையனிடத்தும் (பண்டிதா:) ஆத்மஞானிகள் (ஸமதர்சின:) ஸமதர்சனம் உடையவர்கள்.

---

18. ஒ—கீ. 18. 33.

ஒ—எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கு மவ்வுயிராய்
அங்கிருப்பது நீ யன்றோ பராபரமே. (தாயுமானவர்.)

ஒ—நான் எதைக் காண்கின்றேன் என்பது உனக்குத் தெரியுமா? எல்லாம் அவனே எனக் காண்கின்றேன். மனிதனும் மற்றப் பிராணிகளும் தோல் பொம்மைகளைப் போல் தலையை அசைப்பதாகவும் கை கால்களை ஆட்டுவதாகவும் காண்கின்றேன். ஆனால் உள்ளே ஈசுவரன் இருந்து எல்லாவற்றையும் ஆட்டிவைக்கிறான்.

நமது உடலில் வெவ்வேறு அங்கங்கள் வெவ்வேறு தொழில் புரிந்தாலும் எல்லாவற்றையும் ஒரே உயிர் இயக்குவிப்பதை நாம் காண்பது போல், ஞானி வேற்றுமைப் பொருள்களில் ஒற்றுமையைக் காண்கின்றான்.

इहैव तैर्जितः सर्गो येषां साम्ये स्थितं मनः ।
निर्दोषं हि समं ब्रह्म तस्माद्ब्रह्मणि ते स्थिताः ॥१९॥ ॥२२३॥
न प्रहृष्येत्प्रियं प्राप्य नोद्विजेत् प्राप्य चाप्रियम् ।
स्थिरबुद्धि-रसंमूढो ब्रह्मविद्ब्रह्मणि स्थितः ॥ २० ॥ ॥२२४॥

இஹைவ தைர்ஜித: ஸர்க்கோ யேஷாம் ஸாம்யே
ஸ்திதம் மன: |
நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம தஸ்மாத் ப்ரஹ்மணி தே
ஸ்திதா: |
ந ப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத்
ப்ராப்ய சாப்ரியம் |
ஸ்திர-புத்தி-ரஸம்மூடோ ப்ரஹ்மவித் ப்ரஹ்மணி
ஸ்தித: || 20 || (224)

---

19. (யேஷாம்) எவர்களுடைய (மன:) மனது (ஸாம்யே) ஸம நிலையில் (ஸ்திதம்) நிறுத்தப்பட்டதோ (தை:) அவர்களால் (இஹ ஏவ) இங்கேயே (ஸர்க்க:) பிறவி (ஜித:) ஜயிக்கப்பட்டது; (ப்ரஹ்ம) பிரம்மம் (ஸமம்) ஸமமானதும் (நிர்தோஷம்) தோஷமற்றதும் (ஹி) அன்றோ? (தஸ்மாத்) அக்காரணத்தால் (தே) அவர்கள் (ப்ரஹ்மணி) பிரம்மத்தினிடம் (ஸ்திதா:) நிலை பெறுகின்றனர்.

20. (ப்ரஹ்மவித்) பிரம்மஞானி (ப்ரஹ்மணி) பிரம்மத்தினிடம் (ஸ்தித:) நிற்பவனாய் (ஸ்திரபுத்தி:) நிலையான புத்தியுடையவனாய் (அஸம்மூட:) மோகமில்லாதவனாய் (ப்ரியம்) பிரியமானதை (ப்ராப்ய) அடைந்து (ந ப்ரஹ்ருஷ்யேத்) மகிழ்வால் கிளர்ச்சியடைய

---

19. அழியும் உடலால் அழியாப் பதவியையும் மானிடப் பிறவியிலேயே தெய்வத் தன்மையையும் எய்துதல் கூடும் என்பதை பிரம்மிஷ்டர்கள் கண்கூடாகக் காட்டுகின்றனர்.

बाह्य-स्पर्शेष्वसक्तात्मा विन्दत्यात्मनि यत्सुखम् ।
स ब्रह्मयोग-युक्तात्मा सुखमक्षय्य-मश्नुते ॥ २१ ॥ ॥ २२५ ॥
ये हि संस्पर्शजा भोगा दुःखयोनय एव ते ।
आद्यन्तवन्तः कौन्तेय न तेषु रमते बुधः ॥ २२ ॥ ॥२२६॥

பாஹ்ய-ஸ்பர்சேஷ்-வஸக்தாத்மா விந்தத்-யாத்மனி
யத் ஸுகம் |
ஸ ப்ரஹ்மயோக-யுக்தாத்மா ஸுகமக்ஷய்ய-மச்னுதே ||

யே ஹி ஸம்ஸ்பர்சஜா போகா து:க்க-யோனய ஏவ தே |
ஆத்யந்தவந்த: கௌந்தேய ந தேஷு ரமதே புத: || 22

மாட்டான் ; (ச) மேலும் (அப்ரியம்) பிரியமில்லாததை (ப்ராப்ய) அடைந்து (ந உத்விஜேத்) வருத்தத்தால் மனம் தளரமாட்டான்.

21. (பாஹ்ய ஸ்பர்சேஷு) வெளிப் பொருள்களின் உணர்ச்சியில் (அஸக்தாத்மா) பற்றில்லாத அந்தக்கரணமுடையவன் (ஆத்மனி) ஆத்மாவினிடத்தில் (யத் ஸுகம்) எந்தச் சுகம் உண்டோ அதை (விந்ததி) அடைகிறுன். (ப்ரஹ்மயோக-யுக்தாத்மா) பரஹ்மத்தினிடம் கூடி நிற்கும் அந்தக் கரணமுடைய (ஸ:) அவன் (அக்ஷய்யம்) அழிவில்லாத (ஸுகம்) சுகத்தை (அச்னுதே) அனுபவிக்கிறுன்.

22. (கௌந்தேய) குந்தியின் மகனே, (யே) எந்த (போகா:) இன்பங்கள் (ஸம்ஸ்பர்சஜா:) வெளிப்

21-22. இச்சையானது கடுகளவு இருந்தாலும ஈசுவரனேக் காண முடியாது. ஆதலால் உனது சிறிய இச்சைகளைத் திருப்தி செய்து கொண்டு பெரிய இச்சைகளை விவேகத்தாலும் விசாரத்தாலும் நிராகரித்துவிடு. (ரா, கி.)

பெண்ணாசையும் பொன்னாசையும் மனத்தை விட்டகலும்போது ஆத்மாவினிடம் வேறு என்ன தான் தங்கியிருக்கும்? பிரம்மானந்தமே அங்கு குடி கொண்டிருக்கும். (ரா. கி.)

शक्नोतीहैव यः सोढुं प्राक्शरीर-विमोक्षणात् ।
कामक्रोधोद्भवं वेगं स युक्तः स सुखी नरः ॥ २३ ॥ ॥२२७॥

சக்னோதீஹைவ ய: ஸோடும் ப்ராக்-சரீர-
விமோக்ஷணாத் |
காமக்ரோதோத்பவம் வேகம் ஸ யுக்த: ஸ ஸுகீ நர:
|| 23 || (227)

பொருட்களின் பரிசயத்தால் உண்டானவையோ (தே) அவை (து:க்கயோனய ஏவ) துன்பத்துக்குப் பிறப்பிடமாயுள்ளவைகளே ; (ஆத்யந்தவந்த: ஹி) ஆரம்பமும் முடிவும் உடையவைகளன்றோ ; (புத:) அறிவாளி (தேஷு) அவைகளில் (ந ரமதே) களிப்புறமாட்டான்.

23. (ய:) எவன் (சரீர விமோக்ஷணாத்) உடல் நீங்குவதற்கு (ப்ராக்) முன்பாக (காமக்ரோதோத்பவம்) ஆசையாலும கோபத்தாலும் எழும் (வேகம்) மனக்கிளர்ச்சியை (இஹ ஏவ) இங்கிருக்கும்போதே (ஸோடும்) தாங்குவதற்கு (சக்னோதி) வலிமை பெற்றவனோ (ஸ:) அவன் (யுக்த:) யோகத்தில் நிலைத்தவன், (ஸ:) அவனே (ஸுகீ நர:) சுகபுருஷன்.

---

23. ஒ—இவ்வாழ்க்கையிலுள்ள போதே எவன் இறந்தவனைப் போல இருக்கிறானோ, அதாவது எவனுடைய ஆசாபாசங்கள் பிணத்தினிடத்திற் போல முற்றிலும் நசித்துவிட்டனவோ அவன்தான் உண்மையான ஞானி. (ரா. கி.)

கணவனுடன் வாழும்போதே காமத்தையடக்கிய ஸ்திரீ திவ்ய மாதாவே ஆகிறாள். (ரா. கி.)

ஒ—வாசோ வேகம் மனஸ: க்ரோத வேகம்
விதித்ஸா வேகம் உதரோபஸ்த வேகம் |
ஏதான் வேகான் யோ விஷஹேத் உதீர்ணன்
தம் மன்யேऽஹம் ப்ராஹ்மணம் வை முனிஞ்ச

(சாந்தி பர்வம் ம. பா.)

योऽन्तःसुखो ऽन्तरारामस्-तथान्त-र्ज्योतिरेव यः ।
स योगी ब्रह्मनिर्वाणं ब्रह्मभूतो ऽधिगच्छति ॥ २४ ॥ २२८ ॥

लभन्ते ब्रह्मनिर्वाण-मृषयः क्षीण-कल्मषाः ।
छिन्नद्वैधा यतात्मानः सर्वभूतहिते रताः ॥ २५ ॥ ॥२२९॥

யோऽந்த:ஸுகோ ऽந்தராராமஸ்-ததாந்தர்-
ஜ்யோதிரேவ ய: |
ஸ யோகீ ப்ரஹ்மநிர்வாணம் ப்ரஹ்மபூதோ ऽதிகச்சதி
|| 24 || (228)

லபந்தே ப்ரஹ்ம-நிர்வாணம் ருஷய: க்ஷீண-
கல்மஷா: |
ச்சின்னத்வைதா யதாத்மான: ஸர்வபூதஹிதே ரதா:
|| 25 || (229)

---

24. (ய:) எவன் (அந்த:ஸுக:) உள்ளே சுக முடையவனே (அந்தராராம:) உள்ளே களியாட்ட முடையவனே (ததா) அவ்வாறே (ய:) எவன் (அந்தர் ஜ்யோதி:) உள்ளே ஒளி உள்ளவனே (ஸ:) அந்த (யோகீ ஏவ) யோகியே (ப்ரஹ்மபூத:) உயிர் வாழும் போதே பிரம்மமாய் (ப்ரஹ்ம-நிர்வாணம்) பிரம்மத்தில் முக்தியை (அதிகச்சதி) அடைகிறுன்.

25. (க்ஷீணகல்மஷா:) எவருடைய தீவினைகள் ஒழிந்தனவோ (ச்சின்னத்வைதா:) எவருடைய சந்தேகங்கள் தவிர்ந்தனவோ (யதாத்மான:) எவருடைய

---

24. இந்த உள் நாட்டத்திலிருந்து விலகியிருத்தலே துன்பத்திற்கு ஆரம்பம்.

ஒ—ஜ்யோதி-ராத்மனி நான்யத்ர ஸமம் தத் ஸர்வ ஜந்துஷு ।
ஸ்வயஞ்ச சக்யதே த்ரஷ்டும் ஸுஸமாஹித-சேதஸா ॥

25. தனக்குள் தானே பூர்ணாநந்தத்தை அனுபவிப்பது ஈசுவர தரிசனத்தின் அடையாளங்களில் ஒன்றுகும். சமுத்திரத்தின் மேல்

कामक्रोध-वियुक्तानां यतीनां यतचेतसाम् ।
अभितो ब्रह्मनिर्वाणं वर्तते विदितात्मनाम् ॥ २६ ॥ ॥२३०॥

காமக்ரோத-வியுக்தானும் யதீனும் யதசேதஸாம் |
அபிதோ ப்ரஹ்ம-நிர்வாணம் வர்த்ததே
விதிதாத்மனும் || 26 || (230)

இந்திரியங்கள் நன்கு அடங்கியவையோ (ஸர்வ பூத ஹிதே ரதா:) எவர்கள் எவ்வுயிர்க்கும் நன்மையே நாடுபவரோ (ருஷய:) அந்த ரிஷிகள் (ப்ரஹ்ம நிர்வாணம்) பிரம்மத்தினிடம் முக்தியை (லபந்தே) அடைகிருர்கள்.

26. (காமக்ரோத - வியுக்தானும்) காமத்தினின்றும் கோபத்தினின்றும் விடுபட்டவர்களும் (யத சேதஸாம்) அடங்கிய சித்தம் உடையவர்களும் (விதிதாத்மனும்) ஆன்ம தரிசனம் பெற்றவர்களும் ஆகிய (யதீனும்) ஸங்நியாஸிகளுக்கு (அபித:) இகத்திலும் பரத்திலும் (ப்ரஹ்ம நிர்வாணம்) பிரம்ம ஸாயுஜ்ய முக்தி (வர்த்ததே) கிட்டுகின்றது.

பரப்பில் அலைகள் சுருண்டோடுகின்றன. ஆனல் அதன் கீழுள்ள நீர்த் தொகுதியோ அசைவற்று அமைதியாயிருக்கிறது.

ஒ—த்ருஷ்டிம் ஜ்ஞானமயீம் க்ருத்வா பச்யேத் ப்ரஹ்மமயம் ஜகத் ||

பரமபத நாதனை உள்ளத்தில் தியானித்தல் மட்டும் போதாது; உலகில் எல்லா உயிர்களிடத்தும் உறைபவனுய் அவனைக் கண்டு ஸேவை செய்யவும் வேண்டும்.

26. அபித:—ஞானம் நிலைபெற்ற ஸந்நியாசிகளுக்கு இங்கேயே இப்போதே முக்தியும் (ஸத்யோமுக்தி), கருமயோகிகளுக்குச் சித்தசுத்தியின் வழியாகக் கிரம முக்தியும் கூறப்பட்டது.
(சங்கரர்.)

स्पर्शान् कृत्वा बहि-र्बाह्यां-श्चक्षुश्चैवान्तरे भ्रुवोः ।
प्राणापानौ समौ कृत्वा नासाभ्यन्तर-चारिणौ ॥२७॥ ॥२३१॥
यतेन्द्रिय-मनो-बुद्धि-र्मुनि-र्मोक्षपरायणः ।
विगतेच्छा-भय-क्रोधो यः सदा मुक्त एव सः ॥ २८ ॥ २३२॥

ஸ்பர்சான் க்ருத்வா பஹிர்-பாஹ்யான்ச்-
சக்ஷுச்சைவாந்தரே ப்ருவோ: |
ப்ராணுபானௌ ஸமௌ க்ருத்வா
நாஸாப்யந்தர-சாரிணௌ || 27 || (231)

யதேந்த்ரிய-மனே-புத்திர்-
முனிர்-மோக்ஷ-பராயண: |
விகதேச்சா-பய-க்ரோதோ
ய: ஸதா முக்த ஏவ ஸ: || 28 || (232)

27-28. (பாஹ்யான்) புறம்பேயுள்ள (ஸ்பர்சான்) விஷய நுகர்ச்சிகளை (பஹி: க்ருத்வா) புறம்பே வைத்து (ச) மேலும் (சக்ஷு:) கண்ணை (ப்ருவோ:) புருவங்களின் (அந்தரே ஏவ) மத்தியிலேயே வைத்து (நாஸாப்—யந்தர—சாரிணௌ) நாசியினுள் சஞ்சரிக்கும் (ப்ராணுபானௌ) ப்ராண அபான வாயுக்களை (ஸமௌ) ஸமமாக (க்ருத்வா) செய்து (யதேந்த்ரிய மனேபுத்தி:) இந்திரியம் மனம் புத்தி இவற்றை அடக்கியவனுய் (மோக்ஷ பராயண:) மோக்ஷத்தையே உயர்வாக நாடுபவனுய் (விகத இச்சா பயக்ரோத:) ஆசை, பயம், கோபம் இவையற்றவனுய் (முனி:) தியானத்தில் முயல்பவனுய் உள்ளவன் (ய:) எவனே (ஸ:) அவன் (ஸதா) எப்போதும் (முக்த: ஏவ) முக்தனே.

---

27. தியான யோக முறை சுருக்கிக் குறிக்கப்பட்டது. இதே விஷயம் 6-வது அத்தியாயத்தில் விரிவாய் எடுத்துரைக்கப்படும்.

भोक्तारं यज्ञ-तपसां सर्वलोक-महेश्वरम् ।
सुहृदं सर्वभूतानां ज्ञात्वा मां शान्ति-मृच्छति ॥२९॥॥२३३॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादे सन्न्यासयोगो नाम
पञ्चमोऽध्यायः ॥

போக்தாரம் யஜ்ஞ-தபஸாம் ஸர்வலோக-மஹேச்வரம் |
ஸுஹ்ருதம் ஸர்வபூதானும் ஜ்ஞாத்வா மாம் சாந்திம்-
ருச்சதி || (233)

இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம
வித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணர்ஜுன
ஸம்வாதே ஸந்ந்யாஸயோகோ நாம
பஞ்சமோऽத்யாய: ||

---

29. (யஜ்ஞ-தபஸாம்) யாகத்துக்கும் தவத்துக்கும் (போக்தாரம்) போக்தாவாயும் (ஸர்வலோக மஹேச்வரம) உலகுக்கெல்லாம் ஈசனுயும் (ஸர்வ பூதானும்) எல்லாவுயிர்க்கும் (ஸுஹ்ருதம்) நண்பனுயும் உள்ள (மாம்) என்னே (ஜ்ஞாத்வா) அறிந்து (சாந்திம்) மோக்ஷ இன்பத்தை (ருச்சதி) அவன் அடைகிருன்.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திரமாயும்
ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸம்பாஷணே
யாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத்கீதை என்னும்
உபநிஷத்தில் ஸந்ந்யாஸயோகம் என்று
பெயர் பெற்ற ஐந்தாவது அத்தியாயம்
முற்றும்.

அத்தியாய விஷயச் சுருக்கம்

கர்மம் புரிதல் மேலா, விட்டிடுதல் மேலா என்பது மீண்டும் அர்ஜுனன் கேள்வி. பொதுப்படக் கூறுமிடத்து எவ்வகைச் சாதகனுக்கும் கர்மத்தை விட்டு விடுதலினும் கர்மத்தைப் பற்றின்றி செய்தலே நலம் என்பது துணிபு. பற்றின்மை முக்கியம். அப் பற்றின்மை ஸாங்கியத்தாலும் கைகூடலாம். கர்மத்தாலும் கைகூடலாம். இரண்டு வழிகளாலும் எய்தப்பெறும் பயன் ஒன்றே எனினுங் கர்மத்தைக் கூடாமல் ஸங்ந்யாஸநிலை யடைதல் எவர்க்கும் எளிதன்று. ஆகையால் காயத்தாலும் மனத்தாலும் புத்தியாலும் எவ்வெக்கர்மம் செய்ய வேண்டி ஏற்படினும் சித்த சுத்தியின் பொருட்டு அவ்வக்கர்மத்தைச் செய்து ஆசையொழித்து ஒன்பது வாயில் பட்டணம் எனும் இத்தேகததில் ஸாதகன் வாழக் கடவன். இவனுக்குச் செயலும் இல்லை, செய்யுந்தன்மையுமில்லை; செயல் எல்லாம் பிரகிருதிக்கே உரியது. இந்த ஞானம் நிலைக்கப் பெறுதலே ஸங்ந்யாஸம். இங் நிலையில் விடியு முதயம் போல அருளுதயம் தானே ஏற்பட்டு, அஜ்ஞான இருள் அகல்கின்றது. உயர்வு தாழ்வின்றி எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் விளங்கும் ஒரே ஆன்மாவையே ஞானியாகிய பண்டிதன் காண்கின்ருன். இந்த ஸமதர்சனமே பிரம்மஞானியின் முக்கிய லக்ஷணம்.

அவன் அழியும் வெளிச்சுகங்களை வெறுத்து உள் முகப்பட்ட அழியாத ஆன்ம சுகத்தை அடைகின்ருன். இதை அடையும் முயற்சியில் பிராணுயாமத்துடன் கூடிய தியான யோகப் பயிற்சியும் சிறந்ததொரு ஸாதனமாகும். (இது அத். 6-ல் விரித்துரைக்கப் படும்). சரீரம் விழு முன்னரே இவ்வுண்மையைக் கண்டு, கர்ம யோகத்தால் பக்குவப்பட்ட மனத்துடன் ஸாங்கியத்தாலோ தியா னத்தாலோ, ஸர்வலோக நாயகனும் ஸர்வபூத சரண்யனுமான பகவானிடம் பக்தி பூண்டு அவனுடைய அனுக்கிரஹத்தால் பரம சாந்தியை இங்கேயே எய்தக் கடவன். இதுவே ஜீவன் முக்தி.

இச்சையறு கன்மத்தின் ஏற்றம் தனைப்புகன்று
எச்செயலையும் துறந்த ஞானியியல்—மெச்சியவன்
தானடையும் ஒண்பயனும் தண்ணளியாற் சாற்றுவான்
தேனடையும் பைந்துளவன் தேர்ந்து. (கீ. வெ.)

॥ षष्ठोऽध्यायः ॥

(ध्यानयोगः)

श्रीभगवानुवाच—
अनाश्रितः कर्मफलं कार्यं कर्म करोति यः ।
स सन्न्यासी च योगी च न निरग्निर्न चाक्रियः ॥१॥ ॥२३४॥

ஆறும் அத்தியாயம்

(த்யான யோகம்)

ஸ்ரீ பகவானுவாச—
அனாச்ரித: கர்மபலம் கார்யம் கர்ம கரோதி ய: |
ஸ ஸந்ந்யாஸீ ச யோகீ ச ந நிரக்னிர் ந சாக்ரிய:
|| 1 || (234)

ஸ்ரீபகவான் கூறியது—

1. (ய:) எவன் (கர்மபலம்) கருமத்தின் பயனை (அனாச்ரித:) சாராது (கார்யம்) செய்யவேண்டிய (கர்ம) கர்மத்தை (கரோதி) செய்கின்றானோ (ஸ:) அவன் (ஸந்ந்யாஸீ ச) சிறந்த துறவியும் (யோகீ ச) யோகியும் ஆவான். (நிரக்னி:) அக்னியை விட்டவன் (ந) அன்று. (அக்ரிய: ச) கருமம் செய்யாதவனும் (ந) அன்று.

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்—

ஐந்தாவது அத்தியாயத்தில் கர்மயோகம், கர்மஸந்நியாஸம் இரண்டின் ஒற்றுமை வேற்றுமைகளும் விரித்துக் கூறப்பட்டு பரமாத்மப் பிராப்திக்கு ஸாதனமான தியான யோகமும் சுட்டிக் காட்டப்பட்டது. தியான யோகத்தின் அப்பியாச முறை இவ்வத்தியாயத்தில் விரித்துக் கூறப்படும். இதனால் இவ்வத்தியாயம் **தியான யோகம்** எனப்படும். இதை **அப்பியாஸ யோகம்** என்றும், **ஆத்மஸம்யம யோகம்** என்றும் கூறுவாறுமுண்டு.

यं सन्न्यास-मिति प्राहु-र्योगं तं विद्धि पाण्डव ।
न ह्यसन्न्यस्त-सङ्कल्पो योगी भवति कश्चन ॥ २ ॥ ॥२३५॥

आरुरुक्षो-र्मुने-र्योगं कर्म कारण-मुच्यते ।
योगारूढस्य तस्यैव शमः कारण-मुच्यते ॥ ३ ॥ ॥२३६॥

யம் ஸங்ந்யாஸ-மிதி ப்ராஹுர்-யோகம் தம் வித்தி பாண்டவ |
ந ஹ்யஸங்ந்யஸ்த-ஸங்கல்போ யோகீ பவதி கச்சன || 2 || (235)

ஆருருக்ஷோர்-முனேர்-யோகம் கர்ம காரண-முச்யதே |
யோகாரூடஸ்ய தஸ்யைவ சம: காரண-முச்யதே || 3 ||

---

2. (பாண்டவ) பாண்டவா! (யம்) எதை (ஸங்ந்யாஸம் இதி) ஸங்நியாஸம் என்று (ப்ராஹு:) கூறினார்களோ (தம்) அதை (யோகம்) யோகம் என்று (வித்தி) அறிந்து கொள். (ஹி) ஏனெனில் (அஸங்ந்யஸ்த ஸங்கல்ப:) ஸங்கல்பத்தைத் துறவாதவன் (கச்சன) எவனும் (யோகீ) யோகியாக (ந பவதி) ஆகமாட்டான்.

3. (யோகம்) யோகத்தில் (ஆருருக்ஷா:) உயர ஏற விரும்பும் (முனே:) முனிவனுக்கு (கர்ம) கர்மம் (காரணம்) ஸாதனமாக (உச்யதே) சொல்லப்படுகிறது; (யோகாரூடஸ்ய) யோகத்தில் உயர் நிலை எய்திய (தஸ்ய ஏவ) அவனுக்கே (சம:) ஒழிவு (காரணம்) ஸாதனமாக (உச்யதே) சொல்லப்படுகிறது.

---

2. ஒ—அந்தக்கரண மடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினு நன்று எந்தாய்! பராபரமே!
(தாயுமானவர்)

यदा हि नेन्द्रियार्थेषु न कर्म-स्वनुषज्जते ।
सर्व-सङ्कल्प-सन्न्यासी योगारूढ-स्तदोच्यते ॥ ४ ॥ ॥२३७॥
उद्धरे-दात्मनात्मानं नात्मान-मवसादयेत् ।
आत्मैव ह्यात्मनो बन्धु-रात्मैव रिपु-रात्मनः ॥ ५ ॥ ॥२३८॥

யதா ஹி நேந்த்ரியார்த்தேஷு ந கர்மஸ்-
வனுஷஜ்ஜதே |
ஸர்வ-ஸங்கல்ப-ஸந்ந்யாஸீ யோகாரூடஸ்-
ததோச்யதே || 4 || (237)
உத்தரே-தாத்மனாத்மானம் நாத்மான-மவஸாதயேத் |
ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்து-ராத்மைவ ரிபு-ராத்மன:
|| 5 || (238)

---

4. (யதா) எப்போது (ஹி) நிச்சயமாக (இந்த்ரியார்த்தேஷு) இந்திரியங்கள் நாடும் பொருள்களில் (ந அனுஷஜ்ஜதே) பற்றுக்கொள்வதில்லையோ (ந கர்மஸு) கர்மங்களிலும் பற்றுக் கொள்வதில்லையோ (ததா) அப்போது (ஸர்வஸங்கல்ப ஸந்ந்யாஸீ) எல்லா ஸங்கல்பங்களையும் துறந்த அவன் (யோகாரூட:) யோகாரூடன் என்று (உச்யதே) சொல்லப்படுகிறான்.

5. (ஆத்மனா) தன்னாலே (ஆத்மானம்) தன்னை (உத்தரேத்) உயர்த்திக் கொள்ளவேண்டும்; (ஆத்மானம்) தன்னை (ந அவஸாதயேத்) தாழ்த்திக் கொள்ளக் கூடாது; (ஹி) நிச்சயமாக (ஆத்மா ஏவ) தானே (ஆத்மன:) தனக்கு (பந்து:) உறவினன் (ஆத்மா ஏவ) தானே (ஆத்மன:) தனக்கு (ரிபு:) பகைவன்.

---

4. **ஸங்கல்பம்**—ஓ—ஆசையே! உனக்கு வேர் எங்கே என்று கண்டுகொண்டேன். ஸங்கல்பத்தில் தான் வேரூன்றி இருக்கிறாய். உன்னை இனி ஸங்கல்பிக்க மாட்டேன். அதனால் நீ வேருடன் அழிவாய்.

(ம. பா. சாந்தி பர்வம் 177 : 25)

बन्धुरात्मात्मन-स्तस्य येनात्मै-वात्मना जितः ।
अनात्मनस्तु शत्रुत्वे वर्तेतात्मैव शत्रुवत् ॥ ६ ॥ ॥२३९॥

பந்துராத்மாத்மனஸ்-தஸ்ய யேனத்மை-வாத்மனு ஜித:|
அனுத்மனஸ்து சத்ருத்வே வர்த்தேதாத்மைவ சத்ருவத்
|| 6 || (239)

6. (யேன) எவனுல் (ஆத்மனு ஏவ) தன்னுலேயே (ஆத்மா) தான் (ஜித:) ஜயிக்கப்பட்டவனே (தஸ்ய) அவனுக்கு (ஆத்மா) தானே (ஆத்மன:) தனக்கு (பந்து:) உறவினன்; (து) ஆனுல் (அனுத்மன:) தன்னை ஜயிக்காதவனுக்கு (ஆத்மா ஏவ) தானே (சத்ருவத்) பகைவனைப்போல் (சத்ருத்வே) பகைமை நிலையில் (வர்த்தேத) உள்ளவனுவான்.

ஒ—கீ. 6. 24.

ஒ—'வேதாந்தமாவது வேட்கை யொழிந்திடம்' (திருமந்திரம்)
'வேண்டார்கள் கன்மம் விமலனுக்காட்பட்டோர்' ஷை

5. ஒ—பூமியின் நான்கு திக்குகளிலும் சென்றுலும் உண்மையான தர்மத்தை ஓரிடத்துங் காணமாட்டாய். இருப்பதெல்லாம் உன் மனத்திலேயே இருக்கிறது. (ரா. கி.)

6. ஈசுவரன், குரு, அடியார் இவர்கள் எல்லோருடைய அருளும் இருந்தாலுங் கூட இன்னெரு அருள் இல்லையாகில் ஜீவன் நாசமடைவான். அந்த முக்கியமான அருள் தன் நெஞ்சினது; அதாவது தான் முக்தி அடைய வேண்டும் என்ற ஆர்வம் நெஞ்சில் உதிக்க வேண்டும். (ரா. கி)

'தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமற் ருனே கெடுகின்ருன்' (திருமந்திரம் 280.)

जितात्मनः प्रशान्तस्य परमात्मा समाहितः ।
शीतोष्ण-सुखदुःखेषु तथा मानापमानयोः ॥ ७ ॥ ॥२४०॥

ஜிதாத்மன: ப்ரசாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித: |
சீதோஷ்ண-ஸுகது:க்கேஷு ததா மாஞபமானயோ:
|| 7 || (240)

---

7. (சீதோஷ்ண - ஸுக - து:க்கேஷு) குளிர் வெப்பம் இன்ப துன்பங்களிலும் (ததா) அவ்வாறே (மாஞபமானயோ:) மான அவமானங்களிலும் (ஜிதாத்மன:) தன்னை ஜயித்த (ப்ரசாந்தஸ்ய) அமைதியான உள்ளம் உடையவனுக்கு (பரமாத்மா) பரமாத்ம ஞானம் (ஸமாஹித:) நிலை பிறழாது நிற்கும்.

---

7. **பரமாத்மா** :— ஒ— 'ஆத்மா க்ஷேத்ரஜ்ஞ இத்யுக்த: ஸம்யுக்த: ப்ரக்ருதேர்-குணை: | தைரேவ து விநிர்முக்த: பரமாத்மேத்-யுதாஹ்ருத: (ம. பா. சாந்தி பாவம் 187, 24.)

8. **கூடஸ்த** :—'கூடம்' என்பது சம்மட்டியடிக்கல். அதன் மேல் அடிக்கப்படும் இரும்பு பல உருவத்தையடையினும் அடிக்கல் மாறுபடாது. அதுபோல அசையாது நிற்பவன். 'கூடம்' என்பது மலையினுச்சியையுங் குறிக்கும். அவ்வுவமையுங் கொள்ளலாம். குணமென்னுங் குன்றேறி நிற்பவன் கூடஸ்தன்.

ஞானம்—சாஸ்திரத்தால் போதிக்கப்பட்ட அறிவு; **விஞ்ஞானம்**—சாஸ்திரம் போதித்ததை அனுபவத்தால் உணரும் அறிவு.

ஸமலோஷ்டாச்ம காஞ்சன :—

ஓடும் இரு நிதியு மொன்ருகக் கண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே. (தாயுமானவர்)

ஒ—ஒருவன் வானப்ரஸ்தனுக அவன் மனைவியுடன் வனம் செல்லுகையில், ஒரு வைரக்கல்லைக் கண்டு அதைத் தன் மனைவி பார்த்து ஆசைப்படலாகாதென்று கருதி அதை மண்ணில் மறைத்தான். மனைவி, 'வைரத்துக்கும் மண்ணுங்கட்டிக்கும் வித்தியாசம் தெரியும்போது ஏன் வீட்டை விட்டு வனத்துக்கு வந்தீர்கள் ?' என்று கேட்டாள்.

ज्ञान-विज्ञान-तृप्तात्मा कूटस्थो विजितेन्द्रियः ।
युक्त इत्युच्यते योगी सम-लोष्टाश्म-काञ्चनः ॥८॥ ॥२४१॥
सुहृन्मित्रा-र्युदासीन-मध्यस्थ-द्वेष्य-बन्धुषु ।
साधुष्वपि च पापेषु समबुद्धि-र्विशिष्यते ॥ ९ ॥ ॥२४२॥

ஜ்ஞான-விஜ்ஞான-த்ருப்தாத்மா கூடஸ்தோ
விஜிதேந்த்ரிய: |
யுக்த இத்யுச்யதே யோகீ ஸம-லோஷ்டாச்ம-காஞ்சன:
|| 8 || (241)
ஸுஹ்ருன்-மித்ரார்-யுதாஸீன மத்யஸ்த-த்வேஷ்ய-
பந்துஷு |
ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர்-விசிஷ்யதே || 9 ||

---

8. (ஜ்ஞானவிஜ்ஞான - த்ருப்தாத்மா) அறிவாலும் அனுபவத்தாலும் திருப்தியடைந்தவனாய் (கூடஸ்த:) அசையாதவனாய் (விஜிதேந்த்ரிய:) இந்திரியங்களை முற்றும் ஜயித்தவனாய் (ஸமலோஷ்டாச்மகாஞ்சன:) மண்ணையும் கல்லையும் பொன்னையும் ஸமமாய்க் கருதுபவனாய் உள்ள (யோகீ) யோகியானவன் (யுக்த இதி) யுக்தன் என (உச்யதே) கூறப்படுகின்றான்.

9. (ஸுஹ்ருன்-மித்ர-அரி-உதாஸீன-மத்த்யஸ்த-த்வேஷ்ய-பந்துஷு) நன்மனத்தார், நட்பாளர், சத்துரு, உதாஸீனர், மத்தியஸ்தர், வெறுப்பவர், உறவினர் இவர்களிடத்தும், (ஸாதுஷு) நல்லவர்களிடத்தும் (அபி) மேலும் (பாபேஷு ச) கெட்டவர்களிடத்தும் (ஸம புத்தி:) சமபுத்தியுடையவன் (விசிஷ்யதே) சிறந்தவனாகிறான்.

---

9. உதாசீனர்—ஸாதக பாதகம் செய்யாமல் ஒதுங்கியிருப்பவர்.

மத்தியஸ்தர்—நடுவு நிலையிலே நிற்பவர்.

ஒ—'யார்க்குமிடுமின் அவரிவரென்னென்மின்' (திருமந்திரம்.)

योगी युञ्जीत सतत-मात्मानं रहसि स्थितः ।
एकाकी यतचित्तात्मा निराशी-रपरिग्रहः ॥ १० ॥ ॥२४३॥

शुचौ देशे प्रतिष्ठाप्य स्थिर-मासन-मात्मनः ।
नात्युच्छ्रितं नातिनीचं चैलाजिन-कुशोत्तरम् ॥११॥ ॥२४४॥

யோகீ யுஞ்ஜீத ஸதத-மாத்மானம் ரஹஸி ஸ்தித: |
ஏகாகீ யதசித்தாத்மா நிராசீ-ரபரிக்ரஹ: || 10 || (243)

சுசௌ தேசே ப்ரதிஷ்டாப்ய ஸ்திர-மாஸன-மாத்மன: |
நாத்யுச்ச்ரிதம் நாதிநீசம் சைலாஜின-குசோத்தரம்
|| 11 || (244)

---

10. (ஸததம்) எப்போதும் (ரஹஸி) ஏகாந்தத்தில் (ஸ்தித:) இருந்துகொண்டு (ஏகாகீ) தன்னந்தனியனாய் (யதசித்தாத்மா) உள்ளத்தையும் உடலையும் அடக்கியவனாய் (நிராசீ:) ஆசையற்றவனாய் (அபரிக்ரஹ:) உடைமைப் பொருளில்லாதவனாய் (யோகீ) தியானத்தில் முயல்பவன் (ஆத்மானம் யுஞ்ஜீத) தன்னை நிலை நிறுத்த வேண்டும்.

11. (சுசௌ) சுத்தமான (தேசே) இடத்தில் (ஸ்திரம்) அசையாததும் (ந அத்யுச்ச்ரிதம்) அதிக உயர்வில்லாததும் (ந அதி நீசம்) அதிகத் தாழ்வில்லாததும் (சைலாஜினகுசோத்தரம்) தருப்பையின் மேல் தோலும் வஸ்திரமும் விரிக்கப்பெற்றதும் ஆகிய (ஆஸனம்) ஆசனத்தை (ஆத்மன:) தனக்கு (ப்ரதிஷ்டாப்ய) ஏற்படுத்திக்கொண்டு ;

---

11. ஒ—ஒருவரும் வராத மூலையிலோ, காட்டில் தன்னந்தனியனாகவோ, உனது மனமாகிய நிச்சப்தமான கோவிலிலோ ஈசுவரனைப் பற்றிச் சிந்தனை செய். (ரா. கி.)

तत्रैकाग्रं मनः कृत्वा यत-चित्तेन्द्रिय-क्रियः ।
उपविश्यासने युञ्ज्या-द्योग-मात्म-विशुद्धये ॥१२॥ ॥२४५॥

தத்ரைகாக்ரம் மன: க்ருத்வா யத-சித்தேந்த்ரிய-க்ரிய:|
உபவிச்யாஸனே யுஞ்ஜ்யாத் யோக-மாத்ம-விசுத்தயே
|| 12 || (245)

---

12. (தத்ர) அங்கு (ஆஸனே) ஆசனத்தில் (உபவிச்ய) அமர்ந்து (மன:) மனத்தை (ஏகாக்ரம் க்ருத்வா) ஒருமுனேப்படுத்தி (யதசித்த-இந்த்ரியக்ரிய:) மனத்தின் செயல்களேயும் இந்திரியங்களின் செயல் களேயும் அடக்கியவன் (ஆத்ம - விசுத்தயே) சித்த சுத்திக்காக (யோகம்) யோகத்தை (யுஞ்ஜ்யாத்) அப்பி யசிக்க வேண்டும்.

---

12. ஏகாக்ரம்—ஒ—ஊசியில் நூலேக் கோக்க வேண்டு மானுல் நூல் முனேயைக் கூராக்கி, நீட்டிக் கொண்டிருக்கும் பஞ்சுத் துண்டுகளே எடுத்தெறிய வேண்டும். அப்பால் ஊசியின் காது வழியாக நூல் எளிதாகப் போகும். அது போன்றதே ஈசுவரனிடம் மனத்தைச் செலுத்தலும். (ரா. கி.)

ஒரு வேடன் ஒரு பக்ஷியை எய்துவதற்குக் கவனமாக இருக்கை யில் பாதையில் சென்ற படாடோபமான கலியாண ஊர்வலத்தைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லே. அதைக் கவனித்த அவதூதர் வேடனே நோக்கி. "நீர்தான் எனக்கு குரு. பக்ஷியின் மீது கவனம் வைத்த உமது மனம் ஒருமித்திருந்தது போல் நான் தியானத்திலுட் காரும்போது என் மனமும் ஏகாக்ரமாய் அமரட்டும்" என்ருர்.
(ரா. கி.)

ஒ—ப்ரணவோ தனு:சரோ-ஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்ய-முச்யதே|
அப்ரமத்தேன வேத்தவ்யம் சரவத் தன்மயோ பவேத் ||
(மு. உப. 2. 2. 4)

समं काय-शिरो-ग्रीवं धारय-न्नचलं स्थिरः ।
संप्रेक्ष्य नासिकाग्रं स्वं दिशश्चानवलोकयन् ॥१३॥ ॥२४६॥
प्रशान्तात्मा विगतभी-र्ब्रह्मचारि-व्रते स्थितः ।
मनः संयम्य मच्चित्तो युक्त आसीत मत्परः ॥१४॥ ॥२४७॥

ஸமம் காய-சிரோ-க்ரீவம் தாரயன்-னசலம் ஸ்திர: |
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திசச்சானவ
லோகயன் || 13 || (246)
ப்ரசாந்தாத்மா விகதபீர்-ப்ரஹ்மசாரி-வ்ரதே ஸ்தித: |
மனஸ்-ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பர:
|| 14 || (247)

---

13. (காயசிரோக்ரீவம்) உடல், தலை, கழுத்து, இவற்றை (ஸமம்) ஒரே ஒழுங்காகவும் (அசலம்) அசையாமலும் (தாரயன்) நிறுத்தி (ஸ்திர:) ஸ்திரமாயிருந்து (ஸ்வம்) தன்னுடைய (நாஸிகாக்ரம்) மூக்கு நுனியை (ஸம்ப்ரேக்ஷ்ய) உற்று நோக்கி (திச: ச அனவலோகயன்) ஒரு திசையும் பாராமல்;

14. (ப்ரசாந்தாத்மா) அலையாத மனத்தனாய் (விகதபீ:) அச்சம் ஒழிந்தவனாய் (ப்ரஹ்மசாரிவ்ரதே) பிரம்மச்சரிய விரதத்தில் (ஸ்தித:) நிலை பெற்றவனாய் (மன:) மனத்தை (ஸம்யம்ய) அடக்கி (மச்சித்த:)

---

13. **நாஸிகாக்ரம்**—நாசி நுனியைப் பார்த்தல் போல் கண்ணிரண்டையும் வைத்துப் புறப் பொருள்களில் செல்லாமல் அகத்தில் பதியவைத்தல். புறத்தில் நாசி நுனியில் கவனம் செலுத்துவது கருத்தன்று. (சங்கரர்.)

நாட்டமிரண்டு நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமுமில்லை மனைக்கு மழிவில்லை
ஓட்டமுமில்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமுமில்லை சிவ னவனாமே. (திருமந்திரம்).

14. **ப்ரஹ்மசாரிவ்ரதே**—ஒ—பாதரஸம் தடவின கண்ணாடியில் ஒருவனுடைய முகம் ப்ரதிபலிக்கும். அதுபோல சக்தியையும்

युञ्जन्नेवं सदात्मानं योगी नियत-मानसः ।
शान्तिं निर्वाण-परमां मत्संस्था-मधिगच्छति ॥१५॥ ॥२४८॥

யுஞ்ஜன்-னேவம் ஸதாத்மானம் யோகீ நியத-மானஸ:|
சாந்திம் நிர்வாண-பரமாம் மத்ஸம்ஸ்தா-மதிகச்சதி || 15

என்னையே சிந்தித்து (மத்பர:) என்னையே பரமாய்க் கொண்டு (யுக்த:) யுக்தனாக (ஆஸீத) இருக்கக்கடவன்.

15. (ஏவம்) இவ்வாறு (ஸதா) எப்போதும் (ஆத்மானம்) தன்னை (யுஞ்ஜன்) ஒருமுகப்படுத்தி (நியத மானஸ:) அடங்கிய மனமுடைய (யோகீ) யோகியானவன் (நிர்வாண பரமாம்) முக்தியை முடிவாயுடையதும் (மத் ஸம்ஸ்தாம்) என்னிடத்து நிறுவுவதும் ஆன (சாந்திம்) சாந்தியை (அதிகச்சதி) அடைகின்றான்.

தூய்மையையும் பிரம்மச்சரியத்தால் காப்பாற்றிக் கொண்டிருக்கிறவனுடைய இதயத்தில் பகவானுடைய திவ்யரூபம் பிரதிபலிக்கும். (ரா. கி.)

ஒரு நீர்க்குடத்தில் சிறு துவாரம் இருந்தாலும் அதன் வழி நீர் எல்லாம் ஒழுகிப்போகும். பிரம்மசரியமில்லாதவன் மனம் அந்த ஓட்டைக் குடம் போன்றதே. (ரா. கி.)

ஒ—ந தபஸ்-தப இத்யாஹுர்-ப்ரமஹ்மசர்யம் தபோத்தமம் |
ஊர்த்வரேதா பவேத் யஸ்து ஸ தேவோ ந து மானுஷ: ||
—(ஞானஸங்கலினீ தந்திரம்).

ஆஹார தோஷத்தால் சிலசமயம் விந்துநாசம் ஏற்படக்கூடும். அதைப் பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. ஆனால் ஸாதனமார்க்கத்தில் உண்மையான தீவிரமுடையவன் ஸ்திரீகளை நாடக்கூடாது. பெண்ணாசையை ஒழித்தவனுக்கு பகவான் வெகு சமீபத்திலிருப்பான். (ரா. கி.)

மச்சித்த:—ஒ—மனமும் ஆத்மாவும் ஈசுவரனிடம் லயிக்க வேண்டும். குறிபார்த்து அம்பெய்பவனுக்குப் பேச்சடங்கி மூச்சு நிற்பது போல அங்கிலையில் ஒருவனுக்குப் பேச்சு அடங்கி மூச்சும் நின்றுவிடுகிறது. கும்பகம் தானே உண்டாகிறது. (ரா. கி.)

மத்பர:—வீட்டு ஈயானது ஒரு சமயம் அழுகிய புண்ணின் மீதும், மறுசமயம் நிவேதனத்துக்கு வைத்துள்ள பொருளின் மீதும்

नात्यश्नतस्तु योगोऽस्ति न चैकान्त-मनश्नतः ।
न चाति-स्वप्न-शीलस्य जाग्रतो नैव चार्जुन ॥१६॥ ॥२४९॥
युक्ताहार-विहारस्य युक्त-चेष्टस्य कर्मसु ।
युक्त-स्वप्नावबोधस्य योगो भवति दुःखहा ॥१७॥ ॥२५०॥

நாத்யச்னதஸ்து யோகோऽஸ்தி நசைகாந்த-மனச்னத: |
ந சாதி ஸ்வப்ன-சீலஸ்ய ஜாக்ரதோ நைவ சார்ஜுன
|| 16 || (249)

யுக்தாஹார-விஹாரஸ்ய யுக்த-சேஷ்டஸ்ய கர்மஸு |
யுக்த-ஸ்வப்னவபோதஸ்ய யோகோ பவதி து:க்கஹா
|| 17 || (250)

---

16. (அர்ஜுன) அர்ஜுனா! (அத்யச்னதஸ்து) அதிகமாய் உண்பவனுக்கு (யோக:) யோகம் (ந அஸ்தி) இல்லை; (ஏகாந்தம்) ஒன்றும் (அனச்னத: ச) உண்ணாதவனுக்கும (ந) இல்லை; (ச) மேலும் (அதி ஸ்வப்னசீலஸ்ய) தூக்கத்தில் அதிக விருப்புடையவனுக்கும் (ந) இல்லை; (ஜாக்ரத: ச) தூங்காமலேயே விழிப்பவனுக்கும் (ந ஏவ) இல்லை தான்.

17. (யுக்தாஹார விஹாரஸ்ய) மிதமான ஊணும் உலாவுதலும் உடையவனுக்கும், (கர்மஸு) கருமங்களில் (யுக்தசேஷ்டஸ்ய) மிதமான உழைப்புடையவனுக்கும் (யுக்தஸ்வப்னவபோதஸ்ய) மிதமான உறக்கமும் விழிப்பும உடையவனுக்கும் (யோக:) யோகமானது (து:க்கஹா) துன்பந்துடைப்பதாக (பவதி) ஆகிறது.

உட்காரும், ஆனால் தாமரையினுள்ள தேனை அருந்தும் வண்டு அதைத் தவிர வேறொன்றை மதியாது. நீ வீட்டு ஈயைப்போலிராமல் தேன்வண்டைப்போல் இரு. (ரா. கி.)

17. ஆஹாரம் ஒ—பகலில் திருப்தியாக போஜனம் செய்யலாம். ஆனால் இரவில் உணவு அற்பமாயும் ஸத்துக் குறைவாயும்

यदा विनियतं चित्त-मात्मन्येवावतिष्ठते ।
निःस्पृहः सर्वकामेभ्यो युक्त इत्युच्यते तदा ॥१८॥ ॥२५१॥
यथा दीपो निवातस्थो नेङ्गते सोपमा स्मृता ।
योगिनो यत-चित्तस्य युञ्जतो योग-मात्मनः ॥१९॥ ॥२५२॥

யதா விநியதம் சித்த-மாத்மன்யேவாவதிஷ்டதே |
நி:ஸ்ப்ருஹஸ்-ஸர்வகாமேப்யோ யுக்த இத்யுச்யதே
ததா || 18 || (251)
யதா தீபோ நிவாதஸ்தோ நேங்கதே ஸோபமா
ஸ்ம்ருதா |
யோகினோ யத-சித்தஸ்ய யுஞ்ஜதோ யோக-மாத்மன:
|| 19 || (252)

---

18. (யதா) எப்போது (விநியதம்) நன்கு அடங்கிய (சித்தம்) சித்தமானது (ஆத்மனி ஏவ) ஆத்மாவிலேயே (அவதிஷ்டதே) ஊன்றி நிற்கிறதோ (ததா) அப்போது (ஸர்வகாமேப்ய:) எல்லா ஆசைகளினின்றும் (நிஸ்ப்ருஹ:) பற்று நீங்கிய அவன் (யுக்த:இதி) யுக்தன் என்று (உச்யதே) சொல்லப்படுகிறுன்.

19. (யதா) எவ்வாறு (நிவாதஸ்த:) காற்றில்லாத இடத்தில் வைக்கப்பட்ட (தீப:) விளக்குச்சுடர் (ந இங்கதே) அசைவதில்லையோ, (ஸா) அது (ஆத்மன:)

இருக்கட்டும். சரீரத்துக்கு உஷ்ணத்தையும் மனத்துக்குச் சஞ்சலத்தையும் கொடுக்கும் உணவை உட்கொள்ளாதே. இழவு வீடுகளில் நடக்கும் சாப்பாட்டுக்குப் போகாதே. புரோகிதத்தால் பிழைப்பவர் வீட்டிலும் சாப்பிடாதே. ஈசுவரனுக்கு ஸமர்ப்பிக்கக் கூடிய சுத்த ஆகாரத்தையே சாப்பிடு. (ரா. கி.)

19. உன்னுமனங் கர்ப்பூர வுண்டைபோலே கரைய
மின்னு மானந்த விளக்கே பராபரமே. (தாயுமானவர்.)

ஒ—யதா பஞ்சைவ லீயந்தே ஜ்ஞானனி மனஸா ஸஹ |
புத்திச்ச நேங்கதே தத்ர பரமாத்மான-மச்னுதே ||

यत्रोपरमते चित्तं निरुद्धं योग-सेवया ।
यत्र चैवात्मनात्मानं पश्यन्नात्मनि तुष्यति ॥२०॥ ॥२५३॥
सुख-मात्यन्तिकं यत्तद्-बुद्धि-ग्राह्य-मतीन्द्रियम् ।
वेत्ति यत्र न चैवायं स्थित-श्चलति तत्त्वतः ॥ २१ ॥ ॥२५४॥

யத்ரோபரமதே சித்தம் நிருத்தம் யோக-ஸேவயா |
யத்ர சைவாத்மனுத்மானம் பச்யன்-ஞத்மனி
துஷ்யதி || 20 || (253)
ஸுக-மாத்யந்திகம் யத்தத் **புத்**தி-க்ராஹ்ய-மதீந்
த்ரியம் |
வேத்தி யத்ர ந சைவாயம் ஸ்திதச் சலதி தத்வத:
|| 21 || (254)

ஆத்மாவினிடத்தில் (யோகம்) யோகத்தை (யுஞ்ஜத:) அப்பியசிக்கும் (யோகின:) யோகியின் (யதசித்தஸ்ய) அடங்கிய சித்தத்துக்கு (உபமா) உவமையாக (ஸ்ம்ருதா) அறிஞர்களால் சிந்திக்கப்பட்டுள்ள து.

20. (யத்ர) எந்நிலையில் (யோகஸேவயா) யோகப் பியாசத்தால் (நிருத்தம்) நன்கு அடக்கப்பெற்ற (சித்தம்) சித்தமான து (உபரமதே) ஒழிவடையுமோ ; (ச) மேலும் (யத்ர) எந்நிலையில் (ஆத்மனு) ஆத்மாவால் (ஆத்மானம்) ஆத்மாவை (பச்யன்) கண்டு (ஆத்மனி ஏவ) ஆத்மாவினிடத்திலேயே (துஷ்யதி) ஸந்தோஷம் எய்துவனே ;

21. (ஆத்யந்திகம்) எல்லையில்லாததும் (புத்தி க்ராஹ்யம்) புத்தியினுல் மட்டும் அறியக்கூடியதும் (அதீந்த்ரியம்) இந்திரியங்களுக்கெட்டாததும் ஆகிய

---

21. ஸுகமாதயந்திகம் — ஒ — ஸமாதியில் ஒருவனுடைய மனநிலைமை எப்படியிருக்கும்? உயிருள்ள மீனென்றைச் சிறிது நேரம் ஜலத்திலிருந்து எடுத்துவிட்டுப் பழையபடி தண்ணீரில் போட்டால் அது எவ்வளவு ஆனந்தம் அனுபவிக்குமோ அப்படி யிருக்கும். (ரா. கி.)

यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिकं ततः ।
यस्मिन्स्थितो न दुःखेन गुरुणापि विचाल्यते ॥२२॥ ॥२५५॥

யம் லப்த்வா சாபரம் லாபம் மன்யதே நாதிகம் தத: |
யஸ்மின் ஸ்திதோ ந துக்கேன குருணாபி விசால்யதே
|| 22 || (255)

(ஸுகம்) இன்பம் (யத்தத்) எதுவோ அதை (யத்ர) எந்நிலையில் (அயம்) இவன் (வேத்தி) அறிகிருனே (ச) மேலும் (ஸ்தித:) எதில் நிலைபெற்று (தத்வத:) உண்மை நிலையிலிருந்து (ந ஏவ சலதி) ஒருபோதும் நழுவுவதில்லையோ ;

22. (ச) அன்றியும் (யம்) எதை (லப்த்வா) அடைந்தபின் (அபரம் லாபம்) வேறு லாபத்தை (தத:) அதைக்காட்டிலும் (அதிகம்) பெரிதாக (ந மன்யதே) மதிக்கமாட்டானே ; (யஸ்மின்) எதில் (ஸ்தித:) நிலைத்தபின் (குருணா) மிகப் பெரிதான (துக்கேன அபி) துக்கத்தாலுங்கூட (ந விசால்யதே) சலிக்கமாட்டானே ;

ஒ—ஸமாதி-நிர்த்தூத-மலஸ்ய சேதஸோ நிவேசிதஸ்யாத்மனி யத் ஸுகம் பவேத் |
ந சக்யதே வர்ணயிதும் கிரா ததா ஸ்வயம் ததந்த: கரணேன —க்ருஹ்யதே || மதுஸூதன ஸரஸ்வதி.

22. யம் லப்த்வா—ஒ—புதிதாய்க் குழந்தையைப் பெற்ற தாய் வீட்டு வேலையைவிடக் குழந்தையுடன் கொஞ்சுவதிலேயே மிகுதியான ஆனந்தம் அடைகிருள். இருதயத்தில் ஈசுவரனைப் பெற்றவனும் பழைய வேலைகளில் அவ்வளவு பிரியமில்லாமல் ஈசுவர சேவை செய்வதிலேயே மிகுதியான ஆனந்தத்தைக் காண்கிருன். (ரா. கி.)

ஒ—தாயார் மடியிலிருப்பதைவிடக் குழந்தைகள் பொம்மைகளையும் விளையாட்டுக்களையும் அதிகம் மதிப்பதில்லை. அதுபோல பகவானை நாடியிருப்போர் உலகில் செல்வம், புகழ் இவற்றை மதிப்பதில்லை. (ரா. கி.)

तं विद्याद्-दुःख-संयोगवियोगं योग-संज्ञितम् ।
स निश्चयेन योक्तव्यो योगोऽनिर्विण्ण-चेतसा ॥२३॥ ॥२५६॥
सङ्कल्प-प्रभवान् कामांस्त्यक्त्वा सर्वा-नशेषतः ।
मनसैवेन्द्रिय-ग्रामं विनियम्य समन्ततः ॥ २४ ॥ ॥ २५७ ॥

தம் வித்யாத்-து:க்க-ஸம்யோக: வியோகம் யோக-ஸம்ஜ்ஞிதம் |
ஸ நிச்சயேன யோக்தவ்யோ யோகோऽநிர்விண்ண-சேதஸா || 23 || (256)
ஸங்கல்ப-ப்ரபவான் காமான்ஸ்-த்யக்த்வா ஸர்வா-னசேஷத: |
மனஸைவேந்த்ரிய-க்ராமம் விநியம்ய ஸமந்தத: || 24 ||

23. (தம்) அந்த (து:க்கஸம்யோக-வியோகம்) துக்கத்தின் கூட்டுறவு நீங்குதலே (யோகஸம்ஜ்ஞிதம்) யோகம் என்று குறிப்பிட்டதாக (வித்யாத்) அறிவாயாக; (அநிர்விண்ண-சேதஸா) தளராத நெஞ்சுடன் (ஸ:) அந்த (யோக:) யோகமானது (நிச்சயேன) விடா முயற்சியுடன் (யோக்தவ்ய:) அப்பியாசத்திற்குரியது.

24. (ஸங்கல்ப ப்ரபவான்) ஸங்கல்பத்தினின்று பிறக்கும் (காமான்) காமங்கள் (ஸர்வான்) எல்லாவற்றையும (அசேஷத:) மிச்சமின்றி (த்யக்த்வா)

அபரம் லாபம்—ஸித்திகள் முதலியனவும்—ஒ—அருவருப்பான பொருள்களை வெறுப்பது போல யோகியானவன் சித்திகளையும் வெறுப்பான். ஸாதனை ஸம்யமங்களால் இவை தாமே உண்டாகும். ஆனால் சித்திகளிடம் மனம் சென்றால் அவற்றிலேயே ஆழ்ந்து மேல் நோக்கிச் செல்லச் சக்தியற்றவனாவான்.

து:க்கேன குருணாபி—ஒ—

வானின்றிடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்ற செந்தீ கலந்துடன் வேகிலென்
ருனென்றி மாருதஞ் சண்டமடிக்கிலென்
நானென்றி நாதனை நாடுவனானே. **(திருமந்திரம்).**

शनैः शनै-रुपरमेद्-बुद्धया धृति-गृहीतया ।
आत्म-संस्थं मनः कृत्वा न किञ्चिदपि चिन्तयेत् ॥२५॥ ॥२५८॥

சனை: சனை-ருபரமேத் புத்த்யா த்ருதி-க்ருஹீதயா |
ஆத்ம-ஸம்ஸ்தம் மன: க்ருத்வா ந கிஞ்சிதபி
சிந்தயேத் || 25 || (258)

ஒழித்து (மனஸா ஏவ) மனத்தாலேயே (ஸமந்தத:) எப்புறத்தும் (இந்த்ரியக்ராமம்) இந்திரியக் கூட்டத்தை (விநியம்ய) ஓடவொட்டாமல் தடுத்து;

25. (த்ருதிக்ருஹீதயா) தைரியத்துடன் கூடிய (புத்த்யா) புத்தியினுல் (சனை: சனை:) மெல்ல மெல்ல (உபரமேத்) சாந்தியைக்கூட வேண்டும்; (மன:) மனத்தை (ஆத்மஸம்ஸ்தம்) ஆத்மாவில் நிலை பெற்றதாய் (க்ருத்வா) செய்து (கிஞ்சிதபி) யாதொன்றையும் (ந சிந்தயேத்) நினைக்கக்கூடாது.

---

24. ஒ—நெல்லைக் குத்துகையில் அப்போதைக்கப்போது குத்துவதை நிறுத்திவிட்டு உமி போயிற்று என்று பார்ப்பது போல் மனதின் எண்ணங்களைச் சோதிக்க வேண்டும். (ரா. கி.)

ஒ—ஸ்பர்சஜா ஸங்கல்பஜாச்-சேதி த்விவிதா: காமா: | ஸ்பர்சஜா: சீதோஷ்ணுதய: ஸங்கல்பஜா: புத்ரக்ஷேத்ராதய: | தத்ர ஸங்கல்பப்ரபவா: ஸ்வரூபேணைவ த்யக்தும் சக்யா: | தான் ஸர்வான் மனஸைவ ததன்வயானுஸந்தானேன த்யக்த்வா ஸ்பர்சஜேஷு அவர்ஜனீயேஷு தந்நிமித்த-ஹர்ஷோத்வேகௌ த்யக்த்வா, ஸமந்தத: ஸர்வஸ்மாத்விஷயாத் ஸர்வம் இந்த்ரிய க்ராமம் விநியம்ய...ஆசைகள் இருவகை; ஸ்பர்சஜம், ஸங்கல்பஜம்—விஷயநுகர்ச்சியால் ஏற்படுபவைகளும், ஸங்கல்பத்தால் ஏற்படுபவைகளும், சீதோஷ்ணம் முதலியவை ஸ்பர்சஜம், மக்கள் பூமி முதலியவை ஸங்கல்பஜம். ஸங்கல்பத்தில் தோன்றியவைகளை அறவே விட்டுவிடக் கூடும். அவற்றையும் அவற்றின் தொடர்புகளையும் மனத்தால் சோதித்து ஒழித்து, விஷய நுகர்ச்சியைப் பற்றியவரை ஒழிக்க இயலாதவற்றில் மனக்கிளர்ச்சியை மட்டும் நீக்கி ஒருங்கே எல்லா விஷயங்களினின்றும் இந்திரியக் கூட்டத்தை ஒடுக்கி...(ஸ்ரீராமாநுஜர்.)

यतो यतो निश्चरति मन-श्चञ्चल-मस्थिरम् ।
ततस्ततो नियम्यैत-दात्मन्येव वशं नयेत् ॥ २६ ॥ ॥२५९॥

யதோ யதோ நிச்சரதி மனச்-சஞ்சல-மஸ்திரம் |
ததஸ்-ததோ நியம்யைத-தாத்மன்யேவ வசம்
நயேத் || 26 || (259)

---

26. (சஞ்சலம்) சஞ்சலமானதும் (அஸ்திரம்) ஒரு நிலையற்றதுமான (மன:) மனம் (யத:யத:) எங்கெந்தக் காரணத்தைப்பற்றி (நிச்சரதி) வெளிப்போந்து திரியுமோ (தத:தத:) அந்த அந்தக் காரணத்தினின்று (ஏதத்) இதை (நியம்ய) மீட்டு அடக்கி (ஆத்மனி ஏவ) ஆத்மாவினிடத்திலேயே (வசம்) வசமாக (நயேத்) வைக்கவேண்டும்.

---

25. சனை : சனை :—ஸாதன மார்க்கங்கள் மூன்று வகைப்படும் : பக்ஷிரீதி, மர்க்கடரீதி, பிபீலிகாரீதி. பக்ஷி பழத்தைக் கொத்திப் பறக்கும்போது பழம் நழுவவிடலாம். குரங்கு ஆகாரத்தைக் கௌவிக்கொண்டு தாண்டுகையில் நழுவ விடலாம். ஆனால் எறும்பு (பிபீலிகா) மெதுவாகவும் விடாமுயற்சியுடனும் ஆகாரத்ரத்தைச் சிறுகச் சிறுகச் சேகரித்துச் சாவதானமாய் அதை அனுபவிக்கிறது. இவ்வழியே சிறந்தது. (ரா. கி.)

ஒன்றையும் நினையாமலிருந்தால் உள்ளொளி எல்லாவற்றையும் விளங்க வைக்கும். பிரகிருதியின் லீலைகளைக் காணும் வரை ஆன்ம ஒளி விளங்காது. அஹங்கார மமகார உடைகளையும் களைந்து தான் தானாகி நிற்கும் நிலையே ஆத்மானந்தம்.

26. ஓ—மனம் உட்பக்கமாகத் திரும்புமானால் அது வாசற்கதவைத் தாளிட்டு வீட்டில் உள் நோக்கிச் செல்வதை ஒக்கும். அப்போது மனம் ஸ்தூலத்திலிருந்து ஸூக்ஷ்மத்துக்கும், ஸூக்ஷ்மத்திலிருந்து காரணத்துக்கும், அதிலிருந்து முதற் காரணத்துக்கும் போகும். அந்நிலையில் மனம் நித்ய ஸ்வரூபத்தில் அடங்கிவிடும். அதைப்பற்றிப் பிரத்யேகமாக ஒன்றும் சொல்வதற்கிராது. (ரா. கி.)

இவ்விதம் மூலகாரணத்தில் மனம் கலப்பதைத்தான் நிர்விகல்ப ஸமாதி அல்லது ஜட ஸமாதி என்கின்றனர்.

சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே. (தாயுமானவர்.)

प्रशान्त-मनसं ह्येनं योगिनं सुखमुत्तमम् ।
उपैति शान्त-रजसं ब्रह्मभूत-मकल्मषम् ॥ २७ ॥ ॥ २६० ॥
युञ्जन्नेवं सदात्मानं योगी विगत-कल्मषः ।
सुखेन ब्रह्मसंस्पर्श-मत्यन्तं सुख-मश्नुते ॥ २८ ॥ ॥२६१॥

ப்ரசாந்த-மனஸம் ஹ்யேனம் யோகினம் ஸுக-
முத்தமம் |
உபைதி சாந்த-ரஜஸம் ப்ரஹ்மபூத-மகல்மஷம்
|| 27 || (260)
யுஞ்ஜன்-னேவம் ஸதாத்மானம் யோகீ விகத-கல்மஷ:|
ஸுகேன ப்ரஹ்ம-ஸம்ஸ்பர்ச-மத்யந்தம் ஸுக-
மச்னுதே || 28 || (261)

---

27. (ப்ரசாந்த மனஸம்) சாந்தியில் நிலைத்த மனத்தினனும் (சாந்த ரஜஸம்) ரஜோகுணம் ஒழிந்தவனும் (அகல்மஷம்) பாவமற்றவனும (ப்ரஹ்ம பூதம்) பிரம்மமாகவே ஆய்விட்டவனுமாய் உள்ள (ஏனம்) இந்த (யோகினம்) யோகியை (ஹி) நிச்சயமாக (உத்தமம்) உத்தமமான (ஸுகம்) ஆனந்தம் (உபைதி) வந்தடைகிறது.

28. (ஏவம்) இவ்வாறு (ஸதா) எப்போதும் (ஆத்மானம்) தன்னை (யுஞ்ஜன்) ஒருமுகப்படுத்தி (விகத கல்மஷ:) பாவந்தேய்ந்த (யோகீ) யோகியானவன் (ஸுகேன) எளிதில் (ப்ரஹ்ம ஸம்ஸ்பர்சம்) பிரம்மத்துடன் ஒன்றியதால் உண்டாகும் (அத்யந்தம்) எல்லையில்லாத (ஸுகம்) ஆனந்தத்தை (அச்னுதே) அனுபவிக்கிறான்.

---

28. **ப்ரஹ்மஸம்ஸ்பர்சம்**—இந்நிலையில் பிரம்மம் படிப்பும் கேள்வியுமாய் மட்டுமில்லாமல், இருட்டறையில் காணாததொன்றைத் தேடுவது போலில்லாமல், தொட்டு அனுபவிப்பதாய் அபரோக்ஷானுபூதியாய் விளங்குகின்றது.

सर्वभूतस्थ-मात्मानं सर्वभूतानि चात्मनि ।
ईक्षते योग-युक्तात्मा सर्वत्र समदर्शनः ॥ २९ ॥ ॥२६२॥
यो मां पश्यति सर्वत्र सर्वं च मयि पश्यति ।
तस्याहं न प्रणश्यामि स च मे न प्रणश्यति ॥३०॥ ॥२६३॥

ஸர்வபூதஸ்த-மாத்மானம் ஸர்வபூதானி சாத்மனி |
ஈக்ஷதே யோக-யுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்சன:
|| 29 || (262)

யோ மாம் பச்யதி ஸர்வத்ர ஸர்வஞ் ச மயி பச்யதி |
தஸ்யாஹம் ந ப்ரணச்யாமி ஸ ச மே ந ப்ரணச்யதி
|| 30 || [263)

---

29. (யோகயுக்தாத்மா) யோகத்தில் ஊன்றிய உள்ளமுடையவன் (ஸர்வத்ர) எங்கும் (ஸமதர்சன:) சம நோக்குடையவனுய் (ஆத்மானம்) ஆத்மாவை (ஸர்வபூதஸ்தம்) எல்லாப் பொருளிலும் உறைவதாகவும் (ஸர்வபூதானி) எல்லாப் பொருட்களும் (ஆத்மனி ச) ஆத்மாவினிடத்து உளவாகவும் (ஈக்ஷதே) காண்கின்ருன்.

30. (ய:) எவன் (மாம்) என்னை (ஸர்வத்ர) எங்கும் (பச்யதி) பார்க்கிருனே (மயி) என்னிடத்தில்

---

29. ஓ—ஈசுவர தரிசனம் பெற்ற பிறகு உலகம் சூன்யமாகத் தோன்ருது. ஈசுவரனை அடைந்தவனுக்கு அவ்வீசுவரனே ஜீவனுகவும் ஜகத்தாகவும் ஆயிருக்கிருன் என்பது விளங்கும். அப்படிப்பட்டவன் தன் குழந்தைகளுக்கு உணவு ஊட்டுவதை கோபாலனுக்கு உணவு ஊட்டுவதாகவே காண்பான். தாய் தந்தையரை ஜகதீசுவரியும், ஜகதீசுவரனுமாகவே கருதி வழிபடுவான். அவன் உலக வாழ்க்கையில் இருப்பானுனல் மனைவியுடன் சரீர சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாது. இருவரும் பக்தியிலும் பஜனையிலுமே காலங் கழிப்பார்கள். ஈசுவரன் எல்லா ஜீவர்களிடமும் இருப்பதால் அவர்கள் எல்லா ஜீவர்களுக்கும் தொண்டு பூண்டு எல்லாரிடத்துமுள்ள ஈசுவரனை வழிபடுவார்கள். (ரா. கி.)

सर्वभूतस्थितं यो मां भजत्येकत्व-मास्थितः ।
सर्वथा वर्तमानोऽपि स योगी मयि वर्तते ॥ ३१ ॥ ॥२६४॥

ஸர்வபூத-ஸ்திதம் யோ மாம் பஜத்யேகத்வ-மாஸ்தித: |
ஸர்வதா வர்த்தமானேடபி ஸ யோகீ மயி வர்த்ததே
|| 31 | (264)

(ஸர்வஞ் ச) எல்லாவற்றையும் (பச்யதி) பார்க்கிருனே (தஸ்ய) அவனுக்கு (அஹம்) நான் (ந ப்ரணச்யாமி) காணுமற் போவதில்லை, (ஸ ச) அவனும் (மே) எனக்கு (ந ப்ரணச்யதி) காணுமற் போவதில்லை.

31. (ய:) எவன் (ஸர்வபூதஸ்திதம்) எல்லா உயிர்களிலும் உறையும் (மாம்) என்னை (ஏகத்வம் ஆஸ்தித:) ஒற்றுமையில் நிலை பெற்று (பஜதி) தொழுகின்ருனே, (ஸ யோகீ) அந்த யோகி (ஸர்வதா வர்த்தமான: அபி) எந்நிலையில் இருந்தாலும் எத்தொழில் புரிந்தாலும் (மயி) என்னிடத்திலேயே (வர்த்ததே) இருக்கின்ருன்.

---

31. ஒ—உள்ளே ஈசுவரனையுடையவன் புறம்பேயும் அவரையுடையவன் ஆவான். தன்னுள்ளே ஈசுவரனைக் காணுதவன் தனக்கு வெளியே அவரை ஒருபோதும் காணமாட்டான்.

ஸர்வதா வர்த்தமானேபி—ஒ—பாலைக்கடைந்து வெண்ணெயை நீரிலோ மோரிலோ போட்டு வைத்தாலும் மறுபடி நீருடனும் மோருடனும் கலக்காது; மேலேயே மிதக்கும். அது போல இடைவிடாத பழக்கத்தால் ஏகாக்ர சித்தம் பெற்றவன் எங்கிருந்தபோதிலும், அவனுடைய மனம் சுற்றிலுமுள்ள பொருள்களுடன் கலக்காமல் ஈசுவரனிடமே திரண்டு நிலைபெறும். (ரா. கி.)

ஒ—'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே'

आत्मौपम्येन सर्वत्र समं पश्यति योऽर्जुन।
सुखं वा यदि वा दुःखं स योगी परमो मतः ॥३२॥ ॥२६५॥
अर्जुन उवाच—
योऽयं योग-स्त्वया प्रोक्तः साम्येन मधुसूदन ।
एतस्याहं न पश्यामि चञ्चलत्वात् स्थितिं स्थिराम्॥३३॥॥२६६॥

ஆத்மௌபம்யேன ஸர்வத்ர ஸமம் பச்யதி
யோऽர்ஜுன |
ஸுகம் வா யதி வா து:க்கம் ஸ யோகீ பரமோ மத:|| 32
அர்ஜுன உவாச—
யோऽயம் யோகஸ்-த்வயா ப்ரோக்த:ஸாம்யேன
மதுஸூதன |
ஏதஸ்யாஹம் ந பச்யாமி சஞ்சலத்வாத் ஸ்திதிம்
ஸ்திராம் || 33 ||

---

32. (அர்ஜுன) அர்ஜுனா! (ய:) எவன் (ஸர்வத்ர) எங்கும் (ஸுகம் வா) சுகமாயினும் (யதி வா து:க்கம்) துக்கமாயினும், (ஆத்மௌபம்யேன) தன்னை உபமானமாகக் கொண்டு (ஸமம்) சமமாக (பச்யதி) பார்க்கின்றானோ: (ஸ: யோகீ) அந்த யோகிதான் (பரம:) சிறந்தவன் என்பது (மத:) துணிபு.

அர்ஜுனன் கூறியது—

33. (மதுஸூதன) மதுசூதனா! (த்வயா) உன்னால் (ஸாம்யேன) சம நோக்கத்துடன் கூடிய (ய:

---

32. உற்றார் உறவினரிடம் மட்டும் உண்டாகும் வாஞ்சை மாயை. எல்லாப் பிராணிகளிடத்தும் உண்டாகும் வாஞ்சை தயை. (ரா. கி.)

எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்கிருப்பது நீயன்றோ பராபரமே.
எவ்வுயிரும் என்னுயிர்போ லெண்ணியிரங்கவும் நின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே. (தாயுமானவர்)

चञ्चलं हि मनः कृष्ण प्रमाथि बलवद् दृढम् ।
तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम् ॥ ३४ ॥ ॥२६७॥

சஞ்சலம் ஹி மன: க்ருஷ்ண ப்ரமாதி பலவத்-த்ருடம் |
தஸ்யாஹம் நிக்ரஹம் மன்யே வாயோரிவ
ஸுதுஷ்கரம் || 34 || (267)

அயம் யோக:) எந்த இவ்வாருன யோகம் (ப்ரோக்த:) கூறப்பட்டதோ (ஏதஸ்ய) இதன் (ஸ்திராம்) ஸ்திரமான (ஸ்திதிம்) நிலையை, (சஞ்சலத்வாத்) உள்ளம் சஞ்சலமுடையதாதலால், (அஹம்) நான் (ந பச்யாமி) உணர முடியவில்லை.

34. (க்ருஷ்ண) கிருஷ்ணு ! மன:) மனம் (சஞ்சலம்) சஞ்சலமுடையது, (ப்ரமாதி) கலக்கத்தைச் செய்வது, (பலவத்) வலியுடையது (த்ருடம்) அடக்க முடியாதது, (ஹி) அன்ருே? (அஹம்) நான் (தஸ்ய) அதன் (நிக்ரஹம்) அடக்கத்தை (வாயோ: இவ) காற்றை அடக்குதல்போல (ஸுதுஷ்கரம்) மிகவும் கடினம் என்று (மன்யே) கருதுகின்றேன்.

ஒ—'ப்ராயசோ லோகதாபேன தப்யந்தே ஸாதவோ ஜன:'
—பாகவதம்.

34. சஞ்சலம்—ஒ—கீழே கொட்டின கடுகைப் பொறுக்கி எடுப்பது வெகு சிரமம். அதுபோலப் பல திசைகளிலும் ஓடி உருளும் மனத்தை ஒருமைப் படுத்துவது எளிதன்று. (ரா. கி.)

ஒ—ஒருவன் "மனத்தின் சுபாவம் ஒருபோதும் மாருது" என்ருன். அதற்கு அவன் நண்பன் "நெருப்பானது கரிக்குள் நுழையுமானுல் அக்கரியின் கரு நிறத்தைப் போக்கித் தன் மயமாய்ச் செய்துவிடுகிறதல்லவா? அதுபோல ஞானமாகிற நெருப்பு மனத்தில் புகுந்தால் மனத்தின் சுபாவகுணம் அழிந்து போம். அப்போது மனிதனைப் பாவத்தில் செலுத்தாது" என்ருன். (ரா. கி.)

க்ருஷ்ணன்—'க்ருஷ்' என்பது இழுத்தல் எனப் பொருள்படும். பக்தர்களின் பாவத்தை இழுத்து (ஆகர்ஷித்து) விடுவதால் 'க்ருஷ்ணன்'.

श्री भगवानुवाच—
असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम् ।
अभ्यासेन तु कौन्तेय वैराग्येण च गृह्यते ॥३५॥ ॥२६८॥

ஸ்ரீபகவானுவாச—
அஸம்சயம் மஹாபாஹோ மனோ துர்-நிக்ரஹம் சலம் |
அப்யாஸேன து கௌந்தேய வைராக்யேண ச
க்ருஹ்யதே || 35 ||

ஸ்ரீ பகவான் கூறியது—

35. (மஹாபாஹோ) தோள்வலி படைத்த அர்ஜுனா! (மன:) மனம் (துர்நிக்ரஹம்) அடக்குதற்கரிது (சலம்) நிலையற்றது; (அஸம்சயம்) இதில் ஸந்தேகமில்லை; (து) ஆனால், (கௌந்தேய) குந்தியின் மகனே! (அப்யாஸேன) பழக்கத்தாலும் (வைராக்யேண ச) வைராக்கியத்தாலும் (க்ருஹ்யதே) அடக்க முடியும்.

---

35. **வைராக்யம்**—ஒ—கீ. 2. 58.

ஒ—முள் நிறைந்த காட்டில் பாதரக்ஷையில்லாமல் வெறுங்காலோடு போக முடியாது. இவ்வுலகம் அவ்விதமான காடு. அதில் நடக்க அணிய வேண்டிய பாதரக்ஷை **வைராக்யம்.** இந்த உபாயத்தால் எளிதில் ஸம்ஸாரக் காட்டைக் கடக்கலாம். (ரா. கி.)

அப்பியாசம்—ஒ—நீந்தக் கற்றுக்கொள்ள விரும்புபவன், பல முறை பயனில்லாத முயற்சி செய்தபின் நீந்துவதில் பழக்கம் பெறுவான்; பிரம்மமாகிற கடலில் நீந்துவதும் அப்படியே. (ரா. கி.)

பித்தளைப் பாத்திரத்தை தினம் தேய்ப்பதுபோல் மனத்தையும் துலக்க வேண்டும். (ரா. கி.)

கிணறு வெட்டுபவன் பல இடத்தில் கொஞ்சம் கொஞ்சம் வெட்டினால் நீர் கிடைக்காது. எல்லாவற்றையும் சேர்த்து ஒரே இடத்தில் வெட்டினால் நீர் கிடைக்கும். அதுபோலவே யோகாப்பியாசத்திலும். (ரா. கி.)

ஒ—அப்யாஸ-வைராக்யாப்யாம் தந்நிரோத:| தத்ர ஸ்திதௌ யத்னோ அப்யாஸ:| த்ருஷ்டானுச்ரவிக-விஷய-வித்ருஷ்ணஸ்ய வசீகார-ஸம்ஜ்ஞா வைராக்யம் || (பதஞ்ஜலி யோகஸூத்ரம்.)

असंयतात्मना योगो दुष्प्राप इति मे मतिः ।
वश्यात्मना तु यतता शक्यो ऽवाप्तु-मुपायतः ॥३६॥ ॥२६९॥

अर्जुन उवाच—
अयतिः श्रद्धयोपेतो योगा-च्चलित-मानसः ।
अप्राप्य योग-संसिद्धिं कां गतिं कृष्ण गच्छति॥ ३७॥ ॥२७०॥

அஸம்யதாத்மனு யோகோ துஷ்ப்ராப இதி மே மதி: |
வச்யாத்மனு து யததா சக்யோ ऽவாப்து-முபாயத: || 36

அர்ஜுன உவாச—
அயதி:ச்ரத்தயோபேதோ யோகாச்-சலித-மானஸ:
அப்ராப்ய யோக-ஸம்ஸித்திம் காம் கதிம் க்ருஷ்ண
கச்சதி || 37 ||

---

36. (அஸம்யதாத்மனு) உள்ளம் அடங்காதவனுக்கு (யோக:) யோகம் (துஷ்ப்ராப:) அடைதற்கரிது (இதி) என்பது (மே) என்னுடைய (மதி:) துணிபு; (து) ஆனல் (வச்யாத்மனு) உள்ளம் வசப்பட்டு (யததா) முயற்சி செய்பவனுல் (உபாயத:) தக்க உபாயத்தால் (அவாப்தும்) அடைவதற்கு (சக்ய:) முடியும்.

அர்ஜுனன் கூறியது—

37. (க்ருஷ்ண) கிருஷ்ணு! (ச்ரத்தயா) சிரத்தையுடன் (உபேத:) கூடியவன் (அயதி:) முயற்சியில்லாதவனுய் (யோகாத்) யோகத்தினின்று (சலிதமானஸ:) நழுவிய மனத்தையுடையவன் (யோகஸம்ஸித்திம்)

ஓடும் ஆற்றில் அணை கட்டுவதுபோல் வைராக்கியம். அணை நீரைக் கால்வாயில் கொண்டுபோய்ப் பயிர்களுக்குப் பாய்ச்சுவது போல் அப்பியாஸம்.

36. ஒ—ப்ரஹ்மஸாக்ஷாத்காரே மனன-நிதித்யாஸன-ஸம்ஸ்க்ருதம் மன ஏவ காரணம் | மனோऽஸம்யத்வ-ச்ருதிச்ச அஸம்ஸ்க்ருதமனோ விஷயா || 'கஷாயே கர்மபி: பக்வே ததோ ஜ்ஞானம் ப்ரவர்த்ததே' || (சங்)

कच्चिन्नोभय-विभ्रष्ट-श्छिन्नाभ्रमिव नश्यति ।
अप्रतिष्ठो महाबाहो विमूढो ब्रह्मणः पथि ॥ ३८ ॥ ॥२७१॥

एतन्मे संशयं कृष्ण छेत्तु-मर्हस्यशेषतः ।
त्वदन्यः संशयस्यास्य छेत्ता न ह्युपपद्यते ॥ ३९ ॥ ॥२७२॥

கச்சின்னேபய-விப்ரஷ்டச் சின்னுப்ரமிவ நச்யதி |
அப்ரதிஷ்டோ மஹாபாஹோ விமூடோ ப்ரஹ்மண:
பதி || 38 ||

ஏதன் மே ஸம்சயம் க்ருஷ்ண ச்சேத்து-மர்ஹஸ்-
யசேஷத: |
த்வதன்ய: ஸம்சயஸ்யாஸ்ய ச்சேத்தா ந ஹ்யுபபத்யதே
|| 39 || (272)

யோகத்தில் சித்தியை (அப்ராப்ய) அடையாதவனுய் (காம் கதிம்) எக்கதியை (கச்சதி) அடைகிருன்?

38. (மஹாபாஹோ) சிறந்த புஜங்களையுடைய கிருஷ்ணு! (ப்ரஹ்மண:) பிரம்மத்தைச் சாரும் (பதி) வழியில் (விமூட:) மயங்கியவன் (அப்ரதிஷ்ட:) நிலை பெருமல் (உபயவிப்ரஷ்ட:) இரண்டு மார்க்கத்தையும் இழந்து (ச்சின்னுப்ரமிவ) சிதறுண்ட மேகம் போல் (ந நச்யதி கச்சித்) அழிந்துவிடானு?

39. (க்ருஷ்ண) கிருஷ்ணு! (மே) என்னுடைய (ஏதத்) இந்த (ஸம்சயம்) சந்தேகத்தை (அசேஷத:) முற்றும் (ச்சேத்தும்) ஒழித்தற்கு (அர்ஹஸி) உரியவனுயுளாய்; (த்வதன்ய:) உன்னைத் தவிர எவரும் (அஸ்ய) இந்த (ஸம்சயஸ்ய) சந்தேகத்தை (ச்சேத்தா) ஒழிக்கக் கூடியவன் (ந உபபத்யதே) கிடைத்தற்கரிது (ஹி) அன்ருே?

श्री भगवानुवाच—
पार्थ नैवेह नामुत्र विनाश-स्तस्य विद्यते ।
न हि कल्याणकृत् कश्चिद्-दुर्गतिं तात गच्छति ॥४०॥ ॥२७३॥
प्राप्य पुण्यकृतां लोका-नुषित्वा शाश्वतीः समाः ।
शुचीनां श्रीमतां गेहे योगभ्रष्टो ऽभिजायते ॥ ४१ ॥ ॥२७४॥

ஸ்ரீபகவானுவாச—
பார்த்த நைவேஹ நாமுத்ர விநாசஸ்-தஸ்ய வித்யதே |
ந ஹி கல்யாணக்ருத் கச்சித் துர்க்கதிம் தாத கச்சதி
|| 40 || (273)
ப்ராப்ய புண்யக்ருதாம் லோகா-னுஷித்வா சாச்வதீ :
ஸமா: |
சுசீனும் ஸ்ரீமதாம் கேஹே யோக-ப்ரஷ்டோ ऽபிஜாயதே
|| 41 || (274)

ஸ்ரீ பகவான் கூறியது—

40. (பார்த்த) பார்த்தா! (தஸ்ய) அவனுக்கு (விநாச:) அழிவு (இஹ) இம்மையில் (நைவ வித்யதே) இல்லவே இல்லை; (அமுத்ர) மறுமையிலும் (ந) இல்லை; (தாத) மகனே! (ஹி) நிச்சயமாக (கல்யாண-க்ருத்) நல்லதைச் செய்பவன் (கச்சித்) எவனும்(துர்க்கதிம்) தீய நிலையை (ந கச்சதி) அடையவே மாட்டான்.

41. (யோகப்ரஷ்ட:) யோகத்திலிருந்து நழுவியவன் (புண்ய க்ருதாம்) புண்ணியம் செய்தவர்களுக்குரிய (லோகான்) உலகங்களை (ப்ராப்ய) அடைந்து (சாச்வதீ : ஸமா:) நெடிய பல ஆண்டுகள் (உஷித்வா) வசித்து (சுசீனும்) பரிசுத்தர்களும் (ஸ்ரீமதாம்) செல்வவந்தர்களும் ஆகியவர்களின் (கேஹே) வீட்டில் (அபிஜாயதே) மறுபடி பிறக்கிறுன்,

---

40. குண்டலினி சக்தியை யோக முயற்சியால் ஒரு முறை தட்டி எழுப்பிவிட்டால் பின் அது உறங்காது வேலை செய்து

अथवा योगिनामेव कुले भवति धीमताम् ।
एतद्धि दुर्लभतरं लोके जन्म यदीदृशम् ॥ ४२ ॥ ॥२७५॥
तत्र तं बुद्धि-संयोगं लभते पौर्व-देहिकम् ।
यतते च ततो भूयः संसिद्धौ कुरुनन्दन ॥ ४३ ॥ ॥२७६॥

அதவா யோகினுமேவ குலே பவதி தீமதாம் |
ஏதத்தி துர்லபதரம் லோகே ஜன்ம யதீத்ருசம் || 42 ||

தத்ர தம் புத்தி-ஸம்யோகம் லபதே பௌர்வ-
தேஹிகம் |
யததே ச ததோ பூய: ஸம்ஸித்தௌ குருநந்தன
|| 43 || (276)

---

42. (அதவா) அல்லது (தீமதாம்) புத்திமான்களான (யோகினும்) யோகிகளின் (குலே எவ) குலத்திலேயேயாவது (பவதி) பிறக்கிருன்; (ஈத்ருசம்) இது போன்ற (யத் ஜன்ம ஏதத்) ஓர் பிறவி எதுவோ அது (ஹி) நிச்சயமாக (லோகே) உலகில் (துர்லபதரம்) அடைதல் மிக அரிது.

43. (தத்ர) அங்கு (பௌர்வதேஹிகம்) முன் உடலில் உண்டாகிய (தம்) அந்த (புத்திஸம்யோகம்) புத்தியின் கூட்டுறவை (லபதே) அடைகிருன்; (குருநந்தன) குருநந்தன! (ச) மேலும (தத:)அதைவிட (பூய:) மேலான (ஸம்ஸித்தௌ) சித்திஎய்துதற்காக (யததே) முயல்கின்ருன்.

கொண்டே இருக்கும். ஜீவனை அது மேனேக்கி அழைத்துச் செல்லும். இந்த ஜன்மத்தில் விடுதலை ஏற்படாவிட்டால் அடுத்த ஜன்மத்தில் அதன் வேலையைத் தொடர்ந்து செய்யும்.

அதவா — அல்லது — பொருளில் தரித்திரராயும் ஞானச் செல்வம் நிறைந்தவராயும் உள்ளவர் குலத்தில்.

पूर्वाभ्यासेन तेनैव ह्रियते ह्यवशोऽपि सः ।
जिज्ञासुरपि योगस्य शब्दब्रह्मातिवर्तते ॥ ४४ ॥ ॥२७७॥
प्रयत्नाद्यतमानस्तु योगी संशुद्ध-किल्बिषः ।
अनेकजन्म-संसिद्ध-स्ततो याति पराङ्गतिम् ॥ ४५ ॥ ॥२७८॥

பூர்வாப்யாஸேன தேனைவ ஹ்ரியதே ஹயவசோ஽பி ஸ: |
ஜிஜ்ஞாஸுரபி யோகஸ்ய சப்தப்ரஹ்மாதிவர்த்ததே
|| 44 || (277)
ப்ரயத்னாத்-யதமானஸ்து யோகீ ஸம்சுத்த-கில்பிஷ: |
அனேகஜன்ம-ஸம்ஸித்தஸ்-ததோ யாதி பராங்கதிம்
|| 45 || (278)

---

44. (தேன) அந்த (பூர்வாப்யாஸேன ஏவ) முன் பழக்கத்தாலேயே (அவச: அபி) தான் உணராவிடினுங்கூட (ஸ:) அவன் (ஹ்ரியதே ஹி) கவரப்படுகின்றான் அன்றோ; (யோகஸ்ய) யோகத்தின் (ஜிஜ்ஞாஸு: அபி) தத்வத்தை ஆராயவிரும்பியவன் கூட (சப்தப்ரஹ்ம) சப்த பிரம்மமாகிய வேதம் கூறும் கரும பலனை (அதிவர்த்ததே) கடந்து செல்கிறான்.

45. (து) ஆனால் (ப்ரயத்னாத்) விடாமுயற்சியுடன் (யதமான:) அப்பியசிக்கும் (யோகீ) யோகியானவன் (ஸம்சுத்தகில்பிஷ:) பாவம் தேய்ந்து பரிசுத்தனாய் (அனேகஜன்ம ஸம்ஸித்த:) பல பிறப்பில் படிப்படியாய் சித்திபெற்று (தத:) பின் (பராம்) எல்லாவற்றினும் உயர்ந்த (கதிம்) கதியை (யாதி) அடைகிறான்.

---

45. அனேகஜன்ம ஸம்ஸித்த:—ஒ—ஒரு சேர் பாலுடன் இரண்டு சேர் நீரைக் கலந்தால், அந்த நீர் முழுவதும் வற்றிப் பாலாவதற்கு நெடுநேரமும் நீண்ட பிரயாசையும் வேண்டும். லௌகிகனுடைய மனம் உலகமாகிய நீருடன் அதிகம் கலந்திருப்பதால் அதைப் பரிசுத்தமாக்க நீண்டகாலம் வேண்டியிருக்கிறது. (ரா. கி.)

तपस्विभ्योऽधिको योगी ज्ञानिभ्योऽपि मतोऽधिकः ।
कर्मिभ्यश्चाधिको योगी तस्माद्योगी भवार्जुन ॥४६॥ ॥२७९॥

தபஸ்விப்யோऽதிகோ யோகீ ஜ்ஞானிப்யோऽபி மதோऽதிக: |
கர்மிப்யச்சாதிகோ யோகீ தஸ்மாத் யோகீ பவார்ஜுன ‖ 46 ‖ (279)

---

46. (யோகீ) யோகியானவன் (தபஸ்விப்ய:) தவசிகளை விட (அதிக:) உயர்ந்தவன்; (ஜ்ஞானிப்ய: அபி) கற்றோரை விடவும் (அதிக:) உயர்ந்தவன்; (கர்மிப்ய: ச) கருமம் செய்வோரை விடவும் (யோகீ) யோகியானவன் (அதிக:) உயர்ந்தவன் என்பது (மத:) துணிபு. (தஸ்மாத்) ஆகையால் (அர்ஜுன) அர்ஜுனா! (யோகீ) யோகியாக (பவ) ஆவாய்.

நன்மையையுந் தீமையையும் மாறி மாறி நாடும் மனம் யோகாப்பியாஸத்தால் தீமையினின்று முற்றும் விலகி நன்மையிலேயே நிலைத்து நிற்கும் இயல்பை எய்துகின்றது.

46. ஓ—ஸந்தியாவந்தனம் காயத்ரியில் அடங்குகிறது. காயத்ரி பிரணவத்தில் அடக்கம். பிரணவமோ முடிவில் ஸமாதியில் அடங்குகிறது. ஆகையால் எல்லாக் கருமங்களும் முடிவில் ஸமாதியில் அடங்குகின்றன. (ரா. கி.)

ஸாதனஸித்தர்கள், கிருபாஸித்தர்கள் என ஸித்தர்கள் இரு வகைப்படுவர். நல்ல மகசூலைப் பெறுவதற்குப் பலர் வெகுவாகச் சிரமப்பட்டுக் கிணறுகளை வெட்டித் தங்கள் நிலங்களுக்கு நீர் இறைக்கின்றனர். அதிருஷ்டசாலிகளான சிலர்க்கு இவ்வித சிரமமில்லாமல் நல்ல மழை பெய்து நீர் ஏராளமாய்ப் பாய்கின்றது. அவ்வாறு பலரும் இடைவிடாது ஸாதனங்களைச் செய்தே பலன் அடையவேண்டும். எனினும் பகவத் கிருபை வரும்போது அதைப் பெற்ற பாக்கியவான்கள் எளிதில் பரிபூரண நிலை எய்துகின்றனர். ஆனால் அப்படிப்பட்டவர்கள் அருமையிலும் அருமை. (ரா. கி.)

योगिनामपि सर्वेषां मद्गतेनान्तरात्मना ।
श्रद्धावान् भजते यो मां स मे युक्त-तमो मतः ॥४७॥ ॥२८०॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे ध्यानयोगो नाम षष्ठोऽध्यायः ॥

யோகினுமபி ஸர்வேஷாம் மத்கதேனுந்தராத்மனு |
ச்ரத்தாவான் பஜதே யோ மாம் ஸ மே யுக்ததமோ மத:
|| 47 || (280)

இதி ஶ்ரீமத் பகவத்கீதாஸூபனிஷத்ஸு ப்ரஹ்ம-
வித்யாயாம் யோகசாஸ்த்ரே ஶ்ரீக்ருஷ்ணார்ஜுன-
ஸம்வாதே த்யானயோகோ நாம
ஷஷ்டோऽத்யாய: ||

---

47. (ய:) எவன் (ச்ரத்தாவான்) சிரத்தை உடையவனுக (மத்கதேன) என்னிடத்தில் ஊன்றிய (அந்தராத்மனு) உள்ளத்தால் (மாம்) என்னை (பஜதே) தொழுகின்றுனே (ஸ:) அவன் (ஸர்வேஷாம்) எல்லா (யோகினும் அபி) யோகிகளுக்குள்ளும் (யுக்ததம:) சிறந்த யுக்தன் என்பது (மே) என்னுடைய (மத:) முடிவான அபிப்பிராயம்.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோகசரஸ்திரமாயும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸம்பாஷணை
யாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத் கீதை என்னும்
உபநிஷத்தில் தியான யோகம் என்று பெயர்
பெற்ற ஆருவது அத்தியாயம் முற்றும்.

அத்தியாயத்தின் விஷயச் சுருக்கம்—

நிஷ்காம கர்மயோகமே ஸங்ந்யாஸத்திற்கு அடிப்படை. யோகத்தின் ஆரம்பத்தில் கர்மத்துடன் கூடுதல் ஸாதனமாகவும், யோகத்தின் முடிவில் கர்மத்திலிருந்து விடுபடுதல் ஸாதனமாகவும், காணப்படுகின்றது. யோகத்தில் முதிர்ந்த 'யோகாரூடன்' லக்ஷணம் தியான யோகமுறை—ஆஹார விஹார நியமங்கள், ஆஸனம், பிராணயாமம், பிரத்யாஹாரம், தியானம், தாரணை, ஸமாதி, யோகத்தின் எல்லைநிலத்துள்ள பரம ஆனந்தம்.

மனம் இயற்கையாகவே சஞ்சலமாதலால் மனதை அடக்குதல் முடியாதே என்று அர்ஜுனன் ஸந்தேகத்தைத் தெரிவித்தல். அப்பியாசத்தாலும் வைராக்கியத்தாலும் மனதை அடக்க இயலும் என்று பகவான் கூறுதல். தியான யோகத்தில் முயல்பவன் சித்தி பெறுமல் போனல் அவன் கதி என்னவாகும் என்று அர்ஜுனன் வினவுதல். அவனுக்கும் நற்கதியே என்றும், உயர்ந்த உலகங்களை யும், உயர்ந்த ஜன்மங்களையும் அடைந்து படிப்படியாக நாளடைவில் நன்மையைத் தவருது எய்துவான் என்றும் சொல்லி, எல்லா யோகிகளுக்குள்ளும் பக்தியோகியே சிறந்தவன் என்று முடித்தல்.

ஐம்புலனும் உள்ளும் அடக்கி நிறுத்தான்மாவை
இன்பமுறை எண்ணியுறும் யோகவியல்—உம்பர்
பெருமான் உரைத்திடுவான் பேரருளால் ஈங்கு
வருமா றருச்சுனற்கு வாய்த்து. (கீ. வெ.)

॥ सप्तमोऽध्यायः ॥

(ज्ञानविज्ञानयोगः)

श्री भगवानुवाच—

मय्यासक्त-मनाः पार्थ योगं युञ्जन् मदाश्रयः ।
असंशयं समग्रं मां यथा ज्ञास्यसि तच्छृणु ॥ १ ॥ ॥ २८१ ॥

ஏழாம் அத்தியாயம்

(ஜ்ஞானவிஜ்ஞான யோகம்)

ஸ்ரீபகவானுவாச—

மய்யாஸக்த-மனா: பார்த்த யோகம் யுஞ்ஜன் மதாச்ரய: |
அஸம்சயம் ஸமக்ரம் மாம் யதா ஜ்ஞாஸ்யஸி
தச்ச்ருணு || 1 || (281)

ஸ்ரீ பகவான் கூறியது—

1. (பார்த்த) பார்த்தா ! (மயி) என்னிடத்தில் (ஆஸக்தமனா:) பற்றிய மனத்தினனாய் (மதாச்ரய:) என்னையே சார்ந்து (யோகம்) யோகத்தை (யுஞ்ஜன்) அப்பியசித்து, (அஸம்சயம்) சந்தேக மின்றி (ஸமக்ரம்) முற்றும் (மாம்) என்னை (யதா) எப்படி (ஜ்ஞாஸ்யஸி) அறிவாயோ (தத்) அதை (ச்ருணு) கேள்.

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்—

முதல் ஆறு அத்தியாயங்களில் பல விஷயங்கள் இடையிடையில் விசாரிக்கப்பட்ட போதிலும் முக்கியமாகக் கர்மயோகமே கூறப்பட்டிருப்பதால் இவை 'கர்மஷட்கம்' எனப்படும். நடு ஆறு அத்தியாயங்கள் அவ்வாறே 'பக்திஷட்கம்'. கடை ஆறு அத்தியாயங்கள் 'ஞானஷட்கம்'.

பக்திஷட்கத்தின் ஆரம்பமாகிய 7-வது அத்தியாயத்தில் பக்தி அடிப்படையாக விஜ்ஞானத்துடன் கூடிய பகவத்ஸ்வரூப ஜ்ஞானம் உபதேசிக்கப்படுகிறது. ஆகையால் இவ்வத்தியாயம் ஜ்ஞான யோகம் எனப்படும்.

ज्ञानं तेऽहं सविज्ञान-मिदं वक्ष्या-म्यशेषतः ।
यज्ज्ञात्वा नेह भूयोऽन्य-ज्ज्ञातव्य-मवशिष्यते ॥२॥ ॥२८२॥

ஜ்ஞானம் தேऽஹம் ஸ-விஜ்ஞான-மிதம் வக்ஷ்யாம்-
யசேஷத: |
யஜ்-ஜ்ஞாத்வா நேஹ பூயோऽங்யஜ் ஜ்ஞாதவ்ய-
மவசிஷ்யதே || 2 || (282)

---

2. (யத்) எதை (ஜ்ஞாத்வா) உணர்ந்த பின்னர் (இஹ) இங்கு (பூய:) மறுபடியும் (அங்யத்) வேறென்று (ஜ்ஞாதவ்யம்) உணரவேண்டியது (ந அவசிஷ்யதே) மிகுதியிராதோ, (இதம்) இந்த (ஸவிஜ்ஞானம்) அனுபவத்தோடு கூடிய (ஜ்ஞானம்) ஞானத்தை (அசேஷத:) முழுதும் (அஹம்) நான் (தே) உனக்கு (வக்ஷ்யாமி) உரைக்கின்றேன்.

தானின்ற வுண்மையைத் தன்றனிமாயை மறைத்தமையும்
தானன்றி மாயைதனைத் தவிர்ப்பான் விரகற்றமையும்
மேனின்ற பக்தர்கள் நால்வரில் ஞானிதன் மேன்மைகளும்
தேனின்ற செங்கழலான் தெளிவித்தனன் பார்த்தனுக்கே.

(கீ. ஸ).

2. யத்ஜ்ஞாத்வா—ஓ—'யேன அச்ருதம் ச்ருதம் பவதி, அமதம் மதம், அவிஜ்ஞாதம் விஜ்ஞாதமிதி'—'எதனால் கேட்கப் படாதது கேட்டதாகவும், அறியப்படாதது அறிந்ததாகவும், அனுபவித்துணரப்படாதது அனுபவித்துணர்ந்ததாகவும் ஆகுமோ' (சா. உப. 6. 1.) 'எதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகுமோ' (மு. உப. 1. 1. 3.)

ஓ—'விஜ்ஞானம்' என்பது என்ன? விஜ்ஞானம் என்பது ஒரு பொருளை நன்ருய் அறிவதாம். 'பால்' எனும் ஒரு பொருளை எடுத்துக் கொள்வோம். அதைப்பற்றிக் காதால் மட்டுங் கேட்டவன் அஜ்ஞானி; பார்த்தவன் ஞானி' ருசிகண்டவன் விஜ்ஞானி. பகவானைக்கண்டு அவனுடன் உறவு கொண்டாடுவதுதான் விஜ்ஞானம்.

मनुष्याणां सहस्रेषु कश्चि-द्यतति सिद्धये ।
यततामपि सिद्धानां कश्चिन्मां वेत्ति तत्त्वतः ॥ ३ ॥ ॥२८३॥
भूमि-रापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च ।
अहङ्कार इतीयं मे भिन्ना प्रकृति-रष्टधा ॥ ४ ॥ ॥२८४॥

மநுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கச்சித்-யததி ஸித்தயே |
யததாமபி ஸித்தானும் கச்சின்-மாம் வேத்தி தத்வத:
|| 3 || (283)

பூமி-ராபோऽநலோ வாயு: க்கம் மனோ புத்தி-ரேவ ச |
அஹங்கார இதீயம் மே பின்ன ப்ரக்ருதி-ரஷ்டதா
|| 4 || (284)

---

3. (மனுஷ்யாணும்) மனிதர்களில் (ஸஹஸ்ரேஷு) ஆயிரவர்க்குள் (கச்சித்) ஒருவன் (ஸித்தயே) சித்திபெற (யததி) முயற்சி செய்கின்றான், (யததாம்) முயற்சி செய்யும் (ஸித்தானும் அபி) ஸித்தர்களுள் (கச்சித்) யாரோ ஒருவன் (மாம்) என்னை (தத்வத:) உண்மையில் (வேத்தி) உணர்கின்றான்.

4. (பூமி:) மண் (ஆப:) நீர் (அனல:) தீ (வாயு:) காற்று (கம்) ஆகாயம் (மன:) மனம் (புத்தி:) புத்தி (ஏவ ச) அவ்வாறே (அஹங்கார:) அஹங்காரம் (இதி) என்று (அஷ்டதா) எட்டு விதமாக (பின்ன) பிரிந்தது (மே) என்னுடைய (இயம் ப்ரக்ருதி:) இந்தப் பிரகிருதி.

---

3. ஓ—அரசனுடைய குணங்களைப்பற்றிக் கேள்விப்பட்டவர் பலர்; அவனை நேரில் உணர முயல்பவர் சிலர்; அவனுடன் நெருங்கிப் பழகுபவர் வெகு சிலரே. இவ்வாறே ஸாதன மார்க்கத்திலும். (ரா. கி.)

4. ப்ரக்ருதி—(அவித்தை) மாயை, அதினின்று அவ்யக்தம். அவ்யக்தத்தினின்று அஹங்காரம் தோன்றுவதால் (விஷங்கலந்த அன்னத்தை விஷம் என்றவாறு) அவ்யக்தமே இங்கு அஹங்காரமெனப்பட்டது. அவ்வஹங்காரமே பின் புத்தியாகவும் மனதாகவும் பரிணமிக்கு. அதினின்று ஒன்றன்பின்னென்றாக ஆகாயம்,

अपरेय-मितस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम् ।
जीव-भूतां महाबाहो ययेदं धार्यते जगत् ॥ ५ ॥ ॥२८५॥

அபரேய-மிதஸ்த்வன்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்|
ஜீவபூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத்
|| 5 || (285)

---

5. (மஹாபாஹோ) மஹாபாஹோ! (து) ஆனல் (இயம்) இது (அபரா) கீழ்ப்பட்டது; (இத:) இதனில் (அன்யாம்) வேருயுள்ளதும் (ஜீவபூதாம்) ஜீவ வடிவாயுள்ளதும் (யயா) எதனுல் (இதம்) இந்த (ஜகத்) உலகம (தார்யதே) தாங்கப்படுகின்றதோ அதுவுமான (மே) எனது (பராம்) உயர்ந்த (ப்ரக்ருதிம்) பிரகிருதியை (வித்தி) அறிவாய்.

வாயு, தேயு (அக்னி), அப்பு (ஜலம்), ப்ருதிவீ (மண்) இவற்றின் சிருஷ்டி, (தை. உப. 2. 1.) எல்லாப் பிரவிருத்திக்கும் அஹங்காரமே முகற்காரணம். இங்கு கூறப்பட்ட 'மண்' முதலிய பஞ்ச பூதங்கள் ஸூக்ஷ்மத் தன்மாத்திரைகளைக் குறிப்பன, ஸ்தூலமான பொருள்களையன்று. (ஒ. 8. 18; 9-8; 14-3)

கேள்வி—அந்தக்கரணம் என்பது என்ன?

விடை—மனது, புத்தி சித்தம், அஹங்காரம் இந்நான்கையும் அந்தக்கரணமென்பர். மனதின் ஸ்தானம் கழுத்து, அதன் வேலை சந்தேகித்தல்; புத்தியின் ஸ்தானம் முகம், வேலை நிச்சயம்; அஹங்காரத்தின் ஸ்தானம் இருதயம், வேலை அபிமானம். சித்தம் புத்தியுடனும், அஹங்காரத்துடனும், மனத்துடனும் சேரும்.
(சங்கரர்—ஆத்மானுத்ம விவேகம்.)

5. கீழே கூறின பஞ்ச பூதங்களும், மனம் புத்தி அஹங்காரங்களும் ஜீவனுக்கு ஸ்தூல சரீரமாகவும் ஸூக்ஷ்ம சரீரமாகவும் அடிமைப்பட்டு நிற்பதால் இவற்றின் தொகை 'அபரா' அல்லது கீழ்ப்பட்டது எனக் கூறப்பட்டது.

அபரா—(க்ஷேத்ரரூபா) **அசுத்தா**, அனர்த்தகரீ, ஸம்ஸார பந்தனுத்மிகா. (சங்கரர்.)

ஜீவபூதாம்—(க்ஷேத்ரஜ்ஞ-லக்ஷணும்) க்ஷேத்ரஜ்ஞ - லக்ஷணமுடையதாய் உட்புகுந்து உலகை இயற்றுவிப்பதாய்.

एतद्योनीनि भूतानि सर्वाणी-त्युपधारय ।
अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलय-स्तथा ॥ ६ ॥ ॥२८६॥

मत्तः परतरं नान्यत् किञ्चिदस्ति धनञ्जय ।
मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणि-गणा इव ॥ ७ ॥ ॥२८७॥

ஏதத்-யோனீனி பூதானி ஸர்வாணீத்-யுபதாரய |
அஹம் க்ருத்ஸ்னஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலயஸ்-ததா
|| 6 || (286)

மத்த: பரதரம் நான்யத் கிஞ்சி-தஸ்தி தனஞ்ஜய |
மயி ஸர்வ-மிதம் ப்ரோதம் ஸூத்ரே மணி·கணா இவ
|| 7 || (287)

---

6. (ஸர்வாணி) எல்லா (பூதானி) பொருள்களும் (ஏதத்யோனீனி) இவ்விரண்டையும் பிறப்பிடமாய் உடையன(இதி) என்று (உபதாரய) அறிந்துகொள் ; (அஹம்) நான் (க்ருத்ஸ்னஸ்ய) எல்லா (ஜகத:) உலகிற்கும் (பரபவ:) உற்பத்தியும் (ததா) அவ்வாறே (ப்ரலய:) அழிவும்—ஆகின்றேன.

7. (தனஞ்ஜய) தனஞ்ஜயா ! (மத்த:) என்னைக் காட்டிலும் (பரதரம்) உயர்ந்தது (அன்யத்) வேறு (கிஞ்சித்) ஒரு சிறிதும் (ந அஸ்தி) இல்லை ; (ஸூத்ரே) சரட்டில் (மணிகணா:) மணிநிரைகள் (இவ) போல (இதம் ஸர்வம்) ஈதெல்லாம் (மயி) என்னிடத்தில் (ப்ரோதம்) கோக்கப்பட்டுள்ளது.

---

6. ஒ—கீ. 14. 1.4.

7. ஒ. 'யேன ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ |
தத் ஸூத்ரம் தாரயேத் யோகீ யோகவித் ப்ராஹ்மணோ யதி: ||'
—(அவதூதோபநிஷத்)

रसोऽह-मप्सु कौन्तेय प्रभास्मि शशि-सूर्ययोः ।
प्रणवः सर्ववेदेषु शब्दः खे पौरुषं नृषु ॥ ८ ॥ ॥२८८॥
पुण्यो गन्धः पृथिव्यां च तेज-श्चास्मि विभावसौ ।
जीवनं सर्वभूतेषु तप-श्चास्मि तपस्विषु ॥ ९ ॥ ॥ २८९ ॥

ரஸோऽஹ-மப்ஸு கௌந்தேய ப்ரபாஸ்மி சசி-
ஸூர்யயோ: |
ப்ரணவ: ஸர்வவேதேஷு சப்த:க்கே பௌருஷம்
ந்ருஷு || 8 || (288)
புண்யோ கந்த: ப்ருதிவ்யாஞ்ச தேஜச்-சாஸ்மி
விபாவஸௌ |
ஜீவனம் ஸர்வபூதேஷு தபச்சாஸ்மி தபஸ்விஷு || 9 ||

---

8. கௌந்தேய) குந்தீபுத்ரனே! (அஹம்) நான் (அப்ஸு) நீரில் (ரஸ:) சுவையும் (சசி-ஸூர்யயோ:) சந்திர சூரியர்களிடத்தில் (ப்ரபா) ஒளியும் (ஸர்வ வேதேஷு) வேதங்களனைத்துள்ளும் (ப்ரணவ:) ஓங்காரமும் (கே) ஆகாயத்தில் (சப்த:) சப்தமும் (ந்ருஷு) மனிதர்களுள (பௌருஷம்) ஆண்மையும் (அஸ்மி) ஆகின்றேன்.

9. (ப்ருதிவ்யாம்) மண்ணில் (புண்யோ கந்த: ச) நல்ல மணமும் (விபாவஸௌ) தீயில் (தேஜ:ச) ஒளியும்

---

8. ரஸோஹமப்ஸு—சப்தமாயுள்ள என்னிடத்து ஆகாயம் கோக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறே மற்றவிடங்களிலுங் கொள்க. இங்ஙனம் அறிவதே 'ஜ்ஞான விஜ்ஞானம' என்று வர்ணிக்கப் பட்டது.

இதுவே 'அந்தர்யாமி வித்தை' எனப்படுவது. (ப்ரு உப. 3.7.)

ஒ—வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனதென் றவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.
(மாணிக்கவாசகர்.)

बीजं मां सर्व-भूतानां विद्धि पार्थ सनातनम् ।
बुद्धि-र्बुद्धिमता-मस्मि तेज-स्तेजस्विना-महम् ॥१०॥ ॥२९०॥
बलं बलवता-मस्मि काम-राग-विवर्जितम् ।
धर्माविरुद्धो भूतेषु कामोऽस्मि भरतर्षभ ॥ ११ ॥ ॥२९१॥

பீஜம் மாம் ஸர்வ-**பூ**தானும் வித்**தி** பார்த்த ஸநாதனம் |
புத்திர்-ப்புத்திமதா-மஸ்மி தேஜஸ்-தேஜஸ்விஞ-மஹம்
|| 10 || (290)
பலம் பலவதா-மஸ்மி காம-ராக-விவர்ஜிதம் |
தர்மாவிருத்தோ **பூ**தேஷு காமோऽஸ்மி பரதர்ஷப
|| 11 || (291)

(அஸ்மி) ஆகின்றேன். (ஸர்வ**பூ**தேஷு) எல்லாப் பிராணிகளிடத்தும் (ஜீவனம் ச) உயிரும் (தபஸ்விஷு) தவஞ்செய்வோருள் (தப:ச) தவமும் (அஸ்மி) ஆகின்றேன்.

10. (பார்த்த) பார்த்தா! (மாம்) என்னை (ஸர்வ-**பூ**தானும்) எல்லாப் பொருளுக்கும் (ஸநாதனம்) அனுதியான (**பீ**ஜம்) வித்து என்று (வித்**தி**) அறி; (**புத்தி**மதாம் **புத்தி**:) புத்திமான்களின் புத்தியும் (தேஜஸ்விஞம்தேஜ:) வீரமுடையவர்களின் வீரமும் (அஹம் அஸ்மி) நானே ஆகின்றேன்.

11. (பரதர்ஷப) பரதவம்சத்திற் சிறந்தோனே! (காமராக-விவர்ஜிதம்) ஆசையும் பற்றுமில்லாத

---

11. பலம் பலவதாஞ்சாஹம்—என்றும் பாடம்.

காமராக - விவர்ஜிதம் — 'காமஸ்த்ருஷ்ண அஸந்நிக்ருஷ்டேஷு விஷயேஷு, ராகோ ரஞ்ஜனு ப்ராப்தேஷு விஷயேஷு' —அடையப் பெருத விஷயத்தில் அவா, காமம்; அடையப்பெற்ற விஷயத்தில் ஆழ்ந்த பற்று ராகம். (சங்கரர்.)

அதருமத்தில் ஆசை செல்லுதல் இயற்கை, தருமத்தில் செல்லுவது பகவானுடைய கிருபையால்.

ये चैव सात्त्विका-भावा राजसा-स्तामसाश्च ये ।
मत्त एवेति तान्विद्धि न त्वहं तेषु ते मयि ॥ १२ ॥ ॥२९२॥

யே சைவ ஸாத்விகா பாவா ராஜஸாஸ்-தாமஸாச்ச யே!
மத்த ஏவேதி தான் வித்தி ந த்வஹம் தேஷு தே மயி || 12 || (292)

(பலம்) வலிமையாக (பலவதாம்) பலவான்களிடம் (அஸ்மி) இருக்கின்றேன் ; (பூதேஷு) பிராணிகளிடம் (தர்மாவிருத்த:) தருமந்தவருத (காம:) ஆசையாகவும் (அஸ்மி) இருக்கின்றேன்.

12. (ச) மேலும் (யே) எவை (ஸாத்விகா: பாவா: ஏவ) ஸத்துவமான நிலையிலுள்ளவைகளோ (யே ச) இன்னும் எவைகள் (ராஜஸா: தாமஸா:) ரஜோகுண தமோகுண சம்பந்தமானவைகளோ, (தான்) அவைகள் (மத்த: ஏவ) என்னிடமிருந்தே உண்டாகின்றன (இதி) என்று (வித்தி) அறிவாய். (து) ஆனல் (அஹம்) நான் (தேஷு) அவைகளிடம் (ந) இல்லை ; (தே) அவைகள் (மயி) என்னிடம் இருக்கின்றன.

---

12. **ந த்வஹம் தேஷு தே மயி**—ஒ—கீ. 9. 4-5.

ஒ—அலைகள் ஸமுத்திரத்தில் இருப்புடையனவேயன்றி ஸமுத்திரம் அலையில் இருப்புடையதன்று. 'ஸாமுத்ரோ ஹி தரங்க: க்வசன ஸமுத்ரோ ந தாரங்க: (சங்கரர்.)

பகவானிடம் அனைத்தும் அடக்கம். அவன் அனைத்தையும் அறிகிருன். ஆனல் அனைத்தும் அவனைப் பூர்ணமாய் அடக்கிக் கொள்ளவோ அறிந்துகொள்ளவோ இயலாது. இது ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் உள்ள வேற்றுமை.

त्रिभि-र्गुणमयै-र्भावै-रेभिः सर्व-मिदं जगत् ।
मोहितं नाभिजानाति मामेभ्यः पर-मव्ययम् ॥ १३ ॥ ॥२९३॥
दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया ।
मामेव ये प्रपद्यन्ते माया-मेतां तरन्ति ते ॥ १४ ॥ ॥२९४॥

த்ரிபிர்-குணமயைர்-ப்பாவை-ரேபி: ஸர்வ-மிதஞ் ஜகத்|
மோஹிதம் நாபிஜாநாதி மாமேப்ய: பர-மவ்யயம்
|| 13 || (293)
தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா |
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா-மேதாம் தரந்தி தே
|| 14 || (294)

---

13. (ஏபி:) இந்த (த்ரிபி:) மூன்று குணமான (பாவை:) நிலைகளால் (இதம்) இத்த (ஸர்வம் ஜகத்) உலகெல்லாம் (மோஹிதம்) மோகத்தை அடைந்திருக்கிறது; (ஏப்ய:) இவைகட்கு (பரம்) அப்பாலுள்ள (அவ்யயம்) மாறுபாடில்லாத (மாம்) என்னை (ந அபி ஜாநாதி) அறிவதில்லை.

14. (ஏஷா) இந்த (குணமயீ) முக்குணவடிவமான (மம) என்னுடைய (மாயா) மாயை (தைவீ) தெய்வசக்தி வாய்ந்தது. (துரத்யயா ஹி) தாண்டுதற்கறியது அன்றோ; (யே) எவர்கள் (மாம் ஏவ) என்னையே (ப்ரபத்யந்தே) சரணடைகின்றார்களோ (தே) அவர்கள் (ஏதாம்) இந்த (மாயாம்) மாயையை (தரந்தி) தாண்டுகிறார்கள்.

---

13. மூன்று குணமயமான நிலைகள்—(ராகம், த்வேஷம், மோஹம்) விருப்பு, வெறுப்பு, மயக்கம். 'பாவை:'—சுபாவமான நிலைகளால் நான் இன்புறுபவன், நான் துக்கிப்பவன், நான் விரும்புகிறேன், நான் வெறுக்கிறேன் என்று இங்ஙனம் தன்னை பாவிப்பவன் பிரகிருதியின் வயப்பட்ட 'ப்ராக்ருதன்'. ஒ—கீ. 14. 5-13.

14. தைவீ—தெய்வமாகிய என்னைச் சார்ந்தமையால் தெய்வ

न मां दुष्कृतिनो मूढाः प्रपद्यन्ते नराधमाः ।
माययापहृत-ज्ञाना आसुरं भाव-माश्रिताः ॥ १५ ॥ ॥२९५॥

ந மாம் துஷ்க்ருதினோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: |
மாயயாபஹ்ருத-ஜ்ஞானா ஆஸுரம் பாவ-மாச்ரிதா:
|| 15 || (295)

---

15. (துஷ்க்ருதின:) பாவச்செயலுடையராகிய (மூடா:) அறிவீனரும். (நராதமா:) பயனற்ற மனிதப் பதர்களும் (மாயயா) மாயையினால் (அபஹ்ருத-ஜ்ஞானா:) ஞானத்தையிழந்தவர்களும் (ஆஸுரம் பாவம்) அசுர பாவத்தை (ஆச்ரிதா:) சார்ந்தவர்களும் (மாம்) என்னை (ந ப்ரபத்யந்தே) பூஜிப்பதில்லை.

சக்தி வாய்ந்தது. **மாம்** ஏவ—மாயாவியாகிய என்னையே (ஸர்வதர்மான் பரித்யஜ்ய '—மற்ற எல்லாப் பற்றையும் ஒழித்து என்றபடி.)

ஒ—நீர் வேறு பால் வேருகப் பிரிக்கக்கூடிய அன்னப் பறவை பாலைக் குடித்துவிட்டு நீரைத தள்ளி விடுகிறது. மற்றப் பறவைகளுக்கு இந்தச் சக்தியில்லை. ஈசுவரன் மாயையோடு நீரும் பாலும் போலக் கலந்திருககின்ருன். பரமஹம்ஸர்களுக்குத் தான் மாயையை அகற்றி ஈசுவரனை அறியும் சக்தி உண்டு.

பாம்புக்குப் பல்லில் விஷமிருந்தபோதிலும் அவ்விஷத்தால் அது தீமையடைவதில்லை. இதைப் போலத்தான் ஈசுவரனிடத்தில் உள்ள மாயையும்; அவரைக் கட்டுப்படுத்தாமல் ஜகத்தை மட்டும் கட்டுப்படுத்துகிறது.

பூனை தனது குட்டிகளைப் பற்களால் பிடிக்கும்போது அக்குட்டிகளுக்குத் தீமை உண்டாவதில்லை. ஆனல் அது ஒரு எலியைப் பிடிக்குமானல் அவ்வெலி உடனே இறக்கின்றது. இதைப்போலவே மாயையானது மற்றவர்களை நாசமாக்கும். ஆனல் பக்தனை ஒன்றும் செய்யாது.

மாயையில் பந்தப்பட்ட மனுஷ்யன் ஜீவன்; மாயையாகிய சங்கிலியினின்று விடுபட்டவன் ஈசுவரன். (ரா. கி.)

நாம் நிழலைப் பார்க்கிருேம், நிழலுக்குக் காரணமாகிய ஒளியைப் பார்க்க வேண்டும்.

15-16. உ-ம் நால்வகை பக்தர்கள்—

(i) துன்புற்ருேர்—குந்தி, திரௌபதி, பரீக்ஷித்து.

चतु-र्विधा भजन्ते मां जनाः सुकृतिनोऽर्जुन ।
आर्तो जिज्ञासु-रर्थार्थी ज्ञानी च भरतर्षभ ॥ १६ ॥ ॥२९६॥

சதுர்விதா பஜந்தே மாம் ஜனா: ஸுக்ருதிநோऽர்ஜுன |
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு-ரர்த்தார்த்தீ ஜ்ஞானீ ச
பரதர்ஷப || 16 || (296)

---

16. (பரதர்ஷப!) அர்ஜுனா (ஆர்த்த:) துன்புற்றோன், (ஜிஜ்ஞாஸு:) ஞானத்தைத் தேடுவோன், (அர்த்தார்த்தீ) செல்வத்தை நாடுவோன் (ச) மேலும் (ஜ்ஞானீ) ஞானி (சதுர்விதா:) இந் நால் வகையான (ஸுக்ருதின: ஜனா:) புண்ணியவான்களும் (மாம்) என்னை (பஜந்தே) பூஜிக்கின்றார்கள்.

(ii) கலைஞானத்தைத் தேடியடைந்தவர்—வியாஸர், வசிஷ்டர்.
(iii) பொருளை நாடியடைந்தவர்—சுக்ரீவன், துருவன்.
(iv) ஞானிகள்—சுகர், நாரதா, பிரஹ்லாதர்.

நல்லோர் நால்வகையினராய்க் கூறியுள்ளபடி தீயோரும் நால் வகையினராய்க் கூறப்பட்டுள்ளனர்.

(i) துன்புற்றோன் × துன்புறுத்தும் அசுர சுபாவமுடையோன்.
(ii) ஞானத்தைத் தேடுவோன் × மாயையினால் ஞானத்தை யிழந்தவன்.
(iii) செல்வத்தை நாடுவோன் × எதற்கும் பயனற்ற நராதமன்.
(iv) ஞானி × மூடன்.

முன் நால்வரும் 'ஸுக்ருதின:' பின் நால்வரும் 'துஷ்க்ருதின:' முன் நால்வருமே விஜ்ஞானத்துடன் கூடிய ஞானத்தை எய்துதற்கு அதிகாரிகள். மற்றவர் 'அஸுரஸ்வபாவம்' உடையவர். —ஒ—கீ. 16. 7-21.

'துன்புற்றோன்'—
ஒ—"வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல்" (குலசேகராழ்வார்.)

'துன்பக் கண்ணீரைத் துடைக்கும் உன் தரிசனம் துன்பம் வரும்போது கிட்டுவதால் அடிக்கடி துன்பம் வரட்டும் என்பது என் பிரார்த்தனை' (குந்தீ—பாகவதம்.)

ஒ. 'ஆர்த்தானும் பாப-நிவ்ருத்யர்த்தம், ஜிஜ்ஞாஸு பக்தனும் நிஷ்காமனுமபி சித்த சுத்த்யர்த்தம், அர்த்தார்த்தி-பக்தானும்

तेषां ज्ञानी नित्ययुक्त एकभक्ति-र्विशिष्यते ।
प्रियो हि ज्ञानिनोऽत्यर्थ-महं स च मम प्रियः ॥१७॥ ॥२९७॥
उदाराः सर्व एवैते ज्ञानी-त्वात्मैव मे मतम् ।
आस्थितः स हि युक्तात्मा मामेवानुत्तमां गतिम् ॥१८॥ ॥२९८॥

தேஷாம் ஜ்ஞானீ நித்யயுக்த ஏகபக்திர்-விசிஷ்யதே |
ப்ரியோ ஹி ஜ்ஞானினோऽத்யர்த்த-மஹம் ஸ ச மம ப்ரிய: || 17 ||
உதாரா: ஸர்வ ஏவைதே ஜ்ஞானீ-த்வாத்மைவ மே மதம் |
ஆஸ்தித: ஸ ஹி யுக்தாத்மா மாமேவானுத்தமாம் கதிம் || 18 ||

17. (தேஷாம்) அவர்களுள் (நித்யயுக்த:) என்றும் வழுவாத யோகமுடையவனும் (ஏகபக்தி:) ஒன்ருகிய பரத்தில் பக்தியுடையவனும் ஆகிய (ஜ்ஞானீ) ஞானி (விசிஷ்யதே) சிறந்தவனுகின்ருன். (ஹி) நிச்சயமாக (அஹம்) நான் (ஜ்ஞானின:) ஞானிகளுக்கு (அத்யர்த்தம்) மிக உயர்ந்த (ப்ரிய:) பிரியன், (ஸ ச) ஞானியும் (மம ப்ரிய:) எனக்குப் பிரியன்.

18. (ஏதே) இவர்கள் (ஸர்வே) எல்லோரும் (உதாரா: ஏவ) சிறந்தவரே ; (து) ஆனுல் (ஜ்ஞானீ) ஞானி (ஆத்மா ஏவ) நானே என்பது (மே மதம) என்

புருஷார்த்த ஸித்த்யர்த்தம் ஜ்ஞானி பக்தானும் லோகஸங்க்ரஹார்த்தம் கீர்த்தன-ஸ்யாவச்யகத்வாத்'
(பாஸ்கர ராயர் : லலிதா ஸஹஸ்ரநாமம்.)

17. ப்ரியோ ஹி...அஹம் ஸ ச மம ப்ரிய :—
ஒ—உன்னைக்கொண் டென்னுள் வைத்தேன்
என்னையும் உன்னில் இட்டேன். (பெரியாழ்வார்.)

18. ஞானீ நானே—ஒ—பகவானைக் காண விரும்புகிருயா? பகவத்ப்ரேமையால் பித்தேறிய ஒருவனைத் தேடு. அவனிடத்தில் பகவானைக் காண்பாய். (ரா. கி.)

बहूनां जन्मना-मन्ते ज्ञानवान् मां प्रपद्यते ।
वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः ॥ १९ ॥ ॥ २९९ ॥

பஹூனும் ஜன்மனு-மந்தே ஜ்ஞானவான் மாம் ப்ரபத்யதே |
வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: || 19 || (299)

மதம்; (ஹி) நிச்சயமாக (யுக்தாத்மா) யோகத்தில் நிலைத்த (ஸ:) அவன் (அனுத்தமாம்) அதற்குமேல் உயர்ந்ததொன்றில்லாத (கதிம்) கதியாகிய (மாம் ஏவ) என்னையே (ஆஸ்தித:) அடைவதற்காக முயல்பவனுகின்ருன்.

19. (பஹூனும்) பல (ஜன்மனும்) ஜன்மங்களின் (அந்தே) முடிவில் (ஜ்ஞானவான்) ஞானி (வாஸுதேவ:) வாசுதேவனே (ஸர்வம்) யாவும் (இதி) என்று (மாம்) என்னை (ப்ரபத்யதே) வந்தடைகின்ருன். (ஸ: மஹாத்மா) அவன் மஹாத்மா; (ஸுதுர்லப:) காணுதற்கரியவன்.

உதாரா: ஸர்வ ஏவ—ஒ—சூரிய வெளிச்சம் எங்கும் ஒன்றுதான். ஆனுல் ஜலம், கண்ணுடி, மெருகிட்ட உலோகம் இவைகளில் நன்ருய்ப் பிரதிபலிக்கிறது. அதுபோலத்தான் பகவானுடைய பிரகாசமும். அது எல்லோரிடமும் சமமாயிருக்கின்றது. என்ருலும் ஸாதுக்களுடைய தூய இருதயத்தில் நன்ருகப் பகவான் பிரகாசிக்கின்ருன். (கி. ரா.)

19. ஒ—வாஸநாத் வாஸுதேவஸ்ய வாஸிதம் தே ஜகத்த்ரயம் | ஸர்வ பூத நிவாஸோऽஸி வாஸுதேவ நமோऽஸ்துதே || (விஷ்ணு ஸஹஸ்ரநாமம்).

19. வாஸுதேவ: ஸர்வமிதி—ஒ—
'அங்கிங்கெனுதபடி யெங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி யருளொடு நிறைந்ததெது' (தாயுமானவர்.)

कामैस्तैस्तै-र्हृतज्ञानाः प्रपद्यन्तेऽन्यदेवताः ।
तं तं नियम-मास्थाय प्रकृत्या नियताः स्वया ॥२०॥ ॥३००॥

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितु-मिच्छति ।
तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधा-म्यहम् ॥२१॥ ॥३०१॥

காமைஸ்-தைஸ்தைர்-ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தே
ऽன்யதேவதா: |
தம் தம் நியம-மாஸ்தாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா
|| 20 || (300)

யோ யோ யாம் யாம் தனும் பக்த: ச்ரத்தயார்ச்சிது-
மிச்சதி |
தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்தாம் தாமேவ விததாம்-
யஹம் || 21 || (301)

---

20. (தை: தை:) அந்தந்த (காமை:) ஆசைகளால் (ஹ்ருதஜ்ஞாநா:) அறிவிழந்தவர்கள் (தம்தம்) அந்தந்த (நியமம்) நியமத்தை (ஆஸ்தாய) கைக்கொண்டு (ஸ்வயா ப்ரக்ருத்யா) தம்முடைய ஸ்வபாவத்தால் (நியதா:) கட்டுண்டு கவரப்பட்டவர்களாய் (அன்ய தேவதா:) வேறு தெய்வங்களை (ப்ரபத்யந்தே) வழிபடுகின்றனர்.

21. (ய: ய:) எவனெவன் (யாம் யாம்) எந்தெந்த (தனும்) மூர்த்தியை (ச்ரத்தயா) சிரத்தையுடன் (பக்த:) பக்தனாக (அர்ச்சிதும்) பூஜிப்பதற்கு (இச்சதி) விரும்புகிறானோ, (தஸ்ய தஸ்ய) அவனவனுக்கு (தாம் ஏவ ச்ரத்தாம்) அந்த சிரத்தையையே (அஹம்) நான் (அசலாம்) அசையாததாக (விததாமி) செய்கின்றேன்.

---

20. ப்ரக்ருத்யா ஸ்வயா—முற்பிறப்பில் ஏற்பட்ட ஸம்ஸ்காரத்தால், 'ஜன்மாந்தரார்ஜித-ஸம்ஸ்கார விசேஷேண' (சங்கரர்.)

ஒ—கீ 9. 13-15.

स तया श्रद्धया युक्त-स्तस्याराधन-मीहते ।
लभते च ततः कामान् मयैव विहितान् हि तान् ॥ २२ ॥
अन्तवत्तु फलं तेषां तद्भव-त्यल्पमेधसाम् ।
देवान् देवयजो यान्ति मद्भक्ता यान्ति मामपि ॥ २३ ॥

ஸ தயா ச்ரத்தயா யுக்தஸ்-தஸ்யாராதன-மீஹதே |
லபதே ச தத: காமான் மயைவ விஹிதான் ஹி தான்
|| 22 || (302)

அந்தவத்து பலம் தேஷாம் தத்பவத்-யல்பமேதஸாம் |
தேவான் தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி
|| 23 || (303)

---

22. (ஸ:) அவன் (தயா) அவ்வாறுன (ச்ரத்தயா) சிரத்தையுடன் (யுக்த:) கூடியவனுய் (தஸ்ய) அம் மூர்த்தியின் (ஆராதனம்) வழிபாட்டை (ஈஹதே) விரும்பிச் செய்கிருன்; (ச) மேலும் (தத:) அதினின்று (மயா ஏவ) என்னுலேயே (விஹிதான்) அளிக்கப்பட்ட (தான்) அந்த (காமான்) ஆசைகளே (ஹி) நிச்சயமாக (லபதே) அடைகிருன்.

23. (து) ஆனுல் (அல்பமேதஸாம்) அற்பமதி யுடைய (தேஷாம்) அவர்கட்கு (தத் பலம்) அந்தப்

---

22. **விஹிதான் ஹிதான்**—என்று பதம் பிரித்தால் ஆசைகள் ஹிதமானவை என்று பொருள்படும். இது உசிதமன்று.

ஒ—'யாதொரு தெய்வங்கண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே'
(சிவஞான சித்தியார்.)

அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவரிறையவ ரென வடி யடைவர்கள். (நம்மாழ்வார்.)

'ஸர்வா அபி தேவதா மமைவ மூர்த்தய:, ததாராதனமபி வஸ்துதோ மமாராதன்-மேவ, தத்தத் பல-தாதாபி ச அஹமேவ'
(ஸ்ரீதரர்)

23. **அல்பமேதஸாம்**—சிரமம் ஒன்றேயாயினும் அழிவில்லாத பயனைத் தரும் பகவானை வழி படாமல் அழியும் பயனைத் தரும் தேவர்களை வழிபடுவதால் அற்பமதி யுடையவராகின்றனர்.

अव्यक्तं व्यक्ति-मापन्नं मन्यन्ते मामबुद्धयः ।
परं भाव-मजानन्तो ममाव्यय-मनुत्तमम् ॥ २४ ॥ ॥३०४॥

அவ்யக்தம் வ்யக்தி-மாபன்னம் மன்யந்தே மா-
மபுத்தய: |
பரம் பாவ-மஜானந்தோ மமாவ்யய-மனுத்தமம்
|| 24 || (304)

பயன் (அந்தவத்) அழிவுடையதாக (பவதி) இருக்கும்; (தேவயஜ:) தேவர்களைப் பூஜிப்பவர்கள் (தேவான்) தேவர்களை (யாந்தி) அடைகிறார்கள்; (மத்பக்தா: அபி) என் பக்தர்களோ (மாம் யாந்தி) என்னை அடைகிறார்கள்.

24. (அபுத்தய:) மதியீனர் (அவ்யயம்) மாறுபாடில்லாததும் (அனுத்தமம்) மேம்பட்ட வேறொன்றில்லாததும் ஆன (மம) என்னுடைய (பரம் பாவம்) பரமாத்மஸ்வரூபத்தை (அஜானந்த:) அறியமாட்டாதவர்களாய் (அவ்யக்தம்) தோன்றுதலில்லாத (மாம்) என்னை (வ்யக்திமாபன்னம்) தோற்றத்தை அடைந்தவனாக (மன்யந்தே) கருதுகின்றனர்.

வ்யக்திமாபன்னம்—என்னையும் தங்களைப்போல் கருமவசத்தால் பிறப்பெய்தினவனாய் அறியாமையால் எண்ணுகின்றனர்.

ஒ—**வசுதேவர்**—(குருக்ஷேத்திரத்தில் முனிவர்களை நோக்கி) எப்படிப்பட்ட புண்ணிய கருமங்களால் பூர்வ கருமங்கள் தொலையுமோ அதைச் சொல்லுங்கள்.

நாரதர்—கிருஷ்ணனைப் புத்ரனாகப் பெற்றும் இவர் அவர் பெருமையை உணராது அவரைத் தன் குழந்தையாகவே கருதி நம்மைத் தன் நன்மையைக் குறித்து இப்படிக் கேட்பது ஆச்சரியமன்றோ? ஸமீபத்திலுள்ளதை மனிதர் அனாதரவு செய்கின்றனர். கங்கைக் கரையிலுள்ளவர் அதை மதியாமல் வேறு தீர்த்தங்களைத் தேடிச் செல்வது போலிருக்கிறது இவர் செய்கை.

(பாகவதம். 10. 84 29-31.)

பகவான் பல பொருள்களிடை ஒன்றன்று. அவைகட்கு ஆதாரமாயும் அப்பாலும் உள்ள ஒருவன்.

नाहं प्रकाशः सर्वस्य योगमाया-समावृतः ।
मूढोऽयं नाभिजानाति लोको मामज-मव्ययम् ॥२५॥ ॥३०५॥
वेदाहं समतीतानि वर्तमानानि चार्जुन ।
भविष्याणि च भूतानि मां तु वेद न कश्चन ॥२६॥ ॥३०६॥

நாஹம் ப்ரகாச: ஸர்வஸ்ய யோகமாயா-ஸமாவ்ருத: |
மூடோSயம் நாபிஜாநாதி லோகோ மாமஜ-மவ்யயம்
|| 25 || (305)
வேதாஹம் ஸமதீதானி வர்த்தமானானி சார்ஜுன |
பவிஷ்யாணி ச பூதானி மாந்து வேத ந கச்சன
|| 26 || (306)

---

25. (அஹம்) நான் (யோகமாயாஸமாவ்ருத:) யோகமாயையினால் மூடப்பட்டு (ஸர்வஸ்ய) எல்லோருக்கும் (ந ப்ரகாச:) விளங்குவதில்லை; (மூட:) மதியிழந்த (அயம் லோக:) இவ்வுலகம் (அஜம்) பிறப்பற்றவனும் (அவ்யயம்) மாறுபாடற்றவனும் ஆகிய (மாம்) என்னை (ந அபிஜாநாதி) அறிவதில்லை.

26. (அர்ஜுன) அர்ஜுனா! (ஸமதீதானி ச) சென்றுவிட்டனவும் (வர்த்தமானானி) நிகழ்வனவும் (பவிஷ்யாணி ச) இனி வருவனவும் ஆகிய (பூதானி) பொருள்களை (அஹம்) நான் (வேத) அறிவேன்; (து) ஆனால் (மாம்) என்னை (கச்சன) எவனும் (ந வேத) அறியான்,

---

25. **யோகமாயா ஸமாவ்ருத:**—செப்பிடு வித்தைக்காரனுடைய ஜாலங்கள் அவனை மயக்காது பிறரை மயக்குவதுபோல், யோக மாயையானது மாயாவியாகிய பகவானை மயக்காது. பிறரையே மோஹிக்கச் செய்கின்றது. (சங்கரர்.)

நாஹம் ப்ரகாச: ஸர்வஸ்ய—என் பக்தர்களாகிய சிலருக்கே நான் பிரகாசிக்கின்றேன் என்பது கருத்து.

ஸ்ரீ ராமாவதாரத்தில் ஏழு ரிஷிகளே அவரை பகவான் என உணர்ந்தனர். (ரா. கி.)

इच्छा-द्वेष-समुत्थेन द्वन्द्व-मोहेन भारत ।
सर्वभूतानि संमोहं सर्गे यान्ति परंतप ॥ २७ ॥ ॥ ३०७ ॥
येषां त्वन्तगतं पापं जनानां पुण्य-कर्मणाम् ।
ते द्वन्द्व-मोह-निर्मुक्ता भजन्ते मां दृढव्रताः ॥२८॥ ॥३०८॥

இச்சா-த்வேஷ-ஸமுத்தேன த்வந்த்வ-மோஹேன
பாரத |
ஸர்வபூதானி ஸம்மோஹம் ஸர்க்கே யாந்தி பரந்தப ||27||

யேஷாந்-த்வந்தகதம் பாபம் ஜனனும் புண்ய-கர்மணும்|
தே த்வந்த்வ-மோஹ-நிர்முக்தா பஜந்தே மாம்
த்ருடவ்ரதா: || 28 || (308)

---

27. (பரந்தப) எதிரிகளை எரிக்கும் அர்ஜுனு! (பாரத) பாரதா! (ஸர்க்கே) பிறககும்போதே (ஸர்வ பூதானி) எல்லாப் பிராணிகளும் (இச்சாத்வேஷ ஸமுத்தேன) விருப்பு வெறுப்பினின்றுதித்த (த்வந்த்வ மோஹேன) இரட்டைவடிவபான மோகத்தால் (ஸம் மோஹம் யாந்தி) மோகத்தை யடைகின்றன.

28. (து) ஆனல் (புண்யகர்மணும்) புண்ணிய கர்மாவைச் செய்த (யேஷாம் ஜனனும்) எந்த மனிதர்

---

27. விருப்புவெறுப்பின் வசப்பட்டமையே பிறப்புக்குக் காரண மாதலால், விருப்பு வெறுப்புகளிலேயே ஊறிப் பிறந்து அந்த தோஷத்தால் மனம் கோணலடைந்து வெளி விஷயங்களையே உள்ளபடி உணரும் சக்தி மனதுக்கு இல்லாதிருக்கின்றது; ஆத்ம விஷயத்தை எங்ஙனம் அறியும்? த்ரிகால ஞானத்தை எங்ஙனம் அடையும்? (சங்கரர்.)

28. த்ருடவ்ரதா:—பகவானைப் பற்றுதற்கு மற்றப் பற்று களை ஒழித்தல் அவசியம் என்று திடமான அறிவை உடையவர்கள்.

ஒ—'மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளுமிவ்
வையங் தன்னெடுங் கூடுவதில்லை யான்'
(குலசேகராழ்வார்.)

जरा-मरण-मोक्षाय मामाश्रित्य यतन्ति ये ।
ते ब्रह्म तद्विदुः कृत्स्न-मध्यात्मं कर्म चाखिलम् ॥२९॥ ॥३०९॥

ஜரா-மரண-மோக்ஷாய மாமாச்ரித்ய யதந்தி யே |
தே ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்னம் அத்யாத்மம் கர்ம
சாகிலம் || 29 || (309)

களுக்கு (பாபம்) தீவினை (அந்தகதம்) அழிவுற்றதோ (த்வந்த்வமோஹநிர்முக்தா:) இரட்டை வடிவான மோகத்தினின்று விடுபட்ட (தே) அவர்கள் (த்ருட வ்ரதா:) உறுதியான நோன்புடைவர்களாய் (மாம்) என்னை (பஜந்தே) பூஜிப்பாாகள்.

29. (ஜராமரணமோக்ஷாய) மூப்பினின்றும் சாதலினின்றும் விடுபடுதற்காக (மாம) என்னை (ஆச்ரித்ய) சரணடைந்து (யே) எவர்கள் (யதந்தி) முயல்கின்ருர்களோ, (தே) அவர்கள் (தத் ப்ரஹ்ம) அந்த பிரம்மத்தையும் (க்ருத்ஸ்னம் அத்யாத்மம்) அத்தியாத்ம தத்துவம் முழுவதையும் (அகிலம் கர்ம ச) கருமங்கள் யாவற்றையும் (விது:) அறிவர்.

ஒ—பக்தனுடைய திடமான மனம் இம்சையாலும் சோதனையாலும தடுமாற்றமடைவதில்லை. திடபக்தி யில்லாதவனுடைய மனமோ வெகு அற்பமான காரணத்தைக் கொண்டும் சலனமடையும். (ரா. கி.)

29-30. அத்யாத்மம். அதியஜ்ஞம், அதிதைவம் முதலியவற்றின பொருளை 8-வது அத்தியாய ஆரம்பத்தில் காண்க.

ஒ—வலையில் அகப்பட்ட மீன்களில் சில தப்பித்துக்கொள்ள முயலுா், சில தப்பித்துக்கொள்ளும். சில வெளியேற முயற்சி செய்யாமலே இருக்கும். அவ்வாறு மாயையில் அகப்பட்ட மனிதர்களிலும் மூன்றுவகை உண்டு. (1) முக்தி நெறியில் முயலாது கட்டுண்டு கிடப்போா், (2) முயலும் முமுக்ஷுக்கள், (3) முக்தர்கள். (ரா. கி.)

साधिभूताधिदैवं मां साधियज्ञं च ये विदुः ।
प्रयाण-कालेऽपि च मां ते विदु-र्युक्त-चेतसः ॥३०॥ ॥३१०॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादे ज्ञानविज्ञानयोगो नाम
सप्तमोऽध्यायः ॥

ஸாதிபூதாதிதைவம் மாம் ஸாதியஜ்ஞஞ் ச யே விது: |
ப்ரயாண-காலேऽபி ச மாம் தே விதுர்-யுக்த-சேதஸ:
|| 30 || (310)

இதி ஶ்ரீமத் பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம-
வித்யாயாம் யோகசாஸ்த்ரே ஶ்ரீக்ருஷ்ணார்ஜுன-
ஸம்வாதே ஜ்ஞானவிஜ்ஞானயோகோ நாம
ஸப்தமோऽத்யாய: ||

---

30. (யே ச) மேலும் எவர்கள் (மாம்) என்னை (ஸாதிபூதாதிதைவம் ஸாதியஜ்ஞஞ்ச) அதிபூதம் அதிதைவம் அதியஜ்ஞம் எனும் வடிவினனாக (விது:) அறிந்தவர்களோ, (தே) அவர்கள் (யுக்த சேதஸ:) நிலைத்த மனத்தினராய் (ப்ரயாணகாலே அபி) மரண காலத்திலுங்கூட (மாம்) என்னை (விது:) அறிவர்.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக
சாஸ்திரமாயும் ஶ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும்
ஸம்பாஷணையாயும் விளங்கும் ஶ்ரீமத் பகவத்கீதை
என்னும் உபநிஷத்தில் ஜ்ஞானவிஜ்ஞானயோகம்
என்று பெயர் பெற்ற ஏழாவது அத்தியாயம்
முற்றும்,

ப்ரயாணகாலேடபி—ஒ—பகல் முழுவதும் 'ராதா கிருஷ்ணு' என்று சொல்லிக்கொண்டிருக்கும் கிளி, பூனை அதன்மேல் பாய்ந்தால் 'கீச்சு மூச்சு' என்று கத்தும். திடமான பக்தியில்லாதவர்களும் மரண காலத்தில் இந்நிலையை அடைகின்றனர். (ரா. கி,)

அத்தியாய விஷயச் சுருக்கம் :—

பகவான் தன்னிடம் பக்தி செய்வோர் தன்னை முற்றும் அறியும் வகையைக் கூறுவதாய்த் தொடங்குதல். உண்மை பக்தியும் உண்மை அறிவும் அரிதினும் அரிது எனல். பிரகிருதி இருவகை: அபரா, பரா. அபராப் பிரகிருதி எட்டுப் பிரிவுடையது: பராப் பிரகிருதி ஜீவமயமாகியது. பகவான் ஸூத்ராத்மா, பகவானுடைய விபூதி. மூடர்கள் முக்குணங்களில் கட்டுண்டு பகவானைத் தெரிந்து கொள்வதில்லை எனல். பகவானிடம் பக்தி செய்வோரே குணமயமான மாயையைக் கடக்கும் சக்தியைப் பெறுகின்றனர். பக்தர் நாலுவகை; அவர்களில் உத்தமன் ஞானி. இதர தெய்வங்களைப் பூஜிப்போரும் அவர் பெறும் அற்ப பலன்களும், பிரம்மம், கர்மம், அத்யாத்மம், அதிதைவதம். அதியஜ்ஞம், அதிபூதம்—இவ்வனைத்தின் தத்துவத்தையும் பிரயாண காலத்திலும் சிதரு மனத்துடன் உத்தம பக்தர்கள் உணருவர் என்று கூறி முடித்தல்.

எப்பொருளும் தன்னூர் இருபகுதி யாலுளதாம்
மெய்ப்பொருளும் பக்தர் விதமுமவர்க்—கொப்பில் பதம்
கூடுவதும் ஏனையரைக் கொண்டிறைஞ்சு நர்க்குநலன்
வாடுவதும் கூறுவன்மால் மற்று. (கீ. வெ.)

॥ अष्टमोऽध्यायः ॥

(अक्षरब्रह्मयोगः)

अर्जुन उवाच—

किं तद्ब्रह्म किमध्यात्मं किं कर्म पुरुषोत्तम ।
अधिभूतं च किं प्रोक्त-मधिदैवं किमुच्यते ॥ १ ॥ ॥३११॥

எட்டாவது அததியாயம்

(அக்ஷரப்ரஹ்ம யோகம்)

அர்ஜுன உவாச—
கிம் தத்ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம|
அதிபூதஞ் ச கிம் ப்ரோகதம் அதிதைவம கிமுச்யதே
|| 1 || (311)

அர்ஜுனன் கூறியது—

1. (புருஷோத்தம) புருஷோத்தமா (தத்) அந்த (ப்ரஹ்ம) பிரம்மம் என்பது (கிம்) எது? (அத்யாத்மம்) அத்தியாத்மம் (கிம்) எது? (கர்ம) கருமம் (கிம்) எது? (அதிபூதம்) அதிபூதம் (கிம ப்ரோக்தம்) எதுவெனச் சொல்லப்படுவது? (ச) மேலும் (கிம) எது (அதிதைவம்) அதிதைவம் என (உச்யதே) சொல்லப்படுகிறது?

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்:—

அத். 7ன் முடிவில் பிரம்மம், அத்யாத்மம், கர்மம், அதிபூதம், அதிதைவம் அதியஜ்ஞும் இவ்விஷயங்களைப் பற்றிய முழு ஞானமும் பிரயாண காலத்தில் பகவத தியானமும் உத்தம ஞானிக்குக் கிட்டுகின்றது என்று கூறப்பட்டது. இந்த ஏழு விஷயங்களையும் விரித்துக் கூறும்படி அர்ஜுனன் கேட்க பகவான் கூறுவதால் இது 'ஏழுவகை வினு விடுத்த அத்தியாயம்' என்றும், அக்ஷர ப்ரஹ்மம எனப்படும் ஓங்கார உபாஸனையும் கூறப்படுதலால் இவ்வத்தியாயம் **அக்ஷரப்ரஹ்ம யோகம்** என்றும் கூறப்படும். இதைத் 'தாரக பரஹ்ம யோகம்' என்றும், 'ப்ரஹ்மாக்ஷர நிர்த்தேசம்' என்றும் கூறுவதுண்டு.

ஆராத செல்வமும் ஆருயிர் காணு மரும்பயனும்
பேராத தன் சழற்கீ ழமரும் பெருவாழ்ச்சிகளும்
சேராதுகந்தவா தூய்மதி கொள்வதுஞ் செய்வனவும்
தேரார் விசயனுக்குத் திரு நாரணன் செப்பினனே. (கீ. ஸ.)

अधियज्ञः कथं कोऽत्र देहेऽस्मिन् मधुसूदन ।
प्रयाणकाले च कथं ज्ञेयोऽसि नियतात्मभिः ॥ २ ॥ ॥३१२॥

श्रीभगवानुवाच—

अक्षरं ब्रह्म परमं स्वभावोऽध्यात्म-मुच्यते ।
भूतभावोद्भवकरो विसर्गः कर्मसंज्ञितः ॥ ३ ॥ ॥३१३॥

அதியஜ்ஞ: கதம் கோऽத்ர தேஹேऽஸ்மின் மதுஸூதன|
ப்ரயாணகாலே ச கதம் ஜ்ஞேயோऽஸி நியதாத்மபி:
|| 2 || (312)

ஸ்ரீபகவானுவாச—

அக்ஷரம் ப்ரஹ்ம பரமம் ஸ்வபாவோऽத்யாத்ம-முச்யதே|
பூதபாவோத்பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித:
|| 3 || (313)

---

2. (மதுஸூதன) மதுஸூதனு! (அத்ர) இங்கு (அஸ்மின் தேஹே) இவ்வுடலில் (அதியஜ்ஞ:) அதியஜ்ஞும் (க:) யார்? (கதம்) எங்ஙனம்? (ச) மேலும் (ப்ரயாணகாலே) மரணகாலத்தில் (நியதாத்மபி:) தன்னடக்கம் பெற்றவரால (கதம்) எங்ஙனம் (ஜ்ஞேய: அஸி) நீ அறியப்படுகின்ருய்?

ஸ்ரீ பகவான் கூறியது—

3. (அக்ஷரம்) அக்ஷரம் என்பது (பரமம்) எல்லேப் பொருளான (ப்ரஹ்ம) பிரம்மம், (ஸ்வபாவ:) அதன்

1-4. வினு விடைகள்:—

(1) **பிரம்மம்** என்பது என்ன? அழியாத பரம்பொருள்.

(2) **அத்யாத்மம்** என்பது என்ன? பரம்பொருளே பரா பிரகிருதியில் வியாபித்து ஜீவாத்மாவாய்த் தோன்றும் ஸ்வபாவம்.

ஸ்வபாவ: 'தஸ்யைவ பரஸ்ய ப்ரஹ்மண: ப்ரத்யகாத்ம-பாவ: ஸ்வபாவ: —சங்.

(3) **கருமம்** என்பது என்ன? ஸ்தாவர ஜங்கம ஸ்ருஷ்டிக்கும் நிலேக்கும் காரணமாயுள்ளதும் யஜ்ஞ வடிவாயுள்ளதுமான **விஸர்க்கம்.**

अधिभूतं क्षरो भावः पुरुषश्चाधिदैवतम् ।
अधियज्ञोऽहमेवात्र देहे देहभृतां वर ॥ ४ ॥ ॥३१४॥

அதிபூதம் க்ஷரோ பாவ: புருஷச்சாதிதைவதம் |
அதியஜ்ஞோ ऽஹமேவாத்ர தேஹே தேஹப்ருதாம் வர
|| 4 || (314)

ஸ்வபாவம் அல்லது ஒவ்வொரு உடலிலும் அதன் ஆவிர்ப்பாவம் (அத்யாத்மம் உச்யதே) அத்தியாத்மம் என்று சொல்லப்படும். (பூதபாவோத்பவகர:) பொருள் களின் இருப்புக்கும் உற்பத்திக்கும் காரணமான (விஸர்க்க:) தியாக ரூபமான யஜ்ஞம் (கர்மஸம்ஜ்ஞித:) கருமம் எனப்படும்.

4. (தேஹப்ருதாம்) உடல் தாங்கியவருள் (வர) சிறந்தவனே (க்ஷர:) அழியும் (பாவ:) இயல்புடையது (அதிபூதம்) அதிபூதம் எனப்படும்; (புருஷ: ச) புருஷனே (அதிதைவம்) அதிதெய்வம்; (அத்ர தேஹே) இந்த தேகத்தில் (அஹம் ஏவ) நானே (அதியஜ்ஞ:) அதி யஜ்ஞம்.

---

(4) **அதிபூதம்** என்பது என்ன? பஞ்ச பூதங்களாகவும், அந்தக்கரணமாகவும் விரிந்து அழியும் இயல்புடையதான அபராப் பிரகிருதி.

(5) **புருஷன்** எனப்படுபவன் யார்? அதிதைவம் எனப்படும் விராட் புருஷன். எல்லா உலகையும் தன் உடலாகவும், எல்லா உயிர்களையும் தன் உயிராகவும் கொண்டு விளங்குபவன்.

(ஒ—புருஷ ஸூக்தம்)

(6) **அதியஜ்ஞன்** எனப்படுபவன் யார்? யஜ்ஞ நாராயணன் என்றும், க்ஷேத்ரஜ்ஞன் என்றும் புருஷோத்தமன் என்றும் பெயர் படைத்த பகவான்.

(7) **பிரயாண காலத்தில்** தன்னடக்கம் பெற்ற யோகிகள் எப்படி பகவானை உபாஸிக்கின்றனர்?

உத்தமர் அதியஜ்ஞனும், புருஷோத்தமனும், ஓங்காரப் பொருளும் ஆகிய பகவானைத் தவிர வேறொன்றை மதியாதவராய் அவனையே நினைந்து பரமபதத்தை இங்கேயே யடைகின்றனர்.

अन्तकाले च मामेव स्मरन् मुक्त्वा कलेबरम् ।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः ॥५॥ ॥३१५॥

அந்தகாலே ச மாமேவ ஸ்மரன் முக்த்வா கலேபரம் |
ய: ப்ரயாதி ஸ மத்பாவம் யாதி நாஸ்த்யத்ர ஸம்சய:
|| 5 || (315)

---

5. (அந்தகாலே ச) கடைசிக் காலத்திலும் (மாமேவ) என்னையே (ஸ்மரன்) சிந்தித்துக்கொண்டு (கலேபரம்) சரீரத்தை (முக்த்வா) விட்டு (ய:) எவன் (ப்ரயாதி) செல்லுகிருனே (ஸ:) அவன் (மத்பாவம்) என் நிலையை (யாதி) அடைகிருன்; (அத்ர) இதில் (ஸம்சய:) ஸந்தேஹம் (நாஸ்தி) இல்லை.

அவர் வேறுலகங்களுக்குப் போவதும் வருவதுமில்லை. **மத்யமர்** அதிதைவமாகிய விராட் புருஷனைச் சூரிய மண்டலத்தில் உள்ள வனாகத் தியானித்துச் சுக்லம் எனும் ஒளி மார்க்கத்தில் படிப்படியாக மேல் சென்று அவனுடைய ஒளியில் கலந்து நாளடைவில் கிரம முக்தியடைகின்றனர். **தாழ்ந்தபடியிலுள்ளவர்கள்** அவரவர் கரு மத்துக் கியைந்தவாறு வெவ்வேறு தெய்வங்களையும் வெவ்வேறு ஜடப்பொருள்களையும் நினைந்து இருள் மார்க்கத்தில் சென்று தத்தம் எண்ணங்களுக்குரிய நிலைகளையடைந்து பிரம்மலோகம் வரை சென்ருலுங்கூட ஸம்ஸார சக்கரத்தில் திரும்பித் திரும்பி வருவதும் போவதுமாயிருக்கிருர்கள். ஒரு உபாஸனையும் நன் முயற்சியும் இல்லாதவர்கள் இப்பிறப்பினும் தாழ்ந்த நிலைக்குச் செல்வர்.

5. இதில் அதியஜ்ஞனுகிய புருஷோத்தமனை அடைதல் கூறப் படுகிறது.

ஒ. தான் இறந்தால் தன் பெண்டு பிள்ளைகளின் கதி என்ன ஆகுமோ என்று எண்ணுபவர்கள் தன் கதி என்ன ஆகும் என்று எண்ணுவதில்லை. பகவானையும் நினைப்பதில்லை. (ரா. கி.)

यं यं वापि स्मरन् भावं त्यजत्यन्ते कलेवरम् ।
तं तमेवैति कौन्तेय सदा तद्भाव-भावितः ॥ ६ ॥ ॥३१६॥

யம் யம் வாபி ஸ்மரன் பாவம் த்யஜத்-யந்தே கலேபரம |
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவ-பாவித:
|| 6 || (316)

6. (வா) அல்லது (அந்தே) கடைசியில் (யம யம்) எந்தெந்த (பாவம்) நினைவை (ஸ்மரன்) நினைத்துக் கொண்டு (கலேபரம்) உடலை (த்யஜதி அபி) விட்டாலும், (கௌந்தேய) குந்தீ புத்ரனே! (ஸதா) எப்போதும் (தத்பாவபாவித:) அந்நினைவையே நினைத்ததால் (தம் தம் ஏவ) அததையே (ஏதி) அடைகிருன்.

6. இதில் வெவ்வேறு தேவதைகளையோ வெவ்வேறு எண்ணங்களையோ நாடிய மனத்தினர் அதற்குரிய நிலையை எய்துவர் எனக் கூறப்படுகிறது. (அத்யாத்ம அதிபூத உபாஸனை.) ஒ—ஜடபரதர் கதை (பாகவதம் 5. 8.) அஜாமிளன் கதை (பாகவதம 6. 1-2.)

ஸ்ரீராமகிருஷ்ணர்—மனது காமினி காஞ்சனத்தில் உழன்று கொணடிருக்குமேயானுல் வாயால் மட்டும் கடைசிக் காலத்தில் பகவந் நாமத்தை உச்சரிப்பதில் என்ன பயன்?

கோஸ்வாமி—அப்படியானுல் அஜாமிளனைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? அவன் பெரும் பாவங்களைச் செய்தவன். எனினும் சாகுமுன் நாராயணன் என்ற தன் மகனைக் கூவினது காரணமாக அவன் காக்கப்படவில்லையா?

ஸ்ரீராமகிருஷ்ணர்—அப்படியானுல் நாராயண நாமம் அவன் நாவுக்கு வந்ததும் அவனுடைய புண்யகர்மப் பயனே: அவன் முன் மிகுந்த நற்கருமம் செய்தவன் என்றும், பின்னும் அரிய தவஞ் செய்தவன் என்றும் அறிகின்ருேம்.

தவிர அந்தியகால ஸ்மரணையின் பயனை ஒரு உதாரணத்தால் உணரலாம். ஒரு யானையைக் குளிப்பாட்டியதும அது தன் தலையில் மண்ணைவாரிப் போட்டுக் கொள்ளும். ஆனுல் அது அவ்வாறு செய்ய இடமின்றி சுத்தமான கட்டுத்தறியில் அதைக் கட்டிவிட்டால் சுத்தமாகவே இருக்கும்.

तस्मात् सर्वेषु कालेषु मामनुस्मर युध्य च ।
मय्यर्पित-मनो-बुद्धि-र्मामेवैष्य-स्यसंशयः ॥ ७ ॥ ॥३१७॥

தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாமனுஸ்மர யுத்ய ச |
மய்யர்ப்பித-மனோ-புத்திர்-மாமேவைஷ்யஸ்-யஸம்சய:
|| 7 || (317)

7. (தஸ்மாத்) ஆகையால் (ஸர்வேஷு காலேஷு) எல்லாக் காலங்களிலும் (மாம்) என்னை (அனுஸ்மர) நினை. (யுத்ய ச) போரும் புரி. (மய்யர்ப்பித மனோ புத்தி:) மனத்தையும் புத்தியையும் என்னிடம் அர்ப்பணம் செய்து (அஸம்சய:) சந்தேகமின்றி (மாம் ஏவ) என்னையே (ஏஷ்யஸி) வந்தடைவாய்.

ஆகையால் எப்போதும் பகவந்நாம ஸ்மரணை வேண்டும். பகவானிடம் அன்பு வளரவேண்டும் என்றும், பொருளிலும், புகழிலும், சிற்றின்பங்களிலும் பற்றுக் குறையவேண்டும் என்றும் இடைவிடாது பிரார்த்தனை செய்யவேண்டும். அந்தியகால ஸ்மரணை போதுமென்றிருக்கக் கூடாது.

ஒருதரம் பகவந் நாம ஸ்மரணையால் மனிதன் புனிதனாகிறான். ஆனால் அடுத்த வினாடியில் அவன் மனம் பாவத்தில் சென்று அழுக்கடைகிறது. கங்கா ஸ்நானத்தைப்பற்றி ஒரு கதை சொல்வதுண்டு. ஒருவன் கங்கையில் முழுகும்போது அவன் பாவங்கள் கரையில் மரங்களில் உட்கார்ந்து காத்துக்கொண்டிருக்கும். அவன் கரையேறியதும் அப்பிசாசுகள் அவன்மேல் குதித்து அவனையறியாமல் பற்றிக்கொண்டு மறுபடி ஆட்டிவைக்கும்.

7. ஓ—நீ கிருஹஸ்தனாக இருந்தாலும், உலகப்பற்று விடாதவனாக இருந்தாலும் கூட அதனால் கெடுதல் இல்லை; உனது சித்தம் மட்டும இடைவிடாது பகவானிடம நிலைபெற்று இருக்க வேண்டும். ஒரு கையால் உனது வேலையைச் செய்தாலும் மற்றொரு கையால் பகவானுடைய சரணாரவிந்தங்களைத் தொட்டுக்கொண்டிரு. செய்யவேண்டிய காரியம் ஒன்றும் இல்லாதபோது அவருடைய சரணங்களை இருகைகளாலும் சேரப்பிடித்து உன் மார்போடு அணைத்துக்கொள். (ரா. கி.)

யுத்ய ச—ஒ. தர்மசாஸ்த்ர-ரதாரூடா, வேத-கட்க-தரா த்விஜா:

மாமேவைஷ்யஸ்-யஸம்சயம். (பா. பே.)

अभ्यास-योग-युक्तेन चेतसा नान्य-गामिना ।
परमं पुरुषं दिव्यं याति पार्थानुचिन्तयन् ॥ ८ ॥ ॥३१८॥
कविं पुराण-मनुशासितार-मणो-रणीयांस-मनुस्मरेद्यः ।
सर्वस्य धातार-मचिन्त्यरूप-मादित्यवर्णं तमसः परस्तात् ॥ ९ ॥

அப்யாஸயோக-யுக்தேன சேதஸா நான்ய-காமினா |
பரமம் புருஷம் திவ்யம் யாதி பார்த்தானுசிந்தயன்
|| 8 || (318)

கவிம் புராண-மனுசாஸிதார—
மணோ-ரணீயாம்ஸ-மனுஸ்மரேத்ய: |
ஸர்வஸ்ய தாதார·மசிந்த்ய-ரூப-
மாதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் || 9 || (319)

---

8. (பார்த்த) பார்த்தா! (அப்யாஸயோகயுக்தேன) இடைவிடாத யோகப்பயிற்சியால் நிலை நின்றதும் (நான்யகாமினா) வேறொன்றை நாடாததும் ஆகிய (சேதஸா) சித்தத்தால், (அனுசிந்தயன்) தியானம் செய்துகொண்டு, (பரமம் புருஷம் திவ்யம்) பிரகாசிக்கும் பரம புருஷனை (யாதி)—தியானிப்பவன்—அடைகிறான்.

9-10. (கவிம்) எல்லாம் அறிந்தவனும் (புராணம்) எல்லார்க்கும் முந்தியவனும் (அனுசாஸிதாரம்) எல்லாவற்றையும் ஆள்பவனும் (அணோ:) அணுவிற்கும் (அணீயாம்ஸம்) சிறியவனும் (ஸர்வஸ்ய) எல்லார்க்கும்

---

8. மனத்தில் எந்தப்பற்று மிகுந்திருக்கிறதோ அது மரண காலத்தில் நிச்சயமாக வெளிப்படும். உலகப்பற்று மிகுந்தவர்கள் உலக விஷயங்களைப் பற்றியே கண்டபடி பிதற்றுவார்கள்.

பாண்டவர்கள் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தார்கள். ஆனால் ஒருபோதும் பகவானை மறக்கவில்லை.

9. ஆதித்யவர்ணம்—'ஆதித்யஸ்ய இவ நித்ய-சைதன்ய-ப்ரகாச:

கவிம்—'க்ராந்ததர்சினம், ஸர்வஜ்ஞம்.' சங்.

प्रयाणकाले मनसाचलेन भक्त्या युक्तो योगबलेन चैव ।
भ्रुवो-र्मध्ये प्राणमावेश्य सम्यक् स तं परं पुरुष-मुपैति दिव्यम् ॥

ப்ரயாண-காலே மனஸாசலேன
பக்த்யா யுக்தோ யோகபலேன சைவ |
ப்ருவோர்-மத்யே ப்ராணமாவேச்ய ஸம்யக்
ஸ தம் பரம் புருஷ-முபைதி திவ்யம்
|| 10 || (320)

(தாதாரம்) வினைப்பயனை அளிப்பவனும் (அசிந்த்யரூபம்) சிந்தித்தற்கரிய உருவுடையவனும் (ஆதித்யவர்ணம்) சூரியனைப்போல் ஸ்வயம் பிரகாசனும் (தமஸ:) அவித்தையாகிய இருளுக்கு (பரஸ்தாத்) அப்பாற்பட்டவனுமாகியவனை (ப்ரயாண காலே) மரணகாலத்தில் (பக்த்யா யுக்த:) பக்தியுடன் கூடியவனய் (அசலேன) அசையாத (மனஸா) மனத்தாலும் (யோகபலேன ச ஏவ) அவ்வாறே யோகத்தின் வலிமையாலும் (ப்ருவோ: மத்யே) புருவமத்தியில் (ப்ராணம்) பிராணனை (ஸம்யக்) செவ்வையாக (ஆவேச்ய) நிலை நிறுத்தி (ய:) எவன் (அனுஸ்மரேத்) தியானிக்கின்றானோ (ஸ:) அவன் (தம்) அந்த (பரம் திவ்யம் புருஷம்) பிரகாசம் பொருந்திய பரம புருஷனை (உபைதி) அடைகிறான்.

---

10. ப்ரயாணகாலே—ஓ. மாதர்-ஜான்ஹவி சம்பு-ஸங்க வலிதே மௌலௌ நிதாயாஞ்ஜலிம், த்வத்தீரே வபுஷோऽவஸான ஸமயே நாராயணங்க்ரி-த்வயம் | ஸாநந்தம் ஸ்மரதோ பவிஷ்யதி மம ப்ராண-ப்ரயாணோத்ஸவே, பூயாத் பக்தி-ரவிச்யுதா ஹரிஹராத் வைதாத்மிகா சாச்வதீ || —(கங்காஷ்டகம் சங்-)

இங்கு கூறப்படுவது விராட்புருஷ உபாஸனை (அதிதைவம்)

மனத்தின் ஏழு நிலைகள்:—மனம் உலக விஷயங்களைப்பற்றி சிந்திக்கும்போது லிங்கம், குஹ்யம், நாபி, எனும் மூன்று ஸ்தானங்களில் சஞ்சரிக்கும். அந்த நிலைமையில் உயர்ந்த மனோபாவங்களே எழுவதில்லை. காமினி காஞ்சனத்திலேயே அழுந்திக் கிடக்கும். மனத்தின் நான்காவது ஸ்தானம் இருதயம். இந்த ஸ்தானத்துக்கு மனம் வரும்போது ஆத்மவெழுச்சி முதன் முதல்

யோக பலேஷு சைவ | —பா. பே.

यदक्षरं वेदविदो वदन्ति विशन्ति यद्यतयो वीतरागाः ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदं संग्रहेण प्रवक्ष्ये ॥११॥

யதக்ஷரம் வேதவிதோ வதந்தி
விசந்தி யத்-யதயோ வீதராகா: |
யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி
தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவக்ஷ்யே
|| 11 || (321)

---

11. (வேதவித:) வேதத்தை உணர்ந்தவர்கள் (யத்) எதை (அக்ஷரம்) அக்ஷரம்—அழியாப் பொருள்—என்று (வதந்தி) கூறுகின்றார்களோ (வீதராகா:) பற்றுவிட்ட (யதய:) ஸந்நியாஸிகள் (யத்) எதை (விசந்தி) புகலிடமாய் அடைகின்றனரோ (யத்) எதை (இச்சந்த:) விரும்பி (ப்ரஹ்மசர்யம்) பிரம்மசரியத்தை (சரந்தி) அனுஷ்டிக்கின்றார்களோ, (தத்) அந்த (பதம்) நிலையை (ஸங்க்ரஹேண) சுருக்கமாக (தே) உனக்கு (ப்ரவக்ஷ்யே) கூறுகிறேன்.

உண்டாகிறது. இந்நிலையில் மனமானது பெண்ணாசை பொன்னாசைகளில் ஒருபோதும செல்வதில்லை. மனத்தின் **ஐந்தாவது ஸ்தானம் கழுத்து**. அங்கு வரும்போது அஜ்ஞானமெல்லாம் அகல்கின்றது. **புருவமத்தியம் மனத்தின் ஆருவது ஸ்தானம்.** இங்கு வரும்போது இரவும் பகலும் திவ்ய தரிசனமே தென்படுகிறது. **தலைதான் மனத்தின் ஏழாவது நிலை.** அங்கு ஸமாதி உண்டாகிறது. தன் நினைவே கிடையாது. உலக வியாபாரங்கள் அனைத்தும் அறவே ஒழிந்து பரமானந்தம் கிட்டுகின்றது. (ரா. கி.)

இவ்வேழு ஸ்தானங்களே யோக நூல்களில் மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆஜ்ஞை, ஸஹஸ்ராரம் என்று கூறப்படுவன.

11-13. ஓங்கார உபாஸனையால் கிரமமுக்தி கூறப்படுகிறது. ஓங்கார உபாஸனையின் விரிவு ப்ரச்ன உபநிஷத்தில் 5-வது ப்ரச்னத்தில் காண்க. கட உபநிஷத்து 2-24-25-ம் பார்க்க.

सर्व-द्वाराणि संयम्य मनो हृदि निरुध्य च ।
मूर्ध्न्याधायात्मनः प्राण-मास्थितो योग-धारणाम् ॥१२॥३२२॥
ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन् मामनुस्मरन् ।
यः प्रयाति त्यजन् देहं स याति परमां गतिम् ॥१३॥॥३२३॥

ஸர்வ-த்வாராணி ஸம்யம்ய மனோ ஹ்ருதி நிருத்ய ச |
மூர்த்ன்யாதா-யாத்மன: ப்ராண-மாஸ்திதோ யோக-
தாரணும் ||

ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம வ்யாஹரன் மாமனுஸ்மரன் |
ய: ப்ரயாதி த்யஜன் தேஹம் ஸ யாதி பரமாம் கதிம்
|| 13 || (323)

12-13. (ஸர்வத்வாராணி) எல்லா இந்திரிய வாயில்களையும் (ஸம்யம்ய) அடைத்து (மன: ச) மனத்தையும் (ஹ்ருதி) இருதயத்தில் (நிருத்ய) நிலை நிறுத்தி (ஆத்மன:) தனது (ப்ராணம்) பிராணனை (மூர்த்னி) தலை உச்சியில் (ஆதாய) வைத்து (யோக தாரணும்) யோக தாரணையில் (ஆஸ்தித:) நிலை பெற்றவனாய் (ஓம் இதி) ஓம் எனும் (ஏகாக்ஷரம ப்ரஹ்ம) பிரம்ம வாசகமாகிய ஓரெழுத்தை (வ்யாஹரன்) உச்சரித்துக் கொண்டு (மாம்) என்னை (அனுஸ்மரன்) முறைப்படி சிந்தித்தவனாய். (தேஹம்) உடலை (த்யஜன்) விட்டு (ய:) எவன் (ப்ரயாதி) செல்லுகின்றானோ, (ஸ:) அவன்

ஓமித்யேகாக்ஷரம் ஆத்மஸ்வரூபம் | நம இதி த்வ்யக்ஷரம் ப்ரக்ருதி ஸ்வரூபம் | நாராயணாய இதி பஞ்சாக்ஷரம் பர-ப்ரஹ்ம ஸ்வரூபம் ||
—(தாரஸாரோபநிஷத்).

பிரம்மசரியம்—ஒ—ஒருவன் தனது விந்துவைப் பன்னிரண்டு வருஷம் வரை இழக்காது வைத்திருப்பானானால் அரிய சக்திகளைப் பெறுவான். அப்போது 'மேதை நாடி' என்ற புதிய நரம்பு ஒன்று சரீரத்தில் உற்பத்தியாகின்றது. அதனால் ஒருவன் எல்லா விஷயங்களையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ளவுங் கூடும். (ரா. கி.)

अनन्य-चेताः सततं यो मां स्मरति नित्यशः ।
तस्याहं सुलभः पार्थ नित्य-युक्तस्य योगिनः ॥१४॥ ॥३२४॥

அனன்ய-சேதா: ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச: |
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்ய-யுக்தஸ்ய யோகின:
|| 14 || (324)

(பரமாம்) உயர்ந்த (கதிம்) கதியை (யாதி) அடைகின்ருன்.

14. (பார்த்த) பார்த்தா! (அனன்யசேதா:) வேருென்றில் சித்தத்தை வையாதவனுய் (ய:) எவன் (மாம்) என்னை (நித்யச:) எந்நாளும் (ஸததம்) இடைவிடாது (ஸ்மரதி) எண்ணுகின்ருனே, (தஸ்ய) அந்த (நித்யயுக்தஸ்ய) நித்திய யுக்தனுகிய (யோகின:) யோகிக்கு (அஹம்) நான் (ஸுலப:) எளிதில் அடையக் கூடியவன்.

ஒ—ஒழியாத விந்து வுடனிற்க நிற்கு
மழியாப் பிராண னதிபலஞ் சத்தி
யொழியாத புத்தி தபஞ் செப மோன
மழியாத சித்தி யுண்டாம் விந்து வற்றிலே. (திருமந்திரம்.)

14. ஸ்ரீராமகிருஷ்ணர் நோயுற்றிருந்தபோது சசாதர பண்டிதர் அவரைப் பார்த்து "ஸ்வாமி, தங்கள் யோகசக்தியால் ஏன் நோயை குணப்படுத்திக் கொள்ளக்கூடாது?" என்ருர்.

ராமகிருஷ்ணர்—"பகவானுக்கென்றே அர்ப்பணம் பண்ணி விட்ட மனத்தை இந்த அற்ப உடலின் பொருட்டு எப்படி நான் திருப்புவேன்?"

சசாதரர்—"ஆனல் வியாதியைத் தீர்த்தருள வேண்டுமென்று ஸர்வேசுவரியையாவது பிரார்த்திக்கக்கூடாதா?"

ராமகிருஷ்ணர்—"ஸர்வேசுவரியை நினைத்துவிட்டால் எனது ஸ்தூல சரீர ஞாபகம் இல்லாது போகின்றது. அப்போது நான் அச்சரீரத்தில் இருப்பதில்லை. ஆதலால் சரீரத்தைப்பற்றி ஒன்றையும் பிரார்த்தித்துக் கேட்கக் கூடாதவனுக இருக்கிறேன்." (ரா. கி.)

मामुपेत्य पुनर्जन्म दुःखालय-मशाश्वतम् ।
नाप्नुवन्ति महात्मानः संसिद्धिं परमां गताः ॥१५॥ ॥३२५॥
आब्रह्म-भुवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन ।
मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते ॥ १६ ॥ ॥३२६॥

மாமுபேத்ய புனர்ஜன்ம து:க்காலய-மசாச்வதம் |
நாப்னுவந்தி மஹாத்மான: ஸம்ஸித்திம் பரமாம் கதா:
|| 15 | (325)
ஆப்ரஹ்ம-புவனால்லோகா:புனராவர்த்தினோ
ऽர்ஜுன |
மாமுபேத்ய து கௌந்தேய புனர்ஜன்ம ந வித்யதே
|| 16 || (326)

---

15. (பரமாம்) உயர்ந்த (ஸம்ஸித்திம்) மோக்ஷமாகிற சித்தியை (கதா:) எய்திய (மஹாத்மான:) மஹான்கள் (மாம்) என்னை (உபேத்ய) அடைந்து (து:க்காலயம்) துன்பத்துக்கிருப்பிடமாகியதும் (அசாச்வதம்) நிலையற்றதுமாகிய (புனர்ஜன்ம) மறுபிறப்பை (ந ஆப்னுவந்தி) அடைவதில்லை.

16. (அர்ஜுன) அர்ஜுனா! (ஆப்ரஹ்மபுவனாத்) பிரம்மலோகம் முதலாக (லோகா:) எல்லா உலகங்

"மனமே! உடலும் அத்துடன் உறவாடும் நோயும் ஒன்றையொன்று விசாரித்துக் கொள்ளட்டும். நீ ஜகன்மாதாவையே நாடியிரு" (ரா. கி.)

15. ரமண மஹரிஷியின் உபதேசம்:—

கேள்வி—புனர்ஜன்மம் உண்மைதானா?

விடை — வாஸ்தவத்தில் இப்பொழுதோ இதன் முன்போ ஜன்மம் எடுத்ததே இல்லை. இனியும் எடுக்கப்போவதில்லை. இது தான் உண்மை. ஆனால் அறியாமை உள்ளவரை புனர்ஜன்மமும் உண்டு என்றுதான் சொல்ல வேண்டும்.

கேள்வி—அஃதெப்படி?

सहस्रयुगपर्यन्त-महर्यद्ब्रह्मणो विदुः ।
रात्रिं युगसहस्रान्तां तेऽहोरात्र-विदो जनाः ॥ १७ ॥ ॥३२७॥

ஸஹஸ்ரயுக-பர்யந்த-மஹர்-யத்-ப்ரஹ்மணோ விது: |
ராத்ரிம் யுக-ஸஹஸ்ராந்தாம் தே஽ஹோராத்ர-விதோ ஜனா: || 17 ||

களும் (புனராவர்த்தின:) மீண்டும் திரும்பிவரும் இயல்புடையன ; (து) ஆனல் (கௌந்தேய) குந்தீ புத்திரனே ! (மாம்) என்னை (உபேத்ய) அடைந்தபின் (புனர்ஜன்ம) மறுபடி பிறத்தல் (ந வித்யதே) இல்லை.

17. (ஸஹஸ்ரயுகபர்யந்தம்) ஆயிரம் யுகங்களில் முடியும் (அஹ:) பகல் (யத்) எது (ப்ரஹ்மண:) பிரம்மாவினுடையதாயுளதோ அதையும் (ராத்ரிம் யுக-ஸஹஸ்ராந்தாம்) ஆயிரம் யுகத்தில் முடியும் இரவு எது உளதோ அதையும் (விது:) எவர்கள் அறிந்தார்களோ (தே) அந்த (ஜனா:) மனிதர்களே (அஹோராத்ர-வித:) இரவு பகலை அறிந்தவர்கள்.

விடை—வெட்டின மரத்தின் கிளைகள் மீண்டுந் தளிர்க்கவில்லையா? அதன் வேர்கள் கெடாதிருக்கும் வரையில் மரமும் வளர்ந்துகொண்டேயிருக்கும். மரணத்தில் இதயத்தோடு ஒன்றுபடுங் காரணத்தினுல் மட்டும் ஸம்ஸ்காரங்கள் ஒழியா, தக்க காலத்தில் மறுபடியும் பிறக்கும். இதுவே ஜீவர்கள் மறுபிறவிக்குக் காரணம்.

17. **முந்தையோர் கூறிய காலவரையறை:**—15 நாள் (சுக்லபக்ஷம்) வளர்பிறை. 15 நாள் (க்ருஷ்ணபக்ஷம்) தேய்பிறை. இரண்டு பக்ஷம் கூடியது ஒரு மாதம். 6 மாதம் (தை முதல் ஆடி வரை) உத்தராயணம் ; 6 மாதம் (ஆடி முதல் தை வரை) தக்ஷிணாயனம். இரண்டும் சேர்ந்து தேவர்களுக்கு ஒரு தினம். இம்மாதிரி 360 தினம் (அதாவது 360 மனித வருஷம்) ஒரு தேவ வருஷம். 1200 தேவவருஷம் கலியுகம் ; 2400 தேவவருஷம் த்வாபரயுகம், 3600 தேவவருஷம் த்ரேதாயுகம், 4800 தேவவருஷம் க்ருதயுகம் ; ஆக 12000 தேவவருஷம் ஒரு சதுர்யுகம். 1000 சதுர்யுகம் பிரம்மதேவரின் பகல் ; 1000 சதுர்யுகம் பிரம்ம தேவரின் இரவு. இம்மாதிரி அவர் வயது 100. இதற்குப் **பரம்** என்று பெயர்.

अव्यक्ता-द्व्यक्तयः सर्वाः प्रभवन्त्यहरागमे ।
रात्र्यागमे प्रलीयन्ते तत्रैवाव्यक्त-संज्ञके ॥ १८ ॥ ॥३२८॥
भूतग्रामः स एवायं भूत्वा भूत्वा प्रलीयते ।
रात्र्यागमेऽवशः पार्थ प्रभव-त्यहरागमे ॥ १९ ॥ ॥३२९॥

அவ்யக்தாத்-வ்யக்தய: ஸர்வா: ப்ரபவந்த்-யஹராகமே |
ராத்ர்யாகமே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்த-
ஸம்ஜ்ஞகே || 18 ||
பூதக்ராம: ஸ ஏவாயம் பூத்வா பூத்வா ப்ரலீயதே |
ராத்ர்யாகமேऽவச: பார்த்த ப்ரபவத்-யஹராகமே || 19 ||

---

18. (அஹராகமே) பகல் வந்ததும் (அவ்யக்தாத்) தோன்றாத நிலையினின்று (வ்யக்தய:) தோற்றங்கள் (ஸர்வா:) அனைத்தும் (ப்ரபவந்தி) வெளிக்கிளம்புகின்றன ; (ராத்ர்யாகமே) இரவு வந்ததும (தத்ர ஏவ) அங்கேயே (அவ்யக்த ஸம்ஜ்ஞகே) அவ்யக்தம் என்று குறிக்கப்படும் தோன்றா நிலையில் (ப்ரலீயந்தே) ஒடுங்குகின்றன.

19. (பார்த்த) பார்த்தா ! (பூதக்ராம:) ஸ்தாவர ஜங்கமப் பொருள்களின் கூட்டம் (ஸ ஏவ அயம்)

---

19. **பிரளயம்:**—பிரளயத்தில் பிரகிருதிக்கும் புருஷனுக்கும் பிரிவும், ஸ்ருஷ்டியில் சேர்க்கையும் ஏற்படுகிறது.

பிரளயம் நாலு வகை:—

(i) **நித்யப் பிரளயம்:**—நிமிஷந்தோறும் தோன்றிய பொருள்கள் அழிவதும், இரவுதோறும் நமது உறக்கத்தில் உலகம் நம்மிடம் ஒடுங்குவதும்.

(ii) **நைமித்திகப் பிரளயம்:**—பிரம்மாவின் இரவுதோறும் 1000 சதுர்யுகத்துக் கொருமுறை அவரிடம் ஒடுங்குவது.

(iii) **பிரகிருதிலயம் அல்லது மஹாப்பிரளயம்**—ஒரு பிரம்மாவின் ஆயுள் முடிவில் அனைத்துலகும அந்த பிரம்மாவும் ஆதி நாராயணனிடம் லயமாவது.

(iv) **ஆத்யந்திகப் பிரளயம்—**இதுவே 'முக்தி'.

(விஷ்ணு புராணம்—6. 3)

परस्तस्मात्तु भावोऽन्यो ऽव्यक्तोऽव्यक्तात् सनातनः ।
यः स सर्वेषु भूतेषु नश्यत्सु न विनश्यति ॥ २० ॥ ॥३३०॥

अव्यक्तोऽक्षर इत्युक्त-स्तमाहुः परमां गतिम् ।
यं प्राप्य न निवर्तन्ते तद्धाम परमं मम ॥ २१ ॥ ॥३३१॥

பரஸ்தஸ்மாத் து பாவோऽன்யோ ऽவ்யக்தோऽவ்யக்தாத் ஸநாதன: |
ய: ஸ ஸர்வேஷு பூதேஷு நச்யத்ஸு ந விநச்யதி || 20 || (330)

அவ்யக்தோऽக்ஷர இத்யுக்தஸ்-தமாஹு: பரமாங்கதிம் |
யம் ப்ராப்ய ந நிவர்த்தந்தே தத்தாம பரமம் மம || 21 || (331)

அப்போதிருந்ததே இப்போதுள்ளதும்; (பூத்வா பூத்வா) தோன்றித் தோன்றி (ராத்ர்யாகமே) இரவு வந்ததும் (ப்ரலீயதே) ஒடுங்கி மறைகின்றது; (அஹ ராகமே) பகல் வந்ததும் (அவச:) தன் வசமின்றி (ப்ரபவதி) மீண்டும் தோன்றுகிறது.

20. (து) ஆனல் (தஸ்மாத் அவ்யக்தாத்) அந்த அவ்யக்தத்தினின்றும் (அன்ய:) வேருன (பாவ:) இருப்பையுடையதும் (ஸநாதன: அவ்யக்த:) அனுதியான இன்னெரு அவ்யக்தம் (ய: ஸ:) எது உளதோ அது (ஸர்வேஷு பூதேஷு) எல்லாப் பொருள்களும் (நச்யத்ஸு) அழியும்போதும் (ந விநச்யதி) அழிவதில்லை.

21. (அக்ஷர: இதி) அக்ஷரம் என்று (உக்த:) கூறப்பட்ட (அவ்யக்த:) அவ்யக்தம் எதுவோ (தம்)

---

20. முதலில் குறிப்பிட்ட **அவ்யக்தம்,** ப்ரக்ருதியின் முதல் நிலை எனப்படுவது, இரண்டாவதாகக் குறிப்பிட்ட **அவ்யக்தம்,** **அக்ஷரப்ரஹ்மம்,** எல்லாவற்றையும் தன்னுள்ளடக்கி எவர்க்கும் எளிதில் விளங்காமலிருப்பது.

पुरुषः स परः पार्थ भक्त्या लभ्य-स्त्वनन्यया ।
यस्यान्तःस्थानि भूतानि येन सर्वमिदं ततम् ॥२२॥ ॥३३२॥

यत्र काले त्वनावृत्ति-मावृत्तिं चैव योगिनः ।
प्रयाता यान्ति तं कालं वक्ष्यामि भरतर्षभ ॥ २३ ॥ ॥३३३॥

புருஷ: ஸ பர: பார்த்த பக்த்யா லப்யஸ்-த்வனன்யயா |
யஸ்யாந்த: ஸ்தானி பூதானி யேன ஸர்வமிதம் ததம்
|| 22 || (332)

யத்ர காலே த்வனுவ்ருத்தி-மாவ்ருத்திஞ் சைவ
யோகினை: |

ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப
|| 23 || (333)

அதையே (பரமாம்) உயர்ந்த (கதிம்) கதியாக (ஆஹு:) கூறுவர். (யம் ப்ராப்ய) எதை அடைந்து (ந நிவர்த்தந்தே) திரும்பிவருதல் இல்லையோ (தத்) அது (மம்) என்னுடைய (பரமம் தாம) பரமபதம்.

22. (பார்த்த) பார்த்தா! (பூதானி) பொருள்கள் (யஸ்ய அந்த: ஸ்தானி) எவனுக்குள்ளே இருப்புடையனவோ, (யேன) எவனுல் (இதம் ஸர்வம்) இவ்வனைத்தும் (ததம்) வியாபிக்கப்பட்டுளவோ, (ஸ:) அந்த (பர: புருஷ:) பரமபுருஷன் (அனன்யயா) வேறொன்றிலும் நாட்டமில்லாத (பக்த்யா து) பக்தியினுலேயே (லப்ய:) அடைதற்குரியவன்.

23. (பரதர்ஷப) பரதவம்சத்திற் சிறந்தோனே! (யத்ரகாலே) எவ்வெக்காலத்தில் (ப்ரயாதா:) பயணப்பட்ட (யோகின:) யோகிகள் (அனுவ்ருத்திம் து)

23-24. இது கருமயோகிகளைப் பற்றிக் கூறுவது (விஸர்க்க விஷயம்). இவர்களில் உயர்ந்தவர்க்கு அனுவ்ருத்தி என்ற கிரம

अग्नि-ज्योति-रहः शुक्लः षण्मासा उत्तरायणम्।
तत्र प्रयाता गच्छन्ति ब्रह्म ब्रह्मविदो जनाः ॥२४॥ ॥३३४॥

அக்னிர்-ஜ்யோதி-ரஹ: சுக்ல: ஷண்மாஸா உத்தரா யணம் |
தத்ர ப்ரயாதா கச்சத்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜனு:
|| 24 || (334)

திரும்பி வராமையையும், (ஆவ்ருத்திம் ச ஏவ) திரும்பி வருதலையும் (யாந்தி) அடைகின்ருர்களோ (தம் காலம்) அவவக்காலத்தை (வக்ஷ்யாமி) எடுத்துக் கூறு வேன்.

24. (அக்னி: ஜ்யோதி:) அக்னியின் பிரகாசம். (அஹ:) பகல், (சுக்ல:) சுக்ல பக்ஷம், (ஷண்மாஸா உத்தராயணம்) உத்தராயண ஆறு மாதம் (தத்ர) அவற்றில் (ப்ரயாதா:) பயணம் சென்றவரும் (பரஹ்ம வித:) பிரம்ம உபாஸகர்களுமாகிய (ஜனு:) ஜனங்கள் (ப்ரஹ்ம கச்சந்தி)—கிரமமாக—பிரம்மத்தை அடை வார்கள்.

முக்தியும், தாழ்ந்தவர்களுககுப் **புனராவ்ருத்தி** என்ற மறுபிறப்பும் ஏற்படுகின்றது. ஞான நிஷ்டர்களுக்குப் போக்குவரவில்லாத 'ஸத்யோமுக்தி'. 'ந தஸ்ய ப்ராணு உத்க்ராமந்தி' அவர்களுடைய பிராணன் போவதில்லை. எங்கும் நிறைந்த பிரம்மத்தில் அவர்கள் லயிக்கின்றனர்.

ஒ—ப்ரச்ன உப. 1. 8-10; முண்டக. உப. 1. 2. 5-10. சா. உப. 5. 10. 4-5.

இருமார்க்கங்களின் வெவ்வேறு பெயர்கள்:—

(1) **தேவயானம்**—அர்ச்சிராதி மார்க்கம்-உத்திர மார்க்கம்-சுகலகதி.

(2) **பித்ருயானம்** — தூம மார்க்கம்-தக்ஷிண மார்க்கம்-கிருஷ்ண கதி.

धूमो रात्रि-स्तथा कृष्णः षण्मासा दक्षिणायनम् ।
तत्र चान्द्रमसं ज्योति-र्योगी प्राप्य निवर्तते ॥ २५ ॥ ॥३३५॥

शुक्लकृष्णे गती ह्येते जगतः शाश्वते मते ।
एकया यात्यनावृत्ति-मन्ययाऽवर्तते पुनः ॥ २६ ॥ ॥३३६॥

தூமோ ராத்ரிஸ்-ததா க்ருஷ்ண: ஷண்மாஸா
தக்ஷிணாயனம் |
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர்-யோகீ ப்ராப்ய
நிவர்த்ததே || 25 || (335)

சுக்ல-க்ருஷ்ணே கதீ ஹ்யேதே ஜகத: சாச்வதே மதே |
ஏகயா யாத்-யனாவ்ருத்தி-மன்யயாऽவர்த்ததே புன:
|| 26 || (336)

---

25. (தூம:) புகை (ராத்ரி:) இரவு (ததா) அவ்வாறே (க்ருஷ்ண:) கிருஷ்ணபக்ஷம் (ஷண்மாஸா தக்ஷிணாயனம்) தக்ஷிணாயன ஆறு மாதம், (தத்ர) அவற்றில் (யோகீ) கர்மயோகியானவன் (சாந்த்ரமஸம் ஜ்யோதி:) சந்திரனுடைய ஜோதிர் மண்டலத்தை (ப்ராப்ய) அடைந்து (நிவர்த்ததே) திரும்பி வருகிறான்.

26. (ஹி) நிச்சயமாக (ஜகத:) உலகிற்கு (சுக்ல க்ருஷ்ணே) ஒளியும் இருளும் என்ற (ஏதே கதீ) இவ்-

नैते सृती पार्थ जानन् योगी मुह्यति कश्चन ।
तस्मात् सर्वेषु कालेषु योगयुक्तो भवार्जुन ॥ २७ ॥ ॥३३७॥

நைதே ஸ்ருதீ பார்த்த ஜாநன் யோகீ முஹ்யதி
கச்சன |
தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ
பவார்ஜுன || 27 || (337)

விரண்டு மார்க்கங்களும் (சாச்வதே) என்றும் உள்ள னவாக (மதே) கருதப்படுகின்றன. (ஏகயா) ஒன்ருல் (அனுவ்ருத்திம்) திரும்பி வராமையை (யாதி) எய்து கிருன். (அன்யயா) மற்ரென்ருல் (புன:) திரும்பவும் (ஆவர்த்ததே) வருகின்ருன்.

27. (பார்த்த) பார்த்தா! (ஏதே ஸ்ருதீ) இவ்விரு மார்க்கங்களையும் (ஜானன்) அறிந்து (கச்சன யோகீ) எந்த யோகியும் (ந முஹ்யதி) ஏமாற்றத்தை அடையான். (தஸ்மாத்) ஆகையால் (அர்ஜுன) அர்ஜுன! (ஸர்வேஷு காலேஷு) எக்காலத்தும் (யோக யுக்த:) யோக யுக்தனுக (பவ) இரு.

---

26. ஒ—அடைபெறு மிரு நான்கங்கத் தணிபெறும் யோகம் வல்லோர்
சுடர்விடு தெய்வயானஞ் சொல்லு பிங்கலை தானென்பார்;
இடைபிதிர் யானமென்பர் ; எழிற் சுழுமுனையை நாடி
நடைபெறு பிரமயான மாமென நவில்வார் மன்னே.

वेदेषु यज्ञेषु तपस्सु चैव दानेषु यत्पुण्यफलं प्रदिष्टम् ।
अत्येति तत्सर्व-मिदं विदित्वा योगी परं स्थान-मुपैति चाद्यम् ॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादे अक्षरब्रह्मयोगो नाम
अष्टमोऽध्यायः ॥

வேதேஷு யஜ்ஞேஷு தபஸ்ஸு சைவ
தானேஷு யத் புண்ய-பலம் ப்ரதிஷ்டம் |
அத்யேதி தத் ஸர்வ-மிதம் விதித்வா
யோகீ பரம் ஸ்தான-முபைதி சாத்யம் || 28 || (338)

இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம-
வித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்
ஜுனஸம்வாதே அக்ஷரப்ரஹ்மயோகோ
நாம அஷ்டமோऽத்யாய: ||

---

28. (வேதேஷு) வேதமோதுதலிலும் (யஜ்ஞேஷு) யஜ்ஞத்திலும், (தபஸ்ஸு ச) தவத்திலும் (ஏவ) அவ்வாறே (தானேஷு) தானத்திலும் (யத்) எந்த (புண்ய பலம்) நல்ல பலன் (ப்ரதிஷ்டம்) கூறப்படுகின்றதோ, (தத் ஸர்வம்) அது அனைத்தையும் (யோகீ) யோகியானவன் (இதம்) இதை—இங்கு கூறியதை—(விதித்வா) அறிந்து (அத்யேதி) கடந்து மேலே செல்கின்றான; (ஆத்யம்) ஆதியும் (பரம்) ஒப்

புயர்வற்றதுமான (ஸ்தானம்) ஸ்தானத்தை (உபைதி) அடைகின்ருன்.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திர
மாயும் ஸ்ரீகிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும்
ஸம்பாஷணேயாயும் விளங்கும் ஸ்ரீமத்
பகவத்கீதை என்னும் உபநிஷத்தில்
அக்ஷரப்பிரம்மயோகம் என்று
பெயர் பெற்ற எட்டாவது
அத்தியாயம் முற்றும்.

அத்யாய விஷயச் சுருக்கம்—

அர்ஜுனனுடைய ஏழு கேள்விகள். பகவான், முதல் ஆறு கேள்விகளுக்குச் சுருக்கி விடை கூறி ஏழாவதாகிய பிரயாணகாலத் தியானத்தை விரித்துரைத்தல். பிராயணகாலத் தியானத்துக்கு அனுகுணமாக மறு ஜன்மம் ஏற்படும் எனல். அந்தத் தியானம் செவ்வையாயிருத்தற்கும் அடுத்த ஜன்மம் நன்கமைதற்கும் எப்போதும் எக்காலத்தும், போர்முனையிலுங்கூட, பகவானிடம் சிந்தையை வைத்தல் அவசியம் எனல். ஸகுண உபாஸனே, நிர்க்குண உபாஸனே; பிரதீகோபாஸனே—ஸூரிய மண்டலத்திலும் ஓங்காரத்திலும். பிரம்மலோகம் வரை சென்ருலும் மறு பிறப்புண்டு; அனன்ய பக்தியால் பகவானேயடைந்தோரே பிறவியினின்று விடுபடுவர் எனல். பிரம்மாவின் இரவும் பகலும் பிரளயமும். சுக்ல கதி கிருஷ்ணகதி அல்லது தேவயானம் பித்ருயானங்களின் வர்ணனே.

தன்னையெவன் சிந்திப்பான் சாந்தருணம் சாயாமல்
அன்னவன்மீ ளாநிலையை ஆருவதும்—பன்னரிய
தெய்வநெறி யும்பிதிரர் சேர் நெறியும் வேறுளவும்
ஐயமறச் செப்புவன் மால் ஆர்ந்து. (கீ. வெ.)

॥ नवमो ऽध्यायः ॥

(राजविद्याराजगुह्ययोगः)

श्री भगवानुवाच—

इदं तु ते गुह्य-तमं प्रवक्ष्या-म्यनसूयवे ।
ज्ञानं विज्ञान-सहितं यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ॥१॥ ॥३३९॥

ஒன்பதாம் அத்தியாயம்

(ராஜவித்யாராஜகுஹ்ய யோகம்)

ஸ்ரீ பகவானுவாச—

இதம் து தே குஹ்ய-தமம் ப்ரவக்ஷ்யாம்-யனஸூயவே |
ஜ்ஞானம் விஜ்ஞான-ஸஹிதம் யத் ஜ்ஞாத்வா
மோக்ஷ்யஸேऽசுபாத் ||

ஸ்ரீபகவான் கூறியது—

1. (யத்) எதை (ஜ்ஞாத்வா) அறிந்து (அசுபாத்) அஜ்ஞானமாகிய தீமையினின்று (மோக்ஷ்யஸே) விடுபடுவாயோ அப்படிப்பட்ட (இதம்) இந்த (குஹ்யதமம் து) மிக்க ரகசியமானதும் (விஜ்ஞான ஸஹிதம்) விஜ்ஞானத்துடன் கூடியதும் ஆகிய (ஜ்ஞானம்) ஞானத்தை (அனஸூயவே) அசூயையில்லாத (தே) உனக்கு (ப்ரவக்ஷ்யாமி) எடுத்துரைப்பேன்.

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்—

ஏழாவது அத்தியாயத் தொடக்கத்தில் பகவான் விஞ்ஞானத்துடன் கூடிய ஞானத்தை உபதேசிப்பதாய்க் கூறி அவ்வத்தியாய முடிவில் பிரம்மம், அத்யாத்மம், கர்மம், அதிபூதம், அதிதைவம், அதியஜ்ஞம் இந்தத் தத்துவங்களின் மெய்யுணர்வுடன அந்திய காலத்தில் தன்னுடைய ஸ்மரணையால் உயர்கதியடைவர் ஞானிகள் என்று கூறினார். அர்ஜுனன் மேற்கூறிய தத்துவங்களை விளக்கிக் கூறும்படி கேட்க, பகவான் முதல் ஆறு கேள்விகளுக்கு விடையைச் சுருக்கமாய்க் கூறிவிட்டு ஏழாவது கேள்விக்கு விடை கூறுவதில் எட்டாவது அத்தியாயம் முடிவடைந்தது. 'ஜ்ஞானம் விஜ்ஞான ஸஹிதம்' என்று ஏழில் தொடங்கிய விஷயத்தையே

राजविद्या राजगुह्यं पवित्र-मिद-मुत्तमम् ।
प्रत्यक्षावगमं धर्म्यं सुसुखं कर्तु-मव्ययम् ॥२॥ ॥३४०॥

ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்ர-மித-முத்தமம் |
ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்த்து-மவ்யயம் ||2|| (340)

---

2. (இதம்) இது (ராஜவித்யா) வித்தைகளுக்கரசன், (ராஜகுஹ்யம்) இரகசியங்களுக்குள் சிறந்தது. (உத்தமம்) உத்தமமானது, (பவித்ரம்) பரிசுத்தமளிப்பது, (ப்ரத்யக்ஷாவகமம்) நேரில் கண்டனுபவிக்கக்கூடியது; (தர்ம்யம்) தர்மத்தினின்று பிறழாதது; (கர்த்தும்) அனுஷ்டித்தற்கு (ஸுஸுகம்) மிக எளியது; (அவ்யயம்) என்றும் அழியாதது.

மீண்டும் விரிவாய்க் கூற ஆரம்பிப்பதால் அச் சொற்களையே ஒன்பதில் முதல் சுலோகத்தில் பகவான் உபயோகிக்கின்றார்.

பக்தி சாஸ்திரத்தின் சிறந்த ரகசியம் இங்கு கூறப்படுவதால் இது 'ராஜ வித்யா ராஜகுஹ்ய யோகம்' எனப்படும்.

தன் மேன்மையுந் தான் பிறப்பிற்றளராத் தன்மையையும்
பன்மேனி நண்ணினன்பாற் பிரியா வன்பராசைகளும்
புன்மேனி விண்ணவர்பாற் புரியாத தன் பக்தியையும்
நன்மேனி நாரணன்ரு ணரனுக்கு நவின்றனனே (கீ. ஸ.)

1. அனஸூயவே—ஓ—

ந குணான் குணிநோ ஹந்தி ஸ்தௌதி மந்த-குணானபி |
நான்ய தோஷேஷு ரமதே ஸாநஸூயா ப்ரகீர்த்திதா ||

நல்லோருடைய நற்குணங்களைக் குறைகூருமல், குறைவுள்ளவர்களையும் புகழ்ந்து, பிறர் குற்றங்களில் ஸந்தோஷமடையாமல் இருத்தல் 'அனஸூயை' எனப்படும். —(அத்ரிஸ்ம்ருதி.)

பகவத் குணங்களிலும் லீலைகளிலும் தோஷங் காண்பவனும் சிரத்தையில்லாதவனும் இந்த உபதேசத்துக்கு அதிகாரியன்று என்பது கருத்து. (ஓ—கீ. 18. 67.)

குஹ்யம்—உலக வழக்கில் எப்படியோ அப்படியே சாஸ்திர உபதேசத்திலும் எது அருமையாய்ப் போற்றத் தகுந்ததோ அதுவே (குஹ்யம்) ரஹஸ்யம். (ஓ—15. 20; 18. 64.)

2. ஸாதகனை உத்ஸாகப்படுத்துவதற்காக இந்த விஞ்ஞான

अश्रद्दधानाः पुरुषा धर्मस्यास्य परंतप ।
अप्राप्य मां निवर्तन्ते मृत्यु-संसार-वर्त्मनि ॥ ३ ॥ ॥३४१॥
मया तत-मिदं सर्वं जग-दव्यक्त-मूर्तिना ।
मत्स्थानि सर्व-भूतानि न चाहं तेष्ववस्थितः ॥ ४ ॥ ॥३४२॥

அச்ரத்ததாநா: புருஷா தர்மஸ்யாஸ்ய பரந்தப |
அப்ராப்ய மாம் நிவர்த்தந்தே ம்ருத்யு-ஸம்ஸார-
வர்த்மனி || 3 || (341)
மயா ததமிதம் ஸர்வம் ஜக-தவ்யக்த-மூர்த்திநா |
மத்-ஸ்தானி ஸர்வபூதானி ந சாஹம் தேஷ்வவஸ்தித:
|| 4 || (342)

---

3. (பரந்தப) பரந்தபா ! (அஸ்ய) இந்த (தர்மஸ்ய) தருமத்தில் (அச்ரத்ததாநா:) சிரத்தை யில்லாத (புருஷா:) மானிடர்கள் (மாம்) என்னை (அப்ராப்ய) அடையாமல் (ம்ருத்யு-ஸம்ஸார-வர்த்மனி) மரணத்துடன் கூடிய ஸம்ஸார மார்க்கத்தில் (நிவர்த்தந்தே) திரும்பவும் புகுகின்றனர்.

4. (இதம்) இந்த (ஸர்வம் ஜகத்) உலகனைத்தும் (அவ்யக்த மூர்த்திநா) புலப்படாத (மயா) என்னால் (ததம்) வியாபிக்கப்பட்டுள்ளது; (ஸர்வ பூதானி) பொருள்கள் எல்லாம் (மத்ஸ்தானி) என்னிடம் இருப்புடையன; (அஹம் ச) நானோ (தேஷு) அவற்றினிடம் (ந அவஸ்தித:) இருப்புடையவனன்று.

ஸஹிதமான ஞானத்தின் பெருமை இரண்டாவது சுலோகத்தில் கூறப்படுகிறது.

தர்ம்யம்—மற்ற எந்த தருமத்துடனும் முரண்பாடின்றி எல்லாவற்றையும் ஸமன்வயப்படுத்துவதாய் யாவர்க்கும் பொது தருமமாயுள்ளமையால்.

ஸுஸுகம்—இதில் கஷ்டமில்லை என்பதல்ல. கஷ்டம் பக்தனுக்குக் கஷ்டமாய்த் தோன்ருது.

4. **அவ்யக்தமூர்த்திநா**—எங்கும் நிறைந்தும் எல்லா நற்

न च मत्स्थानि भूतानि पश्य मे योग-मैश्वरम् ।
भूतभृन्न च भूतस्थो ममात्मा भूतभावनः ॥ ५ ॥ ॥३४३॥

ந ச மத்ஸ்தானி **பூ**தானி பச்ய மே யோக-மைச்வரம் |
பூதப்ருந் ந ச **பூ**தஸ்தோ மமாத்மா **பூ**தபாவன:
|| 5 || (343)

---

5. (ச) மேலும் (**பூ**தானி) பொருள்கள் (ந மத்ஸ்தானி) என்னிடம் இருப்புடையனவும் அல்ல; (மே) என்னுடைய (ஐச்வரம்) தெய்வீகமான (யோகம்) யோகத்தை (பச்ய) பார்; (மம) என்னுடைய (ஆத்மா) ஆத்மாவானது (**பூ**தப்ருத்) பொருள்களைத் தாங்குவது (**பூ**தபாவன:) பொருள்களை உண்டாக்குவது (ந ச **பூ**தஸ்த:) ஆனால் பொருள்களில் இருப்புடையதன்று.

குணங்களுக்கும் இருப்பிடமாயிருந்தும் வெளிப்படையாய்த் தோன்ருத ஸகுணநிராகார ஸ்வரூபம் குறிப்பிடப்படுகின்றது.

ஸகுண ஸாகாரம்—வ்யக்த மூர்த்தி (ஈசுவர அவதாரம்.)

ஸகுணநிராகாரம்—அவ்யக்த மூர்த்தி (ஈசுவர ஸாக்ஷி.)

நிர்க்குண நிராகாரம்—பரப்ரஹ்மம்.

பொருள்களிடம் நான் இருப்புடையவன் அன்று—பொருள் அழிந்தாலும் அவைகளுக்கிடங் கொடுக்கும் ஆகாசம் அழியாதவாறு, பொருள்கள் இருந்தாலும் அழிந்தாலும் பகவான் என்றும் இருப்பவனேயாதலால்.

5. இங்கு கூறப்படுவது சு. 4ல் கூறியதை மறுப்பதன்று. பகவானை பக்தன் உள்ளபடி உணரும்போது அவனுடைய திருஷ்டிக்கு பகவானிடம் முன் கண்ட உலகம் மறைந்துவிடுகிறது.
(நிர்க்குண நிராகாரம்.)

ஒ—" மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை "

உடலைத் தாங்கும் ஜீவன் உடலைத் தான் என்று எண்ணுகிறது. உலகைத் தாங்கும் ஈசுவரன் அதைத் தான் என்று கருதுவதில்லை.

यथाकाश-स्थितो नित्यं वायुः सर्वत्रगो महान् ।
तथा सर्वाणि भूतानि मत्स्थानीत्युपधारय ॥ ६ ॥ ॥३४४॥
सर्वभूतानि कौन्तेय प्रकृतिं यान्ति मामिकाम् ।
कल्पक्षये पुन-स्तानि कल्पादौ विसृजाम्यहम् ॥ ७ ॥ ॥३४५॥

யதாகாச-ஸ்திதோ நித்யம் வாயு: ஸர்வத்ரகோ
மஹான் |
ததா ஸர்வாணி பூதானி மத்ஸ்தானீத்-யுபதாரய
|| 6 || (344)
ஸர்வபூதானி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி
மாமிகாம் |
கல்பக்ஷயே புனஸ்தானி கல்பாதௌ விஸ்ருஜாம்-
யஹம் || 7 || (345)

---

6. (நித்யம்) எப்போதும் (ஸர்வத்ரக:) எங்கும் உலவுவதும் (மஹான்) அளவு கடந்ததும் ஆகிய (வாயு:) காற்று (யதா) எவ்வாறு (ஆகாசஸ்தித:) வானில் இருப்புடையதோ (ததா) அவ்வாறு (ஸர்வாணி பூதானி) எல்லாப் பொருள்களும் (மத்ஸ்தானி) என்னிடம் இருப்புடையன (இதி) என்று (உபதாரய) உணர்வாய்.

7. (கௌந்தேய) குந்தீ புத்திரனே! (ஸர்வ பூதானி) எல்லாப் பொருள்களும் (கல்பக்ஷயே) கல்

---

6. காற்று எங்கும் சஞ்சரிப்பதுபோல் பிராணிகள் பல யோனிகளில் பிறந்திறந்து சுழல்வனவாயினும் காற்று ஆகாயத்தில் தோன்றி ஆகாயத்தில் ஒடுங்குவதுபோல் உலகனைத்தும் பகவானிடம் தோன்றி பகவானிடமே லயமடைகின்றது. காற்று ஆகாயத்தைக் கறைப்படுத்தாதவாறு உலகு அவனைச் சிறிதும் பற்றுது.

ஒ—அண்டபிண்டங்காணேன் அகமும் புறமுமொன்றுக்
கண்டவென்னை நீ கலந்த காலம் பராபரமே. (தாயுமானவர்.)

7. கல்பக்ஷயே—பிரம்மாவின் ஆயுள் முடிவாகிய மஹாப்ரளய காலத்தில்; (மானிடவூ; 360வூ=1 தேவவூ; 12000-

प्रकृतिं स्वा-मवष्टभ्य विसृजामि पुनः पुनः ।
भूतग्राम-मिमं कृत्स्न-मवशं प्रकृते-र्वशात् ॥ ८ ॥ ॥३४६॥

ப்ரக்ருதிம் ஸ்வா-மவஷ்டப்ய விஸ்ருஜாமி புன: புன: |
பூதக்ராம-மிமம் க்ருத்ஸன-மவசம்-ப்ரக்ருதேர்-வசாத்
|| 8 || (346)

பத்தின் முடிவில் (மாமிகாம்) என்னுடைய (ப்ரக்ருதிம்) பிரகிருதியை (யாந்தி) அடைகின்றன; (கல்பாதௌ) கல்பத்தின் ஆதியில் (தானி) அவற்றை (அஹம்) நான் (புன:) மறுபடியும் (விஸ்ருஜாமி) உற்பவிக்கச் செய்கின்றேன்.

8. (ஸ்வாம்) என்னுடைய (ப்ரக்ருதிம்) பிரகிருதியை (அவஷ்டப்ய) வசப்படுத்திக்கொண்டு, (ப்ரக்ருதேர்வசாத்) பிரகிருதியின் வசப்பட்டதால் (அவசம்) அவசமான (இமம் க்ருத்ஸ்னம்) இந்த எல்லா (பூதக்ராமம்) பொருள் கூட்டத்தையும் (புன: புன:) திரும்பத்திரும்ப (விஸ்ருஜாமி) உற்பவிக்கச் செய்கின்றேன்,

---

தேவஹு=1 சதுர் யுகம்: 2000 சதுர் யுகம்=பிரம்மாவின் 1 நாள். இங்ஙனம் பிரம்மாவின் ஆயுள் 100 ஹு.)

8. இங்கு கூறிய **ப்ரக்ருதி** 'மஹத் ப்ரஹ்ம' என்று அத் 14ல் கூறும் **(அவ்யாக்ருத, ப்ரதான)** மூலப்ரக்ருதி. கீ. 8. 18ல் குறிப்பிட்ட **அவ்யக்தம்** மூலப்ரக்ருதியன்று அந்த அவ்யக்தத்தில் ஏற்படும் ப்ரளயத்தில் ப்ராணிகளின் **காரண சரீரம்** எஞ்சி நிற்கும். இந்த ப்ரளயத்தில் காரண சரீரமும் லயமடைகின்றது. அங்கு பிரம்மாவின் இரவு; இங்கு பிரம்மாவின் முடிவு.

ப்ரக்ருதேர்-வசாத் ஒவ்வொரு பிராணியும் ப்ரக்ருதியின் ஒரு அம்சத்துக்கு (வ்யஷ்டிக்கு) வயப்பட்டது; ஸமஷ்டிப்ரக்ருதி பகவானுக்கு வயப்பட்டது.

புன: புன:—ஜீவன் ப்ரக்ருதிக்கு வசப்பட்டுள்ளவரை குண கருமங்களுக்கனுகுணமாகப் பிறப்பும் இறப்பும் திரும்பத் திரும்ப வந்துகொண்டேயிருக்கும்.

न च मां तानि कर्माणि निबध्नन्ति धनञ्जय ।
उदासीनव-दासीन-मसक्तं तेषु कर्मसु ॥ ९ ॥ ॥ ३४७ ॥
मयाध्यक्षेण प्रकृतिः सूयते सचराचरम् ।
हेतुनानेन कौन्तेय जग-द्विपरिवर्तते ॥ १० ॥ ॥३४८॥

ந ச மாம் தானி கர்மாணி நிபத்னந்தி தனஞ்ஜய !
உதாஸீனவ-தாஸீன-மஸக்தம் தேஷு கர்மஸு
|| 9 || (347)

மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம் |
ஹேதுனாநேன கௌந்தேய ஜகத்-விபரிவர்த்ததே
|| 10 || (348)

---

9. (தனஞ்ஜய) தனஞ்ஜயா! (தானி) அந்த (கர்மாணி) செயல்கள் (தேஷு) அந்த (கர்மஸு) செயல்களில் (அஸக்தம்) பற்றற்றவனும் (உதாஸீனவத் ஆஸீனம் ச) உதாசீனனைப்போலிருப்பவனும் ஆகிய (மாம்) என்னை (ந நிபத்னந்தி) கட்டுப்படுத்துவதில்லை.

10. (மயா அத்யக்ஷேண) என்னுடைய மேற்பார்வையினால் (ப்ரக்ருதி:) பிரகிருதி (ஸ சராசரம்) அசையும் பொருள்களையும் அசையாப் பொருள்களையும் (ஸூயதே) பிறப்பிக்கின்றது; (கௌந்தேய) குந்தீ புத்திரனே! (அனேன ஹேதுனா) இந்தக்காரணத்தால்

---

10. 'உதாஸீனவத்' என்ற பதத்தின் கருத்தை இச்சுலோகம் விளக்குகின்றது. குடியானவன் வயலில் விதைகளை விதைத்தால், விதைகள் ஒவ்வொன்றும் சூரியனுடைய பார்வையில் தத்தம் இயற்கையின்படி பூமியினின்று வளருவதுபோல், ஜீவவர்க்கம் பிரகிருதியாகிய (க்ஷேத்திரத்தில்) வயலில் பகவானுடைய பார்வையில் முளைத்து வளர்கின்றன. பிரகிருதியைப் பார்த்து 'நீ ஏன் சிருஷ்டிக்கிறாய்? எங்ஙனம் சிருஷ்டிக்கிறாய்? என்று கேட்டு அது விடை கூறுவதாயிருந்தால், 'என்னைப்போல் பேசாமலிருந்து கொண்டு உன் பணியைச் செய்தால் உனக்கு அது தானே விளங்கும்' என்று சொல்லும்.

अवजानन्ति मां मूढा मानुषीं तनु-माश्रितम् ।
परं भाव-मजानन्तो मम भूत-महेश्वरम् ॥ ११ ॥ ॥३४९॥

அவஜானந்தி மாம் மூடா மானுஷீம் தனு-மாச்ரிதம் |
பரம் பாவ-மஜானந்தோ மம பூத-மஹேச்வரம்
|| 11 || (349)

(ஜகத்) உலகு (விபரிவர்த்ததே) சுற்றிச் சுற்றி வரு கின்றது.

11. (பூதமஹேச்வரம்) பொருள்களுக்கு மகேசுவ ரனுயுள்ள (மம) என்னுடைய (பரம்) உயர்ந்த (பாவம்) தன்மையை (அஜானந்த:) அறியாதவர்களாய் (மூடா:) மூடர்கள் (மானுஷீம் தனும்) மனித உடலே (ஆச்ரிதம்) அடைந்த (மாம்) என்னே (அவஜானந்தி) அவமதிக் கின்ருர்கள்.

சு. 8. 9. 10ல் 'அருந்ததி ந்யாய' முறையில் பகவான் (1) தானே சிருஷ்டித்ததாயும், (2) பிரகிருதியை வசப்படுத்திக்கொண்டு சிருஷ்டித்ததாயும், (3) உண்மையில் தான் 'ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்க்குணச்ச' (ச்வே. 6, 11.) என்றபடி உதாஸீனன் என்றும் கிரமமாய் உபதேசிக்கிருர்.

அருந்ததி ந்யாயம்—விவாக காலத்தில் ஸதிபதிகளுக்கு அருந்ததியெனும் நக்ஷத்திரத்தைக் காட்டுவதற்கு அத்திக்கிலுள்ள ஸ்தூலமான பொருள்களேக் காட்டிப் பின் வானத்தில் அருந்ததிக் கருகிலுள்ள பெரிய நக்ஷத்திரத்தைக் காட்டிக் கூர்ந்து கவனிக்கச் செய்து பின் ஸூக்ஷ்ம ஒளியுடன் விளங்கும் அருந்ததியைக் காட்டிவைக்கும் உபமானம்.

11-12. பகவானுடைய (ஸகுண-ஸாகார-அவதார) வ்யக்த மூர்த்தியை அசுர சுபாவமுடையவர் அறியாது அவமதிப்பர் என்றது.

ஒ—அஹம் ஸர்வேஷு பூதேஷு பூதாத்மா ऽவஸ்தித: ஸதா |
தமவஜ்ஞாய மாம் மர்த்ய: குருதே ऽர்ச்சா-விடம்பனம் ||
—பாகவதம் 3, 29-21.

मोघाशा मोघकर्माणो मोघज्ञाना विचेतसः ।
राक्षसी-मासुरीं चैव प्रकृतिं मोहिनीं श्रिताः ॥ १२ ॥ ॥३५०॥

மோகாசா மோககர்மாணோ மோகஜ்ஞானா விசேதஸ: |
ராக்ஷஸீ-மாஸுரீஞ் சைவ ப்ரக்ருதிம் மோஹினீம்
ச்ரிதா: || 12 || (350)

---

12. (மோகாசா:) வீணாசை உடையவர்களும், (மோககர்மாண:) வீண் தொழிலுடையவர்களும் (மோகஜ்ஞானா:) வீணறிவுடையவர்களும் (விசேதஸ:) சிதறிப்போன அறிவுடையவர்களும் ஆகிய இவர்கள் (மோஹினீம்) மதியை மயக்கும் (ராக்ஷஸீம் ஆஸுரீஞ் சைவ ப்ரக்ருதிம்) இராக்ஷஸத் தன்மையையும் அசுரத் தன்மையையுமே (ச்ரிதா:) அனுசரிப்பவர்கள்.

மோக-கர்மாண ;—யஜ்ஞம், தானம், தவம் முதலிய கருமங்களை அவர்கள் செய்யினும் இகத்தும் பரத்தும் ஒரு நன்மையும் அடையார். (ஒ—16. 23 ; 17. 28.)

ஒ—பிரம்மா தேவர்களுக்குக் கூறியது ;—வசுதேவ புத்ரனை மனிதன் என்று எண்ணி ஒருபோதும் அவமதித்து விடாதீர்கள். அவனே பரம ரஹஸ்யப் பொருள், பரமபதம், பரப்ரஹ்மம், அக்ஷரம், அவ்யக்தம், ஸநாதனம். பரஞ்சோதி, பரமசுகம், பரம ஸத்யம். எந்த மூடமக்கள் ஹ்ருஷீகேசனை மனிதன் என்று கருதுகிறார்களோ, அவர்கள் மனிதப்பதர்." (ம. பா. பீஷ்ம. 66. 23.)

ஒ—ஈசுவராவதாரம் வாஸ்தவமான விஷயம். வார்த்தைகளால் இவ்விஷயத்தை நன்றாய் விவரித்துச் சொல்ல முடியாது. ஞானக் கண்ணால்தான் இதைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆயினும் ஒரு உவமை கூறுவோம். பசுவின் கொம்பு, கால், வால், முலைக்காம்பு எதைத் தொட்டாலும் பசுவைத் தொடுவதேயாம். ஆனால் நமக்கு முக்கியம் அதன் முலைக்காம்பிலிருந்து வரும் பாலே. பகவானுடைய கிருபை என்னும் பாலானது நமக்கு அவதாரம் செய்த ஈசுவரனிடமிருந்தே பெருகுகின்றது. (ரா. கி.)

महात्मानस्तु मां पार्थ दैवीं प्रकृति-माश्रिताः ।
भजन्त्यनन्य-मनसो ज्ञात्वा भूतादि-मव्ययम् ॥१३॥ ॥३५१॥
सततं कीर्तयन्तो मां यतन्तश्च दृढव्रताः ।
नमस्यन्तश्च मां भक्त्या नित्ययुक्ता उपासते ॥१४॥ ॥३५२॥

மஹாத்மானஸ்து மாம் பார்த்த தைவீம் ப்ரக்ருதி-மாச்ரிதா: |
பஜந்த்-யனன்ய-மனஸோ ஜ்ஞாத்வா பூதாதி-மவ்யயம் || 13 || (351)

ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தச்ச த்ருடவ்ரதா: |
நமஸ்யந்தச்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே || 14 || (352)

---

13. (பார்த்த) பார்த்தா! (மஹாத்மானஸ்து) மஹாத்மாக்களோவெனில் (தைவீம் ப்ரக்ருதிம்) தெய்வத்தன்மையை (ஆச்ரிதா:) அனுசரிப்பவர்களாய் (அனன்யமனஸ:) வேறு சிந்தை யில்லாதவர்களாய் (பூதாதிம்) பொருள்களின் ஆதியும் (அவ்யயம்) அழிவற்றவனும் ஆகிய (மாம்) என்னை (ஜ்ஞாத்வா) அறிந்து (பஜந்தி) பூஜிக்கின்றார்கள்.

14. (ஸததம்) எப்போதும் (மாம்) என்னை (கீர்த்தயந்த:) துதிப்பவர்களாய் த்ருடவ்ரதா:) திடமான விரத

---

13. ஒ—'அன்யாச்ரயாணும் த்யாகோ அனன்யதா' அவனைத்தவிர வேறொன்றை நாடாமையே அனன்யத்வம்.

(நாரத பக்தி ஸூத்ரம்.)

ஒ—கேவலம் உலகப் பற்றிலேயே உழல்பவன் மலத்திற் பிறந்து அதிலேயே இறக்கும் புழுவுக்குச் சமானம். பக்தி ஸாதனங்களைப் பயில்வதுடன் உலக இன்பங்களையும் நாடுபவன் ஒரு சமயம் மலத்தின்மீதும் ஒரு சமயம் நல்ல பூவின்மீதும் உட்காரும் ஈக்குச் சமானம். மஹான்களோ தேனைத் தவிர வேறொன்றைக் குடிக்காத வண்டுக்குச் சமானம். (ரா. கி.)

ज्ञान-यज्ञेन चाप्यन्ये यजन्तो मामुपासते ।
एकत्वेन पृथक्त्वेन बहुधा विश्वतो मुखम् ॥ १५ ॥ ॥३५३॥

ஜ்ஞான-யஜ்ஞேன சாப்யன்யே யஜந்தோ
மாமுபாஸதே |
ஏகத்வேன ப்ருதக்த்வேன **பஹு"தா** விச்வதோ-முகம்
|| 15 || (353)

முடையவர்களாய் (யதந்தச்ச) முயற்சியுடையவர்களாய் (பக்த்யா) பக்தியுடன் (நமஸ்யந்தச்ச) நமஸ்கரிப்பவர்களாய் (நித்யயுக்தா:) நிலைபெற்ற மனத்தினராய் (மாம்) என்னை (உபாஸதே) சேவிக்கின்றார்கள்.

15. (அன்யே அபி) வேறு சிலர் (ஜ்ஞானயஜ்ஞேன) ஞானயஜ்ஞத்தால் (ஏகத்வேன) ஒற்றுமையால் (யஜந்த: ச) பூஜிப்பவர்களாயும்—இன்னும் சிலர்—(விச்வதோமுகம்) எங்கும் முகமுடைய விராட்ரூபியான (மாம்) என்னை (ப்ருதக்த்வேன) ஒற்றுமையாலும் (பஹு"தா) பலவகையில் (உபாஸதே) சேவிக்கின்றார்கள்.

---

14. நித்யயுக்தா :—உட்காரும்போதும், எழுந்திருக்கும்போதும், உறங்கும்போதும். விழிக்கும்போதும், உண்ணும்போதும் உடுக்கும்போதும். தொழில் புரியும்போதும், தியானம் செய்யும் போதும் எப்போதும் பகவானிடத்திலே மனத்தை நிறுத்தியவர்கள்.

15. ஏகத்வேன—(ஏகமேவ பரம் ப்ரஹ்ம இதி பரமார்த்த-தர்சனேன) பரம்பொருள் ஒன்றே என்ற நிரந்தர ஞானமே யஜ்ஞம். இதைத் தவிர வேறு உபாசனையை நாடாதவர்கள் ஞான யக்ஞத்தால் ஆராதிப்பவர்; 13-14ல் கூறியது ஸகுண உபாஸனை. இங்கு ஞானயஜ்ஞம் என்றது நிர்குணப் பிரம்ம உபாஸனை.

ப்ருதக்த்வேன—விசுவ ரூபியான பகவானுக்கு அங்க ரூபிகளான ஸூர்யன், சந்திரன், அக்னி, வருணன், வாயு முதலிய தேவதைகளை வெவ்வேறு நியமங்களுடன் ஆராதித்தல்.

अहं क्रतु-रहं यज्ञः स्वधाह-मह-मौषधम् ।
मन्त्रोऽहमहमेवाज्य-महमग्नि-रहं हुतम् ॥ १६ ॥ ॥३५४॥
पिताह-मस्य जगतो माता धाता पितामहः ।
वेद्यं पवित्र-मोङ्कार ऋक् साम यजुरेव च ॥ १७ ॥ ॥३५५॥

அஹம் க்ரது-ரஹம் யஜ்ஞ: ஸ்வதாஹ-மஹ-மௌஷதம் |
மந்த்ரோऽஹ-மஹமேவாஜ்ய-மஹமக்னி-ரஹம் ஹுதம் || 16 || (354)
பிதாஹ-மஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ: |
வேத்யம் பவித்ர-மோங்கார ருக் ஸாம யஜுரேவ ச | 17 || (355)

---

16. (அஹங் க்ரது:) நானே கிரது. (அஹம் யஜ்ஞ:) நானே யஜ்ஞம், (ஸ்வதா அஹம்) நானே பித்ருக்களுக்கிடும் அன்னம், (அஹம் ஔஷதம்) நானே பிராணிகளுக்கு அன்னமும் மருந்தும்; (மந்த்ர: அஹம்) மந்திரமும் நானே. (அஹம் ஏவ ஆஜ்யம்) நெய்யும் நானே, (அஹம் அக்னி:) அக்னியும் நானே, (அஹம் ஹுதம்) ஹோம கருமமும் நானே.

17. (அஸ்ய ஜகத:) இவ்வுலகிற்கு (பிதா) தகப்பனும் (மாதா) தாயும் (தாதா) தாங்குபவனும் (பிதாமஹ:) பாட்டனும் (வேத்யம்) கற்றுணரத்தக்கவனும் (பவித்ரம்) பரிசுத்தமளிப்பவனும் (ஓங்கார:) ஓங்காரப் பொருளும் (ருக்ஸாம யஜு:ச) அவ்வாறே ருக்ஸாம யஜுர் வேதங்களும் (அஹம் ஏவ) நானே.

---

16. ஸகுண உபாஸனையும், நிர்க்குண உபாஸனையும் வெவ்வேறு தேவதைகளின் உபாஸனையும் கூட எப்படி பகவானுக்குப் பூஜையாகவே ஆகும் என்று இனிக் கூறப்படும்.

க்ரது—வைதிக கருமம், யஜ்ஞம் :—ஸ்ம்ருதிகளில் விதித்த பஞ்சமஹாயஜ்ஞம் முதலியன.

17. வேத்யம்—ஒ—கீ. 15. 15.

गति-र्भर्ता प्रभुः साक्षी निवासः शरणं सुहृत् ।
प्रभवः प्रलयः स्थानं निधानं बीज-मव्ययम् ॥ १८ ॥ ॥३५६॥
तपाम्यह-महं वर्षं निगृह्णा-म्युत्सृजामि च ।
अमृतं चैव मृत्युश्च सदसच्चाह-मर्जुन ॥ १९ ॥ ॥३५७॥

கதிர்-பர்த்தா ப்ரபு: ஸாக்ஷீ நிவாஸ: சரணம்
ஸுஹ்ருத் |
ப்ரபவ: ப்ரளய: ஸ்தானம் நிதானம் பீஜ-மவ்யயம்
|| 18 || (356)
தபாம்-யஹ-மஹம் வர்ஷம் நிக்ருஹ்ணும்-யுத்ஸ்ருஜாமி
ச |
அம்ருதஞ் சைவ ம்ருதயுச்ச ஸதஸச்சாஹ-மர்ஜுன
|| 19 || (357)

---

18. (கதி:) செல் இடமும் (பர்த்தா) போஷித்துக காப்பவனும் (ப்ரபு:) ஆள்பவனும் (ஸாக்ஷீ) பார்த்துக கொண்டிருப்பவனும் (நிவாஸ:) வாழுமிடமும் (சரணம்) துன்பந் துடைப்பவனும் (ஸுஹ்ருத்) நண்பனும் (ப்ரபவ:) பிறப்பிடமும் (ப்ரளய:) புகலிடமும் (ஸ்தானம்) இருப்பிடமும் (நிதானம்) பொக்கிஷமும் (அவ்யயம் பீஜம்) அழியாத வித்தும்—நானே.

19. (அர்ஜுன) அர்ஜுன! (அஹம்) நான் (தபாமி) வெயிலாய்க் காய்கின்றேன்; (அஹம்) நான் (வர்ஷம்) மழையை (உத்ஸ்ருஜாமி ச) பெய்யவுஞ் செய்கின்றேன், (நிக்ருஹ்ணுமி ச) பெய்யாமலும் தடுக் கின்றேன்; (அம்ருதஞ் ச) சாகாமையும் (ம்ருத்யு: ச) சாவும் (ஸத் ச) இருப்பும் (அஸத் ச) இன்மையும் (அஹம் ஏவ) நானே.

---

18. ஒ—பாரதி—கண்ணன் என் சற்குரு. என் தந்தை, என் தாய், என் தோழன், என் சேவகன், என் காதலன், என் குழந்தை, என்று பாடிய பாடல்களைப் பார்க்க.

त्रैविद्या मां सोमपाः पूत-पापा यज्ञै-रिष्ट्वा स्वर्गतिं प्रार्थयन्ते ।
ते पुण्य-मासाद्य सुरेन्द्रलोक-मश्नन्ति दिव्यान् दिवि देवभोगान् ॥

த்ரைவித்யா மாம் ஸோமபா: பூதபாபா
யஜ்ஞை-ரிஷ்ட்வா ஸ்வர்க்கதிம் ப்ரார்த்தயந்தே |
தே புண்ய-மாஸாத்ய ஸுரேந்த்ர-லோகம்
அச்னந்தி திவ்யான் திவி தேவ-போகான்
|| 20 || (358)

20. (த்ரைவித்யா:) மூன்று வேதங்களையும் கற்றவர்கள் (யஜ்ஞை:) வேள்விகளால் (மாம்) என்னை (இஷ்ட்வா) பூஜித்து (ஸோமபா: பூதபாபா:) ஸோமபானத்தால் பாவந் தேய்ந்தவர்களாய் (ஸ்வர்க்கதிம்) சுவர்க்கம் செல்லுதலை (ப்ரார்த்தயந்தே) வேண்டுகின்றார்கள்; (தே) அவர்கள் (புண்யம்) புண்யபலனையுள்ள (ஸுரேந்த்ரலோகம்) தேவேந்திர உலகை (ஆஸாத்ய) அடைந்து (திவி) அவ்வானுலகில் (திவ்யான்) பிரகாசிக்கின்ற (தேவபோகான்) தேவர்களுக்குரிய போகங்களை (அச்னந்தி) அனுபவிக்கின்றார்கள்.

20. த்ரைவித்யா—இது ஸ்வர்க்க போகத்தைப் பின் அளிப்பது. அதர்வவித்தை இங்கேயே விரைவில் பலனளிப்பது. அதர்வவித்தையால் புத்திர காமேஷ்டி செய்து தசரதர் புத்திரர்களைப் பெற்றார். பூலோகத்தில் கீர்த்தியுள்ளவரை தான் ஸ்வர்க்கவாஸம் (ஒ. இந்திரத்யும்னன் கதை, மா. பா. வனபர்வம்).

எல்லாக் கருமங்களும் பகவானுடைய பூஜையாகக் கொள்ளப்படாமல் வெவ்வேறு ஆசைகளுடன் அனுஷ்டிக்கப்பட்டால் அற்பமான அழிவுள்ள பயன் எய்தப்படுதல் இனிக் கூறப்படும்.

பூதபாபா:—ஸ்வர்க்கம் செல்வதற்குத் தடையாயுள்ள பாவங்கள் எவையுண்டோ அவைகள் நீங்கியவர்களாய் என்று கருத்து. எல்லாப் பாவமும் நீங்கியவர்கள் எனின் திரும்பி வரார், முக்திக்குரியவராவர்.

மாம்—என் அங்க வடிவான இந்திராதி தேவர்களைப் பூஜிப்பது என்னையே பூஜித்ததாகின்றது. இதை உணராது யஜ்ஞாதி கருமங்கள் செய்தால் அதனால் கருமக்கட்டு நெகிழாமல் புண்ணியம் ஸம்பாதிக்கப்படுகின்றது.

ते तं भुक्त्वा स्वर्ग-लोकं विशालं क्षीणे पुण्ये मर्त्य-लोकं विशन्ति।
एवं त्रयीधर्म-मनुप्रपन्ना गतागतं कामकामा लभन्ते ॥ २१ ॥

தே தம் புக்த்வா ஸ்வர்க்க-லோகம் விசாலம்
க்ஷீணே புண்யே மர்த்ய-லோகம் விசந்தி |
ஏவம் த்ரயீ தர்ம-மனுப்ரபன்ன
கதாகதம் காமகாமா லபந்தே || 21 || (359)

---

21. (தே) அவர்கள் (தம்) அந்த (விசாலம்) விசாலமான (ஸ்வர்க்க லோகம்) சுவர்க்க லோகத்தை (புக்த்வா) அனுபவித்து (க்ஷீணே புண்யே) புண்ணியம தேய்ந்ததும் (மர்த்யலோகம்) மனித வுலகை (விசந்தி) புகுகின்றனர். (ஏவம்) இவ்வாறு (த்ரயீ தர்மம்) வைதிக கருமங்களே (அனுப்ரபன்ன:) பின்பற்றியவர்கள் (காம காமா:) போகங்களில் ஆசை கொண்டவர்களாய் (கதாகதம்) போதலேயும் வருதலேயும் (லபந்தே) அடைகின்றனர்.

ஒ—தத்யதேஹ கர்மஜிதோ லோக: க்ஷீயதே |
(சா. உப. 8. 1-6.)

ஒ—யம்ருஷயஸ்-த்ரயீவிதா விது:| ஸா ஹி ஶ்ரீரம்ருதா ஸதாம்||

21. விசாலம்—மனித உலகுடன் ஒப்பிடுகையில், போக்ய வஸ்துக்களிலும், உடலின் சக்தி, மனதின் சக்தி, ஆயுள் இவைகளிலும் தேவலோகம் அதிக விரிவுடையது.

கழுத்தில் கயிறுடன் ஒரு குடம் மேலும் கீழும் இழுக்கப்படுவது போல் ஆசையெனுங் கயிற்ருல் ஜீவன் மேலுங் கீழும் இழுக்கப் படுகிருன். (யோகவாஸிஷ்டம்.)

மேலே வந்த குடத்திலிருந்த நீர் செலவழிந்ததும் மீண்டும் முகர்வதற்குக் கீழே செல்லுகிறது.

अनन्या-श्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥ २२ ॥ ॥३६०॥

அனன்யாச் சிந்தயந்தோ மாம் யே ஜனா: பர்யுபாஸதே|
தேஷாம் நித்யாபியுக்தானும் யோகக்ஷேமம் வஹாம்-
யஹம் || 22 || (360)

---

22. (அனன்யா:) என்னைவிட வேறொன்றிலும் நாட்டமில்லாதவராய் (மாம்) என்னையே (சிந்தயந்த:) சிந்திப்பவராய் (யே ஜனா:) எந்த ஜனங்கள் (பர்யுபாஸதே) பரிவுடன் உபாசிக்கின்றார்களோ (தேஷாம்) அந்த (நித்யாபியுக்தானும்) நிலைபெற்ற யுக்தர்களுடைய (யோகக்ஷேமம்) யோகக்ஷேமத்தை (அஹம்) நான் (வஹாமி) தாங்குகின்றேன்.

---

22. அனன்யா:—சு. 13, 14ல் கூறிய உத்தம பக்தர்களையே இதுவுங் குறிக்கும்.

யோகக்ஷேமம்:—ஒருவன் விரும்பி அடையாததை அடைதல் 'யோகம்'. அடைந்ததைக் காப்பாற்றுதல் 'க்ஷேமம்'. பக்தன் அடைய விரும்புவது பக்தி ஒன்றே. ஆகையால் அதற்கு அவசியமான வஸ்துக்களையும் ஸாதனங்களையும் அடைதலே யோகம்: அதற்கேற்படும் இடையூறுகளினின்று காக்கப்படுதலே க்ஷேமம். இங்ஙனம் ஸாதன ஸம்பந்தமான யோக க்ஷேமத்தை பகவான் வகிக்கின்றான் எனின், ஜீவன உபயோகமான யோக க்ஷேமத்தையும் ஸகல ஜீவராசிகளுக்கும் அளிக்கும் பகவான் பக்தனுக்கும் அளிக்காமலிரான். பக்தன் தன்னை முழுதும் பகவானிடம் ஒப்புவித்துவிட்டால் குழந்தையின் யோக க்ஷேமங்களனைத்தையும் தாய் கவனிப்பதுபோல அவன் கவனித்துக் கொள்கிறான் என்பதில் ஐயமில்லை.

ஓ. பாய்களைச் செவ்வையாக விரித்து வைத்தவனுடைய படகைக் காற்று தானே தள்ளிச் செல்வதுபோல், பக்தனுடைய வாழ்க்கைப் படகை பகவானுடைய கருணைக்காற்று தள்ளிச் செல்லுகிறது. (ரா. கி.)

येऽप्यन्य-देवता-भक्ता यजन्ते श्रद्धयान्विताः ।
तेऽपि मामेव कौन्तेय यजन्त्यविधि-पूर्वकम् ॥ २३ ॥ ॥३६१॥
अहं हि सर्व-यज्ञानां भोक्ता च प्रभुरेव च ।
न तु मामभिजानन्ति तत्त्वेनात-श्च्यवन्ति ते ॥२४॥ ॥३६२॥

யேऽப்யன்ய-தேவதா பக்தா யஜந்தே ச்ரத்தயான்
விதா: ||
தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்-யவிதி பூர்வகம்
|| 23 || (361)
அஹம் ஹி ஸர்வ-யஜ்ஞானம் போக்தா ச ப்ரபுரேவ ச |
ந து மாமபிஜானந்தி தத்வேனதச்-ச்யவந்தி தே
|| 24 || (362)

---

23. (கௌந்தேய) குந்தீ புத்திரனே ! (ச்ரத்தயா) சிரத்தையுடன் (அன்விதா:) கூடியவர்களாய் (யே) எவர்கள (அன்ய தேவதா பக்தா:அபி) வேறு தேவதைகளிடம் பக்தி செலுத்தியும் (யஜந்தே) பூஜிக்கின்றார்களோ (தே அபி) அவர்களுங்கூட (மாம் ஏவ) என்னைத்தான் (அவிதிபூர்வகம்) அறியாமையை முன்னிட்டு (யஜந்தி) பூஜிக்கின்றனர்.

24. (ஸர்வயஜ்ஞானம்) எல்லா யஜ்ஞங்களிலும் (போக்தா) உண்பவனும் (ப்ரபு: ச) பலனையளிக்கும் ஆண்டவனும் (அஹம் ஏவ ஹி) நானே யன்றோ? (து) ஆனல் (தே) அவர்கள் (மாம்) என்னை (தத்வேன) உள்ளபடி (ந அபிஜானந்தி) அறிவதில்லை; (அத:) அதனல் (ச்யவந்தி) நழுவுகின்றனர்.

---

23. இங்கு கூறியவர்கள் உத்தம பக்தனைப்போல் சிரத்தையில்லாதவாகளெனினும் தாம் பூஜிக்கும தேவதைகளிடம் சிரத்தையுள்ளவர்களே. இந்த சிரத்தையுமின்றி இடம்பத்துக்காக யஜ்ஞாதி கருமங்களைச் செய்பவாகள் அசுர ஸ்வபாவ முடைய அதமர்கள்

24. **அவிதி-பூர்வகம்** என்றதின் கருத்தும் அப்படிச் செய்த பூஜையின் பயனும கூறப்படுகின்றது. பகவத் ப்ராப்தியெனும

यान्ति देव-व्रता देवान् पितॄन् यान्ति पितृ-व्रताः ।
भूतानि यान्ति भूतेज्या यान्ति मद्याजिनोऽपि माम् ॥ २५ ॥
पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति ।
तदहं भक्त्युपहृत-मश्नामि प्रयतात्मनः ॥ २६ ॥ ॥३६४॥

யாந்தி தேவ-வ்ரதா தேவான் பித்ரூன் யாந்தி பித்ரு-
வ்ரதா: |
பூதானி யாந்தி பூதேஜ்யா யாந்தி மத்யாஜிஞேऽபி
மாம் || 25 || (363)
பத்ரம் புஷபம் பலங் தோயம் யோ மே பக்த்யா
ப்ரயச்சதி |
ததஹம் பக்த்யுபஹ்ருத-மச்ஞமி ப்ரயதாத்மன: || 26 ||

25. (தேவவ்ரதா:) தேவர்களை வழிபடுவோர் (தேவான்) தேவர்களை (யாந்தி) அடைகின்றனர்; (பித்ருவ்ரதா:) பிதிருக்களை வழிபடுவோர் (பித்ரூன்) பிதிருக்களை (யாந்தி) அடைகின்றனர்; (பூதேஜ்யா:) பூதங்களை வழிபடுவோர் (பூதானி) பூதங்களை (யாந்தி) அடைகின்றனர்; (மத்யாஜின: அபி) என்னைப் பூஜிப்பவர்களும் (மாம்) என்னை (யாந்தி) அடைகின்றனர்.

26. (ய:) எவன் (மே) எனக்கு (பக்த்யா) பக்தியுடன் (பத்ரம்) பச்சிலையோ (புஷ்பம்) புஷ்பமோ

உத்தம பலனையடையாமல், ஸ்வர்க்க ப்ராப்தியெனும் தாழ்ந்த நிலையை யடைந்து ஸம்ஸார சக்கரத்தில் மறுபடி நழுவுகின்றனர்.

25. இந்த சுலோகத்தின் கருத்து தேவ பித்ரு பூஜைகளை விட்டுவிட வேண்டும் என்பதன்று. அவற்றையும் பயனைக் கருதாமல் பகவதர்ப்பணமாகவே செய்ய வேண்டுமென்பதே.

(ஸமானேऽப்யாயாஸே, மாமேவ ந பஜந்தே அஜ்ஞானத்; தேன தே அல்பபல-பாஜோ பவந்தி) பிரயாஸம் ஸமமாயினும் அஜ்ஞானத்தால் என்னை பூஜிப்பதில்லை; அதனுல் அல்ப பலனை யடைகின்றனர். (சங்கரர்)

26. ஸுஸுகங்கர்த்தும் என்று சு. 6-ல் கூறியது இங்கு தெளிவாகின்றது.

यत्करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् ।
यत्तपस्यसि कौन्तेय तत्कुरुष्व मदर्पणम् ॥ २७ ॥ ॥३६५॥

யத்கரோஷி யதச்னஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் ||
யத் தபஸ்யஸி கௌந்தேய தத் குருஷ்வ மதர்ப்பணம்
|| 27 || (365)

(தோயம்) தீர்த்தமோ (ப்ரயச்சதி) அர்ப்பிக்கின்றனோ (ப்ரயதாத்மன:) தூய்மையான அந்தக்கரணமுடைய அவனது (**பக்த்யுபஹ்ருதம்**) பக்தியுடன் ஸமர்ப்பிக்கப் பட்ட (தத்) அப்பொருளை (அஹம்) நான் (அச்னமி) புசிக்கின்றேன்.

27. (கௌந்தேய) குந்தீ புத்திரனே! (யத்) எதை (கரோஷி) செய்கின்றாயோ, (யத்) எதை (அச்னஸி)

ய:—எவராயினும்—குலம், கல்வி, செல்வம், வயது, ஆண், பெண் என்ற பேதமின்றி பிரேமையுடன், விதுரர், சபரீ, குஹன் முதலியவர்களைப்போல்.

பக்த்யுபஹ்ருதம்—

உ-ம். குசேலர் பக்தியுடன் கொணர்ந்த அவல் (**உபஹாரம்**) போலும், துரௌபதி அளித்த கீரை (**பத்ரம்**) போலும், கஜேந்திரன் துதிக்கையிலெடுத்த **புஷ்பம்** போலும், சபரி அளித்த **பழம்** போலும், ரந்திதேவன் அளித்த **தீர்த்தம்** போலும்.

பெரியோர்களைத் தரிசிக்கச் செல்லும்போதும், ஆலயத்துக்குப் போகும்போதும், வெறுங்கையனாய் ஒருபோதும் போகக் கூடாது. அங்கு ஸமர்ப்பிப்பதற்காக அற்பமானதாயிருந்தாலும் ஏதேனு மொன்றைக் கொண்டு செல்ல வேண்டும். (ரா. கி)

மின்சார சக்தி ஒரு அற்பமான மயிரிழைபோன்ற சிறு கம்பி யேனும் பற்றக் கிடைத்தால் அதன் வழி எளிதில் பாய்ந்து செல்லு வது போல், பகவத் கிருபையும் பத்ரம், புஷ்பம் முதலிய அர்ப்பணப் பொருள்களின் வழியே நம்மிடம் பாய்கின்றது.

சுலபமாய்க் கிடைக்கக்கூடிய பத்ரம், புஷ்பம் இருக்கவும் பக்தி ஒன்றினால் அடையக்கூடிய பகவான் இருக்கவும் முக்திக்கு முயலாம லிருப்பது ஏன்?

27. 'அவச்யம் பாவினாம் கர்மணாம் மயி பரமகுரௌ ஸமர்ப்

शुभाशुभ-फलै-रेवं मोक्ष्यसे कर्मबन्धनैः ।
सन्न्यासयोग-युक्तात्मा विमुक्तो मामुपैष्यसि ॥ २८॥ ॥ ३६६॥

சுபாசுப-பலை-ரேவம் மோக்ஷயஸே கர்மபந்தனை: |
ஸந்ந்யாஸ-யோக-யுக்தாத்மா விமுக்தோ மாமுபைஷ்
யஸி || 28 || (366)

புசிக்கின்றாயோ (யத்) எதை (ஜுஹோஷி) ஹோமம் செய்கின்றாயோ (யத்) எதை (ததாஸி) தானம் செய்கின்றாயோ (யத் தபஸ்யஸி) எந்தத் தவம் செய்கின்றாயோ (தத்) அதை (மதர்ப்பணம்) எனக்கு அர்ப்பணமாக (குருஷ்வ) செய்வாய்.

28. (ஏவம்) இவ்வாறு (சுபாசுபபலை:) புண்ணிய பாவ வடிவான (கர்மபந்தனை:) கருமக்கட்டுகளினின்றும் (மோக்ஷயஸே) விடுபடுவாய். (விமுக்த:) விடுபட்டு (ஸந்ந்யாஸ யோக யுக்தாத்மா) ஸந்நியாஸ யோகத்தில் நிலைபெற்ற உள்ளத்தினனாய் (மாம்) என்னை (உபைஷ்யஸி) வந்தடைவாய்.

பணமேவ மத்பஜனம் | ந து ததர்த்தம் பருதக் வ்யாபார: கச்சித் கர்த்தவ்ய இத்யபிப்ராய:' (மதுஸூதன ஸரஸ்வதி.)

27-28 யஜ்ஞம், தானம், தவம் எனும் கருமங்கள் **ஜுஹோஷி, ததாஸி தபஸ்யஸி** எனும் சொற்களாலும், இவைகட்குப் புறம்பாக உடலை ரக்ஷிக்கச் செய்யுந் தொழில்கள் **அச்நாஸி,** எனும் பதத்தாலும், உலக ரீதியை ஒட்டிச் செய்யப்படும் வர்ணாச்ரமக் கடமைகள் **கரோஷி** எனும் சொல்லாலும் கூறப்பட்டன. அங்ஙனமாகக் கருமங்களனைத்தும் பகவதர்ப்பணம் செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

ஒ. ஸர்வகர்ம பலத்யாகம். கீ. 12. 11.

ஆரம்பத்தில் நாம் செய்வதை பகவானுக்கு அர்ப்பணம் செய்வதாகக் கருத்து இருந்தாலும், நாளடைவில் நமது மூலமாக பகவானே அனைத்தையும் செய்வித்துக் கொள்கிறான் என்ற ஞானம்

समोऽहं सर्वभूतेषु न मे द्वेष्योऽस्ति न प्रियः ।
ये भजन्ति तु मां भक्त्या मयि ते तेषु चाप्यहम् ॥२९॥ ॥३६७॥

ஸமோऽஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோऽஸ்தி ந
ப்ரிய: |
யே **ப**ஜந்தி து மாம் **ப**க்த்யா மயி தே தேஷு
சாப்யஹம் || 29 || (367)

---

29. (அஹம்) நான் (ஸர்வபூதேஷு) எல்லா உயிர்களிடத்தும் (ஸம:) ஸமமாயுள்ளேன். (மே) எனக்கு (த்வேஷ்ய:) வெறுக்கத் தகுந்தவன் (ந அஸ்தி) இல்லை; (ந ப்ரிய:) விரும்பத் தகுந்தவனும் இல்லை. (து) ஆனால் (யே) எவர்கள் (மாம்) என்னை (**ப**க்த்யா) பக்தியினால் (**ப**ஜந்தி) பூஜிக்கின்றார்களோ (தே) அவர்கள் (மயி ச) என்னிடத்திலுளர்; (அஹம் அபி) நானும் (தேஷு) அவர்களிடத்திலுள்ளேன்.

உதிக்கும். அப்போது 'ஸந்ந்யாஸயோக-யுக்தாத்மா' (சு. 28) ஆகின்றான்.

ஒ— உனது ஸம்ஸார விஷயங்களெல்லாம் உன்னுடையன அல்லவென்றும், அவை பகவானுடையவை என்றும், நீ அவனுடைய கட்டளைப்படி நடக்க வேண்டிய தாஸன் என்றும் எப்போதும் நினைத்துக்கொண்டிரு. இந்த எண்ணம் உன் மனத்தில் நிலைத்தால், 'உனது' என்று சொல்லக்கூடிய பொருள் ஒன்றுமே உனக்கு இராது. (ரா. கி.)

29. "அக்னியைப்போல் நான் உளேன். எட்டி நிற்பவர் குளிரை அக்னி போக்குவதில்லை. ஸமீபித்து வருவோர் குளிரைப் போக்குகிறது. இது அக்கினியின் பாரபக்ஷமன்று. அதுபோலவே பக்தர்கள் என் அருள் பெறுவதும், மற்றவர் பெறாததும்". (சங்கரர்.)

अपि चेत् सुदुराचारो भजते मामनन्यभाक् ।
साधुरेव स मन्तव्यः सम्यग्व्यवसितो हि सः ॥ ३० ॥ ॥३६८॥

அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமனன்யபாக் |
ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக்-வ்யவஸிதோ ஹி ஸ:
|| 30 || (368)

---

30. ஸுதுராசார: (அபி) தீயொழுக்கம் மிக்கவனுங்கூட (மாம்) என்னை (அனன்யபாக்) வேறொருநாட்டமின்றி (பஜதே சேத்) போற்றுவானெனில் (ஸ:) அவன் (ஸாது: ஏவ) நன்னடக்கையுள்ளவன் என்றே (மந்தவ்ய:) கருதுதற்குரியவன்; (ஹி) ஏனெனில், (ஸ:) அவன் (ஸம்யக்) நன்ருக (வ்யவஸித:) நிச்சயித்தவன் ஆதலின்.

---

30. ஆசாரத்தில் கெட்டவர்களே யாயினும் பகவானை பக்தியுடன் அணுகினல் அவர்களுக்கும் நற்கதி கூறப்படுவதால் பகவானுக்குப் பாரபக்ஷமில்லை யென்பது வற்புறுத்திக் கூறப்பட்டதாயிற்று.

ஓ—பாதியாய் அழுகிய கால் கையரேனும்
பழி குலமும் இழி தொழிலும் படைத்தாரேனும்
ஆதியாய் அரவணையாய் என்பாராகில்
அவரன்றோ யாம் வணங்கும் அடிகளாவார்;
சாதியா லொழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியாற் றக்கோ ரேனும்
போதில் நான்முகன் பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றுதார் புலையர் தாமே.
(திருவரங்கக் கலம்பகம்.)

ஓ—வித்யா கர்வமுள்ள ஜனங்கள் பிறருடைய பக்தியைப்பற்றி 'மூடபக்தி' என்று கூறி அவர்கள் வழி 'தப்பு வழி' என்றுங் கூறுவர். பக்தன் சிறிது காலம் அங்ஙனம் வழி தவறியே நடந்திருந்தாலும் பாதகமில்லை. அவனுக்கு என்ன வேண்டுமோ அதை ஈசுவரன் சீக்கிரமே கூட்டி வைப்பான். (ரா. கி.)

நெருப்புடன் சேர்ந்தால் கரி தன் கறுப்பை இழந்து ஒளிவிடத் தொடங்குகிறது. (துளசிதாஸர்.)

ஓ. 'ந வாஸுதேவ-பக்தாநா-மசுபம் வித்யதே க்வசித் |
(விஷ்ணு ஸஹஸ்ரநாம பலச்ருதி.)

क्षिप्रं भवति धर्मात्मा शश्वच्छान्तिं निगच्छति ।
कौन्तेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति ॥ ३१ ॥ ॥३६९॥
मां हि पार्थ व्यपाश्रित्य येऽपि स्युः पाप-योनयः ।
स्त्रियो वैश्या-स्तथा शूद्रा-स्तेऽपि यान्ति परां गतिम् ॥ ३२ ॥

க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா சச்வச்-சாந்திம் நிகச்சதி |
கௌந்தேய ப்ரதிஜானீஹி ந மே பக்த: ப்ரணச்யதி
|| 31 || (369)
மாம் ஹி பார்த்த வ்யபாச்ரித்ய யேऽபி ஸ்யு: பாப-
யோனய: |
ஸ்த்ரியோ வைச்யாஸ்-ததா சூத்ராஸ்-தேऽபி யாந்தி
பராங் கதிம் || 32|| (370)

---

31. (க்ஷிப்ரம்) விரைவில் (தர்மாத்மா) தரும சிந்தையுடையவனாக (பவதி) ஆகின்றான், (சச்வத்) சாசுவதமான (சாந்திம்) சாந்தி நிலையை (நிகச்சதி) அடைகின்றான்; (கௌந்தேய) குந்தீ புத்திரனே! (மே) என்னுடைய (பக்த:) பக்தன் (ந ப்ரணச்யதி) நாசமடைய மாட்டான் என்று (பிரதிஜானீஹி) உண்மையில் உணர்ந்து உலகுக் குரைப்பாய்.

32. (பார்த்த) பார்த்தா! (ஸ்த்ரிய:) ஸ்திரீகளும் (வைச்யா:) வைசியர்களும் (ததா) அவ்வாறே (சூத்ரா:) சூத்திரர்களும் (பாபயோனய: யே அபி ஸ்யு:) தாழ் பிறவியினர் எவர்களுண்டோ (தே அபி) அவர்களுங்கூட (மாம்) என்னை (வ்யபாச்ரித்ய) சரணடைந்து (பராங்கதிம்) உயர்ந்த கதியை (யாந்தி ஹி) அடைகின்றனர் அன்றோ?

---

31. உ-ம். லீலாசுகர், திருமங்கையாழ்வார், விப்ரநாராயணர் முதலியவர்கள்.

32. "ஒ—விருத்ராசுரன், பிரஹ்லாதன், விருஷபர்வா, பலி, பாணன், மயன், விபீஷணன், சுக்ரீவன், ஹனுமான், ஜாம்பவான்,

किं पुनर्ब्राह्मणाः पुण्या भक्ता राजर्षय-स्तथा ।
अनित्य-मसुखं लोक-मिमं प्राप्य भजस्व माम् ॥ ३३ ॥ ॥३७१॥

கிம் புனர்-ப்ராஹ்மணா: புண்யா பக்தா ராஜா ஷயஸ்-
ததா ||
அநித்ய-மஸுகம் லோக-மிமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்
|| 33 || (371)

---

33. (புண்யா:) புண்ணியவான்களான (ப்ராஹ்மணா:) பிராம்மணர்களும் (ததா) அவ்வாறே (பக்தா:) பக்தர்களான (ராஜர்ஷயச்ச) ராஜரிஷிகளும்—நற்கதியை அடைவர் என்று—(கிம் புன:) மறுபடி—கூறுதல் வேண்டுமோ? (அநித்யம்) நிலையில்லாததும் (அஸுகம்) சுகமில்லாததுமான (இமம்) இந்த (லோகம்) உலகத்தை (ப்ராப்ய) அடைந்து—அநித்தி

கஜேந்திரன், ஜடாயு, வியாதன், கோபிகைகள், யஜ்ஞபத்தினிகள்—இங்ஙனம் வெகுபேர்கள் அந்தந்த யுகத்தில் ஸாதுக்களின் சேர்க்கையால் என் ஸ்தானமடைந்தார்கள். இவர்களிற் பலர் வேதங்களை அத்யயனம் செய்தவர்களல்லர், பெரியோர்களை உபாஸித்தவர்களல்லர், ஸாதுக்களின் சேர்க்கை மாத்திரத்தினுல் ஏற்பட்ட ப்ரீதியால் என்னை அடைந்தார்கள்". (பாக 11, 12. 5-8.)

ஒ.—"வ்யாதஸ்யாசரணம், த்ருவஸ்ய ச வயோ, வித்யா கஜேந்த்ரஸ்ய கா, கா ஜாதிர்-விதுரஸ்ய, யாதவபதே-ருக்ரஸ்ய கிம் பௌருஷம் | குப்ஜாயா: கமனீய ரூபமதிகம் கிம் தத் ஸுதாம்னோ தனம், பக்த்யா துஷ்யதி கேவலம் ந து குணைர்-பக்திப்ரியோ மாதவ: ||"

33. ஒ—"அநித்யைர்-த்ரவ்யை: ப்ராப்தவானஸ்மி நித்யம்" அநித்தியமான திரவியங்களையும் பிரம்மார்ப்பணஞ் செய்து நித்தியப்பொருளை அடைந்தவனுனேன். (கட. உப. 1. 2. 10.)

ஒ—'யை-ரேவ பதனம் த்ரவ்யை: ஸித்திஸ்-தைரேவ சோதிதா'
—குலார்ணவ தந்த்ரம்

मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु ।
मामेवैष्यसि युक्त्वैव-मात्मानं मत्परायणः ॥ ३४ ॥ ॥३७२॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे राजविद्याराजगुह्ययोगो नाम नवमोऽध्यायः ॥

மன்மனு பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு |
மாமேவைஷ்யஸி யுக்த்வைவ-மாத்மானம்
மத்பராயணः || 34 || (372)

இதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம-
வித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுன
ஸம்வாதே ராஜவித்யாராஜகுஹ்ய யோகோ
நாம நவமோऽத்யாயः ||

யமான உலகப் பொருள்களைக் கொண்டும்—(மாம்) என்னையே (பஜஸ்வ) பூஜிப்பாயாக.

34. (மன்மனு:) என்னிடம் மனத்தை வைத்தவனுகவும் (மத்பக்த:) என் பக்தனுகவும (மத்யாஜீ) என்னைப் பூஜிப்பவனுகவும் (பவ) ஆவாயாக. (மாம்) என்னையே (நமஸ்குரு) நமஸ்கரிப்பாயாக, (ஏவம்) இவ்வாறு (மத்பராயண:) என்னையே உத்தம கதியாகக் கருதி (ஆத்மானம்) உள்ளத்தை (யுக்த்வா) நிலைநிறுத்தி (மாம் ஏவ) என்னையே (ஏஷ்யஸி) வந்தடைவாய்.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திர
மாயும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும்
ஸம்பாஷணையாயும் விளங்கும் ஸ்ரீமத்
பகவத்கீதை என்னும் உபநிஷத்தில்
ராஜவித்யாராஜகுஹ்யயோகம் என்று பெயர்
பெற்ற ஒன்பதாவது அத்தியாயம் முற்றும்.

ஒ—இவ்வுலகம் அநித்தியமா? நீ ஈசுவரனை அறியாமலிருக்கும் வரையில் அநித்தியந்தான். ஏனெனில் நீ ஒவ்வொரு பொருளிலுமுள்ள ஈசுவரனைக் காண்பதில்லை. ஆகவே 'நான், எனது' என்ற மனோபாவம் உன்னிடம் ஆழ்ந்து கிடக்க நீ உலக வசத்தனாகிறாய். இவ்விதம் அஜ்ஞானத்தில் மதி மயங்கிய நீ. கட்புலப்படும் பொருள்களையே கருதுபவனாகி, மாயையாகிற ஸமுத்திரத்தில் மூழ்கிக் கொண்டே இருக்கிறாய். வழி நேராக இருப்பினும் கரையேறவொண்ணாதபடி, மாயையானது மனிதர்களுடைய கண்களை முற்றிலும் குருடாக்கி விடுகின்றது. (ரா. கி.)

அத்தியாய விஷயச் சுருக்கம்:—

விஜ்ஞானத்துடன் கூடிய பகவத் விஷய ஞானமே ராஜவித்தை. பகவான் ஆகாயத்தைப் போல் எங்கும் பரந்து பற்றற்று, எல்லாவற்றுக்கும் உள்ளிருந்தும், எல்லாவற்றையும் கடந்து நிற்பவர். மஹாப் பிரளயமும் மறுபடி சிருஷ்டியும். அதில் பகவான் ஸாக்ஷி மாத்ரம். தெய்வாஸுர ஸ்வபாவம். தெய்வ ஸ்வபாவமுடைய மஹான்கள் ஒன்றாகவும் பலவாகவும் பகவானை உபாசித்தல். பகவத்குணம், பிரபாவம், ஸ்வரூபம், யஜ்ஞாதிகளால் பெறப்படும் ஸ்வர்க்கமும் நிலையற்றது. அனன்ய பக்தியே சிறந்தது. பிற தெய்வங்களை உபாசிப்பவர்கள் விதி தவறிப் பூசித்து அல்ப பலனை அடைகிறார்கள். எல்லாக் கருமமும் பகவதர்ப்பணம் செய்தலே உத்தம மார்க்கம். இதை ஸ்திரீகள், வைசியர், சூத்திரர், எல்லோரும் அநுஷ்டித்து உத்தம கதியடையலாம். பாவிகளையும் பக்தி பாவனப்படுத்தும். உலகம், அநித்தியம். சுகமற்றது என்றுணர்ந்து பகவானையே எல்லாவற்றாலும் சரண் அடைய வேண்டும்.

பற்றற்று நிற்கும் பரம மறைப்பொருளும்
முற்றத் துறந்தார்க்கே முக்தியும்—குற்றமறு
பக்திநெறியே எவைக்கும் மேலாகும் பான்மையும்
அத்தன் அறைந்திடுவான் ஆங்கு. (கீ. வெ.)

॥ दशमोऽध्यायः ॥

(विभूतियोगः)

श्री भगवानुवाच—

भूय एव महाबाहो शृणु मे परमं वचः ।
यत्तेऽहं प्रीयमाणाय वक्ष्यामि हित-काम्यया ॥ १ ॥ ॥३७३॥

பத்தாம் அத்தியாயம்

(விபூதி யோகம்)

ஸ்ரீ பகவானுவாச—

பூய ஏவ மஹாபாஹோ ச்ருணு மே பரமம் வச: |
யத்தேऽஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹித-காம்யயா
|| 1 || (373)

ஸ்ரீ பகவான் கூறியது—

1. (மஹாபாஹோ) தோள்வலியுடையோனே! (ப்ரீயமாணாய) கேட்பதில் உள்ளம் மகிழும் (தே) உனக்கு (அஹம்) நான் (ஹிதகாம்யயா) நன்மையை விரும்பி (யத்) எதை (வக்ஷ்யாமி) கூறுகிறேனே (மே பரமம் வச:) அந்த என்னுடைய உயர்ந்த மொழியை (பூய ஏவ) மறுபடியும் (ச்ருணு) கேட்பாய்.

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்:—

விபூதி என்றால் விபுத்தன்மை, ஈசுவரசக்தி அல்லது பெருமை எனப் பொருள்படும். இவ்வத்தியாயத்தில் ஈசுவர சக்தி பொருள்கள் தோறும் வியாபித்து நிற்கும் பெருமை விளக்கிக் கூறப்படுவதால் இது விபூதியோகம் எனப் பெயர்பெற்றது.

அத். 7ல் விஜ்ஞானத்துடன் கூடிய ஞானத்தை உபதேசிப்ப தாய்க் கூறி அங்கு பகவான் சுருக்கமாகத் தன் விபூதியை எடுத்துக் கூறினர்; மேலே அத். ஒன்பதிலும் இவ்விஷயம் கூறப்பட்டது. 'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கங் கிருப்பது நீயன்றோ பராபரமே' என்றபடி உலகில் அவனையே எங்குங் காணும் பழக்கத்தைத் திடப்படுத்துவதற்காக மீண்டும்

न मे विदुः सुरगणाः प्रभवं न महर्षयः ।
अहमादिर्हि देवानां महर्षीणां च सर्वशः ॥ २ ॥ ॥३७४॥
यो मामज-मनादिं च वेत्ति लोक-महेश्वरम् ।
असंमूढः स मर्त्येषु सर्व-पापैः प्रमुच्यते ॥ ३ ॥ ॥३७५॥

ந மே விது: ஸுரகணா: ப்ரபவம் ந மஹர்ஷய: |
அஹமாதிர்-ஹி தேவானாம் மஹர்ஷீணாஞ் ச ஸர்வச:
|| 2 || (374)

யோ மாமஜ-மனாதிஞ் ச வேத்தி லோக-மஹேச்வரம் |
அஸம்மூட: ஸ மர்த்யேஷு ஸர்வபாபை: ப்ரமுச்யதே
|| 3 || (375)

---

2. (மே) என்னுடைய (ப்ரபவம்) பெருமையை (ஸுரகணா:) தேவகணங்கள் (ந விது:) உணரவில்லை; (ந மஹர்ஷய:) மஹரிஷிகளும் உணரவில்லை; (அஹம்) நான (தேவானாம்) தேவர்களுக்கும் (மஹர்ஷீணாஞ் ச) மஹரிஷிகளுக்கும் (ஸர்வச:) எல்லா வகையிலும் (ஆதி: ஹி) முதற் காரணம் அன்றோ?

3. (ய:) எவன் (அநாதிம்) ஆதியில்லாதவனும் (அஜஞ்ச) பிறப்பில்லாதவனும் (லோகமஹேச்வரம்)

அவனுடைய முக்கியமான விபூதிகளை இவ்வத்தியாயம் சற்று விரிவு படக் கூறும்.

எல்லையில்லாத தன் சீலமுமின்னமுதக் கடலும்
எல்லையில்லாத விபூதி யெல்லாந் தன தானமையும்
எல்லையில்லாத பத்தி யெழுவிக்கத் திருவருளால்
எல்லையி லீச னியம்பின னிந்திரன் மைந்தனுக்கே. (கீ. ஸ.)

1. பூய:—எளிதில் அறியப்படாத விஷயமாதலின், ஞாவ தானத்துடனும், சிரத்தையுடனும், பிரேமையுடனும் அடிக்கடி கேட்பதும், சிந்திப்பதும் அவசியம் என்பது கருத்து.

2. ப்ரபவம்—இதற்குப் 'பிறப்பு' என்று பொருள் கொள்ள லாம்.

बुद्धि-र्ज्ञान-मसंमोहः क्षमा सत्यं दमः शमः ।
सुखं दुखं भवोऽभावो भयं चाभयमेव च ॥ ४ ॥ ॥३७६॥
अहिंसा समता तुष्टि-स्तपो दानं यशोऽयशः ।
भवन्ति भावा भूतानां मत्त एव पृथग्विधाः ॥ ५ ॥ ॥३७७॥

புத்திர்-ஜ்ஞான-மஸம்மோஹ: க்ஷமா ஸத்யம் தம: சம:|
ஸுகம் து:க்கம் பவோऽபாவோ பயஞ் சாபயமேவ ச
|| 4 || (376)
அஹிம்ஸா ஸமதா துஷ்டிஸ்-தபோ தானம்
யசோऽயச: |
பவந்தி பாவா பூதானும் மத்த ஏவ ப்ருதக்-விதா:
|| 5 || (377)

உலகுக்கெல்லாம் இறைவனும் ஆகிய (மாம்) என்னை (வேத்தி) அறிகிருனே (ஸ:) அவன் (மர்த்யேஷு) மனிதர்களுள் (அஸம்மூட:) மதிமயக்கம் நீங்கியவன் (ஸர்வபாபை:) எல்லாப் பாவங்களினின்றும் (ப்ரமுச்யதே) விடுபடுகிருன்.

4. (புத்தி:) புத்தி, (ஜ்ஞானம்) ஞானம், (அஸம்மோஹ:) மதிமயக்கமின்மை, (க்ஷமா) பொறுமை, (ஸத்யம்) உண்மை (தம:) புலனடக்கம் (சம:) உள்ளத்தின் அடக்கம் (ஸுகம) இன்பம் (து:க்கம்) துன்பம் (பவ:) பிறப்பு (அபாவ:) இறப்பு (பயஞ்சாபய-மேவ ச) அச்சமும் அச்சமின்மையும் ;

5. (அஹிம்ஸா) அஹிம்சை, (ஸமதா) சமநிலை, (துஷ்டி:) போதுமென்ற மனம், (தப:) தவம், (தானம்)

அஹம் ஆதி:—ஒ—
பூர்வோ யோ தேவேப்யோ ஜாத: |
அஜாயமானே பஹுதா விஜாயதே ||
எவன் தேவர்களுக்கும் முன் பிறந்தவனே அவன் பிறக்காமலேயே அனைத்துமாய்ப் பரந்தான். (புருஷ ஸூக்தம்.)
4-5. அவரவர் கர்மானுசாரமாய் நன்மையுந் தீமையும் உயிர்

महर्षयः सप्त पूर्वे चत्वारो मनव-स्तथा ।
मद्भावा मानसा जाता येषां लोक इमाः प्रजाः ॥६॥ ॥३७८॥

மஹர்ஷய: ஸப்த பூர்வே சத்வாரோ மனவஸ் ததா |
மத்பாவா மானஸா ஜாதா யேஷாம் லோக இமா:
ப்ரஜா: || 6 || (378)

தானம், (யச:) கீர்த்தி, (அயச:) அபகீர்த்தி (ப்ருதக் வித்தா:) இவ்வாறு வெவ்வேறு விதமான (பாவா:) நிலைகள் (பூதானும்) உயிர்களுக்கு (மத்த: ஏவ) என்னிடமிருந்தே (பவந்தி) உண்டாகின்றன.

6. (லோகே) உலகில் (இமா: ப்ரஜா:) இந்த பிரஜைகள் (யேஷாம்) எவர்களிடமிருந்து வந்தனவோ

களுக்குக் கூடிவரும்படி செய்தும் அதில் எள்ளத்தனையேனும் தாக்கற நிற்கும் ஸாமர்த்தியமே பகவானுடைய **யோகம்** எனப்படும்.

ஒ—(குறள்)—

புத்தி:—எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஸத்யம்—எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

ஸமதா—சமன் செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்
தொருபால் கோடாமை சான்றோர்க்கணி.

தப:—தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார், மற்றல்லார்
அவஞ் செய்வார் ஆசையுட்பட்டு.

தானம்:—வறியார்க் கொன்றீவதே ஈகை.

முன்னவர்களான ஏழு மஹரிஷிகள்—(1) நீண்ட ஆயுள், (2) மந்திரங்களைக் காணும் சக்தி, (3) ஈசுவரத்தன்மை, (4) தெய்வீகப் பார்வை, (5) குணத்தாலும் வித்தையாலும், வயதாலும் உயர்வு (6) தருமத்தைப் பிரத்யக்ஷமாக அனுஷ்டித்துக் காட்டல், (7) கோத்ரப் பிரவர்த்தராகயிருத்தல். இவ்வேழு லக்ஷணங்களும் அமைந்தவர்கள் ரிஷிகள். இவர்களில் முக்கியமானவர்கள் ஏழு மஹரிஷிகள் ; ஒவ்வொரு மன்வந்தரத்திலும் இவர்கள் வெவ்வேருவர். இந்தக் கல்பத்தில் முதல் மன்வந்தரமான ஸ்வாயம்புவ மன்வந்தரத்

एतां विभूतिं योगं च मम यो वेत्ति तत्त्वतः ।
सोऽविकम्पेन योगेन युज्यते नात्र संशयः ॥ ७ ॥ ॥३७९॥

ஏதாம் விபூதிம் யோகஞ் ச மம யோ வேத்தி தத்வத: |
ஸோऽவிகம்பேன யோகேன யுஜ்யதே நாத்ர ஸம்சய:
|| 7 || (379)

—அந்த (பூர்வே) முன்னவர்களான (ஸப்த) ஏழு (மஹர்ஷய:) மஹரிஷிகளும், (சத்வார:) நால்வர்களும், (ததா) அவ்வாறே (மனவ:) மனுக்களும் (மத்பாவா:) என் பாவனேயால் என்னைப்போன்று சக்தி வாய்ந்தவர்கள், (மானஸா ஜாதா:) மனத்தினின்றே உதித்தவர்கள்.

7. (ய:) எவன் (மம) என்னுடைய (ஏதாம் விபூதிம்) இந்தப் பெருமையையும், (யோகஞ் ச) யோக சக்தியையும் (தத்வத:) உள்ளபடி (வேத்தி) அறிகின்ருனே, (ஸ:) அவன் (அவிகம்பேன) அசைவற்ற (யோகேன) யோகத்துடன் (யுஜ்யதே) கூடியவனுகின்ருன். (அத்ர) இதில் (ந ஸம்சய:) சந்தேகம் இல்லே.

தில் தோன்றிய ஸப்த மஹரிஷிகளே இங்கு முன்னவர்களாகக் கூறப்பட்டவர்கள்.—மரீசி, அங்கிரஸ், அத்ரி, புலஸ்தியர், புலஹர், க்ரது, வசிஷ்டர் எனும் எழுவர்.

இப்போது நடக்கும் வைவஸ்த மன்வந்தரத்திற்குரிய ஸப்த ரிஷிகள் அத்ரி, வஸிஷ்டர், விசுவாமித்திரர், ஜமதக்னி, பரத்வாஜர், கௌதமர், காசியபர்.

நால்வர்கள்—ஸனகர், ஸநந்தனர், ஸனுதனர், ஸனத்குமாரர். ஸப்தரிஷிகள் பிரவிருத்தி மார்க்கத்தைக் காட்டியதுபோல் இவர்கள் நிவிருத்தி மார்க்கத்தைக் காட்டியவர்கள். இவர்களுடைய பிரஜைகள் ஞானப்புதல்வர்கள், இவர்களுடைய வம்சம் ஞானிகளின் பரம்பரை.

மனுக்கள்—பிரம்மாவின் ஒரு பகலாகிய கல்பத்தில் 14 மனுக்கள். இப்போது நடக்கும் சுவேதவராக கல்பத்தின் மனுக்கள்:— ஸ்வாயம்புவர். ஸ்வாரோசிஷர், உத்தமர், தாமஸர், ரைவதர்,

अहं सर्वस्य प्रभवो मत्तः सर्वं प्रवर्तते ।
इति मत्वा भजन्ते मां बुधा भाव-समन्विताः ॥ ८ ॥ ॥३८०॥
मच्चित्ता मद्गत-प्राणा बोधयन्तः परस्परम् ।
कथयन्तश्च मां नित्यं तुष्यन्ति च रमन्ति च ॥९॥ ॥३८१॥

அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்
தத‌ே |
இதி மத்வா பஜந்தே மாம் புதா பாவ-ஸமன்விதா:
|| 8 || (380)
மச்சித்தா மத்கத-ப்ராணு போதயந்த: பரஸ்பரம் |
கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச
|| 9 || (381)

---

8. (அஹம்) நான் (ஸர்வஸ்ய) அனைத்துக்கும் (ப்ரபவ:) பிறப்பிடம் ; (மத்த:) என்னிடமிருந்தே (ஸர்வம்) அனைத்தும் (ப்ரவர்த்ததே) பிரவிருத்தித்து இயங்குகின்றது (இதி) என்று (மத்வா) உணர்ந்து (புதா:) புத்திமான்கள் (பாவஸமன்விதா:) எங்கும் என்னையே பாவிப்பவர்களாய் (மாம்) என்னை (பஜந்தே) பூஜிக்கின்றார்கள்.

9. (மச்சித்தா:) சித்தத்தை என்னிடம் வைத்தவர்களாய், (மத்கதப்ராணு:) என்னையே உயிர்நிலை

சாக்ஷுஷர், வைவஸ்வதர். ஸாவர்ணி, தக்ஷஸாவர்ணி, பிரம்மஸாவர்ணி, தர்மஸாவர்ணி, ருத்ரஸாவர்ணி, தேவஸாவர்ணி, இந்த்ரஸாவர்ணி எனப் பதினால்வர். இப்போது நடைபெறுவது 7-வது (வைவஸ்வத) மன்வந்தரம்.

ஒவ்வொரு மன்வந்தரத்திலும் மனு, தேவர்கள், மனு புத்திரர்கள், இந்திரன், ரிஷிகள் பகவானுடைய அம்சாவதாரம் என ஆறு இடங்களில் பகவானுடைய விபூதிகள் முக்கியமாய் விளங்கும்.
(பாகவதம் 8. 14·2.)

9. ஒ—நன்ருய் எரியும் நெருப்பில் போடப்பட்ட ஈற விறகும் சீக்கிரத்தில் உலர்ந்து எரியத் தொடங்குகிறது. அதுபோல ஸாது ஸங்கமானது உலகப்பற்றுள்ள ஜனங்களின் மனத்துள்ள பெண்

तेषां सतत-युक्तानां भजतां प्रीति-पूर्वकम् ।
ददामि बुद्धि-योगं तं येन मामुपयान्ति ते ॥१०॥ ॥३८२॥

தேஷாம் ஸதத-யுக்தானும் பஜதாம் ப்ரீதி-பூர்வகம் |
ததாமி புத்தி-யோகம் தம் யேன மாமுபயாந்தி தே
|| 10 || (382)

யாய்க் கொண்டவர்களாய் (பரஸ்பரம்) ஒருவர்க்கொருவர் (மாம்) என்னையே (போதயந்த:) போதித்துக் கொண்டும், (நித்யம்) எப்போதும் (கதயந்த: ச) என் லீலைகளையே எடுத்துரைத்துக்கொண்டும் (துஷ்யந்தி ச) திருப்தி யடைகின்றனர், (ரமந்தி ச) ஆனந்தம் எய்துகின்றனர்.

10. (ஸததயுக்தானும்) நிலைபெற்ற உள்ளம் உடையவர்களும் (ப்ரீதி பூர்வகம் பஜதாம்) அன்புடன் சேவிப்பவர்களும் ஆகிய (தேஷாம்) அவர்களுக்கு (யேன) எதனுல் (தே) அவர்கள் (மாம்) என்னை (உபயாந்தி) அடைவார்களோ (தம்) அந்த (புத்தியோகம்) புத்தியோகத்தை (ததாமி) கொடுக்கிறேன்.

ஞசை பொன்னுசையாகிற ஈரத்தை வற்றச் செய்கிறது. அப்பால் அவர்களிடம் விவேகமாகிய தீ நன்ருக எரியும். (ரா. கி.)

ஒ—உலகில் நாமனுபவிக்கும் சுகமெல்லாம் பரமானந்தத்தின் ஓர் திவலை. அதனுெளியால் உலகம் விளங்குகிறது. அப்பொருளைக் கண்டவர்க்கு மற்றதெல்லாம் அதனுள்ளே தோன்றும். (சங்கரர்.)

ஒ—'ஸ்வாத்மானந்த-லவீபூத-ப்ரஹ்மாத்யானந்த-ஸந்ததி:'
(லலிதா ஸஹஸ்ரநாமம்.)

10. **புத்தியோகம்**—பகவத் விஷயங்களைத் தெளிவுபடக் கண்டு பகவானையே நாடும் புத்தி.

तेषामेवानुकम्पार्थ-मह-मज्ञानजं तमः ।
नाशया-म्यात्मभावस्थो ज्ञान-दीपेन भास्वता ॥११॥ ॥३८३॥

अर्जुन उवाच—
परं ब्रह्म परं धाम पवित्रं परमं भवान् ।
पुरुषं शाश्वतं दिव्य-मादिदेव-मजं विभुम् ॥ १२ ॥ ॥३८४॥

தேஷாமேவாநுகம்பார்த்த-மஹ-மஜ்ஞானஜம் தம: |
நாசயாம்-யாத்மபாவஸ்தோ ஜ்ஞான-தீபேன பாஸ்வதா
|| 11 || (383)

அர்ஜுன உவாச—
பரம் ப்ரஹ்ம பரந்தாம பவித்ரம் பரமம் பவான் |
புருஷம் சாச்வதம் திவ்ய-மாதிதேவ-மஜம்-விபும்
|| 12 || (384)

---

11. (தேஷாம்) அவர்களிடம் (அனுகம்பார்த்தம் ஏவ) அருளாலேயே (அஹம்) நான் (ஆத்ம பாவஸ்த:) அவர்கள் உள்ளத்தில் நிலைபெற்று (பாஸ்வதா) பிரகாசிக்கும் (ஜ்ஞானதீபேன) ஞான தீபத்தால் (அஜ்ஞானஜம்) அஜ்ஞானத்தாலுண்டான (தம:) இருளை (நாசயாமி) நாசம் செய்கிறேன்.

அர்ஜுனன் கூறியது—

12-13. (பவான்) நீ (பரம் ப்ரஹ்ம) பரப்ரஹ்மம். (பரந்தாம) உயர்ந்த உறைவிடம் (பரமம் பவித்ரம்) சிறந்த புனிதப்பொருள்; (ஸர்வே ருஷய:) எல்லா

---

11. ஒ—"ஸ கீர்த்யமான: சீக்ரமேவ ஆவிர்ப்பவதி அனுபாவயதி பக்தான்"—பஜனை செய்யும் பக்தர்கள் உள்ளத்தில் சீக்கிரமே தோன்றி அவர்களைப் பகவான் அனுக்கிரஹிக்கிறான்.

(நாரத பக்தி ஸூத்ரம்.)

போதாந்தப் புண்ணியர்கள் போற்றிசய போற்றியெனும்
வேதாந்த வீட்டில் விளக்கே பராபரமே. (தாயுமானவர்.)

आहुस्त्वा-मृषयः सर्वे देवर्षि-र्नारद-स्तथा ।
असितो देवलो व्यासः स्वयं चैव ब्रवीषि मे ॥१३॥ ॥३८५॥

ஆஹுஸ்-த்வாம் ருஷய: ஸர்வே தேவர்ஷிர்-நாரதஸ்-
ததா |
அஸிதோ தேவலோ வ்யாஸ: ஸ்வயஞ் சைவ ப்ரவீஷி
மே || 13 || (385)

ரிஷிகளும், (தேவர்ஷி: நாரத:) தேவரிஷியான நாரதரும், (ததா) அவ்வாறே (அஸித:) அஸிதரும், (தேவல:) தேவலரும் (வ்யாஸ:) வியாஸரும் (த்வாம்) உன்னை (சாச்வதம்) என்றுமுள்ள (புருஷம்) புருஷனாகவும், (திவ்யம்) பிரகாசிக்கும் (ஆதிதேவம்) முதல் தெய்வமாகவும் (அஜம்) பிறப்பில்லாத (விபும்) கடவுளாகவும் (ஆஹு:) கூறியுள்ளார்கள், (ஸ்வயம ச ஏவ) நீயும் (மே) எனக்கு (ப்ரவீஷி) அவ்வாறே கூறுகிறாய்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகு
ஞானச்சுடர் விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான். (பூதத்தாழ்வார்.)

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்க னணி நிறமும் கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
பொன்னாழி கண்டேன்—செருக்கிளரும்
என்னாழி வண்ணன் பாலின்று. (பேயாழ்வார்.)

13. தேவரிஷிகள் யார் ?—தேவலோகத்தில் வசிக்கக் கூடியவர்களாகவும், முக்கால ஞானிகளாகவும், ஸத்ய விரதர்களாகவும், இயற்கையிலேயே பற்றற்றவர்களாயினும், இச்சாமாத்திரத்தால் உலகில் ஸம்பந்தத்தை ஏற்பவர்களாகவும், எங்கும் தடையின்றிச் செல்லக்கூடியவர்களாகவும் உள்ளவர்கள் தேவர்களாயினும் மனிதர்களாயினும் தேவரிஷிகளாவர். (வாயு புராணம் 1. 88)

தேவரிஷிகளிற் சிலர்—நரநாராயணர், வாலகில்ய ரிஷிகள், கர்த்தமர், பர்வதர், நாரதர், அஸிதர், வத்ஸரர். இவர்கள் தேவர்களையும் அடக்கியாளக் கூடியவர்கள். (வாயு புராணம் 61. 83.)

सर्वमेत-दृतं मन्ये यन्मां वदसि केशव ।
न हि ते भगवन् व्यक्तिं विदु-र्देवा न दानवाः ॥१४॥ ॥३८६॥
स्वयमेवात्मनात्मानं वेत्थ त्वं पुरुषोत्तम ।
भूतभावन भूतेश देवदेव जगत्पते ॥ १५ ॥ ॥३८७॥

ஸர்வமேதத்-ருதம் மன்யே யன்மாம் வதஸி கேசவ |
ந ஹி தே பகவன் வ்யக்திம் விதுர்-தேவா ந தானவா:
|| 14 || (386)
ஸ்வயமேவாத்மனாத்மானம் வேத்த த்வம்
புருஷோத்தம |
பூதபாவன பூதேச தேவதேவ ஜகத்பதே || 15 || (387)

---

14. (கேசவ) கேசவா! (மாம்) எனக்கு (யத்) எதை (வதஸி) கூறுகிருயோ (ஏதத் ஸர்வம்) அது அனைத்தையும் (ருதம்) உண்மை என்று (மன்யே) உணர்கின்றேன் (ஹி) எனினும் (பகவன்) பகவானே! (தே) உன்னுடைய (வ்யக்திம்) வடிவத்தை (தேவா:) தேவர்களும் (ந விது:) உணர்ந்தவர்களல்லர்; (ந தானவா:) அசுரர்களும் உணர்ந்தவர்களல்லர்.

15. (புருஷோத்தம) புருஷோத்தமா! (பூதபாவன) உலகப்படைப்போனே! (பூதேச) உலக நாய

பிரம்மவித்துக்களான அஸிதரும் வத்ஸரரும் கசியபருடைய புத்ரர்கள். அஸிதருடைய புத்ரர் யோகாசாரியரும் மஹா தபஸ்வியுமான தேவலர்.

14. உற்பத்தியும் பிரளயமும், பிராணிகளின் பிறப்பும் இறப்பும், வித்தையும் அவித்தையும் எவன் அறிந்தவனே அவனுக்கு 'பகவான்' எனும் பெயர் பொருந்தும்.

ந ஹி தே பகவன் வ்யக்திம் விது:—

பீஷ்மர் அம்புப் படுக்கையின்மேல் கிடக்கையில் பாண்டவர்கள் கிருஷ்ணனுடன் அவரைக் காண வந்தனர். அப்போது அவர்

वक्तुमर्ह-स्यशेषेण दिव्या ह्यात्म-विभूतयः ।
याभि-र्विभूतिभि-र्लोका-निमांस्त्वं व्याप्य तिष्ठसि ॥१६॥

வக்து-மர்ஹஸ்-யசேஷேண திவ்யா-ஹ்யாத்மவிபூதய: |
யாபிர்-விபூதிபிர்-லோகா-னிமாம்ஸ்த்வம் வ்யாப்ய
திஷ்டஸி || 16 || (388)

கனே ! (தேவதேவ) தேவர்களின் தெய்வமே ! (ஜகத்பதே) உலகை ஆள்வோனே ! (த்வம்) நீ (ஸ்வயம் ஏவ) நீயாகவே (ஆத்மனு) உன்னல் (ஆத்மானம்) உன்னை (வேத்த) அறிகின்ருய்.

16. (யாபி:) எந்தெந்த (விபூதிபி:) விபூதிகளால் (த்வம்) நீ (இமான் லோகான்) இவ்வுலகங்களை (வியாப்ய) வியாபித்து (திஷ்டஸி) நிற்கின்ருயோ, (திவ்யா:) திவ்யமான (ஆத்ம விபூதய:) அந்த உன் விபூதிகளை (அசேஷேண) குறையின்றி (வக்தும்) எனக்கு உரைப்பதற்கு (அர்ஹஸி ஹி) நீ உரியவன் அன்ருே?

கண்களில் நீர் ததும்பக் கண்ட அர்ஜுனன், "கண்ணு! இது என்ன விந்தை! அஷ்ட வசுக்களில் ஒருவரும், மஹா ஞானியும், நிகரற்ற வீரரும் ஆகிய நமது பாட்டனர் பீஷ்மரே மாயையினுட்பட்டு சாகுந் தருணத்தில் கண்ணீர் விட்டு மனங்கலங்குகின்ருரே!" என்ருன். இதையுணர்ந்த பீஷ்மர், "கண்ணு! நான் அதற்காக அழவில்லை என்பது உனக்குத் தெரியும். நீயே சாரதியாகவும் தோழனுகவும் உடனிருந்தும் இவர்களுடைய துன்பத்துக்கு முடிவில்லையே என்று நினைக்கவும், உன்னுடைய லீலைகளை எவரே அறியவல்லர் என்ற எண்ணந் தோன்றி என் கண்களில் நீர் ததும்பியது" என்ருர்.

(ரா. கி.)

16. ஒவ்வொரு பொருளிலும் உள்ள தெய்வீக சக்தி 'விபூதி' எனப்படும்.

कथं विद्या-महं योगिंस्त्वां सदा परिचिन्तयन् ।
केषु केषु च भावेषु चिन्त्योऽसि भगवन् मया ॥१७॥ ॥३८९॥
विस्तरेणात्मनो योगं विभूतिं च जनार्दन ।
भूयः कथय तृप्तिर्हि शृण्वतो नास्ति मेऽमृतम् ॥१८॥ ॥३९०॥

கதம்-வித்யா-மஹம் யோகின்ஸ்த்வாம் ஸதா:பரிசிந்தயன் ||
கேஷு கேஷு ச பாவேஷு சிந்த்யோऽஸி பகவன் மயா || 17 || (389)

விஸ்தரேணாத்மனோ யோகம் விபூதிஞ் ச ஜனார்த்தன |
பூய: கதய த்ருப்திர்-ஹி ச்ருண்வதோ நாஸ்தி மேऽம்ருதம் || 18 || (390)

---

17. (யோகின்) யோகியே! (ஸதா) எப்போதும் (பரிசிந்தயன்) ஆழ்ந்து சிந்தித்து (அஹம்) நான் (கதம்) எங்ஙனம் (த்வாம்) உன்னை (வித்யாம்) அறிதல் வேண்டும்? (ச) மேலும் (பகவன்) பகவானே, (மயா) என்னால் (கேஷு கேஷு) எந்தெந்த (பாவேஷு) வஸ்துக்களில் (சிந்த்ய:) சிந்தித்தற்குரியவனாக (அஸி) நீ உளாய்?

18. (ஜனார்த்தன) ஜனார்த்தன! (ஆத்மன:) உன்னுடைய (யோகம்) யோக சக்தியையும் (விபூதிஞ்ச) விபூதியையும் (விஸ்தரேண) விரிவாக (பூய:) மறுபடியும் (கதய) கூறுவாய். (ஹி) ஏனெனில், (அம்ருதம்) அமுதத்தை (ச்ருண்வத:) செவியாற் பருகும் (மே) எனக்கு (த்ருப்தி:) திருப்தி (ந அஸ்தி) உண்டாகவில்லை.

श्रीभगवानुवाच—

हन्त ते कथयिष्यामि दिव्या ह्यात्म-विभूतयः ।

प्राधान्यतः कुरुश्रेष्ठ नास्त्यन्तो विस्तरस्य मे ॥१९॥ ॥३९१॥

अहमात्मा गुडाकेश सर्वभूताशय-स्थितः ।

अह-मादिश्च मध्यं च भूताना-मन्त एव च ॥ २० ॥ ॥३९२॥

ஸ்ரீபகவானுவாச—

ஹந்த தே கதயிஷ்யாமி திவ்யா ஹ்யாத்ம-விபூதய: |
ப்ராதான்யத: குருச்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே || 19 || (391)

அஹமாத்மா குடாகேச ஸர்வபூதாசய-ஸ்தித: |
அஹமாதிச்ச மத்யஞ் ச பூதாநு-மந்த ஏவ ச || 20 || (392)

ஸ்ரீ பகவான் கூறியது—

19. (ஹந்த குரு ச்ரேஷ்ட) நன்று! குருசிரேஷ்டா! (தே) உனக்கு (திவ்யா:) தெய்வத்தன்மை விளங்கும் (ஆத்மவிபூதய:) என் விபூதிகளை (ப்ராதான்யத:) முக்கியமானவற்றை எடுத்து (கதயிஷ்யாமி) கூறுகிறேன்; (மே) என்னுடைய விபூதிகளின் (விஸ்தரஸ்ய) விரிவுககு (அந்த:) எல்லை (ந அஸ்தி ஹி) இல்லை அன்றோ?

20. (குடாகேச) குடாகேசா! (அஹம்) நான் (ஸர்வபூதாசய ஸ்தித:) எல்லாப் பிராணிகளின் இருதயத்திலும உள்ள (ஆத்மா) ஆத்மா; (பூதாநும்) பிராணிகளின் (ஆதி: ச) ஆதியும் (மத்யஞ்ச) நடுவும் (அந்த: ச) முடிவும் (அஹம் ஏவ) நானே.

---

20. அஹமாத்மா—

ஒ—வானுதி நீயெனவே வைத்த மறை என்னையு நீ
தானுகச் சொல்லாதோ? சாற்றுய் பராபரமே.

(தாயுமானவர்.)

आदित्याना-महं विष्णु-र्ज्योतिषां रवि-रंशुमान् ।
मरीचि-र्मरुता-मस्मि नक्षत्राणा-महं शशी ॥ २१ ॥ ॥३९३॥

ஆதித்யாநா-மஹம் விஷ்ணுர்-ஜ்யோதிஷாம் ரவி-ரம்சுமான் |
மரீசிர்-மருதா-மஸ்மி நக்ஷத்ராணா-மஹம் சசீ || 21 || (393)

---

21. (அஹம்) நான் (ஆதித்யாநாம்) ஆதித்தியர்களுக்குள் (விஷ்ணு:) விஷ்ணு ; (ஜ்யோதிஷாம்) பிரகாசிக்கும் பொருள்களுள் (அம்சுமான்) கிரணங்களுடன் கூடிய (ரவி:) சூரியன்: (மருதாம்) மருத்தேவதைகளுள் (மரீசி: அஸ்மி) மரீசியாக இருக்கிறேன், (நக்ஷத்ராணாம்) நக்ஷத்திரங்களினிடையே (அஹம்) (சசீ) சந்திரன்.

ஒ—சாணினுமுள னோர் தன்மை அணுவினைச்சத கூறிட்ட
கோணினுமு ளன் மாமேருக்குன்றினுமுள னின்னின்ற
தூணினுமுளன் முன்சொன்ன சொல்லிலுமுளன் இத்தன்மை
காணுதி விரைவில் என்றான். (ப்ரஹ்லாதன்.)

21. கசியபருக்கு அதிதி தேவியிடம் புத்ரர்கள் பன்னிருவர்—தாதா, மித்ரன், அர்யமா, இந்திரன், வருணன், அம்சன், பகன், விவஸ்வான் (சூரியன்), பூஷா, ஸவிதா, த்வஷ்டா, விஷ்ணு. கடைசி புத்ரனான விஷ்ணு குணத்திற் சிறந்தவன்.

(ம. பா. ஆதி. 65. 25-26.)

கசியபருக்கு திதி தேவியிடம் புத்ரர்கள் 49 பேர் மருதக் கணங்கள். திதி தேவியின் மற்ற புத்ரர்கள் அசுர ஸ்வபாவமுடையவர்கள். மருத்துக்கள் தேவர்களாயினர். அவர்களுட் சிறந்தவன் மரீசி.

वेदानां सामवेदोऽस्मि देवाना-मस्मि वासवः ।
इन्द्रियाणां मनश्चास्मि भूताना-मस्मि चेतना ॥२२॥ ॥३९४॥

रुद्राणां शङ्करश्चास्मि वित्तेशो यक्ष-रक्षसाम् ।
वसूनां पावक-श्चास्मि मेरुः शिखरिणा-महम् ॥२३॥ ॥३९५॥

வேதாஞம் ஸாமவேதோऽஸ்மி தேவாஞ-மஸ்மி வாஸவ: |
இந்த்ரியாணும் மனச்-சாஸ்மி **பூ**தாஞ-மஸ்மி சேதஞ || 22 || (394)

ருத்ராணும் சங்கரச்-சாஸ்மி வித்தேசோ யக்ஷ-ரக்ஷஸாம் |
வஸூஞம் பாவகச்-சாஸ்மி மேரு: சிகரிஞ மஹம் || 23 || (395)

---

22. (வேதாஞம்) வேதங்களுள் (ஸாமவேத: அஸ்மி) ஸாம வேதமாய் இருக்கிறேன்; (தேவாஞம்) தேவர்களுள் (வாஸவ: அஸ்மி) இந்திரஞய் இருக்கிறேன்; (இந்த்ரியாணும) இந்திரியங்களுள் (மன: ச அஸ்மி) மனதாயிருக்கிறேன்; (**பூ**தாஞம) பிராணிகளிடம் (சேதஞ அஸ்மி) அறிவாயிருக்கிறேன்.

23. (ருத்ராணும்) ருத்திரர்களுள் (சங்கர: ச அஸ்மி) சங்கரஞக உளேன்; யக்ஷ ரக்ஷஸாம்) யக்ஷர் ராக்ஷஸர்களுக்குள் (வித்தேச:) குபேரஞகவும்;

---

22. **இந்திரியங்கள்**—ஞானேந்திரியங்கள் 5—கண். காது, மூக்கு, நாக்கு, மெய். கருமேந்திரியங்கள் 5—வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம். மனது 1. ஆக 11 இந்திரியங்கள்.

தேவர்கள்—முப்பத்துமூவர்; 1 பிரம்மா, 11 ருத்ரர், 12 ஆதித்யர், 8 வசுக்கள், 1 இந்திரன்.

23 **ருத்ரர்கள் பதிஞெருவர். (பிரம்மாவின் நெற்றிக் கண்ணில் உதித்தவர்கள்)**—ஹரன், பஹுரூபன், த்ரியம்பகன்,

पुरोधसां च मुख्यं मां विद्धि पार्थ बृहस्पतिम् ।
सेनानीना-महं स्कन्दः सरसा-मस्मि सागरः ॥२४॥ ॥३९६॥

புரோதஸாஞ் ச முக்யம் மாம் வித்தி பார்த்த ப்ருஹஸ்
பதிம் ||

ஸேனானீனா-மஹம் ஸ்கந்த: ஸரஸா-மஸ்மி ஸாகர:
|| 24 || (396)

(அஹம்) நான் (வஸூனாம்) வசுக்களுக்குள் (பாவக: ச) அக்னியாகவும் (சிகரிணாம்) சிகரம் பெருந்தியமலைகளுக்குள் (மேரு:) மேருவாகவும் (அஸ்மி) இருக்கிறேன்.

24. (பார்த்த) பார்த்தா! (மாம்) என்னை (புரோதஸாஞ் ச) புரோகிதர்களுக்குள் (முக்யம்) முக்கியமான (ப்ருஹஸ்பதிம்) பிருகஸ்பதியாக (வித்தி) அறிவாய்; (ஸேனானீனாம்) சேனாதிபதிகளுக்குள் (அஹம்) நான் (ஸ்கந்த:) முருகன்; (ஸரஸாம்) நீர் நிலைகளுள் (ஸாகர:) சமுத்திரமாக (அஸ்மி) உளேன்.

அபராஜிதன், வ்ருஷாகபி, சம்பு, கபர்த்தீ, ரைவதன், ம்ருகவ்யாதன், சர்வன், கபாலி, இவர்களுள் முக்கியமாய் சம்புமூர்த்தியே சங்கரன், மங்களரூபி, மங்களங்களை யளிப்பவன். (ஹரிவம்சம் 1. 3. 51.)

யக்ஷரக்ஷஸாம்—புலஸ்திய ரிஷியின் புத்ரர்கள்—அகஸ்தியர், விச்ரவஸ். விச்ரவஸ்ஸுக்கு ஒரு மனைவியிடம் யக்ஷர்களுக்குப் பதியாகிய குபேரனார், இன்னொரு ராக்ஷஸ மனைவியிடம் ராவணன், கும்பகர்ணன், விபீஷணனும் புத்ரர்கள். (பாக. 10. 10.)

அஷ்டவஸுக்கள்—பிரம்ம புத்ரராகிய தர்மர், தக்ஷன் குமாரியாகிய வசுதேவியிடம் பெற்ற பிள்ளைகள் இவர்கள்—தரன், துருவன், ஸோமன், அஹஸ், வாயு, அக்னி, ப்ரத்யுஷன், ப்ரபாஸன். அக்னி அஷ்டவசுக்களில் சிறந்தவன்.

24. ப்ருஹஸ்பதி—அங்கிரஸ மஹரிஷியின் புத்ரர். தேவேந்திரனுடைய புரோகிதர், தேவர்களுக்கெல்லாம் குரு.

महर्षीणां भृगु-रहं गिरा-मस्म्येक-मक्षरम् ।
यज्ञानां जप-यज्ञोऽस्मि स्थावराणां हिमालयः ॥२५॥ ॥३९७॥
अश्वत्थः सर्ववृक्षाणां देवर्षीणां च नारदः ।
गन्धर्वाणां चित्ररथः सिद्धानां कपिलो मुनिः ॥२६॥ ॥३९८॥

மஹர்ஷீணும் ப்ருகு-ரஹம் கிரா-மஸ்ம்யேக-மக்ஷரம் |
யஜ்ஞாஞம் ஜபயஜ்ஞோ஽ஸ்மி ஸ்தாவராணும்
ஹிமாலய: || 25 || (397)
அச்வத்த: ஸர்வவ்ருக்ஷாணும் தேவர்ஷீணுஞ் ச
நாரத: ||
கந்தர்வாணும் சித்ரரத: ஸித்தாஞம் கபிலோ முனி:
|| 26 || (398)

---

25. (அஹம்) நான் (மஹர்ஷீணும்) மகரிஷிகளுக்குள் (ப்ருகு:) பிருகுவாகவும் (கிராம்) சொற்களில் (ஏகம அக்ஷரம்) ஓரெழுத்து வடிவான ஓங்காரமாகவும் (அஸ்மி) இருக்கிறேன்; (யஜ்ஞாஞம்) யஜ்ஞங்களில் (ஜபயஜ்ஞ:) ஜபயக்ஞமாகவும் (ஸ்தாவராணும்) அசையாப் பொருள்களில் (ஹிமாலய:) இமயமலையாகவும் (அஸ்மி) இருக்கிறேன்.

26. (ஸர்வவ்ருக்ஷாணும்) மரங்களனைத்துள்ளும் (அச்வத்த:) அரசமரம்; (தேவர்ஷீணும்) தேவரிஷிகளுக்குள் (நாரத:) நாரதர்; (ச) மேலும் (கந்தர்வாணும்) கந்தர்வர்களுக்குள் (சித்ரரத:) சித்ரரதன்; (ஸித்தாஞம்) சித்தர்களுள் (கபிலோமுனி:) கபிலமுனி.

---

25. ப்ருகு—முன்னவர்களான ஸப்த மஹரிஷிகளுள் முக்யமானவர்.

26. கந்தர்வர்கள்—தேவர்களில் ஒரு வகையார். ஆடல் பாடல்களில் சிறந்தவர்கள்.

ஸித்தர்கள்—அணிமாதி அஷ்ட மகா சித்திகளைப் பெற்றதுடன், தருமம், ஞானம், வைராக்கியம் நிறைபப் பெற்றவர்கள்.
(பா க. 3. 24.)

उच्चैःश्रवस-मश्वानां विद्धि माममृतोद्भवम् ।
ऐरावतं गजेन्द्राणां नराणां च नराधिपम् ॥ २७ ॥ ॥३९९॥

आयुधाना-महं वज्रं धेनूना-मस्मि कामधुक् ।
प्रजनश्चास्मि कन्दर्पः सर्पाणा-मस्मि वासुकिः ॥ २८ ॥॥४००॥

உச்சை: ச்ரவஸ-மச்வாநாம் வித்தி மாமம்ருதோத்பவம்||
ஐராவதம் கஜேந்த்ராணும் நராணுஞ் ச நராதிபம்
|| 27 || (399)

ஆயுதாநா-மஹம் வஜ்ரம் தேனூநா-மஸ்மி காமதுக் |
ப்ரஜனச்-சாஸ்மி கந்தர்ப்ப: ஸர்ப்பாணா-மஸ்மி வாஸுகி:
|| 28 || (400)

---

27. (அச்வாநாம்) குதிரைகளுள் (அம்ருதோத் பவம்) அமுதத்துடனுதித்த (உச்சை: ச்ரவஸம்) உச்சைசிரவஸமாகவும் (கஜேந்த்ராணும்) சிறந்த யானைகளுள் (ஐராவதம) ஐராவதமாகவும் (நராணும்) மனிதர்களுள் (நராதிபம் ச) அரசனுகவும் (மாம) என்னை (வித்தி) அறி.

28. (ஆயுதாநாம்) ஆயுதங்களுக்குள் (அஹம்) நான் (வஜ்ரம்) வஜ்ராயுதமாகவும் (தேனூநாம்) பசுக்

---

27. ஐராவதமும், உச்சைச்ரவசைப்போல், பாற்கடலைக் கடைந்த போது உண்டானதே. அது தேவேந்திரனுடைய வாகனமாயிற்று.

நராதிபன்—தருமமாய்ப் பிரஜைகளைப் பரிபாலிக்கும் அரசன் விஷ்ணுவின் அம்சம் பொருந்தியவன் என்பது சாஸ்திரம். இப்பதம் மனுவைக் குறிப்பதாயுங் கொள்ளலாம்.

28. வஜ்ரம்—ததீசி முனிவர் தேவர்களிடம் கருணை கொண்டு தபோமயமான தன் சரீரத்தை அவர்களுக்காகத் தியாகம் செய்தார். அவருடைய முதுகெலும்பால் அமைந்தது இந்திரனுடைய வஜ்ராயுதம். அதனுல் அது ஆயுதங்களுக்குள் சிறந்ததாயிற்று.
(பாக. 6. 11, 19-20.)

अनन्तश्चास्मि नागानां वरुणो यादसामहम् ।
पितॄणामर्यमा चास्मि यमः संयमता-महम् ॥२९॥ ॥४०१॥

அனந்தச்சாஸ்மி நாகானும் வருணே யாதஸா-மஹம் |
பித்ருணு-மர்யமா சாஸ்மி யம: ஸம்யமதா-மஹம்
|| 29 || (401)

களுக்குள் (காமதுக்) காமதேனுவாகவும் (அஸ்மி) இருக்கிறேன் ; (ப்ரஜன:) உற்பத்தியைச் செய்யும் (கந்தர்ப்ப: ச) காமதேவனுகவும் (அஸ்மி) இருக்கிறேன்; (ஸர்ப்பாணும்) ஸர்ப்பங்களுக்குள் (வாஸுகி:) வாசுகியாக (அஸ்மி) இருக்கிறேன்.

29. (நாகானும்) நாகப் பாம்புகளுக்குள் (அனந்த: ச அஸ்மி) ஆதிசேஷனுக இருக்கிறேன் ; (யாதஸாம்) நீர்வாழும் உயிர்களுள் (அஹம்) நான் (வருண:) (பித்ருணும்) பிதிரர்களுள் (அர்யமா ச) அர்யமாவாகவும் (ஸம்யமதாம்) தண்டித்து அடக்குபவருள் (யம:) யமனுகவும் (அஹம் அஸ்மி) நான் இருக்கிறேன்.

ஓ—அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு. (குறள்.)

காமதேனுவும் பாற்கடலிலிருந்து அமுதத்துடன் உதித்தது. தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் விரும்பிய பொருளெல்லாம் அளிக்கும் சக்தியுடையது.

ப்ரஜன:—'ப்ரஜாயை க்ருஹமேதினும்' என்றபடி ஸத்ஸந்தானத்திற்காக மட்டும் கிருஹஸ்தாசிரமத்தில் காமம், இந்திரிய நுகர்ச்சிக்காக அன்று, என உணர்ந்து வாழும் இல்வாழ்க்கையும் ஒரு யக்ஞம் எனப்படும். அது இந்திரிய ஜயத்துக்கு அனுகூலமாகக் கருதப்படும். (ஓ—கீ. **7-11.**)

வாஸுகி—அமுதங் கடையும்போது வாசுகி நாணுக அமையும் பெருமை பெற்றது. ஸர்ப்பங்களின் ராஜா.

29. ஆதிசேஷன்—ஓ—

சென்ருற் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்ருல் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணி விளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற் கரவு. (பொய்கையாழ்வார்)

प्रह्लादश्चास्मि दैत्यानां कालः कलयता-महम् ।
मृगाणां च मृगेन्द्रोऽहं वैनतेयश्च पक्षिणाम् ॥ ३० ॥ ॥४०२॥

ப்ரஹ்லாதச்சாஸ்மி தைத்யாநாம் கால: கலயதா-
மஹம் !
ம்ருகாணாஞ் ச ம்ருகேந்த்ரோऽஹம் வைநதேயச்ச
பக்ஷிணாம் || 30 || (402)

---

30. (தைத்யாநாம்) திதி வம்சத்தவருள் (ப்ரஹ்லாத: ச) ப்ரஹ்லாதனாகவும், (கலயதாம்) கணக்கிடுபவர்களிடம் (கால:) காலமாகவும் (அஹம் அஸ்மி) நான் இருக்கிறேன்; (ம்ருகாணாம்) மிருகங்களுக்குள் (ம்ருகேந்த்ர: ச) சிங்கமும் (பக்ஷிணாம்) பறவைகளுக்குள் (வைநதேய: ச) கருடனும் (அஹம்) நானே.

இராமாவதாரத்தில் லக்ஷ்மணரும், கிருஷ்ணாவதாரத்தில் பலராமரும் ஆதிசேஷனுடைய அம்சமே.

வருணன்—ஸமுத்ரராஜன். எட்டு திக்பாலகர்களில் ஒருவன்.

அர்யமா—பித்ருககள் ஏழுவகை:—கவ்யவாஹன். அனலன், ஸோமன், யமன், அர்யமா, அக்னிஷ்வாத்தா, பர்ஹிஷத். பின் மூவரும் அரூபிகளெனப்படுவர்.

யம:—இந்த மன்வந்தரத்தில் இவர் விவஸ்வானுடைய புத்ரராகிய வைவஸ்வதர். நல்லோர்களிடம் அறக்கருணையும், தீயோர்களிடம் மறக்கருணையும் காட்டுபவர். நசிகேதசுக்குப் பரம கருணையுடன் இவர் ஆத்ம ஞானமளித்தது கடோபநிஷத்தில் காணப்படும். இவர் தருமத்தை நிலைநாட்டும் லோக பாலருள் ஒருவர். ஞானத்திலும், கருமத்திலும், பக்தியிலும் சிறப்பு வாய்ந்தவர்.

30. **தைத்யர்கள்:**—கசியபருக்கு திதி தேவியிடம் பிறந்த புத்திரர்களின் வம்சம். (ஹிரண்யகசிபு, ஹிரண்யாக்ஷன் முதலிய அசுரர்கள் பரம்பரை.) இவ்வம்சததில் சிறந்தவன் பரமபாகவதனான பிரஹ்லாதன்.

வைனதேயன்:—தாயின் பெயர் வினதை (தக்ஷன் புத்ரி). அதனால் வைனதேயன் என்று பெயர். பகவானுடைய வாஹனம்; தேவஸ்வரூபியாக வர்ணிக்கப்பட்டவர்.

ஒ—**தாஸ: ஸகா வாஹனமாஸனம் த்வஜோ**
யஸ்தே விதானம் வ்யஜனம் த்ரயீமய: || **(ஆளவந்தார்)**

पवनः पवतामस्मि रामः शस्त्रभृता-महम् ।
झषाणां मकरश्चास्मि स्रोतसामस्मि जाह्नवी ॥ ३१ ॥ ॥४०३॥
सर्गाणा-मादि-रन्तश्च मध्यं चैवाह-मर्जुन ।
अध्यात्मविद्या विद्यानां वादः प्रवदता-महम् ॥३२॥ ॥४०४॥

பவன: பவதாமஸ்மி ராம: சஸ்த்ரப்ருதா மஹம் |
ஜ்ஜஷாணும் மகரச்சாஸ்மி ஸ்ரோதஸா-மஸ்மி
ஜாஹ்னவீ || 31 || (403)

ஸர்க்காணு மாதி-ரந்தச்ச மத்யஞ் சைவாஹ-மர்ஜுன |
அத்யாத்மவித்யா வித்யாணும் வாத: ப்ரவததா-மஹம்
|| 32 || (404)

---

31. (பவதாம்) சுத்தம் செய்யும் பொருள்களுள் (பவன:) காற்றுகவும், (சஸ்த்ரப்ருதாம்) ஆயுதம்பிடித்தவருள் (ராம:) ராமனுகவும் (அஹம் அஸ்மி) நான் உளேன்; (ஜஷாணும) மீன் வகைகளில் (மகர: ச அஸ்மி) மகரமாயுளேன்; (ஸ்ரோதஸாம்) ஆறுகளுள் (ஜாஹ்னவீ) கங்கையாக (அஸ்மி) உளேன்,

32. (ஸர்க்காணும்) சிருஷ்டிகளின் (ஆதி:) அடியும் (அந்த: ச) முடிவும் (மத்யஞ்ச) நடுவும் (அஹமேவ) நானே; (அர்ஜுன) அர்ஜுனு! (வித்யாணும்) வித்தை

---

31. **பவதாம்**—இப்பதத்திற்கு 'வேகமுடையவர்களுக்குள்' என்று சிலர் பொருள் கூறுவர்.

ஜான்ஹவீ—ஸதீதேவி தக்ஷயாகத்தில் தன் சரீரத்தை விட்ட பின் தேவர்கள் பிரார்த்தனைக்கிரங்கி மறுபடி ஹிமவானுக்கும் மேனகைக்கும் புத்ரியாக இரண்டு வடிவங்களில் அவதரிப்பதாய் வாக்களித்தாள். ஒரு வடிவம் ஸாகாரமூர்த்தி 'பார்வதி': மற்றொரு வடிவம் அருவுருவம் (அந்தர்த்தானும்ச-பாகேன ஸ்திதா ப்ரஹ்ம கமண்டலௌ); பிரம்மாவின் கமண்டுலுவில் இருந்து நீர் வடிவம் பெற்று ஸ்வர்க்கம், அந்தரிக்ஷம், பூலோகம் ஆகிய மூவுலகையும் பாவனமாக்கிக் கொண்டு பாய்ந்தாள். ஜன்ஹுமஹரிஷி ஆசிரமத்தில்

अक्षराणा-मकारोऽस्मि द्वन्द्वः सामासिकस्य च ।
अहमेवाक्षयः कालो धाताहं विश्वतो-मुखः ॥ ३३ ॥ ॥४०५॥

அக்ஷராணு-மகாரோऽஸ்மி த்வந்த்வ: ஸாமாஸிகஸ்ய ச|
அஹமேவாக்ஷய: காலோ தாதாஹம் விச்வதோ-முக:
|| 33 || (405)

களுக்குள் (அத்யாத்மவித்யா) அத்தியாத்ம வித்தையும் (ப்ரவததாம்) வாதஞ் செய்வோரிடம் (வாத:) வாதமும் (அஹம) நானே.

33. (அக்ஷராணும்) எழுத்துக்களுக்குள் (அகார:) அகாரமாகவும் (ஸாமாஸிகஸ்ய) ஸமாஸங்களுக்குள் (த்வந்த்வ: ச) துவந்துவமாகவும் (அஸ்மி) இருக்கிறேன்; (அக்ஷய: கால:) அழிவில்லாத காலமும் (அஹமேவ) நானே; (விச்வதோமுக:) எங்கும் முகமுள்ளவனும் (தாதா) கருமபலனை அளித்துக் காப்பவனும் (அஹம்) நானே.

பாய்ந்து அவர் ஆசமனம் செய்து பின் அவர் விட மேலே பாய்ந்து சென்றதால் 'ஜான்ஹவீ' என்ற காரணப் பெயர்.
(ப்ருஹத்தர்ம புராணம்: மத்திய காண்டம் 12.)

32. **அத்யாத்ம வித்தை**—ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வ வேதம், சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜோதிஷம் முதலியன அபர வித்தை; அக்ஷரப்பொருள் எதனுலுணரப்படுமோ அது பரவித்தை அல்லது அத்தியாத்ம வித்தை. (மு. உப. 1. 5.)

வாதம்—தர்க்கம் மூவகைப்படும். நியாயத்தைக் கவனியாமல் தன் பக்ஷத்தையே பேசுதல் 'ஜல்பம்': பிறன் பக்ஷத்தையே முக்கியமாய்க் கண்டித்துப் பேசுதல் 'விதண்டை': கோபத்துக்கும் துவேஷத்துக்கும் இடங்கொடாமல் பக்ஷபாதமின்றி நியாயத்தை விசாரித்தல் **வாதம்**.

33. **த்வந்த்வ ஸமாஸம்**—சொற்களின் புணர்ச்சி ஸம்ஸ்கிருதத்தில் நான்கு வகை. (1) அவ்யயீ (உ-ம் அதிஹரி), (2) தத்புருஷ (ஸீதாபதி:), (3) பஹுவ்ரீஹி (பீதாம்பர:), (4) த்வந்த்வ (ராமலக்ஷ்மணௌ). த்வந்த்வ ஸமாஸத்தில் புணரும் பதங்கள் இரண்டும் ஸமப்ரதானம்.

मृत्युः सर्वहर-श्चाह-मुद्भवश्च भविष्यताम् ।
कीर्तिः श्रीर्वाक्च नारीणां स्मृति-र्मेधा धृतिः क्षमा ॥ ३४ ॥
बृहत्साम तथा साम्नां गायत्री छन्दसा-महम् ।
मासानां मार्गशीर्षोऽह-मृतूनां कुसुमाकरः ॥ ३५ ॥ ॥४०७॥

ம்ருத்யு: ஸர்வஹரச்சாஹ-முத்பவச்ச பவிஷ்யதாம் |
கீர்த்தி: ஶ்ரீர்-வாக் ச நாரீணும் ஸ்ம்ருதிர்-மேதா த்ருதி: க்ஷமா || 34 || (406)

ப்ருஹத்ஸாம ததா ஸாம்னும் காயத்ரீ ச்சந்தஸா-மஹம் |
மாஸானும் மார்க்கசீர்ஷோऽஹம் ருதூனும் குஸுமாகர: || 35 || (407)

---

34. (ஸர்வஹர:) அனைத்தையும் கவரும் (ம்ருதியு: ச)மரணமும், (பவிஷ்யதாம்) தோன்றுபவைகளின் (உத்பவம் ச) உற்பவமும் (அஹம்) நானே; (நாரீணும்) ஸ்திரீகளுக்குள் (ஶ்ரீ:) லக்ஷ்மியும் (வாக் ச) வாக்கு தேவதையான ஸரஸ்வதியும் (கீர்த்தி:) கீர்த்தி (ஸம்ருதி:) ஞாபக சக்தி (மேதா) புத்தி சக்தி (த்ருதி:) திடசித்தம் (க்ஷமா) பொறுமை—இவற்றிற்கு அதிஷ்டான தேவதைகளும்—(அஹம்) நானே.

35. (அஹம்) நான் (ததா) அவ்வாறே (ஸாம்னும்) ஸாமகானங்களில் (ப்ருஹத்ஸாம) பிருஹத்ஸாமம், (ச்சந்தஸாம்) சந்தங்களுக்குள் (காயத்ரீ) காயத்ரீ;

காலம் ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தி போல் மூன்று வகை- (1) ஸ்தூலம், விகிருதியாகி நாம் அறிவது (2) ஸூக்ஷ்மம், மஹாப்ரளயத்தில் ஸாம்யாவஸ்தை, பிரகிருதிமயம் (3) பிரகிருதிமயமான காலமும் எவனிடத்தில் ஒடுங்குமோ அந்த ஸர்வகாரண காலஸ்வரூபியான பகவான் ‘அக்ஷய: கால:’.

34. உத்பவச்ச பவிஷ்யதாம்—‘மங்களங்களை எய்துவோரின் ஏற்றமும் என்றும் பொருள்படும்.

द्यूतं छलयता-मस्मि तेज-स्तेजस्विना-महम् ।
जयोऽस्मि व्यवसायोऽस्मि सत्त्वं सत्त्ववता-महम्॥३६॥ ॥४०८॥
वृष्णीनां वासुदेवोऽस्मि पाण्डवानां धनञ्जयः ।
मुनीनामप्यहं व्यासः कवीना-मुशना कविः ॥३७॥ ॥४०९॥

த்யூதம் ச்சலயதா-மஸ்மி தேஜஸ் தேஜஸ்விஞ-மஹம் |
ஜயோऽஸ்மி வ்யவஸாயோऽஸ்மி ஸத்வம் ஸத்வவதா-
மஹம் || 36 || (408)
வ்ருஷ்ணீனும் வாஸுதேவோऽஸ்மி பாண்டவானும்
தனஞ்ஜய: |
முனீனுமப்-யஹம் வ்யாஸ: கவீஞ-முசஞ கவி:
|| 37 || (409)

(அஹம்) நான் (மாஸானும்) மாதங்களுக்குள் (மார்க்க சீர்ஷ:) மார்கழி; (ருதூனும்) ருதுக்களுக்குள் (குஸுமாகர:) புஷ்பிக்கும் வஸந்தருது.

36. (ச்சலயதாம்) வஞ்சகர்களிடம் (த்யூதம்) சூதாட்டமாகவும் (தேஜஸ்விஞம்) சக்தியுடையவர்களிடம் (தேஜ:) சக்தியாகவும் (அஹம் அஸ்மி) நான் இருக்கிறேன்; (ஜய: அஸ்மி) வெற்றியாயிருக்கிறேன்; (வ்யவஸாய: அஸ்மி) விடாமுயற்சியாகஇருக்கிறேன்; (ஸத்வவதாம்) ஸாத்விகர்களிடம் (அஹம்) நான் (ஸத்வம்) ஸத்வம்.

37. (அஹம்) நான் (வ்ருஷ்ணீனும் (விருஷ்ணி) குலத்தவர்களில் (வாஸுதேவ:) வசுதேவபுத்ரனுன

---

35. காயத்ரீ—'கங்கைபோன்ற தீர்த்தமும், கோவிந்தனைப் போன்ற தெய்வமும், காயத்ரியைப் போன்ற ஜபமும் வேறு இல்லை' என்பர்.

மார்கழி—உத்தராயணம் தேவர்களுக்குப் பகல், அதற்கு முன்னுள்ள மார்கழி மாதம் பகவத் தியானத்துக்குச் சிறந்த விடியற் காலம் போன்றது. மார்கழி மாதம் பூஜை பஜனை விசேஷம்.

36. சூதாட்டம்—சிங்கத்திலும், தீயிலும், மரணத்திலும், சக்தியின் சிறப்பு வாய்ந்த எல்லா இடத்திலும் ஸத்வம், ரஜஸ்,

दण्डो दमयता-मस्मि नीति-रस्मि जिगीषताम् ।
मौनं चैवास्मि गुह्यानां ज्ञानं ज्ञानवता-महम् ॥३८॥ ॥४१०॥

தண்டோ தமயதா-மஸ்மி நீதி ரஸ்மி ஜிகீஷதாம் |
மௌனஞ் சைவாஸ்மி குஹ்யானும் ஜ்ஞானம்
ஜ்ஞானவதா-மஹம் || 38 || (410)

கிருஷ்ணனுகவும், (பாண்டவானும்) பாண்டவர்களுள் (தனஞ்ஜய:) அர்ஜுனனுகவும், (முனீனும் அபி) முனிவர்களுள் (வ்யாஸ:) வியாசராகவும், (கவினும்) கூரிய புத்தியுடையவர்களுள் (உசனு கவி:) உசனு கவி என்று பெயர் பெற்ற சுக்ராசாரியராகவும் (அஸ்மி) உளேன்.

38. (தமயதாம்) அடக்கியாள்பவரிடம் (தண்ட:) அடக்கும் சக்தியாக (அஸ்மி) இருக்கிறேன் ; (ஜிகீஷதாம்) ஜயிக்க விரும்புவோர்களிடம் (நீதி:) நீதியாக (அஸ்மி) இருக்கிறேன் ; (அஹம் ஏவ) நானே (குஹ்யானும்) இரகசியமான விஷயங்களில் (மௌனம் ச) மௌனமாகவும், (ஜ்ஞானவதாம்) ஞானிகளிடம் (ஜ்ஞானம்) ஞானமாகவும் (அஸ்மி) இருக்கிறேன்.

தமஸ் எனும் முக்குணங்களிலும் தன் விபூதியைப் பகவான் கூறுகின்றுர். இங்கு சூதாட்டம் விபூதியாகக் கூறியதால் மனதைக் கவரும் அவன் சக்தியைக் கண்டு சிங்கத்தினிடம் பயப்படுவது போல் பயப்பட வேண்டும் என்ற கருத்தேயன்றி சூதாடுவது நல்லது என்பதன்று.

ஜயம்—நாம் பெறும் ஜயமெல்லாம் பகவானுடைய கிருபையே என்று உணர்தல் வேண்டும். அங்ஙனமின்றி ‘நாம் ஜயித்தோம்’ என்று கருவமடைதல் மதியீனம்.

ஒ—கேனுேபநிஷத்துக் கதை.

37-38. தனஞ்ஜய:—அர்ஜுனனும் கிருஷ்ணனும் நரநாரயணர்கள், இணைபிரியாதவர்கள்.

यच्चापि सर्वभूतानां बीजं तदह-मर्जुन ।
न तदस्ति विना यत्स्यान्मया भूतं चराचरम् ॥३९॥ ॥४११॥
नान्तोऽस्ति मम दिव्यानां विभूतीनां परंतप ।
एष तूद्देशतः प्रोक्तो विभूते-र्विस्तरो मया ॥४०॥ ॥४१२॥

யச்சாபி ஸர்வபூதானும் பீஜம் ததஹ-மர்ஜுன |
ந ததஸ்தி வினு யத்ஸ்யான்-மயா பூதஞ் சராசரம்
|| 39 || (411)
நாந்தோऽஸ்தி மம திவ்யானும் விபூதினும் பரந்தப |
ஏஷ தூத்தேசத: ப்ரோக்தோ விபூதேர்-விஸ்தரோ
மயா || 40 || (412)

39. (அர்ஜுன) அர்ஜுனு! (ஸர்வபூதானும் ச) எல்லாப்பொருள்களுக்கும (யத்) எது (பீஜம்) வித்தோ (தத்அபி) அதுவும் (அஹம்) நானே. (மயா வினு) என்னையன்றி (சராசரம் பூதம்) அசையும் பொருளோ அசையாப் பொருளோ (யத் ஸ்யாத்) ஏதேனும் உளதோ எனில் (தத்) அது (நாஸ்தி) இல்லவேஇல்லை.

40. (பரந்தப) பரந்தபா! (மம) என்னுடைய (திவ்யானும்) தெய்வசக்தியை விளக்கும் (விபூதீனும்) விபூதி

நீதி:—உண்மையான ஜயம் நீதியுள்ள இடத்திலேயே இருக்கும்; நீதி இல்லாத இடத்தில் ஜயம் வருவதுபோல் சிற்சில சமயங்களில் தோன்றினுலும் முடிவில் அது வேருடன் அழியும் என்பது நிச்சயம்.

ஒ—யத்ர யோகேச்வர: க்ருஷ்ணே...த்ருவா நீதிர்-மதிர்-மம. (கீ. 8. 78.)

வ்யாஸ:—ஒ—வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே |
நமோ வை ப்ரஹ்ம-நிதயே வாஸிஷ்டாய நமோ நம: ||

சுக்ராசாரியர்: — பிருகு மஹரிஷியின் புத்ரர். ஸஞ்ஜீவனி வித்தையால் வஜ்ர சரீரம் படைத்தவர். யோக வித்தையில் நிபுணர். தைத்யர்களின் புரோகிதர்.

39. ந ததஸ்தி—ஒன்று என்ற லக்கத்தின் பின் பூஜ்யத்தைச்

यद्यद्विभूतिमत् सत्त्वं श्रीम-दूर्जित-मेव वा ।
तत्तदेवावगच्छ त्वं मम तेजोंश-संभवम् ॥ ४१ ॥ ॥४१३॥

யத்யத்-விபூதி-மத் ஸத்வம் ஸ்ரீம-தூர்ஜித- மேவ வா |
தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்ச-ஸம்பவம்
|| 41 || (413)

களுக்கு (அந்த:) எல்லை (ந அஸ்தி) இல்லை. (ஏஷ: து) இதுவோ எனில் (மயா) என்னுடைய (விபூதே:) விபூதிகளின் (விஸ்தார:) விரிவு (உத்தேசத:) குறிப்பாக (ப்ரோக்த:) கூறப்பட்டது.

41. (யத்யத்) எங்கெந்த (ஸத்வம்) வஸ்து (விபூதிமத்) என் விபூதியை விளக்குவதாகவோ (ஸ்ரீமத்) லக்ஷ்மி கடாக்ஷம் பொருந்தியதாகவோ (ஊர்ஜிதம் ஏவ வா) உயர்ந்த சக்தி வாய்ந்ததாகவோ—உளதோ—(தத் தத்) அந்தந்த வஸ்து (மம) என்னுடைய தேஜோம்ச ஸம்பவம்) சக்தியின் அம்சத்தில் தோன்றியது என்று (த்வம்) நீ (அவகச்ச) அறிதல் வேண்டும்.

சேர்த்தால் அது பத்து, நூறு, ஆயிரம் என வளர்கிறது. ஆனால் ஒன்று என்ற லக்கத்தை அழித்துவிட்டால் மிகுந்திருப்பதற்குப் பொருள் ஒன்றுமே இல்லை. (ரா. கி.)

பார்க்கினண்ட பிண்டப் பரப்பனைத்து நின்செயலே
யார்க்குஞ் செயலிலையே ஐயா பராபரமே. (தாயுமானவர்.)

41. பகவான் எங்கும் இருக்கிறான் என்றாலும் சில இடங்களில் தன்னை விசேஷமாகத் தோற்றுவிக்கிறான். உதாரணமாக பூமியில் தோண்டினால் எங்கேயும் ஜலம் அகப்படும். ஆனால் குளம், கிணறு, ஏரி இவையுள்ள விடத்தில் தோண்ட வேண்டிய அவசியமில்லை. (ரா. கி.)

अथवा बहुनैतेन किं ज्ञातेन तवार्जुन ।
विष्टभ्याह-मिदं कृत्स्न-मेकांशेन स्थितो जगत् ॥४२॥ ॥४१४॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादे विभूतियोगो नाम
दशमोऽध्यायः ॥

அதவா பஹுனைதேன கிம் ஜ்ஞாதேன தவார்ஜுன |
விஷ்டப்யாஹ-மிதம் க்ருத்ஸ்ன-மேகாம்சேன ஸ்திதோ
ஜகத் || 42 || (414)

இதி ஸ்ரீமத்பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யா
யாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுனஸம்வாதே
விபூதியோகோ நாம தசமோऽத்யாய: ||

---

42. (அர்ஜுன) அர்ஜுனா! (அதவா) ஆனால், (பஹுனா) பலவகைப்பட்ட (ஏதேன ஜ்ஞாதேன) இதை அறிந்ததால் (தவ) உனக்கு (கிம்) என்ன பயன்? (இதம்) இந்த (க்ருத்ஸ்னம் ஜகத்) உலகனைத்தையும் (ஏகாம்சேன)—என் யோக சக்தியின்—ஒரு பகுதியால் (விஷ்டப்ய) தாங்கி (அஹம்) நான் (ஸ்தித:) நிற்கின்றேன்—என்று உணர்.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திர
மாயும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும்
ஸம்பாஷணையாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத்
கீதை என்னும் உபநிஷத்தில் விபூதி
யோகம் என்று பெயர் பெற்ற
பத்தாவது அத்தியாயம் முற்றும்.

42. ஒ—‘ கரந்த சில் இடந்தொறும்
இடந்திகழ் பொருள் தொறும்
கரந்தெங்கும் பரந்துளன். (நம்மாழ்வார்.)

ஸாதாரண மக்கள் தெய்வ சக்தியை இயற்கைக்கு மாருன அதிசயங்களில் காண்பார்கள். ஞானியோ இயற்கையில் எங்குங் காண்பான்.

அத்தியாய விஷயச் சுருக்கம்:—

பகவானுடைய பெருமையை தேவர்களும் மஹரிஷிகளுங்கூட முற்றும் உணர்ந்தவரல்லர் என்றது. விபூதியையும் யோகத்தையும் சுருக்கிக்கூறி அந்த அறிவால் எய்தப்பெறும் உயர் நிலையைப் பகவான் கூறியது. பகவானுடைய எல்லையற்ற விபூதியை உணர்ந்து பக்தியுடன் அவனை வழிபடுவோர்க்கு பக்தி யோகத்தைத் தந்து அவனே அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டு ஞான விளக்கை ஏற்றி வைத்து அஞ்ஞான இருளைப் போக்கி அருளும் வரலாறு. மீண்டும் அர்ஜுனன் பிரார்த்தனைக்கிணங்கி சற்று விரிவாக முக்கியமான விபூதிகளை எடுத்துக் கூறியது. இத்தனையும் தன்னுடைய எல்லையற்ற சக்தியின் ஒரு சிறு பகுதியால் தாங்கி நிற்கும் தன் யோக நிலையையும் சுட்டிக்காட்டி பகவான் முடித்தது.

ஓங்குபொருள் எவ்வெவற்றில் ஓதருதன் பூதி விரிந்
தாங்குநிலை கொண்டிருப்ப தப்பொருளைத்— தூங்கும்
களிறனையான கேட்பக் கழறியவன் மோக
அளறெழிப்பான் அச்சுதனும் ஆர்ந்து. (கீ. வெ.)

॥ एकादशोऽध्यायः ॥

(विश्वरूपदर्शनयोगः)

अर्जुन उवाच—

मदनुग्रहाय परमं गुह्य-मध्यात्म-संज्ञितम् ।
यत्त्वयोक्तं वचस्तेन मोहोऽयं विगतो मम ॥ १ ॥ ॥४१५॥

பதினொருவது அத்தியாயம்

(விச்வரூபதர்சன யோகம்)

அர்ஜுன உவாச—

மதனுக்ரஹாய பரமம் குஹ்ய-மத்யாத்ம-ஸம்ஜ்ஞிதம் |
யத்-த்வயோக்தம் வசஸ்-தேன மோஹோ ऽயம் விகதோ
மம || 1 || (415)

---

1. (மதனுக்ரஹாய) எனக்குக் கருணை செய்யக் கருதி (பரமம் குஹ்யம்) அதிரஹஸ்யமானதும் (அத்யாத்ம ஸம்ஜ்ஞிதம்) ஆத்ம ஸ்வரூபத்தை நனகு விளக்குவதுமான (யத் வச:) எந்த வார்த்தை (த்வயா) உன்னால் (உக்தம்) சொல்லப்பட்டதோ, (தேன) அதனால் (மம) என்னுடைய (அயம் மோஹ:) இந்த மோஹமானது (விகத:) ஒழிந்து போயிற்று.

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்—

அத்தியாயம் 7 லிருந்து 9 வரை விஞ்ஞானத்துடன் கூடிய ஞானம் விரித்துரைக்கப்பட்டு 10ல் பகவானுடைய விபூதியும் யோக ஐசுவரியத்தின் பெருமையும் விளக்கப்பட்டது. இதையெல்லாம் 11-1ல் அர்ஜுனன், 'பரமம்' 'குஹ்யம்' 'அத்யாத்ம ஸம்ஜ்ஞிதம்' எனச் சிறப்பித்துக் கூறி, மேலும அத். 10 முடிவில் உலகெல்லாம் தன் பேருருவில் ஒரு அம்சம் என்று பகவான் உபதேசித்ததைத் தான் கண்ணுரக் கண்டனுபவிக்கும்படி அருளவேண்டும் என்று பிரார்த்திக்க அந்த அதிசயக் காட்சியை (விசுவ ரூபத்தை) அர்ஜுனனுக்கு பகவான் காட்டுகின்ருர். இக்காரணத்தால் இவ்வத்யாயம் 'விச்வரூப தரிசனம்' எனப் பெயர் பெறும். இதை 'விச்வரூப தரிசனயோகம்' எனக் கூறுவதுமுண்டு.

भवाप्ययौ हि भूतानां श्रुतौ विस्तरशो मया ।
त्वत्तः कमलपत्राक्ष माहात्म्य-मपि चाव्ययम् ॥२॥ ॥४१६॥
एवमेत-द्यथात्थ त्वमात्मानं परमेश्वर ।
द्रष्टु-मिच्छामि ते रूप-मैश्वरं पुरुषोत्तम ॥ ३ ॥ ॥४१७॥

பவாப்யயெள ஹி பூதானும் ச்ருதெள விஸ்தரசோ மயா |
த்வத்த: கமலபத்ராக்ஷ மாஹாத்ம்ய-மபி சாவ்யயம் || 2 || (416)
ஏவமேதத்-யதாத்த த்வமாத்மானம் பரமேச்வர |
த்ரஷ்டு-மிச்சாமி தே ரூப-மைச்வரம் புருஷோத்தம || 3 || (417)

---

2. (கமலபத்ராக்ஷ) தாமரைக்கண்ணு! (த்வத்த:) உன்னிடமிருந்து) (பூதானும்) உயிர்களின் (பவாப்யயெள) தோற்றமும் மறைவும், (மயா) என்னுல் (விஸ்தரச:) விரிவாக (ச்ருதெள ஹி) கேட்கப்பட்டதன்ருே! (அவ்யயம்) அழிவில்லாத (மாஹாத்ம்யம் அபி ச) மகத்துவமும்கூட கேட்கப்பட்டதன்ருே?

3. (பரமேச்வர) பரமேசுவரா! (யதா) எவ்வண்ணம (த்வம்) நீ (ஆத்மானம்) உன்னே (ஆத்த) வர்ணித்தாயோ (ஏதத்) அது (ஏவம்) அவ்வண்ணமே—என உணர்ந்தேன் எனினும்—(புருஷோத்தம) புருஷோத்தமா! (தே) உன்னுடைய (ஐச்வரம் ரூபம்) ஈசுவர வடிவத்தை (த்ரஷ்டும்) காண்பதற்கும் (இச்சாமி) விரும்புகிறேன்.

எல்லாந்தனக் குருவாயிலங்கும் வகை தானுரைத்துச்
சொல்லாலறிந்தது சோராமற் கண்டிட வேண்டுமென்ற
வில்லாளனுக்கன்று மெய்க்கண் கொடுத்திது வேறுமுண்டோ
நல்லார்கள் காண்பரென்று நவின்ருனங்க ணுயகனே. (கீ. ஸ.)

मन्यसे यदि तच्छक्यं मया द्रष्टुमिति प्रभो ।
योगेश्वर ततो मे त्वं दर्शयात्मानमव्ययम् ॥ ४ ॥ ॥४१८॥

श्री भगवानुवाच—

पश्य मे पार्थ रूपाणि शतशोऽथ सहस्रशः ।
नानाविधानि दिव्यानि नानावर्णाकृतीनि च ॥ ५ ॥ ॥४१९॥

மன்யஸே யதி தச்சக்யம் மயா த்ரஷ்டுமிதி ப்ரபோ |
யோகேச்வர ததோ மே த்வம் தர்சயாத்மான-மவ்யயம்
|| 4 || (418)

ஸ்ரீபகவானுவாச—

பச்ய மே பார்த்த ரூபாணி சதசோऽத ஸஹஸ்ரச: |
நாநாவிதானி திவ்யானி நாணுவர்ணுக்ருதீனி ச
|| 5 || (419)

---

4. (ப்ரபோ) பிரபுவே! (தத்) அது (மயா) என்ஞல் (த்ரஷ்டும்) காண்பதற்கு (சக்யம்) கூடும் (இதி) என்று (மன்யஸே யதி) கருதுவாயேயாஞல் (தத:) பின் (யோகேச்வர) யோகத்திற்கு இறைவா! (த்வம்) நீ (மே) எனக்கு (அவ்யயம்) அழிவில்லாத (ஆத்மானம்) உன் வடிவை (தர்சய) காட்டியருள்வாய்.

ஸ்ரீ பகவான் கூறியது—

5. (பார்த்த) பார்த்தா! (மே) என்னுடைய (திவ்யானி) தெய்வத்தன்மை வாய்ந்தனவும் (நாஞவிதானி) பலவகையானவையும் (நாஞவர்ஞக்ருதீனி ச) பல நிறங்களும் வடிவங்களுமுடையனவுமாகிய (ரூபாணி) உருவங்களை (சதச:) நூற்றுக்கணக்காகவும் (ஸஹஸ்ரச:) ஆயிரக்கணக்காகவும் (அத) இனி (பச்ய) பார்.

पश्यादित्यान् वसून् रुद्रा-नश्विनौ मरुतस्तथा ।
बहून्यदृष्टपूर्वाणि पश्याश्चर्याणि भारत ॥ ६ ॥ ॥ ४२० ॥

इहैकस्थं जगत्कृत्स्नं पश्याद्य सचराचरम् ।
मम देहे गुडाकेश यच्चान्यद्-द्रष्टु-मिच्छसि ॥ ७ ॥ ॥ ४२१ ॥

பச்யாதித்யான் வஸூன் ருத்ரா-னச்வினௌ மருத-ஸ்ததா |
பஹூன்-யத்ருஷ்ட-பூர்வாணி பச்யாச்சர்யாணி:பாரத ॥ 6 ॥ (420)

இஹைகஸ்தம் ஜகத் க்ருத்ஸ்னம் பச்யாத்ய ஸசரா சரம் |
மம தேஹே குடாகேச யச்சான்யத்-த்ரஷ்டு-மிச்சஸி ॥ 7 ॥ (421)

---

6. (பாரத) பாரத! (ஆதித்யான்) ஆதித்தியர் களையும், (வஸூன்) வசுக்களையும் (ருத்ரான்) ருத்திரர் களையும் (அச்வினௌ) அசுவனீ தேவர்களையும் (ததா) அவ்வாறே (மருத:) மருத்துக்களையும் (பச்ய) பார்; (அத்ருஷ்ட பூர்வாணி) முன் காணப்படாத (ஆச்சர் யாணி) ஆச்சரியங்கள் (பஹூனி) பலவற்றை (பச்ய) பார்.

7. (குடாகேச) அர்ஜுனா! (இஹ) இங்கு (மம தேஹே) என் சரீரத்தில் (ஏகஸ்தம்) ஒன்று கூடி நிற் கும் (ஸசராசரம்) அசைவதும் அசையாததுமான (ஜகத்) உலகம் (க்ருத்ஸ்னம்) முழுவதையும், (ச) மேலும் (அன்யத்) வேறு (யத்) எதை (த்ரஷ்டும்) பார் க்க (இச்சஸி) விரும்புகிருயோ—அதையும்—(அத்ய) இப்போது (பச்ய) பார்.

---

6. ஆதித்யான் வஸூன் ருத்ரான்—விவரணம் 10. 21-23ல் காண்க.

न तु मां शक्यसे द्रष्टु-मनेनैव स्वचक्षुषा ।
दिव्यं ददामि ते चक्षुः पश्य मे योग-मैश्वरम् ॥८॥ ॥४२२॥

ந து மாம் சக்யஸே த்ரஷ்டு-மனேனைவ ஸ்வசக்ஷுஷா|
திவ்யம் ததாமி தே சக்ஷு: பச்ய மே யோக-மைச்வரம்
॥ 8 ॥ (422)

8. (து) ஆனால் (அனேனைவ ஸ்வசக்ஷுஷா) உன்னுடைய இக்கண்களாலேயே (மாம்) என்னை (த்ரஷ்டும்) காண்பதற்கு (ந சக்யஸே) உனக்கு இயலாது; (தே) உனக்கு (திவ்யம்) திவ்யமான (சக்ஷு:) பார்வையை (ததாமி) கொடுக்கிறேன். (மே) என்னுடைய (ஐச்வரம்) ஈசுவரத்தன்மையை விளக்கும் (யோகம்) யோகத்தை (பச்ய) பார்.

அச்வினௌ—அச்வினீ குமாரர் இரு சகோதரர். விஷ்ணு புராணத்தில் (3. 2. 7.) இவர்கள் சூரியபுத்ரர்களாகவும், ராமாயணத்தில் (அரண். 14. 14.) கசியபரின் புத்ரர்களாகவும், வாயு புராணத்தில் (65. 57.) பிரம்மாவின் காதில் உதித்தவர்களாகவும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறு இவர்கள் வெவ்வேறு கல்பத்தில் தோன்றினர் எனக் கொள்ளுதல் வேண்டும். இவர்கள் ததீசி முனிவரிடத்தில் ஞானோபதேசம பெற்றனர்.

7. **இஹைகஸ்தம்**—கணக்கற்ற வடிவங்களில் உலகனைத்தும் பரந்து நிற்கும் என் வடிவங்களனைத்தையும் இங்கே ஒரே இடத்தில் உன் முன்னிலையில் காண்பாய். **அத்ய**—முக்கால நிகழ்ச்சிகளையும் ஒருங்கே **இப்போதே** காண்பாய்.

சக்யஸே—'ஸஹ்யஸே' என்றும் பாடமுண்டு.

யோகமைச்வரம்—

ஒ—யோ லோகத்ரயமாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர:
(கீ. 14. 17.)

வேதவியாஸரிடமிருந்து எந்தமாதிரி திவ்ய திருஷ்டியை ஸஞ்ஜயர் பெற்றாரோ அதேமாதிரி திவ்ய திருஷ்டியை பகவானுடைய அனுக்ரஹத்தால் அர்ஜுனன் பெற்றான். முதலில் கேள்வியாலுணர்ந்ததை இப்போது பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றான். ஞானம் இன்னும் முழுவதும் பக்குவமடையாமையால் அர்ஜுனனுக்கு இக்காட்சியால் பயமும், ஸந்தாபமும், மோஹமும் உண்டாகின்றன.

सञ्जय उवाच—
एवमुक्त्वा ततो राजन् महा-योगेश्वरो हरिः ।
दर्शयामास पार्थाय परमं रूपमैश्वरम् ॥ ९ ॥ ॥ ४२३ ॥
अनेक वक्त्र-नयन-मनेकाद्भुत-दर्शनम् ।
अनेक-दिव्याभरणं दिव्यानेकोद्यतायुधम् ॥ १० ॥ ॥ ४२४ ॥

ஸஞ்ஜய உவாச—
ஏவ-முக்த்வா ததோ ராஜன் மஹாயோகேச்வரோ ஹரி:|
தர்சயாமாஸ பார்த்தாய பரமம் ரூப-மைச்வரம்
|| 9 || (423)
அநேக வக்த்ர-நயன-மநேகாத்புத-தர்சனம் |
அநேக-திவ்யாபரணம் திவ்யாநேகோத்யதாயுதம்
|| 10 || (424)

ஸஞ்ஜயர் கூறியது—

9. (ராஜன்) திருதராஷ்டிர மஹாராஜா! (மஹா யோகேச்வர:) யோகத்திற்கு மகேசுவரனாகிய (ஹரி:) ஹரி (ஏவம்) இவ்வாறு (உக்த்வா) கூறி (தத:) பிறகு (பார்த்தாய) பார்த்தனுக்கு (பரமம்) உயர்ந்த (ஐச்வரம் ரூபம்) ஈசுவர வடிவத்தை (தர்சயாமாஸ) காட்டியருளினார்.

10. அவ்வடிவம் (அனேகவக்த்ர நயனம்) பல முகங்களும் கண்களுமுடையது; (அனேகாத்புத-தர்

ஒ—ஈசுவரன் தனது கிருபையாலேயே தன்னைத் தோற்றுவிக்கிறான். அவன் ஞான சூரியன். அவனுடைய ஒரு கிரணமே இவ்வுலகம் முழுதுக்கும் அறிவைக் கொடுத்துள்ளது. அதனால் தான் நாம் ஒருவரை ஒருவர் தெரிந்துகொண்டு பலவகைப்பட்ட அறிவைப் பெறுகிறோம். நமக்கு உலகை விளக்கும் தனது ஜோதியை அவன் தனது திருமுகத்திலேயே திருப்பிக் கொண்டால் மட்டுந் தான் நம்மால் அவனைக் காணமுடியும். (ரா. கி.)

9. **பரமம் ரூபமைச்வரம்**—சுத்தமாயும் ஏற்றமுடையதாயும் அப்ராகிருதமாயும் யோக சக்தி வாய்ந்ததாயும் உடைய உருவம்;

दिव्य-माल्याम्बर-धरं दिव्य गन्धानुलेपनम् ।
सर्वाश्चर्य-मयं देवं अनन्तं विश्वतो-मुखम् ॥ ११ ॥ ॥ ४२५ ॥

दिवि सूर्य-सहस्रस्य भवे-द्युगप-दुत्थिता ।
यदि भाः सदृशी सा स्याद्भास-स्तस्य महात्मनः॥१२॥ ॥४२६॥

திவ்ய மால்யாம்பர-தரம் திவ்ய-கந்தானுலேபனம் |
ஸர்வாச்சர்யமயம் தேவம் அனந்தம் விச்வதோ-முகம்
|| 11 || (425)

திவி ஸூர்ய-ஸஹஸ்ரஸ்ய பவேத்-யுகபதுத்திதா |
யதி பா: ஸத்ருசீ ஸா ஸ்யாத்-பாஸஸ்-தஸ்ய மஹாத்
மன: || 12 || (426)

சனம்) பல அற்புதக் காட்சிகள் நிறைந்தது; (அனேக திவ்யாபரணம்) திவ்யமான பல ஆபரணங்களணிந்தது; (திவ்யானேகோத்யதாயுதம்) திவ்யமான பல ஆயுதங்கள் ஏந்தியது.

11. (திவ்யமால்யாம்பரதரம்) திவ்வியமான மாலைகளும் ஆடைகளுமணிந்தது; (திவ்யகந்தானுலேபனம்) திவ்வியமான களபம் பூசியது; (ஸர்வாச்சர்யமயம்) எல்லாவகை ஆச்சரியங்களும் நிறைந்தது; (தேவம்) பிரகாசமானது; (அனந்தம்) அளவில்லாதது, (விச்வதோமுகம்) எங்கும் முகமுள்ளது.

12. (திவி) வானத்தில் (ஸூர்யஸஹஸ்ரஸ்ய) ஆயிரம் சூரியர்களின் (பா:) பிரகாசம் (யுகபத்) ஒருங்கு கூடி (யதி உத்திதா பவேத்) உதிக்குமேயானுல் (ஸா)

ஸாதாரண உருவங்களைப்போல் ஐம்பூதங்களாலமைந்து அழிவதன்று.

12. ஒ—ஆகாயத்தில் அகிலாண்ட கோடிகளும் ஒழுங்காய் ஒன்றையொன்று அனுசரித்து கண்ணுக்கெட்டிய தூரம் பிரகாசித்து பகவானை நோக்கி ஓங்கார சுருதியுடன் அமிர்தகானத்தைச்

तत्रैकस्थं जगत्कृत्स्नं प्रविभक्त-मनेकधा ।
अपश्य-द्देवदेवस्य शरीरे पाण्डव-स्तदा ॥ १३ ॥ ॥ ४२७ ॥
ततः स विस्मयाविष्टो हृष्ट-रोमा धनञ्जयः ।
प्रणम्य शिरसा देवं कृताञ्जलि-रभाषत ॥ १४ ॥ ॥ ४२८ ॥

தத்ரைகஸ்தம் ஜகத்-க்ருத்ஸ்னம் ப்ரவிபக்த-மனேகதா|
அபச்யத்-தேவ-தேவஸ்ய சரீரே பாண்டவஸ்-ததா
|| 13 || (427)
தத: ஸ விஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்டரோமா
தனஞ்ஜய: |
ப்ரணம்ய சிரஸா தேவம் க்ருதாஞ்ஜலி-ரபாஷத
|| 14 || (428)

அது (தஸ்ய) அந்த (மஹாத்மன:) மஹா புருஷனுடைய (பாஸ:) பிரகாசத்துக்கு (ஸத்ருசீ) ஒப்பாக (ஸ்யாத்) இருக்கும்.

13. (ததா) அப்போது (பாண்டவ:) பாண்டவன் (தத்ர) அங்கே (தேவதேவஸ்ய) தேவதேவனுடைய (சரீரே) சரீரத்தில் (அனேகதா ப்ரவிபக்தம்) பலவகையாய் வகுக்கப்பட்ட (க்ருத்ஸ்னம் ஜகத்) உலகனைத்தும் (ஏகஸ்தம்) ஒன்றுகூடி நிற்க (அபச்யத்) கண்டான்.

14. (தத:) பின் (ஸ தனஞ்ஜய:) அந்த தனஞ்ஜ

செய்துபயங்கரமான அழகுடன் வெகு கம்பீரமாய் உருள, எல்லாவற்றிற்கும் மேல் ஸகல லோககாரணனாய் ஸர்வலோக நாயகனாய், சரண்யனாய், நித்யனாய், நிர்மலனாய்ப் பெருமையினும் பெருமையாய் இனிமையினும் இனிமையாய் அநேக கோடி சூரியர்கள் ஏக காலத்துதித்தாற்போலப் பார்க்கப் பதினாயிரங் கண்கள் போதாத அபரிமிதமான ஜோதிஸ் ஒன்றைக் கண்டார்.

(கமலாம்பாள் சரித்திரம்—பி. ஆர். ராஜமய்யர்.)

13. ஒன்றில் அனைத்தையும் அனைத்திலும் ஒன்றையும் அர்ஜுனன் கண்டான். அனைத்துலகும் அப்படியேயிருந்தும் அவன் காட்சியில் அனைத்தும் அப்போது தெய்வ வடிவாய் மாறி நின்றது.

अर्जुन उवाच—

पश्यामि देवांस्तव देव देहे सर्वांस्तथा भूतविशेष-सङ्घान् ।
ब्रह्माण-मीशं कमलासनस्थ-मृषींश्च सर्वा-नुरगांश्च दिव्यान् ॥

அர்ஜுன உவாச—

பச்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே
ஸர்வாம்ஸ்ததா பூதவிசேஷ-ஸங்கான் |
ப்ரஹ்மாண-மீசம் கமலாஸனஸ்தம்
ருஷீம்ச்ச ஸர்வா-னுரகாம்ச்ச திவ்யான் || 15 ||

யன் (விஸ்மயாவிஷ்ட:) பெருவியப்படைந்து (ஹ்ருஷ்ட ரோமா) புளகாங்கிதனாய் (தேவம்) தேவனை (சிரஸா) சிரத்தால் (ப்ரணம்ய) வணங்கி (க்ருதாஞ்ஜலி:) அஞ்சலிசெய்து (அபாஷத) கூறலுற்றான்.

அர்ஜுனன் கூறியது—

15. (தேவ) தேவா! (தவ) உன்னுடைய (தேஹே) தேகத்தில் (ஸர்வான்) எல்லா (தேவான்) தேவர்களையும் (ததா) அவ்வாறே (பூதவிசேஷ ஸங்கான்) பலவகை உயிர்த்தொகுதிகளையும் (கமலாஸனஸ்தம் ஈசம ப்ரஹ்மாணம்) தாமரையில் வீற்றிருக்கும் ஈசனாகிய பிரம்மாவையும் (ஸர்வான் ருஷீன் ச) எல்லா ரிஷிகளையும் (திவ்யான் உரகான் ச) தெய்விகம் வாய்ந்த ஸர்ப்பங்களையும் (பச்யாமி) பார்க்கின்றேன்.

---

14. **சிரத்தால் வணங்கி அஞ்சலி செய்து**—பகவானுடைய பெருமையைக் கண்ணுற்ற அர்ஜுனன் மனத்தில் சிநேகபாவனை ஒடுங்கி பயமும் பக்தியும் வளர்ந்து நின்றது.

15. **கமலாஸனஸ்தம்**—அர்ஜுனன் விஷ்ணுவின் நாபிகமலத்தில் வீற்றிருக்கும் பிரம்மாவையுங் கண்டான் என்றதால் விசுவரூபத்தில் விஷ்ணுவின் ரூபமும் ஒடுங்கிக் காணப்பட்டதாகின்றது.

ஓ—தேவரும் வணங்குதேவ நின்றிருக் கோலத்துள்ளே
யாவரு மெல்லைகாணாப் பொருளெலா மிசையக்கண்டேன்
மூவரின் முதற்புத்தேளை முனிவர்க ளோடுங்கண்டேன்
மேவரு நாகங் கண்டேன் விண்ணவர் குழாமுங்கண்டேன்.

अनेक बाहूदर-वक्त्र-नेत्रं पश्यामि त्वां सर्वतोऽनन्तरूपम् ।
नान्तं न मध्यं न पुनस्तवादिं पश्यामि विश्वेश्वर विश्वरूप॥१६॥

அனேக-பாஹூதர-வக்த்ர-நேத்ரம்
பச்யாமி த்வாம் ஸர்வதோऽனந்த-ரூபம் |
நாந்தம் ந மத்யம் ந புனஸ்-தவாதிம்
பச்யாமி விச்வேச்வர விச்வரூப || 16 || (430)

---

16. (விச்வேச்வர) உலகிற் கிறைவா! (விச்வரூப) உலக வடிவானவனே! (அனேக பாஹூதரவக்த்ர-நேத்ரம்) பல புயங்கள் வயிறுகள் வாய்கள் கண்கள் உடையவனும் (அனந்தரூபம்) எல்லையில்லாத உருவுடையவனுமாகிய (த்வாம்) உன்னை (ஸர்வத:) எவ்விடத்தும் (பச்யாமி) காண்கின்றேன். (தவ) உன்னுடைய (அந்தம்) முடிவையும்) (மத்யம்) நடுவையும் (புன:) மீண்டும் (ஆதிம்) அடியையும் (ந பச்யாமி) நான் காணவில்லை.

கண்களும் வயிறுந் தோளு முகங்களுங் கருதிநோக்கி
லெண்பல வுடையவாய வுருவுக ளனேகங் கண்டேன்
றண்கதிர் முடியுந் தண்டுஞ் சக்கரப் படையுமேந்தி
யொண்கதிர் கனலோடொன்று யனையநின் னுருவினுள்ளே.
(ப. கீ. ப.)

மற்ற இடங்களில் பகவான் உபதேசிக்க அர்ஜுனன் கேட்கிறான். இங்கு அர்ஜுனன் அனுபவத்தின் எல்லையில் நின்று ஆனந்தப் பெருக்கால் பேசுகிறான்; மற்ற இடங்களில் இவ்வளவு பேசவில்லை. பேசினாலும் விசுவ ரூபத்தைக் காணும் இந்நிலை நிர்விகல்ப ஸமாதியினும் உயர்ந்தது.

किरीटिनं गदिनं चक्रिणं च तेजोराशिं सर्वतो दीप्ति-मन्तम् ।
पश्यामि त्वां दुर्निरीक्ष्यं समन्ता-द्दीप्तानलार्क-द्युति-मप्रमेयम् ॥
त्वमक्षरं परमं वेदितव्यं त्वमस्य विश्वस्य परं निधानम् ।
त्वमव्ययः शाश्वत-धर्म-गोप्ता सनातनस्त्वं पुरुषो मतो मे ॥१८॥

கிரீடினங் கதினஞ் சக்ரிணஞ் ச
தேஜோ-ராசிம் ஸர்வதோ-தீப்தி-மந்தம் |
பச்யாமி தவாம் துர்நிரீக்ஷயம் ஸமந்தாத்-
தீப்தானலார்க்க-த்யுதி-மப்ரமேயம் || 17 || (431)

த்வமக்ஷரம் பரமம் வேதிதவ்யம்
த்வமஸ்ய விச்வஸ்ய பரம் நிதானம் |
த்வமவ்யய: சாச்வத-தர்ம-கோப்தா
ஸனாதனஸ்-த்வம் புருஷோ மதோ மே ||18|| (432)

---

17. (கிரீடினம்) கிரீடந்தரித்து, (கதினம்) கதையேந்தி (சக்ரிணம்) சக்கரந்தாங்கி (ச) மேலும் (ஸர்வத:) எங்கும் (தீப்திமந்தம்) பிரகாசிக்கும் (தேஜோராசிம்) ஒளிப்பிழம்பாகி, (துர்நிரீக்ஷயம்) காணுதற்குக் கூசுவதாய் (தீப்தானலார்க்கத்யுதிம்) கொழுந்து விட்டெரியுந் தீப்போலும் சூரியன்போலும் ஒளிர்வதாய் (அப்ரமேயம்) அளவிடுதற்கரியதாய் உள்ள (த்வாம்) உன்னை (ஸமந்தாத்) சுற்றிலும் எல்லாவிடத்தும் (பச்யாமி) காண்கின்றேன்.

18. (த்வம்) நீ (அக்ஷரம்) அழிவற்றவன் (பரமம் வேதிதவ்யம்) அறிதற்குரிய பரம்பொருள்; (த்வம்) நீ (அஸ்ய விச்வஸ்ய) இவ்வுலகிற்கு (பரம் நிதானம்) எல்லையான இருப்பிடம்; (த்வம்) நீ (அவ்யய:) மாறுபாடில்லாதவன் (சாச்வததர்ம-கோப்தா) சாசுவதமான தர்மத்தின் காவலன்; (த்வம்) நீ (ஸநாதன: புருஷ:) ஆதி புருஷன் என (மே மத:) என் துணிபு.

---

18. அக்ஷரம்—நிர்க்குண நிராகார:பரப்ரஹ்மம்.

अनादि-मध्यान्त-मनन्त-वीर्य-मनन्त-बाहुं शशि-सूर्य-नेत्रम् ।
पश्यामि त्वां दीप्त-हुताश-वक्त्रं स्वतेजसा विश्वमिदं तपन्तम् ॥
द्यावापृथिव्यो-रिदमन्तरं हि व्याप्तं त्वयैकेन दिशश्च सर्वाः ।
दृष्ट्वाद्भुतं रूपमुग्रं तवेदं लोक-त्रयं प्रव्यथितं महात्मन् ॥२०॥

அனுதி மத்யாந்த-மனந்த-வீர்ய-
மனந்த-பாஹும் சசி-ஸூர்ய-நேத்ரம் |
பச்யாமி த்வாம் தீப்த-ஹுதாச-வக்த்ரம்
ஸ்வதேஜஸா விச்வமிதம் தபந்தம் || 19 || (433)
த்யாவா-ப்ருதிவ்யோ-ரிதமந்தரம் ஹி
வ்யாப்தம் த்வயைகேன திசச்ச ஸர்வா: |
த்ருஷ்ட்வாத்புதம் ரூபமுக்ரம் தவேதம்
லோக-த்ரயம் ப்ரவ்யதிதம் மஹாத்மன் ||20|| (434)

---

19. அனுதிமத்யாந்தம்) ஆதிநடுவந்த மில்லாத வனும் (அனந்த வீர்யம்) எல்லையில்லாத சக்தியுடையவனும் (அனந்த பாஹும்) எண்ணிறந்த புயங்களை யுடையவனும் (சசிஸூர்ய நேத்ரம்) சந்திர சூரியர்களை நேத்திரங்களாயுடையவனும், (தீப்தஹுதாசவக்த்ரம்) பிரகாசிக்கும் அக்கினியை வாயாகவுடையவனும் (ஸ்வதேஜஸா) தன்னொளியால் (இதம் விச்வம்) இவ்வுலகை (தபந்தம்) எரிப்பவனும் ஆகிய (த்வாம்) உன்னை (பச்யாமி) காண்கிறேன்.

20. (மஹாத்மன்) மஹாத்மாவே! (த்யாவாப்ருதிவ்யோ:) வானுக்கும் மண்ணுக்கும் (இதம் அந்தரம்) இடையிலுள்ள இந்தப் பெருவெளி (ஏகேன த்வயா)

---

19. **சசி ஸூர்ய நேத்ரம்**—(சசிவத் ஸூர்யவச்ச ப்ரஸாத ப்ரதாப யுக்த ஸர்வ நேத்ரம்) சந்திரனைப்போலும் ஸூர்யனைப் போலும் (நல்லோர்க்குக்) குளிர்ந்த கண்ணும் (தீயோர்க்குக்) கனலுமிழுங்கண்ணும் எங்குங் காணும் வடிவம்.

अमी हि त्वां सुरसङ्घा विशन्ति केचि-द्भीताः प्राञ्जलयो गृणन्ति ।
स्वस्तीत्युक्त्वा महर्षि-सिद्ध-सङ्घाः स्तुवन्ति त्वां स्तुतिभिः
पुष्कलाभिः ॥ २१ ॥

அமீ ஹி த்வாம் ஸுரஸங்கா விசந்தி
கேசித்-பீதா: ப்ராஞ்ஜலயோ க்ருணந்தி |
ஸ்வஸ்தீத்-யுக்த்வா மஹர்ஷி-ஸித்த-ஸங்கா:
ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி: புஷ்கலாபி:
|| 21 || (435)

ஒருவனுகிய உன்னுலேயே (வ்யாப்தம் ஹி) நிறைந் துள்ளதன்ருே? (ஸர்வா: திச: ச) எல்லாதிசைகளுங் கூட—அவ்வாறே—(தவ) உன்னுடைய (அத்புதம்) அத்புதமான (இதம்) இந்த (உக்ரம் ரூபம்) உக்கிர வடிவை (த்ருஷ்ட்வா) கண்டு (லோகத்ரயம்) மூவுலகும் (ப்ரவ்யதிதம்) பயத்தால் நடுங்குகின்றது.

21. (அமீ ஸுரஸங்கா:) இந்த தேவக்கூட்டங் கள் (த்வாம்) உன்னிடம் (விசந்தி ஹி) புகுகின்றன.

ஒ—இடது கண்கள் சந்திரன் வலது கண்கள் சூரியன்
இடக்கை சங்கு சக்கரம் வலக்கை சூலம் மான் மழு
எடுத்த பாதம் நீண்முடி யெண்டிசைக்கு மப்புறம்
உடல் கடந்து நின்றமாயம் யாவர் காணவல்லரே.
(சிவவாக்கியர்.)

ஒ—(ஸர்வஸ்ய ஸ்ரஷ்டாரம், ஸர்வஸ்யாதாரபூதம், ஸர்வஸ்ய ப்ரசாஸிதாரம், ஸர்வஸ்ய ஸம்ஹர்த்தாரம், ஜ்ஞானுத்யபரிமித குண ஸாகரம், ஆதிமத்யாந்த ரஹிதம், ஏவம்-பூத-திவ்யதேஹம் த்வாம், யதோபதேசம் ஸாக்ஷாத் கரோமீத்யர்த்த:) எல்லாவற்றையும் சிருஷ்டிப்பவனும், எல்லாவற்றையும் தாங்குபவனும், எல்லாவற்றை யும் ஆள்பவனும், எல்லாவற்றையும் ஸம்ஹரிப்பவனும், ஞானம் முதலிய குணங்களுக்குக் கடல் போன்றவனும், அடியும் நடுவும் முடிவும் இல்லாதவனுமாகிய உன் திவ்விய ரூபத்தை நீ உபதேசித்த வண்ணமே என் கண்ணெதிர் காண்கின்றேன் என்றவாறு.
(ராமானுஜர்.)

20. லோகத்ரயம் ப்ரவ்யதிதம்— அர்ஜுனனுக்குத் தானே விசுவரூப தரிசனம்; மூவுலகும் அதைக்கண்டு பயந்தது எங்ஙனம்?

रुद्रादित्या वसवो ये च साध्या विश्वेऽश्विनौ मरुतश्चोष्मपाश्च ।
गन्धर्व-यक्षासुर-सिद्ध-सङ्घा वीक्षन्ते त्वां विस्मिताश्चैव सर्वे॥२२॥

ருத்ராதித்யா வஸவோ யே ச ஸாத்யா
விச்வே஽ச்வினௌ மருதச்சோஷ்மபாச்ச |
கந்தர்வ-யக்ஷாஸுர-ஸித்த-ஸங்கா
வீக்ஷந்தே த்வாம் விஸ்மிதாச்சைவ ஸர்வே
|| 22 || (436)

(கேசித்) சிலர் (பீதா:) அஞ்சியவர்களாய் (ப்ராஞ்ஜலய:) கையைக் கூப்பியவர்களாய் (க்ருணந்தி) உன்னைத் துதிக்கின்றனர். (மஹர்ஷி ஸித்த ஸங்கா:) மஹரிஷி சித்த கணங்கள் (ஸ்வஸ்தி) வாழி (இதி) என்று (உக்த்வா) கூறி (புஷ்கலாபி:) சிறந்த (ஸ்துதிபி:) புகழ்களால் (த்வாம்) உன்னை (ஸ்துவந்தி) துதிக்கின்றார்கள்.

22. (ருத்ராதித்யா:) ருத்திரர்களும் ஆதித்தியர்களும் (வஸவ:) வசுக்களும் (யே) எவர்கள் (ஸாத்யா: ச) ஸாத்தியர்களோ அவர்களும் (விச்வே) விசுவே தேவர்களும் (அச்வினௌ) அசுவினி தேவர்களும் (மருத: ச) மருத்துக்களும் (ஊஷ்மபா:ச) ஊஷ்மபரென்ற பிதிரர்களும் (கந்தர்வ யக்ஷாஸுர ஸித்த ஸங்கா:) கந்தருவர், யக்ஷர், அசுரர், சித்தர் முதலியோர் கூட்டங்களும் (ஸர்வே ஏவ ச) எல்லோருமே (விஸ்மிதா:) வியப்புற்று (த்வாம்) உன்னை (வீக்ஷந்தே) பார்க்கின்றார்கள்.

மூவுலகுங் காணவில்லை. அர்ஜுனனுக்கு அம்மாதிரித் தோற்றம் ஏற்பட்டது.

22. 11 ருத்ரர், 12 ஆதித்யர், 8 வசுக்கள், 49 மருத்துக்கள் விவரணம் 10, 21-23ல் காண்க. அசுவினி குமாரர்களைப்பற்றி 11-6ல் காண்க.

रूपं महत्ते बहु-वक्त्र-नेत्रं महाबाहो बहु-बाहूरु-पादम् ।
बहूदरं बहु-दंष्ट्राकरालं दृष्ट्वा लोकाः प्रव्यथिता-स्तथाहम्॥२३॥
नभः-स्पृशं दीप्त-मनेक-वर्णं व्यात्ताननं दीप्त-विशाल-नेत्रम् ।
दृष्ट्वा हि त्वां प्रव्यथितान्तरात्मा धृतिं न विन्दामि शमं
च विष्णो ॥ २४ ॥

ரூபம் மஹத்-தே பஹு-வக்த்ர-நேத்ரம்
மஹாபாஹோ பஹுபாஹூரு-பாதம் |
பஹூதரம் பஹு-தம்ஷ்டராகராலம்
த்ருஷ்ட்வா லோகா: ப்ரவ்யதிதாஸ்-ததாஹம்
|| 23 | (437)

நப: ஸ்ப்ருசம் தீப்த-மனேக-வர்ணம்
வ்யாத்தானனம் தீப்த-விசால-நேத்ரம் |
த்ருஷ்ட்வா ஹி த்வாம் ப்ரவ்யதிதாந்தராத்மா
த்ருதிம் ந விந்தாமி சமஞ் ச விஷ்ணோ || 24 || (438)

---

23. (மஹாபாஹோ) நெடுங்தோளா! (பஹுவக்த்ரநேத்ரம்) பலமுகங்களும் கண்களுமுடையதும் (பஹுபாஹூருபாதம்) பல தோள்களும் தொடைகளும் பாதங்களுமுடையதும் (பஹூதரம்) பல வயிறுகளுடையதும் (பஹுதம்ஷ்டராகராலம்) பல தெற்றிப் பற்களுடையதுமான (தே) உன்னுடைய (மஹத் ரூபம்) பேருருவை (த்ருஷ்ட்வா) பார்த்து (லோகா:) உலகங்கள் (ப்ரவ்யதிதா:) பயத்தால் அலந்திருக்கின்றன. (அஹம்) நானும் (ததா) அவ்வாறே.

24. (விஷ்ணோ) விஷ்ணுவே! (நப: ஸ்ப்ருசம்) வான் முகட்டைத் தொடுபவனும் (தீப்தம்) ஒளி வீசுபவனும்

ஸாத்யர்கள்—தக்ஷகன்னிகையான ஸாத்யையிடம் தருமரின் புத்திரர்கள் பன்னிருவர் ஸாத்யர்கள் எனப்படுவர்.

விச்வே தேவர்கள்—தக்ஷகன்னிகையான விசுவா தேவியினிடம் தருமரின் புத்திரர்கள் பதின்மர் விசுவே தேவர்கள் எனப்படுவர்.

दंष्ट्राकरालानि च ते मुखानि दृष्ट्वैव कालानल-सन्निभानि ।
दिशो न जाने न लभे च शर्म प्रसीद देवेश जगन्निवास॥२५॥

தம்ஷ்ட்ராகராலானி ச தே முகானி
த்ருஷ்ட்வைவ காலானல-ஸன்னிபானி |
திசோ ந ஜானே ந லபே ச சர்ம
ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ || 25 || (439)

(அநேக வர்ணம்) பல வர்ணங்களுடையவனும் (வ்யாத்தானனம்) திறந்த வாய்களுடையவனும் (தீப்த விசாலநேத்ரம்) கனல் வீசும் அகன்ற கண்களுடையவனுமான (த்வாம்) உன்னை (த்ருஷ்ட்வா) பார்த்து (ப்ரவ்யதிதாந்தராத்மா) நடுநடுங்கிய உள்ளமுடைய நான் (த்ருதிம்) தைரியத்தையும் (சமஞ்ச) அமைதியையும் (ந விந்தாமி ஹி) காணவில்லையே.

25. (தேவேச) தேவர்களுக்கிறைவா! (தம்ஷ்ட்ராகராலானி) தெற்றிப் பற்களுடையனவும் (காலானல-ஸந்நிபானி ச) ஊழிக்கனல் போன்றனுவுமான (தே) உன்னுடைய (முகானி) வாய்களை (த்ருஷ்ட்வா ஏவ) பார்த்த மாத்திரத்திலேயே (திச:) திககுத் திசைகளை (ந ஜானே) நான் காணவில்லை; (சர்ம ச) மனவமைதியையும் (ந லபே) அடையவில்லை; (ஜகந்நிவாஸ) உலகின் உறைவிடமானவனே (ப்ரஸீத) அருள் செய்வாய்.

ஊஷ்மபா:—(ஊஷ்ம = உஷ்ணமான) உஷ்ணமான அன்னத்தையே பிதிருக்கள் உண்பதால் பித்ரு கணங்களுக்கு 'ஊஷ்மபா:' எனக் காரணப் பெயர்.

அமீ—எந்த தேவக் கூட்டங்களை உன்னில் வேருகச் சற்று முன் கண்டேனே, அவர்களே இப்போது உன் விராட் ரூபத்துள் புகுவதைக் காண்கிறேன்.

अमी च त्वां धृतराष्ट्रस्य पुत्राः सर्वे सहैवावनिपाल-सङ्घैः ।
भीष्मो द्रोणः सूतपुत्र-स्तथासौ सहास्मदीयै-रपि योधमुख्यैः ॥

அமீ ச த்வாம் த்ருதராஷ்ட்ரஸ்ய புத்ரா:
ஸர்வே ஸஹைவாவனிபால-ஸங்கை: |
பீஷ்மோ த்ரோண: ஸூதபுத்ரஸ்-ததாஸௌ
ஸஹாஸ்மதீயை-ரபி யோதமுக்யை: || 26 || (440)

26. (அவனிபாலஸங்கை: ஸஹ ஏவ) உலகாளும் மன்னர் கூட்டங்களுடனே (அமீ) இந்த (த்ருதராஷ்ட்ரஸ்ய புத்ரா: ச ஸர்வே) திருதராஷ்டிரனுடைய புத்திரர்கள் அனைவரும் (ததா) அவ்வாறே (பீஷ்ம:) பீஷ்மர், (த்ரோண:) துரோணர் (அஸௌ ஸூத புத்ர:) இந்த ஸூத புத்திரனான கர்ணன் (அஸ்மதீயை:) நம்மவர்களான (யோதமுக்யை: அபிஸஹ) யுத்தவீரர்களுடனுங்கூட (த்வாம்) உன்னை நோக்கி;

26. அமீ ச த்வாம்—'அமீ ஸர்வே' என்றும் பாடம், இதற்குப்பின் ஐந்து சுலோகங்கள் சில பாடங்களில் இருந்ததாய்க் கூறப்படுகிறது. ஆனால் அவற்றில் புதிய கருத்து ஒன்றும் இல்லை. அவைகளுள் ஒன்று பின்வருமாறு:—

தவாத்புதங் கிந்து பவே-தஸஹ்யம்
கிம் வா சக்யம் பரத: கீர்த்தயிஷ்யே |
கர்த்தாஸி லோகஸ்ய யத: ஸ்வயம் விபோ
த்வத்த: ஸர்வம் த்வயி ஸர்வம் த்வமேவ ||

அமீ—எந்த துரியோதனாதியர் போருக்கு எதிர்த்து நின்றனரோ அவர்கள் உன் வாயுட் புகுந்து அழிவதைக் காண்கின்றேன்.

விசுவரூபம் காலம் கடந்த நிலை: இறந்த காலமும், எதிர் காலமும் நிகழ்காலத்தில் ஒடுங்கி நிற்கின்றது. நமது சிற்றறிவிற்கு அது புலப்படுவதில்லை. கீ. 7. 26.

वक्त्राणि ते त्वरमाणा विशन्ति दंष्ट्राकरालानि भयानकानि ।
केचि-द्विलग्ना दशनान्तरेषु संदृश्यन्ते चूर्णितै-रुत्तमाङ्गैः ॥२७॥
यथा नदीनां बहवोऽम्बु-वेगाः समुद्रमेवाभिमुखा द्रवन्ति ।
तथा तवामी नरलोक-वीरा विशन्ति वक्त्राण्यभिविज्वलन्ति ॥

வக்த்ராணி தே த்வரமாணு விசந்தி
தம்ஷ்ட்ராகராலானி பயானகானி |
கேசித்-விலக்ஞ தசனுந்தரேஷு
ஸந்த்ருச்யந்தே சூர்ணிதை-ருத்தமாங்கை:
|| 27 || (441)

யதா நதீனும் பஹவோऽம்பு-வேகா:
ஸமுத்ரமேவாபிமுகா த்ரவந்தி |
ததா தவாமீ நரலோக-வீரா
விசந்தி வக்த்ராண்-யபிவிஜ்வலந்தி || 28 || (442)

---

27. (த்வரமாணு:) பரபரப்புடையவர்களால் (தே) உன்னுடைய (தம்ஷ்ட்ரா கராலானி) தெற்றிப்பற்களுடைய (பயானகானி) பயங்கரமான (வக்த்ராணி) வாய்களில் (விசந்தி) புகுகின்றனர்; (கேசித்) சிலர் (சூர்ணிதை:) சூர்ணமான (உத்தமாங்கை:) தலைகளுடன் (தசனுந்தரேஷு விலக்ஞ:) பற்களினிடைப்பட்டு (ஸந்த்ருச்யந்தே) காணப்படுகின்றனர்.

28. (யதா) எவ்வண்ணம் (நதீனும்) நதிகளின் (பஹவ: அம்புவேகா:) திரண்டோடும் வெள்ளங்கள் (ஸமுத்ரமேவ அபிமுகா:) ஸமுத்திரத்தையே நோக்கி (த்ரவந்தி) ஓடுகின்றனவோ, (ததா) அவ்வண்ணமே (அமீ) இந்த (நரலோகவீரா:) மானிட உலக வீரர்கள் (அபிவிஜ்வலந்தி) எப்புறமும் கனல் பொங்கும் (தவ வக்த்ராணி) உன்வாய்களில் (விசந்தி) புகுகின்றனர்.

---

27. த்வரமாணு:—பரபரப்புடையவர்களாய் அவரவர் செய்த கருமத்தின் வேகத்தால் கவரப்பட்டு, சிசுபாலன் முதலியோர் யுத்தம் வரை கூடப் பொறுக்கவில்லை.

यथा प्रदीप्तं ज्वलनं पतङ्गा विशन्ति नाशाय समृद्ध-वेगाः ।
तथैव नाशाय विशन्ति लोका-स्तवापि वक्त्राणि समृद्ध-वेगाः ॥

யதா ப்ரதீப்தம் ஜ்வலனம் பதங்கா
விசந்தி நாசாய ஸம்ருத்த-வேகா: |
ததைவ நாசாய விசந்தி லோகாஸ்-
தவாபி வக்த்ராணி ஸம்ருத்த-வேகா: || 29 || (443)

---

29. (யதா) எவ்வண்ணம் (பதங்கா:) விட்டிற் பூச்சிகள் (ஸம்ருத்தவேகா:) மிகுந்த வேகத்துடன் (நாசாய) நாசமடைவதற்கு (ப்ரதீப்தம்) சுடர்விட்டெரியும் (ஜ்வலனம்) தீயில் (விசந்தி) புகுகின்றனவோ, (ததா) அவ்வண்ணம் (ஸம்ருத்தவேகா:) மிகுந்த வேகத்துடன் (லோகா: அபி) உலகத்துயிர்களும் (நாசாய ஏவ) நாசமடைவதற்கே (தவாபிவக்த்ராணி) உன்வாய்களில் (விசந்தி) புகுகின்றன.

---

29. ஒ—ஓதரு நதிகளெல்லாங் கடலடைந்தாற் போலுன்னிற்
போதரு பொருள்களெல்லா நின்னுளே புகுதக் [கண்டேன்
தீதனில் விட்டில் பாய்ந்தாற் போலநின் முகங்களுள்ளே
மாதவ வுயிர்களெல்லாம் வீழ்ந்து மாய்குநவுங் [கண்டேன்.

ஒளியினு லுலகமெல்லா மொழித்தவை யூண் போதாமல்
வெளியினு நீட்டி நீட்டி வெறுஞ் சுவை கொள்ளா நின்ருய்
தெளிகிலேனுன்னை யுன்றன் செய்கையுந் தெரிக்க மாட்டே
னளியினு லடியேற்குன்னை யுள்ளவா றருளிச் செய்வாய்.
(ப. கீ. ப.)

ஒ—சுடர்த் தீபத்திலே விழும் பூச்சிகள் போல்வருந்
தீமைகள் கொன்றிடுவான். (பாரதி)

लेलिह्यसे ग्रसमानः समन्ता-ल्लोकान् समग्रान् वदनै-र्ज्वलद्भिः ।
तेजोभि-रापूर्य जगत् समग्रं भास-स्तवोग्राः प्रतपन्ति विष्णो ॥३०
आख्याहि मे को भवा-नुग्ररूपो नमोऽस्तु ते देववर प्रसीद ।
विज्ञातु-मिच्छामि-भवन्त-माद्यं न हि प्रजानामि तव प्रवृत्तिम् ॥

லேலிஹ்யஸே க்ரஸமான: ஸமந்தாத்
லோகான் ஸமக்ரான் வதனைர்-ஜ்வலத்பி: |
தேஜோபி-ராபூர்ய ஜகத் ஸமக்ரம்
பாஸஸ்-தவோக்ரா: ப்ரதபந்தி விஷ்ணோ ||30||(444)
ஆக்யாஹி மே கோ பவா-னுக்ரரூபோ
நமோऽஸ்து தே தேவவர ப்ரஸீத |
விஜ்ஞாது-மிச்சாமி பவந்த-மாத்யம்
ந ஹி ப்ரஜாநாமி தவ ப்ரவ்ருத்திம் || 31 || (445)

---

30. (ஜ்வலத்பி:) கனல் வீசும் (வதனை:) வாய்களால் (ஸமக்ரான் லோகான்) உலகங்களனைத்தையும் (க்ரஸமான:) விழுங்கி (ஸமந்தாத்) எத்திசையிலும் (லேலிஹ்யஸே) நாவால் நக்கித் துளாவுகிறாய்; (விஷ்ணோ) விஷ்ணுவே! (தவ) உன்னுடைய (உக்ரா:) கடுமையான (பாஸ:) கிரணங்கள் (தேஜோபி:) கனலால் (ஸமக்ரம் ஜகத்) உலகனைத்தையும் (ஆபூர்ய) நிரப்பி (ப்ரதபந்தி) எரிக்கின்றன.

31. (உக்ரரூப:) பயங்கரமான உருவுடைய (பவான்) நீ (க:) யார்? (மே) எனக்கு (ஆக்யாஹி) சொல்; (தே) உனக்கு (நம: அஸ்து) நமஸ்காரம் உரித்தாகுக. (தேவ வர) தேவசிரேஷ்டனே (ப்ரஸீத) அருள் புரிவாய். (ஆத்யம்) ஆதியாகிய (பவந்தம்) உன்னை (விஜ்ஞாதும்) அறிவதற்கு (இச்சாமி) விரும்புகிறேன். (தவ) உன்னுடைய (ப்ரவ்ருத்திம்) செய்

---

30. ஒளி தன் கிரணங்களால் உன் உணவைப் பாகம் செய்கின்றது போலும்.

श्रीभगवानुवाच—

कालोऽस्मि लोकक्षयकृत् प्रवृद्धो लोकान् समाहर्तु-मिह प्रवृत्तः ।
ऋतेऽपि त्वां न भविष्यन्ति सर्वे येऽवस्थिताः प्रत्यनीकेषु योधाः

ஸ்ரீ பகவானுவாச—

காலோऽஸ்மி லோகக்ஷயக்ருத் பரவ்ருத்தோ
லோகான் ஸமாஹர்த்து-மிஹ ப்ரவ்ருத்த: |
ருதேऽபி த்வாம் ந பவிஷ்யந்தி ஸர்வே
யேऽவஸ்திதா: ப்ரதயனீகேஷு யோதா: || 32 || (446)

கையை (ந ப்ரஜாநுமி ஹி) உண்மையில் நான் உணர வில்லை.

ஸ்ரீ பகவான் கூறியது—

32. (லோகக்ஷயக்ருத்) உலகை அழிக்கும் (ப்ரவ்ருத்த: கால:) வலிமையுடைய காலனுக (அஸ்மி) நான் உளேன். (லோகான்) உலகங்களை (ஸமாஹர்த்தும்) ஒடுக்குவதற்கு (இஹ) இங்கு (ப்ரவ்ருத்த:) உற்றேன். (த்வாம் ருதே அபி) நீ இல்லாமலுங்கூட (ப்ரத்யனீகேஷு) எதிரிச் சேனைகளில் (யே யோதா:) எந்தப் போர் வீராகள் (அவஸ்திதா:) கூடியுள்ளார் களோ (ஸர்வே) எல்லோரும் (ந பவிஷ்யந்தி) மீண்டு வாழமாட்டார்கள்.

ருதேऽபி த்வாம்—உன்னை அபேக்ஷியாமலேயே உன் கக்ஷியிலுள்ளவர்களிலும் பலர் எப்படி நீ கொல்லாமல் காலவலியால் மரணமடையப் போகின்றனரோ, அங்ஙனமே எதிர்க்கக்ஷியிலும் நல்லோராகிய பீஷ்மாதியரும் தீயோராகிய துரியோதனுதியரும் மரணமடைவது நிச்சயம். அவர்களைக் கொன்றுவிடுவதோ ரக்ஷிப்பதோ உன் இச்சையால் நிகழ்வதன்று. அவ்வெண்ணம் அஜ்ஞானம் என்பதை உணர்வாய்.

32. கொடியவினை யாது மிலனே யென்னும்
கொடியவினையாவேனும் யானே யென்னும்
கொடியவினை செய்வேனும் யானே யென்னும்
கொடியவினை தீர்ப்பேனும் யானே யென்னும்
(நம்மாழ்வார்.)

तस्मात् त्वमुत्तिष्ठ यशो लभस्व
जित्वा शत्रून् भुङ्क्ष्व राज्यं समृद्धम् ।
मयैवैते निहताः पूर्वमेव
निमित्त-मात्रं भव सव्यसाचिन् ॥ ३३ ॥

தஸ்மாத் த்வமுத்திஷ்ட யசோ லபஸ்வ
ஜித்வா சத்ரூன் புங்க்ஷ்வ ராஜ்யம் ஸம்ருத்தம்|
மயைவைதே நிஹதா: பூர்வமேவ
நிமித்த-மாத்ரம் பவ ஸவ்யஸாசின்
|| 33 || (447)

---

33. (தஸ்மாத்) ஆகையால், (த்வம்) நீ (உத்திஷ்ட) எழுந்திரு; (யச:) புகழை (லபஸ்வ) அடை; (சத்ரூன்) பகைவர்களை (ஜித்வா) ஜயித்து (ஸம்ருத்தம்) செல்வம் நிறைந்த (ராஜ்யம்) ராஜ்யத்தை (புங்க்ஷ்வ) அனுபவி; (மயா ஏவ) என்னாலேயே (பூர்வம் ஏவ) முன்பே (ஏதே) இவர்கள் (நிஹதா:) கொல்லப்பட்டனர். (ஸவ்யஸாசின்) இடது கையாலும் அம்பெய்யும் வீரா! (நிமித்தமாத்ரம் பவ) நீ நிமித்த மாத்திரமாக இருப்பாய்.

உலகத்தின் தனி நியதி ஒன்று உண்டு. அது பகவானுடைய இச்சை. அதை மனிதனுடைய புத்தி ஆழங்காண முடியாது. அதை நமது ஆற்றலால் வெல்லலாம் என்று எண்ணுவதும் மாற்றிவிடலாம் என்று எண்ணுவதும் பெரிய மதியீனம்.

33. நிஹதா: பூர்வமேவ—
ஒ—ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணும் ஹ்ருதயானி வ்யதாரயத் |
(1. 19.)
அமீ ச த்வாம் த்ருதராஷ்ட்ரஸ்ய புத்ரா: ... ... | (11. 26.)
காலனால் முன்பே கொல்லப்பட்டவர்களின் சாவுக்கு விஷம், ஸர்ப்பம், வியாதி, யுத்தம் முதலியவை நிமித்த மாத்திரம். ஆகையால் யுத்தத்தில் பந்துக்களையும் மித்திரர்களையும் கொல்லும் பாபம் அர்ஜுனனைச் சாராது என்றவாறு. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ அதற்கு நாயகமே' என்றும் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்றும் இருத்தல் வேண்டும்.

द्रोणं च भीष्मं च जयद्रथं च कर्णं तथान्यानपि योधवीरान् ।
मया हतांस्त्वं जहि मा व्यथिष्ठा युध्यस्व जेतासि रणे सपत्नान् ॥

த்ரோணஞ் ச பீஷ்மஞ் ச ஜயத்ரதஞ் ச
கர்ணம் ததான்யானபி யோதவீரான் |
மயா ஹதாம்ஸ்த்வம் ஜஹி மா வ்யதிஷ்டா
யுத்யஸ்வ ஜேதாஸி ரணே ஸபத்னன்
|| 34 || (448)

34. (த்ரோணஞ் ச) துரோணரையும் (பீஷ்மஞ் ச) பீஷ்மரையும் (ஜயத்ரதஞ்ச) ஜயத்ரதனையும் (கர்ணம்) கர்ணனையும (ததா) அவ்வாறே (அன்யான்) மற்ற (யோதவீரான் அபி) போர்வீரர்களையும்—மயா ஹதான்) என்னல் கொல்லப்பட்ட இவர்களை—(த்வம்) நீ (ஜஹி) கொல்வாய். (மா வ்யதிஷ்டா:) பயந்து வருந்தாதே; (ரணே) யுத்தத்தில் (ஸபத்னன்) எதிரிகளை ஜேதாஸி) ஜயிப்பாய் (யுத்யஸ்வ) போர் புரி.

'வாள் தன்னை ஆக்கச் சொல்லவில்லை; தன்னை உபயோகிப் பவனைத் தடுக்கவில்லை. தான் உடைந்து போனலும் ஒதுக்கி வைக்கப்பட்டாலும் வருந்தவில்லை. ஆக்கப்படுவதலும் ஆனந்த முண்டு; உபயோகிக்கப்படுவதிலும் ஆனந்தமுண்டு; ஒதுக்கி வைக்கப்படுவதிலும் ஆனந்தமுண்டு. அந்த ஸமமான ஆனந்தத் தைக் கண்டுகொள்வாய்'. (ஸ்ரீ அரவிந்தர்.)

ஸவ்யஸாசின்—இடது கையாலும் பாணம் தொடுக்குந் திறமையுடையவனே! (எவ்வளவு திறமைவாய்ந்தவனுயினும் மனிதன் பகவத் ஸங்கல்பத்தின்படி நடக்கவேண்டியவனே யாவான்.)

"மகனே யொன்றை யாக்குதல் மாற்றுதல்
அழித்திடலெல்லாம் நின் செயலன்று காண்" (பாரதி.)

34. துரோணுச்சாரியார் தனுர்வேதத்தில் நிபுணர்; அவர் கையில் அம்புள்ள வரை எவரும் ஜயிக்கமுடியாது. பீஷ்மருடைய வீரம் ஜகத் பிரசித்தம். ஜயத்ரதன் திருதராஷ்டிரனுடைய ஒரே பெண்ணுன துச்சலையின் கணவன், சிறந்த வில்லாளி, சிவனை உபாஸித்து அரிய வரங்களைப் பெற்றவன். கர்ணன் ஒருவனே எதிர்க்கக்ஷியில் அர்ஜுனனுக்குச் சமமானவன். இவர்கள் அனைவ ரிடத்தும் அர்ஜுனனுக்கு மிகுந்த நன்மதிப்பு உண்டு.

सञ्जय उवाच—

एतच्छ्रुत्वा वचनं केशवस्य कृताञ्जलि-र्वेपमानः किरीटी ।

नमस्कृत्वा भूय एवाह कृष्ण सगद्गदं भीतभीतः प्रणम्य॥३५॥

ஸஞ்ஜய உவாச—

ஏதச்ச்ருத்வா வசனம் கேசவஸ்ய
க்ருதாஞ்ஜலிர்-வேபமான: கிரீடீ |
நமஸ்க்ருத்வா பூய ஏவாஹ க்ருஷ்ணம் ||
ஸகத்கதம் பீதபீத: ப்ரணம்ய || 35 || (449)

ஸஞ்ஜயர் கூறியது—

35, (கேசவஸ்ய) கேசவனுடைய (ஏதத்) இந்த (வசனம்) வார்த்தையை (ச்ருத்வா) கேட்டு (வேபமான:) நடுக்கமுடையவனாய் (கிரீடீ) அர்ஜுனன் (க்ருதாஞ்ஜலி:) ஸககூப்பி (நமஸ்க்ருத்வா) நமஸ்கரித்து பீதபீத:) மிகப் பயந்து (ப்ரணம்ய) வணங்கி (பூய:ஏவ) மீண்டும் (ஸகத்கதம்) தழுதழுத்த குரலில் க்ருஷ்ணம்) கிருஷ்ணனை நோக்கி (ஆஹ) கூறலுற்றான்.

---

35. ஒ—விசுவ ரூபத்தைக் கண்டாரெனினும் அவரவர் மனத்தின் பக்குவ நிலைப்படியே அதன் உண்மையை உணர்ந்தனுபவிப்பர். முனிவர் காண்பதொருவாறு. அர்ஜுனன் கண்டதொருவாறு. துரியோதனனும் கிருஷ்ணன் தூதுவந்தபோது விசுவரூபங் கண்டான் ; அவன் அதைக் கண்ணனுடைய கபடம் என்று இகழ்ந்தான்.

தன்னிலுயர்ந்தவர் யாருமிலா முகில் சதுர்மறையின் படியே
யெங்கிலமுந் திருவடியின் மறைந்திட விப்படி நின்றிடவும்
பின்னையுமஞ்சி யயர்ந்தில னெஞ்சு பெயர்ந்தில னசனமுஞ்
சென்னியிலுங் கரம் வைத்திலன் வண்புகழ் சிறிது
மொழிந்திலனே.

(பொய்யாஸனத்தில் விசுவரூபம்—வில்லிபுத்தூரார் பாரதம்.)

கிரீடீ—அர்ஜுனன் தேவேந்திரனலளிக்கப்பெற்ற பிரகாசம் பொருந்திய சிறந்த கிரீடமணிந்திருந்ததால் ‘ கிரீடீ ’ எனச் சிறப்புப் பெயர் பெற்றான்.

अर्जुन उवाच—
स्थाने हृषीकेश तव प्रकीर्त्या जगत् प्रहृष्य-त्यनुरज्यते च ।
रक्षांसि भीतानि दिशो द्रवन्ति सर्वे नमस्यन्ति च सिद्धसङ्घाः ॥

कस्माच्च ते न नमेरन् महात्मन् गरीयसे ब्रह्मणोऽप्यादिकर्त्रे ।
अनन्त देवेश जगन्निवास त्वमक्षरं सदस-त्तत्परं यत् ॥ ३७ ॥

அர்ஜுன உவாச—
ஸ்தானே ஹ்ருஷீகேச தவ ப்ரகீர்த்யா
ஜகத் ப்ரஹ்ருஷ்ய-த்யனுரஜ்யதே ச |
ரக்ஷாம்ஸி பீதானி திசோ த்ரவந்தி
ஸர்வே நமஸ்யந்தி ச ஸித்தஸங்கா:
|| 36 || (450)

கஸ்மாச்ச தே ந நமேரன் மஹாத்மன்
கரீயஸே ப்ரஹ்மணோऽப்யாதி-கர்த்ரே |
அனந்த தேவேச ஜகந்நிவாஸ
த்வமக்ஷரம் ஸதஸத் தத்பரம் யத் || 37 || (451)

அர்ஜுனன் கூறியது—

36. (ஹ்ருஷீகேச) கிருஷ்ண ! (தவ) உன்னுடைய (ப்ரகீர்த்யா) புகழைப் பேசுவதால் (ஜகத்) உலகம் (ப்ரஹ்ருஷ்யதி களிக்கின்றது. (அனுரஜ்யதே ச) ஆனந்தத்தையும்அடைகின்றது (ரக்ஷாம்ஸி)ராக்ஷஸக் கூட்டங்கள் (பீதானி) பயந்தவைகளாய் (திச:) திசைநோக்கி (த்ரவந்தி) ஓடிகின்றன ; (ஸர்வே ஸித்தஸங்கா ச) சித்தர் கணங்கள் எல்லாம் (நமஸ்யந்தி) வணங்குகின்றனர். (ஸ்தானே) இது பொருத்தமே.

37. (மஹாத்மன்) பெரியோனே ! (அனந்த) அளவிறந்தவனே ! (தேவேச) தேவர்களிறைவா! (ஜகந்

---

36. 'அயம் ச்லோகோ ரக்ஷோக்ன-மந்த்ரத்வேன மந்த்ர சாஸ்த்ரே ப்ரஸித்த:' (மதுஸூதன சரஸ்வதி.)

त्वमादिदेवः पुरुषः पुराण-स्त्वमस्य विश्वस्य परं निधानम् ।
वेत्तासि वेद्यं च परं च धाम त्वया ततं विश्व-मनन्तरूप ॥ ३८ ॥
वायु-र्यमोऽग्नि-र्वरुणः शशाङ्कः प्रजापतिस्त्वं प्रपितामहश्च ।
नमो नमस्तेऽस्तु सहस्रकृत्वः पुनश्च भूयोऽपि नमो नमस्ते ॥३९

த்வமாதிதேவ: புருஷ: புராணஸ்
த்வமஸ்ய விச்வஸ்ய பரம் நிதானம்
வேத்தாஸி வேத்யஞ்ச பரஞ் ச தாம
த்வயா ததம் விச்வ-மனந்த-ரூப ‖ 38 ‖ (452)
வாயுர்-யமோऽக்னிர் வருண சசாங்க:
ப்ரஜாபதிஸ்-த்வம் ப்ரபிதாமஹச்ச
நமோ நமஸ்தேऽஸ்து ஸஹஸ்ர-க்ருத்வ:
புனச்ச பூயோऽபி நமோ நமஸ்தே ‖ 39 ‖

வாஸ) உலகின் உறைவிடமே, (ப்ரஹ்மண: அபி) பிரம்மாவுக்கும் (கரீயஸே) பெரியவனும் (ஆதி கர்த்ரே ச) முதற்காரணமும் ஆகியவனுகிய (தே) உனக்கு (கஸ்மாத்)ஏன் (ந நமேரன்) வணங்குதல் செய்யமாட்டார்கள்? (அக்ஷரம்) அழியாப் பொருளும் (ஸத் அஸத்) உண்மையும் இன்மையும், (பரம் யத்) அப்பாலுள்ளதும் எதுவோ (தத்) அதுவும் (த்வம்) நீயே.

38. (அனந்தரூப) எல்லையிலா உருவுடையோனே! (த்வம்) நீ (ஆதிதேவ:) ஆதிதேவன், (புராண: புருஷ:) பழைய புருஷன்; (த்வம்) நீ (அஸ்ய விச்வஸ்ய) இவ்வுலகிற்கு (பரம் நிதானம்) மேலான உறைவிடம்; (வேத்தா) யாவும் அறிபவனுகவும் (வேத்யஞ் ச) அறியப்படும் பொருளாகவும் (பரம் தாம ச) எல்லை நிலமாகவும்(அஸி) இருக்கின்ருய்; (த்வயா) உன்னுல் (விச்வம்) உலகம் (ததம்) நிரம்பியுள்ளது.

39. (த்வம் நீயே (வாயு) வாயு (யம:) யமன், (அக்னி:) அக்னி, (வருண:) வருணன், (சசாங்க:)

---

39. ப்ரபிதாமஹ:—உலகில் பிரஜைகளைப் பெருக்கிய காசி

नमः पुरस्ता-दथ पृष्ठतस्ते नमोऽस्तु ते सर्वत एव सर्व ।
अनन्तवीर्यामित-विक्रमस्त्वं सर्वं समाप्नोषि ततोऽसि सर्वः ॥४०

நம: புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே
நமோऽஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ |
அனந்த-வீர்யாமித-விக்ரமஸ்த்வம்
ஸர்வம் ஸமாப்னோஷி ததோஸி ஸர்வ:
|| 40 || (454)

சந்திரன் (ப்ரஜாபதி:) பிரஜாபதி (ப்ரபிதாமஹ: ச) பிரமமாவுக்குந் தந்தை (தே) உனக்கு (நம: நம:) மீண்டும் மீண்டும் நமஸ்காரம் (அஸ்து) உரித்தாகுக. (ஸஹஸ்ரக்ருத்வ:) ஆயிரம் முறையும் (புன: ச) அதற்கு மேலும் (பூய: அபி) அதிகமாகவும் (தே) உனக்கு (நம: நம:) நமஸ்காரங்கள்.

40. (ஸர்வ) அனைத்துமாவோனே)! (தே) உனக்கு (புரஸ்தாத்) முன்னும் (அத) பிறகு (ப்ருஷ்டத:) பின்னும் (நம:) நமஸ்காரம். (தே) உனக்கு (ஸர்வத ஏவ) எல்லாப் பக்கங்களிலும் (நம: அஸ்து) நமஸ்காரம் உரித்தாகுக. (அனந்தவீர்யாமித: விக்ரம:) அளவிலாத வீரியமுடையவனும் அளவிலாத பராக்ரம முடையவனும் (த்வம்) நீ; (ஸர்வம்) எல்லாவற்றையும் (ஸமாப்னோஷி) வியாபிக்கின்றாய்: (தத:) ஆகையால் (ஸர்வ: அஸி) எல்லாம் ஆகின்றாய்.

யபர் முதலிய ஆதி ரிஷிகளுக்கு பிரம்மா பிதாவாகையால் உலகத்தார்க்குப் 'பிதாமஹர்' ஆனார். பிரம்மாவுக்கும் பிதாவானமையின் பகவான் ப்ரபிதாமஹர், எனப்பட்டார்.

40. 'வீர்யம்' சரீர பலம்; 'விக்ரமம்' சஸ்திர பலம்.

सखेति मत्वा प्रसभं यदुक्तं हे कृष्ण हे यादव हे सखेति ।
अजानता महिमानं तवेदं मया प्रमादात् प्रणयेन वापि ॥ ४१ ॥
यच्चावहासार्थ-मसत्कृतोऽसि विहार-शय्यासन-भोजनेषु ।
एकोऽथवाप्यच्युत तत्समक्षं तत्क्षामये त्वामह-मप्रमेयम् ॥ ४२ ॥

ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்
ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி |
அஜானதா மஹிமானம் தவேதம்
மயா ப்ரமாதாத் ப்ரணயேன வாபி || 41 || (455)

யச்சாவஹாஸார்த்த-மஸத்க்ருதோऽஸி
விஹார சய்யாஸன-போஜனேஷு |
ஏகோऽதவாப்யச்யுத தத்ஸமக்ஷம் |
தத் க்ஷாமயே த்வாமஹ-மப்ரமேயம்
|| 42 || (456)

41-42. (தவ) உன்னுடைய (மஹிமானம்) பெருமையையும் (இதம்) இந்த விசுவரூபத்தையும் (அஜானதா) அறியாத (மயா) என்னுல் (ப்ரமாதாத்) கவனக் குறைவாலோ (ப்ரணயேன வா அபி) அன்பின் உரிமையாலோ (ஸகா இதி மத்வா) நணபன் என்று கருதி (ஹே க்ருஷ்ண) அடே கிருஷ்ணு! (ஹே யாதவ) அடே யாதவா! (ஹே

---

41. மஹிமானம் தவேமம். —பா. பே.

42. ஓ—நர்மாண்யுதார-ருசிரஸ்மித-சோபிதானி
ஹே பார்த்த ஹேऽர்ஜுன ஸகே குருநந்தனேதி |
ஸஞ்ஜல்பிதானி நரதேவ ஹ்ருதி-ஸ்ப்ருசானி
ஸ்மர்த்துர்-லுடந்தி ஹ்ருதவம் மம மாதவஸ்ய ||
சய்யாஸனுடன-விகத்தன-போஜனுதிஷு
ஐக்யாத் வயஸ்ய ருதவானிதி விப்ரலப்த:
ஸக்யு: ஸகேவ பித்ருவத தனயஸ்ய ஸர்வம்
ஸேஹே மஹாமஹிதயா குமதே-ரகம் மே ||
(பாக. 1-15-18-19.)

पितासि लोकस्य चराचरस्य त्वमस्य पूज्यश्च गुरु-र्गरीयान् ।
न त्वत्समोऽस्त्यभ्यधिकः कुतोऽन्यो लोकत्रयेऽप्यप्रतिम-प्रभाव ॥

பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய
த்வமஸ்ய பூஜ்யச்ச குருர்-கரீயான் ।
ந த்வத்ஸமோऽஸ்த்-யப்யதிக: குதோऽன்யோ
லோகத்ரயேऽப்யப்ரதிம-ப்ரபாவ ‖ 43 ‖ (457)

ஸகே) அடே நண்பா ; (இதி) என்று (ப்ரஸபம்) துடுக்காக (யத்) எது (உக்தம்) சொல்லப்பட்டதோ ; (அச்யுத) கிருஷ்ணு ! (விஹார-சய்யாஸன-போஜனேஷு) விளையாட்டிலும் படுக்கையிலும் உட்கார்ந்திருக்கையிலும் உண்ணுகையிலும் (ஏக:)ஒருவனுகவோ (அதவா) அல்லது (தத் ஸமக்ஷம் அபி) பிறருடன் கூடியிருக்கையிலும் (அவஹாஸார்த்தம்) வேடிக்கைக்காக (யத் அஸத் க்ருத: அஸி) நீ எதில் அவமதிக்கப் பட்டனையோ, (தத்) அதையும் (அஹம்) நான் (அப்ரமேயம்) அளவிடுதற்கரிய (த்வாம்) உன்னை (க்ஷாமயே) மன்னித்தருளும்படி வேண்டுகிறேன்.

43. (அப்ரதிமப்ரபாவ) ஒப்புயர்வில்லாத பெருமை வாய்ந்தவனே ! (த்வம்) நீ (அஸ்ய சராசரஸ்ய

மாதவனுடைய கம்பீரமும் அழகுமிக்க புன்னகையையும் பரிஹாஸ வார்த்தைகளையும் 'பார்த்தா, அர்ஜுனு, நண்பா, குருநந்தனு' எனவழைத்துப் பேசும் ஸம்பாஷணைகளையும், நினைத்து என் நெஞ்சு உருகுகின்றது. சயனம், ஆஸனம், சஞ்சாரம், பேச்சு, போஜனம் முதலியவைகளில் என்னைத் தனக்கிணையாய் வைத்த அவரை ஒரு சமயம் 'நீ சத்தியமுடையவனு?' என்று அவமதித்தேன். அவர் தன் மகிமையால் புத்தியில்லாத என் குற்றம் யாவற்றையும் நண்பனை நண்பன் போலும், பிள்ளையைத் தந்தை போலும் பொறுத்தருளினுர்.

ஒ—அறியாத பிள்ளைகளோம் அன்பினுல் உன்றன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே
இறைவா ! நீ தாராய் பறை ஏலோர் எம்பாவாய்.
(திருப்பாவை.)

तस्मात् प्रणम्य प्रणिधाय कायं प्रसादये त्वा-मह-मीश-मीड्यम् ।
पितेव पुत्रस्य सखेव सख्युः प्रियः प्रियायार्हसि देव सोढुम् ॥

தஸ்மாத் ப்ரணம்ய ப்ரணிதாய காயம்
ப்ரஸாதயே த்வா-மஹ-மீச-மீட்யம் |
பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்யு:
ப்ரிய: ப்ரியாயார்ஹஸி தேவ ஸோடும் ||44|| (458)

லோகஸ்ய) இந்த அசைவதும் அசையாததுமாகிய உலகிற்கு (பிதா) தகப்பனும் (பூஜ்ய: ச) பூஜித்தற் குரியவனும் (குரு:கரீயான்) பெரியவர்க்குப் பெரியவனும் (அஸி) ஆகின்றுய்; (லோகத்ரயே அபி) மூவுலகிலும் (த்வத்ஸம:) உனக்குச் சமமானவர் (ந;அஸ்தி) இல்லை; (அப்யதிக:) இன்னும் மேலானவர் (அன்ய:) வேறெருவர் (குத:) எங்ஙனம்?

44. (தேவ) தேவா! (தஸ்மாத்) ஆகையால் (அஹம்) நான் (காயம்)உடலை (ப்ரணிதாய) தாழக் கிடத்தி (ப்ரணம்ய) நமஸ்கரித்து (ஈட்யம்) பூஜித்தற் குரிய (ஈசம் த்வாம்) இறைவனுகிய உன்னை (ப்ரஸாதயே) இறைஞ்சுகின்றேன். (புத்ரஸ்ய பிதா இவ) மகன் பிழையைத் தந்தைபோலும் (ஸக்யு: ஸகா இவ) நண்பன் பிழையை நண்பன்போலும் (ப்ரியாயா: ப்ரிய: இவ) காதலியின் பிழையைக காதலன் போலும் (ஸோடும் அர்ஹஸி) பொருத்தருளுதல் வேண்டும்.

---

44. **ப்ரணம்ய ப்ரணிதாய ப்ரஸாதயே**—முக்கரணங்களாலும் வணங்குதல்.

अदृष्टपूर्वं हृषितोऽस्मि दृष्ट्वा भयेन च प्रव्यथितं मनो मे ।
तदेव मे दर्शय देव रूपं प्रसीद देवेश जगन्निवास ॥ ४५ ॥
किरीटिनं गदिनं चक्र-हस्त-मिच्छामि त्वां द्रष्टुमहं तथैव ।
तेनैव रूपेण चतुर्भुजेन सहस्रबाहो भव विश्वमूर्ते ॥ ४६ ॥

அத்ருஷ்ட-பூர்வம் ஹ்ருஷிதோऽஸ்மி த்ருஷ்ட்வா
பயேன ச ப்ரவ்யதிதம் மனோ மே ||
ததேவ மே தர்சய தேவ ரூபம்
ப்ரஸீத தேவேச ஜகந்நிவாஸ || 45 || (459)

கிரீடினங் கதினஞ் சக்ர-ஹஸ்தம்
இச்சாமி த்வாம் த்ரஷ்டு-மஹம் ததைவ |
தேனைவ ரூபேண சதுர்ப்புஜேன
ஸஹஸ்ரபாஹோ பவ விச்வமூர்த்தே || 46 || (460)

---

45. (தேவ) தேவா! (அத்ருஷ்டபூர்வம்) முன்பு காணாததை (த்ருஷ்ட்வா) கண்டு (ஹ்ருஷித: அஸ்மி) மகிழ்ச்சி பொங்குபவனாய் இருக்கின்றேன். (பயேன ச) பயத்தாலும் (மே) என்னுடைய (மன:) மனது (ப்ரவ்யதிதம்) குழம்பியிருக்கின்றது. (தத்) அந்த—இயற்கையான—(ரூபம் ஏவ) உருவத்தையே (மே) எனக்கு (தர்சய) காட்டுவாய். (தேவேச) தேவர்க்கு ஈசனே! (ஜகந்நிவாஸ) உலகின் உறைவிடமே! (ப்ரஸீத) கருணை செய்வாய்.

46. (அஹம்) நான் (ததா ஏவ) அவ்வாறே மேலும் (த்வாம்) உன்னை (கிரீடினம் கதினம் சக்ர

---

45. **தேவரூபம்**—'தேவ' என்னும் பதத்தை ரூபத்துக்கு விசேஷணமாகவும் கொள்ளலாம். அப்போது நான்கு கைகளுடனும் சங்கம் சக்ரம் கதைகளுடனும் கூடிய விஷ்ணு ரூபம் (ஸாதாரண மனுஷ்ய ரூபமன்று) எனப் பொருள்படும்.

46. இந்த யுத்தத்தில் பகவான் ஆயுதம் எடுப்பதில்லையென்று விரதங்கொண்டு கையில் சவுக்கும் லகானும் பிடித்திருந்தார்.

श्री भगवानुवाच—
मया प्रसन्नेन तवार्जुनेदं रूपं परं दर्शित-मात्मयोगात् ।
तेजोमयं विश्व-मनन्त-माद्यं यन्मे त्वदन्येन न दृष्टपूर्वम् ॥ ४७ ॥

ஸ்ரீ பகவானுவாச—
மயா ப்ரஸன்னேன தவார்ஜுனேதம்
ரூபம் பரம் தர்சித-மாத்மயோகாத் |
தேஜோமயம் விச்வ-மனந்த-மாத்யம்
யன்மே த்வதன்யேன ந த்ருஷ்ட-பூர்வம்
|| 47 || (461)

ஹஸ்தம்) கிரீடந்தரித்து கதை பிடித்துச் சக்கரம் கையில் ஏந்தியவனைய் (த்ரஷ்டும்) காணவும் (இச்சாமி) விரும்புகிறேன். (ஸஹஸ்ரபாஹோ) ஆயிரம் தோள்களையுடையவனே (சதுர்ப்புஜேன) நான்கு கைகளுடன் (தேனைவ ரூபேண) அதே உருவமுடையவனாக (பவ) ஆவாய்.

ஸ்ரீ பகவான் கூறியது—

47. (அர்ஜுன) அர்ஜுனா! (ப்ரஸன்னேன) அன்புடன் கூடிய (மயா) என்னால் (ஆத்ம யோகாத்) எனது யோக ஐசுவரிய சக்தியால் (தவ) உனக்கு (இதம்) இந்த (தேஜோமயம்) ஒளி நிறைந்ததும் (அனந்தம்) எல்லையில்லாததும் (ஆத்யம்) முதன்மையானதுமான (மே) என்னுடைய (பரம்) உயர்ந்த (விச்வம் ரூபம்) விசுவ ரூபம் (யத்) எது (த்வதன்யேன) உன்னைத்தவிர எவராலும் (ந த்ருஷ்ட பூர்வம்) முன் காணப்படாததோ—அது (தர்சிதம்) காட்டப்பட்டது.

அர்ஜுனன் திவ்ய ஆயுதங்கள் தாங்கிய வடிவையுங் காண விரும்புகின்றான்.

47. 'ந வேத யஜ்ஞாத்யயனை:' என்று 47, 48ல் கூறியது விராட் ரூபத்தைப் பற்றி 'நாஹம் வேதை:' என்று 52, 53ல் கூறி

न वेद-यज्ञाध्ययनै-र्न दानैर्न च क्रियाभिर्न तपोभिरुग्रैः ।
एवंरूपः शक्य अहं नृलोके द्रष्टुं त्वदन्येन कुरुप्रवीर ॥ ४८ ॥

ந வேத-யஜ்ஞாத்யயனைர்-ந தானைர்-
ந ச க்ரியாபிர்-ந தபோபிருக்ரை: |
ஏவம் ரூப: சக்ய அஹம் ந்ருலோகே
த்ரஷ்டும் த்வதன்யேன குருப்ரவீர || 48 || (462)

---

48. (குருப்ரவீர) குருவம்சத்துப் பெருவீரா! (ஏவம் ரூப:) இவ்வுருவில் (அஹம்) நான் (த்வதன்யேன) உன்னைத்தவிர எவராலும் (ந்ருலோகே) மனித உலகில் (த்ரஷ்டும்) காண்பதற்கு, (வேத-யஜ்ஞாத்யயனை:) வேதத்தையும் வேள்வி முறையையும் ஓதுவதாலும் (ந சக்ய:) அடையக்கூடியவன் அன்று; (ந தானை:) தானங்களாலும் அன்று; (ந ச க்ரியாபி:) கிரியைகளாலுமன்று (ந உக்ரை: தபோபி:) கடுங் தவங்களாலுமன்று.

யது நான்கு கைகளுடன் கூடிய விஷ்ணு ரூபத்தைப்பற்றி, பின் பகவான் மீண்டும் மனித வடிவைக் காட்டியருளினார்.

த்வதன்யேன—உன்னையன்றிப் பிறரால் காணப்படாதது

நான் அளித்த திவ்ய திருஷ்டியால் நீ கண்டவாறு என் விசுவ ரூபத்தை வேறு எவருங்கண்டதில்லை. மண் தின்ற வாயில் யசோதை கண்டதும் கௌரவ ஸபையில் துரியோதனாதியர் கண்டதும் நீ கண்டதிற் கொப்பாகாது.

48. வேத நெறியாலு மிகு வேள்விகளினாலு
மாதவ மதாலுமகிழ் தான வகையாலுங்
காதலர்கள் காண முடியா வடிவு கண்டா
யேதமறி பா வெனது யோகவலி யாலே. (ப. கீ. ப.)

मा ते व्यथा मा च विमूढ-भावो दृष्ट्वा रूपं घोरमीदृङ्ममेदम् ।
व्यपेतभीः प्रीतमनाः पुनस्त्वं तदेव मे रूपमिदं प्रपश्य ॥ ४९ ॥

सञ्जय उवाच—

इत्यर्जुनं वासुदेव-स्तथोक्त्वा स्वकं रूपं दर्शयामास भूयः ।
आश्वासयामास च भीतमेनं भूत्वा पुनः सौम्यवपु-र्महात्मा ॥५०

மா தே வ்யதா மா ச விமூடபாவோ
த்ருஷ்ட்வா ரூபம் கோரமீத்ருங் மமேதம் |
வ்யபேதபீ: ப்ரீதமனா: புனஸ்த்வம்
ததேவ மே ரூபமிதம் ப்ரபச்ய || 49 || (463)

ஸஞ்ஜய உவாச—

இத்யர்ஜுனம் வாஸுதேவஸ்-ததோக்த்வா
ஸ்வகம் ரூபம் தர்சயாமாஸ பூய: |
ஆச்வாஸயாமாஸ ச பீதமேனம்
பூத்வா புன: ஸெளம்ய-வபுர்-மஹாத்மா
|| 50 || (464)

---

49. (ஈத்ருக்) இம்மாதிரி (கோரம்) பயங்கரமான (மம) என்னுடைய (இதம் ரூபம்) இந்த வடிவத்தை (த்ருஷ்ட்வா) பார்த்தும் (தே) உனக்கு (வ்யதா) பயம் (மா) வேண்டாம். (மா விமூட பாவ: ச) அறிவீனமும் வேண்டாம். (வ்யபேதபீ:) பயத்தைவிட்டு (ப்ரீத மனா:) ஸந்தோஷமுடையவனாய் (புன: ச) மறுபடியும் (த்வம்) நீ (மே) என்னுடைய (இதம் தத்ரூபம் ஏவ) இதோ அந்த முன் வடிவத்தையே (ப்ரபச்ய) காண்பாயாக.

ஸஞ்ஜயர் கூறியது—

50. (வாஸுதேவ:) வாசுதேவன் (அர்ஜுனம்) அர்ஜுனனை நோக்கி (இதி உக்த்வா) இங்ஙனங்கூறி

---

49. 'முன் பயத்துடன் பார்த்தாய், மீண்டும் அதே ரூபத்

अर्जुन उवाच—

दृष्ट्वेदं मानुषं रूपं तव सौम्यं जनार्दन ।
इदानीमस्मि संवृत्तः सचेताःप्रकृतिं गतः ॥ ५१ ॥ ॥ ४६५ ॥

அர்ஜுன உவாச—

த்ருஷ்ட்வேதம் மானுஷம் ரூபம் தவ ஸௌம்யம் ஜனார்த்தன |
இதானீமஸ்மி ஸம்வ்ருத்த: ஸசேதா: ப்ரக்ருதிங் கத: || 51 || (465)

(பூய:) மீண்டும் (ததா) அவ்வாறே (ஸ்வகம் ரூபம் தனக்குரிய உருவத்தை (தர்சயாமாஸ) காட்டியரு ளினன்; (மஹாத்மா) பெரியோன் (ஸௌம்ய வபு: பூத்வா) இன்னுருவனகி (புன:) மறுபடியும் (பீதம்) பயந்திருந்த (ஏனம்) இவனை—அர்ஜுனனை—(ஆச்வா ஸயாமாஸ ச) இன்னுரை கூறித் தேற்றினன்.

அர்ஜுனன் கூறியது—

51. (ஜனார்த்தன) கிருஷ்ண) (தவ) உன்னு டைய (இதம்) இந்த (ஸௌம்யம் மானுஷம் ரூபம்)

தைப் பயமின்றிப் பார்.' என்கிறார் பகவான். (பிரஹ்லாதன் நரசிம் மாவதாரத்தைக் கண்டு பயந்தானு?)

பகவத் கிருபையால் ஏற்படும் ஸ்வரூபதர்சனம் தெய்வீக வாழ்க்கையின் முடிவன்று, அதனல் நம்பிக்கை திடம் பெறுகின்றது. அதன்பின் வாழ்க்கையில் ஒரு புரட்சி ஏற்படுகின்றது. காட்சியில் கண்ட அனுபவம் வாழ்க்கையில் இடைவிடாது மணம் வீசத் தொடங்குகிறது. 'ஆருருக்ஷு' வாயிருந்தவன் 'ஆருடன்' ஆகின்றன்.

50. வாஸுதேவ:—உலகனைத்துள்ளும் உறைந்து வசிப்ப தால் வாஸுதேவன்.

ஒ—'வாஸநாத் வாஸுதேவஸ்ய வாஸிதம் தே ஜகத்-த்ரயம் |
ஸர்வபூத-நிவாஸோஸி வாஸுதேவ நமோஸ்து தே ||

மஹாத்மா — உயிர்களனைத்திலும் அவனே ஆத்மாவாய் விளங்குவதால் மஹாத்மா.

श्री भगवानुवाच—
सुदुर्दर्शमिदं रूपं दृष्टवानसि यन्मम ।
देवा अप्यस्य रूपस्य नित्यं दर्शन-काङ्क्षिणः ॥५२॥ ४६६॥
नाहं वेदैर्न तपसा न दानेन न चेज्यया ।
शक्य एवं विधो द्रष्टुं दृष्टवानसि मां यथा ॥ ५३ ॥४६७

ஸ்ரீ பகவானுவாச—
ஸுதுர்த்தர்சமித்ம் ரூபம் த்ருஷ்டவானஸி யன்மம |
தேவா அப்யஸ்ய ரூபஸ்ய நித்யம் தர்சன-காங்க்ஷிண:
|| 52 || (466)
நாஹம் வேதைர்-ந தபஸா ந தானேன ந சேஜ்யயா |
சக்ய ஏவம் விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவானஸி மாம்
யதா || 53 || (467)

இனிய மனித வடிவத்தை (த்ருஷ்ட்வா) பார்த்து (இதானீம்) இப்போது (அஹம்) நான் (ஸசேதா: ஸம்வ்ருத்த:) மனத்தெளிவைப் பெற்றவனாய், (ப்ரக்ருதிம் கத:) இயற்கைத் தன்மையை எய்தியவனாய் (அஸ்மி) உளேன்.

ஸ்ரீ பகவான் கூறியது—

52. (மம) என்னுடைய (இதம்) இந்த (ஸுதுர்த்தர்சம்) காணற்கு மிக அரிய (யத் ரூபம்) எந்த உருவத்தை (த்ருஷ்டவான் அஸி) நீ கண்ணுற்றாயோ, (அஸ்ய ரூபஸ்ய) அந்த ரூபத்தை (தேவா அபி) தேவர்களும் (நித்யம்) எப்போதும் (தர்சன காங்க்ஷிண:) காண்பதற்கு அவாவுடையவராயிருக்கின்றனர்—ஆனால் உன்னைப்போல் கண்டதில்லை.

53. (யதா) எவ்வாறு (மாம்) என்னை (த்ருஷ்டவான் அஸி) நீ கண்டனையோ (ஏவம் வித:) அவ்வாறு

---

52. **ஸுதுர்த்தர்சமிதம் ரூபம்**—என்று இங்கு குறிக்கப்பட்டது நான்கு கைகளுடன் கூடிய தேவ ரூபம்.

53. பக்தியை முக்கியமாகக் கொள்ளாமல் பலனை முக்கிய

भक्त्या त्वनन्यया शक्य अहमेवं विधोऽर्जुन ।
ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परंतप ॥ ५४ ॥ ॥ ४६८ ॥

பக்த்யா த்வனன்யயாசக்ய அஹமேவம் விதோऽர்ஜுன |
ஜ்ஞாதும் த்ரஷ்டுஞ் ச தத்வேன ப்ரவேஷ்டுஞ் ச பரந்தப || 54 || (468)

(அஹம்) நான் (வேதை:) வேதங்களால் (த்ரஷ்டும்) காண்பதற்கு (ந சக்ய:) கூடியவனன்று; (ந தபஸா) தவத்தாலும் அன்று; (ந தானேன) தானத்தாலும் அன்று; (ந இஜ்யயா ச) வேள்வியாலும் அன்று.

54. (பரந்தப) எதிரிகளை எரிப்பவனே! (அர்ஜுன) அர்ஜுனா! (அனன்யயா) வேறு நாட்டமில்லாத (பக்த்யா து) பக்தியாலேயே (ஏவம் வித:) இவ்வாறு (அஹம்) நான் (தத்வேன) உண்மையில் (ஜ்ஞாதும்) அறிவதற்கும் (த்ரஷ்டும் ச) காண்பதற்கும் (ப்ரவேஷ்டும் ச) அளவளாவிக் கூடுதற்கும் (சக்ய:) உரியவன்.

மாகக் கொண்டு செய்யப்படுங் தவமும் தானமும் ஏனைய கருமங்களுமே இங்கு கூறப்பட்டன.

ஒ—குழந்தையின் சரளம் எவ்வளவு இனிமையானது! உலகச் செல்வங்களையெல்லாம் திரஸ்கரித்துவிட்டு அது ஒரு மரப்பாச்சியைக் கொண்டாடும். திட பக்தனும் அப்படிப்பட்டவன் தான். உலகச் செல்வ கௌரவங்களைத் திரஸ்கரித்துவிட்டு ஈசுவரனை மட்டுங் கொண்டாடுபவன் வேறெவனுமிரான். (ராகி.)

55. கீதா சாஸ்திரத்தின் ஸாரமான கருத்து இங்கு கூறப்படுவது. (சங்.)

மத்கர்மக்ருத்—ஒரு வேலைக்காரன் யஜமானனுடைய பணி செய்பவனுயினும் யஜமானனையே உயர்ந்தவனாய்க் கொள்ளாமலிருக்கலாம்; அரசனையோ வேறொருவனையோ அவனுக்கும்

मत्कर्मकृन्मत्परमो मद्भक्तः सङ्गवर्जितः ।
निर्वैरः सर्वभूतेषु यः स मामेति पाण्डव ॥ ५५ ॥ ॥ ४६९ ॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादे विश्वरूपदर्शनयोगो नाम
एकादशोऽध्यायः ॥

மத்கர்மக்ருன்-மத்பரமோ மத்பக்த: ஸங்கவர்ஜித: |
நிர்வைர: ஸர்வபூதேஷு ய: ஸ மாமேதி பாண்டவ
|| 55 || (469)

இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம
வித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்
ஜுனஸம்வாதே விச்வரூபதர்சனயோகோ
நாம ஏகாதசோऽத்யாய: ||

55. (பாண்டவ) பாண்டவா! (மத் கர்மக்ருத்) என் பணி செய்பவனையும், (மத்பரம:) என்னையே அனைத்திலும் மேலாகக் கருதுபவனையும் (மத்பக்த:) என்னிடம் பக்தி செய்பவனையும் (ஸங்கவர்ஜித:) பற்றற்றவனையும் (ஸர்வபூதேஷு) எவ்வுயிர்களிடத்தும் (நிர்வைர:) வைரமில்லாதவனையும் உள்ளவன் (ய:) எவனோ (ஸ:) அவன் (மாம்) என்னை (ஏதி) அடைகிறான்.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திர
மாயும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும அர்ஜுனனுக்கும்
ஸம்பாஷணையாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத்
கீதை என்னும் உபநிஷத்தில் விசுவரூப
தரிசனம் என்று பெயர் பெற்ற
பதினோராவது அத்தியாயம் முற்றும்.

உயர்ந்தவனாய் எண்ணலாம். ஆனால் பக்தனோ பகவத் கைங்கரிய பரனையும் பகவானையே பரம்பொருளாயுங் கொண்டவன், மத்பரம:

—அதனால் அவரிடத்திலேயே இடைவிடா அன்பு பூண்டவனாய் **மத்பக்த:**—எல்லா வகையிலும் அவரிடத்திலேயே நாட்டம் உடையவனாய் வாழ்கின்றான். **ஸங்கவர்ஜித:**—மனைவி மக்கள் செல்வம் முதலியவற்றில் பற்று நீங்கியவனாய், **நிர்வைர:**—எவ்வுயிருந் தன்னுயிர்போலெண்ணி யிரங்குபவனாய் தனக்குத் தீமை செய்வோரிடத்தும் வைரமில்லாதவனாய் வாழும் இவன் பகவானை எளிதில் அடைகின்றான். (சங்கரர்.)

அத்தியாய விஷயச் சுருக்கம்:—

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் பகவானுடைய விசுவ ரூபத்தைக் காண அர்ஜுனன் விரும்புதல். பகவான் அதைக் காண்பதற்கு ஞானக்கண் அருளுதல். ஆயிரம் சூரியர்கள் உதித்தாற் போன்ற பிரகாசத்துடன் தோன்றிய விசுவரூபம் திக்கு திசைகளெல்லாம் வியாபித்து நிற்பதைக் கண்கொள்ளாக் காட்சியாகக் கண்டு அர்ஜுனன் பரம விஸ்மயத்தை அடைதல். போர்க்களத்தில் நின்ற சேனைவெள்ளம் நதிகள் ஸமுத்திரத்தில் வீழ்ந்து மறைவதுபோல் பகவானுடைய வாயில் புகுந்து மடிவதைக் காணல். இனி நிகழப்போகும் போர் ஏற்கெனவே நிகழ்ந்தாற்போல் எதிர்காலமுங் காட்டப்படுதல். பகவானுடைய பயங்கரமான ரூபத்தின் கருத்தை யுணர விரும்பிய அர்ஜுனனை நோக்கி பகவான் அது தன்னுடைய கால ஸ்வரூபம் என்றும் பூபாரத்தைக் குறைக்க அவ்வடிவந் தாங்கியதாயும், அர்ஜுனன் போர் புரிய மறுத்தாலும் தன் சங்கல்பப்படி நிகழ்வது நிகழ்ந்தே தீரும் என்றும் அர்ஜுனன் 'நிமித்தமாத்ரம்' என்றுங் கூறுதல். அர்ஜுனன் பயம் மிகுந்தவனாய் பகவானைப் பலவாறாய்த் துதித்துத் தான் செய்த பிழைகளையெல்லாம் மன்னித்தருள வேண்டும் என்று பிரார்த்தனை செய்தல். உலகை யழிக்கத் தோன்றிய உருவை மறைத்து நான்கு கைகளுடன் உலகை அளிக்கும் அழகிய உருவைக் காட்டவேண்டுமென்று பிரார்த்தித்தல். பயங்கரமான உருவத்தைக் கண்டும் பயப்படக்கூடாதென்று கூறிப் பகவான் தனது தேவவடிவைக் காட்டியருளுதல். முடிவில் முன்போலப் பார்த்தஸாரதியாக அமைந்து அர்ஜுனனைத் தேற்றுதல். அர்ஜுனன் கண்ட அரிய காட்சி தேவர்க்கும் யாவர்க்குங் கிடைத்தல் அரிதெனல். பகவான் தன்னைக் கருமங்களால் வசப்படுத்த முடியாதென்றும் அனன்ய பக்தி ஒன்றினாலேயே அடையலாம் என்றுங் கூறி முடித்தல்.

எவ்வுலகும் ஓங்கி இருக்குமொரு பேருருவச்
செவ்விதனைக் காணவிழை தேர் விசயற்—கவ்வுருவைக்
காட்டியவன் மோகமெனுங் கட்டறுப்பான் கார்வண்ணன்
ஈட்டறிய பேரருளால் ஈங்கு. (கி. வெ.)

॥ द्वादशोऽध्यायः ॥

(भक्तियोगः)

अर्जुन उवाच—

एवं सतत-युक्ता ये भक्तास्त्वां पर्युपासते ।
ये चाप्यक्षर-मव्यक्तं तेषां के योगवित्तमाः ॥ १ ॥ ॥ ४७० ॥

பன்னிரண்டாம் அத்தியாயம்

(பக்தி யோகம்)

அர்ஜுன உவாச—

ஏவம் ஸதத-யுக்தா யே பக்தாஸ்-த்வாம் பர்யுபாஸதே |
யே சாப்யக்ஷர-மவ்யக்தம் தேஷாம் கே யோகவித்
தமா: || 1 || (470)

அர்ஜுனன் கூறியது—

1. (ஏவம்) இவ்வாறு (ஸததயுக்தா:) நிலைபெற்ற மனத்தினராய் (யே) எந்த (பக்தா:) பக்தர்கள் (த்வாம்) உன்னை (பர்யுபாஸதே) நன்கு உபாஸிக்கின்றனரோ, (ச அபி) மேலும் (யே) எவர்கள் (அவ்யக்தம் அக்ஷரம்) இந்திரியங்களுக்குப் புலனாகாத அக்ஷரப் பொருளை—உபாஸிக்கின்றனரோ—(தேஷாம்) அவ் விருவகையினருள் (கே) எவர்கள் (யோக வித்தமா:) யோகத்தை நன்குணர்ந்தவர்கள்?

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்—

பக்திஸாதன மார்க்கங்களையும் பக்தியின் ஏற்றத்தையும், ஸகுண உபாஸனைக்கும் நிர்க்குண உபாஸனைக்கும் உள்ள தாரதம்மியத்தையும் உத்தம பக்தனுடைய லக்ஷணங்களையும் சுருக்கிக் கூறி முன் ஆறு அத்தியாயங்களில் விளக்கிய பக்தி சாஸ்திரத்தைத் தலைக்கட்டுவதால் இவ்வத்தியாயம் பக்தியோகம் எனப்படும்.

தன் கழலிற் பத்தி தாழாதது மதன் காரணமாம்
இன்குணர் சிந்தையு மீதறியார்க் கவ்வடிமைகளும்
தன் கருமங்களறியா தவர்க்கிலகுந் நிலையும்
தன் கழ லன்பர்க்கு நல்லவன் சாற்றினன் பார்த்தனுக்கே.
(கீ. ஸ.)

श्री भगवानुवाच—

मय्यावेश्य मनो ये मां नित्ययुक्ता उपासते ।
श्रद्धया परयोपेतास्ते मे युक्ततमा मताः ॥ २ ॥ ॥ ४७१ ॥

ஸ்ரீ பகவானுவாச—

மய்யாவேச்ய மனே யே மாம் நித்யயுக்தா உபாஸதே|
ச்ரத்தயா பரயோபேதாஸ்தே மே யுக்ததமா மதா:
|| 2 || (471)

ஸ்ரீ பகவான் கூறியது—

2. (மயி) என்னிடத்தில் (மன:) மனத்தை (ஆவேச்ய) வைத்து (நித்யயுக்தா:) நிலைபெற்ற மனத்தினராய் (பரயா) உயர்ந்த (ச்ரத்தயா) சிரத்தையுடன் (உபேதா:) கூடியவர்களாய் (யே) எவர்கள் (மாம்) என்னை (உபாஸதே) உபாஸிக்கின்றனர்களோ (தே) அவர்கள் (யுக்ததமா:) யோகத்தை நன்குணர்ந்தவர்கள் என்று (மே மதா:) என்னால் கருதப்படுவர்.

---

2. நிர்க்குண உபாஸனை கீ. 5, 17, 5, 26, 6, 24-29, 8. 11-13 முதலிய இடங்களில் கூறப்பட்டது. ஸகுண உபாஸனை 2 முதல் எல்லா அத்தியாயங்களிலும் பலவிடங்களில் கூறப்பட்டு 11-ல் விசேஷமாக விளக்கப்பட்டு 'மத்கர்மக்ருத்' எனும் சுலோகத்தில் தலைக்கட்டப்பெற்றது. இதனல் இரண்டு உபாசனைகளில் எது சிறந்தது என்பது அர்ஜுனன் கேள்வி.

ஒ. ஈசுவரனை அரூபியெனத் தியானிப்பது முற்றிலும் சரியானது. ஆனல் அதுதான் உண்மை, மற்றவை யெல்லாம் பொய் என்ற எண்ணம் உன் மனத்தில் குடிகொள்ள வேண்டாம். அவனை ரூபியெனத் தியானிப்பதும் சரியானதே. ஆனல் அவனை நீ அறிந்து காணும் வரையில் உனது பிரத்யேகமான கொள்கையைக் கைவிடாதே. (ரா. கி).

மேலுங் கீழும் நாலா பக்கங்களிலும் நீர் நிரம்பிய பிரம்மாண்டமான ஏரி ஒன்றிருப்பதாக நினைத்துக்கொள். அதில் சில பாகங்களில் குளிர் காலத்தில் ஜலம் உறைகிறது. கோடைகாலத்தில் உறைந்த ஜலம் உருகிப் பழையபடியே நீராகின்றது. பிரம்மம் இவ்வித நீர்ப்பரப்பாகும். பக்தனுடைய அன்பு பக்தி. சரணகதி இவை

ये त्वक्षर-मनिर्देश्य-मव्यक्तं पर्युपासते ।
सर्वत्रग-मचिन्त्यं च कूटस्थ-मचलं ध्रुवम् ॥ ३ ॥ ॥ ४७२ ॥
सन्नियम्येन्द्रियग्रामं सर्वत्र समबुद्धयः ।
ते प्राप्नुवन्ति मामेव सर्वभूतहिते रताः ॥ ४ ॥ ॥ ४७३ ॥

யே த்வக்ஷர-மநிர்த்தேச்ய-மவ்யக்தம் பர்யுபாஸதே |
ஸர்வத்ரக-மசிந்த்யஞ் ச கூடஸ்த-மசலம் த்ருவம்
|| 3 || (472)
ஸந்நியம்யேந்த்ரிய-க்ராமம் ஸர்வத்ர ஸமபுத்தய: |
தே ப்ராப்னுவந்தி மாமேவ ஸர்வபூதஹிதே ரதா:
|| 4 || (473)

3-4. (து) எனினும் (ஸர்வத்ர) எல்லாவிடத்தும் (ஸமபுத்தய:) ஸமபுத்தியுடையவர்களாய் (இந்த்ரிய க்ராமம) இந்திரியக் கூட்டத்தை (ஸந்நியம்ய) நன்கு அடக்கி (அநிர்த்தேச்யம்) சொல்லுக்கடங்காததாயும்

ஜலத்தை உறைவிக்கும் சீதளமாகும். உஷ்ணம் யாதெனில் நிர்விகல்ப ஸமாதிக்குக் கொண்டு சேர்க்கும் ஞான விசாரமாகும். (ரா. கி.)

ஒ. 'பக்த்யர்த்தம் கல்பிதம் த்வைதம் அத்வைதாதபி ஸுந்தரம் |' —(பக்திஸுதா: மதுஸூதன ஸரஸ்வதி.)

குறிபார்த்துச் சுடுபவன் முதலில் பெரிய பொருள்களைக் குறியாகக் கொண்டு சுடக் கற்றுக்கொள்கிறான். அனுபவம் பெறப்பெற, சிறு குறிகளை நோக்கிச் சுடுகிறான். அதுபோல பகவானுடைய உருவத்தில் மனம் நிற்கும் பயிற்சி பெற்ற பிறகு அருவத்தில் நிலைத்திருப்பது சுலபமாகும். (ரா. கி.)

3. **கூடஸ்தம்:**—கூடம் என்னும் பொய்யாகிய சரீரத்துள் மெய்யாகி உறைவது: எத்தனை அடித்தாலும் அசையாதிருக்கும் சம்மட்டிக் கல் போலுள்ளது; உச்சியில் உறைவது; இருதய குகையில் இரகசியமாயுள்ளது—என்றபடி

4. **ஸர்வபூதஹிதே ரதா:**—அவிவேகிகளுக்குத் தங்கள் சரீரத்தில் எல்லா அங்கங்களும் எப்படிப் பிரியமானவையோ, அப்படி விவேகிகளுக்கு எங்கும் ஆத்மபாவனையால் எல்லாப் பிராணிகளும் பிரியமானவையாம். எல்லாம் பிரம்ம மயமானதால் எங்கும் ஸமபுத்தி.

क्लेशोऽधिकतर-स्तेषा-मव्यक्तासक्त-चेतसाम् ।
अव्यक्ता हि गतिर्दुःखं देहवद्भि-रवाप्यते ॥ ५ ॥ ॥ ४७४ ॥

க்லேசோऽதிகதரஸ்-தேஷா-மவ்யக்தாஸக்த-சேதஸாம் |
அவ்யக்தா ஹி கதிர்த்து:க்கம் தேஹவத்பி-ரவாப்யதே || 5 || (474)

(அவ்யக்தம்) கண்ணுக்கு விளங்காததாயும் (அசிந்த்யஞ்ச) மனதுக்கெட்டாததாயும் (ஸர்வத்ரகம்) எங்குமுள்ளதாயும் (கூடஸ்தம்) மாறுதலற்றதாயும் (அசலம்) அசைவற்றதாயும் (த்ருவம்) நிலைபெற்றதாயும் உள்ள (அக்ஷரம்) அழியாப் பொருளை (யே) எவர்கள் (பர்யுபாஸதே) நன்கு தியானிக்கின்றார்களோ, (ஸர்வ பூதஹிதே ரதா:) எல்லாவுயிரும் இன்புற்றிருக்க நினைக்கும் (தே) அவர்கள் (மாம் ஏவ) என்னையே (ப்ராப்னுவந்தி) அடைகிறார்கள்.

5. (அவ்யக்தாஸக்தசேதஸாம்) அவ்வியக்தப் பொருளில் நாட்டங்கொண்ட (தேஷாம்) அவர்களுக்கு (க்லேச:) சிரமம் (அதிகதர:) அதிகம். (தேஹவத்பி:) உடல் பற்றுடையோரால் (அவ்யக்தா கதி:) அவ்வியக்த நெறி (து:க்கம்) கஷ்டத்தாலேயே (அவாப்யதே ஹி) அடையப்படுகின்றது அன்றோ?

---

5. ஸகுண உபாஸனையில் ஸாதகன் தன் முயற்சியிலும் பெரிதாக பகவானுடைய கருணையைக் கொள்வதால் ஒவ்வொரு படியிலும் அவனுடைய ஸஹாயத்தைப் பெற்று எளிதில் துன்பங்களைத் தாண்டுகின்றான்.

ஒ—மச்சித்த: ஸர்வ-துர்க்காணி மத்ப்ரஸாதாத் தரிஷ்யஸி | 18-58.

த்யானுவஸ்தித-தத்கதேன மனஸா தந்நிர்க்குணம் நிஷ்க்ரியம்
ஜ்யோதி: கிஞ்சன யோகினோ யதி புன: பச்யந்தி பச்யந்து தே|
அஸ்மாகந்து ததேவ லோசன-சமத்காராய பூயாச்சிரம்
காளிந்தீ-புலினேஷு யத் கிமபி தந்-நீலம் மஹோ தாவதி ||
—மதுஸூதன ஸரஸ்வதி.

ये तु सर्वाणि कर्माणि मयि सन्न्यस्य मत्पराः ।
अनन्येनैव योगेन मां ध्यायन्त उपासते ॥ ६ ॥ ॥ ४७५ ॥

तेषामहं समुद्धर्ता मृत्यु-संसार-सागरात् ।
भवामि नचिरात् पार्थ मय्यावेशित-चेतसाम् ॥ ७ ॥ ॥ ४७६ ॥

யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸந்ந்யஸ்ய மத்பரா: |
அனன்யேனைவ யோகேன மாம் த்யாயந்த உபாஸதே
|| 6 || (475)
தேஷா-மஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யு-ஸம்ஸார-
ஸாகராத் |
பவாமி ந சிராத் பார்த்த மய்யாவேசித-சேதஸாம்
|| 7 || (476)

---

6. (து) ஆனால் (யே) எவர்கள் (ஸர்வாணி கர் மாணி) எல்லாக் கருமங்களையும் (மயி) என்னிடத்தில் (ஸந்ந்யஸ்ய) துறந்து (மத்பரா:) என்னையே உயர் பொருளாய்க்கொண்டு (அனன்யேன யோகேன) மற்றொன்றைச் சாராத யோகத்தால் (மாம் ஏவ) என்னையே (த்யாயந்த:) தியானித்து (உபாஸதே) உபாஸிக்கின்றார்களோ.

7. (தேஷாம்) அந்த (மயி ஆவேசித சேதஸாம்) என்னிடம் நிலைபெற்ற மனமுடைய அவர்களுக்கு (ம்ருத்யுஸம்ஸார ஸாகராத்) சாவுடன் கூடிய ஸம்ஸாரக் கடலினின்று (ந சிராத்) சீக்கிரத்தில் (பார்த்த) அர்ஜுனா! (அஹம்) நான் (ஸமுத்தர்த்தா) கரையேற்றிக் காப்பவனாக (பவாமி) ஆகின்றேன்.

मय्येव मन आधत्स्व मयि बुद्धिं निवेशय ।
निवसिष्यसि मय्येव अत ऊर्ध्वं न संशयः ॥ ८ ॥ ॥ ४७७ ॥
अथ चित्तं समाधातुं न शक्नोषि मयि स्थिरम् ।
अभ्यास-योगेन ततो मामिच्छाप्तुं धनञ्जय ॥ ९ ॥ ॥ ४७८ ॥

மய்யேவ மன ஆதத்ஸ்வ மயி புத்திம் நிவேசய |
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்வம் ந ஸம்சய:
|| 8 || (477)
அத சித்தம் ஸமாதாதும் ந சக்னோஷி மயி ஸ்திரம் |
அப்யாஸ-யோகேன ததோ மாமிச்சாப்தும் தனஞ்ஜய
|| 9 || (478)

---

8. (மயி ஏவ) என்னிடத்திலேயே (மன:) மனத்தை (ஆதத்ஸ்வ) நிறுத்து; (மயி) என்னிடத்தில் (புத்திம்) புத்தியை (நிவேசய) வைத்திடு; (அத: ஊர்த்வம்) அதன்பின் (மயி ஏவ) என்னிடத்திலேயே (நிவஸிஷ்யஸி) உறைவாய், (ந ஸம்சய:) ஐயமில்லை.

9. (தனஞ்ஜய) அர்ஜுனா! (அத) ஆனால் (மயி) என்னிடத்து (சித்தம்) சித்தத்தை (ஸ்திரம்) உறுதியாக (ஸமாதாதும்) நிறுத்துதற்கு (ந சக்னோஷி) சக்தியில்லையாயின் (தத:) அப்போது (அப்யாஸயோகேன) அப்பியாஸ யோகத்தால் (மாம்) என்னை (ஆப்தும்) அடைதற்கு (இச்ச) விரும்பு.

---

8. **அத ஊர்த்வம்**—நிச்சயமாக மனதைச் செலுத்திய உடனே.

'மதீயம் ததீயமிதி பேதமபஹாய ஸர்வம் ஈச்வராதீன-மிதி ஸ்திதி: (—பாகவத தாத்பர்யம்: மத்வாசாரியர்.)

9. **அப்பியாஸயோகம்**—(1) 6-வது அத்தியாயத்தில் கூறிய வண்ணம் அஷ்டாங்க யோகம் பழகி மனத்தை இடைவிடாது ஒரு நிலைப்படுத்த முயலுதல். (2) பகவானுடைய நாம, ரூப குண சரித்திரங்களைச் சிந்தித்தலும் அவற்றைக் கூறும் நூல்களை அடிக்கடி படித்தலும் கேட்டலும். (3) 10-ல் கூறியபடி மனம் எங்கெங்கு

अभ्यासेऽप्यसमर्थोऽसि मत्कर्म-परमो भव ।
मदर्थमपि कर्माणि कुर्वन् सिद्धिमवाप्स्यसि ॥ १० ॥ ॥ ४७९ ॥
अथैत-दप्यशक्तोऽसि कर्तुं मद्योग-माश्रितः ।
सर्वकर्म-फल-त्यागं ततः कुरु यतात्मवान् ॥ ११ ॥ ॥ ४८० ॥

அப்யாஸேऽப்யஸமர்த்தோऽஸி மத்கர்ம-பரமோ பவ |
மதர்த்தமபி கர்மாணி குர்வன் ஸித்தி-மவாப்ஸ்யஸி
|| 10 || (479)
அதைதத‌ப்·யசக்தோऽஸி கர்த்தும் மத்யோக-மாச்ரித:|
ஸர்வகர்ம-பல-த்யாகம் தத: குரு யதாத்மவான்
|| 11 || (480)

---

10. (அப்யாஸே அபி) அப்பியாசத்திலும் (அஸமர்த்த: அஸி) திறமையில்லையாயின் (மத்கர்மபரம:) எனக்காகவே கருமம் செய்பவனாய் (பவ) ஆவாய்; (மதர்த்தம்) எனக்காக(கர்மாணி) கருமங்களை (குர்வன் அபி) செய்வதாலும் (ஸித்திம்) சித்தியை (அவாப்ஸ்யஸி) அடைவாய்.

11. (அத ஏதத் கர்த்தும் அபி) மேலும் இதைச் செய்யக்கூட (அசக்த: அஸி) சக்தியில்லையாயின் (தத:) அதன்பின் (மத்யோகம் ஆச்ரித:) என்னிடம் சரண் புகுதலிலேயே நாட்டமுடையவனாய் (யதாத்மவான்) அடங்கிய மனத்தினனாய் (ஸர்வகர்ம பலத்யாகம் குரு) எல்லாக் கருமங்களின் பயனையும் எனக்கு அர்ப்பணம் செய்வாய்.

செல்லுகின்றதோ அங்கங்கெல்லாம் பகவானுடைய விபூதியைச் சிந்தித்தல்.

ஒ—"எங்கெங்கே சென்றாலும் எவ்வுயிர்க்கு மவ்வுயிராய்
அங்கங்கிருப்பது நீ யன்றோ பராபரமே."
—(தாயுமானவர்.)

4. 11-ல் காட்டியருளிய விசுவரூபத்தையோ, அவதார வடிவையோ, தேவரூபத்தையோ தியானித்தல். இப்படி அப்பியாஸம் பலவகைப்படும்.

श्रेयो हि ज्ञानमभ्यासा-ज्ज्ञानाद्ध्यानं विशिष्यते ।
ध्यानात् कर्मफलत्याग-स्त्यागा-च्छान्ति-रनन्तरम् ॥ १२ ॥
अद्वेष्टा सर्वभूतानां मैत्रः करुण एव च ।
निर्ममो निरहङ्कारः सम-दुःखसुखः क्षमी ॥ १३ ॥ ॥ ४८२ ॥
संतुष्टः सततं योगी यतात्मा दृढनिश्चयः ।
मय्यर्पित-मनो-बुद्धिर्यो मद्भक्तः स मे प्रियः ॥ १४ ॥ ४८३ ॥

ச்ரேயோ ஹி ஜ்ஞானமப்யாஸாத்-ஜ்ஞாநாத்-த்யானம் விசிஷ்யதே |
த்யாநாத் கர்மபலத்யாகஸ்-த்யாகாச் சாந்தி-ரனந்தரம் || 12 || (481)

அத்வேஷ்டா ஸர்வபூதானும் மைத்ர: கருண ஏவ ச |
நிர்மமோ நிரஹங்கார: ஸம-து:க்கஸுக: க்ஷமீ || 13 || (482)
ஸந்துஷ்ட: ஸததம் யோகீ யதாத்மா த்ருடநிச்சய: |
மய்யர்ப்பித-மனோ-புத்திர்-யோ மத்பக்த: ஸ மே ப்ரிய: || 14 || (483)

---

12. (அப்யாஸாத்) அப்பியாஸத்தைவிட (ஜ்ஞானம்) ஞானம், (ச்ரேய: ஹி) சிறந்ததாம்; (ஜ்ஞாநாத்) ஞானத்திலும் (த்யானம்) தியானம் (விசிஷ்யதே) சிறந்ததாம், (த்யாநாத்) தியானத்தைவிட (கர்ம பலத்யாக:) கருமபலனைத் துறத்தல்—சிறந்ததாம், (த்யாகாத்) துறவினல் (அனந்தரம்) அதிசீக்கிரத்தில் (சாந்தி:) சாந்தி—உண்டாகின்றது.

13-14. (ஸர்வபூதானும்) எவ்வுயிர்களிடத்தும் (அத்வேஷ்டா) பகைமை இல்லாதவனுய் (மைத்ர:)

---

13. அத்வேஷ்டா—

ஒ—"சாந்தனேயுங் தீயனவே செய்திடினுங் தாமவரை
ஆந்தனேயுங் காப்ப ரறிவுடையோர்"

यस्मा-न्नोद्विजते लोको लोका-न्नोद्विजते च यः ।
हर्षामर्ष-भयोद्वेगै-र्मुक्तो यः स च मे प्रियः ॥ १५ ॥ ॥४८४॥

யஸ்மான்-னோத்விஜதே லோகோ லோகான்-னோத்
விஜதே ச ய: |
ஹர்ஷாமர்ஷ-பயோத்வேகைர் முக்தோ ய: ஸ ச மே
ப்ரிய: || 15 || (484)

சிநேகம் பூண்டவனாய் (கருண: ஏவ ச) கருணையே உடையவனாய் (நிர்மம: நிரஹங்கார:) 'என்னுடையது' 'நான்' என்னுமெண்ண மில்லாதவனாய் (ஸமது:க்க ஸுக:) இன்பத்தையும் துன்பத்தையும் சமமாய்க் கருதுபவனாய், (க்ஷமீ) பொறுமையுடையவனாய் (ஸததம ஸந்துஷ்ட:) எப்போதும் ஸந்தோஷமுடையவனாய் (யோகீ) யோகத்தில் நாட்டமுடையவனாய் (யதாத்மா) அடங்கிய மனத்தினனாய் (த்ருடநிச்சய:) திடமான நிச்சயமுடையவனாய் (மயி) என்னிடத்தில் (அர்ப்பித மனோபுத்தி:) மனத்தையும் புத்தியையும் அர்ப்பணம் செய்தவனாய் (ய: மத்பக்த:) எவன் என் பக்தனாய் உள்ளவனோ (ஸ:) அவன் (மே) எனக்கு (ப்ரிய:) பிரியமானவன்.

15. (யஸ்மாத்) எவனிடமிருந்து (லோக:) உலகம் (ந உத்விஜதே) துன்புறுவதில்லையோ, (ச) மேலும் (ய:) எவன் (லோகாத்) உலகத்தினிடமிருந்து (ந உத்விஜதே) துன்புறுவதில்லையோ, (ச) தவிர, (ய:) எவன்

மத்கர்மபரமோ பவ—யஜ்ஞம், தானம், தவம் முதலிய கருமங்களை பகவதர்ப்பணமாய்ச் செய்தல்.

ஸர்வகர்ம பலத்யாகம்—வாழ்க்கையில் அவரவர் நிலைக்குரிய கடமைகள் எல்லாம் கபடம், பொய், ஹிம்சை நீக்கிப் பயனில் ஆசையின்றி பகவான் இட்ட கட்டளை என்ற பாவனையுடன் செய்யப்படுவது. அங்ஙனம் செய்யின், 'பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும், செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்.'

अनपेक्षः शुचि-र्दक्ष उदासीनो गतव्यथः ।
सर्वारम्भ-परित्यागी यो मद्भक्तः स मे प्रियः ॥ १६ ॥ ॥ ४८५

அனபேக்ஷ: சுசிர்-தக்ஷ உதாஸீனே கதவ்யத: |
ஸர்வாரம்ப பரித்யாகீ யோ மத்பக்த: ஸ மே ப்ரிய:
|| 16 || (485)

(ஹர்ஷாமர்ஷ பயோத்வேகை:) மகிழ்ச்கி, சினம், அச்சம, மனக் கிளர்ச்சி இவற்றினின்று (முக்த:) விடுபட்டவனே (ஸ:) அவன் (மே) எனக்கு (ப்ரிய:) பிரியமானவன்.

16. (அனபேக்ஷ:) எதையும் வேண்டாதவனய் (சுசி:) பரிசுத்தனய் (தக்ஷ:) திறமையுடையவனய் (உதாஸீன:) ஒரு பக்ஷத்தைச்சாராதவனய் (கதவ்யத:) மனத்துய ரொழிந்தவனய் (ஸர்வாரம்ப பரித்யாகீ) எல்லாக் காமிய கருமங்களையுந் துறந்தவனய் (ய:) எவன் (மத்பக்த:) எனது பக்தனய் உள்ளவனே (ஸ:) அவன் (மே) எனக்கு (ப்ரிய:) பிரியமானவன்.

உயர்ந்தவர்களிடம் அசூயையின்மை, ஸமமானவர்களிடம் மித்ரத்வம் தாழ்ந்தவர்களிடம் கருணை.

ஒ—தன் உயிர் தான் அறப் பெற்றனை ஏனைய
மன்னுயிர் எல்லாந் தொழும். (குறள்.)

நிர்மம:—ஒ—'மம' என்ற இரண்டெழுத்தே பந்தம். 'நமம' என்ற மூன்றெழுத்தே மோக்ஷம்.

நிரஹங்கார:—'நெல்லுக்குப் பால் கட்டக் கட்டத் தலைவணங்குமாபோலே சரணகதி நெஞ்சிலே படப்பட அஹங்காரம் ஒடுங்கும்.'

16. ஸர்வாரம்ப பரித்யாகீ:—

கேள்வி—ஒரு காரியமும் ஆரம்பிக்காவிட்டால் சரீர யாத்திரை எப்படி நடைபெறும்?

यो न हृष्यति न द्वेष्टि न शोचति न काङ्क्षति ।
शुभाशुभ-परित्यागी भक्तिमान् यः स मे प्रियः ॥ १७ ॥ ४८६

யோ ந ஹ்ருஷ்யதி ந த்வேஷ்டி ந சோசதி ந
காங்க்ஷதி ।
சுபாசுப-பரித்யாகீ பக்திமான் ய: ஸ மே ப்ரிய:
॥ 17 ॥ (486)

---

17. (ய:) எவன் (ந ஹ்ருஷ்யதி) மகிழ்வதில்லையோ (ந த்வேஷ்டி) வெறுப்பதில்லையோ (ந சோசதி) துயரப்படுவதில்லையோ (ந காங்க்ஷதி) ஆசைப்படுவதில்லையோ, (ய:) எவன் (சுபாசுப பரித்யாகீ) நல்லவையுந் தீயவையுமான கருமங்களனைத்தையும் விட்டவனோ (பக்திமான்) பக்திமானோ (ஸ:) அவன் (மே) எனக்கு (ப்ரிய:) பிரியமானவன்.

விடை—ஆசையால் தூண்டப் பெற்று ஒரு கருமத்தையும் ஆரம்பிக்காவிடினும் பிராரப்த வசத்தால் (நாம் தேடாத துன்பம் வருவதுபோல்) சரீர யாத்திரை தானே நிகழும்.

சுசி—:—உள்ளும் புறம்பும் எப்போதும் பரிசுத்தமானவன். பக்தனுடைய மனம், புத்தி, வாக்கு, செயல் எல்லாம் எப்போதும் பகவானிடம் நிலைபெற்று நிற்பதால், பக்தன் இருக்கும் இடமும், அவனைச் சூழ்ந்த காற்றும் நீருங்கூடப் பரிசுத்தமே. பக்தனைக் காண்பதும் அவனுடன் வார்த்தையாடுவதுமே பிறரைச் சுத்தமாக்கும்.

ஓ—"தீர்த்தீ-குர்வந்தி தீர்த்தானி, ஸுகர்மீ-குர்வந்தி கர்மாணி, ஸச்சாஸ்த்ரீ-குர்வந்தி சாஸ்த்ராணி தன்மயா:" (புனிதமான இடங்களுக்குப் புனிதமளிக்கின்றனர், கருமங்களை நற்கருமங்களாய்ச் செய்கின்றனர், சாஸ்திரங்களுக்கும் பெருமையளிக்கின்றனர் தன்மயமான பக்தர்கள்.) (நாரத பக்தி ஸூத்ரம்.)

பாம்பாட்டி பாம்புகளைப் பயமின்றிப் பிடிப்பதன்றி அவைகளை ஆபரணங்களைப்போலக் கையிலும் கழுத்திலும் சுற்றிக் கொள்கிறான். அதுபோல ஞானிக்கு உலகத்தினிடம் பயமில்லை. (ரா. கி.)

समः शत्रौ च मित्रे च तथा मानापमानयोः ।
शीतोष्ण-सुखदुःखेषु समः सङ्ग-विवर्जितः ॥ १८ ॥ ॥ ४८७ ॥
तुल्य-निन्दा-स्तुति-र्मौनी संतुष्टो येन केनचित् ।
अनिकेतः स्थिरमति-र्भक्तिमान् मे प्रियो नरः ॥ १९ ॥ ४८८ ॥

ஸம: சத்ரௌ ச மித்ரே ச ததா மாநாபமானயோ: |
சீதோஷ்ண-ஸுகது:க்கேஷு ஸம: ஸங்க-விவர்ஜித:
|| 18 || (487)
துல்ய-நிந்தா-ஸ்துதிர்-மௌனீ ஸந்துஷ்டோ யேன கேனசித் |
அநிகேத: ஸ்திரமதிர்-பக்திமான் மே ப்ரியோ நர:
|| 19 || (488)

18. (சத்ரௌ ச) பகைவனிடத்தும் (மித்ரே ச) நண்பனிடத்தும் (ததா) அவ்வாறே (மாநாபமானயோ:) மானத்திலும் அவமானத்திலும் (ஸம:) ஸமமானவனும், (சீதோஷ்ண ஸுகது:க்கேஷு) குளிரிலும் வெப்பத்திலும் சுகத்திலும், துக்கத்திலும் (ஸம:) ஸமமானவனும் (ஸங்கவிவர்ஜித:) பற்றற்றவனும் எவனோ ;

19. (துல்யநிந்தாஸ்துதி:) இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஒன்றாகக் கொண்டவனையும் (மௌனீ) மௌனியாயும் (யேன கேனசித்) எதைக்கொண்டும் (ஸந்துஷ்ட:) ஸந்தோஷம் அடைபவனையும் (அநிகேத:) இருப்பிடமில்லாதவனையும் (ஸ்திரமதி:) திடசித்தமுடையவனையும் (பக்திமான்) பக்திமானையும் உள்ள (நர:) மனிதன்—எவனோ அவன் (மே) எனக்கு (ப்ரிய:) பிரியமானவன்.

18. ஒ—படிப்பற்றுக் கேள்வியற்றுப் பற்றற்றுச் சிந்தைத்
துடிப்பற்றார்க்கன்றோ சுகங்காண் பராபரமே.
(தாயுமானவர்.)

ஒ. 'யேன-கேனசிதாச்சன்னோ யேன-கேனசிதாசித: |
யத்ர க்வசன-சாயீ ஸ்யாத் தம் தேவா ப்ராஹ்மணம் விது: ||'
—(ம. பா. சாந்தி. 245-12.)

ये तु धर्म्यामृत-मिदं यथोक्तं पर्युपासते ।
श्रद्दधाना मत्परमा भक्तास्तेऽतीव मे प्रियाः ॥ २० ॥ ४८९

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादे भक्तियोगो नाम
द्वादशोऽध्यायः ॥

யே து தர்ம்யாம்ருத-மிதம் யதோக்தம் பர்யுபாஸதே ।
ச்ரத்ததாநா மத்பரமா பக்தாஸ்-தேऽதீவ மே ப்ரியா:
॥ 20 ॥ (489)

இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம
வித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்
ஜுனஸம்வாதே பக்தியோகோ நாம
த்வாதசோऽத்யாய: ॥

---

20. (து) நிச்சயமாக (யே) எவர்கள் (தர்ம்யாம்ருதம்) தருமத்தினின்று வழுவாததும் அழியாததுமான (இதம்) இம்மார்க்கத்தை (யதோக்தம்) இங்கே கூறிய வண்ணம் (பர்யுபாஸதே) நன்கு அனுஷ்டிக்கின்றார்களோ (ச்ரத்ததாநா:) சிரத்தையுடையவர்களும் (மத்பரமா:) என்னையே உயர் பொருளாய்க் கொண்டவர்களும் (பக்தா:) பக்தர்களுமான (தே) அவர்கள் (மே) எனக்கு (அதீவ) மிகவும் (ப்ரியா:) பிரியமானவர்கள்.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திர
மாயும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும்
ஸம்பாஷணையாயும் விளங்கும் ஸ்ரீமத்
பகவத்கீதை என்னும் உபநிஷத்தில்
பக்தியோகம் என்ற பெயர் பெற்ற
பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றும்.

அத்தியாய விஷயச் சுருக்கம்:—

ஸகுணோபாஸனை சிறந்ததா, நிர்க்குணோபாஸனை சிறந்ததா என்று கேள்வி. நிர்க்குணோபாசனை உடல் பற்று ஒழிந்த வெகு சிலர்க்கே கூடும் என்றும் ஸகுணோபாஸனையே பொதுப்படச் சிறந்ததென்றும் எவர்க்கும் எளிதில் கைக்கொள்ளக் கூடியதென்றும் பகவான் கூறுதல். தன்னை வழிபடுவோரை ஸம்ஸார ஸாகரத்தினின்று கரையேற்றி விரைவிற் காப்பேனெனப் பகவான் உறுதி கூறுதல். அனன்ய பக்தி இயலாதபோது அப்பியாஸயோகம் பயில வேண்டும் என்றும், அதுவும் இயலாதபோது கருமயோகம் பயில வேண்டும் என்றும், அதுவும் இயலாதபோது, தான் அசக்தன் என்று தன்னையே பகவானிடம் நிவேதனம் செய்து எல்லாக் குறைவும் அவனருளாலே நிறைவாக வேண்டும் என்று எல்லாவற்றையும் அவனிடம் ஒப்புவித்து விடவேண்டும் என்றுங் கூறுதல். இம்முறை எல்லாவற்றிலும் எளிதாயினும் பயனிற் குறைவு பட்டதன்று எனல். உத்தம பக்தனுடைய லக்ஷணங்களைக் கூறி அத்தியாய முடிவு.

ஓங்குமுருவைப் பரவும் உத்தமராம் பக்தர் தமைத்
தீங்கறவே காக்கும் திறமும் பின்—தீங்கரிய
அக்கரத்தை உன்னுபவர் ஆரியலும் அர்ச்சுனற்கு
மைக்கடல் வண்ணன் புகல்வான் மற்று. (கீ. வெ.)

॥ त्रयोदशोऽध्यायः ॥

(क्षेत्रक्षेत्रज्ञविभागयोगः)

श्री भगवानुवाच—
इदं शरीरं कौन्तेय क्षेत्र-मित्यभिधीयते ।
एतद्यो वेत्ति तं प्राहुः क्षेत्रज्ञ इति तद्विदः ॥ १ ॥ ॥ ४९० ॥

பதின்மூன்றும் அத்தியாயம்

(க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம்)

ஸ்ரீ பகவானுவாச—
இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ர-மித்யபிதீயதே |
ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி
தத்வித: || 1 || (490)

ஸ்ரீ பகவான் கூறியது—

1. (கௌந்தேய) அர்ஜுனா! (இதம்) இந்த (சரீரம்) உடல் (க்ஷேத்ரம் இதி) க்ஷேத்ரம் என்று (அபிதீயதே) கூறப்படுகின்றது; (ய:) எவன் (ஏதத்) இதை (வேத்தி) அறிகின்றானோ (தம்) அவனை (க்ஷேத்ரஜ்ஞ: இதி) க்ஷேத்ரஜ்ஞன் என்று (தத்வித:) அதை யுணர்ந்தவர்கள் (ப்ராஹு:) கூறுவர்.

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்:

பன்னிரண்டாம் அத்தியாயத்தில் ஸகுண உபாஸனைக்கும் நிர்க்குண உபாஸனைக்கும் உள்ள தாரதம்மியத்தைக் கேட்ட அர்ஜுனனுக்கு இரண்டும் ஒரு நிறையேயாயினும் ஸகுண உபாஸனைதான் எளிது, நிர்க்குண உபாஸனை தேஹாபிமானம் நீங்காத வரைக்கும் வெகு கடினம் என்று கூறி ஸகுண உபாஸனையின் பாகுபாடுகளையும் உத்தம பக்தனுடைய லக்ஷணங்களையும் பகவான் எடுத்துக் கூறுவதில் அத்தியாயம் முடிவுபெற்றது. நிர்க்குண நிராகார ப்ரஹ்மத்தின் தத்வமும் அதை நாடுவதற்குரிய ஞானயோக (அல்லது ஸாங்க்ய யோக) முறையும் இனி விசாரிக்கப்படும்.

இந்த ஸாங்கிய ஞானத்தின் முதற்படி ஆத்ம-அனாத்ம விவேகம்; சரீரம் அனாத்மா, சரீரி ஆத்மா; சரீரம் க்ஷேத்ரம், சரீரி

क्षेत्रज्ञं चापि मां विद्धि सर्वक्षेत्रेषु भारत ।
क्षेत्र-क्षेत्रज्ञयो-र्ज्ञानं यत्तज्ज्ञानं मतं मम ॥ २ ॥

க்ஷேத்ரஜ்ஞஞ் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு
பாரத |
க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞயோர்-ஜ்ஞானம் யத்தத்
ஜ்ஞானம் மதம் மம || 2 || (491)

---

2. (பாரத) அர்ஜுனா! (ஸர்வ க்ஷேத்ரேஷு) எல்லா க்ஷேத்ரங்களிலும் (மாம்) என்னையே (க்ஷேத்ரஜ்ஞம்ச அபி) க்ஷேத்ரஜ்ஞனாகவும்—ஜீவான்மாகவும்—(வித்தி) அறிவாய், (க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞயோ:) க்ஷேத்ரத்தையும் க்ஷேத்ரஜ்ஞனையும் பற்றிய (ஜ்ஞானம்) ஞானம் (யத்) எதுவோ (தத்) அதுவே (ஜ்ஞானம்) ஞானம் என்பது (மம) என்னுடைய (மதம்) அபிப்பிராயம்.

க்ஷேத்ரஜ்ஞன், க்ஷேத்ரம் ஜடம், மாறுபாடடைந்து அழிவது. க்ஷேத்ரஜ்ஞன் சேதனன், ஞான ஸ்வரூபம், மாறுபாடற்று என்றுமுள்ளவன். க்ஷேத்திரத்துக்கும் க்ஷேத்ரஜ்ஞனுக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவுபடுத்திக் காட்டுவதால் இவ்வத்தியாயம் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம் எனப் பெயர் பெறும்.

ஊனின் படியு முயிரின் பிரிவு முயிர் பெறுவார்
ஞானம் பெறுவதையும் ஞானமீன்ற வுயிர்ப் பயனும்
ஊனின்றதற் கடியு முயிர் வேறிடு முள்விரகும்
தேனின்ற பாதன் தெரிவித்தனன் சிலைப்பார்த்தனுக்கே.

(கீ. ஸ.)

1. **இதம்**—உள்ளவையெல்லாம் **இதம் அஹம்,** என இரண்டாய்ப் பிரியும். இதம் என்பது பார்க்கப்படுவது (த்ருச்யம்); அஹம் என்பது பார்ப்பது (த்ருக்). சரீரம் இதம், ஆத்மா அஹம். அந்த அஹமே பரா-அஹந்தை என்றும் பரா ப்ரக்ருதி என்றுங் கூறப்படுவது (7, 5.) இதுவே அக்ஷர புருஷன் என்றும் (15. 16.) அத்யாத்மம் (8. 3) என்றும் கூறப்படுவது. ப்ரக்ருதி யெனும்போது அவள் எனவும் அக்ஷர புருஷன் எனும்போது அவன் எனவுங் கூறப்படினும் உண்மையில் ஆத்மா அவனென்பதுவுமன்றி, அவளென்பதுவுமன்றி அதுவென்பதுவுமன்றி நிர்விகாரமாய் விளங்கும் ஸச்சிதானந்தப் பரம்பொருள்.

तत्क्षेत्रं यच्च यादृक्च यद्विकारि यतश्च यत् ।
स च यो यत्प्रभावश्च तत्समासेन मे शृणु ॥ ३ ॥ ॥ ४९२ ॥
ऋषिभि-र्बहुधा गीतं छन्दोभि-र्विविधैः पृथक् ।
ब्रह्मसूत्र-पदैश्चैव हेतुमद्भि र्विनिश्चितैः ॥ ४ ॥ ॥ ४९३ ॥

தத் க்ஷேத்ரம் யச்ச யாத்ருக்ச யத்விகாரி யதச்ச யத் |
ஸ ச யோ யத் ப்ரபாவச்ச தத் ஸமாஸேன மே ச்ருணு
|| 3 || (492)

ருஷிபிர் பஹுதா கீதம் ச்சந்தோபிர்-விவிதை: ப்ருதக் |
ப்ரஹ்மஸூத்ர-பதைச்சைவ ஹேதுமத்பிர்-விநிச்சிதை:
|| 4 || (493)

---

3. (தத் க்ஷேத்ரம்) அந்த க்ஷேத்ரம் (யத் ச) எது என்றும் (யாத்ருக் ச) எவ்வகைத்தென்றும் (யத்விகாரி) என்ன வேறுபாடுடையதென்றும் (யத: ச யத்) எதிலிருந்து எது தோன்றியதென்றும், (ஸ ச) அந்த க்ஷேத்ரஜ்ஞனும் (ய:) யார் என்றும் (யத் ப்ரபாவ: ச) எத்திறத்தினன் என்றும் (தத்) அதை (ஸமாஸேன) சுருக்கமாக (மே) என்னிடம் (ச்ருணு) கேள்.

4. (ருஷிபி:) ரிஷிகளால் (பஹுதா) பலவிதமாக (கீதம்) பாடப்பட்டுள்ளது—இவ்வுண்மை, (ச்சந்தோபி:) வேதங்களால் (விவிதை:) பல வழிகளில் (ப்ருதக்)

குறிப்பு:—பின்வரும் சுலோகம் இவ்வத்தியாயத்தின் முதல் சுலோகமாகச் சில பாடங்களில் காணப்படுகிறது. இதைச் சேர்த்தால் பகவத்கீதையில் மொத்தம் 701 சுலோகங்கள் ஆகும்.
அர்ஜுன உவாச—

ப்ரக்ருதிம் புருஷஞ்சைவ க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞ மேவ ச |
ஏதத்வேதிது-மிச்சாமி ஜ்ஞானம் ஜ்ஞேயஞ்ச கேசவ ||

3. க்ஷேத்ரம்—என்றால் வயல் என்று பொருள். வயலைப் போல் கர்மங்களாகிற விதைகள் முளைத்து வளருமிடம்.

महाभूता-न्यहङ्कारो बुद्धि-रव्यक्त-मेव च ।
इन्द्रियाणि दशैकं च पञ्च चेन्द्रिय-गोचराः ॥ ५ ॥ ॥४९४॥
इच्छा द्वेषः सुखं दुःखं सङ्घातश्चेतना धृतिः ।
एतत् क्षेत्रं समासेन सविकार-मुदाहृतम् ॥ ६ ॥ ॥४९५॥

மஹாபூதான்-யஹங்காரோ புத்தி-ரவ்யக்த-மேவ ச |
இந்த்ரியாணி தசைகஞ் ச பஞ்ச சேந்த்ரிய கோசரா:
|| 5 || (494)
இச்சா த்வேஷ: ஸுகம் து:க்கம் ஸங்காதச்-சேதனா
த்ருதி: |
ஏதத்-க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகார-முதாஹ்ருதம்
|| 6 || (495)

தனித்தனியாகவும்—பாடப்பட்டுள்ளது. (விநிச்சிதை:) நிர்ணயப்படுத்துவதும் (ஹேதுமத்பி:) காரணங்களுடன் கூடியதும் (ப்ரஹ்ம ஸூத்ரபதை: ச) பிரம்மத்தைச் சுட்டிக் காட்டுவதுமான சொற்களாலும் (ஏவ) அவ்வாறே—விளக்கப்பட்டுள்ளது.

5-6. (மஹாபூதானி) மஹாபூதங்களும் (அஹங்கார:) அஹங்காரமும், (புத்தி:) புத்தியும் (அவ்யக்தம் ஏவ ச) அவ்யக்தமும், (இந்த்ரியாணி தசைகஞ் ச) பதினோரிந்திரியங்களும், (பஞ்ச ச இந்த்ரிய கோசரா:) ஐந்து இந்திரிய விஷயங்களும் (இச்சா த்வேஷ:) விருப்பு வெறுப்பு (ஸுகம்து:க்கம) இன்பதுன்பம் (ஸங்காத:) பூதக் கூட்டமாகிய உடல் (சேதனா) உயிர் அல்லது ஜீவனசக்தி (த்ருதி:) தாரணாசக்தி என்ற (ஏதத்) இத்தொகுதி (ஸவிகாரம்) வேறுபாடுகளுடன் (க்ஷேத்ரம்) என்று (ஸமாஸேன) சுருக்கமாக (உதாஹ்ருதம்) கூறப்படும்.

---

5. (1) **அவ்யக்தம்** என்பது மூலப்ரக்ருதி அல்லது ப்ரதானம். இதினின்று முதலில் தோன்றுவது, (2) **மஹத்தத்வம் அல்லது**

अमानित्व-मदम्भित्व-महिंसा क्षान्ति-रार्जवम् ।
आचार्योपासनं शौचं स्थैर्य-मात्म-विनिग्रहः ॥ ७ ॥ ॥४९६॥

அமானித்வ-மதம்பித்வ-மஹிம்ஸா க்ஷாந்தி-ரார்ஜவம் ।
ஆசார்யோபாஸனம் சௌசம் ஸ்தைர்ய-
மாத்மவிநிக்ரஹ: ॥ 7 ॥ (496)

---

7. (அமானித்வம்) தற்பெருமையின்மை, (அதம்பித்வம்) இடம்பமின்மை (அஹிம்ஸா) அஹிம்ஸை, (க்ஷாந்தி:) பொறுமை (ஆர்ஜவம்) நேர்மை (ஆசார்யோபாஸனம்) குருவின் பணிவிடை, (சௌசம்)

ஸமஷ்டி புத்தி; இது நிச்சய ஸ்வரூபமுடையது. இதினின்று (3) அஹங்காரம். அஹங்காரத்தினின்று படிப்படியாக ஐந்து ஸூக்ஷ்ம பூதங்கள் அல்லது தன்மாத்திரைகள். (4) சப்த தன்மாத்திரையையுடைய ஆகாசம். (5) வாயு. (6) தேயு. (7) அப்பு. (8) ப்ருதிவீ. (இவை யெட்டுங்கூடி அபரா ப்ரக்ருதியென அத். 7-ல் கூறப்பட்டது. பின்னேமும் மூல ப்ரக்ருதியினின்று உத்பத்தியானமையால் விக்ருதியாகவும், இந்திரியங்கள் மனம் முதலிய தத்வங்களைத் தாம் உத்பத்தி செய்வதால் அவைகட்கு ப்ரக்ருதியாகவும் விளங்குங் காரணத்தால் இவை ப்ரக்ருதி-விக்ருதிகள். (இனி வருவனவெல்லாம் கேவல விக்ருதிகளே; அவை வேறு தத்வங்களை உற்பத்தி செய்வதில்லையாதலின்.)

பதினொரு இந்திரியங்கள்—காது, த்வக்கு, கண், நாக்கு, மூக்கு, என 5 ஞானேந்திரியங்கள்; வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என 5 கருமேந்திரியங்கள்; மனம் என்னும் அதீந்திரியம் ஒன்று.

ஐந்து இந்திரிய விஷயங்கள்—ஸ்தூல விஷயமான சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தம்.

ஆக ஸாங்கிய தத்வங்கள் (8+11+5=)24. இந்த இருபத்து நான்கின் கூட்டத்தாலும், பிரிவாலும் விகாரத்தாலும் தோன்றுவனவெல்லாம் க்ஷேத்ரம் (த்ருச்யம்). 25-வது தத்வம் புருஷன், க்ஷேத்ரஜ்ஞன், ஆத்மா, (த்ருக்). புருஷன் ப்ரக்ருதியுமன்று, கார்யமுமன்று, காரணமுமன்று. எதிலும் பற்றுமல் எல்லாவற்றையும் ஸாக்ஷியாய்ப் பார்த்து நிற்பவன்.

इन्द्रियार्थेषु वैराग्य-मनहङ्कार एव च ।
जन्म-मृत्यु-जरा-व्याधि-दुःख-दोषानुदर्शनम् ॥ ८ ॥ ॥४९७॥

இந்த்ரியார்த்தேஷு வைராக்ய-மனஹங்கார ஏவ ச |
ஜன்ம-ம்ருத்யு-ஜரா-வ்யாதி-து:க்க-தோஷானுதர்சனம்
|| 8 || (497)

தூய்மை (ஸ்தைர்யம்) விடாமுயற்சி (ஆத்மவிநிக்ரஹ:) தன்னடக்கம்;

8. (இந்த்ரியார்த்தேஷு) இந்திரிய விஷயங்களில் (வைராக்யம்) விருப்பின்மை (அனஹங்கார ஏவ ச) அஹங்காரமின்மை; (ஜன்ம-ம்ருத்யு ஜரா வ்யாதி து:க்க தோஷானுதர்சனம்) பிறப்பு இறப்பு மூப்பு பிணி துன்பம் இவற்றிலுள்ள தீமைகளைச் சிந்தித்தல்;

---

7. **ஆசார்யோபாஸனம்—**

ஒ—' மாசற்றூர் மனத்துளானை
வணங்கி யாமிருப்பதல்லாமல்
பேசத்தா னுவதுண்டோ
பேதை நெஞ்சே நீ சொல்லாய்.'

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

இடம்பமின்மை—தான் செய்த தருமத்தையுந் தவத்தையும் பிரகடனம் செய்தலை விரும்பாமை.

தூய்மை—ஒ—' மனத்தது மாசாக மாண்டார் நீர் ஆடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்.' (குறள்.)

அஹிம்சை—ஒ—' நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம்; நோய் செயயார், நோய் இன்மை வேண்டுபவர்.' (குறள்.)

8. **பிறப்பிறப்பு**—ஒ—' குடம்பை தனித்தொழியப் புள் பறந்தற்றே உடம்போடு உயிர் இடை நட்பு.' (குறள்.)

அஹங்காரமின்மை—ஒ—' யான் எனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த உலகம் புகும்.' (குறள்.)

असक्ति-रनभिष्वङ्गः पुत्र-दार-गृहादिषु ।
नित्यं च समचित्तत्व-मिष्टानिष्टोपपत्तिषु ॥ ९ ॥ ॥ ४९८ ॥
मयि चानन्ययोगेन भक्ति-रव्यभिचारिणी ।
विविक्तदेश-सेवित्व-मरति-र्जनसंसदि ॥ १० ॥ ॥ ४९९ ॥

அஸக்தி-ரனபிஷ்வங்க: புத்ர-தார-க்ருஹாதிஷு |
நித்யஞ் ச ஸமசித்தத்வ-மிஷ்டாநிஷ்டோபபத்திஷு
|| 9 || (498)
மயி சானன்யயோகேன பக்தி-ரவ்யபிசாரிணீ |
விவிக்ததேச-ஸேவித்வ-மரதிர்-ஜனஸம்ஸதி || 10 || (499)

---

9. (புத்ர-தார-க்ருஹாதிஷு) மக்கள் மனையாள் மனை முதலியவற்றில் (அஸக்தி:) பற்றின்மை (அனபிஷ்வங்க:) அபிமானமின்மை, (இஷ்டானிஷ்டோபபத்திஷு) இஷ்டமுள்ளதும் இஷ்டமில்லாததும் வாய்த்தபோது (நித்யம்) எக்காலத்தும் (ஸம-சித்தத்வஞ் ச) ஸமசித்தம்;

10. (மயி ச) என்னிடத்தும் (அனன்ய யோகேன) வேறொன்றைக் கருதாத யோகத்தால் (அவ்யபிசாரிணீ) முறை பிறழாத (பக்தி:) பக்தி (விவிக்த-தேச-ஸேவித்வம்) தூய்மையான தனியிடத்தில் நாட்டம் (ஜனஸம்ஸதி) ஜனக்கூட்டத்தில் (அரதி:) வெறுப்பு;

வியாதி—ஒ—'இச்சரீரத்தில் வந்த வியாதியை நல்விருந்தாகக் காணும் நான் நினைந்திருப்பது.' (நஞ்ஜீயர்.)

9. பற்றின்மை—ஒ—'பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு.' (குறள்.)

10. விவிக்ததேசம்—தேவாலயம், புண்ணியமான மலைச்சாரல், புண்ய நதி தீரம், தபோவனம் இவை போன்ற ஏகாந்தமும் பரிசுத்தமுமான இடம்.

अध्यात्म-ज्ञाननित्यत्वं तत्त्वज्ञानार्थ-दर्शनम् ।
एतज्ज्ञानमिति प्रोक्त-मज्ञानं यदतोऽन्यथा ॥ ११ ॥ ॥५००॥
ज्ञेयं यत्तत् प्रवक्ष्यामि यज्ज्ञात्वामृत-मश्नुते ।
अनादिमत् परं ब्रह्म न सत्त-न्नासदुच्यते ॥ १२ ॥ ॥५०१॥

அத்யாத்ம-ஜ்ஞான நித்யத்வம் தத்வஜ்ஞானார்த்த-
தர்சனம் |
ஏதத் ஜ்ஞானமிதி பரோக்த-மஜ்ஞானம்
யததோऽன்யதா || 11 || (500)
ஜ்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி யத் ஜ்ஞாத்வாம்ருத-
மச்னுதே |
அனாதிமத் பரம் ப்ரஹ்ம ந ஸத்-தந்-நாஸதுச்யதே
|| 12 || (501)

---

11. (அத்யாத்ம - ஜ்ஞானநித்யத்வம்) ஆத்ம ஞானத்தில் நிலைபெறுதற்கு விடாமுயற்சி (தத்வஜ்ஞானார்த்த - தர்சனம்) உண்மைப் பொருளின் ஆராய்ச்சி ஆகிய (ஏதத்) ஈதெல்லாம் (ஞானம் இதி) ஞானம் என்று (ப்ரோக்தம்) கூறப்படும்; (அத:) இதினின்று (அன்யதா) வேறானது (அஜ்ஞானம்) அஞ்ஞானம்.

12. (யத் ஜ்ஞேயம்) எது அறியத்தக்கதோ (யத் ஜ்ஞாத்வா) எதை அறிந்து (அம்ருதம்) சாகாத் தன்மையை (அச்னுதே) அடைகின்றானோ (தத்) அதை (ப்ரவக்ஷ்யாமி) மேலே கூறுவேன். (அனாதிமத்) ஆதியில்லாதது (பரம்) உயர்ந்தது (ப்ரஹ்ம) பிரம்மம் எனப்

---

11 மேற்கூறியவை யெல்லாம் ஞானத்தை அப்பியஸிப்போரிடங் காணப்படும் பொது லக்ஷணங்கள். இவற்றிற் பெரும்பாலானவைகளை ஆத்ம விசாரத்திற் புகும் ஸாதகன் இயன்றவரை கைக்கொள்ள வேண்டும் என்பது கருத்து,

12. 'அனாதி-மத்பரம்' —ராமானுஜர். (பா. பே.)

सर्वतः पाणिपादं तत् सर्वतोऽक्षिशिरो-मुखम् ।
सर्वतः श्रुतिम-ल्लोके सर्व-मावृत्य तिष्ठति ॥ १३ ॥ ॥५०२॥
सर्वेन्द्रिय-गुणाभासं सर्वेन्द्रिय-विवर्जितम् ।
असक्तं सर्वभृच्चैव निर्गुणं गुणभोक्तृ च ॥ १४ ॥ ॥५०३॥

ஸர்வத: பாணி பாதம் தத் ஸர்வதோऽக்ஷிசிரோ-முகம்|
ஸர்வத: ச்ருதிமல்-லோகே ஸர்வ-மாவ்ருத்ய திஷ்டதி || 13 || (502)

ஸர்வேந்த்ரிய-குணாபாஸம் ஸர்வேந்த்ரிய-விவர்ஜிதம் |
அஸக்தம் ஸர்வப்ருச்சைவ நிர்க்குணம் குணபோக்த்ரு ச || 14 || (503)

படுவது; (தத்) அது (ந ஸத்) உளதென்பதுவு மன்று (ந அஸத்) இலதென்பதுவுமன்று என்று (உச்யதே) சொல்லப்படும்.

13. (தத்) அது (ஸர்வத:) எங்கும் (பாணிபாதம்) கைகால்களுடையது; (ஸர்வத:) எங்கும் (அக்ஷி சிரோ முகம) கண்ணுந் தலையும் வாயுமுடையது; (ஸர்வத:) எங்கும் (ச்ருதிமத்) காதுகளையுடையது; (லோகே) உலகில் (ஸர்வம்) அனைத்தையும் (ஆவ்ருத்ய) வியாபித்து (திஷ்டதி) நிற்கின்றது.

14. (ஸர்வேந்த்ரியகுணாபாஸம்) இந்திரியங்களனைத்தின் செயலாலுந் துலங்குவதாயினும் (ஸர்வேந்த்ரிய

---

14. ஒ—ஆத்மா க்ஷேத்ரஜ்ஞ இத்யுக்த: ஸம்யுக்த: ப்ரக்ருதேர்-குணை: | தைரேவ து விநிர்முக்த: பரமாத்மேத்-யுதாஹ்ருத: ||
—(ம. பா. சாந்தி 187-24)

ஒ—உரையற்றதொன்றை உரை செய்யும் ஊமர்காள்
கரையற்றதொன்றைக் கரை காணலாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற்றிருந்தான் புரிசடையோனே. (திருமந்திரம்.)

बहिरन्तश्च भूताना-मचरं चरमेव च ।
सूक्ष्मत्वा-त्तदविज्ञेयं दूरस्थं चान्तिके च तत् ॥ १५ ॥

பஹிரந்தச்ச பூதாஞ-மசரஞ் சரமேவ ச |
ஸூக்ஷ்மத்வாத் ததவிஜ்ஞேயம் தூரஸ்தஞ் சாந்திகே
ச தத் ||15 || (504)

விவர்ஜிதம்) இந்திரியங்களனைத்து மில்லாததாயும், (அஸக்தம்) பற்றற்றதாயினும் (ஸர்வப்ருத்சைவ) அனைத்தையும் பற்றித் தாங்குவதாயும் (நிர்க்குணம்) குணங்களற்றதாயினும் (குணபோக்த்ரு ச) குணங்களை யனுபவிப்பதாயும்;

15. (தத்) அது (பூதாஞம்) பொருள்களுக்கு (பஹிரந்தச்ச) வெளியாகவும் உள்ளாகவும் (அசரம் சரம் ஏவ ச) அசையும் பொருளாகவும் அசையாப் பொருளாகவும், (ஸூக்ஷ்மத்வாத்) சூக்ஷ்மத்தன்மையால் (அவிஜ்ஞேயம்) அறிதற்கு முடியாததாயும் உளது. (தத்) அது (தூரஸ்தஞ் ச) தூரத்திலுள்ள தாயினும் (அந்திகே ச) அருகிலேயுள்ளது.

---

15. ஒ—இனி அன்றுந் திருவுருவங் காணுதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவருங் காண்கிலேன்—என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்போர்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவமேது ?—(காரைக்காலம்மையார்.)

‘ஒப்புடையனல்லன், ஒருவனல்லன்,
ஒரூரனல்லன், ஓர் உவமன் இல்லி,
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணுகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணுதே’ —(அப்பர்.)

अविभक्तं च भूतेषु विभक्त-मिव च स्थितम् ।
भूतभर्तृ च तज्ज्ञेयं ग्रसिष्णु प्रभविष्णु च ॥ १६ ॥ ॥५०५॥
ज्योतिषामपि तज्ज्योति-स्तमसः पर-मुच्यते ।
ज्ञानं ज्ञेयं ज्ञानगम्यं हृदि सर्वस्य विष्ठितम् ॥ १७ ॥ ॥५०६॥

அவிபக்தஞ் ச பூதேஷு விபக்தமிவ ச ஸ்திதம் |
பூதபர்த்ரு ச தத ஜ்ஞேயம் க்ரஸிஷ்ணு ப்ரபவிஷ்ணு ச
|| 16 || (505)
ஜ்யோதிஷாமபி தத் ஜ்யோதிஸ்-தமஸ: பரமுச்யதே |
ஜ்ஞானம் ஜ்ஞேயம் ஜ்ஞான-கம்யம் ஹ்ருதி ஸர்வஸ்ய
விஷ்டிதம் || 17 || (506)

---

16. (பூதேஷு) பொருள்களில் (அவிபக்தஞ் ச) பிரிவுபடாததாயினும் (விபக்தம் இவ ச ஸ்திதம்) பிரிவு பட்டதுபோல் நிற்பதாயும் (பூதபர்த்ரு ச) பொருள்களைத் தாங்குவதாயும் (க்ரஸிஷ்ணு) விழுங்குவதாயும் (ப்ரபவிஷ்ணு ச) படைப்பதாயும் (தத் ஜ்ஞேயம்) அது அறியத்தக்கது.

17. (தத்) அது (ஜ்யோதிஷாம் அபி) ஜோதிகளுக்குங்கூட (ஜ்யோதி:) ஜோதியாயும் (தமஸ:) இருளுக்கு (பரம்) அப்பாற்பட்டதாயும் (உச்யதே) சொல்லப்படுகிறது. (ஜ்ஞானம்) அறிவாயும் (ஜ்ஞேயம்) அறியத்தக்கதாயும் (ஜ்ஞானகம்யம்) அறிவினல் அடைய வேண்டிய பொருளாயும் (ஸர்வஸ்ய) எல்லோருடைய (ஹ்ருதி) இருதயத்திலும் (விஷ்டிதம்) நிலையுள்ளதாயும் விளங்குவது அது.

---

17. விஷ்டிதம்—‘ திஷ்டிதம் ’ (பா. பே.)

इति क्षेत्रं तथा ज्ञानं ज्ञेयं चोक्तं समासतः ।
मद्भक्त एतद्विज्ञाय मद्भावायोपपद्यते ॥ १८ ॥ ॥ ५०७ ॥
प्रकृतिं पुरुषं चैव विद्ध्यनादी उभावपि ।
विकारांश्च गुणांश्चैव विद्धि प्रकृति-संभवान् ॥ १९ ॥ ॥५०८॥

இதி க்ஷேத்ரம் ததா ஜ்ஞானம் ஜ்ஞேயஞ் சோக்தம்
ஸமாஸத: |
மத்பக்த ஏதத் விஜ்ஞாய மத்பாவாயோபபத்யதே
|| 18 || (507)

ப்ரக்ருதிம் புருஷஞ் சைவ வித்த்யனாதீ உபாவபி |
விகாராம்ச்ச குணாம்ச்சைவ வித்தி ப்ரக்ருதி-ஸம்பவான்
|| 19 || (508)

---

18. (இதி) இங்ஙனம் (க்ஷேத்ரம்) க்ஷேத்ரமும் (ததா) அவ்வாறே (ஜ்ஞானம்) ஞானமும் (ஜ்ஞேயஞ் ச) ஞேயமும் (ஸமாஸத:) சுருக்கமாக (உக்தம்) கூறப்பட்டது. (மத்பக்த:) என் பக்தன் (ஏதத்) இதை (விஜ்ஞாய) நன்குணர்ந்து (மத்பாவாய) என் நிலைமைக்கு (உபபத்யதே) உரியவனாகின்றான்.

19. (ப்ரக்ருதிம்) பிரகிருதியும் (புருஷஞ் ச ஏவ) புருஷனும் ஆகிய (உபௌ அபி) இரண்டு தத்துவங்களையும் (அனாதீ) ஆதியில்லாதவை என்று (வித்தி) உணர்வாய். (விகாரான் ச ஏவ) வெவ்வேறான தோற்றங்களும் (குணான் ச ஏவ) குணங்களும் (ப்ரக்ருதி ஸம்பவான்) பிரகிருதியினின்று பிறந்தனவாக (வித்தி) உணர்வாய்.

कार्य-कारण-कर्तृत्वे हेतुः प्रकृति-रुच्यते ।
पुरुषः सुखदुःखानां भोक्तृत्वे हेतुरुच्यते ॥ २० ॥ ॥५०९॥

கார்ய-காரண-கர்த்ருத்வே ஹேது: ப்ரக்ருதி-ருச்யதே |
புருஷ: ஸுகது:க்காஞம் போக்த்ருத்வே ஹேது-
ருச்யதே || 20 || (509)

---

20. (கார்யகாரண கர்த்ருத்வே) கார்யமாகிற தத்துவங்களையும் தோற்றுவிப்பதின் (ஹேது:) ஏதுவாக (ப்ரக்ருதி:) பிரகிருதியானது (உச்யதே) கூறப்படுகிறது. (ஸுகது:க்காஞம்) இன்ப துன்பங்களின் (போகத்ருத்வே) அனுபவத்தின் (ஹேது:) ஏதுவாக (புருஷ:) புருஷன் (உச்யதே) கூறப்படுகிருன்.

---

20. கார்ய தத்துவங்கள்—5-வது சுலோகத்தின் குறிப்பில் ‘விக்ருதி’ என விரித்துக் கூறப்பட்ட (10 இந்திரியங்கள், மனம், 5 விஷயங்கள்) 16 தத்துவங்கள்.

காரணம்—ப்ரக்ருதி-விக்ருதி எனக் கூறப்பட்ட இடைத் தத்துவங்களாகிய ஸூக்ஷ்ம பூதங்கள் ஐந்தும்.

கார்ய கரண கர்த்ருத்வே என்றும் பாடம் உண்டு. இதில் கர்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5 ஆகப் புறக்கரணம் 10; மனம், புத்தி, அஹங்காரம் என அகக்கரணம் 3; இப்பதின்மூன்றும கரணங்கள். 5 மஹாபூதங்களும் அவற்றின் விஷயங்கள் 5-ம் ஆகப் பத்தும் கார்யம் எனக் கொள்ளப்படும்.

அகக்கரணத்தை மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என நான்கு பிரிவாய்க் கூறுவாரும் உண்டு. கீதையிலும் ஸாங்கிய சாஸ்திரத்திலும் அகக்கரணம் மூன்றுகவே பகுத்துக் கூறப்பட்டுள்ளது. இப்பாகுபாட்டின்படி மனமும் சித்தமும் ஒன்றேயாம். மனம் ஸங்கல்ப விகல்ப வடிவுடையது. புத்தி நிச்சய வடிவுடையது. அஹங்காரம் ‘நான்’ என்று அபிமானிப்பது.

ஒ—குஹாம் ப்ரவிஷ்டௌ ஆத்மாநௌ ஹி, தத்தர்சனத் |
(பிரம்ம ஸூத்ரம் 1. 2. 11.)

ருதம் பிபந்தௌ. (கட. உப. 1. 3. 1.)

पुरुषः प्रकृतिस्थो हि भुङ्क्ते प्रकृतिजान्-गुणान् ।
कारणं गुणसङ्गोऽस्य सदसद्योनि-जन्मसु ॥ २१ ॥ ॥५१० ॥
उपद्रष्टानुमन्ता च भर्ता भोक्ता महेश्वरः ।
परमात्मेति चाप्युक्तो देहेऽस्मिन् पुरुषः परः ॥ २२ ॥५११॥

புருஷ: ப்ரக்ருதிஸ்தோ ஹி புங்க்தே ப்ரக்ருதிஜான் குணான் ।
காரணம் குணஸங்கோऽஸ்ய ஸதஸத்-யோனி ஜன்மஸு ‖ 21 ‖ (510)
உபத்ரஷ்டானுமந்தா ச பர்த்தா போக்தா மஹேச்வர: ।
பரமாத்மேதி சாப்யுக்தோ தேஹேऽஸ்மின் புருஷ: பர: ‖ 22 ‖ (511)

---

21. (ஹி) உண்மையில் (புருஷ:) புருஷன் (ப்ரக்ருதிஸ்த:) பிரகிருதியிலிருந்துகொண்டு (ப்ரக்ருதிஜான்) பிரகிருதியிற் பிறந்த (குணான்) குணங்களை (புங்க்தே) புசிக்கிறான். (அஸ்ய) இவனுக்கு (ஸதஸத் யோனி ஜன்மஸு) நல்லதும் கெட்டதுமாகிய யோனிகளில் பிறத்தற்கு (குணஸங்க:) குணப்பற்றே (காரணம்) காரணமாகின்றது.

22. (உபத்ரஷ்டா) பார்ப்பவனுக்கு மேல் நின்று பார்ப்பவனாகவும் (அனுமந்தா ச) நினைப்பவனுக்குப் பின் நின்று நினைப்பவனாகவும் (பர்த்தா) தாங்குபவனாக வும் (போக்தா) அனுபவிப்பவனாகவும் (மஹேச்வர:) ஆளும் இறைவனுக்கு இறைவனாகவும் (பரமாத்மா இதி ச அபி உக்த:) பரமாத்மா என்று கூறப்படுபவனாகவும் உள்ளவன் (அஸ்மின் தேஹே) இச்சரீரத்தில் (பர:) வேறாக உள்ள (புருஷ:) புருஷன்.

य एवं वेत्ति पुरुषं प्रकृतिं च गुणैः सह ।
सर्वथा वर्तमानोऽपि न स भूयोऽभिजायते ॥ २३ ॥ ॥५१२॥

ध्यानेनात्मनि पश्यन्ति केचि-दात्मान-मात्मना ।
अन्ये सांख्येन योगेन कर्मयोगेन चापरे ॥ २४ ॥ ॥५१३॥

ய ஏவம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிஞ் ச குணை: ஸஹ |
ஸர்வதா வர்த்தமானோऽபி ந ஸ பூயோऽபிஜாயதே
|| 23 || (512)

த்யானே-னாத்மனி பச்யந்தி கேசி-தாத்மான-மாத்மனா|
அன்யே ஸாங்க்யேன யோகேன கர்மயோகேன
சாபரே || 24 || (513)

---

23. (ய;) எவன் (ஏவம்) இவ்வாறு (புருஷம்) புருஷனையும் (குணை: ஸஹ) குணங்களுடன் கூடிய (ப்ரக்ருதிஞ் ச) பிரகிருதியையும் (வேத்தி) உணர்கின்றானோ (ஸ:) அவன் (ஸர்வதா வர்த்தமான: அபி) எந்நெறியில் வாழ்பவனாயினும் (பூய:) மீண்டும் (ந அபிஜாயதே) பிறப்பதில்லை.

24. (கேசித்) சிலர் (த்யானேன) தியானத்தால் (ஆத்மனி) உள்ளத்தில் (ஆத்மனா) தாமாகவே (ஆத்மானம்) ஆத்மாவை (பச்யந்தி) காண்கின்றனர் ;

---

23. **ஸர்வதா வர்த்தமானோऽபி**—எந்த வர்ணத்தோனாயினும், எந்த ஆசிரமத்தோனாயினும் (ஆணாயினும் பெண்ணாயினும்), அவன் ஜீவன் முக்திக்குரியவன். துர்நடத்தையுடையவனாயினுங் கூட அவன் முக்திக்குரியவன் என்று பொருள் கொள்ளுதல் கூடாது ; ஏனெனில் ஞானியின் ஆசாரமே உலகத்தார்க்குப் பிரமாணமாய் விளங்குவதால் காமம், குரோதம், கபடம், பொய் முதலியன கலந்த துர்நடத்தை ஒருபோதும் ஞானியிடம் இருக்காது. அப்படியிருக்குமாயின் அவன் ஞானியன்று.

24. தியானயோகம், ஸாங்கியயோகம், கருமயோகம் மூன்றும் வெவ்வேறு மனப்பான்மையுடையோர்க்குக் கூறப்பட்டது.

अन्ये त्वेव-मजानन्तः श्रुत्वान्येभ्य उपासते ।
तेऽपि चातितरन्त्येव मृत्युं श्रुति-परायणाः ॥ २५ ॥ ॥५१४॥

அன்யே த்வேவ-மஜானந்த: ச்ருத்வான்யேப்ய உபா
ஸதே |
தேऽபி சாதிதரந்த்யேவ ம்ருத்யும் ச்ருதி-பராயணா:
|| 25 || (514)

(அன்யே) வேறு சிலர் (ஸாங்க்யேன யோகேன) ஸாங்கிய யோகத்தாலும் (அபரே ச) மற்றுஞ் சிலர் (கர்மயோகேன) கரும யோகத்தாலும் — காண்கின்றனர்.

25. (அன்யே து) பிறரோ (ஏவம்) இவ்வாறு (அஜானந்த:) உணராதவர்களாயினும் (அன்யேப்ய:) பிறரிடமிருந்து (ச்ருத்வா) உபதேசம் பெற்று (உபாஸதே) உபாசிக்கின்றனர். (தே அபி ச) அவர்களுங்கூட (ச்ருதிபராயணா:) உபதேசத்தையே உயர்கதியாய்க் கொண்டவர்களாய் (ம்ருத்யும்) ஸம்ஸாரத்தை (அதிதரந்தி ஏவ) நிச்சயமாய்க் கடக்கின்றனர்.

மூன்றின் முடிவும் ஒன்றே—ஜீவாத்ம பரமாத்ம ஐக்ய தரிசனம். தியானயோகம் அத். 6-ல் கூறப்பட்டது. ஸாங்கியயோகம் இவ்வத்தியாயத்தில் கூறப்பட்ட ஆத்மானாத்ம விசாரம்; இது விவேகம், வைராக்யம், சமாதி ஷட்கஸம்பத்தி, முமுக்ஷுத்வம் எனும் ஸாதன சதுஷ்டயத்தால் பெறப்படுவது. கருமயோகம் அத். 2ல கூறப்பட்ட அனாஸக்திப் பயிற்சியும் ஸ்திதப்ரஜ்ஞையும்.

25. ச்ருதி பராயணா:—தியானயோகப் பயிற்சியிலோ, ஆத்ம விசாரத்திலோ பாடுபடாமல், ஒரு பெரியவரோ குருவோ இட்ட கட்டளையே வாழ்க்கை லக்ஷியமாய்க்கொண்டு வீடு பெற்றவரும் உண்டு. சாந்தோக்கிய உபநிஷத்தில் கூறப்படும் ஸத்யகாமன் சரிதை இதற்கு உதாரணம். குருவின் உத்திரவுப்படி மாட்டுக் கூட்டம் ஓராயிரமாக வளரும் வரை மேய்த்துக்கொண்டிருப்பதைத் தவிர வேறொன்றைச் சிந்தியாமலிருந்த அவனுக்கு அவன் சிரத்தையே காரணமாகப் பிரம்மஞானம் உதித்தது. குருவே அவனைப் பார்த்து 'நீ ஞானியாய் விளங்குகின்றாய். உனக்கு யார் உபதேசித்தது?' எனக் கேட்கிறார். (சாந். உப. 4. 4-9.)

यावत् संजायते किञ्चित् सत्त्वं स्थावर-जङ्गमम् ।
क्षेत्र-क्षेत्रज्ञ-संयोगा-त्तद्विद्धि भरतर्षभ ॥ २६ ॥   ॥ ५१५ ॥
समं सर्वेषु भूतेषु तिष्ठन्तं परमेश्वरम् ।
विनश्यत्स्वविनश्यन्तं यः पश्यति स पश्यति ॥ २७ ॥५१६ ॥

யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்வம் ஸ்தாவர-
ஜங்கமம் |
க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-ஸம்யோகாத் தத்வித்தி
பரதர்ஷப || 26 || (515)
ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேச்வரம் |
விநச்யத்ஸ்-வவிநச்யந்தம் ய: பச்யதி ஸ பச்யதி
|| 27 || (516)

---

26. (பரதர்ஷப) அர்ஜுனு ! (ஸ்தாவர ஜங்கமம்) அசையாப் பொருளோ அசையும் பொருளோ (ஸத்வம்) இருப்புள்ளது (யாவத் கிஞ்சித் ஸஞ்ஜாயதே) எது எது தோன்றுகின்றதோ (தத்) அது (க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ ஸம்யோகாத்) க்ஷேத்ரமும் க்ஷேத்ரஜ்ஞனும் கூடுதலால் என்று (வித்தி) அறி.

27. (ஸர்வேஷு பூதேஷு) எல்லாப் பொருள்களிலும் (ஸமம்) ஸமமாக (திஷ்டந்தம்) நிலை பெற்றுள்ளவனும் (விநச்யத்ஸு) அழியும் பொருள்களில் (அவிநச்யந்தம்) அழியாமலுள்ளவனும் ஆகிய (பரமேச்வரம்) பரமேசுவரனை (ய:) எவன் (பச்யதி) பார்க்கின்றானோ (ஸ:) அவனே (பச்யதி) பார்க்கின்றான்.

---

26. அபரா ப்ரக்ருதியே க்ஷேத்ரம் ; பரா ப்ரக்ருதியே க்ஷேத்ரஜ்ஞன்.

ஒ—" **விசுத்தாம் ப்ரக்ருதிம்** மமாத்மபூதாம் வித்தி மே பராம் ப்ரக்ருஷ்டாம் ஜீவபூதாம் க்ஷேத்ரஜ்ஞ லக்ஷணாம்'. (சங்கரர் கீ. 7. 5.)

समं पश्यन्हि सर्वत्र समवस्थित-मीश्वरम् ।
न हिनस्त्यात्मनात्मानं ततो याति परां गतिम् ॥ २८ ॥
प्रकृत्यैव च कर्माणि क्रियमाणानि सर्वशः ।
यः पश्यति तथात्मान-मकर्तारं स पश्यति ॥ २९ ॥ ॥५१८॥

ஸமம் பச்யன் ஹி ஸர்வத்ர ஸமவஸ்தித-மீச்வரம் |
ந ஹிநஸ்த்-யாத்மனுத்மானம் ததோ யாதி பராங்
கதிம் || 28 || (517)
ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரியமாணுனி ஸர்வச: |
ய: பச்யதி ததாத்மான-மகர்த்தாரம் ஸ பச்யதி
|| 29 || (518)

---

28. அவன் (ஹி) உண்மையில் (ஸர்வத்ர) எங்கும் (ஸமம்) ஸமமாக (ஸமவஸ்திதம்) நிலைத்து நிற்பவனுகிய (ஈச்வரம்) ஈசுவரனை (பச்யன்) கண்டு (ஆத்மனு) தன்னுல் (ஆத்மானம்) தன்னை (ந ஹினஸ்தி) அழிக்காதவனுகின்ருன். (தத:) அதனுல் (பராங்கதிம்) உயர்நிலையை (யாதி) எய்துகின்ருன்.

29. (ப்ரக்ருத்யா ஏவ) பிரகிருதியினுலேயே (ஸர்வச: கர்மாணி) கருமங்களனைத்தும் (க்ரியமாணுனி) செய்யப்படுகின்றன என்று (ய:) எவன் (பச்யதி) காண்கின்ருனே (ஸ:) அவன் (ததா) அவ்வாற்ருலே (ஆத்மானம்) ஆத்மாவை (அகர்த்தாரம்) செயலற்றதாக (பச்யதி) காண்கின்ருன்.

---

29. ப்ரக்ருதியால்—முக்குண வடிவுடைய அபரா ப்ரகிருதியால் (ஒ—கீ. 3. 27-28.)

यदा भूत-पृथग्भाव-मेकस्थ-मनुपश्यति ।
तत एव च विस्तारं ब्रह्म संपद्यते तदा ॥ ३० ॥ ॥ ५१९ ॥
अनादित्वा-न्निर्गुणत्वात् परमात्माय-मव्ययः ।
शरीरस्थोऽपि कौन्तेय न करोति न लिप्यते ॥ ३१ ॥ ॥ ५२० ॥

யதா பூத-ப்ருதக்பாவ-மேகஸ்த-மனுபச்யதி |
தத ஏவ ச விஸ்தாரம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா
|| 30 || (519)
அநாதித்வாந்-நிர்க்குணத்வாத் பரமாத்மாய-மவ்யய: |
சரீரஸ்தோऽபி கௌந்தேய ந கரோதி ந லிப்யதே
|| 31 || (520)

---

30. (யதா) எப்போது (பூதப்ருதக்பாவம்) பூதங்களின் வேற்றுமை (ஏகஸ்தம) ஒரே ஆத்மாவிடம் ஒன்றுபட்டு ஒடுங்குவதையும் (தத: ஏவ) அதினின்றே (விஸ்தாரஞ் ச) விரிவாக உற்பத்தியாவதையும் (அனுபச்யதி) அனுபவத்தால் காண்கின்றானோ (ததா) அப்போது (ப்ரஹ்ம) பிரம்மமாக (ஸம்பத்யதே) ஆகின்றான்.

31. (கௌந்தேய) அர்ஜுனா! (அநாதித்வாத்) ஆரம்பம் இல்லாததாலும் (நிர்க்குணத்வாத்) குணமில்லாததாலும் (அயம) இந்த (அவ்யய:) அழிவில்லாத (பரமாத்மா) பரமாத்மா (சரீரஸ்த: அபி) சரீரத்திலிருப்பினும் (ந கரோதி) ஒன்றும் செய்வதுமில்லை (ந லிப்யதே) ஒன்றிலும் பற்றுவதுமில்லை.

---

30. பரமேசுவரன் என்றும், ஈசுவரன் என்றும், ஆத்மா என்றும், பிரம்மம் என்றும, பரமாத்மா என்றும், உபத்ரஷ்டா, அனுமந்தா, பர்த்தா போக்தா என்றுய பலவாறுய்க் கூறப்பட்டவன் க்ஷேத்ரஜ்ஞன் ஒருவனே.

ஓ—பிரம்மம் என்று வேதாந்திகள் கூறும் பொருளைத்தான் ஆத்மா என்று யோகிகளும், பகவான் என்று பக்தர்களும் சொல்லுகின்றனர். பூஜை செய்யும் போது அர்ச்சகன் என்று சொல்லப்

यथा सर्वगतं सौक्ष्म्या-दाकाशं नोपलिप्यते ।
सर्वत्रावस्थितो देहे तथात्मा नोपलिप्यते ॥ ३२ ॥ ॥५२१॥
यथा प्रकाशयत्येकः कृत्स्नं लोक-मिमं रविः ।
क्षेत्रं क्षेत्री तथा कृत्स्नं प्रकाशयति भारत ॥ ३३ ॥ ॥५२२॥

யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யா-தாகாசம் நோபலிப்யதே |
ஸர்வத்ராவஸ்திதோ தேஹே ததாத்மா நோபலிப்யதே || 32 || (521)
யதா ப்ரகாசயத்யேக: க்ருத்ஸ்னம்-லோகமிமம் ரவி: |
க்ஷேத்ரம் க்ஷேத்ரீ ததா க்ருத்ஸ்னம் ப்ரகாசயதி பாரத || 33 || (522)

---

32. (யதா) எவ்வாறு (ஸர்வகதம்) எங்கும் நிறைந்த (ஆகாசம்) ஆகாயம் (ஸௌக்ஷ்ம்யாத்) ஸூக்ஷ்மத்தன்மையால் (ந உபலிப்யதே) களங்கமடைவதில்லையோ (ததா) அவ்வாறே (ஆத்மா) ஆத்மாவானது (தேஹே) உடலில் (ஸர்வத்ர) எங்கும் (அவஸ்தித:) நிறைந்துறையினும் (ந உபலிப்யதே) களங்கமடைவதில்லை.

33. (பாரத) அர்ஜுனா! (யதா) எவ்வாறு (ஏக: ரவி:) ஒரேசூரியன் (இமம்) இந்த (க்ருத்ஸ்னம் லோகம்) உலகமனைத்தையும் (ப்ரகாசயதி) பிரகாசிப்பிக்கின்றனோ (ததா) அவவாறே (க்ஷேத்ரீ) க்ஷேத்ரியான ஆத்மா (க்ருத்ஸ்னம் க்ஷேத்ரம்) க்ஷேத்ரமாகிய உருவனைத்தையும் (ப்ரகாசயதி) பிரகாசிப்பிக்கிறான்.

படும் பிராம்மணனே மடைப்பள்ளியில் வேலை செய்யும்போது சமையல்காரன் எனப்படுகிறான். (ரா. கி.)

32. ஒ—பாம்பின் பல்லில் விஷமிருந்தால் பாம்புக்கு என்ன கெடுதி? அதைப்போல இவ்வுலகில் நாம் காணும் துன்பம், பாவம் முதலிய தீமைகள் பிரம்மத்தைப்பற்று. (ரா. கி.)

क्षेत्र-क्षेत्रज्ञयो-रेव-मन्तरं ज्ञान-चक्षुषा ।
भूत-प्रकृति-मोक्षं च ये विदु-र्यान्ति ते परम् ॥ ३४ ॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे क्षेत्रक्षेत्रज्ञविभागयोगो नाम त्रयोदशोऽध्यायः ॥

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோ-ரேவ-மந்தரம் ஜ்ஞான சக்ஷுஷா |
பூதப்ரக்ருதிமோக்ஷஞ் ச யே விதுர்-யாந்தி தே பரம் || 34 || (523)

இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுனஸம்வாதே க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞவிபாகயோகோ நாம த்ரயோதசோऽத்யாய: ||

34. (ஏவம்) இவ்வாறு (க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞயோ:) க்ஷேத்ரத்துக்கும் க்ஷேத்ரஜ்ஞனுக்கும் (அந்தரம்) வேற்றுமை யையும் (பூதப்ரக்ருதி மோக்ஷஞ் ச) தோன்றிய பிரபஞ்சம் பிரகிருதியில் மறைதலையும் (ஜ்ஞான சக்ஷுஷா) ஞானக்கண்ணால் (யே) எவர்கள் (விது:) காண்பரோ (தே) அவர்கள் பரப்பிரம்ம நிலையை (யாந்தி) எய்துகின்றனர்.

இங்ஙனம் பிரம்மவித்தையாயும் யோக சாஸ்திரமாயும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸம்பாஷணையாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத்கீதை என்னும் உபநிஷத்தில் க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞவிபாகயோகம் என்று பெயர் பெற்ற பதின்மூன்றும் அத்தியாயம் முற்றும்.

---

34. ஜ்ஞான சக்ஷுஷா:—'அமானித்வம்' முதலிய ஞான ஸாதனங்களால் பெறப்படும் தெளிவான புத்தியே ஞானக்கண்.

பூதப்ரக்ருதி மோக்ஷம்:—'பூத' என்ற பதம் உண்டாகிய எல்லாவற்றையுங் குறிக்கும் (கார்யம்); ப்ரக்ருதி என்ற பதம் மூல ப்ரக்ருதியைக் குறிக்கும். நிர்க்குண உபாஸனு ஞானத்தின் பயனுக மூலப்ரக்ருதியுடன் த்ருச்ய வர்க்கம் அனைத்தும் ஸ்வப்னம் போல் மறைவதே **மோக்ஷம்.** எஞ்சி நிற்பது பிரம்மம் ஒன்றே.

அத்தியாய விஷயச் சுருக்கம்:—

க்ஷேத்திரத்தின் ஸ்வரூபத்தையும் க்ஷேத்திரஜ்ஞனுடைய ஸ்வரூபத்தையும் உள்ளபடி உணர்தலே ஞான யோகத்தின் அடிப்படை எனல். க்ஷேத்திரத்தில் அடங்கிய 24 தத்துவங்களின் முறைப்பாடு. ஞானயோகத்துக்குரிய ஸாதனங்கள். க்ஷேத்திரஜ்ஞ லக்ஷணம். க்ஷேத்திரமாகிய ப்ரக்ருதியும் க்ஷேத்திரஜ்ஞனுகிய புருஷனும் அனுதியெனல். க்ஷேத்ரஜ்ஞன் ஒருவனே ஜீவாத்மாவாகவும் பரமாத்மாவாகவும் சரீரத்தில் உறையும் ரஹஸ்யம். ஞானத்தை யெய்தும் வழிகள் அவரவர் நிலைக்குத் தக்கவாறு வேறுபடும்; ஆனுல் அறிய வேண்டிய உண்மை ஒன்றே. ஒரே சூரியன் உலகுக்கெல்லாம் ஒளி தருவது போல், ஒரே ஆத்மா உடல் தோறும் உயிராய் விளங்குகின்ருன் எனல். ஞானக்கண்ணுல் இவ்வுண்மையைக் காண்போரே முக்தர்கள் என்று முடித்தல்.

கேத்திரத்தின் தன்மையையும் கேத்ரஜ்ஞனின் தகையும்
சாற்றும் உயர் ஈசன் தனி இயலும்—போற்றும் ஒரு
வில்விசயற் குற்றுரைப்பான் வென்றிமலி தானவரைப்
பல் விசயம் கொண்ட பரன். (கீ. வெ.)

॥ चतुर्दशोऽध्यायः ॥

(गुणत्रयविभागयोगः)

श्री भगवानुवाच—

परं भूयः प्रवक्ष्यामि ज्ञानानां ज्ञान-मुत्तमम् ।
यज्ज्ञात्वा मुनयः सर्वे परां सिद्धि-मितो गताः ॥१॥ ॥५२४॥

பதினான்காம் அத்தியாயம்

(குணத்ரயவிபாக யோகம்)

ஸ்ரீ **பகவானுவாச**
பரம் **பூய:** ப்ரவக்ஷ்யாமி ஜ்ஞானானாம் ஜ்ஞான-
முத்தமம் |
யத் ஜ்ஞாத்வா முனய: ஸர்வே பராம் ஸித்தி-மிதோ
கதா: || 1 ||

ஸ்ரீ பகவான் கூறியது—

1. (யத்) எதை (ஜ்ஞாத்வா) அறிந்து (ஸர்வே முனய:) எல்லா முனிவர்களும் (இத:) இவ்வுடலின் உறவு நீங்கிய பின்னர் (பராம் ஸித்திம்) உயர்ந்த சித்தியை (கதா:) அடைந்தனரோ (ஜ்ஞானானாம்) ஞானங்களுள் (உத்தமம்) உயர்ந்ததும் (பரம்) பரம் பொருளைப்பற்றியதுமான (ஜ்ஞானம்) அந்த ஞானத்தை (பூய:) மீண்டும் (ப்ரவக்ஷ்யாமி) விரித்துரைப்பேன்,

---

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்:—

முன் அத்தியாயத்தில் 20, 21-வது சுலோகங்களில் புருஷனுக்கு ஸம்ஸாரப் பதவி யேற்படுங்காரணம் 'குணஸங்கம்' என்றும், குணங்களின் ஏற்றத்தாழ்வால் பிறவிகளின் பரம்பரையில் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறதென்றும குறிப்பிடப்பட்டது. இக்குணங்கள் எவை என்றும், அவைகளின் வேறுபாடுகள் எவை என்றும், அவைகளின் இயக்கத்தால் எங்ஙனம் பிறவிகளில் ஏற்றத்தாழ்வு ஏற்படுகின்றன என்றும், அவைகளை எங்ஙனம் ஜயித்தல் கூடும் என்றும் விவரித்து அங்ஙனம் ஜயித்த 'குணாதீத' னுடைய லக்ஷணங்களையும் கூறுவதால் இவ்வத்தியாயம் 'குணத்ரயவிபாக யோகம்" எனப்பெயர் பெறும்.

इदं ज्ञान-मुपाश्रित्य मम साधर्म्य-मागताः ।
सर्गेऽपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च ॥२॥ ॥५२५॥

இதம் ஜ்ஞான-முபாச்ரித்ய மம ஸாதர்ம்ய-மாகதா: |
ஸர்க்கேऽபி நோபஜாயந்தே ப்ரலயே ந வ்யதந்தி ச
| 2 || (525)

---

2. (இதம் ஜ்ஞானம்) இந்த ஞானத்தை (உபாச்ரித்ய) பின்பற்றி (மம) என்னுடைய (ஸாதர்ம்யம்) ஸ்வரூபத்தை (ஆகதா:) அடைந்தவர்கள் (ஸர்க்கே அபி) சிருஷ்டியிலும் (ந உபஜாயந்தே) பிறப்பதில்லை, (ப்ரளயே) பிரளயத்திலும் (ந வ்யதந்தி ச) துன்புறுவதில்லை.

முக்குணமே யுயிர் முற்றவுங் கட்டிட மூண்டமையும்
முக்குணமே யனைத்தும் வினைகொள்ள முயன் றமையும்
முக்குண மாயை கடத்தலும் முக்கதி தன்னளிப்பும்
முக்குண மற்றபிரான் மொழிந்தான் முடியோன் றனக்கே.

(கீ. ஸ.)

2. **ஸாதர்ம்யம்**—பகவான் எங்ஙனம் சிருஷ்டிகாலத்தில் தோன்றி பிரளயத்தில் அழிவதில்லையோ அங்ஙனம் மாறுபடாத சாசுவதப் பதவி. '**தர்ம்யாம்ருதம்**' என்று அத். 12ன் முடிவில் கூறிய நிலை.

ஒ—(ஸோऽச்னுதே ஸர்வான் காமான் ஸஹ) அவன் பிரம்மத்துடன் கலந்து எல்லா இன்பங்களையும் அனுபவிக்கிருன்.

(தை. உப. 2. 1. 5.)

3. **மஹத் ப்ரஹ்ம, யோனி:** என்ற பதங்களால் கூறப்பட்டது மூலப்ரக்ருதி (அபராப்ரக்ருதி) யாகிய க்ஷேத்திரம்.

கர்ப்பம்—சைதன்ய ஸமுதாய ரூபமாகிய பராப்ரக்ருதி.

मम योनि-र्महद्ब्रह्म तस्मिन् गर्भं दधाम्यहम् ।
संभवः सर्वभूतानां ततो भवति भारत ॥ ३ ॥ ॥ ५२६ ॥
सर्वयोनिषु कौन्तेय मूर्तयः संभवन्ति याः ।
तासां ब्रह्म महद्-योनिरहं बीज-प्रदः पिता ॥ ४ ॥ ॥ ५२७ ॥

மம யோனிர்-மஹத்-ப்ரஹ்ம தஸ்மின் கர்ப்பம் ததாம்யஹம் ||
ஸம்பவ: ஸர்வபூதானும் ததோ பவதி பாரத || 3 || (526)
ஸர்வயோனிஷு கௌந்தேய மூர்த்தய:ஸம்பவந்தி யா: |
தாஸாம் ப்ரஹ்ம மஹத்-யோனி-ரஹம் பீஜப்ரத: பிதா || 4 || (527)

---

3. (பாரத) அர்ஜுன! (மம) என்னுடைய (யோனி:) க்ஷேத்ரம் (மஹத்ப்ரஹ்ம) பெரிதும், எல்லாவற்றையும் தன்னுள் தாங்குவதுமான மூலப்ரக்ருதி. (தஸ்மின்) அதில் (அஹம்) நான் (கர்ப்பம்) கர்ப்பத்தை (ததாமி) வைக்கின்றேன். (தத:) அதனின்று (ஸர்வ பூதானும்) எல்லா உயிர்களின் (ஸம்பவ:) உற்பத்தியும் (பவதி) உண்டாகின்றது.

4. (கௌந்தேய) அர்ஜுன! (ஸர்வயோனிஷு) எல்லாக் கருப்பைகளிலும் (யா: மூர்த்தய:) எங்தெந்த உருவங்கள் (ஸம்பவந்தி) பிறக்கின்றனவோ (தாஸாம்) அவைகட்கெல்லாம் (ப்ரஹ்மமஹத்) மஹத் என்னும் பெரும் பிரகிருதியே (யோனி:) பிறப்பிடமாகிய க்ஷேத்ரம் அல்லது தாய், (அஹம்) நானே (பீஜப்ரத:) கர்ப்பாதானம் செய்யும் (பிதா) தகப்பன்.

सत्त्वं रजस्तम इति गुणाः प्रकृति-संभवाः ।
निबध्नन्ति महाबाहो देहे देहिन-मव्ययम् ॥ ५ ॥ ॥ ५२८ ॥
तत्र सत्त्वं निर्मलत्वात् प्रकाशक-मनामयम् ।
सुखसङ्गेन बध्नाति ज्ञान-सङ्गेन चानघ ॥ ६ ॥ ॥ ५२९ ॥
रजो रागात्मकं विद्धि तृष्णा-सङ्ग-समुद्भवम् ।
तन्निबध्नाति कौन्तेय कर्मसङ्गेन देहिनम् ॥ ७ ॥ ॥ ५३० ॥

ஸத்வம் ரஜஸ்தம இதி குணா: ப்ரக்ருதி-ஸம்பவா: |
நிபத்னந்தி மஹாபாஹோ தேஹே தேஹின-மவ்யயம்
|| 5 || (528)
தத்ர ஸத்வம் நிர்மலத்வாத் ப்ரகாசக-மனாமயம் |
ஸுகஸங்கேன பத்னாதி ஜ்ஞான-ஸங்கேன சாநக || 6 ||
ரஜோ ராகாத்மகம் வித்தித்ருஷ்ணா-ஸங்க-ஸமுத்பவம் |
தந்நிபத்னாதி கௌந்தேய கர்மஸங்கேன தேஹினம்
|| 7 || (530)

---

5. (மஹாபாஹோ) பெருந்தோளா! (ஸத்வம் ரஜ: தம: இதி) ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்று (ப்ரக்ருதி ஸம்பவா:) பிரகிருதியிலிருந் துண்டான (குணா:) குணங்கள் (தேஹே) தேகத்தில் (அவ்யயம் தேஹினம்) அழிவில்லாத தேகியை (நிபத்னந்தி) கட்டுப்படுத்துகின்றன.

6. (அனக) பாவமற்றோனே! (தத்ர) அவற்றுள் (ஸத்வம்) ஸத்துவ குணம் (நிர்மலத்வாத்) பரிசுத்தத் தன்மையால் (ப்ரகாசகம்) ஒளிபொருந்தியதும் (அனாமயம்) இடர் செய்யாததுமாகி (ஸுகஸங்கேன ச) சுகத்தில் பற்றுதலாலும் (ஜ்ஞான ஸங்கேன ச) ஞானத்தில் பற்றுதலாலும் (பத்னாதி) கட்டுப்படுத்தும்.

7. (கௌந்தேய) அர்ஜுனா! (ரஜ:) ரஜோ குணத்தை (ராகாத்மகம்) ஆசைவடிவினதாயும் (த்ரு

तमस्त्वज्ञानजं विद्धि मोहनं सर्वदेहिनाम् ।
प्रमादालस्य-निद्राभि-स्तन्निबध्नाति भारत ॥ ८ ॥ ॥ ५३१ ॥

सत्त्वं सुखे सञ्जयति रजः कर्मणि भारत ।
ज्ञान-मावृत्य तु तमः प्रमादे सञ्जयत्युत ॥ ९ ॥ ॥ ५३२ ॥

தமஸ்-த்வஜ்ஞானஜம் வித்தி மோஹனம் ஸர்வ-
தேஹினும் |
ப்ரமாதாலஸ்ய-நித்ராபிஸ்-தந்நிபத்னுதி பாரத
|| 8 || (531)
ஸத்வம் ஸுகே ஸஞ்ஜயதி ரஜ: கர்மணி பாரத |
ஜ்ஞான-மாவ்ருத்ய து தம: ப்ரமாதே ஸஞ்ஜயத்யுத
|| 9 || (532)

ஷ்ணுஸங்க ஸமுத்பவம்) வேட்கையும் பற்றும் உண்டாக்குவதாயும் (வித்தி) அறி. (தத்) அது (கர்ம ஸங்கேன) கருமப்பற்ருல் (தேஹினம்) தேகியை (நிபத்னுதி) கட்டுகிறது.

8. (பாரத) அர்ஜுனு! (தம: து) தமோ குணமோ (அஜ்ஞானஜம்) அஜ்ஞானத்தால் தோன்றுவதென்றும் (ஸர்வதேஹினும்) எல்லாத் தேகிகளுக்கும் (மோஹனம்) மோஹத்தை விளைப்பதென்றும் (வித்தி) அறி. (தத்) அது (ப்ரமாத-ஆலஸ்ய-நித்ராபி:) மதி மயக்கம் சோம்பல் நித்திரை இவற்ருல் (நிபத்னுதி) கட்டுகிறது.

9. (பாரத) அர்ஜுனு ! (ஸத்வம்) ஸத்துவகுணம் (ஸுகே) சுகத்தில் (ஸஞ்ஜயதி) சேர்ப்பிக்கும்; (ரஜ:) ரஜோகுணம் (கர்மணி) கருமத்தில் சேர்ப்பிக்கும். (உத) மேலும் (தம: து) தமோ குணமோ (ஜ்ஞானம்) ஜ்ஞானத்தை (ஆவ்ருத்ய) மறைத்து (ப்ரமாதே) மதி மயக்கத்தில் (ஸஞ்ஜயதி) சேர்ப்பிக்கும்.

रजस्तमश्चाभिभूय सत्त्वं भवति भारत ।
रजः सत्त्वं तमश्चैव तमः सत्त्वं रजस्तथा ॥ १० ॥ ॥५३३॥
सर्वद्वारेषु देहेऽस्मिन् प्रकाश उपजायते ।
ज्ञानं यदा तदा विद्या-द्विवृद्धं सत्त्वमित्युत ॥ ११ ॥ ॥५३४॥

ரஜஸ்-தமச்சாபிபூய ஸத்வம்:பவதி பாரத |
ரஜ: ஸத்வம் தமச்சைவ தம: ஸத்வம் ரஜஸ்ததா
|| 10 || (533)

ஸர்வத்வாரேஷு தேஹேऽஸ்மின் ப்ரகாச உபஜாயதே|
ஜ்ஞானம் யதா ததா வித்யாத் விவ்ருத்தம் ஸத்வமித்
யுத || 11) (534)

---

10. (பாரத) அர்ஜுனா ! (ஸத்வம்) ஸத்துவகுணம் (ரஜ: தம: ச) ரஜஸ்ஸையும் தமஸ்ஸையும் (அபிபூய) அடக்கி (பவதி) மேலெழும்; (ரஜ:) ரஜோகுணம் (ஸத்வம் தம: ச ஏவ) ஸத்துவத்தையும் தமஸ்ஸையும், (ததா) அவ்வாறே (தம:) தமோகுணம் (ஸத்வம் ரஜ: ச) ஸத்துவத்தையும் ரஜஸ்ஸையும்—அடக்கி மேலெழும்.

11. (யதா) எப்போது (அஸ்மின் தேஹே) இந்த தேகத்தில் (ஸர்வத்வாரேஷு) ஒவ்வொரு வாயில் வழியாகவும் (ஜ்ஞானம்) ஞானமாகிய (ப்ரகாச:) ஒளி (உபஜாயதே) தோன்றுகிறதோ (ததா) அப்போது (உத) நிச்சயமாக (ஸத்வம்) ஸத்வகுணம் (விவ்ருத்தம் இதி) மேலிட்டுள்ளது என்று (வித்யாத்) உணரவேண்டும்.

लोभः प्रवृत्ति-रारम्भः कर्मणा-मशमः स्पृहा ।
रजस्येतानि जायन्ते विवृद्धे भरतर्षभ ॥ १२ ॥ ॥ ५३५ ॥

अप्रकाशोऽप्रवृत्तिश्च प्रमादो मोह एव च ।
तमस्येतानि जायन्ते विवृद्धे कुरुनन्दन ॥ १३ ॥ ॥ ५३६ ॥

यदा सत्त्वे प्रवृद्धे तु प्रलयं याति देहभृत् ।
तदोत्तमविदां लोका-नमलान् प्रतिपद्यते ॥ १४ ॥ ॥ ५३७ ॥

லோப: ப்ர வ்ருத்தி-ராரம்ப: கர்மணா-மசம: ஸ்பருஹா |
ரஜஸ்யேதானி ஜாயந்தே விவ்ருத்தே பரதர்ஷப
|| 12 || (535)
அப்ரகாசோऽப்ரவ்ருத்திச்ச ப்ரமாதோ மோஹ ஏவ ச |
தமஸ்யேதானி ஜாயந்தே விவ்ருத்தே குருநந்தன
|| 13 || (536)
யதா ஸத்வே ப்ரவ்ருத்தே து ப்ரலயம் யாதி தேஹப்ருத்|
ததோத்தமவிதாம் லோகா-னமலான் ப்ரதிபத்யதே
|| 14 || (537)

---

12. (பரதர்ஷப) அர்ஜுனா! (லோப:) பேராசை (ப்ரவ்ருத்தி:) இந்திரியங்களின் சேஷ்டை (கர்மணாம் ஆரம்ப:) தொழில் முயற்சி (அசம:) அமைதியின்மை (ஸ்ப்ருஹா) பற்று (ஏதானி) இவைகள் (ரஜஸிவிவ்ருத்தே) ரஜோகுணம் மேலிட்டபோது (ஜாயந்தே) உண்டாகின்றன.

13. (குருநந்தன) அர்ஜுனா! (அப்ரகாச:) அவிவேகம் (அப்ரவ்ருத்தி: ச) முயற்சியின்மை (ப்ரமாத:) மதிமயக்கம் (மோஹ: ஏவ ச) மோஹம் (ஏதானி) இவைகள் (தமஸி விவ்ருத்தே) தமோகுணம் மேலிட்ட போது (ஜாயந்தே) உண்டாகின்றன.

14. (யதா) எப்போது (ஸத்வே ப்ரவ்ருத்தே து) ஸத்துவம் மேலிட்டிருக்குமோ அப்போது (தேஹப்

रजसि प्रलयं गत्वा कर्मसङ्गिषु जायते ।
तथा प्रलीन-स्तमसि मूढ-योनिषु जायते ॥ १५ ॥ ॥५३८॥
कर्मणः सुकृतस्याहुः सात्त्विकं निर्मलं फलम् ।
रजसस्तु फलं दुःख-मज्ञानं तमसः फलम् ॥ १६ ॥ ॥५३९॥

ரஜஸி ப்ரலயங் கத்வா கர்மஸங்கிஷு ஜாயதே |
ததா ப்ரலீனஸ்-தமஸி மூட-யோனிஷு ஜாயதே
|| 15 || (538)
கர்மண: ஸுக்ருதஸ்யாஹு: ஸாத்விகம் நிர்மலம்
பலம் |
ரஜஸஸ்து பலம் து:க்க-மஜ்ஞானம் தமஸ: பலம்
|| 16 || (539)

ருத்) தேகி (ப்ரலயம் யாதி) மரணமடைந்தால் (ததா) அப்போது (உத்தம விதாம்) உயர்ந்த ஞானிகளுக்குரிய (அமலான் லோகான்) பரிசுத்த உலகங்களை (ப்ரதி பத்யதே) அடைகின்றான்.

15. (ரஜஸி) ரஜோ குணத்தில் (ப்ரலயம் கத்வா) மரணமடைந்து (கர்மஸங்கிஷு) கருமப்பற்றுடையோரிடை (ஜாயதே) பிறக்கிறான் (ததா) அவ்வாறே (தமஸி) தமோகுணத்தில் (பரலீன:) மரணமடைந்து (மூடயோனிஷு) பகுத்தறிவில்லாத யோனிகளில் (ஜாயதே) பிறக்கின்றான்.

16. (ஸுக்ருதஸ்ய கர்மண:) நற்கருமங்களுக்கு (பலம்) பயன் (ஸாத்விகம்) ஸாத்துவிகமும (நிர்மலம்) பரிசுத்தமும் என்று (ஆஹு:) கூறுவர். (ரஜஸ: து)

---

16. முக்குணங்களின் ஸம்ஸ்காரங்களும் ஒவ்வொருவரிடமும் இருக்கின்றன. எந்த ஸம்ஸ்காரம் எப்போது மேலெழுகிறதோ, அப்போது அதற்கனுகுணமாகப் புதிய கர்மாவிற் பிரவிருத்தியேற்படுகிறது—மழை காலத்தில் மழையும், குளிர்காலத்தில் குளிரும் வருவதுபோல. இவைகட்கு ஆத்மா கர்த்தா அன்று. குணங்கள் குணங்களில் செல்லுகின்றன (3. 28) என்று உணர்பவன் ஞானி.

सत्त्वात् सञ्जायते ज्ञानं रजसो लोभ एव च ।
प्रमाद-मोहौ तमसो भवतोऽज्ञानमेव च ॥ १७ ॥ ॥५४०॥

ऊर्ध्वं गच्छन्ति सत्त्वस्था मध्ये तिष्ठन्ति राजसाः ।
जघन्य-गुण-वृत्तिस्था अधो गच्छन्ति तामसाः ॥१८॥ ॥५४१॥

ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞானம் ரஜஸோ லோப
ஏவ ச ।
ப்ரமாதமோஹௌ தமஸோ பவதோऽஜ்ஞானமேவ ச
॥ 17 ॥ (540)

ஊர்த்வம் கச்சந்தி ஸத்வஸ்தா மத்யே திஷ்டந்தி
ராஜஸா: ।
ஜகன்ய-குண-வ்ருத்திஸ்தா அதோ கச்சந்தி தாமஸா:
॥ 18 ॥ (541)

ரஜோகுணத்திற்கோ (பலம்) பயன் (து:க்கம்) துன்பம்; (தமஸ:) தமோகுணத்திற்கு (பலம்) பயன் (அஜ்ஞானம்) அஞ்ஞானம்.

17. (ஸத்வாத்) ஸத்துவத்திலிருந்து (ஜ்ஞானம்) ஞானம் (ஸஞ்ஜாயதே) பிறக்கின்றது. (ரஜஸ:) ரஜஸிலிருந்து (லோப: ஏவ ச) பேராசையே பிறக்கின்றது. (தமஸ:) தமஸிலிருந்து (அஜ்ஞானம்) அஞ்ஞானமும் (ப்ரமாதமோஹௌ ஏவ ச) மதிமயக்கமும் மோஹமுமே (பவத:) உண்டாகின்றன.

18. (ஸத்வஸ்தா:) ஸத்துவ குணமுடையோர் (ஊர்த்வம்) மேலே (கச்சந்தி) செல்லுகின்றனர்; (ராஜஸா:) ரஜோகுணமுடையோர் (மத்யே) மத்தியில் (திஷ்டந்தி) நிற்கின்றனர்; (ஜகன்ய - குணவ்ருத்திஸ்தா:) கடைக்குணச்செயலுடைய (தாமஸா:) தாமஸர்கள் (அத:) கீழே (கச்சந்தி) செல்லுகின்றனர்.

नान्यं गुणेभ्यः कर्तारं यदा द्रष्टानुपश्यति ।
गुणेभ्यश्च परं वेत्ति मद्भावं सोऽधिगच्छति ॥१९॥ ॥५४२॥

गुणानेता-नतीत्य त्रीन् देही देहसमुद्भवान् ।
जन्म-मृत्यु-जरादुःखै-र्विमुक्तोऽमृतमश्नुते ॥ २० ॥ ॥५४३॥

நான்யங் குணேப்ய: கர்த்தாரம் யதா த்ரஷ்டானு
பச்யதி |
குணேப்யச்ச பரம் வேத்தி மத்பாவம் ஸோऽதிகச்சதி
|| 19 || (542)

குணா-னேதா-னதீத்ய த்ரீன் தேஹீ தேஹ-ஸமுத்
பவான் |
ஜன்ம-ம்ருத்யு-ஜரா-து:க்கைர்-விமுக்தோऽம்ருத-
மச்னுதே || 20 || (543)

---

19. (யதா) எப்போது (த்ரஷ்டா) காண்பவன் (குணேப்ய:) குணங்களைவிட (அன்யம் கர்த்தாரம்) வேருெரு கர்த்தாவை (ந அனுபச்யதி) காண்ப தில்லையோ (குணேப்ய: ச பரம்) குணங்களுக்கு அப் பாலுள்ளதையும் (வேத்தி) அறிகின்ருனே (ததா) அப்போது (ஸ:) அவன் (மத்பாவம்) என் நிலையை (அதிகச்சதி) எய்துகின்ருன்.

20. (தேஹஸமுத்பவான்) தேகத்தை உண்டாக் கிய (ஏதான் த்ரீன்குணன்) இம்முக்குணங்களை (அதீ த்ய) கடந்து சென்று (ஜன்ம ம்ருத்யுஜரா து:க்கை:) பிறப்பு இறப்பு மூப்பு துன்பம் இவற்றினின்று (விமுக்த:) விடுபட்ட (தேஹீ) தேகி (அம்ருதம்) சாகாத் தன்மையை (அச்னுதே) எய்துகின்ருன்.

अर्जुन उवाच—

कैर्लिङ्गै-स्त्रीन्गुणा-नेता-नतीतो भवति प्रभो ।

किमाचारः कथं चैतांस्त्रीन् गुणा-नतिवर्तते ॥ २१ ॥ ॥५४४॥

श्री भगवानुवाच—

प्रकाशं च प्रवृत्तिं च मोहमेव च पाण्डव ।

न द्वेष्टि संप्रवृत्तानि न निवृत्तानि काङ्क्षति ॥२२॥ ॥५४५॥

அர்ஜுன உவாச—

கைர்-லிங்கைஸ்-த்ரீன் குணா-னேதா-னதீதோ பவதி ப்ரபோ |

கிமாசார: கதஞ்சைதான்ஸ்-த்ரீன் குணா-னதிவர்த்ததே || 21 || (544)

ஸ்ரீ பகவானுவாச—

ப்ரகாசஞ் ச ப்ரவ்ருத்திஞ் ச மோஹமேவ ச பாண்டவ |

ந த்வேஷ்டி ஸம்ப்ரவ்ருத்தானி நநிவ்ருத்தாநிகாங்க்ஷதி

அர்ஜுனன் கூறியது—

21. (ப்ரபோ) பிரபுவே! (ஏதான்) இந்த (த்ரீன் குணான்) முக்குணங்களை (கை: லிங்கை:) எந்த லக்ஷணங்களால் (அதீத: பவதி) கடந்தவனாக ஒருவன் ஆகின்றான்? (கிமாசார:) அவனுடைய நடத்தை எவ்வகைத்து? (கதஞ் ச) எவ்வாறு (ஏதான் த்ரீன் குணான்) இம்முக்குணங்களையும் (அதிவர்த்ததே) கடக்கின்றான்?

ஸ்ரீ பகவான் கூறியது—

22. (பாண்டவ) பாண்டவா! (ப்ரகாசஞ் ச) ஸத்துவத்தின் காரியமான மனத்தின் ஒளியையும் (ப்ரவ்ருத்திஞ் ச) ரஜஸின் காரியமான சேஷ்டையையும் (மோஹம் ஏவ ச) தமஸின் காரியமான கலக்கத்தையும் (ஸம்ப்ரவ்ருத்தானி) மேலெழுந்து வந்தவற்றை (ந த்வேஷ்டி) வெறுப்பதில்லை; (நிவ்ருத்தானி) நீங்கியவற்றை (ந காங்க்ஷதி) விரும்புவதில்லை.

उदासीनव-दासीनो गुणैर्यो न विचाल्यते ।
गुणा वर्तन्त इत्येव योऽवतिष्ठति नेङ्गते ॥ २३ ॥ ॥ ५४६ ॥
समदुःखसुखः स्वस्थः सम-लोष्टाश्म-काञ्चनः ।
तुल्यप्रियाप्रियो धीर-स्तुल्यनिन्दात्म-संस्तुतिः ॥२४॥ ॥५४७॥

உதாஸீனவ-தாஸீநோ குணைர்யோ ந விசால்யதே |
குணா வர்த்தந்த இத்யேவ யோऽவதிஷ்டதி நேங்கதே
|| 23 || (546)

ஸம-து:க்கஸுக: ஸ்வஸ்த: ஸம-லோஷ்டாச்ம-
காஞ்சன: |
துல்யப்ரியாப்ரியோ தீரஸ்-துல்யநிந்தாத்ம-ஸம்ஸ்துதி:
|| 24 || (547)

23. (ய:) எவன் (உதாஸீனவத்) ஒரு பக்ஷத்தையும் சாராதவன்போல் (ஆஸீன:) இருந்துகொண்டு (குணை:) குணங்களால் (ந விசால்யதே) அசைக்கப் படுவதில்லையோ (குணா: ஏவ) குணங்களே (வர்த்தந்தே இதி) தொழில்புரிகின்றன என்று (அவதிஷ்டதி) நிலை பெயராது நிற்கின்றானோ (ந இங்கதே) சிறிதும் அசைவதில்லையோ;

24. (ஸமது:க்க ஸுக:) எவன் துன்பத்திலும் இன்பத்திலும் ஸமமானவனோ (ஸ்வஸ்த:) தன்னிடம் நிலைத்தவனோ (ஸமலோஷ்டாச்ம காஞ்சன:) ஓடு கல் பொன் இவற்றைச் சமமாய்ப் பாவிப்பவனோ (துல்ய ப்ரியாப்ரிய:) விருப்பையும் வெறுப்பையும் ஒன்றாய்க் கருதுபவனோ (தீர:) திடசித்தமுடையவனோ (துல்ய நிந்தாத்ம ஸம்ஸ்துதி:) தன்னை இகழ்வதையும் புகழ்வதையும் ஒன்றாய்க் கொண்டவனோ;

---

24. பாலத்தின் கீழே ஜலம் தங்கி நில்லாமல் எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கிறது. அதுபோலப் பணமானது முக்தர்கள் கை வழியே போய்க்கொண்டிருக்குமே யல்லாது அவர்களால் ஒருபோதும் சேமித்து வைக்கப்படுவதில்லை.

मानापमानयो-स्तुल्य-स्तुल्यो मित्रारिपक्षयोः ।
सर्वारम्भ-परित्यागी गुणातीतः स उच्यते ॥ २५ ॥ ॥५४८॥

मां च योऽव्यभिचारेण भक्तियोगेन सेवते ।
स गुणान् समतीत्यैतान् ब्रह्मभूयाय कल्पते ॥ २६ ॥ ॥५४९॥

மாநபமாநயோஸ்-துல்யஸ்-துல்யோமித்ராரி-
பக்ஷயோ: |
ஸர்வாரம்ப-பரித்யாகீ குணாதீத: ஸ உச்யதே
|| 25 || (548)

மாஞ் ச யோऽவ்யபிசாரேண பக்தியோகேன ஸேவதே|
ஸ குணான் ஸமதீத்யைதான் ப்ரஹ்ம-பூயாய கல்பதே
|| 26 || (549)

---

25. (மான அபமானயோ: துல்ய:) எவன் மானத்திலும் அவமானத்திலும் ஸம பாவனையுடையவனோ (துல்ய: மித்ர அரி பக்ஷயோ:) மித்திரனிடமும் சத்துருவிடமும் ஸமமானவனோ (ஸர்வாரம்ப பரித்யாகீ) ஆசைவாய்ப்பட்டு ஆரம்பிக்கும் எல்லாக் கருமங்களையும் விட்டவனோ (ஸ:) அவன் (குணாதீத:) குணாதீதன் என்று (உச்யதே) சொல்லப்படுகின்றான்.

26. (ய:) எவன் (மாம்) என்னை (அவ்யபிசாரேண) முறை பிறழாத (பக்தியோகேன) பக்தியோகத்தால் (ஸேவதே) சேவிக்கின்றானோ (ஸ:ச) அவனும் (ஏதான் குணான்) இந்த குணங்களை (ஸமதீத்ய) எளிதில் கடந்து சென்று (ப்ரஹ்ம பூயாய) பிரம்மம் ஆவதற்கு (கல்பதே) தகுதியுடையவனாகின்றான்.

25. குணாதீதருக்கு உதாரணம் சுகர், ஜடபரதர் முதலியவர்கள்.

ब्रह्मणो हि प्रतिष्ठाहमृतस्याव्ययस्य च ।
शाश्वतस्य च धर्मस्य सुखस्यैकान्तिकस्य च ॥२७॥ ॥५५०॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादे गुणत्रयविभागयोगो नाम
चतुर्दशोऽध्यायः ॥

ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹ-மம்ருதஸ்யாவ்யயஸ்ய ச |
சாச்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்யைகாந்திகஸ்ய ச || 27 || (550)

இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம
வித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுன
ஸம்வாதே குணத்ரயவிபாகயோகோ நாம
சதுர்த்தசோऽத்யாய: |

---

27. (அஹம்) நான் (ப்ரஹ்மண:) பிரம்மத்திற்கும் (அவ்யயஸ்ய அம்ருதஸ்ய ச) அழியாத மோக்ஷத்திற்கும் (சாச்வதஸ்ய ஸுகஸ்ய ச) ஒப்புயர்வில்லாத பேரின்பத்திற்கும் (ப்ரதிஷ்டா ஹி) உறைவிடம் அன்றோ?

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திர
மாயும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும்
ஸம்பாஷணையாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத்
கீதை என்னும் உபநிஷத்தில் குணத்ரய
விபாகயோகம் என்று பெயர் பெற்ற
பதினான்காவது அத்தியாயம் முற்றும்.

27. ப்ரஹ்மண:—இங்கே ப்ரஹ்ம பதம் நிர்க்குண ப்ரஹ்மத்தைக் குறிக்கும். நிர்க்குண உபாசனையால் அடையப்பெறும் அழியாப் பதவியும் பகவத் பக்தியாலே எளிதில் அடையப்பெறும் என்பது மீண்டும் வற்புறுத்திக் கூறப்பட்டது.

ஞான யோகத்தால் பெறும் மோக்ஷநிலை 'அவ்யயம், அம்ருதம்' என்றும், பகவத் கைங்கர்ய தருமத்தால் பெறும் நிலை 'சாசுவத தருமம்' என்றும், தியான யோகத்தால் பெறும் இன்பம் 'அக்ஷய்யஸுகம்' (5. 21) 'ஆத்யந்திக ஸுகம்,' (6, 28) 'ஐகாந்திக ஸுகம்' என்றும் கூறப்பட்டது.

அத்தியாய விஷயச் சுருக்கம்—

முக்குணங்களின் இயல்பை உணர்ந்து முக்குணக் கட்டினின்று விடுபடுதலே மோக்ஷம் எனல். எல்லா உயிர்களுக்கும் பிரகிருதியே தாய் (தோன்றுமிடம்) புருஷோத்தமனே தந்தை (தோற்றுவிக்கும் பீஜம்). ஸத்வம், ரஜஸ், தமஸ் எனும் முக்குணங்கள் பிரகிருதியில் தோன்றி ஜீவனைக் கட்டுப்படுத்துவன எனல். முக்குணங்களின் ஸ்வரூபமும் அவற்றின் காரியங்களும் வர்ணிக்கப்படுதல். மரணகாலத்தில் ஓங்கி நிற்கும் குணத்தால் அடுத்த ஜன்மம் நிர்ணயிக்கப்படும் எனல். குணாதீதனுடைய லக்ஷணங்களைக் கூறும்படி அர்ஜுனன் கேட்டல். குணத்தால் சலியாமல், செய்கைகளெல்லாம் குணத்தால் உண்டாகின்றன என்று கருதி, இன்ப துன்பங்களையும் இகழ்ச்சி புகழ்ச்சிகளையும் ஒரு தன்மையாகக்கொண்டு செயலற்று நிற்பவன் குணாதீதன் எனல். பிரம்மத்துக்கும், மோக்ஷ நிலைக்கும், சாசுவதமான தருமத்துக்கும், பேரின்பத்துக்கும் பகவானே இருப்பிடமெனல்.

முக்குணமும் அன்ன உயிர் மோகமுறக் கட்டுவதும்
அக்குணத்தின் ஆன்மா அகல் நெறியும்—புக்கவற்றை
நீங்கியபின் நிற்கும் நிலைமையும் நேர்ந்துரைப்பான்
பூங்கமலக் கண்ணன் புரிந்து. (கீ. வெ.)

॥ पञ्चदशोऽध्यायः ॥

(पुरुषोत्तमयोगः)

श्री भगवानुवाच—

ऊर्ध्व-मूल-मधःशाख-मश्वत्थं प्राहु-रव्ययम् ।
छन्दांसि यस्य पर्णानि यस्तं वेद स वेदवित् ॥१॥ ॥५५१॥

பதினைந்தாம் அத்தியாயம்

(புருஷோத்தம யோகம்)

ஸ்ரீ பகவானுவாச—

ஊர்த்வ-மூல-மத:சாக-மச்வத்தம் ப்ராஹு-ரவ்யயம் |
ச்சந்தாம்ஸி யஸ்ய பர்ணானி யஸ்தம் வேத ஸ வேதவித்
|| 1 || (551)

ஸ்ரீ பகவான் கூறியது—

1. (ஊர்த்வ மூலம்) மேலே வேருள்ளதும் (அத: சாகம்) கீழே கிளையுள்ளதுமான (அச்வத்தம்) அசுவத்தமாக (அவ்யயம்) முடிவற்றதாய்த் தோன்றும் ஸம்ஸாரத்தை (ப்ராஹு:) பேசுகிறார்கள். (யஸ்ய) எதற்கு (பர்ணானி) இலைகள் (ச்சந்தாம்ஸி) வேதங்களோ (தம்) அந்த விருக்ஷத்தை (ய:) எவன் (வேத) அறிந்தவனோ (ஸ:) அவன் (வேதவித்) வேதத்தை அறிந்தவனாவான்.

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்:—

14-வது அத்தியாயத்தில் முக்குணங்களின் பாகுபாடும் ஏற்றத் தாழ்வும், அவற்றால் கட்டப்பட்ட மனித வர்க்கத்தின் பாகுபாடும் அவர்கள் பிறப்பிலும் இறப்பிலும் செல்லும் மார்க்கங்களும், முக்குணங்களைக் கடந்து நிற்கும் குணாதீதனுடைய லக்ஷணங்களும் வர்ணிக்கப்பட்டன. குணாதீத நிலை எய்துதற்குப் புருஷோத்தமனாகிய பகவானுடைய ஸ்வரூபமும் அவனை எங்ஙனம் சிந்தித்து வழிபட வேண்டும் என்பதும் வேதாந்தத்தில் கூறியபடி இவ்வத்தியாயத்தில் சுருக்கிக் கூறப்படும். அதனால் இவ்வத்தியாயம் **புருஷோத்தம யோகம்** எனப்படும்.

अधश्चोर्ध्वं प्रसृता-स्तस्य शाखा गुणप्रवृद्धा विषय-प्रवालाः।
अधश्च मूलान्यनुसंततानि कर्मानुबन्धीनि मनुष्यलोके ॥ २ ॥

அதச்சோர்த்வம் ப்ரஸ்ருதாஸ்-தஸ்ய சாகா
குண-ப்ரவ்ருத்தா விஷய-ப்ரவாலா: |
அதச்ச மூலான்-யனுஸந்ததானி
கர்மாநுபந்தீனி மனுஷ்யலோகே || 2 || (552)

---

2. (தஸ்ய) அதனுடைய (சாகா:) கிளைகள் (குண ப்ரவ்ருத்தா:) குணத்தாற் செழித்து (விஷயப்ரவாலா:) விஷயமாகிய தளிர்விட்டு (அத: ச) கீழும் (ஊர்த்வம்) மேலும் (ப்ரஸ்ருதா:) அடர்ந்திருக்கின்றன. (மூலானி) வேர்கள் (அத: ச) கீழும் (கர்மானுபந்தீனி) கருமத்தைப் பின் விளைவிப்பவையாய் (மனுஷ்ய லோகே) மானிட உலகில் (அனுஸந்ததானி) பரவியிருக்கின்றன.

மூவெட்டிலு மதில் மோக மடைந்த வுயிர்களிலும்
நாவெட்டெழுத்தொடு நல்வீடு நண்ணின நம்பரிலும்
மேவெட்டு வண்குண விண்ணோர்களிலும் விசயனுக்குத்
தாவிட்டுலகளந்தான் றன்னை வேறென்று சாற்றினனே. (கீ. ஸ.)

ஊர்த்வ மூலம்—உலகெலா முணர்ந்தோதற் கரியவனுயிருக்கும் பரமேசுவரனே வேர்.

அத: சாகம்—உலகை யெல்லாம் சிருஷ்டிக்கும் பிரம்மாவே முதலில் தோன்றிய கிளை.

அச்வத்தம்—(ச்வ:-நாளை, ஸ்த்தம்-இருப்பு, அ-இல்லாதது)—இன்றிருந்து நாளை (ஞானங் தோன்றியதும்) இல்லாமற் போவது.

அவ்யயம்—ஞானம் உண்டாகும் வரை அழியாத தொடர்புடையது.

न रूप-मस्येह तथोपलभ्यते नान्तो न चादिर्न च संप्रतिष्ठा ।
अश्वत्थ-मेनं सुविरूढ-मूल-मसङ्ग-शस्त्रेण दृढेन छित्त्वा ॥ ३ ॥
ततः पदं तत् परिमार्गितव्यं यस्मिन् गता न निवर्तन्ति भूयः ।
तमेव चाद्यं पुरुषं प्रपद्ये यतः प्रवृत्तिः प्रसृता पुराणी ॥ ४ ॥

ந ரூப-மஸ்யேஹ ததோபலப்யதே
நாந்தோ ந சாதிர் ந ச ஸம்ப்ரதிஷ்டா |
அச்வத்த-மேனம் ஸுவிரூட-மூல-
மஸங்க-சஸ்த்ரேண த்ருடேன ச்சித்வா || 3 || (553)
தத: பதம் தத்பரிமார்க்கிதவ்யம்
யஸ்மின் கதா ந நிவர்த்தந்தி பூய: |
தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே
யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ ||4|| (554)

3. (ததா) அவ்வாருக (இஹ) இங்கே (அஸ்ய) இதனுடைய (ரூபம்) உருவம் (ந உபலப்யதே) அறியக் கூடுவதில்லை; (ந அந்த:) அதற்கு முடிவில்லை; (ந ஆதி:) ஆரம்பமுமில்லை; (ந ச ஸம்ப்ரதிஷ்டா) இருப்புமில்லை. (ஏனம்) இந்த (ஸுவிரூட மூலம்) நன்கு திடமாக வேரூன்றிய (அச்வத்தம்) அசுவத்த மரத்தை (த்ருடேன) திடமான (அஸங்க சஸ்த்ரேண) பற்றின்மையெனும் ஆயுதத்தால் (ச்சித்வா) வெட்டி;

4. (யத:) எவனிடமிருந்து (புராணீ) பழைமையான (ப்ரவ்ருத்தி:) ஸம்ஸாரம் (ப்ரஸ்ருதா) பெருகிற்றே (தம்) அந்த (ஆத்யம் புருஷம் ஏவ ச) அந்த ஆதி புருஷனையே (ப்ரபத்யே) சரணடைகின்றேன்—

4. **பற்றின்மையெனும் ஆயுதம் :—**

ஓ—வந்த வரவை மறந்து—மிக்க
மாதர் பொன்பூமி மயக்கத்திலாழும்
இந்த மயக்கை யறுக்க—எனக்
கெந்தை மெய்ஞ்ஞான யெழில்வாள் கொடுத்தான்.
(தாயுமானவர்.)

निर्मानमोहा जित-सङ्गदोषा अध्यात्मनित्या विनिवृत्त-कामाः ।
द्वन्द्वै-र्विमुक्ताः सुखदुःखसंज्ञै-र्गच्छन्त्यमूढाः पद-मव्ययं तत्॥५॥

நிர்மான-மோஹா ஜிதஸங்க-தோஷா
அத்யாத்மநித்யா விநிவ்ருத்த-காமா: |
த்வந்த்வைர்-விமுக்தா: ஸுகது:க்க-ஸம்ஜ்ஞை:
கச்சந்த்யமூடா: பத-மவ்யயம் தத் || 5 || (555)

என்று நிச்சயித்து (தத:) அதன்பின் (யஸ்மின் கதா:) எவ்வழி சென்றோர் (பூய:) மீண்டும் (ந நிவர்த்தந்தி) திரும்பி வருவதில்லையோ (தத்பதம்) அவ்வழியே (பரி மார்க்கிதவ்யம்) தேடிச் செல்லுதற்குரியது.

5. (நிர்மானமோஹா:) செருக்கும் மோஹமும் இல்லாதவரும் (ஜிதஸங்கதோஷா:) பற்றென்னும் குற்றமில்லாதவரும் (அத்யாத்ம-நித்யா:) ஆத்ம நிஷ்டையிலிருப்பவரும் (விநிவ்ருத்தகாமா:) ஆசைகள் அறவே ஒழிந்தவரும் (ஸுகது:க்க ஸம்ஜ்ஞை:) இன்ப துன்பம் எனப்பட்ட (த்வந்த்வை:) இரட்டைகளினின்று (முக்தா:) விடுபட்டவரும் (அமூடா:) அஞ்ஞானம் ஒழிந்தவரும் (தத்) அந்த (அவ்யயம்) அழிவில்லாத (பதம்) பதவியை (கச்சந்தி) அடைகிறார்கள்.

'அ' எனும் பரம்பொருளில் ஸங்கம் 'அஸங்கம்.'

'நான்' யாரென்று நோக்கும்போது ஞானத்துக்குப் புறம்பாக ஒன்றுங் காணான்; ஞானமாய்ப் பிரம்மமாயிருக்குந் தன்னிலை நோக்கும்போது தன்னையுங் காணமாட்டான். இதுவே 'அஸங்க சஸ்த்ரம்.'

'தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யேத்' (பா. பே.)

न तद्भासयते सूर्यो न शशाङ्को न पावकः ।
यद्गत्वा न निवर्तन्ते तद्धाम परमं मम ॥ ६ ॥ ॥ ५५६ ॥

ममैवांशो जीवलोके जीवभूतः सनातनः ।
मनः षष्ठानीन्द्रियाणि प्रकृति-स्थानि कर्षति ॥ ७ ॥ ॥ ५५७ ॥

ந தத்பாஸயதே ஸூர்யோ ந சசாங்கோ ந பாவக: |
யத்கத்வா ந நிவர்த்தந்தே தத்தாம பரமம் மம
|| 6 || (556)
மமைவாம்சோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதன: |
மன: ஷஷ்டானீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்த்தானி
கர்ஷதி || 7 || (557)

---

6. (யத்) எங்கு (கத்வா) சென்று (ந நிவர்த்தந்தே) திரும்புவதில்லையோ (தத்) அது (மம) என்னுடைய (பரமம் தாம) உயர்ந்த உறைவிடம். (தத்) அதை (ஸூர்ய:) சூரியன் (ந பாஸயதே) பிரகாசிக்கச் செய்வதில்லை; (ந சசாங்க:) சந்திரனுமில்லை; (ந பாவக:) அக்கினியும் இல்லை.

7. (ஜீவலோகே) ஜீவலோகத்தில் (ஸநாதன:) அனாதியான (மம அம்ச: ஏவ) என்னுடைய அம்சமே (ஜீவ பூத:) ஜீவனாகத்தோன்றி (ப்ரக்ருதிஸ்தானி) அதனதன் இயல்பில் நிற்கும் (மன: ஷஷ்டானீந்த்ரியாணி) மனதுடன் கூடிய ஆறு இந்திரியங்களையும் (கர்ஷதி) இழுக்கிறது.

---

6. ஒ—ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர-தாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோய-மக்னி : |
தமேவ பாந்த-மனுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி || (கட. உப. 5. 15.)

7. **மமைவாம்ச :**—என் அம்சமாகிய பராப்ரக்ருதி. ஒ—ஜீவ பூதாம் மஹாபாஹோ யயேதம் தார்யதே ஜகத்—கீ. 7. 5.

शरीरं यदवाप्नोति यच्चाप्युत्क्रामतीश्वरः ।
गृहीत्वैतानि संयाति वायु-र्गन्धानिवाशयात् ॥ ८ ॥ ॥५५८॥
श्रोत्रं चक्षुः स्पर्शनं च रसनं घ्राणमेव च ।
अधिष्ठाय मनश्चायं विषया-नुपसेवते ॥ ९ ॥ ॥ ५५९ ॥

சரீரம் யதவாப்னோதி யச்சாப்-யுத்க்ராமதீச்வர: |
க்ருஹீத்வைதானி ஸம்யாதி வாயுர்-கந்தானிவாசயாத்
|| 8 || (558)
ச்ரோத்ரஞ் சக்ஷு: ஸ்பர்சனஞ்ச ரஸனம் க்ராணமேவ
ச |
அதிஷ்டாய மனச்சாயம் விஷயா-னுபஸேவதே
|| 9 || (559)

---

8. (யத்) எப்போது (ஈச்வர:) இச்சரீரத்தையாளும் ஜீவன் (சரீரம்) சரீரத்தை (அவாப்னோதி) அடைகிருனே (ச) மேலும் (யத்) எப்போது (உத்க்ராமதி அபி) விட்டுக் கிளம்புகிருனே—அப்போதுங்கூட—(வாயு:) காற்ருனது (ஆசயாத்) உறைவிடத்தினின்று (கந்தான் இவ) வாஸனைகளைப்போல (ஏதானி) இவற்றை (க்ருஹீத்வா) கவர்ந்து கொண்டு (ஸம்யாதி) செல்லுகிருன்.

9. (அயம்) இவன் (ச்ரோத்ரம்) செவி, (சக்ஷு:) கண் (ஸ்பர்சனம்) மெய், (ச) மேலும் (ரஸனம்) நாவு (க்ராணம் ஏவ ச மன: ச) நாசி மனம் இவை அனைத்தையும் (அதிஷ்டாய) தன்வயப்படுத்திக்கொண்டு (விஷயான்) விஷயங்களை (உபஸேவதே) அனுபவிக்கின்ருன்.

उत्क्रामन्तं स्थितंवा पि भुञ्जानं वा गुणान्वितम् ।
विमूढा नानुपश्यन्ति पश्यन्ति ज्ञान-चक्षुषः ॥१०॥ ॥५६०॥
यतन्तो योगिनश्चैनं पश्यन्त्यात्मन्यवस्थितम् ।
यतन्तोऽप्यकृतात्मानो नैनं पश्यन्त्यचेतसः ॥ ११ ॥ ॥५६१॥

உத்க்ராமந்தம் ஸ்திதம் வாபி புஞ்ஜானம் வா குணன்விதம் |
விமூடா நானுபச்யந்தி பச்யந்தி ஜ்ஞான-சக்ஷுஷ: || 10 || (560)
யதந்தோ யோகினச்-சைனம் பச்யந்த்-யாத்மன்-யவஸ்திதம் |
யதந்தோऽப்யக்ருதாத்மானே நைனம் பச்யந்த்-யசேதஸ: || 11 || (561)

---

10. (உத்க்ராமந்தம்) விட்டுச் செல்பவனாயினும் (ஸ்திதம் வா அபி) உறைந்திருப்பவனாயினும் (குணன்விதம்) குணங்களுடன் கூடி (புஞ்ஜானம் வா) புசிப்பவனாயினும்—அவனை—(விமூடா:) மதியீனர்கள் (ந அனுபச்யந்தி) காண்பதில்லை; (ஜ்ஞான சக்ஷுஷ:) ஞானிகள் (பச்யந்தி) காண்கின்றனர்.

11. (யதந்த:) முயற்சியுடையவர்களான (யோகின:) யோகிகள் (ஏனம்) இவனை (ஆத்மனி) தம்மிடத்தில் (அவஸ்திதம்) உறைந்திருப்பவனாய் (பச்யந்தி) காண்கின்றனர்; (யதந்த: அபி) முயற்சியுடையவர்களாயினும் (அக்ருதாத்மான:) செய்கையால் திருந்தாத (அசேதஸ:) மதியீனர்கள் (ஏனம்) இவனை (ந பச்யந்தி) காண்பதில்லை.

यदादित्य-गतं तेजो जगद्भासयतेऽखिलम् ।
यच्चन्द्रमसि यच्चाग्नौ तत्तेजो विद्धि मामकम् ॥१२॥ ॥५६२॥
गामाविश्य च भूतानि धारयाम्यहमोजसा ।
पुष्णामि चौषधीः सर्वाः सोमो भूत्वा रसात्मकः ॥१३॥॥५६३॥

யதாதித்ய-கதம் தேஜோ ஜகத்-பாஸயதேऽகிலம் |
யச்சந்த்ரமஸி யச்சாக்னௌ தத்தேஜோ வித்தி
மாமகம || 12 || (562)
காமாவிச்ய ச பூதானி தாரயாம்-யஹ-மோஜஸா |
புஷ்ணாமி சௌஷதீ: ஸர்வா: ஸோமோ பூத்வா
ரஸாத்மக: || 13 || (563)

---

12. (ஆதித்யகதம்) சூரியனைச்சார்ந்த (யத் தேஜ:) எந்த ஒளி (அகிலம் ஜகத்) உலகனைத்தையும் (பாஸயதே) பிரகாசிப்பிக்கின்றதோ (சந்த்ரமஸி யத்) சந்திரனிடமுள்ளதெதுவோ, (யத் ச அக்னௌ) அக்கினியிடமுள்ளதெதுவோ (தத் தேஜ:) அவ்வொளியை (மாமகம்) என்னுடையதாக (வித்தி) அறிவாய்.

13. (அஹம்) நான் (ஓஜஸா) என் சக்தியினுல் (காம்) பூமியினுள் (ஆவிச்யச) புகுந்தும் (பூதானி) உயிர்களை (தாரயாமி) தாங்குகின்றேன். (ரஸாத்மக:) ரஸமயமான (ஸோம: ச) சந்திரனுக (பூத்வா) இருந்து கொண்டு (ஸர்வா:) எல்லா (ஓஷதீ:) பயிர்களையும் (புஷ்ணமி) போஷிக்கின்றேன்.

---

13. நான்கு விதமான உணவு:—காத்யம் (மென்று சாப்பிடுவது), சோஷ்யம் (உறிஞ்சிச் சாப்பிடுவது), லேஹ்யம் (விழுங்குவது), பேயம் (பருகுவது).

अहं वैश्वानरो भूत्वा प्राणिनां देह-माश्रितः ।
प्राणापान-समायुक्तः पचाम्यन्नं चतु-र्विधम् ॥ १४ ॥ ॥५६४॥
सर्वस्य चाहं हृदि सन्निविष्टो मत्तः स्मृति-र्ज्ञान-मपोहनं च ।
वेदैश्च सर्वै-रहमेव वेद्यो वेदान्तकृ द्वेदविदेव चाहम् ॥ १५ ॥

அஹம் வைச்வானரோ பூத்வா ப்ராணிநாம் தேஹ-
மாச்ரித: |
ப்ராணாபான-ஸமாயுக்த: பசாம்-யன்னஞ் சதுர்-விதம்
|| 14 || (564)
ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ
மத்த: ஸ்ம்ருதிர்-ஜ்ஞான-மபோஹனஞ் ச |
வேதைச்ச ஸர்வை-ரஹமேவ வேத்யோ
வேதாந்தக்ருத்-வேதவிதேவ சாஹம் || 15 || (565)

14. (அஹம்) நான் (வைச்வானர:) வைச்வானரனாக (பூத்வா) ஆகி (ப்ராணிநாம்) பிராணிகளின் (தேஹம்) உடலை (ஆச்ரித:) இருப்பிடமாய்க்கொண்டு (ப்ராணாபான ஸமாயுக்த:) பிராணனுடனும் அபானனுடனுங்கூடி (சதுர்விதம்) நான்கு விதமான (அன்னம்) உணவை (பசாமி) ஜீரணம் செய்கின்றேன்.

15. (ஸர்வஸ்ய ச) எல்லோருடைய (ஹ்ருதி) இருதயத்திலும் (ஸந்நிவிஷ்ட:) புகுந்திருப்பவன் (அஹம்) நான் (ஸ்ம்ருதி:) நினைவும் (ஜ்ஞானம்) அறிவும் (அபோஹனஞ்ச) மறதியும் (மத்த:) என்னிடமிருந்தே; (ஸர்வை:) எல்லா (வேதை: ச) வேதங்களாலும்

14. மானிட சரீரம் ஒரு பானையைப் போன்றது. மனம், புத்தி, இந்திரியங்கள் அப்பானையில் இடப்பட்ட நீர், காய்கறி, அரிசி, முதலியவற்றிற்குச் சமானம். அப்பானையை அடுப்பின்மீது வைத்தால் நெருப்பு பானையிலுள்ளவற்றை வேகச் செய்யும். ஆனால் வேகவைக்கும் உஷ்ணம் பானையினுடையதன்று. நீர், காய் கறி, அரிசி இவற்றினுடையதுமன்று. அதுபோல மானிட சரீரத்தைப் போஷித்தும் பாலித்தும் இயக்குவிக்கும் சக்தி பகவானுடையதே.
(ரா. கி.)

द्वाविमौ पुरुषौ लोके क्षरश्चाक्षर एव च ।
क्षरः सर्वाणि भूतानि कूटस्थोऽक्षर उच्यते ॥ १६ ॥ ॥५६६॥
उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।
यो लोकत्रय-माविश्य बिभर्त्यव्यय ईश्वरः ॥ १७ ॥ ॥५६७॥

த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரச்சாக்ஷர ஏவ ச |
க்ஷர: ஸர்வாணி பூதானி கூடஸ்தோऽக்ஷர உச்யதே
|| 16 || (566)
உத்தம: புருஷஸ்த்வன்ய: பரமாத்மேத்-யுதாஹ்ருத: |
யோ லோகத்ரய-மாவிச்ய பிபர்த்-யவ்யய ஈச்வர: || 17 ||

(வேத்ய:) அறியவேண்டிய பொருளும் (அஹம் ஏவ) நானே ; (வேதாந்தக்ருத்) வேதாந்தத்தை ஆக்கியவனும் (வேதவித் ச) வேதத்தை உணர்ந்தவனும் (அஹம் ஏவ) நானே.

16. (க்ஷர:) க்ஷரன் என்றும் (அக்ஷர: ச) அக்ஷரன் என்றும் (இமௌ த்வௌ ஏவ) இவ்விருவர்களே (லோகே) உலகில் (புருஷௌ) புருஷர்கள் எனப் படுவோர். (ஸர்வாணி பூதானி) உருப் படைத்த அனைத்தும் (க்ஷர:) க்ஷர புருஷன் ; (கூடஸ்த:) கூடஸ்தன் (அக்ஷர:) அக்ஷர புருஷன்.

17. (து) ஆனால் (ய:) எவன் (லோகத்ரயம்) மூவுலகிலும் (ஆவிச்ய) புகுந்து நின்று (பிபர்த்தி) தாங்கு

'போக்தா வைச்வாநரோऽக்னி: போஜ்ய-மன்னம் ஸோம:, ததேததுபய-மக்னீஷோமௌ ஸர்வமிதி பச்யதோऽன்னதோஷ-லேபோ ந பவதி ||' —சங்.

15. பசுவினிடமுள்ள பாலானது வாஸ்தவத்தில் அதன் சரீர முழுவதிலும் ரத்தத்தில் புஷ்டி ரூபமாய்ப் பரவியுள்ளது. என்றாலும் பாலை மடியிலேயே காண்கிறோம். அதுபோல ஈசுவரன் உலகில் எங்கும் இருக்கிறான் எனினும் இருதய ஸ்தானத்தில் தியானத்தால் முக்கியமாய்க் காணப்படுகிறான்.

நினைவும், அறிவும் மறதியும்—நல்ல கருமங்களால் நிலையான நினைவும் அறிவும் ; கெட்ட கருமங்களால் அவற்றின் மறைவு.

यस्मात् क्षरमतीतोऽह-मक्षरादपि चोत्तमः ।
अतोऽस्मि लोके वेदे च प्रथितः पुरुषोत्तमः ॥१८॥ ॥५६८॥

யஸ்மாத்-க்ஷரமதீதோऽஹ-மக்ஷராதபி சோத்தம: |
அதோऽஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:
|| 18 || (568)

கின்றவனே (அவ்யய:) மாறுதலில்லாதவனே (ஈச்வர:) இறைவனே (பரமாத்மா இதி) பரமாத்மா என்று (உதாஹ்ருத:) கூறப்பட்ட (உத்தம: புருஷ:) உத்தமபுருஷனே அவன் (அன்ய:) வேருனவன்.

18. (யஸ்மாத்) எக்காரணத்தால் (அஹம்) நான் (க்ஷரம்) க்ஷரத்தை (அதீத:) கடந்தவனே (அக்ஷராத் அபி ச) அக்ஷரத்திற்குங்கூட (உத்தம:) மேலானவனே (அத:) அதனுல் (லோகே) உலகிலும் (வேதே ச) வேதத்திலும் (புருஷோத்தம: இதி) புருஷோத்தமன் என்று (ப்ரதித: அஸ்மி) பிரசித்தி அடைந்துள்ளேன்.

கூடஸ்தன்—கூடம் என்ருல் கொல்லனுடைய பட்டடை. இதுபோல் மாறுபாடின்றி யிருப்பவன், புத்தியில் உறையும் ஜீவசைதன்னியம். இவனே பிரத்யகாத்மா, ஜீவ ஸாக்ஷி.

18. **க்ஷரபுருஷன்**—அபரா ப்ரக்ருதியின் அம்சமான மனம், புத்தி, இந்திரியங்கள், சரீரம் இவற்றைத் தான் என்று அபிமானிக்கும் ஜீவன். (அதிபூதம் க்ஷரோபாவ: 8. 4.)

அக்ஷரபுருஷன்—ஜீவ ஸாக்ஷியாய் இருதயத்திலுறையும் ஈச்வரன்.

புருஷோத்தமன்—பரமாத்மா, பரமேசுவரன், ஸர்வஸாக்ஷி.
ஒ—உபத்ரஷ்டானுமந்தா ச......(13. 22.)
ஒ—ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:-(15. 15.)

ஒ—" க்ஷேத்ரஸ்வரூபா, க்ஷேத்ரேசீ க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ-பாலினீ "
(லலிதா ஸஹஸ்ர நாமம்)

பிரம்மம் இருவகை, பரம், அபரம். பரம் நிராகாரமாய் நிர்விகல்பமாய் என்றும் ஒரு படித்தாயுள்ளது. அபரம் விகல்பமுடையதாய்ப் பல வடிவினையடைவது. அபரமே ஜகத்தையாளும் ஈசுவரனுகவும், ஆளப்படும் ஜீவனுகவும் ஜகத்தாகவும் பிரிந்து விளங்கும்.

यो मामेवमसंमूढो जानाति पुरुषोत्तमम् ।
स सर्ववि-द्भजति मां सर्वभावेन भारत ॥ १९ ॥ ॥ ५६९ ॥

इति गुह्यतमं शास्त्र-मिद-मुक्तं मयानघ ।
एतद्-बुद्ध्वा बुद्धिमान्स्यात् कृतकृत्यश्च भारत ॥२०॥ ॥५७०॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादे पुरुषोत्तमयोगो नाम
पञ्चदशोऽध्यायः ॥

யோ மாமேவ-மஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம் |
ஸ ஸர்வவித்-பஜதி மாம் ஸர்வபாவேன பாரத || 19 ||

இதி குஹ்யதமம் சாஸ்த்ர மித முக்தம் மயானக |
ஏதத்-புத்வா புத்திமான் ஸ்யாத் க்ருதக்ருத்யச்ச பாரத
|| 20 || (570)

இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்ம-
வித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்-
ஜுனஸம்வாதே புருஷோத்தமயோகோ
நாம பஞ்சதசோऽத்யாய: ||

---

19. (பாரத) அர்ஜுனா ! (ய:) எவன் (ஏவம்) இவ்வாறு (அஸம்மூட:) மதிமயக்கமில்லாதவனாய் (புருஷோத்தமம்) புருஷோத்தமனாகிய (மாம்) என்னை (ஜாநாதி) அறிகின்றானோ (ஸ:) அவன் (ஸர்வவித்) அனைத்துமறிந்தவனாய் (ஸர்வபாவேன) அனைத்தையும் நான் எனப் பாவித்து (மாம்) என்னை (பஜதி) வணங்குவான்.

20. (இதி) இங்ஙனம் (குஹ்யதமம்) மிக ரகசியமான (இதம் சாஸ்த்ரம்) இச்சாஸ்திரம் (மயா) என்னால் (அனக) பாபமற்றவனே! (உக்தம்) கூறப்பட்டது. (பாரத) அர்ஜுனா! (ஏதத்) இதை (புத்வா) அறிந்து (புத்திமான்) புத்திமானாகவும் (க்ருதக்ருத்ய: ச) செய்ய

வேண்டிய கருமத்தைச் செய்து முடித்தவனாகவும் (ஸ்யாத்) ஒருவன் ஆகின்றான்.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திரமாயும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸம்பாஷணை யாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத்கீதை என்னும் உபநிஷத்தில் புருஷோத்தமயோகம் என்று பெயர் பெற்ற பதினைந்தாம் அத்தியாயம் முற்றும்.

அத்தியாய விஷயச் சுருக்கம்:—

உலகத்தை மேலே வேரும் கீழே கிளைகளும் உள்ள அதிசய மான ஒரு அச்வத்த விருக்ஷமாக வர்ணித்தல். இந்த விருக்ஷத்தைப் பற்றின்மையென்னுங் கோடரியால் வெட்டி வீழ்த்திப் பரமபதத்தை நாடவேண்டும் எனல். ஜீவன் ஈசுவராம்சம் எனவும், அவன் உடலி னுள் புகும்போதும், உடலை விட்டுச் செல்லும்போதும் இந்திரிய வாசனைகளைச் சூக்ஷ்மமாய்க் கவர்ந்துகொண்டே செல்லுகின்றான் எனவும், இவ்வுண்மைகளை அறிந்தோர் ஞானிகள், அறியாதவர் அஞ்ஞானிகள் எனவுங் கூறுதல். இவ்வாறாக ஜகத்தின் இயல்பை யும் ஜீவனுடைய இயல்பையும் வர்ணித்து ஈசுவரனுடைய ஒளி யின்றி ஜகத்துக்கும் ஜீவனுக்கும் பிரகாசம் இல்லையெனல். உயிர் களின் உள்ளத்தில் உறையும் இறைவனைச் சிந்திக்க வேண்டிய முறை—'சித்தமறியாதபடி சித்தத்தினின்றிலகு திவ்ய தேஜோமய மாக' எனல்.

ஜீவனாகிய க்ஷரபுருஷனுக்கும், ஈசுவரனுங் கூடஸ்தனுமாகிய அக்ஷர புருஷனுக்கும் மேலாக இருப்பவன் **புருஷோத்தமனாகிய** பகவான் எனல்.

இங்ஙனம் கீதையின் பரம ரஹஸ்யமான தத்துவமும் வேதாந் தத்தின் முடிவான கருத்தும் உணர்த்தப்பட்டதென்பதை பகவான் சுட்டிக் காட்டுவதுடன் அத்தியாயம் முடிவு பெறுகிறது. கீதா சாஸ் திரமும் ஒருவகையில் இங்கு முடிவு பெற்றதாகக் கருதப்படும்.

சார்தருசம் சாரத் தருவைச் சிதைத்தெறியின்
சேராரிய வீடுறலும் சீவனது—நீரதுவும்
தானே எவர்க்கும் மேல் ஆம்புருடன் என்பதுவும்
ஞானகரன் வகுக்கும் நன்கு. (கீ. வெ.)

॥ षोडशोऽध्यायः ॥

(दैवासुरसम्पद्विभागयोगः)

अभयं सत्त्वसंशुद्धि-र्ज्ञानयोग-व्यवस्थितिः ।
दानं दमश्च यज्ञश्च स्वाध्याय-स्तप आर्जवम् ॥ १ ॥ ॥५७१॥

பதினாறும் அத்தியாயம்

(தைவாஸுரஸம்பத்விபாக யோகம்)

ஸ்ரீ பகவானுவாச—
அபயம் ஸத்வஸம்சுத்திர்-ஜ்ஞானயோக-வ்யவஸ்திதி: |
தானம் தமச்ச யஜ்ஞச்ச ஸ்வாத்யாயஸ்-தப ஆர்ஜவம்
|| 1 || (571)

ஸ்ரீ பகவான் கூறியது—

1. (அபயம்) அச்சமின்மை, (ஸத்வஸம்சுத்தி:) மனத்தூய்மை (ஜ்ஞானயோக வ்யவஸ்திதி:) ஞானத்திலும் யோகத்திலும் நிலைபெறுதல், (தானம்) தானம், (தம: ச) புறக்கரணங்களை அடக்குதல் (யஜ்ஞ: ச) யஜ்ஞம், (ஸ்வாத்யாய:) சாஸ்திரங்களை ஓதுதல் (தப:) தவம் (ஆர்ஜவம்) நேர்மை;

கோர்வையும் அத்தியாயத்தின் பெயரும்:—

7, 15, 9, 13 முதலிய இடங்களில் அஸுர ப்ரக்ருதி, ராக்ஷஸ ப்ரக்ருதி, தேவப்ரக்ருதி உடையவர்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப் பட்டது. ஆனால் இவ்விஷயத்தை விரித்துக் கூற ஆங்காங்கு அவகாசமேற்படாததால் இவ்வத்தியாயத்தில் கூறப்படுகிறது. இக் காரணத்தால் இவ்வத்தியாயம் "தைவாஸுர ஸம்பத்விபாக யோகம்" எனப்படும்.

ஆணை மருதவர் தேவரல்லா வழக்கோ ரசுரர்
கோணை மருத குணச்செல்வநீகுறிக் கொண்மறையைப்
பேணிய தத்துவமும் பிணியற்ற கிரிசைகளும்
காணிதனுல் விசயா வென்று கண்ண னியம்பினனே. (கீ. ஸ.)

अहिंसा सत्य-मक्रोध-स्त्यागः शान्ति-रपैशुनम् ।
दया भूते-ष्वलोलुप्त्वं मार्दवं ह्री-रचापलम् ॥ २ ॥ ॥ ५७२ ॥

அஹிம்ஸா ஸத்ய-மக்ரோதஸ்-த்யாக: சாந்தி ரபை
சுனம் |
தயா பூதேஷ்-வலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீ-ரசா
பலம் || 2 || (572)

2. (அஹிம்ஸா) அஹிம்ஸை, (ஸத்யம்) உண்மை (அக்ரோத:) சினமின்மை (த்யாகஃ) துறவு (சாந்திஃ) அமைதி (அபைசுனம்) கோள்சொல்லாமை (பூதேஷு தயா) உயிர்களிடம் தயை (அலோலுப்த்வம்) பிறர் பொருள் நயவாமை (மார்தவம்) மிருதுத்தன்மை, (ஹ்ரீ:) நாணம் (அசாபலம்) மனவுறுதி;

1. அபயம்—

ஒ—ஆராலு மென்னை யமட்ட வொண்ணுதினிச்
சீரார் பிரான் வந்து சிந்தை புகுந்தனன்
சீராடி யங்கே திரிவதல்லாதினி
யார் பாடுஞ் சாரா வறி வறிந்தேனே.

நமக்குப் பிரியமானது பிரிந்துபோமோ, பிரியமில்லாதது வந்து சேருமோ என்ற எண்ணத்தால் ஏற்படும் மனோவிகாரம் பயம்: அவமானம். வியாதி, பொருள் நஷ்டம், உறவினர் பிரிதல், ராஜ தண்டனை, மரணம் முதலியவற்றில் பயம் ஸஹஜமாயுளது. இவை ஒன்றிற்கும் அஞ்சாத குணம் 'அபயம்.'

ஸத்வ ஸம்சுத்தி—'ஸத்வம்' என்றால் அந்தக்கரணம், அந்தக்கரணத்தின் பரிசுத்தம்.

ஆர்ஜவம்—முக்கரணங்களின் நேர்மை.

ஒ—மனஸ்யேகம் வசஸ்யேகம் கர்மண்யேகம் மஹாத்மனாம் ||

அபயம்—

ஒ. 'த்வயா நாதேன தேவேச ஸர்வாபத்ப்யோ பயம் ந ஹி
—(துரௌபதி: ம. பா. 3.274. 15)

2. அலோலுப்த்வம்—ஒரு பொருளைக் கண்டபோது அதை அனுபவிக்க விரும்புதலும், பிறர் ஒரு விஷய ஸுகத்தை அனுப விக்கக் கண்டால் அதைத் தான் அடைய அவாவுதலும் 'லோலுப் த்வம்'; அஃதில்லாமை அலோலுப்த்வம்.

तेजः क्षमा धृतिः शौच-मद्रोहो नातिमानिता ।
भवन्ति संपदं दैवी-मभिजातस्य भारत ॥ ३ ॥ ॥ ५७३ ॥
दम्भो दर्पोऽभिमानश्च क्रोधः पारुष्यमेव च ।
अज्ञानं चाभिजातस्य पार्थ संपद-मासुरीम् ॥ ४ ॥ ॥ ५७४ ॥

தேஜ: க்ஷமா த்ருதி: ஶௌச-மத்ரோஹோ நாதிமானிதா |
பவந்தி ஸம்பதம் தைவீ-மபிஜாதஸ்ய பாரத || 3 || (573)
தம்போ தர்ப்போऽபிமானச்ச க்ரோத: பாருஷ்யமேவச|
அஜ்ஞானஞ் சாபிஜாதஸ்ய பார்த்த ஸம்பத-மாஸுரீம் || 4 || (574)

---

3. (தேஜ:) தைரியம் (க்ஷமா) பிறர் குற்றம் பொறுத்தல் (த்ருதி:) தளராமை, (ஶௌசம்) சுத்தம் (அத்ரோஹ:) வஞ்சனை செய்யாமை (ந அதி மானிதா) செருக்கின்மை—எனுமிவையெல்லாம் (தைவீம் ஸம்பதம்) தெய்வ சம்பத்துடன் (அபிஜாதஸ்ய) பிறந்தவனுக்கு (பவந்தி) இயல்பாகின்றன, (பாரத) அர்ஜுனா!

4. (பார்த்த) அர்ஜுனா! (தம்ப:) இடம்பம் (தர்ப்ப:) கொழுப்பு (அபிமானச்ச) தற்புகழ்ச்சி (க்ரோத:) கோபம் (பாருஷ்யம் ஏவ ச) அவ்வாறே கொடுஞ்சொல், (அஜ்ஞானஞ் ச) மடமை—இவையெல்லாம்—(ஆஸுரீம் ஸம்பதம்) அஸுர ஸம்பத்துடன் (அபிஜாதஸ்ய) பிறந்தவனுக்கு—இயல்பாகின்றன.

ஹ்ரீ—கெட்ட காரியத்தில் வெட்கம். தான் செய்த நல்ல காரியத்தை விளம்பரம் செய்வதிலும் வெட்கம்.

ஸத்யம்—ஓ—உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (குறள்)

दैवी संप-द्विमोक्षाय निबन्धायासुरी मता ।
मा शुचः संपद दवी-मभिजातोऽसि पाण्डव ॥ ५ ॥ ॥५७५॥
द्वौ भूतसर्गौ लोकेऽस्मिन् दैव आसुर एव च ।
दैवो विस्तरशः प्रोक्त आसुरं पार्थ मे शृणु ॥ ६ ॥ ॥५७६॥

தைவீ-ஸம்பத்-விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா |
மா சுச: ஸம்பதம் தைவீ-மபிஜாதோ஽ஸி பாண்டவ
|| 5 || (575)
த்வௌ பூதஸர்க்கௌ லோகே஽ஸ்மின் தைவ ஆஸுர
ஏவ ச |
தைவோ விஸ்தரச: ப்ரோக்த ஆஸுரம் பார்த்த மே
ச்ருணு || 6 || (576)

---

5. (தைவீ ஸம்பத்) தெய்வ ஸம்பத்து (விமோக்ஷாய) முக்திக்கும் (ஆஸுரீ) அஸுர ஸம்பத்து (நிபந்தாய) பந்தத்திற்கும் என்று (மதா) கொள்ளத் தகும். (பாண்டவ) பாண்டவா (மா சுச:) வருந்தாதே. (தைவீம் ஸம்பதம்) தெய்வ ஸம்பத்துக்குரியவனாக (அபி ஜாத: அஸி) நீ பிறந்துள்ளாய்.

6. (பார்த்த) பார்த்தா! (அஸ்மின் லோகே) இவ்வுலகில் (பூதஸர்க்கௌ) உயிர்ப் பிறப்பு (த்வௌ) இருவகை; (தைவ ஆஸுர ஏவ ச) தெய்வ இயல்பும், அசுர இயல்புமே; (தைவ:) தெய்வத்தன்மை (விஸ்தரச:) விரிவாக (ப்ரோக்த:) கூறப்பட்டது; (ஆஸுரம்) அசுரத்தன்மையை (மே) என்னிடம் (ச்ருணு) கேட்பாய்.

---

6. ஒ—இருவே றுலகத் தியற்கை ; திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

प्रवृत्तिं च निवृत्तिं च जना न विदु-रासुराः ।
न शौचं नापि चाचारो न सत्यं तेषु विद्यते ॥ ७ ॥ ॥५७७॥
असत्य-मप्रतिष्ठं ते जगदाहु-रनीश्वरम् ।
अपरस्पर-संभूतं किमन्यत् कामहैतुकम् ॥ ८ ॥ ॥ ५७८ ॥

ப்ரவ்ருத்திஞ் ச நிவ்ருத்திஞ் ச ஜநா ந விதுராஸுரா: |
ந சௌசம் நாபி சாசாரோ ந ஸத்யம் தேஷு வித்யதே
|| 7 || (577)

அஸத்ய-மப்ரதிஷ்டம் தே ஜகதாஹு-ரநீச்வரம் |
அபரஸ்பர-ஸம்பூதம் கிமன்யத் காமஹைதுகம்
|| 8 || (578)

---

7. (ஆஸுரா: ஜநா:) அசுர ஜனங்கள் (ப்ரவ்ருத்திஞ் ச) செய்யத்தக்க நல்வினையையும் (நிவ்ருத்திஞ் ச) விலக்கத்தக்க தீவினையையும் (ந விது:) உணரமாட்டார்கள். (தேஷு) அவர்களிடம் (ந சௌசம் வித்யதே) சுத்தம் இல்லை, (ந ச ஆசார: அபி) நன்னடத்தை இல்லை ; (ந ஸத்யம்) உண்மை இல்லை.

8. (தே) அவர்கள் (ஜகத்) உலகம் (அஸத்யம்) பொய் நிறைந்தது, (அப்ரதிஷ்டம்) நிலையற்றது, (அனீச்வரம்) ஈசுவரனில்லாதது, (அபரஸ்பர ஸம்பூதம்) ஆண் பெண்—சேர்க்கையால் உண்டானது, (காமஹைதுகம்) காமத்தையே காரணமாக உடையது, (கிம் அன்யத்) வேறென்ன இருக்கிறது என்று (ஆஹு:) பேசுவர்.

---

7. ஒ—நல்லவை எல்லாஅம் தீயவாம் ; தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு. (குறள்.)

एतां दृष्टि-मवष्टभ्य नष्टात्मानोऽल्पबुद्धयः ।
प्रभवन्त्युग्रकर्माणः क्षयाय जगतोऽहिताः ॥ ९ ॥ ॥ ५७९ ॥
काम-माश्रित्य दुष्पूरं दम्भ-मान-मदान्विताः ।
मोहाद्-गृहीत्वाऽसद्ग्राहान् प्रवर्तन्तेऽशुचिव्रताः॥ १० ॥ ॥५८०॥

ஏதாம் த்ருஷ்டி-மவஷ்டப்ய நஷ்டாத்மானோऽல்ப-
புத்தய: |
ப்ரபவந்த்-யுக்ரகர்மாண: க்ஷயாய ஜகதோऽஹிதா:
|| 9 || (579)
காம-மாச்ரித்ய துஷ்பூரம் தம்ப-மான-மதான்விதா: |
மோஹாத் க்ருஹீத்வாऽஸத்க்ராஹான் ப்ரவர்த்தந்தே
ऽசுசி-வ்ரதா: || 10 || (580)

---

9. (அல்ப புத்தய:) அற்பமான புத்தியுடைய இவர்கள் (ஏதாம் த்ருஷ்டிம்) இந்நோக்கத்தை (அவஷ்டப்ய) பிடித்துக்கொண்டு (நஷ்டாத்மான:) ஆன்ம மார்க்கத்தை இழந்தவர்களாய் (உக்ர கர்மாண:) கொடுந்தொழில் புரிபவர்களாய் (ஜகத:) உலகிற்கு (அஹிதா:) சத்துருக்களாய் (க்ஷயாய) நாசத்தின் பொருட்டு (ப்ரபவந்தி) வந்துதிக்கின்றனர்.

10. (துஷ்பூரம்) பூர்த்திசெய்ய முடியாத (காமம்) காமத்தை (ஆச்ரித்ய) கைப்பிடித்து (தம்பமானமதான்விதா:) இடம்பம், தற்பெருமை, மதம் இவைகளுடன் கூடியவர்களாய் (மோஹாத்) மதிமயக்கத்தால் (அஸத்க்ராஹான்) கெட்ட எண்ணங்களை (க்ருஹீத்வா) மேற்கொண்டு (அசுசிவ்ரதா:) அசுத்தமான விரதங்களுடையவர்களாய் (ப்ரவர்த்தந்தே) தொழில் புரிகின்றனர்.

---

9. ஜகதோऽசுபா: (பா. பே.)

चिन्ता-मपरिमेयां च प्रलयान्ता-मुपाश्रिताः ।
कामोपभोगपरमा एतावदिति निश्चिताः ॥ ११ ॥ ॥५८१॥
आशा-पाश-शतै-र्बद्धाः काम-क्रोध-परायणाः ।
ईहन्ते कामभोगार्थ-मन्यायेनार्थसञ्चयान् ॥ १२ ॥ ॥५८२॥
इदमद्य मया लब्ध-मिमं प्राप्स्ये मनोरथम् ।
इदमस्तीदमपि मे भविष्यति पुनर्धनम् ॥ १३ ॥ ॥५८३॥

சிந்தா-மபரிமேயாஞ் ச ப்ரலயாந்தா- முபாச்ரிதா: |
காமோபபோகபரமா ஏதாவதிதி நிச்சிதா: || 11 || (581)
ஆசா-பாச-சதைர்பத்தா: காமக்ரோத-பராயணு: |
ஈஹந்தே காமபோகார்த்த-மன்யாயேனர்த்த-ஸஞ்சயான் || 12 || (582)
இதமத்ய மயா லப்த-மிமம் ப்ராப்ஸ்யே மனோதம் |
இதமஸ்தீதமபி மே பவிஷ்யதி புனர்த்தனம் || 13 || (583)

---

11. (அபரிமேயாம்) அளவு கடந்ததும் (ப்ரலயாந்தாம் ச) மரணத்துடனேயே முடிவடைவதுமான (சிந்தாம்) கவலையை (உபாச்ரிதா:) அடைந்தவர்களாய் (காமோபபோகபரமா:) காமநுகர்ச்சியே அனைத்திலும் மேல் எனுங் கருத்தினராய் (ஏதாவத் இதி) அது அப்படித்தான் என்று (நிச்சிதா:) நிச்சயித்துக்கொண்டவர்களாய்;

12. (ஆசாபாச சதை:) நூற்றுக்கணக்கான ஆசைக் கயிறுகளால் (பத்தா:) கட்டப்பட்டவர்களாய் (காமக்ரோத பராயணு:) காமத்துக்கும் கோபத்துக்கும் அடிமைகளாய் (காமபோகார்ததம்) காம நுகர்ச்சிக்காக (அந்யாயேன) அநியாயமாக (அர்த்த-ஸஞ்சயான்) பணக்குவியலை (ஈஹந்தே) தேடுவார்கள்.

13. (அத்ய) இன்று (மயா) என்னல் (இதம்) இது (லப்தம்) அடையப்பட்டது; (இதம்) இந்த (மனோ

असौ मया हतः शत्रु-र्हनिष्ये चापरानपि ।
ईश्वरोऽह-महं भोगी सिद्धोऽहं बलवान् सुखी ॥ १४ ॥ ॥५८४॥
आढ्योऽभिजनवा-नस्मि कोऽन्योऽस्ति सदृशो मया ।
यक्ष्ये दास्यामि मोदिष्य इत्यज्ञान-विमोहिताः ॥१५॥ ॥५८५॥

அஸௌ மயா ஹத: சத்ருர்-ஹனிஷ்யே சாபரானபி |
ஈச்வரோ஽ஹ-மஹம் போகீ ஸித்தோ ஹம் பலவான் ஸுகீ || 14 || (584)
ஆட்யோ஽பிஜனவா-னஸ்மி கோ஽ன்யோ஽ஸ்தி ஸத்ருசோ மயா |
யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இத்யஜ்ஞான-விமோஹிதா: || 15 || (585)

ரதம்) ஆசையை (ப்ராப்ஸ்யே) அடையப் போகிறேன்; (இதம்) இது (அஸ்தி) இருக்கிறது; (புன:) மேலும் (மே) எனக்கு (இதம் தனம் அபி) இந்தப் பொருளுங் கூட (பவிஷ்யதி) இனி வரப்போகிறது.

14. (அஸௌ சத்ரு:) அந்தச் சத்துரு (மயா) என்னுல் (ஹத:) கொல்லப்பட்டான்; (ச) மேலும் (அபரான் அபி) மற்றவர்களையுங்கூட கொல்லப்போகிறேன்; (அஹம்) நான் (ஈச்வர:) பிரபு; (அஹம் போகீ) நான் இன்பங்களை யனுபவிப்பவன்; (அஹம் ஸித்த:) நான் காரியங்களில் சித்தி பெற்றவன்; (பலவான்) பலமுடையவன் (ஸுகீ) சுகமுறுபவன்.

15. (ஆட்ய:) செல்வம் படைத்தவனுகவும் (அபிஜனவான்) உயர் குலத்துதித்தவனுகவும் (அஸ்மி) நான் உளேன். (மயா ஸத்ருச:) எனக்குச் சமமானவன் (அன்ய:) வேருெருவன் (க: அஸ்தி) எவன் இருக்கிருன்? (யக்ஷ்யே) யஜ்ஞம் செய்வேன், (தாஸ்யாமி) தானம் செய்வேன் (மோதிஷ்யே) களிப்பேன் (இதி) என்று (அஜ்ஞான விமோஹிதா:) அஜ்ஞானத்தால் மோகமடைந்தவர்களாய்;

अनेकचित्त-विभ्रान्ता मोह-जाल-समावृताः ।
प्रसक्ताः कामभोगेषु पतन्ति नरकेऽशुचौ ॥ १६ ॥ ॥५८६॥
आत्मसंभाविताः स्तब्धा धन-मान-मदान्विताः ।
यजन्ते नाम-यज्ञैस्ते दम्भेनाविधि-पूर्वकम् ॥ १७ ॥ ॥५८७॥

அனேக-சித்த-விப்ராந்தா மோஹ ஜால-ஸமாவ்ருதா: |
ப்ரஸக்தா: காமபோகேஷு பதந்தி நரகேऽசுசௌ
|| 16 || (586)
ஆத்மஸம்பாவிதா: ஸ்தப்தா தன-மான-மதான்விதா: |
யஜந்தே நாம-யஜ்ஞைஸ்தே தம்பேனாவிதி-பூர்வகம்
|| 17 || (587)

---

16. (அனேக சித்த விப்ராந்தா:) பல நினைப்பால் உள்ளம் திகைப்புற்று (மோஹஜால ஸமாவ்ருதா:) மோகமாகிய வலையில் அகப்பட்டு (காம போகேஷு) காம நுகர்ச்சிகளில் (ப்ரஸக்தா:) ஆழ்ந்த பற்றுள்ள வர்களாய் (அசுசௌ) அசுத்தமான (நரகே) நரகில் (பதந்தி) விழுவர்.

17. (ஆத்மஸம்பாவிதா:) தம்மையே மெச்சிக் கொள்பவராய் (ஸ்தப்தா:) பூஜைக்குரியவரிடத்தும் வணக்கமில்லாதவராய் (தனமானமதான்விதா:) செல் வச் செருக்கும் மதமும் படைத்தவராய் (தே) அவர்கள் (தம்பேன) இடம்பத்தால் (நாமயஜ்ஞை:) பேர்மட்டில் யஜ்ஞம் எனும் கிரியையால் (அவிதி-பூர்வகம்) முறை தவறி (யஜந்தே) பூஜிக்கின்றனர்.

---

17. பூஜையை பகவானுக்குரித்தாக்காமல் தங்களுக்காக்கிக் கொள்பவர்கள் அசுரர்கள். பண்டாசுரன் யக்ஞ யாகாதிகளைச் செய் பவனாயினும் அதனால் அவனுடைய இடம்பமே வளர்ந்து தேவியால் ஸம்ஹரிக்கப்பட்டான் என்று லலிதோபாக்கியானம் கூறுகிறது. 'பண்ட' என்ற சொல்லைத் திருப்பினால் அதுவே 'டம்ப' என்றாகும்.

ஆத்மஸம்பாவிதா:—அசுர ஸ்வபாவ முடையவர்கள் அடக்க முடையவர்களாகத் தோன்ற விரும்பினாலும் 'நாம் அடக்க முடையவர்' என்று கர்விப்பர்.

अहंकारं बलं दर्पं कामं क्रोधं च संश्रिताः ।
मामात्म-पर-देहेषु प्रद्विषन्तोऽभ्यसूयकाः ॥ १८ ॥ ॥ ५८८ ॥
तानहं द्विषतः क्रूरान् संसारेषु नराधमान् ।
क्षिपा-म्यजस्र-मशुभा-नासुरीष्वेव योनिषु ॥ १९ ॥ ॥ ५८९ ॥

அஹங்காரம் பலம் தர்ப்பம் காமம் க்ரோதஞ் ச
ஸம்ச்ரிதா: |
மாமாத்ம-பர-தேஹேஷு ப்ரத்விஷந்தோऽப்யஸூயகா:
|| 18 || (588)
தானஹம் த்விஷத: க்ரூரான் ஸம்ஸாரேஷு
நராதமான் |
க்ஷிபாம்-யஜஸ்ர-மசுபா-ஞஸுரீஷ்வேவ யோனிஷு
|| 19 || (589)

---

18. (அஹங்காரம்) அகங்காரத்தையும் (பலம்) பலத்தையும் (தர்ப்பம்) கருவத்தையும் (காமம்) காமத்தையும் (க்ரோதஞ்ச) கோபத்தையும் (ஸமாச்ரிதா:) கைக்கொண்டவர்களாய் (ஆத்மபரதேஹேஷு) தங்கள் உடலிலும் பிறர் உடலிலும் உள்ள (மாம்) என்னை (ப்ரத்விஷந்த:) பகைப்பவர்களாய் (அப்யஸூயகா:) நல்லவர்களைக் கண்டு ஸஹியாதவர்களாய்—இருப்பர்.

19. (த்விஷத:) பகைமையுடையவர்களும் (க்ரூரான்) கொடியவர்களும் (நராதமான்) மனிதப் பதர்

---

18 **கோபம்**—ஓ—தன்னைத்தான் காக்கின் சினம் காக்க; காவாக்கால் தன்னையே கொல்லும் சினம். (குறள்.)

ஓ. க்ருஹே க்ருஹே ச யஜ்ஞாச்ச ஸம்பபூவு: ஸமந்தத: |
ருசோ யஜூம்ஷி ஸாமானி மீமாம்ஸா ந்யாயகாதய: |
பரவர்த்தந்தேஸ்ம தைத்யானாம் க்ருஹம் ப்ரதி க்ருஹம் ப்ரதி |
யதாச்ரமேஷு முக்யேஷு முனீனாஞ்ச த்விஜன்மனாம் |
ததா யஜ்ஞேஷு தைத்யானாம் பபூவுர்-ஹவ்ய-போஜின:||
—(லலிதோபாக்கியானம்.)

आसुरीं योनि-मापन्ना मूढा जन्मनि जन्मनि ।
मामप्राप्यैव कौन्तेय ततो यान्त्यधमां गतिम् ॥ २० ॥ ॥५९०॥
त्रिविधं नरकस्येदं द्वारं नाशन-मात्मनः ।
कामः क्रोध-स्तथा लोभ-स्तस्मादेतत्त्रयं त्यजेत्॥२१॥ ॥५९१॥

ஆஸுரீம் யோனி-மாபன்னு மூடா ஜன்மனி ஜன்மனி |
மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்-யதமாங்
கதிம் || 20 || (590)
த்ரிவித்ம் நரகஸ்யேதம் த்வாரம் நாசன-மாத்மன: |
காம: க்ரோதஸ் ததா லோபஸ்-தஸ்மா-தேதத் த்ரயம்
த்யஜேத் || 21 || (591)

களும் (அசுபான்) பாவிகளும் ஆன (தான்) அவர்களை (ஸம்ஸாரேஷு) பிறந்திறந்துழலும் உலகங்களில் (ஆஸுரீஷு யோனிஷு ஏவ) அசுர யோனிகளிலியே (அஹம்) நான் (அஜஸ்ரம்) அடிக்கடி (க்ஷிபாமி) தள்ளுகிறேன்.

20. (கௌந்தேய) அர்ஜுனு! (மூடா:) மூடர்கள் (ஜன்மனி ஜன்மனி) பல பிறப்புக்களில் (ஆஸுரீம் யோனிம்) அசுர யோனியை (ஆபன்னு:) அடைந்தவர்களாய் (மாம்) என்னை (அப்ராப்ய ஏவ) நாடாமலேயே (தத: அதமாங் கதிம்) முன்னதிலும் இன்னும் தாழ்ந்த நிலையை (யாந்தி) அடைகின்றனர்.

21. (ஆத்மன:) ஆத்மாவிற்கு (நாசனம்) நாசம் விளைவிக்கும் (நரகஸ்ய இதம் த்வாரம்) இந்த நரக

---

21. த்ரிவிதம் நரகஸ்யேதம்—த்ரிவிதம் நரகஸ்யேதத்;
'த்யஜேத்'—'த்யஜ'. (பா. பே.)

காமமும் குரோதமும் லோபமும் நரகத்திற்குப் பகிரங்க வாயில்கள். ஜாதி, ஐசுவரிய வித்யா கர்வம் அந்தரங்க வாயில்கள்.

एतैर्विमुक्तः कौन्तेय तमोद्वारै-स्त्रिभिर्नरः ।
आचरत्यात्मनः श्रेयस्ततो याति परां गतिम् ॥ २२ ॥ ॥५९२॥

यः शास्त्रविधि-मुत्सृज्य वर्तते कामकारतः ।
न स सिद्धि-मवाप्नोति न सुखं न परां गतिम् ॥२३॥ ॥५९३॥

ஏதைர்-விமுக்த: கௌந்தேய தமோ த்வாரைஸ்-த்ரிபிர்-
நர: |
ஆசரத்-யாத்மன: ச்ரேயஸ்-ததோ யாதி பராங் கதிம்
|| 22 || (592)

ய: சாஸ்த்ர-விதி-முத்ஸ்ருஜ்ய வர்த்ததே காமகாரத: |
ந ஸ ஸித்தி-மவாப்னோதி ந ஸுகம் ந பராங் கதிம்
|| 23 || (593)

வாயில் (த்ரிவிதம்) மூவகைத்து; (காம: க்ரோத: ததா லோப:) காமம், கோபம், லோபம் என்பன; (தஸ்மாத்) ஆகையால் (ஏதத் த்ரயம்) இம்மூன்றையும் (த்யஜேத்) தள்ள வேண்டும்.

22. (கௌந்தேய) அர்ஜுனா! (ஏதை: த்ரிபி: தமோத்வாரை:) இம்மூன்று இருள் நிறைந்த வழிகளினின்று (விமுக்த:) விலகிய (நர:) மனிதன் (ஆத்மன:) தனக்கு (ச்ரேய:) உயர் நலத்தை (ஆசரதி) பின்பற்றுகிறான், (தத:) அதனால் (பராம் கதிம்) உயர்ந்த கதியை (யாதி) அடைகிறான்.

23. (ய:) எவன் (சாஸ்த்ர விதிம்) சாஸ்திர விதியை (உத்ஸ்ருஜ்ய) விட்டு (காமகாரத:) ஆசை வாய்ப்பட்டு (வர்த்ததே) தொழில் புரிகின்றானோ (ஸ:) அவன் (ஸித்திம்) சித்தியை (ந அவாப்னோதி) அடைவதில்லை; (ந ஸுகம்) இன்பத்தை அடைவதில்லை; (ந பராம் கதிம்) உயர்ந்த கதியை அடைவதில்லை.

तस्मा-च्छास्त्रं प्रमाणं ते कार्याकार्य-व्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तु-मिहार्हसि ॥ २४ ॥ ॥५९४॥

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे दैवासुरसंपद्विभागयोगो नाम षोडशोऽध्यायः ॥

தஸ்மாச்-சாஸ்த்ரம் ப்ரமாணம் தே
கார்யாகார்ய-வ்யவஸ்திதௌ |
ஜ்ஞாத்வா சாஸ்த்ர-விதானேக்தம்
கர்ம கர்த்து-மிஹார்ஹஸி || 24 || (594)

இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுனஸம்வாதே தைவாஸுரஸம்பத்விபாகயோகோ நாம ஷோடசோ஽த்யாய: ||

24. (தஸ்மாத்) ஆகையால் (கார்யாகார்ய வயவஸ்திதௌ) எது செய்யத்தக்கது எது செய்யத் தகாதது என்று நிச்சயிப்பதில் (தே) உனக்கு (சாஸ்த்ரம்) சாஸ்திரமே (ப்ரமாணம்) பிரமாணமாகும். (இஹ) இங்கு (சாஸ்த்ர விதானேக்தம்) சாஸ்திரத்தில் கூறிய நெறியை (ஜ்ஞாத்வா) உணர்ந்து (கர்ம கர்த்தும்) தொழில் புரிவதற்கு (அர்ஹஸி) உரியவனுகின்றுய்.

---

24. முதலில் தன்னிச்சைப்படி தொழில் புரிபவன் பின் சாஸ்திரம் பகவானுடைய ஆஜ்ஞை என்று நம்பிக் கருமம் செய்கிருன். முடிவில் பகவதிச்சையே அவனிடம் தொழில் புரிவதாகித் தன்னிச்சை எனத் தனியாக ஒன்றில்லாமல் முக்தனுகிருன்.

சாஸ்திரம்—ஊனக் கண்ணைக்கொண்டு காணுமல் ஞானக் கண்ணைக் கொண்டு காணுதல்.

“கண்ணன் கண்ணல்லது இல்லையோர் கண்ணே.”

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோகசாஸ்திரமாயும்
ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸம்பாஷ
ணையாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத்கீதை
என்னும் உபநிஷத்தில் தைவாசுர
ஸம்பத்விபாகயோகம் என்று
பெயர் பெற்ற பதினாறும்
அத்தியாயம் முற்றும்.

அத்தியாய விஷயச் சுருக்கம்:—

பயமின்மை முதலிய நற்குணங்கள் **தெய்வ ஸம்பத்து** எனவும், இடம்பம் முதலிய குணங்கள் **அசுர ஸம்பத்து** எனவும் கூறுதல். அசுர ஸம்பத்துடையார் ஈசுவரனை அவமதிப்பர் எனவும், அதனால் படிப்படியாகத் தாழ் பிறப்பை யடைவரெனவுங் கூறுதல். காமம், கோபம், லோபம் இம்மூன்றுமே நரக வாயில் எனல். இவ்வழியி னின்று விலகும்படி எச்சரிக்கை செய்தற்கும் மோக்ஷத்திற்கு வழி காட்டுதற்கும் உற்ற துணை சாஸ்திரம் எனல். சாஸ்திரப் பிர மாணத்தை ஏற்காமல் தன் மனம்போன போக்கில் நடப்பவன் இகத் திலும் பரத்திலும் ஒரு நன்மையும் அடையானெனல்.

கொள்ளுரிய தேவியலும் கொள்ளத் தகாஅசுரத்
தள்ளுமிய லும்பயனும் சாற்றிப்பின்—விள்ளுமொரு
சாத்திரத்தின் மாண் பதுவும் தாமரையாள் வாழ்மார்பன்
பார்த்தனுக்குக் கூறும் பரிந்து. (கீ. வெ.)

॥ सप्तदशोऽध्यायः ॥

(श्रद्धात्रयविभागयोगः)

अर्जुन उवाच—

ये शास्त्रविधि-मुत्सृज्य यजन्ते श्रद्धयान्विताः ।
तेषां निष्ठा तु का कृष्ण सत्त्वमाहो रजस्तमः ॥ १ ॥ ॥५९५॥

பதினேழாம் அத்தியாயம்

(ச்ரத்தாத்ரயவிபாக யோகம்)

அர்ஜுன உவாச—
யே சாஸ்த்ரவிதி-முத்ஸ்ருஜ்ய யஜந்தே ச்ரத்தயான்
விதா: |
தேஷாம் நிஷ்டா து கா க்ருஷ்ண ஸத்வ-மாஹோ
ரஜஸ்தம: || 1 || (595)

அர்ஜுனன் கூறியது—

1. (க்ருஷ்ண) கிருஷ்ணு! (து) ஆனல் (யே) எவர்கள் (சாஸ்த்ர விதிம்) சாஸ்திர நெறியை (உத்ஸ்ருஜ்ய) விட்டு (ச்ரத்தயா) சிரத்தையுடன் (அன்விதா:) கூடியவர்களாய் (யஜந்தே) பூஜிக்கின்ருர்களோ (தேஷாம்) அவர்களுடைய (நிஷ்டா) நிலே (கா) எவ் வகைத்து? (ஸத்வம்) ஸாத்விகமா (ரஜ:) ராஜஸமா (ஆஹோ) அல்லது (தம:) தாமஸமா?

கோவையும் அத்தியாயத்தின் பெயரும்:—

16-வது அத்தியாயத்தின் முடிவில் காமம், குரோதம், லோபம் இம்மூன்றுமே நரக வாயில்கள் என்றும் விவேகியானவன் அவ் வழியை எட்டிக்கூடப் பார்க்கக்கூடாதென்றும், நெறி தவருமல் மனத்தை நிறுத்துதற்குச் சிறந்த வழி சாஸ்திரத்தைப் பின்பற்று தலே என்றும், அங்ஙனம் செய்யாமல் காமக் குரோத வசத்தால் சாஸ்திரத்தை மீறி மனம் போனபடி நடத்தலால் இங்கும் சுகமில்லே அங்கும் நற்கதி இல்லே என்றும் கூறப்பட்டது.

ஆகையால் செய்யத்தக்கதைச் செய்தற்கும் செய்யத் தகா ததை விடுத்தற்கும் ஸாதகனுக்குச் சாஸ்திரமே பிரமாணம் என்பது

श्रीभगवानुवाच—

त्रिविधा भवति श्रद्धा देहिनां सा स्वभावजा ।
सात्त्विकी राजसी चैव तामसी चेति तां शृणु ॥ २ ॥ ॥५९६॥

ஸ்ரீ பகவானுவாச—

த்ரிவிதா பவதி ச்ரத்தா தேஹிநாம் ஸா ஸ்வபாவஜா |
ஸாத்விகீ ராஜஸீ சைவ தாமஸீ சேதி தாம் ச்ருணு ||2||

ஸ்ரீ பகவான் கூறியது—

2. (ஸா) அந்த (ஸ்வபாவஜா) இயற்கையாக உண்டான—சாஸ்திர ஸ்ம்ஸ்காரமில்லாத—(ச்ரத்தா) சிரத்தையானது (தேஹிநாம்) மனிதர்க்கு (ஸாத்விகீ ராஜஸீ ச ஏவ தாமஸீ ச இதி) ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று(த்ரிவிதா) மூவகையாக (பவதி) உளது. (தாம்) அவற்றை (ச்ருணு) கேள்.

முடிவு. இதைக் கேட்டஅர்ஜுனன் மனத்தில் ஒரு சந்தேகம் நிகழ்கின்றது : சாஸ்திரத்தை உணராத நிலையில் ஒருவன் அன்புடனும் சிரத்தையுடனும் ஒரு கருமத்தைச் செய்வானேயாயின் அதுவும் சாஸ்திரத்தை மீறிய குற்றத்துக்குள்ளாகுமா ? இல்லையெனில் எவ்வாறான பலனையளிக்கும் என்பதே. சாஸ்திரத்துக்குட்படாத கருமங்களில் ஏற்படும் சிரத்தையும் இயற்கையாகவே முக்குணங்களையனுசரித்து மூவகைப்படும் என்று கூறி யக்ஞம், தானம், தவம் இவற்றின் பாகுபாடுகளைப் பகவான் மீண்டும் இவ்வத்தியாயத்தில் விளக்கிக் காட்டுகிறார். இக்காரணத்தால் இவ்வத்தியாயம் "ச்ரத்தாத்ரய விபாகயோகம்" எனப்படும்.

மறைபொருந் தாதவைவல் லசுரர்க்கு வகுத்தமையும்
மறைபொருந்தும் நிலையும்வண் குணப்படி மூவகையும்
மறைநிலைதன் னைவகுக்கும் குறிமூன்றின் மேன்மையையும்
மறையுமிழ்ந் தானுரைத்தான் வாசவன்றன் சிறுவனுக்கே.

(கீ. ஸ.)

2. ஒ—'மந்த்ரே தீர்த்தே த்விஜே தேவே தைவஜ்ஞே பேஷஜே குரௌ | யாத்ருசீ பாவனா யஸ்ய ஸித்திர்ப் பவதி தாத்ருசீ ||'

सत्त्वानुरूपा सर्वस्य श्रद्धा भवति भारत ।
श्रद्धा-मयोऽयं पुरुषो यो यच्छ्रद्धः स एव सः ॥ ३ ॥ ॥५९७॥

यजन्ते सात्त्विका देवान् यक्ष-रक्षांसि राजसाः ।
प्रेतान् भूतगणांश्चान्ये यजन्ते तामसा जनाः ॥ ४ ॥ ॥५९८॥

ஸத்வானுரூபா ஸர்வஸ்ய ச்ரத்தா பவதி பாரத |
ச்ரத்தா-மயோऽயம் புருஷோ யோ யச்ச்ரத்த: ஸ ஏவ ஸ:
|| 3 || (597)
யஜந்தே ஸாத்விகா தேவான் யக்ஷ-ரக்ஷாம்ஸி ராஜஸா:|
ப்ரேதான் பூதகணும்ச்சான்யே யஜந்தே தாமஸா ஜனு:
|| 4 || (598)

---

3. (பாரத) அர்ஜுனு! (ஸர்வஸ்ய) ஒவ்வொருவருடைய (ச்ரத்தா) சிரத்தையும் (ஸத்வானுரூபா) அவரவர் உள்ளத்திற்குத் தக்கபடி (பவதி) இருக்கும். (அயம் புருஷ:) இந்த ஜீவன் (ச்ரத்தாமய:) சிரத்தையே வடிவாய்க் கொண்டவன். (ய:) எவன் (யச்ச்ரத்த:) எவ்வகைச் சிரத்தை உடையவனே (ஸ:) அவன் (ஸ: ஏவ) அவ்வகையானவனே.

4. (ஸாத்விகா:) ஸாத்விகர்கள் (தேவான்) தேவர்களேயும் (ராஜஸா:) ராஜஸிகர்கள் (யக்ஷரக்ஷாம்ஸி) யக்ஷர்களேயும் ராக்ஷஸர்களேயும், (அன்யே) மிக்கோர்—(தாமஸா: ஜனு:) தாமஸிக ஜனங்கள்—(ப்ரேதான்) பிரேதங்களேயும் (பூதகணுன் ச) பூதகணங்களேயும் (யஜந்தே) பூஜிக்கின்றுர்கள்.

---

3. சாஸ்திரம் குணக்கட்டினின்று விடுவிக்கும். ஸ்வபாவம் குணத்தை யனுசரிக்கும்.

4. ஒ—கீ. 7. 20.

अशास्त्र-विहितं घोरं तप्यन्ते ये तपो जनाः ।
दम्भाहङ्कार-संयुक्ताः काम-राग-बलान्विताः ॥ ५ ॥ ॥५९९॥
कर्शयन्तः शरीरस्थं भूत-ग्राम-मचेतसः ।
मां चैवान्तः-शरीरस्थं तान्विद्ध्यासुर-निश्चयान् ॥ ६ ॥ ॥६००॥
आहारस्त्वपि सर्वस्य त्रिविधो भवति प्रियः ।
यज्ञ-स्तप-स्तथा दानं तेषां भेद-मिमं शृणु ॥ ७ ॥ ॥६०१॥

அசாஸ்த்ர-விஹிதம் கோரம் தப்யந்தே யே தபோ ஜனா:|
த்ம்பாஹங்கார-ஸம்யுக்தா: காம-ராக-பலான்விதா:||5||
கர்சயந்த: சரீரஸ்தம் பூத-க்ராம-மசேதஸ:|
மாஞ் சைவாந்த:-சரீரஸ்தம் தான் வித்த்யாஸுர-
நிச்சயான் || 6 || (600)
ஆஹாரஸ்த்வபி ஸர்வஸ்ய த்ரிவிதோ பவதி ப்ரிய: |
யஜ்ஞஸ்-தபஸ்-ததா தானம் தேஷாம் பேத-மிமம்
ச்ருணு || 7 || (601)

5-6. (தம்பாஹங்கார ஸம்யுக்தா:) இடம்பமும் அஹங்காரமும் மிக்கோரும், (காமராகபலான்விதா:) காமமும் பற்றும் தடித்தவரும் ஆகிய (யே) எந்த (அசேதஸ: ஜனா:) மதியீனர்களாகிய ஜனங்கள் (சரீரஸ்தம்) உடலிலுள்ள (பூதக்ராமம்) இந்திரியங்களையும் (அந்த: சரீரஸ்தம்) உடலுக்குள்ளே உறையும் (மாஞ் ச ஏவ) என்னையும் (கர்சயந்த;) வருத்தி (அசாஸ்த்ரவிஹிதம்) சாஸ்திரத்தில் கூறப் படாத (கோரம்) கொடுமையான (தப:) தவத்தை (தப்யந்தே) செய்கிறார்களோ, (தான்) அவர்களை (ஆஸுரநிச்சயான்) அசுரவழியில் துணிந்தவர்களாய் (வித்தி) அறி.

7. (ஸர்வஸ்ய) ஒவ்வொருவருக்கும் (ப்ரிய:) பிரியமான (ஆஹார து அபி) உணவுங்கூட (த்ரிவித:)

आयुः-सत्त्व-बलारोग्य-सुख-प्रीति-विवर्धनाः ।
रस्याः स्निग्धाः स्थिरा हृद्या आहाराः सात्त्विक-प्रियाः ॥ ८ ॥
कट्वम्ल-लवणात्युष्ण-तीक्ष्ण-रूक्ष-विदाहिनः ।
आहारा राजसस्येष्टा दुःख-शोकामय-प्रदाः ॥ ९ ॥ ॥६०३॥

ஆயு:ஸத்வ-பலாரோக்ய-ஸுக-ப்ரீதி-விவர்த்தனு: |
ரஸ்யா: ஸ்நிக்தா: ஸ்திரா ஹ்ருத்யா ஆஹாரா:
ஸாத்விக-ப்ரியா: || 8 ||
கட்வம்ல-லவணுத்யுஷ்ண-தீக்ஷ்ண-ரூக்ஷ-விதாஹின: |
ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா து:க்க-சோகாமய-ப்ரதா:
|| 9 || (603)

மூவகையாக (பவதி) உளது; (ததா) அவ்வாறே (யஜ்ஞ:) யஜ்ஞமும் (தப:) தவமும் (தானஞ் ச) தானமும்; (தேஷாம்) அவற்றுள் உள்ள (இமம் பேதம்) இந்த பேதத்தை (ச்ருணு) கேள்.

8. (ஆயு: ஸத்வ பலாரோக்ய ஸுகப்ரீதி விவர்த்தனு:) ஆயுள், புத்தி, பலம், ஆரோக்கியம், சுகம், விருப்பம் இவற்றை வளர்ப்பனவும், (ரஸ்யா:) ரஸமுடையனவும், (ஸ்நிக்தா:) பசையுடையனவும், (ஸ்திரா:) உரமுடையனவும் (ஹ்ருத்யா:) இன்பமளிப்பனவும் ஆன (ஆஹாரா:) உணவுகள் (ஸாத்விகப்ரியா:) ஸாத்விகர்களுக்கு ப்ரியமானவை.

9. (கடு - அம்ல - லவண - அத்யுஷ்ண-தீக்ஷ்ண-ரூக்ஷ-விதாஹின:) கசப்பு, புளிப்பு, உப்பு, கடுஞ்சூடு, காரம், உவர்ப்பு, எரிப்பு முதலிய குணங்களுடைய

---

9. **உப்பு**—விரத காலங்களில் உப்பு விலக்கு. மற்றக் காலங்களில் ருசிக்காக உப்பு அனுமதிக்கப்படும். உப்பு ஸ்வருபத்தால் ஆஹாரமல்ல. பிரத்தியக்ஷமாய் ஸாத்விக ஆஹாரத்தில் உப்பைச் சேர்த்துக்கொள்வது கோமாம்ஸத்துக்குச் சமம் என்று சாஸ்திரங் கூறும்.

यात-यामं गतरसं पूति पर्युषितं च यत् ।
उच्छिष्टमपि चामेध्यं भोजनं तामस-प्रियम् ॥ १० ॥ ॥६०४॥
अफलाकाङ्क्षिभि-र्यज्ञो विधि-दृष्टो य इज्यते ।
यष्टव्य-मेवेति मनः समाधाय स सात्त्विकः ॥ ११ ॥ ॥६०५॥

யாத-யாமங் கதரஸம் பூதி பர்யுஷிதஞ் ச யத் |
உச்சிஷ்டமபி சாமேத்யம் போஜனம் தாமஸ-ப்ரியம்
|| 10 || (604)
அபலாகாங்க்ஷிபிர்-யஜ்ஞோ விதி-த்ருஷ்டோ ய
இஜ்யதே |
யஷ்டவ்ய-மேவேதி மன: ஸமாதாய ஸ ஸாத்விக:
|| 11 || (605)

னவும் (து:க்க சோக ஆமய ப்ரதா:) துன்பம், துயர், பிணி இவற்றைத் தருவனவுமாகிய (ஆஹாரா:) உணவுகள் (ராஜஸஸ்ய) ராஜஸிகர்களுக்கு (இஷ்டா:) பிரியமானவை.

10. (யாதயாமம்) சமைத்து ஆறிப்போனதும் (கதரஸம்) சுவையிழந்ததும் (பூதி) புளித்துப் போனதும் (பர்யுஷிதம் ச) பழையதும் (உச்சிஷ்டம் அபி) உண்டு மிகுந்ததும் (அமேத்யஞ்ச) பூஜைக்குதவாததும் ஆன (போஜனம்) உணவு (யத்) எதுவோ—அது—(தாமஸ ப்ரியம்) தாமஸிகர்களுக்குப் பிரியமானது.

11. (அபலாகாங்க்ஷிபி:) பயனை விரும்பாதவர் களால் (யஷ்டவ்யம் ஏவ இதி) செய்ய வேண்டியது கடமை என்று மட்டும் (மன:) மனத்தை (ஸமாதாய) நிலை நிறுத்தி (விதித்ருஷ்ட:) சாஸ்திர முறைப்படி (ய: யஜ்ஞ:) எந்த யஜ்ஞமானது (இஜ்யதே) செய்யப் படுகிறதோ (ஸ:) அது (ஸாத்விக:) ஸாத்விகமாகும்.

---

10. பூதி—கள் போன்று புளித்துப் பொங்கியது.
அமேத்யம்—ஒ—கீ. 3. 13.

अभिसंधाय तु फलं दम्भार्थमपि चैव यत् ।
इज्यते भरतश्रेष्ठ तं यज्ञं विद्धि राजसम् ॥ १२ ॥ ॥ ६०६ ॥
विधिहीन-मसृष्टान्नं मन्त्रहीन-मदक्षिणम् ।
श्रद्धा विरहितं यज्ञं तामसं परिचक्षते ॥ १३ ॥ ॥ ६०७ ॥
देव-द्विज-गुरु-प्राज्ञ-पूजनं शौच-मार्जवम् ।
ब्रह्मचर्य-महिंसा च शारीरं तप उच्यते ॥ १४ ॥ ॥ ६०८ ॥

அபிஸந்தாய து பலம் தம்பார்த்தமபி சைவ யத் |
இஜ்யதே பரதச்ரேஷ்ட தம் யஜ்ஞும் வித்தி ராஜஸம்
|| 12 || (606)
விதி-ஹீன-மஸ்ருஷ்டான்னம் மந்த்ரஹீன-மதக்ஷிணம் |
ச்ரத்தா-விரஹிதம் யஜ்ஞும் தாமஸம் பரிசக்ஷதே || 13 ||
தேவ-த்விஜ-குரு-ப்ராஜ்ஞ-பூஜனம் சௌச-மார்ஜவம் |
ப்ரஹ்மசர்ய-மஹிம்ஸா ச சாரீரம் தப உச்யதே || 14 ||

12. (பலம்) பயனை (அபிஸந்தாய து) அடைய விரும்பியோ (தம்பார்த்தம் அபி ஏவ ச) இடம்பத்திற்காகவோ (யத்) எந்த யஜ்ஞும் (இஜ்யதே) செய்யப்படுகிறதோ (பரதச்ரேஷ்ட) அர்ஜுனு ! (தம்) அந்த (யஜ்ஞும்) யஜ்ஞத்தை (ராஜஸம்) ராஜஸமானதாக (வித்தி) அறி.

13. (விதிஹீனம்) முறை தவறியதும் (அஸ்ருஷ்டான்னம்) அன்னதானமில்லாததும் (மந்த்ரஹீனம்) மந்திரங்கள் குறைவு பட்டதும் (அதக்ஷிணம்) தக்ஷிணையில்லாததும் (ச்ரத்தாவிரஹிதம்) சிரத்தையில்லாததும் ஆகிய யஜ்ஞும் (தாமஸம்) தாமஸிகம் என்று (பரிசக்ஷதே) கூறப்படும்.

14. (தேவ த்விஜ குரு ப்ராஜ்ஞ பூஜனம்) தேவர்கள், பிராம்மணர், குரு, அறிவின் மிக்கோர் இவர்

12. ‘தம்பார்த்தமபி சைவ ய:’ (பா. பே.)

अनुद्वेगकरं वाक्यं सत्यं प्रियहितं च यत् ।
स्वाध्यायाभ्यसनं चैव वाङ्मयं तप उच्यते ॥१५॥ ॥६०९॥
मनः-प्रसादः सौम्यत्वं मौन-मात्मविनिग्रहः ।
भावसंशुद्धि-रित्येत-त्तपो मानस-मुच्यते ॥ १६ ॥ ॥ ६१० ॥

அனுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதஞ் ச யத் |
ஸ்வாத்யாயாப்யஸனஞ் சைவ வாங்மயம் தப உச்யதே
|| 15 || (609)
மன:-ப்ரஸாத: ஸௌம்யத்வம் மௌன-மாத்ம
விநிக்ரஹ: |
பாவஸம்சுத்தி-ரித்யேதத்-தபோ மானஸ-முச்யதே ||16||

களுடைய பூஜையும் (**சௌசம்**) சுத்தமும் (ஆர்ஜவம்) நேர்மையும (**ப்ரஹ்ம**சர்யம்) பிரம்மசரியமும்(அஹிம்ஸா ச) அஹிம்ஸையும் (சாரீரம் தப:) சரீர சம்பந்தமான தவம் என்று (உச்யதே) கூறப்படும்.

15. (அனுத்வேககரம்) கடுமையில்லாததும் (ஸத்யம்) உண்மையானதும் (ப்ரிய ஹிதஞ் ச) பிரியமானதும் நன்மையைக் கருதுவதுமான (வாக்யம்) வார்த்தை (யத்) எதுவோ-அதுவும்-(ஸ்வாத்யாயாப்யஸனம் ச ஏவ) தமக்குரிய வேத நூல் ஓதும் பழக்கமும் (வாங்மயம் தப:) வாக்காற் செய்யும் தவம் என்று (உச்யதே) கூறப்படும்.

16. (மன: ப்ரஸாத:) மனத்தின் தெளிவு, (ஸௌம்யத்வம்) அன்புடைமை (மௌனம்) மௌனம்,

---

14. நேர்மை—எண்ணத்தையொத்த வாக்கும் செயலும்.
—ராமானுஜர்

15. ஸ்வாத்யாயாப்யஸனம்—
ஒ. வேதஸ்வீகரணம் பூர்வம் விசாரோऽப்யஸனஞ் ஜப: |
தத்தானஞ் சைவ சிஷ்யேப்யோ வேதாப்யாஸோ ஹி
பஞ்சதா ||—(மிதாக்ஷரீ)

16. பாவஸம்சுத்தி—
ஒ. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன். —(குறள்)

श्रद्धया परया तप्तं तप-स्तत्त्रिविधं नरैः ।
अफलाकाङ्क्षिभि र्युक्तैः सात्त्विकं परिचक्षते ॥ १७ ॥ ॥६११॥
सत्कार-मान-पूजार्थं तपो दम्भेन चैव यत् ।
क्रियते तदिह प्रोक्तं राजसं चल-मध्रुवम् ॥ १८ ॥ ॥६१२॥

ச்ரத்தயா பரயா தப்தம் தபஸ்தத் த்ரிவிதம் நரை: |
அபலாகாங்க்ஷிபிர்-யுக்தை:ஸாத்விகம் பரிசக்ஷதே ||17||
ஸத்கார-மான-பூஜார்த்தம் தபோ தம்பேன சைவ யத் |
க்ரியதே ததிஹ ப்ரோக்தம் ராஜஸஞ் சல-மத்ருவம்
|| 18 || (612)

(ஆத்மவிநிக்ரஹ:) தன்னடக்கம் (பாவ ஸம்சுத்தி:) பரி சுத்தமான நோக்கம் (இதி ஏதத்) என்ற இது (மான ஸம தப:) மனத்தாற் செய்யும் தவம் என்று (உச்யதே) கூறப்படும்.

17. (அபலாகாங்க்ஷிபி:) பயனில் இச்சை வையா தவர்களும் (யுக்தை:) திடசித்தமுடையவர்களும் ஆகிய (நரை:) மனிதர்களால் (பரயா ச்ரத்தயா) உயர்ந்த சிரத்தையுடன் (தப்தம் தத் தப:) செய்யப் பட்ட மேற்கூறியவாருன தவம் (த்ரிவிதம்)—காயிகம் வாசிகம் மானஸம்—மூவகையானதும் (ஸாத்விகம்) ஸாத்விகமானதென்று (பரிசக்ஷதே)—பெரியோர்கள் கூறுவார்கள்.

18. (ஸத்காரமான-பூஜார்த்தம்) உபசாரம், வெகு மானம், பூஜை இவற்றைக் கருதி (தம்பேன ச ஏவ) இடம்பத்துடனே (யத் தப:) எந்தத் தவம் (க்ரியதே) செய்யப்படுகிறதோ (தத்) அது (இஹ) இங்கே (சலம்)

---

18. உபசாரம்—செய்கையால்: வெகுமானம், வாக்கால்: பூஜை, மனத்தால்.

தவம்—ஒ—உற்ற நோய்நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. (குறள்.)

मूढग्राहेणात्मनो यत्पीडया क्रियते तपः ।
परस्योत्सादनार्थं वा तत्तामस-मुदाहृतम् ॥ १९ ॥ ॥६१३॥

दातव्यमिति यद्दानं दीयतेऽनुपकारिणे ।
देशे काले च पात्रे च तद्दानं सात्त्विकं स्मृतम् ॥ २० ॥

மூடக்ராஹேணாத்மனோ யத்-பீடயா க்ரியதே தப: |
பரஸ்யோத்ஸாதனார்த்தம் வா தத்தாமஸ-முதாஹ்ருதம் || 19 || (613)

தாதவ்யமிதி யத்தானம் தீயதே஽னுபகாரிணே |
தேசே காலே ச பாத்ரே ச தத்தானம் ஸாத்விகம் ஸ்ம்ருதம் || 20 ||

நிலையற்றது (அத்ருவம்) நீடித்து நில்லாதது; (ராஜஸம்) ராஜஸம் என்று (ப்ரோக்தம்) கூறப்படும்.

19. (மூடக்ராஹேண) முரட்டுப் பிடிவாதத்தால் (ஆத்மன: பீடயா) தன்னைப் பீடித்துக்கொண்டோ (பரஸ்ய உத்ஸாதனார்த்தம் வா) பிறர் நாசத்தைக் கருதியோ (யத் தப:) எந்தத் தவம் (க்ரியதே) செய்யப் படுகிறதோ (தத்) அது (தாமஸம்) என்று (உதாஹ்ருதம்) கூறப்படுகிறது.

20. (தேசே) தகுதியான இடத்திலும் (காலே ச) தகுதியான காலத்திலும் (பாத்ரே ச) தகுதியுள்ளவர்க்கும் (தாதவ்யம் இதி) கொடுப்பது கடமை என்று (அனுபகாரிணே) உபகாரம் செயயாத ஒருவருக்கு (யத் தானம்) எந்த தானம் (தீயதே) கொடுக்கப்படுகிறதோ (தத் தானம்) அந்த தானம் (ஸாத்விகம் ஸ்ம்ருதம்) ஸாத்விகம் என்று கருதப்படும்.

---

20. தானம்—ஒ—வறியார்க் கொன்றீவதே ஈகை;
மற்றெல்லாம் குறி எதிர்ப்பை நீர துடைத்து. (குறள்.)

यत्तु प्रत्युपकारार्थं फल-मुद्दिश्य वा पुनः ।
दीयते च परिक्लिष्टं तद्दानं राजसं स्मृतम् ॥ २१ ॥ ॥ ६१५ ॥

अदेशकाले यद्दान-मपात्रेभ्यश्च दीयते ।
असत्कृत-मवज्ञातं तत्तामस-मुदाहृतम् ॥ २२ ॥ ॥ ६१६ ॥

யத்து ப்ரத்யுபகாரார்த்தம் பல-முத்திச்ய வா புன: |
தீயதே ச பரிக்லிஷ்டம் தத்தானம் ராஜஸம் ஸ்ம்ருதம்
|| 21 || (615)

அதேசகாலே யத்தான-மபாத்ரேப்யச்ச தீயதே |
அஸத்க்ருத-மவஜ்ஞாதம் தத்தாமஸ-முதாஹ்ருதம்
|| 22 || (616)

---

21. (யத்) எது (ப்ரத்யுபகாரார்த்தம் து) பிரதியுபகாரத்தைக் கருதியோ, (பலஞ் ச) பயனை (உத்திச்ய வா) கருதியோ, (புன:) தவிர (பரிக்லிஷ்டம்) மன வருத்தத்துடன் (தீயதே) கொடுக்கப்படுகிறதோ (தத் தானம்) அந்த தானம் (ராஜஸம்) ராஜஸம் என்று (ஸ்ம்ருதம்) கூறப்படும்.

22. (அதேச காலே) தகுதியற்ற இடத்திலுங் காலத்திலும் (அபாத்ரேப்யச்ச) தகுதியற்றவர்களுக்கும் (அஸத்க்ருதம்) பூஜையின்றி (அவஜ்ஞாதம்) அவமானப்படுத்தி (யத் தானம்) எந்த தானம் (தீயதே) கொடுக்கப்படுகிறதோ (தத்) அது (தாமஸம்) தாமஸம் என்று (உதாஹ்ருதம்) கூறப்படும்.

---

22. தகுதியற்றவர்கள்—மூடர், திருடர், கெட்ட நடத்தையுடையோர்.

ओं तत्सदिति निर्देशो ब्रह्मण-स्त्रिविधः स्मृतः ।
ब्राह्मणा-स्तेन वेदाश्च यज्ञाश्च विहिताः पुरा ॥ २३ ॥ ॥६१७॥

तस्मा-दोमित्युदाहृत्य यज्ञ-दान-तपः-क्रियाः ।
प्रवर्तन्ते विधानोक्ताः सततं ब्रह्मवादिनाम् ॥ २४ ॥ ॥६१८॥

ஓம் தத் ஸதிதி நிர்த்தேசோ ப்ரஹ்மணஸ்-த்ரிவித:
ஸ்ம்ருத: |
ப்ராஹ்மணுஸ்-தேன வேதாச்ச யஜ்ஞாச்ச விஹிதா:
புரா || 23 || (617)
தஸ்மா-தோமித்-யுதாஹ்ருத்ய யஜ்ஞ-தான-தப-க்ரியா:|
ப்ரவர்த்தந்தே விதானேக்தா: ஸததம் ப்ரஹ்ம-
வாதிஞம் || 24 || (618)

---

23. (ஓம் தத் ஸத் இதி) ஓம் தத் ஸத் என்று (ப்ரஹ்மண:) பிரம்மத்திற்கு (த்ரிவித:) மூவகையான (நிர்த்தேச:) குறிப்புப் பெயர் (ஸ்ம்ருத:) கூறப்பட்டுள்ளது. (தேன) அதனுல் (புரா) ஆதியில் (ப்ராஹ்மணு:) பிராம்மணர்களும் (வேதா: ச) வேதங்களும் (யஜ்ஞா: ச) யஜ்ஞங்களும் (விஹிதா:) சிருஷ்டிக்கப்பட்டன.

24. (தஸ்மாத்) ஆகையால் (ஓம் இதி) ஓம் என்று (உதாஹ்ருத்ய) உச்சரித்து (ப்ரஹ்மவாதிஞம்) வேதியர்களின் (விதானேக்தா: யஜ்ஞதான தபக்ரியா:) சாஸ்திரோக்தமான யஜ்ஞம் தானம் தவம் முதலிய கருமங்கள் (ஸததம்) எப்போதும் (ப்ரவர்த்தந்தே) ஆரம்பிக்கின்றன.

तदित्यनभिसंधाय फलं यज्ञतपः-क्रियाः ।
दान-क्रियाश्च विविधाः क्रियन्ते मोक्ष-काङ्क्षिभिः ॥ २५ ॥

सद्भावे साधु-भावे च सदित्येतत् प्रयुज्यते ।
प्रशस्ते कर्मणि तथा सच्छब्दः पार्थ युज्यते ॥ २६ ॥६२०॥

ததித்யனபிஸந்தாய பலம் யஜ்ஞதப:-க்ரியா: |
தான-க்ரியாச்ச விவிதா: க்ரியந்தே மோக்ஷ-காங்க்ஷிபி:
|| 25 || (619)

ஸத்பாவே ஸாதுபாவே ச ஸதித்யேதத் ப்ரயுஜ்யதே |
ப்ரசஸ்தே கர்மணி ததா ஸச்சப்த: பார்த்த யுஜ்யதே
|| 26 || (620)

---

25. (தத் இதி) 'தத்' என்ற பரம்பொருளைக் கருதி (பலம்) பயனை (அனபிஸந்தாய) கருதாது (மோக்ஷகாங்க்ஷிபி:) மோக்ஷத்தை விரும்புவோரால் (விவிதா:) பலவகைப்பட்ட (யஜ்ஞதப: க்ரியா:) வேள்விக் கிரியைகளும் தவக்கிரியைகளும் (தானக்ரியா: ச) தானக் கிரியைகளும் (க்ரியந்தே) செய்யப்படுகின்றன.

26. (பார்த்த) அர்ஜுனா! (ஸத்பாவே) உள்ளது என்ற பாவனையிலும் (ஸாது பாவே ச) நல்லது என்ற பாவனையிலும் (ஸத் இதி ஏதத்) 'ஸத்' என்ற இச்சொல் (ப்ரயுஜ்யதே) உபயோகிக்கப்படுகின்றது. (ததா) அவ்வாறே (ப்ரசஸ்தே கர்மணி) சுப காரியங்களிலும் (ஸத் சப்த:) ஸத் என்னும் சொல் (யுஜ்யதே) உபயோகிக்கப்படுகின்றது.

यज्ञे तपसि दाने च स्थितिः सदिति चोच्यते ।
कर्म चैव तदर्थीयं सदित्येवाभिधीयते ॥ २७ ॥ ॥ ६२१ ॥
अश्रद्धया हुतं दत्तं तपस्तप्तं कृतं च यत् ।
असदित्युच्यते पार्थ न च तत्प्रेत्य नो इह ॥ २८ ॥ ॥६२२॥

யஜ்ஞே தபஸி தானே ச ஸ்திதி: ஸதிதி சோச்யதே |
கர்ம சைவ ததர்த்தீயம் ஸதித்யேவாபிதீயதே
|| 27 || (621)

அச்ரத்தயா ஹுதந் தத்தம் தபஸ்தப்தம் க்ருதஞ் ச யத் |
அஸதித்யுச்யதே பார்த்த ந ச தத ப்ரேத்ய நோ இஹ
|| 28 || (622)

---

27. (யஜ்ஞே) வேள்வியிலும் (தபஸி) தவத்திலும் (தானே ச) தானத்திலும் (ஸ்திதி:) நிலைபெறுதல் (ஸத் இதி) 'ஸத்' என்று (உச்யதே) கூறப்படும். (ச) மேலும், (ததர்த்தீயம் கர்ம ச ஏவ) அதற்கான எக்கருமமும் (ஸத் இதி ஏவ) 'ஸத்' என்றே (அபிதீயதே) கூறப்படும்.

28. (அச்ரத்தயா) சிரத்தையின்றி (ஹுதம்) செய்யப்பட்ட ஹோமமும், (தத்தம்) கொடுபட்ட தானமும் (தப்தம் தப:) செய்யப்பட்ட தவமும் (க்ருதம் ச)

---

27. குணக்குறை வுடையதாயினும் ஈசுவரார்ப்பணமாகவும் சிரத்தையுடனும செய்யப்படுங் காரியம் குணபூர்த்தியுடையதாகவும் ஸாத்விகமாகவும் மதிக்கப்படும்.

ஒ—கண்ணப்ப நாயனர் செய்த பூஜை.

காப்பதோர் வில்லுமம்புங் கையுடை யிறைச்சிப்பாரந்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலசமாட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிந் ரொழுகத்தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கைவீ ரட்டனரே.

(தேவாரம்.)

ஒ—'மார்க்காவர்த்தித பாதுகா' (சிவானந்தலஹரீ 63.)

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे
श्रीकृष्णार्जुनसंवादे श्रद्धात्रयविभागयोगो नाम
सप्तदशोऽध्यायः ॥

இதி ஸ்ரீமத் பகவத்கீதாஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்
யாயாம் யோகசாஸ்த்ரே ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன
ஸம்வாதே ச்ரத்தாத்ரயவிபாகயோகோ நாம
ஸப்ததசோऽத்யாய: ||

அனுஷ்டிக்கப்பட்ட கருமமும் (யத்) எதுவோ அது (அஸத் இதி) அஸத் என்று (உச்யதே) கூறப்படும். (பார்த்த) அர்ஜுனா! (தத்) அது (ப்ரேத்ய) வேறுலகு சென்றபின் (ந ச) பயன்படாது; (இஹ) இவ்வுலகிலும் (ந) பயன்படாது.

இங்ஙனம் பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திர
மாயும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும்
ஸம்பாஷணையாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத்கீதை
என்னும் உபநிஷத்தில் ச்ரத்தாத்ரயவிபாகயோகம்
என்று பெயர் பெற்ற பதினேழாம்
அத்தியாயம் முற்றும்.

அத்தியாய விஷயச் சுருக்கம் :—

சாஸ்திர விதியை அறியாமையால் அதினின்று விலகியவர்கள் உள்ளன்புடன் செய்யுங் கருமத்தின் பலன் எவ்வகைத்து என்று அர்ஜுனன் வினவுதல்.

சாஸ்திரத்தின் விதி விலக்குகளின்படி நடவாதவன் தன் இயற்கைப்படி நடப்பான் எனவும், இயற்கை ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என ஏற்கெனவே கூறியபடி மூவகைப்படுவதால் அவர்கள் தொழிலில் உள்ள சிரத்தையும் அவற்றின் பயனும் அவ்வாருகவே ஏற்படும் எனவும் பகவான் கூறுதல். உணவு, வேள்வி, தானம், தவம் முதலிய கருமங்கள் எவ்வாறு மூவகையாம் என விளக்கிக் கூறுதல்.

ஓம் தத் ஸத் எனும் சொற்களின் பெருமையைக் கூறுதல், வேள்வி, தவம், தானம் இவற்றிற்கு அனுசரணீயாகச் செய்யப்படுங் கருமம எல்லாம் சாஸ்திரத்திற் கூறப்படாததாயினும் ஸத் (நல்லது) என்றே கருதப்படும். அவ்வாறின்றி அசிரத்தையுடன் செய்யப்படுங் கருமம் சாஸ்திர விதிப்படி யமைந்த வேள்வியுந் தானமும் தவமும் ஆயினும் அஸத் (தீயது) ; அது இங்கேயே ஒரு நன்மையையும் பயக்காதபோது வேறுலகில் என்ன நன்மையைத் தரப் போகின்றது ?

சிரத்தை தவம் வேள்விஉணு செப்பிய ஒவ்வொன்றும்
இருத்துகுணத் தால்மூன்றும் என்றும்— கருத்துயரும்
ஓம்தத்ஸத் என்னும் உரைப்பொருளும் உற்றுரைப்பான்
பூந்துளவத் தாரன் அருள் பூண்டு. (கீ.வெ.)

॥ अष्टादशोऽध्यायः ॥

(मोक्षसन्न्यासयोगः)

अर्जुन उवाच—

सन्न्यासस्य महाबाहो तत्त्व-मिच्छामि वेदितुम् ।
त्यागस्य च हृषीकेश पृथ-क्केशिनिषूदन ॥ १ ॥ ॥ ६२३ ॥

பதினெட்டாம் அத்தியாயம்

(மோக்ஷஸங்ந்யாஸ யோகம்)

அர்ஜுன உவாச—
ஸங்ந்யாஸஸ்ய மஹாபாஹோ தத்வமிச்சாமி வேதிதும்|
த்யாகஸ்ய ச ஹ்ருஷீகேச ப்ருதக் கேசிநிஷூதன
|| 1 || (623)

அர்ஜுனன் கூறியது—

1. (ஹ்ருஷீகேச) கிருஷ்ணா! (மஹாபாஹோ) உயர் தோளா! (கேசிநிஷூதன) கேசியெனும் அசுரனை மாய்த்தவனே! (ஸங்ந்யாஸஸ்ய) ஸங்நியாஸத்தினுடைய (தத்வம்) மெய்ப்பொருளையும் (த்யாகஸ்ய ச) தியாகத்தினுடைய மெய்ப்பொருளையும் (ப்ருதக்) தனித்தனியே (வேதிதும்) அறிந்துகொள்ள (இச்சாமி) விருமபுகிறேன்.

கோவையும் அத்தியாயத்தின் பெயரும் :—

'ஸர்வங் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞானே பரிஸமாப்யதே' என்று அத். 4-ல் பகவான் உபதேசித்த வண்ணம் 'நைஷ்கர்ம்யஸித்தி' என்ற ஸங்ந்யாஸத்தின் மூலமாக அடையப்பெறும் மோக்ஷத்தை இவ்வத்தியாயங் கூறிக் கீதா சாஸ்திரத்தை உபஸம்ஹாரம் செய்வதால் இவ்வத்தியாயம் "மோக்ஷஸங்ந்யாஸ யோகம்" எனப் பெயர் பெற்றது.

சத்துவ வீடுடை நற்கரு மந்தா னுகந்தமையும்
சத்துவ முள்ளது தான்குறிக் கொள்வகை செய்தனவும்
சத்துவ நற்கிரி சைப்பய னுஞ்சர ணுகதியும்
சத்துவ மேதரு வானுரைத் தான்தனிப் பார்த்தனுக்கே (கீ.ஸ.)

श्री भगवानुवाच—
काम्यानां कर्मणां न्यासं सन्न्यासं कवयो विदुः ।
सर्वकर्म-फलत्यागं प्राहुस्त्यागं विचक्षणाः ॥ २ ॥ ॥६२४॥
त्याज्यं दोषव-दित्येके कर्म प्राहु-र्मनीषिणः ।
यज्ञ-दान-तपः कर्म न त्याज्य-मिति चापरे ॥ ३ ॥ ॥६२५॥

ஸ்ரீ பகவானுவாச—
காம்யானும் கர்மணும் ந்யாஸம் ஸந்ந்யாஸம் கவயோ விதுः ।
ஸர்வகர்ம-பலத்யாகம் ப்ராஹுஸ்-த்யாகம் விசக்ஷணு: ‖ 2 ‖ (624)
த்யாஜ்யம் தோஷவ-தித்யேகே கர்ம ப்ராஹுர்-மனீஷிண: ।
யஜ்ஞ-தான-தப: கர்ம ந த்யாஜ்ய-மிதி சாபரே ‖3‖ (625)

ஸ்ரீ பகவான் கூறியது—

2. (கவய:) ஞானிகள் (காம்யானும் கர்மணும்) காமிய கருமங்களின் (ந்யாஸம்) ஒழிவை (ஸந்ந்யாஸம்) ஸந்நியாஸம் என (விது:) கருதினர். (விசக்ஷணு:) ஆழ்ந்த விவேகிகள் (ஸர்வ கர்ம பலத்யாகம்)—நித்ய, நைமித்திக, காம்ய—எல்லாக் கருமங்களின் பலனை யும் விடுதல் (த்யாகம்) தியாகம் என (ப்ராஹு:) கூறினர்.

3. (ஏகே மநீஷிண:) சில புத்திமான்கள் (கர்ம) கருமமே (தோஷவத்) தீமையைப்போல் (த்யாஜ்யம் இதி) தள்ளத் தக்கது என்று (ப்ராஹு:) கூறினர். (அபரே ச) இன்னுஞ் சிலர் (யஜ்ஞதான தப: கர்ம) யஜ்ஞம், தானம், தவம் எனும் இக்கருமங்கள் (ந த்யாஜ்யம் இதி) விடத்தக்கவையன்று எனவும்—கூறினர்.

निश्चयं शृणु मे तत्र त्यागे भरतसत्तम ।
त्यागो हि पुरुषव्याघ्र त्रिविधः संप्रकीर्तितः ॥ ४ ॥ ॥ ६२६ ॥
यज्ञ-दान-तपः कर्म न त्याज्यं कार्यमेव तत् ।
यज्ञो दानं तपश्चैव पावनानि मनीषिणाम् ॥ ५ ॥ ॥६२७॥

நிச்சயம் ச்ருணு மே தத்ர த்யாகே பரதஸத்தம |
த்யாகோ ஹி புருஷவ்யாக்ர த்ரிவித: ஸம்ப்ரகீர்த்தித:
|| 4 || (626)
யஜ்ஞ-தான-தப: கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத் |
யஜ்ஞோ தானங் தபச்சைவ பாவனானி மனீஷிணாம்
|| 5 || (627)

---

4. (பரதஸத்தம) பரதசிரேஷ்டனே! (புருஷவ்யாக்ர) மனிதரிற் சிறந்தவனே! (தத்ர) அவ்விரண்டினுள் (த்யாகே) தியாகத்தைப்பற்றி (மே) எனது (நிச்சயம்) நிச்சயத்தை (ச்ருணு) கேள்; (த்யாக:) தியாகம் (த்ரிவித:) மூவகையென (ஸம்ப்ரகீர்த்தித: ஹி) கூறப்பட்டுள்ளது.

5. (யஜ்ஞ தான தப: கர்ம) யஜ்ஞ தான தவ வடிவமான கருமம் (ந த்யாஜ்யம்) விடத்தக்கதன்று; (தத்) அது (கார்யம் ஏவ) செய்யத்தகுந்ததே; (யஜ்ஞ: தானம் தப: ச ஏவ) யஜ்ஞமுந் தானமுந் தவமுமே (மனீஷிணாம்) விவேகிகளுக்கு (பாவனானி) பரிசுத்தம் அளிப்பவை.

5, ஒ. 'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு' —(குறள்.)
தன் உடல் வருந்தத் தனக்குத்தானே செய்துகொள்ளும் முதல் கடமை தவம். 'தவம் செய்வார் தம் கருமம் செய்வார்.'

एतान्यपि तु कर्माणि सङ्गं त्यक्त्वा फलानि च ।
कर्तव्यानीति मे पार्थ निश्चितं मतमुत्तमम् ॥ ६ ॥ ॥६२८॥
नियतस्य तु सन्न्यासः कर्मणो नोपपद्यते ।
मोहात् तस्य परित्याग-स्तामसः परिकीर्तितः ॥ ७ ॥ ॥६२९॥

ஏதான்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலானி ச|
கர்த்தவ்யானீதி மே பார்தத நிச்சிதம் மதமுத்தமம்
|| 6 || (628)
நியதஸ்ய து ஸந்ந்யாஸ: கர்மணோ நோபபத்யதே |
மோஹாத்-தஸ்ய பரித்யாகஸ்-தாமஸ: பரிகீர்த்தித:
|| 7 || (629)

---

6. (பாாத்த) பார்த்தா: (ஏதானி கர்மாணி அபி து) இக் கருமங்களும் இவை போன்ற ஏனைய நற் கருமங்களுங்கூட (ஸங்கம்) பற்றையும் (பலானி ச) பயன்களையும் (த்யக்த்வா) விட்டு (கர்த்தவ்யானி இதி) செய்தற்குரியன என்பது (மே) என்னுடைய (நிச்சிதம்) நிச்சயமும் (உத்தமம்) உத்தமும் ஆகிய (மதம்) கொள்கை.

7. (நியதஸ்ய கர்மண: து) நித்தியகருமத்தைக் கருதுமிடத்து (ஸந்ந்யாஸ:) ஸந்ந்யாஸம் (ந உபபத்யதே) பொருந்தாது. (மோஹாத்) மதிமயக்கத்தால் (தஸ்ய) அதன் (பரித்யாக:) ஸந்நியாஸம் (தாமஸ:) தாமஸம் என்று (பரிகீர்த்தித:) கூறப்பட்டுள்ளது.

பொருளால் பிறர்க்குச் செய்யும் உதவி தானம். உடலையும் உடைமையையும் பகவானுடைய சேவைக்கு உரித்தாக்குதல் யஜ்ஞம். 'யஜ்ஞ-தான-தப: கர்ம' என மூன்றும் ஒன்று பட்டது யோகம்.

6. யஜ்ஞம், தானம், தவம். மாத்ரு-பித்ரு-குருஸேவை முதலிய நற்கருமங்களுங்கூட அஹங்காரம், மமகாரம், பலனில் ஆசை இவற்றுடன் செய்யப் பட்டால், அவை மோக்ஷத்துக்கு வழியாகாமல் மீண்டும் பந்தத்துக்கே வழியாகும்.

दुःखमित्येव यत्कर्म कायक्लेश-भयात् त्यजेत् ।
स कृत्वा राजसं त्यागं नैव त्यागफलं लभेत् ॥ ८ ॥ ॥६३०॥
कार्यमित्येव यत्कर्म नियतं क्रियतेऽर्जुन ।
सङ्गं त्यक्त्वा फलं चैव स त्यागः सात्त्विको मतः ॥ ९ ॥

து:க்க-மித்யேவ யத்கர்ம காயக்லேசபயாத் த்யஜேத் |
ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாகபலம்
லபேத் || 8 || (630)
கார்ய-மித்யேவ யத்கர்ம நியதங் க்ரியதேऽர்ஜுன |
ஸங்கம் த்யக்த்வா பலஞ் சைவ ஸ த்யாக: ஸாத்விகோ
மதः || 9 || (631)

---

8. (து:க்கம் இதி ஏவ) துன்பம் என்று கருதியே (காயக்லேசபயாத்) மெய்வருத்தத்துக்கு அஞ்சி (யத் கர்ம) எந்தக் கருமத்தை (த்யஜேத்) ஒருவன் விடுகிருனே (ஸ:) அவன் (ராஜஸம்) ராஜஸமான (த்யாகம்) தியாகத்தை (க்ருத்வா) செய்து (த்யாகபலம்) தியாகப் பயனை (ந லபேத் ஏவ) அடையவேமாட்டான்.

9. (அர்ஜுன) அர்ஜுனு! (ஸங்கம்) பற்றையும் (பலஞ்ச ஏவ) பலனையும் (த்யக்த்வா) விட்டு (கார்யம் இதி ஏவ) செய்யத்தக்கது என்று மட்டும் (யத்) எந்த (நியதங் கர்ம) நித்தியகருமம் (க்ரியதே) செய்யப்படுகிறதோ (ஸ த்யாக:) அந்தத் தியாகம் (ஸாத்விக:) ஸாத்விகமானதென்று (மத:) கருதப்படும்.

---

9. விருப்பு வெறுப்பைப் பாராட்டாது வியாதி நீங்குதற்கு மருந்துண்பது போலக் கடமைகளைச் செய்தல்.

न द्वेष्टयकुशलं कर्म कुशले नानुषज्जते ।
त्यागी सत्त्व-समाविष्टो मेधावी छिन्नसंशयः ॥ १० ॥ ॥६३२॥
न हि देहभृता शक्यं त्यक्तुं कर्मा-ण्यशेषतः ।
यस्तु कर्मफलत्यागी स त्यागी-त्यभिधीयते ॥ ११ ॥ ॥६३३॥

ந த்வேஷ்ட்-யகுசலம் கர்ம குசலே நானுஷஜ்ஜதே |
த்யாகீ ஸத்வ-ஸமாவிஷ்டோ மேதாவீ ச்சின்னஸம்சய:
|| 10 || (632)
ந ஹி தேஹப்ருதா சக்யம் த்யக்தும் கர்மாண்-யசேஷத:|
யஸ்து கர்மபல-த்யாகீ ஸ த்யாகீத்-யபிதீயதே
|| 11 || (633)

10. (ஸத்வஸமாவிஷ்ட:) ஸத்வம் நிறைந்தவனும் (மேதாவீ) விவேகியும் (ச்சின்ன ஸம்சய:) சந்தேகந் தெளிந்தவனும் ஆகிய (த்யாகீ) தியாகி (அகுசலம் கர்ம) யஜ்ஞம் தானம் தவமல்லாத கருமங்களையும் (ந த்வேஷ்டி) வெறுப்பதில்லை ; (குசலே) யஜ்ஞ, தான, தவங்களிலும் (ந அனுஷஜ்ஜதே) அபிமானங் கொள்வதில்லை.

11. (தேஹப்ருதா) உடல் பற்றுடையவனால் (அசேஷத:) முற்றும் (கர்மாணி) கருமங்களை (த்யக்தும்) விடுதற்கு (ந ஹி சக்யம்) இயலாது ; (து) ஆயின் (ய:) எவன் (கர்மபலத்யாகீ) கருமபலனை விட்டவனோ (ஸ:) அவனே (த்யாகீ இதி) தியாகி என்று (அபிதீயதே) கூறப்படுகிறான்.

10. அகுசலம் கர்ம—நிஷித்த கர்மமும் காம்ய கர்மமும்—ஞானி இவற்றை விடுதல் துவேஷ புத்தியாலன்று ; நித்திய கர்மாவைச் செய்தல் அவற்றில் பற்றினாலும் அன்று ; லோகஸங்க்ரஹத்திற்காகவே ஞானி கருமஞ் செய்கிறான்.

ஒ—வேண்டுதல் வேண்டாமை யிலான்அடி சேர்ந்தார்க்(கு)
யாண்டும் இடும்பை இல. (குறள்.)

நானுஷஜ்யதே. (பா. பே.)

अनिष्ट-मिष्टं मिश्रं च त्रिविधं कर्मणः फलम् ।
भव-त्यत्यागिनां प्रेत्य न तु सन्न्यासिनां क्वचित् ॥ १२ ॥
पञ्चैतानि महाबाहो कारणानि निबोध मे ।
सांख्ये कृतान्ते प्रोक्तानि सिद्धये सर्वकर्मणाम् ॥ १३ ॥ ॥६३५॥

அனிஷ்ட-மிஷ்டம் மிச்ரஞ் ச த்ரிவிதம் கர்மண: பலம் |
பவத்-யத்யாகினும் ப்ரேத்ய ந து ஸந்ந்யாஸினும் க்வசித் || 12 || (634)
பஞ்சைதானி மஹாபாஹோ காரணனி நிபோத மே |
ஸாங்க்யே க்ருதாந்தே ப்ரோக்தானி ஸித்தயே ஸர்வகர்மணும் || 13 || (635)

---

12. (அத்யாகினும்) கருமபலனை விடாதவர்க்கு (ப்ரேத்ய) இங்கு விட்டுச் சென்றபின் (அனிஷ்டம் இஷ்டம் மிச்ரஞ் ச) துன்பமாயும் இன்பமாயும் இரண்டின் கலப்பாயும் (த்ரிவிதம்) மூவகையாக (கர்மண:) கருமத்தின் (பலம்) பலன் (பவதி) ஸம்பவிக்கின்றது: (ஸந்ந்யாஸினும் து) கருமபலனை விட்ட ஸந்நியாஸிகளுக்கோ வெனின் (க்வசித் ந) இங்ஙனம் ஒருபோதும் உண்டாவதில்லை.

13. (மஹாபாஹோ) உயர் தோளா! (க்ருதாந்தே) செயல்களின் முடிவுநிலையைக் காட்டும் (ஸாங்க்யே) ஸாங்கியத்தில் (ஸர்வ கர்மணும் ஸித்தயே) எல்லாக் கருமங்களின் சித்திக்கும் (ப்ரோக்தானி) கூறப்பட்டுள்ள (ஏதானி) இந்த (பஞ்ச காரணனி) ஐந்து காரணங்களையும் (மே) என்னிடமிருந்து (நிபோத) உணர்வாய்.

अधिष्ठानं तथा कर्ता करणं च पृथग्विधम् ।
विविधाश्च पृथक्चेष्टा दैवं चैवात्र पञ्चमम् ॥ १४ ॥ ॥६३६॥
शरीर-वाङ्मनोभि-र्यत्कर्म प्रारभते नरः ।
न्याय्यं वा विपरीतं वा पञ्चैते तस्य हेतवः ॥ १५ ॥ ॥६३७॥

அதிஷ்டானம் ததா கர்த்தா கரணஞ் ச ப்ருதக்வித்ம் |
விவிதாச்ச ப்ருதக்-சேஷ்டா தைவஞ் சைவாத்ர
பஞ்சமம் || 14 || (636)

சரீர-வாங்மனோபிர்-யத்கர்ம ப்ராரபதே நர: |
ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ:
|| 15 || (637)

---

14. (அதிஷ்டானம்) இருப்பிடமாகிய உடலும் (ததா) அவ்வாறே (கர்த்தா) காரியம் செய்பவனும் (ப்ருதக்விதம் கரணம்) வெவ்வேறான கருமேந்திரிய ஞானேந்திரியங்களும் (விவிதா: ப்ருதக் சேஷ்டா:ச) பலவிதமானதும் வேறுபட்டதுமான செயல்களும் (அத்ர பஞ்சமம்) இவற்றில் ஐந்தாவதாக (தைவஞ் ச ஏவ) தெய்வமும்.

15 (நர:) மனிதன் (சரீரவாங்மனோபி:) சரீரத்தாலும் வாக்காலும் மனத்தாலும் (ந்யாய்யம் வா) நியாய முறையிலோ (விபரீதம் வா) எதிர் முறையிலோ (யத் கர்ம) எந்தக் கருமத்தை (ப்ராரபதே) செய்தாலும் (ஏதே பஞ்ச) இவ்வைந்தும் (தஸ்ய) அதன் (ஹேதவ:) காரணங்கள்.

---

14. கர்த்தா—ஒ—13. 21.

ப்ரக்ருதியில் உறையும் ஜீவன்.

கரணம்—பதினொரு இந்திரியங்களும் அவைகட்கு உதவியான கருவிகளும்.

தெய்வம்—ஊழ்வினை; இதுவே அத்ருஷ்டம் என்பதும் **ஸ்வபாவம்** என்பதும்.

तत्रैवं सति कर्तार-मात्मानं केवलं तु यः ।
पश्य-त्यकृतबुद्धित्वान्न स पश्यति दुर्मतिः ॥ १६ ॥ ॥ ६३८ ॥
यस्य नाहंकृतो भावो बुद्धि-र्यस्य न लिप्यते ।
हत्वापि स इमाँ-ल्लोकान्न हन्ति न निबध्यते ॥ १७ ॥ ॥६३९॥

தத்ரைவம் ஸதி கர்த்தார-மாத்மானம் கேவலம் து ய:|
பச்யத்-யக்ருதபுத்தித்வாந் ந ஸ பச்யதி துர்மதி:
|| 16 || (638)
யஸ்யநாஹங்க்ருதோ பாவோ புத்திர்-யஸ்ய நலிப்யதே|
ஹத்வாபி ஸ இமான் லோகான் ந ஹந்தி ந நிபத்யதே
|| 17 || (639)

16. (ஏவம் ஸதி) இங்ஙனமிருக்க, (தத்ர) அவ் விஷயத்தில் (கேவலம் ஆத்மானம் து) பற்றில்லாத ஆத்மாவையோ — ஜீவஸ்வரூபியாகிய தன்னை மட்டுமோ—(அக்ருத-புத்தித்வாத்) திருந்தாத புத்தியால் (ய:) எவன் (கர்த்தாரம்) கர்த்தாவாக (பச்யதி) காண்கிறானோ (ஸ:) அவன் (துர்மதி:) துன்மதி; (ந பச்யதி) உண்மையைக் காண்பதில்லை.

17. (யஸ்ய) எவனுக்கு (அஹங்க்ருத: பாவ:) தான் கர்த்தா என்ற எண்ணம் (ந) இல்லையோ, (யஸ்ய)

ஒ—ஒரு பெண்புறா தன் நாயகனைப் பார்த்து, "நமது முடிவு காலம் வந்து விட்டது. வேடன் வில்லும் அம்பும் ஏந்திக் கீழே நிற்கிறான்; மேலே வல்லூறு வட்டமிடுகிறது" என்று பயந்து கூறிக் கொண்டிருக்கையில் ஒரு பாம்பு அவ்வேடனைக் கடித்தது; அவன் விட்ட அம்பு வல்லூறைக் கொன்றது. விதியின் போக்கு வெகு அதிசயம்!

16. ஒ—கீ. 3. 27 (அஹங்கார விமூடாத்மா.)

உண்மையில் புருஷன் கர்த்தா அன்று, ஸாக்ஷி மாத்திரமே; இங்ஙனம் உணர்பவன் கர்த்ருத்வத்திலிருந்து விடுபடுகிறான்.

ஒ—(5. 14; 3. 17) அவன் செய்யுங் கருமங்களுக்குப் பிரகிருதியே கர்த்தா எனத் தெளிவுறக் காண்கின்றான். அங்கு ஐந்தாவது ஹேது ஒழிந்து, ஹேதுக்கள் நான்கில் ஒடுங்குகின்றன.

ज्ञानं ज्ञेयं परिज्ञाता त्रिविधा कर्म-चोदना ।
करणं कर्म कर्तेति त्रिविधः कर्म-संग्रहः ॥ १८ ॥ ॥ ६४० ॥
ज्ञानं कर्म च कर्ता च त्रिधैव गुण-भेदतः ।
प्रोच्यते गुण-संख्याने यथाव-च्छृणु तान्यपि ॥१९॥ ॥६४१॥

ஜ்ஞானம் ஜ்ஞேயம் பரிஜ்ஞாதா த்ரிவிதா கர்மசோதனு|
கரணம் கர்ம கர்த்தேதி த்ரிவித: கர்ம-ஸங்க்ரஹ:
|| 18 || (640)
ஜ்ஞானம் கர்ம ச கர்த்தா ச த்ரிதைவ குணபேதத: |
ப்ரோச்யதே குண-ஸங்க்யானே யதாவச்-ச்ருணு
தான்யபி || 19 || (641)

எவனுடைய (**புத்தி:**) புத்தி (ந லிப்யதே) பற்றப்படுவதில்லையோ (ஸ:) அவன் (இமான் லோகான்) இவ்வுலகத்துப் பிராணிகளை (ஹத்வா அபி) கொன்றபோதிலும் (ந ஹந்தி) கொல்லுவதில்லை ; (ந நிபத்யதே) பந்தப்படுவதுமில்லை.

18. (ஜ்ஞானம்) அறிவும், (ஜ்ஞேயம்) அறியப்படுவதும் (பரிஜ்ஞாதா) அறிபவனும் என (கர்ம சோதனு) கருமத்திற்குப் பிரவிருத்தி காரணம் (த்ரிவிதா) மூவகை ; (கரணம்) கருமேந்திரிய ஞானேந்திரியங்கள் (கர்ம) தொழில் (கர்த்தா இதி) தொழில் புரிபவன் என (கர்மஸங்க்ரஹ:) கருமத்திற்கு ஆதார காரணம் (த்ரிவித:) மூவகை.

19. (ஜ்ஞானம்) ஞானமும் (கர்ம ச) கருமமும் (கர்த்தா ச) கர்த்தாவும் (குணபேதத:) குண வேற்றுமையால் (த்ரிதா ஏவ) தனித்தனியே மூவகையென (குணஸங்க்யானே) குணங்களின் பாகுபாடு கூறும் ஸாங்கிய சாஸ்திரத்தில் (ப்ரோச்யதே) சொல்லப்படுகிறது. (தானி அபி) அவைகளையும் (யதாவத்) உள்ளபடி (ச்ருணு) கேள்.

सर्वभूतेषु येनैकं भाव-मव्यय-मीक्षते ।
अविभक्तं विभक्तेषु तज्ज्ञानं विद्धि सात्त्विकम् ॥२०॥ ॥६४२॥

पृथक्त्वेन तु यज्ज्ञानं नानाभावान् पृथग्विधान् ।
वेत्ति सर्वेषु भूतेषु तज्ज्ञानं विद्धि राजसम् ॥ २१ ॥ ॥६४३॥

ஸர்வபூதேஷு யேனைகம் பாவ-மவ்யய-மீக்ஷதே |
அவிபக்தம் விபக்தேஷு தஜ்ஜ்ஞானம் வித்தி
ஸாத்விகம் || 20 || (642)

ப்ருதக்த்வேன து யஜ்ஜ்ஞானம் நாநாபாவான் ப்ருதக்-
விதான் |
வேத்தி ஸர்வேஷு பூதேஷு தஜ்ஜ்ஞானம் வித்தி
ராஜஸம் || 21 || (643)

---

20. (விபக்தேஷு) வெவ்வேறாகவுள்ள (ஸர்வ பூதேஷு) பொருள்களனைத்திலும் (அவிபக்தம்) வேறுபாடில்லாததும் (அவ்யயம்) அழிவில்லாதுமாகிய (ஏகம் பாவம்) ஒரே வஸ்துவை (யேன) எதனால் (ஈக்ஷதே) பார்க்கின்றானோ (தத் ஜ்ஞானம்) அந்த ஞானத்தை (ஸாத்விகம்) ஸாத்விகம் என (வித்தி) அறி.

21. (ஸர்வேஷு பூதேஷு) உடல்களனைத்திலும் (ப்ருதக்த்வேன து) தனித்தனியாக (ப்ருதக்விதான்) வேறுபட்ட (நாநாபாவான்) வெவ்வேறான ஆன்மாக்களை (யத் ஜ்ஞானம்) எந்த அறிவு (வேத்தி) உணர்கின்றதோ (தத் ஜ்ஞானம்) அந்த ஞானம் (ராஜஸம்) ராஜஸம் என (வித்தி) அறி.

यत्तु कृत्स्नव-देकस्मिन् कार्ये सक्त-महैतुकम् ।
अतत्त्वार्थव-दल्पं च तत्तामस-मुदाहृतम् ॥ २२ ॥ ॥ ६४४ ॥
नियतं सङ्गरहित-मरागद्वेषतः कृतम् ।
अफल-प्रेप्सुना कर्म यत्तत्सात्त्विक-मुच्यते ॥ २३ ॥ ॥६४५॥

யத்து க்ருத்ஸ்னவ-தேகஸ்மின் கார்யே ஸக்த-மஹைதுகம் |
அதத்வார்த்தவ-தல்பஞ் ச தத்தாமஸ-முதாஹ்ருதம் || 22 || (644)
நியதம் ஸங்க-ரஹித-மராகத்வேஷத: க்ருதம் |
அபல-ப்ரேப்ஸுனா கர்ம யத்தத்-ஸாத்விக-முச்யதே || 23 || (645)

---

22. (ஏகஸ்மின் கார்யே) ஆக்கப்பட்ட எதோ ஓர் உருவில் — ஒரு தேகத்திலோ ஒரு பிரதிமையிலோ — (க்ருத்ஸ்னவத்) அதுவே எல்லாம் — தேகமே ஆன்மா, பிரதிமையே தெய்வம் — என (அஹைதுகம்) யுக்திக்கு ஒவ்வாததாய் (அதத்வார்த்தவத்) உண்மைக்குப் பொருந்தாததாயும் (அல்பஞ்ச) அல்பபுத்தியாலும் (யத்து) எந்த ஞானம் (ஸக்தம்) பற்றி நிற்கின்றதோ (தத்) அது (தாமஸம்) தாமஸம் என (உதாஹ்ருதம்) கூறப்பட்டுள்ளது.

23. (அபலப்ரேப்ஸுனா) பயனில் இச்சையில்லாதவனுய் (நியதம்) விதிக்கப்பட்ட (யத் கர்ம) எக் கருமம் (ஸங்க ரஹிதம்) பற்று இல்லாமலும் (அராகத்வேஷத:) விருப்பு வெறுப்பின்றியும் (க்ருதம்) செய்யப்பட்டதோ (தத்) அது (ஸாத்விகம் உச்யதே) ஸாத்விகம் என்று சொல்லப்படும்.

यत्तु कामेप्सुना कर्म साहंकारेण वा पुनः ।
क्रियते बहुलायासं तद्राजस-मुदाहृतम् ॥ २४ ॥ ॥ ६४६ ॥

अनुबन्धं क्षयं हिंसा-मनपेक्ष्य च पौरुषम् ।
मोहा-दारभ्यते कर्म यत्तत्तामस-मुच्यते ॥ २५ ॥ ॥६४७॥

யத்து காமேப்ஸுநா கர்ம ஸாஹங்காரேண வா புன: |
க்ரியதே பஹுலாயாஸம் தத்ராஜஸ-முதாஹ்ருதம்
|| 24 || (646)

அனுபந்தம் க்ஷயம் ஹிம்ஸா-மனபேக்ஷ்ய ச
பௌருஷம் |
மோஹா-தாரப்யதே கர்ம யத்தத் தாமஸ முச்யதே
|| 25 || (647)

---

24. (காமேப்ஸுநா) பயனில் இச்சையுள்ளவனால் (ஸாஹங்காரேண வா) அஹங்கார புத்தியுடனே (புன:) மீண்டும் (பஹுல ஆயாஸம்) மிகுந்த பிரயாசையுடனே (யத் கர்ம) எக் கருமம் (க்ரியதே) செய்யப்படுகிறதோ (தத்து) அதுவோ எனில் (ராஜஸம் உதாஹ்ருதம்) ராஜஸம் எனக் கூறப்படும்.

25. (அனுபந்தம்) தொடர்ந்து வரும் பலனையும் (க்ஷயம்) நஷ்டத்தையும் (ஹிம்ஸாம்) பிறர்க்கு விளையுந் துன்பத்தையும் (பௌருஷஞ்ச) தன் சக்தியையும் (அனபேக்ஷ்ய) யோசியாமல் (மோஹாத்) மதி மயக்கத்தால் (யத்கர்ம) எக்கருமம் (ஆரப்யதே) ஆரம்பிக்கப்படுகிறதோ (தத்) அது (தாமஸம் உச்யதே) தாமஸம் எனப்படும்.

मुक्तसङ्गो-ऽनहंवादी धृत्युत्साह-समन्वितः ।
सिद्ध्यसिद्ध्यो-र्निर्विकारः कर्ता सात्त्विक उच्यते ॥ २६ ॥

रागी कर्मफल-प्रेप्सु-र्लुब्धो हिंसात्मकोऽशुचिः ।
हर्षशोकान्वितः कर्ता राजसः परिकीर्तितः ॥ २७ ॥ ॥६४९॥

முக்தஸங்கோ ऽனஹம்வாதீ த்ருத்-யுத்ஸாஹ-ஸமன்வித:
ஸித்த்யஸித்த்யோர்-நிர்விகார: கர்த்தா ஸாத்விக உச்யதே || 26 || (648)

ராகீ கர்மபல-ப்ரேப்ஸுர்-லுப்தோ ஹிம்ஸாத்மகோ ऽசுசி: |
ஹர்ஷசோகான்வித: கர்த்தா ராஜஸ: பரிகீர்த்தித: || 27 || (649)

---

26. (முக்தஸங்க:) பற்று நீங்கியவனும் (அனஹம் வாதீ) நான் என்ற எண்ணமில்லாதவனும் (த்ருதி உத்ஸாஹ ஸமன்வித:) விடா முயற்சியும் ஊக்கமும் உடையவனும் (ஸித்தி-அஸித்த்யோ:) வெற்றியிலுந் தோல்வியிலும் (நிர்விகார:) மாறுபாடில்லாதவனும் ஆகிய (கர்த்தா) செயலாளி (ஸாத்விக: உச்யதே) ஸாத்விகன் என்று சொல்லப்படுகிருன்.

27. (ராகீ) ஆசைவாய்ப்பட்டவனும் (கர்ம பல ப்ரேப்ஸு:) கருமபலனை விரும்புபவனும் (லுப்த:) லோபியும் (ஹிம்ஸாத்மக:) இம்சையில் நோக்கமுடையவனும் (அசுசி:) அசுத்தமானவனும் (ஹர்ஷ சோகான் வித:) மகிழ்ச்சியிலும சோகத்திலும் நிலையில்லா மனத்தையுடையவனும் ஆகிய (கர்த்தா) செயலாளி (ராஜஸ: பரிகீர்த்தித:) ராஜஸன் என்று சொல்லப் படுகிருன்.

अयुक्तः प्राकृतः स्तब्धः शठो नैष्कृतिकोऽलसः
विषादी दीर्घसूत्री च कर्ता तामस उच्यते ॥ २८ ॥ ॥६५०॥
बुद्धे-र्भेदं धृतेश्चैव गुणत-स्त्रिविधं शृणु ।
प्रोच्यमान-मशेषेण पृथक्त्वेन धनञ्जय ॥ २९ ॥ ॥ ६५१ ॥

அயுக்த: ப்ராக்ருத**:** ஸ்தப்த**:** சடோ நைஷ்க்ருதிகோ ஽லஸ**: |**
விஷாதீ தீர்க்கஸூத்ரீ ச கர்த்தா தாமஸ உச்யதே ‖ 28 ‖ (650)

புத்தேர்-ப்பேதம் த்ருதேச்சைவ குணதஸ்-த்ரிவிதம் ச்ருணு |
ப்ரோச்யமான-மசேஷேண ப்ருதக்த்வேன தனஞ்ஜய ‖ 29 ‖ (651)

---

28. (அயுக்த:) நிலைபெறாத மனமுடையவனும் (ப்ராக்ருத:) நல்லொழுக்கமில்லாதவனும் (ஸ்தப்த:) கருவமுடையவனும் (சட:) வஞ்சகனும் (நைஷ்க்ருதிக:) தீயசெயலில் முயல்பவனும் (அலஸ:) சோம்பேறியும் (விஷாதீ) தன்னம்பிக்கை யிழந்தவனும் (தீர்க்கஸூத்ரீ ச) நெடுநீர்மை யுடையவனும் ஆகிய (கர்த்தா) செயலாளி (தாமஸ: உச்யதே) தாமஸன் என்று சொல்லப்படுகிறான்.

29. (தனஞ்ஜய) அர்ஜுனா ! (**புத்தே:**) புத்தியினுடையவும் (த்ருதே: ச ஏவ) அவ்வாறே திடசித்தத்

---

28. ஒ—நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். (குறள்.)

‘ நைக்ருதிகோ஽லஸ: ’ —ராமானுஜர்—(பா. பே.)

29. **புத்தி:**—உண்மையை ஆராய்ந்தறியும் நிச்சய வடிவான அறிவு.

த்ருதி:—கண்ட உண்மையை விடாது கவனத்திற் கொள்ளும் தாரணா சக்தி.

प्रवृत्तिं च निवृत्तिं च कार्याकार्ये भयाभये ।
बन्धं मोक्षं च या वेत्ति बुद्धिः सा पार्थ सात्त्विकी ॥ ३० ॥
यया धर्म-मधर्मं च कार्यं चाकार्यमेव च ।
अयथावत् प्रजानाति बुद्धिः सा पार्थ राजसी ॥३१॥ ॥६५३॥

ப்ரவ்ருத்திஞ் ச நிவ்ருத்திஞ் ச கார்யாகார்யேபயாபயே|
பந்தம் மோக்ஷஞ் ச யா வேத்தி **புத்தி:** ஸா பார்த்த
ஸாத்விகீ || 30 || (652)

யயா தர்ம-மதர்மஞ் ச கார்யஞ் சாகார்ய-மேவ ச |
அயதாவத் ப்ரஜாஞதி **புத்தி:** ஸா பார்த்த ராஜஸீ
|| 31 || (653)

தினுடையவும் (**பேதம்**) வித்தியாசத்தை (குணத:) குண வேற்றுமையால் (த்ரிவிதம்) மூவகையாக (ப்ருதக்த்வேன) பாகுபடுத்தி (அசேஷேண) முற்றும் (ப்ரோச்யமானம்) கூறப்படுவதை (ச்ருணு) கேள்.

30. (பார்த்த) அர்ஜுன! (ப்ரவ்ருத்திஞ்ச) செயலிற் புகுமுறையையும் (நிவ்ருத்திஞ்ச) செயலினின்று விலகு முறையையும் (கார்ய அகார்யே) செய்யத்தக்க காரியத்தையும் செய்யத்தகாததையும் (பய அபயே) பயத்தையும் பயமின்மையையும் (பந்தம் மோக்ஷஞ்ச) பந்தத்தையும் மோக்ஷத்தையும் (யா) எது (வேத்தி) அறிகிறதோ (ஸா) அந்த (**புத்தி:**) புத்தியானது (ஸாத்விகீ) ஸாத்விகமாம்.

31. (பார்த்த) அர்ஜுன! (தர்மம்) தருமத்தையும் (அதர்மஞ்ச) அதருமத்தையும் (கார்யஞ் ச அகார்யம் ஏவ ச) செய்யத்தக்க காரியத்தையும் செய்யத்தகாததையும் (அயதாவத்) உள்ளபடி யல்லாது ஒன்றிருக்க வொன்ருய் (யயா) எதனல் (ப்ரஜாஞதி) உணர்கிறதோ (ஸா **புத்தி:**) அந்த புத்தி (ராஜஸீ) ராஜஸமானது.

अधर्मं धर्ममिति या मन्यते तमसावृता ।
सर्वार्थान् विपरीतांश्च बुद्धिः सा पार्थ तामसी ॥३२॥ ॥६५४॥
धृत्या यया धारयते मनः-प्राणेन्द्रिय-क्रियाः ।
योगेनाव्यभिचारिण्या धृतिः सा पार्थ सात्त्विकी ॥ ३३ ॥

அதர்மம் தர்மமிதி யா மன்யதே தமஸாவ்ருதா |
ஸர்வார்த்தான் விபரீதாம்ச்ச புத்தி: ஸா பார்த்த
தாமஸீ || 32 || (654)
த்ருத்யா யயா தாரயதே மன: ப்ராணேந்த்ரிய-க்ரியா: |
யோகேனுவ்யபிசாரிண்யா த்ருதி: ஸா பார்த்த
ஸாத்விகீ || 33 || (655)

---

32. (பார்த்த) அர்ஜுனு! (தமஸா ஆவ்ருதா) இருளால் மூடப்பெற்று (அதர்மம்) அதருமத்தை (தர்மம் இதி) தருமம் என்றும் (ஸர்வார்த்தான்) எல்லா விஷயங்களேயும் (விபரீதான் ச) நேர்மாருகவும் (யா புத்தி:) எந்தப் புத்தியானது (மன்யதே) கருதுகின்றதோ (ஸா) அது (தாமஸீ) தாமஸமானது.

33. (பார்த்த) அர்ஜுனு! (அவ்யபிசாரிண்யா) முறைபிறழாத (யயாத்ருத்யா) எந்தத் திடத்தால் (மன: ப்ராண இந்த்ரிய க்ரியா:) மனம், பிராணன், இந்திரியங்கள் முதலியவற்றின் தொழில்கள் (யோகேன) யோகத்தால் (தாரயதே) காக்கப்படுகின்றனவோ (ஸா த்ருதி:) அந்தத் திடம் (ஸாத்விகீ) ஸாத்விகமாம்.

---

32. ஒ—"அதார்மிகமுகந் த்ருஷ்ட்வா பச்யேத் ஸூர்யம் ஸதா நர:"

यया तु धर्म-कामार्थान् धृत्या धारयतेऽर्जुन ।
प्रसङ्गेन फलाकाङ्क्षी धृतिः सा पार्थ राजसी ॥३४॥ ॥६५६॥

यया स्वप्नं भयं शोकं विषादं मदमेव च ।
न विमुञ्चति दुर्मेधा धृतिः सा पार्थ तामसी ॥३५॥ ॥६५७॥

யயா து தர்ம-காமார்த்தான் தருத்யா தாரயதே ऽர்ஜுன |
ப்ரஸங்கேன பலாகாங்க்ஷீ த்ருதி: ஸா பார்த்த ராஜஸீ || 34 || (656)

யயா ஸ்வப்னம் பயம் சோகம் விஷாதம் மதமேவ ச |
ந விமுஞ்சதி துர்மேதா த்ருதி: ஸா பார்த்த தாமஸீ || 35 || (657)

---

34. (பார்த்த) அர்ஜுனு! (யயா த்ருத்யா து) ஆயின் எந்தத் திடத்தால்(தர்மகாம அர்த்தான்) அறம் பொருள் இன்பம் (தாரயதே) காக்கப்படுகின்றதோ (ப்ரஸங்கேன) ஆழ்ந்த பற்றினுல் (பல ஆகாங்க்ஷீ) பயனை விரும்புவதாகின்றதோ (ஸா த்ருதி:) அந்தத் திடம் (ராஜஸீ) ராஜஸமாம்.

35. (பார்த்த) அர்ஜுனு! (துர்மேதா:) அறிவு கெட்ட ஒருவன் (யயா) எதனுல் (ஸ்வப்னம்) தூக்கத்தையும் (பயம்) பயத்தையும் (சோகம்) துயரத்தையும் (விஷாதம்) மனக்குழப்பத்தையும் (மதம் ஏவ ச) செருக்கையும் (ந விமுஞ்சதி) விடுவதில்லையோ (ஸா த்ருதி:) அந்தத் திடம் (தாமஸீ) தாமஸமாம்.

सुखं त्विदानीं त्रिविधं शृणु मे भरतर्षभ ।
अभ्यासा-द्रमते यत्र दुःखान्तं च निगच्छति ॥३६॥ ॥६५८॥
यत्तदग्रे विष-मिव परिणामेऽमृतोपमम् ।
तत्सुखं सात्त्विकं प्रोक्त-मात्म-बुद्धि-प्रसादजम् ॥३७॥ ॥६५९॥

ஸுகம் த்விதானீம் த்ரிவிதம் ச்ருணு மே பரதர்ஷப |
அப்யாஸாத்-ரமதே யத்ர து:க்காந்தஞ் ச நிகச்சதி
|| 36 || (658)
யத்ததக்ரே விஷமிவ பரிணாமேऽம்ருதோபமம் |
தத்ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்த-மாத்ம-புத்தி-ப்ரஸாத
ஜம் || 37 || (659)

---

36. (பரதர்ஷப) பாரதவீரரே! (இதானீம்) இப்போது (ஸுகந்து) சுகமும் (த்ரிவிதம்) மூவகைத்தாயுள்ளதை (மே) என்னிடம் (ச்ருணு) கேள். (யத்ர) எதில் (அப்யாஸாத்) பழக்கத்தால் (ரமதே) ஆனந்தமடைகின்றானோ (து:க்காந்தஞ்ச) துன்பத்தின்முடிவை (நிகச்சதி) எய்துகின்றானோ

37. (யத் தத் அக்ரே விஷம் இவ) எது ஒன்று ஆரம்பத்தில் விஷம்போலும் (பரிணாமே அம்ருத உபமம்) முடிவில் அமிருதத்துக் கொப்பாகவும் (ஆத்ம புத்தி ப்ரஸாதஜம்) ஆத்மாவில் நிலைபெற்ற புத்தியின் தெளிவில் தோன்றுவதாகவும் உள்ளதோ (தத் ஸுகம்) அந்த ஸுகம் (ஸாத்விகம் ப்ரோக்தம்) ஸாத்விகம் எனச் சொல்லப்படும்.

---

37. ஒ—சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (குறள்.)

विषयेन्द्रिय-संयोगा-द्यत्तदग्रेऽमृतोपमम् ।
परिणामे विषमिव तत्सुखं राजसं स्मृतम् ॥ ३८ ॥ ॥ ६६० ॥
यदग्रे चानुबन्धे च सुखं मोहन-मात्मनः ।
निद्रालस्य-प्रमादोत्थं तत्तामस-मुदाहृतम् ॥ ३९ ॥ ॥ ६६१ ॥

விஷயேந்த்ரிய-ஸம்யோகாத்-யத்ததக்ரேऽம்ருதோப
மம் |
பரிணமே விஷமிவ தத்ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம்
|| 38 || (660)

யதக்ரேசானுபந்தே ச ஸுகம் மோஹன-மாத்மன: |
நித்ராலஸ்ய-ப்ரமாதோத்தம் தத்தாமஸ-முதாஹ்ருதம்
|| 39 || (661)

---

38. (விஷய இந்த்ரிய ஸம்யோகாத்) புலன்களும் பொறிகளுங் கூடுதலால் (யத் தத்) எவ்வின்பம் (அக்ரே) முதலில் (அம்ருதோபமம்) அமிருதத்துக் கொப்பாகவும் (பரிணமே) முடிவில் (விஷம் இவ) விஷத்தைப்போலும் உளதோ (தத் ஸுகம்) அந்த ஸுகம் (ராஜஸம்) ராஜஸம் என்று (ஸ்ம்ருதம்) கருதப் படும்.

39. (நித்ரா ஆலஸ்ய ப்ரமாத உத்தம்) தூக்கம், சோம்பல், மதியீனம் முதலியவற்றினின்று தோன்றும் (யத் ஸுகம்) எந்தச் சுகம் (அக்ரே ச) முதலிலும் (அனு பந்தே ச) முடிவிலும் (ஆத்மன: மோஹனம்) தன்னறிவை மயக்குகிறதோ (தத்) அது (தாமஸம் உதாஹ்ருதம்) தாமஸம் எனக் கூறப்படும்.

न तदस्ति पृथिव्यां वा दिवि देवेषु वा पुनः ।
सत्त्वं प्रकृतिजै-र्मुक्तं यदेभिः स्यात्त्रिभि-र्गुणैः ॥४०॥ ॥६६२॥

ब्राह्मण-क्षत्रिय-विशां शूद्राणां च परंतप ।
कर्माणि प्रविभक्तानि स्वभाव-प्रभवै-र्गुणैः ॥ ४१ ॥ ॥६६३॥

ந ததஸ்தி ப்ருதிவ்யாம் வா திவி தேவேஷு வா புன: |
ஸத்வம் ப்ரக்ருதிஜைர்-முக்தம் யதேபி: ஸ்யாத்
த்ரிபிர்குணை: || 40 || (662)

ப்ராஹ்மண-க்ஷத்ரிய-விசாம் சூத்ராணுஞ் ச பரந்தப |
கர்மாணி ப்ரவிபக்தானி ஸ்வபாவ-ப்ரபவைர்-குணை:
|| 41 || (663)

---

40. (யத்) எது (ஏபி:) இந்த (ப்ரக்ருதிஜை:) ப்ரக்ருதியிற் பிறந்த (த்ரிபி: குணை:) முக்குணங்களினின்றும் (முக்தம் ஸ்யாத்) விடுபட்டதாயுளதோ (தத் ஸத்வம்) அந்தப் பொருள் (ப்ருதிவ்யாம்) பூவுலகிலோ (புன:) மேலும், (திவி தேவேஷு வா) வானுலகில் தேவர்களிடையிலோ (ந அஸ்தி) இல்லை.

41. (பரந்தப) பகைவரை எரிப்பவனே! (ப்ராஹ்மண க்ஷத்ரிய விசாம் சூத்ராணும் ச) பிராமணருக்கும் க்ஷத்திரியருக்கும் வைசியருக்கும் சூத்திரருக்கும் (ஸ்வபாவ ப்ரபவை: குணை:) அவரவர் இயற்கைக்குரிய குணங்களால் (கர்மாணி) கர்மங்கள் (ப்ரவிபக்தானி) வகுக்கப்பட்டுள்ளன.

शमो दमस्तपः शौचं क्षान्ति-रार्जवमेव च ।
ज्ञानं विज्ञान-मास्तिक्यं ब्रह्मकर्म स्वभावजम् ॥४२॥ ॥६६४॥
शौर्यं तेजो धृति-र्दाक्ष्यं युद्धे चाप्यपलायनम् ।
दान-मीश्वरभावश्च क्षात्रं कर्म स्वभावजम् ॥ ४३ ॥ ॥६६५॥

சமோ தமஸ்-தப: சௌசம் க்ஷாந்தி-ரார்ஜவமேவ ச |
ஜ்ஞானம் விஜ்ஞான-மாஸ்திக்யம் ப்ரஹ்மகர்ம ஸ்வ-
பாவஜம || 42 || (664)
சௌர்யங் தேஜோத்ருதிர்-தாக்ஷ்யம் யுத்தே சாப்ய
பலாயனம் |
தான-மீச்வரபாவச்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்
|| 43 || (665)

---

42. (சம:) அகக் கரணங்களின் அடக்கம் (தம:) புறக் கரணங்களின் அடக்கம் (தப:) தவம் (சௌசம்) சுத்தம் (க்ஷாந்தி:) பொறுமை (ஆர்ஜவம்) நேர்மை (ஏவ ச) மேலும் அவ்வாறே (ஜ்ஞானம்) அறிவு (விஜ்ஞானம்) அநுபவம் (ஆஸ்திக்யம்) உடல் வாழ்க்கைக்கப்பால் ஒரு வாழ்க்கை உண்டு என்ற நம்பிக்கை —இவையனைத்தும் (ஸ்வபாவஜம்) இயற்கையில் ஏற்பட்ட (ப்ரஹ்மகர்ம) பிராம்மண கருமம்.

43. (சௌர்யம்) சூரத்தனம் (தேஜ:) கூர்மை (த்ருதி:) திடம் (தாக்ஷ்யம்) திறமை (யுத்தே ச அபி) போரிலும் (அபலாயனம்) புறங்காட்டாமை (தானம்) கொடை (ஈச்வரபாவ: ச) அடக்கியாளுந் தன்மை ஆகிய இவை (ஸ்வபாவஜம்) இயற்கையில் ஏற்பட்ட (க்ஷாத்ரம் கர்ம) க்ஷத்திரிய கருமங்கள்.

---

42. 'ப்ராஹ்மம் கர்ம ஸ்வபாவஜம்'—ராமானுஜர்—(பா. பே.)

அடக்கம், தவம் முதலிய கருமங்கள் மோக்ஷத்திலாசையுடைய எல்லோர்க்கும் பொது. பூர்வ வாசனையால் பிராம்மணர்க்கு இவை

कृषि-गौरक्ष्य-वाणिज्यं वैश्य-कर्म स्वभावजम् ।
परिचर्यात्मकं कर्म शूद्रस्यापि स्वभावजम् ॥ ४४ ॥ ॥६६६॥
स्वे स्वे कर्म-ण्यभिरतः संसिद्धिं लभते नरः ।
स्वकर्म-निरतः सिद्धिं यथा विन्दति तच्छृणु ॥ ४५ ॥ ॥६६७॥

க்ருஷி-கௌரக்ஷ்ய-வாணிஜ்யம் வைச்யகர்ம ஸ்வபாவ
ஜம் |
பரிசர்யாத்மகம் கர்ம சூத்ரஸ்யாபி ஸ்வபாவஜம்
|| 44 || (666)
ஸ்வே ஸ்வே கர்மண்-யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர: |
ஸ்வகர்ம-நிரத: ஸித்திம் யதா விந்ததி தச்ச்ருணு
|| 45 | (667)

---

44. (க்ருஷி - கௌரக்ஷ்ய - வாணிஜ்யம்) பயிர்த் தொழில் பசு ஸம்ரக்ஷணை வியாபாரம் இவை (ஸ்வபாவஜம்) இயற்கையில் ஏற்பட்ட (வைச்ய கர்ம) வைசிய கருமங்கள். (பரிசர்யாத்மகம்) பிறர்க்குச் சேவை வடிவான (கர்ம) கருமம் (சூத்ரஸ்ய அபி) சூத்திரருக்கு (ஸ்வபாவஜம்) இயற்கையில் ஏற்பட்டது.

45. (நர:) மனிதன் (ஸ்வே ஸ்வே) ஒவ்வொருவனும் தன்னுடைய (கர்மணி) கர்மாவில் (அபிரத:)

இயற்கையில் எளிதாக வரும்; பிறர்க்கு விடாமுயற்சியால் கூடி வரும்.

பிராம்மண கர்மா—அத்யயனம், அத்யாபனம்; யஜனம், யாஜனம்; தானம் ப்ரதிக்ரஹம; என ஆறு வகை. அத்யயனம், யஜனம், தானம் எனும மூன்றும் ஏனைய வருணத்தாருக்கும் பொது; மற்ற மூன்றும் பிராம்மணருடைய விசேஷ கர்மா எனப்படும்.

44. க்ருஷிகோரக்ஷ்ய; 'வைச்யம் கர்ம'
—ராமானுஜர்—(பா. பே.)

45. ஸ்வே ஸ்வே கர்மணி—எறும்பு எறும்பின் தருமத்தால் ஸித்தியெய்தலாம்; யானை யானையின் தருமத்தால் ஸித்தி யெய்தலாம். தருமம் வேறுபாடுள்ளதாயினும் பயனில் வேறுபாடில்லை.

यतः प्रवृत्ति-र्भूतानां येन सर्वमिदं ततम् ।
स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः ॥ ४६ ॥ ॥६६८॥
श्रेयान् स्वधर्मो विगुणः परधर्मात् स्वनुष्ठितात् ।
स्वभाव-नियतं कर्म कुर्व-न्नाप्नोति किल्बिषम् ॥ ४७ ॥ ॥६६९॥

யத: ப்ரவ்ருத்திர்-பூதானும் யேன ஸர்வ-மிதங் ததம் |
ஸ்வகர்மணு தமப்ப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:
|| 46 || (668)
ச்ரேயான் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்
ஸ்வனுஷ்டிதாத் |
ஸ்வபாவ-நியதங் கர்ம குர்வங்-நாப்னோதி கில்பிஷம்
|| 47 || (669)

கண்ணுங் கருத்துமுடையவனுயின் (ஸம்ஸித்திம்) ஞானநிஷ்டைக்குரிய பரிபக்குவ நிலையை (லபதே) அடைகிருன். (ஸ்வகர்மநிரத:) தன் கருமத்தில் நிலை பெற்றவன் (யதா) எவ்வாறு (ஸித்திம்) பக்குவ நிலையை (விந்ததி) அடைகிருனே (தத்) அதை (ச்ருணு) கேள்.

46. (யத:) எவனிடமிருந்து (பூதானும்) பொருள் களுக்கெல்லாம் (ப்ரவ்ருத்தி:) உற்பத்தியோ (யேன) எவனுல் (இதம் ஸர்வம்) இவ்வனைத்தும் (ததம்) வியாபிக்கப்பட்டுளதோ (தம்) அவனை (ஸ்வகர்மணு) தனக்குற்ற கருமத்தால் (அப்ப்யர்ச்ய) அருச்சித்து (மானவ:) மனிதன் (ஸித்திம்) பக்குவ நிலையை (விந்ததி) அடைகிருன்.

47. (விகுண:) நற்குணமில்லாததாயினும் (ஸ்வ தர்ம:) ஒருவனுக்கு இயற்கையிலேற்பட்ட கருமம் (ஸு அனுஷ்டிதாத்) நன்கு அனுஷ்டிக்கப்பட்ட (பரதர்மாத்) பிறனுடைய கருமத்தைக் காட்டிலும்

---

47. ஒ—கீ. 2.5—ச்ரேயோ போக்தும் பைக்ஷ்யமபீஹ லோகே | (இவ்வாறு அர்ஜுனன் கூறியது தவறென்பது இங்கு நிரூபிக்கப்படுகிறது).

सहजं कर्म कौन्तेय सदोषमपि न त्यजेत् ।
सर्वारम्भा हि दोषेण धूमेनाग्नि-रिवावृताः ॥ ४८ ॥ ॥ ६७० ॥
असक्त-बुद्धिः सर्वत्र जितात्मा विगतस्पृहः
नैष्कर्म्यसिद्धिं परमां सन्न्यासेनाधिगच्छति ॥ ४९ ॥ ॥६७१॥

ஸஹஜங் கர்ம கௌந்தேய ஸதோஷமபி ந த்யஜேத் |
ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேனக்னி-ரிவா
வ்ருதா: || 48 || (670)
அஸக்த-புத்தி: ஸர்வத்ர ஜிதாத்மா விகத-ஸ்ப்ருஹ:
நைஷ்கர்ம்ய-ஸித்திம் பரமாம் ஸந்ந்யாஸேனுதி
கச்சதி || 49 || (671)

(ச்ரேயான்) மேலாகும். (ஸ்வபாவநியதம்) இயற்கையில் ஏற்பட்ட (கர்ம) கருமத்தை (குர்வன்) செய்து (கில்பிஷம்) தீமையை (ந ஆப்னோதி) ஒருவன் அடைய மாட்டான்.

48. (கௌந்தேய) குந்தீ புத்திரனே! (ஸதோஷம் அபி) குற்றமுடையதாயினும் (ஸஹஜம் கர்ம) உடன் பிறந்த கர்மத்தை (ந த்யஜேத்) ஒருவன் விடக்கூடாது. (ஸர்வ ஆரம்பா:) ஆரம்பிக்கும கருமமனைத்தும் (தூமேன) புகையால் (அக்னி: இவ) நெருப்புப்போல (தோஷேண) குணதோஷத்தால் (ஆவ்ருதா: ஹி) சூழப்பட்டுள்ளதன்றோ?

49. (ஸர்வத்ர) எங்கும் (அஸக்த புத்தி:) பற்றில்லாத புத்தியுடையவனுகவும் (ஜிதாத்மா) ஜயிக்கப்

48. குற்றமுடையதாயினும்—விஷத்தில் தோன்றின புழுவுக்கு விஷம் தோஷமில்லாதவாறு.

ஒ—தவம் செய்வார் தம் கருமம் செய்வார்; மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுள் பட்டு.

49. நைஷ்கர்ம்யஸித்தி—

ஒ—கருததனுக்காக்கிய நிஷ்காமிய கருமம்
கருத்தைத் திருத்திய துந்தீ பற
கதிவழி காட்டுமென் றுந்தீ பற. (ஸ்ரீரமணமஹரிஷி.)

सिद्धिं प्राप्तो यथा ब्रह्म तथाप्नोति निबोध मे ।
समासेनैव कौन्तेय निष्ठा ज्ञानस्य या परा ॥ ५० ॥ ॥६७२॥
बुद्ध्या विशुद्धया युक्तो धृत्यात्मानं नियम्य च ।
शब्दादीन् विषयांस्त्यक्त्वा रागद्वेषौ व्युदस्य च ॥ ५१ ॥

ஸித்திம் ப்ராப்தோ யதா ப்ரஹ்ம ததாப்னோதி
நிபோதமே |
ஸமாஸேனைவ கௌந்தேய நிஷ்டா ஜ்ஞானஸ்ய யா
பரா || 50 || (672)

புத்த்யா விசுத்த்யா யுக்தோ த்ருத்யாத்மானம் நியம்யச |
சப்தாதீன் விஷயாம்ஸ்த்யக்த்வா ராகத்வேஷௌ
வ்யுதஸ்ய ச || 51 || (673)

பட்ட அந்தக்கரணமுடையவனாகவும் (விகதஸ்ப்ருஹ:) ஆசைகள் ஒழிந்தவனாகவும் உள்ளவன் (ஸந்ந்யாஸேன) ஸந்நியாஸத்தினால் (நைஷ்கர்ம்ய ஸித்திம் பரமாம்) "நைஷ்கர்ம்யஸித்தி" எனும் உயர் நிலையை (அதிகச்சதி) எய்துகிறான்.

50. (கௌந்தேய) குந்தி புத்திரனே ! (ஸித்திம்) அந்த ஸித்தியை (ப்ராப்த:) அடைந்தவன் (யதா) எவ் வகையால் (ஜ்ஞானஸ்ய யா பராநிஷ்டா) ஞானத்தின் எல்லை நிலமாகிய (ப்ரஹ்ம) பிரம்மத்தை (ஆப்னோதி) எய்துகிறானோ (ததா) அவ்வகையை (ஸமாஸேன) சுருக்கமாக (மே) என்னிடம் (நிபோத) உணர்வாய்.

51. (விசுத்தயா) பரிசுத்தமான (புத்த்யா) புத்தியுடன் (யுக்த:) கூடியவனாய் (த்ருத்யா) திடத்துடன் (ஆத்மானம்) உடலையும் மனத்தையும் (நியம்ய ச) அடக்கி, (சப்தாதீன் விஷயான்) சப்தம் முதலிய விஷய நுகர்ச்சிகளை (த்யக்த்வா) ஒழித்து (ராகத் வேஷௌ ச) விருப்பு வெறுப்புக்களையும் (வ்யுதஸ்ய) விடுத்து ;

विविक्त-सेवी लघ्वाशी यतवाक्काय-मानसः ।
ध्यानयोग-परो नित्यं वैराग्यं समुपाश्रितः ॥ ५२ ॥ ॥६७४॥
अहङ्कारं बलं दर्पं कामं क्रोधं परिग्रहम् ।
विमुच्य निर्ममः शान्तो ब्रह्मभूयाय कल्पते ॥ ५३ ॥ ॥६७५॥

விவிக்த-ஸேவீ லக்க்வாசீ யதவாக்-காய-மானஸ: |
த்யானயோக-பரோ நித்யம் வைராக்யம் ஸமுபாச்ரித:
|| 52 || (674)
அஹங்காரம் பலங் தர்ப்பம் காமங் க்ரோதம்
பரிக்ரஹம் |
விமுச்ய நிர்மம: சாந்தோ ப்ரஹ்ம-பூயாய கல்பதே
|| 53 || (675)

---

52. (விவிக்தஸேவீ) தனிமையை நாடியவனுய் (லகு ஆசீ) உண்டியைச் சுருக்கியவனுய், (யத வாக் காய மானஸ:) மனம் வாக்கு காயங்களை அடக்கிய வனுய் (நித்யம்) எப்போதும் (த்யான யோகபர:) தியான யோகத்தில் ஆழ்ந்தவனுய் (வைராக்யம்) வைராக்கியத்தை (ஸமுபாச்ரித:) நன்கு கைக் கொண்டு;

53. (அஹங்காரம்) நான் பற்றெழிந்தவன் என்ற அகங்காரத்தையும் (பலம்) யோகசித்தியால் ஏற்படும்

---

53. **மன அமைதியுற்றவன்**—வாய் பேசாமலும், ஆசை எழாமலும் நினைப்பு முளைக்காமலும் உள்ள ஞானவரம்பான மோன நிலை எய்தியவன். அவனுடன் இறைவன் அளவளாவுகிருன்—தன்னிடம் சேர்ந்த நதியுடன் கடல் கலப்பதுபோல 5 படிகள்—பிரம்மார்ப்பணம், பிரம்ம யோகம், பிரம்மஸம்ஸ்பர்சம், பிராம்மீ ஸ்திதி, பிரம்ம நிர்வாணம்.

ஒ—கீ. 2. 70.

அஹங்காரம்—எதைத் தியாகம் செய்தல் வேண்டும்? உடைமைகளை யெல்லாந் தியாகஞ் செய்தல் வேண்டும். உடைமைகளை உடையவன் நான் எனும் அஹங்காரத்தையும் தியாகம் செய்தல் வேண்டும்.

ब्रह्मभूतः प्रसन्नात्मा न शोचति न काङ्क्षति ।
समः सर्वेषु भूतेषु मद्भक्तिं लभते पराम् ॥ ५४ ॥ ॥ ६७६ ॥

ப்ரஹ்மபூத: ப்ரஸன்னுத்மா ந சோசதி ந காங்க்ஷதி |
ஸம: ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம்
|| 54 || (676)

வன்மையையும் (தர்ப்பம்) அது சம்பந்தமான கருவத்தையும் (காமம் க்ரோதம் பரிக்ரஹம்)—ப்ராரப்த வசமாய் வருவனவற்றிலும்—ஆசை, கோபம், உடைமை முதலிய பாவனைகளையும் (விமுச்ய) ஒழித்து, (நிர்மம:) எனது என்ற எண்ணமில்லாதவனுய் (சாந்த:) மன அமைதியுற்றவன் (ப்ரஹ்ம பூயாய) பிரம்மம் ஆவதற்கு (கல்பதே) உரியவனுகிருன்.

54. (ப்ரஹ்மபூத:) பிரம்மத்தில் நிஷ்டை கூடிய (ப்ரஸன்னுத்மா) தெளிந்த மனமுடையவன் (ந சோசதி) துக்கிப்பதில்லை (ந காங்க்ஷதி) ஆசைப்படுவதில்லை; (ஸர்வேஷு பூதேஷு) எல்லா உயிர்களிடத்தும் (ஸம:) சமமானவனுய் (மத்பக்திம் பராம்) என்னிடத்து ஒப்புயர்வற்ற பக்தியை (லபதே) அடைகிருன்.

ஒ—நானென் றெழுமிட மேதென நாடவுன்
நான்தலை சாயுமென் றுந்தீபற
ஞான விசார மிதுந்தீபற.
உதித்த இடத்தில் ஒடுங்கி யிருத்தல்
அது கன்மம் பத்தியும் உந்தீபற
அதுயோக ஞான முமுந்தீபற (ஸ்ரீரமணமஹரிஷி.)

கருவத்தையும் ஒழித்து—நான் சாந்தன் என்ற கருவத்தையும ஒழித்து, "ஹ்ருஷ்டோ த்ருப்யதி த்ருப்தோ தர்ம-மதிக்ராமதி"—நிலை தவறிய மகிழ்ச்சியால் கருவமடைகிருன், கருவத்தால் தருமத்தின் வரம்பை மீறுகிருன்.

54. ஸம:—ஒ. கீ. 5. 18 ; 6. 32.

பக்திம் பராம்— 'ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு-ரர்த்தார்த்தீ ஜ்ஞானீ" என்ற நான்கில் நாலாவது நிலை. அது கருமம், ஞானம், யோகம் மூன்றுக்கும் மேற்பட்டது. "ஸாது கர்ம-ஜ்ஞான-யோகேப்யோப்-யதிக தரா".

भक्त्या मामभिजानाति यावान् यश्चास्मि तत्त्वतः ।
ततो मां तत्त्वतो ज्ञात्वा विशते तदनन्तरम् ॥ ५५ ॥ ॥६७७॥

பக்த்யா மாமபிஜாநுதி யாவான் யச்சாஸ்மி தத்வத: |
ததோ மாம் தத்வதோ ஜ்ஞாத்வா விசதே ததனந்தரம்
|| 55 || (677)

---

55. (யாவான் ய: ச அஸ்மி) நான் எவன் எத் தன்மையோன் என்றும் (மாம்) என்னை (பக்த்யா) பக்தியினுல் (தத்வத:) உண்மையில் (அபிஜாநுதி) உணர்கிருன். (தத:) அதன்பின் (மாம்) என்னை (தத்வத:) உண்மையில் (ஜ்ஞாத்வா) அறிந்து (ததனந் தரம்) சீக்கிரத்தில் (மாம் விசதே) என்னிடம் புகு கின்ருன்.

---

55. யாவான்—அத். 10-கூறியபடி.

ஒ—'யதா நத்ய: ஸ்யந்தமாநு: ஸமுத்ரே அஸ்தங் கச்சந்தி நாமரூபே விஹாய'. (மு. உப. 3. 2. 8.)

ஒ—முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னும் அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானுள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்ருள் அகலிடத்தே ஆசாரத்தை
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் ருளே. (அப்பர்.)

யச்ச—அத். 11, 15-ல் கூறியபடி.

சீக்கிரத்தில்—ஒ—கீ. 4. 39.

सर्वकर्माण्यपि सदा कुर्वाणो मद्व्यपाश्रयः ।
मत्प्रसादा-दवाप्नोति शाश्वतं पदमव्ययम् ॥ ५६ ॥ ॥ ६७८ ॥
चेतसा सर्वकर्माणि मयि सन्न्यस्य मत्परः ।
बुद्धियोग-मुपाश्रित्य मच्चित्तः सततं भव ॥ ५७ ॥ ॥ ६७९ ॥

ஸர்வகர்மாண்யபி ஸதா குர்வாணோ மத்வ்யபாச்ரய: |
மத்ப்ரஸாதா-தவாப்னோதி சாச்வதம் பதமவ்யயம்
|| 56 || (678)

சேதஸா ஸர்வகர்மாணி மயி ஸந்ந்யஸ்ய மத்பர: |
புத்தியோக-முபாச்ரித்ய மச்சித்த: ஸததம் பவ
|| 57 || (679)

---

56. (ஸதா) எப்போதும் (ஸர்வகர்மாணி) எல்லாக் கருமங்களையும் (குர்வாண: அபி) செய்துகொண்டிருப்பவனாயினும் (மத்வ்யபாச்ரய:) என்னிடம் சரண்புகுந்து (மத் ப்ரஸாதாத்) என் அருளால் (சாச்வதம்) அழியாததும் (அவ்யயம்) மாறுபடாததுமான (பதம்) நிலையை (அவாப்னோதி) எய்துகிறான்.

57. (சேதஸா) பகுத்தறிவால் (ஸர்வ கர்மாணி) எல்லாக் கருமங்களையும் (மயி) என்னிடத்தில் (ஸந்ந்யஸ்ய) ஸமர்ப்பித்து (மத்பர:) என்னைவிட வேறொன்றை உயர்வாய்க் கருதாதவனாய் (புத்தி யோகம்) புத்தி யோகத்தை (உபாச்ரித்ய) கைப்பற்றி (ஸததம்) எப்போதும் (மச்சித்த:) என்னிடம் சித்தத்தை நிறுத்தியவனாக (பவ) ஆவாய்.

---

56. மத் வ்யபாச்ரய:—
ஒ—" ததர்ப்பித அகிலாசாரஸ்ஸன், காமக்ரோதாபிமானாதிகம் தஸ்மின்னேவ கரணீயம் "—எல்லாச் செயல்களையும் இறைவனிடம் ஸமர்ப்பித்து, காமம் குரோதம் அபிமானம் முதலியவற்றையுங்கூட அவனிடமே செய்க. (நாரத பக்திஸூத்ரம்.)

57. என்னிடத்தில் ஸமர்ப்பித்து—ஒ—கீ. 9. 27.
புத்தியோகம்—ஸமபுத்தி.

मच्चित्तः सर्वदुर्गाणि मत्प्रसादा-त्तरिष्यसि ।
अथ चेत्त्वमहङ्कारान्न श्रोष्यसि विनङ्क्ष्यसि ॥ ५८ ॥ ॥६८०॥
यदहङ्कार-माश्रित्य न योत्स्य इति मन्यसे ।
मिथ्यैष व्यवसायस्ते प्रकृतिस्त्वां नियोक्ष्यति ॥ ५९ ॥ ॥६८१॥

மச்சித்த: ஸர்வதுர்க்காணி மத்ப்ரஸாதாத்தரிஷ்யஸி |
அத சேத் த்வமஹங்காராந்ந ச்ரோஷ்யஸி விநங்க்ஷ்
யஸி || 58 || (680)
யதஹங்கார-மாச்ரித்ய ந யோத்ஸ்ய இதி மன்யஸே |
மித்யைஷ வ்யவஸாயஸ்தே ப்ரக்ருதிஸ்-த்வாம்
நியோக்ஷ்யதி || 59 || (681)

---

58. (த்வம்) நீ (மச்சித்த:) என்னிடம் சித்தத்தை வைத்து (மத்ப்ரஸாதாத்) என்னருளால் (ஸர்வதுர்க்காணி) எல்லாத் தடைகளையும் (தரிஷ்யஸி) தாண்டிச் செல்வாய். (அத) ஆனால் (அஹங்காராத்) அகங்காரத்தால் (ந ச்ரோஷ்யஸி சேத்) கேளாமற்போனால் (விநங்க்ஷ்யஸி) அழிவடைவாய்.

59. (அஹங்காரம்) அகங்காரத்தை (ஆச்ரித்ய) கைக்கொண்டு (ந யோத்ஸ்யே) போர்புரிய மாட்டேன் (இதி) என்று (மன்யஸே யத்) நினைப்பாயெனின் (தே) உன்னுடைய (ஏஷ வ்யவஸாய:) இந்த நிச்சயம் (மித்யா) பொய்யாம்; (ப்ரக்ருதி:) இயற்கை (த்வாம்) உன்னை (நியோக்ஷ்யதி) கட்டுப்படுத்தி ஏவும்.

---

58. மச்சித்த:—ஒ.—கீ. 10. 8.
அஹங்காரத்தால்—ஒ—"ஸ்வயம் தீரா: பண்டிதம் மன்யமானா:". (கட. உப.)

स्वभावजेन कौन्तेय निबद्धः स्वेन कर्मणा ।
कर्तुं नेच्छसि यन्मोहात् करिष्यस्यवशोऽपि तत् ॥६०॥ ॥६८२॥
ईश्वरः सर्वभूतानां हृद्देशेऽर्जुन तिष्ठति ।
भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥ ६१ ॥ ॥६८३॥

ஸ்வபாவஜேன கௌந்தேய நிபத்த: ஸ்வேன கர்மணா |
கர்த்தும் நேச்சஸி யன்மோஹாத்-கரிஷ்யஸ்-
யவசோऽபி தத் || 60 || (682)
ஈச்வர: ஸர்வ பூதாநாம் ஹ்ருத்தேசேऽர்ஜுன திஷ்டதி |
ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா
|| 61 || (683)

---

60. (கௌந்தேய) குந்தி புத்ரனே! (மோஹாத்) மோஹத்தால் (யத்) எதை (கர்த்தும்) செய்ய (ந இச்சஸி) நீ விரும்பவில்லையோ (தத் அபி) அதையே (ஸ்வபாவஜேன) உடன் பிறந்த (ஸ்வேன கர்மணா) உன் கருமத்தால் (நிபத்த:) கட்டப்பட்டவனாய் (அவச:) உன் வசமில்லாதவனாய் (கரிஷ்யஸி) நீ செய்வாய்.

61. (அர்ஜுன) அர்ஜுனா! (யந்த்ராரூடானி) தேகமாகிய இயந்திரத்தில் ஏற்றிவைக்கப்பட்ட பொம்மைகள் போன்ற (ஸர்வபூதானி) எல்லாப்

---

61. ? —நமது உடல் ஒரு பானை போன்றது. மனம், புத்தி, இந்திரியங்கள் அதிலிடப்பட்ட நீர், அரிசி, காய்கறி போன்றவை. அப்பானையை அடுப்பின்மேல் வைத்தால் அதிலுள்ளவைகளில் சூடேறுகிறது. சூடு பானையுடையதன்று; நீரினுடையதும் அரிசியினுடையதும் காய்கறியினுடையதும்அன்று. அவ்வாறே மனிதனிடமுள்ள சக்தியும் அவனுடையதன்று; இறைவனுடையதே. (ரா. கி.)

ஒ—' ஆத்மானம் ரதினம் வித்தி (கட. உப. 3. 12.)

இதையுணர்வதே **தஹர வித்தை** எனப்படும். ஒ—' அத யதஸ்மின் ப்ரஹ்மபுரே தஹரம புண்டரீகம்' (சா. உப. 8. 1.)

ஞானக்கண் கொண்டு பார்ப்பவருக்கு உயிர்கள்—பாம்பு, பறவை, சிங்கம், எருது, மயில், எலி—எல்லாம் ஈசுவரனுக்கு வாகனங்கள். ஈசுவரனோடு உயிர்களை இணைத்துக் காணும்போது உயிர்களனைத்தும் வணங்குதற்குரியன வாகின்றன.

तमेव शरणं गच्छ सर्वभावेन भारत।
तत्प्रसादात् परां शान्तिं स्थानं प्राप्स्यसि शाश्वतम् ॥ ६२ ॥

தமேவ சரணங் கச்ச ஸர்வபாவேன பாரத |
தத் ப்ரஸாதாத் பராம் சாந்திம் ஸ்தானம் ப்ராப்ஸ்யஸி
சாச்வதம் || 62 || (684)

பிராணிகளேயும் (மாயயா) மாயா சக்தியினுல் (ப்ராமயன்) ஆட்டி வைத்துக்கொண்டு (ஈச்வர:) ஈசுவரன் (ஸர்வபூதானும்) எல்லாப் பிராணிகளுடைய (ஹ்ருத்தேசே) இருதயத்துள்ளும் (திஷ்டதி) நிற்கின்ருன்.

62. (பாரத) பாரத! (ஸர்வபாவேன) எவ்வகை

ஒ—வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி யிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்ருயை யென்சொல்லி வாழ்த்துவனே. (திருவாசகம்)
—கேநேஷிதம...(கேன. உப.)

ஒ—ராமகிருஷ்ணர் தன் உடலேச் சுட்டி 'அமீ யந்த்ரம், தூமீ யந்த்ரீ' என்பார். (நான் யந்திரம் நீ யந்த்ரீ.)

கே. கருமஞ் செய்வதில் மனிதன் ஸ்வதந்திரஞ பரதந்திரஞ?

வி. முக்குணங்களே ஜயிக்காதவரை ஸ்வந்ததிரனன்று, பரதந்திரனே. தான் விருப்பினும் விரும்பாவிடினும் பிரகிருதி மனிதனே எப்போதும் ஆட்டுவிக்கின்றது. (ஒ—3. 5.)

கே. ஆட்டுவிப்பது ஈசுவரஞ, பிரகிருதியா, ஸ்வபாவமா?

வி. ஈசுவரகடாக்ஷத்தால் பிரகிருதியே ஆட்டுவிக்கின்றது. ஈசுவரன் ஸர்வஸாக்ஷி (ஒ—கீ. 9. 10.). ஸ்வபாவம் என்பதும் பிரகிருதியே.

கே மனிதன் பரதந்திரனெனின் விதிவிலக்குகளேக் கூறும் சாஸ்திரத்தால் என்ன பயன்?

வி. விதிவிலக்குகள் ஸ்வபாவத்தை மீறிச் செல்லக் கூறுபவை யன்று. அங்ஙனங் கூறின் அவை பயனற்றவையாம் (நிக்ரஹ: கிம் கரிஷ்யதி 3. 83.) ஸ்வபாவத்துக்கிணங்க நடக்கும் வழியில் ஏற்படுங் துன்பங்களே நீக்கவும் முடிவில் இறைவனடி சேர்க்கவும் ஒத்தாசை செய்யவே சாஸ்திரங்கள். வழி நடப்பவனுக்குப் பாதரக்ஷை போலும் உற்ற துணே போலும் இருளில் கை விளக்குப் போலும் உள்ளன.

इति ते ज्ञान-माख्यातं गुह्याद्-गुह्यतरं मया ।
विमृश्यैत-दशेषेण यथेच्छसि तथा कुरु ॥ ६३ ॥ ॥ ६८५ ॥

இதி தே ஜ்ஞானமாக்யாதம் குஹ்யாத் குஹ்யதரம் மயா |
விம்ருச்யைத-தசேஷேண யதேச்சஸி ததா குரு ||63 || (685)

யானும் (தம் ஏவ) அவனையே (சரணம் கச்ச) சரணமடைவாய். (தத் ப்ரஸாதாத்) அவனருளால் (பராம்) ஒப்புயர்வற்ற (சாந்திம்) சாந்தியையும் (சாச்வதம்) அழிவில்லாத (ஸ்தானம்) பதவியையும் (ப்ராப்ஸ்யஸி) அடைவாய்.

63. (இதி) இங்ஙனம் (குஹ்யாத் குஹ்யதரம்) ரஹஸ்யங்களுள் சிறந்த ரஹஸ்யமான (ஞானம்) ஞானம் (தே) உனக்கு (மயா) என்னால் (ஆக்யாதம்) எடுத்துரைக்கப்பட்டது. (ஏதத்) இதை (அசேஷேண) குறைவின்றி (விம்ருச்ய) விசாரித்து (யதா இச்சஸி) எப்படி விரும்புகிறாயோ (ததா குரு) அப்படிச் செய்.

---

62. ஸர்வபாவேன—ஒ—"ஸர்வதா ஸர்வபாவேன நிச்சிந்தை: பகவானேவ பஜனீய: ஸகீர்த்யமான: சீக்ரமேவ ஆவிர்ப்பவதி அனுபாவயதி பக்தான்." (நாரத பக்தி ஸூத்ரம்.)

ஒ—"ச்ரவணங் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம் | அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்மநிவேதனம்" என்னும் முறைகளால் பகவானை நாடுதல் வேண்டும். (பாகவதம்.)

63. இதி—இச்சொல் இத்துடன் உபதேசம் முடிவடையப் போவதைக் குறிக்கும். அத எனுஞ் சொல் ஆரம்பிக்கும்; இதி எனுஞ்சொல் முடிக்கும். அத வ்யவஸ்திதான் த்ருஷ்ட்வா (1. 20) என்ற இடத்தில் கீதை ஆரம்பம்.

ஒ—ஊட்டுவிப் பானு முறங்குவிப் பானு மிங்கொன்றோ டொன்றை
மூட்டுவிப் பானு முயங்குவிப் பானு முயன்றவினை
காட்டுவிப் பானு மிருவினைப் பாசக் கயிற்றுவழி
யாட்டுவிப் பானு மொருவனுண் டேதில்லை யம்பலத்தே.
(பட்டினத்தார்.)

सर्वगुह्यतमं भूयः शृणु मे परमं वचः ।
इष्टोऽसि मे दृढमिति ततो वक्ष्यामि ते हितम् ॥६४॥ ॥६८६॥

ஸர்வகுஹ்யதமம் பூய: ச்ருணு மே பரமம் வச: |
இஷ்டோऽஸி மே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே
ஹிதம் || 64 || (686)

---

64. (மே) எனது (பரமம்) உயர்ந்ததும் (ஸர்வ குஹ்யதமம்) ரஹஸ்யங்களுக்குட் சிறந்ததுமான (வச:) வார்த்தையை (பூய:) மற்றொரு முறையும் (ச்ருணு) கேட்பாய். (மே) எனக்கு (த்ருடம்) திடமான (இஷ்ட: அஸி) சிநேகிதனாக நீ உள்ளாய்; (தத:) ஆகையால் (தே) உனக்கு (ஹிதம்) நன்மையை (வக்ஷ்யாமி) கூறுகிறேன்.

தில்லையம்பலம், சிற்றம்பலம் எனும் சொற்கள் இருதய ஆகாசத்தையே குறிப்பனவாம்.

ஒ—" ஸ ப்ரஹ்ம ஸ சிவ: ஸ ஹரி: ஸேந்த்ர: ஸோऽக்ஷர: பரம: ஸ்வராட் "

(இருதயகுகையிலுள்ள) அவனே பிரம்மா, அவனே சிவன், அவனே ஹரி, அவனே இந்திரன், அவனே அக்ஷர புருஷன், அவனே பரமேசுவரன். (தை. உப. நாராயண ஸூக்தம்.)

ஈசுவரன் நாம் கொடுக்கும் காணிக்கைகளை வேண்டுவதில்லை. நம்மையே வேண்டுகிறான். நாமும் அவன் கொடுக்கும் வரன்களை வேண்டாமல் அவனையே வேண்டுதல் பக்தியின் எல்லை.

" மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய் "

(திருப்பாவை.)

யதேச்சஸி ததா குரு—நாம் இஷ்டப்பட்டு முழுமனத்துடன் செய்வதையே பகவான் ஏற்கிறான். கட்டாயத்துக்காகச் செய்வதை அவன் விரும்புவதில்லை. இதனால் உலகைப் பகவானுடைய லீலை அல்லது விளையாட்டு என்கிறோம். விளையாட்டில் கட்டாயத்திற்கு இடமில்லை. இதுதான் பகவான் நமக்கு அளித்துள்ள சுதந்திரம். அவனை மறுக்கவும் மறக்கவுங்கூட இடந்தந்து அவன் வேடிக்கை பார்க்கிறான்.

मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु ।
मामेवैष्यसि सत्यं ते प्रतिजाने प्रियोऽसि मे ॥ ६५ ॥ ॥६८७॥
सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥६६॥ ॥६८८॥

மன்மனு பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு |
மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜானே ப்ரியோ ऽஸி
மே || 65 || (687)
ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ |
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி
மா சுச: || 66 || (688)

---

65. (மன்மனு:) என்னிடம் மனத்தை வைத்தவனுய் (மத்பக்த:) என்னிடம் அன்பு செய்பவனுய் (மத்யாஜீ) என்னைப் பூஜிப்பவனுய் (பவ) ஆவாய்; (மாம்) என்னை (நமஸ்குரு) வணங்குவாய்; (மாம் ஏவ) என்னையே (ஏஷ்யஸி) அடைவாய். (மே) எனக்கு (ப்ரிய: அஸி) நீ பிரியமானவன்; (தே) உனக்கு (அஹம்) நான் (ஸத்யம் ப்ரதிஜானே) உண்மையான பிரதிஜ்ஞையையே செய்கின்றேன்.

66. (ஸர்வதர்மான்) எல்லாத் தருமங்களையும் (பரித்யஜ்ய) பற்றற விட்டொழித்து (மாம் ஏகம்) என் ஒருவனையே (சரணம் வ்ரஜ) சரண்புகுவாய். (அஹம்) நான் (த்வா) உன்னை (ஸர்வபாபேப்ய:) எல்லாப் பாவங்களினின்றும் (மோக்ஷயிஷ்யாமி) விடுவிப்பேன். (மா சுச:) வருந்தாதே.

---

65. நீ பிரியமானவன்—ஓ—அர்ஜுனன் கூறியது—
மமைவ த்வம் த்வமேவாஹம் யே மதீயாஸ்-தவைவ தே |
யஸ்த்வாம் த்வேஷ்டி ஸ மாம் த்வேஷ்டி யஸ்த்வாமனு ஸ மாமனு || (ம. பா. வன. 12. 45.)

66. "பற்றுகளை அறவே ஒழித்து அன்பினுல் பணிசெய்து அவனிடம் அடைக்கலம் புகுவதொன்றே நமது கடமை. நமக்

इदं ते नातपस्काय नाभक्ताय कदाचन ।
न चाशुश्रूषवे वाच्यं न च मां योऽभ्यसूयति ॥६७॥ ॥६८९॥

இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசன |
ந சாசுச்ரூஷவே வாச்யம் ந ச மாம் யோऽப்யஸூயதி
|| 67 || (689)

---

67. (இதம்) இந்த சாஸ்திரம் (தே) உனக்கு—என்னால் எடுத்துச் சொல்லப்பட்டது (ந அதபஸ்காய வாச்யம்)—தத்தம் கரும வடிவான—தவஞ்செய்யாதவர்க்கு இதைச் சொல்லக்கூடாது; (ந அபக்தாய கதாசன) பக்தியில்லாதவர்க்கும் இதை ஒருபோதும் சொல்லக்கூடாது; (ச) மேலும் (மாம்) என்னை (ய:) எவன் (அப்யஸூயதி ச) இகழ்கின்றானோ அவனுக்கும (ந) சொல்லக்கூடாது.

கென்று தனியாக வேறு ஒரு காரியமும் கிடையாது. எல்லாம் அவனுடையது.'' (விவேகானந்தர்.)

மாசுச: (வருந்தாதே)—கீ. 2. 11-ல் 'அசோச்யான்,' என்று ஆரம்பித்த உபதேசம் மா சுச: என்று இங்கு முடிவடைகிறது. இது கீதையின் சரம ச்லோகம் எனப்படும்.

"என் வேலைகள் யாவும் அறவே ஒழியவேண்டுமென்றும் என் ஆவியும் உடலும் உடைமையும் ஜகன்மாதாவிடம் ஐக்கியமாக வேண்டுமென்றும் வாழ்த்துவாயாக. பல பணிகளும் பயனற்றவை யெனக் காண்கிறேன். இப்போது என் குருநாதன் 'வா' எனக் கூவி அழைப்பது ஒன்றுதான் கேட்கிறது. இதோ வந்தேன், ஐயனே! நான் பிறந்ததை நினைத்து மகிழ்கின்றேன்; நான் பட்ட பல கஷ்டங்களை நினைந்து மகிழ்கின்றேன்; செய்த பிழைகளை நினைந்தும் மகிழ்கின்றேன்; இனிப் புகவிருக்கும் சாந்த நிலையை நினைந்தும் மகிழ்கின்றேன். நான் ஒருவரையும் பந்தத்துக்குள்ளாக்கவில்லை. என்னுடன் யாதொரு பந்தமும் கொண்டுபோகவுமில்லை.'' (விவேகானந்தர் கடிதம்.)

ஒ—'யேந த்யஜஸி தத் த்யஜ' (ம. பா.)
"எதனால் தியாகம் செய்கின்றாயோ அதையுந் தியாகஞ் செய்."

य इमं परमं गुह्यं मद्भक्ते-ष्वभिधास्यति ।
भक्तिं मयि परां कृत्वा मामेवैष्य-त्यसंशयः ॥ ६८ ॥ ॥६९०॥
न च तस्मान्मनुष्येषु कश्चिन्मे प्रियकृत्तमः ।
भविता न च मे तस्मा-दन्यः प्रियतरो भुवि ॥६९॥ ॥६९१॥

ய இமம் பரமம் குஹ்யம் மத்பக்தேஷ்-வபிதாஸ்யதி |
பக்திம் மயி பராங் க்ருத்வா மாமேவைஷ்யத்-யஸம்சய:
|| 68 || (690)
ந ச தஸ்மான்-மனுஷ்யேஷு கச்சின்மே ப்ரிய
க்ருத்தம: |
பவிதா ந ச மே தஸ்மா-தன்ய: ப்ரியதரோ புவி
|| 69 || (691)

---

68. (ய:) எவன் (இதம் பரமம் குஹ்யம்) இந்தச் சிறந்த ரஹஸ்யத்தை (மத்பக்தேஷு) என் பக்தர்களுக்கு (அபிதாஸ்யதி) அளிக்கின்ருனே அவன், (மயி) என்னிடம் (பராம் பக்திம்) ஒப்புயர்வற்ற பக்தியை (க்ருத்வா) செய்து (அஸம்சய:) ஸந்தேகமில்லாமல் (மாம் ஏவ) என்னையே (ஏஷ்யதி) அடைகின்ருன்.

69. (மனுஷ்யேஷு) மனிதர்களுள் (தஸ்மாத்) அவனைவிட (கச்சித்) எவனும் (மே) எனக்கு (ப்ரிய க்ருத்தம: ச) அதிகப பிரியமான ஸேவை செய்பவனும் (ந) இல்லை. (தஸ்மாத்) அவனைவிட (அன்ய:) வேருெருவன் (மே) எனக்கு (ப்ரியதரா: ச) அதிகப் பிரியமானவனும் (புவி) இப்பூவுலகில் (ந பவிதா) உண்டாகப் போவதில்லை.

பலவகை தருமங்களால் பாபவிருத்திகளை நாசஞ் செய்தபின், அந்த தருமங்களின் எல்லையாயுள்ள பகவானையே சரணடைதல் வேண்டும். அதுவே பரம தருமம்.

ஒரு ஆற்றைக் கடக்க உதவிய தெப்பக்கட்டையை அதைக் கடந்து சென்றபின் தூக்கிப் போகவேண்டிய அவசியமில்லாதவாறு.

अध्येष्यते च य इमं धर्म्यं संवाद-मावयोः ।
ज्ञानयज्ञेन तेनाह-मिष्टः स्यामिति मे मतिः ॥ ७० ॥ ॥६९२॥
श्रद्धावा-ननसूयश्च शृणुयादपि यो नरः ।
सोऽपि मुक्तः शुभाँल्लोकान् प्राप्नुयात् पुण्यकर्मणाम् ॥ ७१ ॥

அத்யேஷ்யதே ச ய இமம் தர்ம்யம் ஸம்வாத-
மாவயோ: |
ஜ்ஞான-யஜ்ஞேன தேனஹ-மிஷ்ட: ஸ்யாமிதி மே
மதி: || 70 || (692)

ச்ரத்தாவா-னனஸூயச்ச ச்ருணுயாதபி யோ நர: |
ஸோऽபி முக்த: சுபான் லோகான் ப்ராப்னுயாத் புண்ய
கர்மணும் || 71 || (693)

---

70. (ச) மேலும் (ய:) எவன் (ஆவயோ:) நம்முடைய (இமம்) இந்த (தர்ம்யம்) புண்ணியம் வாய்ந்த (ஸம்வாதம்) ஸம்பாஷணையை (அத்யேஷ்யதே) பாராயணஞ் செய்கின்றனே (தேன) அவனுல், (அஹம்) நான் (ஜ்ஞானயஜ்ஞேன) ஞானயஜ்ஞத்தால் (இஷ்ட:) பூஜிக்கப் பெற்றவனுக (ஸ்யாம்) ஆகின்றேன் (இதி) என்பது (மே) எனது (மதி:) அபிப்ராயம்.

71. (ச்ரத்தாவான்) சிரத்தை யுடையவனுகவும் (அனஸூய: ச) அவமதிப்பில்லாதவனுகவும் (ய: நர:) எந்த மனிதன் (ச்ருணுயாத் அபி) கேட்கமட்டுஞ் செய்கின்றனே (ஸ: அபி) அவனுங்கூட (முக்த:) விடுபட்டவனுய் (புண்யகர்மணும்) புண்ணியம் செய்தவர்களுக்குரிய (சுபான் லோகான்) புண்ணிய உலகங்களே (ப்ராப்னுயாத்) அடைவான்.

---

71. **எந்த மனிதன்**—எந்த வருணத்தானுயினும், எந்த ஆசிரமத்திலுள்ளவனுயினும், எத்தொழில் புரிந்து வாழ்பவனுயினும் சரி.

कच्चिदेतच्छ्रुतं पार्थ त्वयैकाग्रेण चेतसा ।
कच्चि-दज्ञान-संमोहः प्रणष्टस्ते धनञ्जय ॥ ७२ ॥ ६९४ ॥

अर्जुन उवाच—
नष्टो मोहः स्मृति-र्लब्धा त्वत्प्रसादान्मयाच्युत ।
स्थितोऽस्मि गतसन्देहः करिष्ये वचनं तव ॥ ७३ ॥ ॥६९५॥

கச்சிதேதச்-ச்ருதம் பார்த்த த்வயைகாக்ரேண சேதஸா |
கச்சிதஜ்ஞான-ஸம்மோஹ: ப்ரணஷ்டஸ்தே தனஞ்ஜய || 72 || (694)

அர்ஜுன உவாச—
நஷ்டோ மோஹ:ஸ்ம்ருதிர்-லப்தா த்வத்ப்ரஸாதான்-மயாச்யுத |
ஸ்திதோऽஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசனம் தவ || 73 || (695)

---

72. (பார்த்த) பார்த்தா! (த்வயா) உன்னால் (ஏகாக்ரேண சேதஸா) ஒருமைப்பட்ட மனத்துடன் (ஏதத்) இது (கச்சித் ச்ருதம்) கேட்கப்பட்டதா? (தனஞ்ஜய) தனஞ்ஜயா! (தே) உன்னுடைய (அஜ்ஞான ஸம்மோஹ:) அறியாமையெனும் மயக்கம் (கச்சித் ப்ரணஷ்ட:) நாசமடைந்ததா?

அர்ஜுனன் கூறியது—
73. (அச்யுத) அச்யுதா! (மோஹ:) மதிமயக்கம் (நஷ்ட:) நாசமடைந்து விட்டது; (மயா) என்னால்

---

72. மயக்கம் நாசமடைந்ததா?—இந்நூலைக் கேட்பவன் அறியாமையெனும் மயக்கம் நாசமடையும் வகையில் கேட்க வேண்டும். அதுவே கேள்வியின் பயன்.

73. ஸ்ம்ருதி—நாமரூபவடிவான மாயையை உண்மையெனக்கொண்டு பரம்பொருளை மறத்தல் **மோஹம்**; பகவத்பிரஸாதத்தால் உண்மையறிவை மீண்டும் பெறுதல் **ஸ்ம்ருதி.**

सञ्जय उवाच—

इत्यहं वासुदेवस्य पार्थस्य च महात्मनः ।
संवाद-मिम-मश्रौष-मद्भुत रोमहर्षणम् ॥ ७४ ॥ ॥६९६॥

ஸஞ்ஜய உவாச—
இத்யஹம் வாஸுதேவஸ்ய பார்த்தஸ்ய ச மஹாத்மன:|
ஸம்வாத-மிம-மச்ரௌஷ-மத்புதம் ரோமஹர்ஷணம்
|| 74 || (696)

(த்வத்ப்ரஸாதாத்) உனதனுக்ரஹத்தால் (ஸ்ம்ருதி:) உண்மையான ப்ரஜ்ஞை (லப்தா) அடையப்பட்டது. (கதஸந்தேஹ:) ஸந்தேஹம் நீங்கப் பெற்றவனுக (ஸ்தித: அஸ்மி) நிலேத்து நிற்கின்றேன். (தவ) உன்னுடைய (வசனம்) வார்த்தையை (கரிஷ்யே) செய்கின்றேன்.

ஸஞ்ஜயர் கூறியது—

74. (இதி) இங்ஙனம் (அஹம்) நான் (வாஸுதேவஸ்ய) வாஸுதேவனுக்கும் (மஹாத்மன: பார்த்தஸ்ய ச) மஹாத்மாவான பார்த்தனுக்கும் நிகழ்ந்த (இமம் ரோமஹர்ஷணம் அத்புதம் ஸம்வாதம்) இந்தப் புளகாங்கிதம் செய்யும் அற்புதமான ஸம்பாஷணையை (அச்ரௌஷம்) கேட்டேன்.

ஒ—மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே. (திருமந்திரம்.)

கரிஷ்யே வசனம் தவ—இனி எனக்கென ஒரு கருமமும் கிடையாதென உணர்ந்தேன். லோக ஸங்க்ரஹத்திற்கு எது நன்மையோ அதை நீ யெடுத்துச் சொல்லியுள்ளபடி செய்வேன். எது உன் விருப்பமோ அதுவே எனக்கு உகந்தது, அதுவே என் கடமை.

व्यासप्रसादा-च्छ्रुतवा-नेतद्-गुह्यमहं परम् ।
योगं योगेश्वरात् कृष्णात् साक्षात् कथयतः स्वयम् ॥ ७५ ॥
राजन् संस्मृत्य संस्मृत्य संवाद-मिम-मद्भुतम् ।
केशवार्जुनयोः पुण्यं हृष्यामि च मुहुर्मुहुः ॥७६॥ ॥ ६९८ ॥

வ்யாஸப்ரஸாதாச்-ச்ருதவா-னேதத்-குஹ்ய-மஹம்பரம்|
யோகம் யோகேச்வராத் க்ருஷ்ணுத் ஸாக்ஷாத்-கதயத:
ஸ்வயம் || 75 || (697)
ராஜன் ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ஸம்வாத மிம-
மத்புதம் |
கேசவாऽர்ஜுனயோ: புண்யம் ஹ்ருஷ்யாமி ச முஹுர்
முஹு: || 76 || (698)

---

75. (அஹம்) நான் (வ்யாஸப்ரஸாதாத்) வியாஸருடைய திருவருளால் (ஏதத்பரம் குஹ்யம் யோகம்) இந்த ஒப்புயர்வற்ற ரஹஸ்யமான யோகத்தை (யோகேச்வராத் க்ருஷ்ணுத்) யோகேசுவரனுகிய கிருஷ்ணனிடமிருந்து (ஸாக்ஷாத்) நேராக (ஸ்வயம்) தானே (கதயத:) சொல்ல (ச்ருதவான்) கேட்கப் பெற்றவனுனேன்.

76. (ராஜன்) அரசே! (கேசவார்ஜுனயோ:) கேசவனுக்கும் அர்ஜுனனுக்கும் — நிகழ்ந்த—(இமம் புண்யம் அத்புதம் ஸம்வாதம்) இந்தப் புண்ணியம் வாய்ந்த அற்புதமான ஸம்பாஷணையை (ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய) நினைந்து நினைந்து (முஹுர்: முஹு:) மேலும் மேலும் (ஹ்ருஷ்யாமி) மகிழ்கின்றேன்.

तच्च संस्मृत्य संस्मृत्य रूप-मत्यद्भुतं हरेः ।
विस्मयो मे महान् राजन् हृष्यामि च पुनःपुनः ॥७७॥ ॥६९९॥
यत्र योगेश्वरः कृष्णो यत्र पार्थो धनुर्धरः ।
तत्र श्री-र्विजयो भूति-र्ध्रुवा नीति-र्मति-र्मम ॥७८॥ ॥७००॥

इति श्रीमहाभारते शतसाहस्र्यां संहितायां वैयासिक्यांभीष्मपर्वणि श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे मोक्षसन्न्यासयोगो नाम अष्टादशोऽध्यायः ॥

தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபமத்யத்புதம் ஹரே: |
விஸ்மயோ மே மஹான் ராஜன் ஹ்ருஷ்யாமி ச புன: புன: ||77|| (699)
யத்ர யோகேச்வர: க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்த்தர: |
தத்ர ஸ்ரீர்விஜயோ பூதிர்-த்ருவா நீதிர்-மதிர்-மம || 78 ||

இதி ஸ்ரீமஹாபாரதே சதஸாஹஸ்ர்யாம் ஸம்ஹிதாயாம் வையாஸிக்யாம் பீஷ்மபர்வணி ஸ்ரீமத் பகவத்கீதா-ஸூபநிஷத்ஸு ப்ரஹ்மவித்யாயாம் யோக-சாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுனஸம்வாதே மோக்ஷஸந்ந்யாஸயோகோ நாம அஷ்டாதசோऽத்யாய: ||

77. (ராஜன்) அரசே! (ஹரே:) ஹரியினுடைய (தத்) அந்த (அதி அத்புதம்) வெகு அற்புதமான (ரூபம் ச) உருவத்தையும் (ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய) நினைந்து நினைந்து (மே) எனக்கு (மஹான் விஸ்மய:) பெரியதொரு வியப்பு—உண்டாகிறது; (புன: புன:) மீண்டும் மீண்டும் (ஹ்ருஷ்யாமி ச) மகிழ்ச்சியுங் கொள்கிறேன்.

78. (யோகேச்வர:) யோகேச்வரனாகிய (க்ருஷ்ண:) கிருஷ்ணன் (யத்ர) எங்கே இருக்கின்றானோ, (தனுர்த்தர:) வில்லாளியான (பார்த்த:) அர்ஜுனன் (யத்ர) எங்கே இருக்கின்றானோ (தத்ர) அங்கேதான் (ஸ்ரீ:) மங்களமும் (விஜய:) வெற்றியும் (பூதி:) பெருமையும் (த்ருவா) நிச்சயமான (நீதி:) நீதியும் என்பது (மே) எனது (மதி:) கொள்கை.

இங்ஙனம் வியாஸரருளிய
நூறாயிரம் சுலோகம் நிறைந்த
மஹாபாரதத்தில் பீஷ்மபர்வத்தினிடை
பிரம்ம வித்தையாயும் யோக சாஸ்திரமாயும்
ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் ஸம்பாஷணை
யாயும் விளங்கும் ஸ்ரீமத் பகவத்கீதை என்னும்
உபநிஷத்தில் மோக்ஷஸந்யாஸயோகம்
என்று பெயர்பெற்ற பதினெட்டாவது
அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீமத் பகவத்கீதா சாஸ்திரம் முற்றும்

அத்தியாய விஷயச் சுருக்கம்:—

சந்யாசத் தாலே தளராத ஞானத்தை
நன்மையுறப் பெற்றதனால் நாடறிய—சொன்மலியும்
முத்திதனைப் பெற்றிடலே முன்னோன் மொழிந்தகற்றும்
புத்தியுறு மோக மெலாம் புக்கு. (கீ. வெ.)

ஸந்நியாஸம், தியாகம் என்பவற்றின் தத்துவத்தை அர்ஜுனன் கேட்டல். காம்ய கருமங்களை விடுதல் ஸந்நியாஸம் எனவும் ஸர்வகர்மபலனையும் விடுதல் தியாகம் எனவும் பகவான் கூறுதல். ஸாத்விகத்தியாகி துக்ககரமென்று விதித்ததோர் கர்மத்தை விடவும் மாட்டான். ஸுககரமென்று இச்சிக்கவும் மாட்டான் எனல். கர்மத்தை உடல் படைத்த எவரும் முழுதும் விடுதல் முடியாதாதலின் கர்மபலனை விடுதலே உபதேசிக்கப்பட்டது எனல். பலனில் பற்றுடையோர்க்கே சுகமும் துக்கமும் வரும்; பற்றுவிட்டவர்க்கு

சுகமுமில்லை துக்கமுமில்லையெனல். கருமமும், கருவியும் முக்குணங்களால் எவ்வாறு வேற்றுமைப்படும் என்று விளக்குதல். கர்த்தாவின் ஸ்வபாவமும், அவன் புத்தியும், திருதியும், அவன் பெறும் சுகமும், இவ்வாறு வேறுபடும் எனல். நைஷ்கர்ம்யஸித்தி இன்னதெனல்; அந்நிலையெய்தியவனுடைய ப்ரஹ்ம நிஷ்டை, ஸர்வாந்தர்யாமியாகிய ஈசுவரன் ஸர்வபூதங்களையும் தன்னிச்சைப்படி நடத்துவன் எனலும் அவனையே சரணமடைய வேண்டும் எனலும்.

"எல்லா அறங்களையும் விட்டொழிந்திங் கென்றனையே
நல்லாய் சரண்புக நான் உன்னை—அல்லல் தரு
பாவங்களின் முற்றும் பற்றறவே வீடுவிப்பேன்
மேவுதுயர் எல்லாம் விடு."

என்ற சரம சுலோகத்துடன் உபதேசத்தைத் தலைக்கட்டுதல்.

இவ்வுபதேசத்தைப் பெறுதற்கு உரிமை உடையவர் இவர் உரிமையில்லாதார் இவர் எனல். கீதையை அன்போடு படிப்பவனுங் கேட்பவனும் பாவங்கள் நீங்கி முக்தியடைவான் எனல்.

இவ்வுபதேசத்தால் மோஹம் நீங்கி உண்மையான ஞானம் தன் உள்ளத்தில் உதித்ததென்று அர்ஜுனன் கூறுதல்.

வியாஸருடைய அருளால் இவ்வுபதேசத்தை அர்ஜுனன் கேட்டதுபோலவே தானும் ஸாக்ஷாத்தாகக் கேட்கப்பெற்ற பெரும் பாக்கியத்தை நினைந்து ஸஞ்ஜயர் மகிழ்ச்சி பொங்குதல்.

சீரார் வியாதன் திருவருளால் யான் கேட்டேன்
பேரார் மறையிதனைப் பெட்புடனே—தாராரும்
கண்ணனே என்முன் கழறவுயர் யோகமதை
எண்ணரும்யோ கேசன்பால் ஈங்கு.
யோகேசன் கண்ணனெங் குள்ளானே வில்விசயன்
வாகினெவண் உற்றிடுமோ மற்றங்குப்—போகத்
திருவும் விசயமும் செல்வப் பெருக்கும்
மருவிடுமே நியாயமொடு வாய்த்து.
பண்ணுறு பா நூறுயிரம் பெறுமா பாரதத்தின்
கண்ணுறு நற் கீதையெனும் கண்ணனருள்—எண்ணுமறை
உட்பொருளாய் ஒண்பிரம வித்தையுமாம் யோகநூல்
பெட்புறுவார்க் கில்லை பிறப்பு. (கீ. வெ.)

ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ஸ்ரீராமகிருஷ்ண தீபம்
எனும் உரை முற்றும்.

अनुबन्धः ॥ १ ॥

॥ श्रीमद्भगवद्गीता-माहात्म्यम् ॥

शौनक उवाच—

गीतायाश्चैव माहात्म्यं यथावत् सूत मे वद ।
पुरा नारायणक्षेत्रे व्यासेन मुनिनोदितम् ॥ १ ॥

सूत उवाच—

भद्रं भगवता पृष्टं यदि गुप्त-तमं परम् ।
शक्यते केन तद्वक्तुं गीता-माहात्म्य-मुत्तमम् ॥ २ ॥

அனுபந்தம் 1

ஸ்ரீமத் பகவத்கீதா-மாஹாத்ம்யம்

சௌனக உவாச—

கீதாயாச்சைவ மாஹாத்ம்யம் யதாவத் ஸூத மே வத|
புரா நாராயணக்ஷேத்ரே வ்யாஸேன முனினோ
திதம் || 1 ||

ஸூத உவாச—

பத்ரம் பகவதா ப்ருஷ்டம் யதி குப்த-தமம் பரம்
சக்யதே கேன தத்வக்தும் கீதா மாஹாத்ம்ய-முத்த
மம் || 2 ||

சௌனகர் கூறியது—

1. ஸூதரே! கீதையின் மாஹாத்மியத்தை முன்னர் நாராயண க்ஷேத்திரத்தில் வியாஸமுனிவரால் கூறப்பட்ட வண்ணம் தெளிவுற அடியேனுக்குக் கூறியருளப் பிரார்த்திக்கிறேன்.

ஸூதர் கூறியது—

2. அது பரம ரஹஸ்யமாய்ப் போற்றப்படுவது எனினும் தேவரீர் கேட்டது மங்களகரமானதே; அந்த உத்தமமான கீதா மாஹாத்மியத்தைக் கூறவல்லவர் யாவர்?

कृष्णो जानाति वै सम्यक् किञ्चित् कुन्तीसुतः फलम् ।
व्यासो वा व्यासपुत्रो वा याज्ञवल्क्योऽथ मैथिलः ॥ ३ ॥
अन्ये श्रवणतः श्रुत्वा लेशं सङ्कीर्तयन्ति च ।
तस्मात् किञ्चिद्वदाम्यत्र व्यासस्यास्यान्मया श्रुतम् ॥ ४ ॥
संसारसागरं घोरं तर्तु-मिच्छति यो नरः ।
गीतानावं समासाद्य पारं यातु सुखेन सः ॥ ५ ॥

க்ருஷ்ணோ ஜாநாதி வை ஸம்யக் கிஞ்சித் குந்தீஸுத: பலம் |
வ்யாஸோ வா வ்யாஸபுத்ரோ வா யாஜ்ஞவல்க்யோऽத மைதில: || 3 ||
அன்யே ச்ரவணத: ச்ருத்வா லேசம் ஸங்கீர்த்தயந்தி ச |
தஸ்மாத் கிஞ்சித்-வதாம்யத்ர வ்யாஸஸ்யாஸ்யான்-மயா ச்ருதம் || 4 ||
ஸம்ஸார-ஸாகரங் கோரம் தர்த்து-மிச்சதி யோ நர: |
கீதாநாவம் ஸமாஸாத்ய பாரம் யாது ஸுகேன ஸ: ||5||

---

3. அது நன்றாகக் கிருஷ்ணனுக்கே தெரியும்; அதன் பயன் சிறிது அர்ஜுனனுக்குத் தெரியும்; வியாஸருக்கும், வியாஸ புத்திரரான சுகருக்கும் தெரியும்; பின யாஜ்ஞவல்கியருக்கும் மிதிலை மன்னனான ஜனகருக்கும் தெரியும்.

4. மற்றவர்கள் பிறரிடங் கேட்டு அதில் சிறிதம்சத்தையே வர்ணிப்பர். அடியேன் வியாஸர் திருவாய் மலர்ந்தருளக் கேட்டதில் சிறிதை உமக்குக் கூறுகிறேன்.

5. பயங்கரமான ஸம்ஸார ஸாகரத்தை எந்த மனிதன் கடக்க விரும்புகிறானே அவன் கீதையாகிய கப்பலில் ஏறிச் சுகமாக அக்கரை செல்லலாம்.

यस्यान्तःकरणं नित्यं गीतायां रमते सदा ।
स साग्निकः सदा जापी क्रियावान् स च पण्डितः ॥ ६ ॥
गीतायाः पुस्तकं यत्र नित्य-पाठश्च वर्तते ।
तत्र सर्वाणि तीर्थानि प्रयागादीनि भूतले ॥ ७ ॥
निवसन्ति सदा देहे देहशेषेऽपि सर्वदा ।
सर्वे देवाश्च ऋषयो योगिनो देहरक्षकाः ॥ ८ ॥

யஸ்யாந்த:கரணம் நித்யம் கீதாயாம் ரமதே ஸதா |
ஸ ஸாக்னிக: ஸதா ஜாபீ க்ரியாவான் ஸ ச பண்டித:||6||
கீதாயா: புஸ்தகம் யத்ர நித்ய-பாடச்ச வர்த்ததே |
தத்ர ஸர்வாணி தீர்த்தானி ப்ரயாகாதீனி பூதலே || 7 ||
நிவஸந்தி ஸதா தேஹே தேஹசேஷேऽபி ஸர்வதா |
ஸர்வே தேவாச்ச ருஷயோ யோகினோ தேஹரக்ஷகா: || 8 ||

---

6. எவனுடைய உள்ளம் எப்போதும் கீதையில் ஆனந்தமடைகிறதோ, அவன் அக்னியைப் பூஜித்தவனுவான்; இடைவிடாத ஜபம் செய்தவனுவான்; செய்யவேண்டிய கருமங்களை யெல்லாம் செய்தவனுவான்; எல்லாம் உணர்ந்த பண்டிதனுவான்.

7-8. எவ்விடத்தில் கீதை புஸ்தகம் இருக்கிறதோ, எங்கே கீதா பாடம் நிகழ்கிறதோ, அவ்விடத்தில் இவ்வுலகிலுள்ள பிரயாகை முதலிய ஸகல தீர்த்தங்களும் எப்போதும் உறைகின்றன. கீதையைப்போற்றிப் படிப்பவனிடத்தில் அவன் உயிருள்ள போதும் உயிர் போன பின்பும் ஸகல தீர்த்தங்களும் உறைகின்றன. எல்லாத் தேவர்களும் ரிஷிகளும் யோகிகளும் அவனை ரக்ஷித்துக்கொண்டு அவனிடம் வாஸம் செய்கின்றனர்.

श्री भगवानुवाच—
गीता मे हृदयं पार्थ गीता मे सारमुत्तमम् ।
गीता मे ज्ञान-मत्युग्रं गीता मे ज्ञान-मव्ययम् ॥ ९ ॥
गीताश्रयेऽहं तिष्ठामि गीता मे परमं गृहम् ।
गीता-ज्ञानं समाश्रित्य त्रिलोकीं पालयाम्यहम् ॥ १० ॥
गीता-नामानि वक्ष्यामि गुह्यानि शृणु पाण्डव ।
कीर्तनात् सर्वपापानि विलयं यान्ति तत्क्षणात् ॥ ११ ॥

ஸ்ரீபகவானுவாச—
கீதா மே ஹ்ருதயம் பார்த்த கீதா மே ஸார முத்தமம்|
கீதா மே ஜ்ஞான-மத்யுக்ரம் கீதா மே ஜ்ஞான-
மவ்யயம் || 9 ||
கீதாச்ரயேऽஹங் திஷ்டாமி கீதா மே பரமங் க்ருஹம் |
கீதா-ஜ்ஞானம் ஸமாச்ரித்ய த்ரிலோகீம் பாலயாம்
யஹம் || 10 ||
கீதா-நாமானி வக்ஷ்யாமி குஹ்யானி ச்ருணுபாண்டவ |
கீர்த்தனத் ஸர்வ-பாபானி விலயம் யாந்தி தத்க்ஷணத்
|| 11 ||

ஸ்ரீ பகவான் கூறியது—

9. பார்த்தா! கீதை எனது இருதயம்; கீதை எனது ஸாரமான தத்துவம்; கீதை எனது ஒளி சிறந்த அறிவு; கீதை எனது அழியாத ஞானம்.

10. நான் கீதையில் உறைகின்றேன்; கீதை எனது உத்தம வீடு; கீதா ஞானத்தைக்கொண்டே நான் மூவுலகையும் பரிபாலிக்கின்றேன்.

11. பாண்டவா! கீதையின் ரஹஸ்யமான நாமங்களைக் கூறுகிறேன், கேள். அவற்றை உச்சரித்த மாத்திரத்தில் எல்லாப் பாவங்களும் நாசமடைகின்றன.

गङ्गा गीता च गायत्री सीता सत्या सरस्वती ।
ब्रह्मवल्ली ब्रह्मविद्या त्रिसन्ध्या मुक्ति-गेहिनी ॥ १२ ॥

अर्ध-मात्रा चिदानन्दा भवघ्नी भ्रान्ति-नाशिनी ।
वेदत्रयी परानन्दा तत्त्वार्थज्ञान-मञ्जरी ॥ १३ ॥

इत्येतानि जपेन्नित्यं नरो निश्चल-मानसः ।
ज्ञान-सिद्धिं लभे-न्नित्यं तथान्ते परमं पदम् ॥ १४ ॥

கங்கா கீதா ச காயத்ரீ ஸீதா ஸத்யா ஸரஸ்வதீ |
ப்ரஹ்மவல்லீ ப்ரஹ்மவித்யா த்ரிஸந்த்யா முக்தி-
கேஹினீ || 12 ||

அர்த்தமாத்ரா சிதானந்தா பவக்னீ ப்ராந்திநாசினீ |
வேதத்ரயீ பரானந்தா தத்வார்த்தஜ்ஞான-மஞ்ஜரீ ||13||

இத்யேதானி ஜபேங்-நித்யம் நரோ நிச்சல மானஸ: |
ஜ்ஞான-ஸித்திம் லபேங்-நித்யம் ததாந்தே பரமம்
பதம் || 14 ||

12-13. கங்கா, கீதா, காயத்ரீ, ஸீதா, ஸத்யா, ஸரஸ்வதீ, ப்ரஹ்மவல்லீ, ப்ரஹ்மவித்யா, த்ரிஸந்த்யா, முக்திகேஹினீ, அர்த்தமாத்ரா, சிதானந்தா, பவக்னீ, ப்ராந்திநாசினீ, வேதத்ரயீ, பரானந்தா, தத்வார்த்த ஜ்ஞானமஞ்ஜரீ.

14. இந்நாமங்களை எந்த மனிதன் நிச்சலமான மனதுடன் ஜபிக்கின்றானோ அவன் ஞான ஸித்தியை யும் முடிவில் பரமபதத்தையும் அடைகின்றான்.

पितृ-नुद्दिश्य यः श्राद्धे गीता-पाठं करोति हि ।
सन्तुष्टाः पितर-स्तस्य निरया-द्यान्ति स्वर्गतिम् ॥ १५ ॥
गीतासु न विशेषोऽस्ति जनेषूच्चावचेषु च ।
ज्ञानेष्वेव समग्रेषु समा ब्रह्म-स्वरूपिणी ॥ १६ ॥
(श्रीवैष्णवीय-तन्त्रसारम्)
गीता सुगीता कर्तव्या किमन्यैः शास्त्रसंग्रहैः ।
या स्वयं पद्मनाभस्य मुखपद्मा-द्विनिःसृता ॥ १७ ॥

பித்ரு-னுத்திச்ய ய: ச்ராத்தே கீதா-பாடங் கரோதி ஹி |
ஸந்துஷ்டா: பிதரஸ்-தஸ்ய நிரயாத்-யாந்தி ஸ்வர்-
கதிம் || 15 ||
கீதாஸு ந விசேஷோऽஸ்தி ஜனேஷூச்சாவசேஷு ச|
ஜ்ஞானேஷ்வேவ ஸமக்ரேஷு ஸமா ப்ரஹ்ம-ஸ்வ
ரூபிணீ || 16 ||
(ஸ்ரீவைஷ்ணவீய தந்த்ரஸாரம்.)
கீதா ஸுகீதா கர்த்தவ்யா கிமன்யை: சாஸ்த்ர-
ஸங்க்ரஹை: |
யா ஸ்வயம் பத்மநாபஸ்ய முகபத்மாத்-விநி:ஸ்ருதா ||17||

15. பிதிருக்களை உத்தேசித்து எவன் சிராத்தத்தில் கீதா பாராயணஞ் செய்கின்றானோ அவனுடைய பிதிருக்கள் நரகத்தினின்று விடுபட்டுத் திருப்தியடைந்தவர்களாய் ஸ்வர்க்கம் புகுகின்றனர்.

16. கீதையைப் படிப்பதில் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற பேதம் கிடையாது. அதனாலுண்டாகும் ப்ரஹ்மஸ்வரூப ஞானத்திலும் அனைவரும் ஸமமே. (ஸ்ரீ வைஷ்ணவீய தந்த்ரஸாரம்).

17. நேரில் பத்மநாபனுடைய முகாரவிந்தத்திலிருந்து பெருகிய கீதையை நன்றாகப் பாடிப் படித்து மனனஞ் செய்தல் வேண்டும். வேறு சாஸ்திரத் தொகுதியாலாவதென்ன ?

सर्व-शास्त्रमयी गीता सर्व-देवमयो हरिः ।
सर्व-तीर्थमयी गङ्गा सर्व-वेदमयो मनुः ॥ १८ ॥
गीता गङ्गा च गायत्री गोविन्देति हृदि स्थिते ।
चतु-र्गकार-संयुक्ते पुन-र्जन्म न विद्यते ॥ १९ ॥
(श्रीमहाभारतम्)

एकं शास्त्रं देवकी-पुत्र-गीतं एको देवो देवकीपुत्र एव ।
एको मन्त्र-स्तस्य नामानि यानि कर्माप्येकं तस्य देवस्य सेवा
॥ २० ॥

ஸர்வ-சாஸ்த்ரமயீ கீதா ஸர்வ தேவமயோ ஹரி: |
ஸர்வ-தீர்த்தமயீ கங்கா ஸர்வ-வேதமயோ மனு: || 18 ||
கீதா கங்கா ச காயத்ரீ கோவிந்தேதி ஹ்ருதி ஸ்திதே |
சதுர்-ககார-ஸம்யுக்தே புனர்-ஜன்ம ந வித்யதே | 19 ||
(ஸ்ரீமஹாபாரதம்)

ஏகம் சாஸ்த்ரம் தேவகீபுத்ர-கீதம்
ஏகோ தேவோ தேவகீபுத்ர ஏவ |
ஏகோ மந்த்ரஸ் தஸ்ய நாமானி யானி
கர்மாப்யேகம் தஸ்ய தேவஸ்ய ஸேவா || 20 ||

---

18. கீதை ஸர்வ சாஸ்திர மயம்; ஹரி தேவ மயன்; கங்கை ஸர்வதீர்த்தமயம்; மனு ஸர்வவேத மயன்.

19. கீதை கங்கை காயத்ரீ கோவிந்தன் என்ற நாலு ககார நாமங்கள் இருதயத்தில் நிலைபெற்ருல் புனர் ஜன்மம் இல்லை. (ஸ்ரீமஹாபாரதம்).

20. ஒன்றே சாஸ்திரம், தேவகீ புத்திரனுல் பாடப்பெற்ற கீதை; ஒன்றே தெய்வம், தேவகீ புத்திரனுயவதரித்த பகவான்; ஒன்றே மந்திரம் அவனுடைய நாமங்கள் எவையோ அவை; ஒன்றே கருமமும், அந்த தேவனுடைய ஸேவையே.

त्वमेव माता च पिता त्वमेव
त्वमेव बन्धुश्च सखा त्वमेव ।
त्वमेव विद्या द्रविणं त्वमेव
त्वमेव सर्वं मम देवदेव ॥ २१ ॥

श्रीकृष्णाय परब्रह्मणे नमः
॥ हरिः ओं तत् सत् ॥

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ
த்வமேவ பந்துச்ச ஸகா த்வமேவ |
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தேவ தேவ || 21 ||

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:
|| ஹரி: ஓம் தத் ஸத் ||

---

21. தேவதேவ! தாயும் நீயே, 'தகப்பனும் நீயே, சுற்றமும் நீயே, நண்பனும் நீயே, கல்வியும் நீயே, பொருளும் நீயே, அனைத்தும் எனக்கு நீயே.

பரப்பிரம்மமாகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நமஸ்காரம்.

ஹரி: ஓம் தத் ஸத்.

अनुबन्धः ॥ २ ॥

॥ श्रीमद्भगवद्गीता-जपविधिः ॥

ओं अस्य श्रीभगवद्गीता-माला-महामन्त्रस्य भगवान् वेदव्यास ऋषिः । अनुष्टुप् छन्दः । श्रीकृष्णः परमात्मा देवता ॥ १ ॥

अशोच्यानन्व-शोचस्त्वं प्रज्ञावादांश्च भाषस इति बीजम् । सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज इति शक्तिः । अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुच इति कीलकम् ॥ श्रीकृष्ण-प्रीत्यर्थे श्रीभगवद्गीता-मालामहामन्त्रजपे विनियोगः ॥

नैनं छिन्दन्ति शस्त्राणि नैनं दहति पावकः । इत्यंगुष्ठाभ्यां नमः । न चन क्लेदयन्त्यापो न शोषयति मारुतः । इति तर्जनीभ्यां नमः ।

அனுபந்தம் 2

ஶ்ரீமத் பகவத்கீதா ஜபவிதி :

ஓம் அஸ்ய ஶ்ரீ பகவத்கீதா-மாலா-மஹாமந்த்ரஸ்ய பகவான் வேதவ்யாஸ ருஷி: | அனுஷ்டுப் ச்சந்த: | ஶ்ரீக்ருஷ்ண: பரமாத்மா தேவதா || 1 ||

அசோச்யானன்வசோசஸ்-த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ச்ச பாஷஸ இதி பீஜம் | ஸர்வ-தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ இதி சக்தி: | அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச இதி கீலகம் | ஶ்ரீக்ருஷ்ண-ப்ரீத்யர்த்தே ஶ்ரீ பகவத்கீதா-மாலா-மஹா மந்த்ர-ஜபே விநியோகः || 2 ||

நைநஞ் சிந்தந்தி சஸ்த்ராணி நைநங் தஹதி பாவக:| இத்யங் குஷ்டாப்யாம் நம: | ந சைனம் க்லேதயந்த்

अच्छेद्योऽय-मदाह्योऽय-मक्लेद्यो-ऽशोष्य एव च । इति मध्यमाभ्यां नमः । नित्यः सर्वगतः स्थाणु-रचलोऽयं सनातनः। इत्यनामिकाभ्यां नमः। पश्य मे पार्थ रूपाणि शतशोऽथ सहस्रशः । इति कनिष्ठिकाभ्यां नमः। नानाविधानि दिव्यानि नानावर्णाकृतीनि च। इति करतल-करपृष्ठाभ्यां नमः ॥ ३ ॥

नैनं छिन्दन्ति शस्त्राणि नैनं दहति पावकः । इति हृदयाय नमः । न चैनं क्लेदयन्त्यापो न शोषयति मारुतः। इति शिरसे स्वाहा । अच्छेद्योऽय-मदाह्योऽय-मक्लेद्योऽशोष्य एव च। इति शिखायै वषट् । नित्यः सर्वगतः स्थाणु-रचलोऽयं सनातनः । इति कवचाय हुम् । पश्य मे पार्थ रूपाणि शतशोऽथ सहस्रशः । इति नेत्रत्रयाय वौषट् ।

யாபோ ந சோஷயதி மாருத:| இதி தர்ஜனீப்யாம் நம: | அச்சேத்யோऽய-மதாஹ்யோऽய - மக்லேத்யோऽ சோஷ்ய ஏவ ச | இதி மத்யமாப்யாம் நம: | நித்ய: ஸர்வகத:ஸ்தாணு-ரசலோऽயம் ஸநாதன: | இதி அநாமிகாப்யாம் நம: | பச்ய மே பார்த்த ரூபாணி சதசோऽத ஸஹஸ்ரச: | இதி கனிஷ்டிகாப்யாம் நம: | நாநாவிதானி திவ்யானி நாநவர்ணக்ருதீனி ச | இதி கரதல கரப்ருஷ்டாப்யாம் நம: || 3 ||

நைநஞ் சிந்தந்தி சஸ்த்ராணி நைநங் தஹதி பாவக: | இதி ஹ்ருதயாய நம: | ந சைனங் க்லேதயந்த்யாபோ ந சோஷயதி மாருத: | இதி சிரஸே ஸ்வாஹா | அச்சேத்யோऽய-மதாஹ்யோऽய-மக்லேத்யோऽ சோஷ்ய ஏவ ச | இதி சிகாயை வஷட் | நித்ய: ஸர்வ

नानाविधानि दिव्यानि नानावर्णाकृतानि च । इति अस्त्राय फट्॥
भूर्भुवस्सुवरोमिति दिग्बन्धः ॥ ४ ॥

ध्यानम्

ओं ॥ पार्थाय प्रतिबोधितां भगवता नारायणेन स्वयं
व्यासेन ग्रथितां पुराण-मुनिना मध्ये महाभारतम् ।
अद्वैतामृतवर्षिणीं भगवती-मष्टादशाध्यायिनी-
मंब त्वा-मनुसन्दधामि भगवद्गीते भव-द्वेषिणीम् ॥ ५.१ ॥
नमोऽस्तु ते व्यास विशालबुद्धे फुल्लारविन्दायत-पत्र-नेत्र ।
येन त्वया भारततैल-पूर्णः प्रज्वालितो ज्ञानमयः प्रदीपः॥५.२॥

கத: ஸ்தாணு-ரசலோऽயம் ஸநாதன: | இதி-கவசாய ஹூம் | பச்ய மே பார்த்த ரூபாணி சதசோऽத ஸஹஸ்ரச: | இதி நேத்ர-த்ரயாய வௌஷட் | நாநா-விதானி திவ்யானி நாநா-வர்ணாக்ருதீனி ச | இதி அஸ்த்ராய பட் || பூர்ப்புவஸ்ஸுவரோமிதி திக்பந்த: || 4 ||

த்யானம்

ஓம் || பார்த்தாய ப்ரதி-போதிதாம் பகவதா நாராயணேன ஸ்வயம்
வ்யாஸேன க்ரதிதாம் புராண-முனிஞ மத்யே மஹாபாரதம் |
அத்வைதாம்ருத-வர்ஷிணீம் பகவதீ-மஷ்டாதசாத்யாயினீ-மம்ப த்வா-மனுஸந்ததாமி பகவத்கீதே பவத்வேஷிணீம் || 5-1 ||
நமோऽஸ்துதே வ்யாஸ விசாலபுத்தே
புல்லாரவிந்தாயத-பத்ர-நேத்ர |
யேந த்வயா பாரததைல-பூர்ண:
ப்ரஜ்வாலிதோ ஜ்ஞானமய: ப்ரதீப: || 5-2 ||

प्रपन्न-पारिजाताय तोत्र-वेत्रैक-पाणये ।
ज्ञानमुद्राय कृष्णाय गीतामृतदुहे नमः ॥ ५.३ ॥
वसुदेव-सुतं देवं कंसचाणूर-मर्दनम् ।
देवकी-परमानन्दं कृष्णं वन्दे जगद्गुरुम् ॥ ५.४ ॥
भीष्म-द्रोण-तटा जयद्रथ-जला गान्धार-नीलोत्पला
शल्य-ग्राहवती कृपेण वहनी कर्णेन वेलाकुला ।
अश्वत्थाम-विकर्ण-घोर-मकरा दुर्योधनावर्तिनी
सोत्तीर्णा खलु पाण्डवै रण-नदी कैवर्तकः केशवः ॥ ५.५ ॥
पाराशर्यवचः-सरोज-ममलं गीतार्थ-गन्धोत्कटं
नानाख्यानक-केसरं हरिकथा-संबोधनाबोधितम् ।

ப்ரபன்ன-பாரிஜாதாய தோத்ர-வேத்ரைக-பாணயே |
ஜ்ஞான-முத்ராய க்ருஷ்ணாய கீதாம்ருததுஹே
நம: || 5-3 ||

வஸுதேவ-ஸுதம் தேவம் கம்ஸசாணூர-மர்த்தனம் |
தேவகீபரமானந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் ||5-4||

பீஷ்ம-த்ரோண-தடா ஜயத்ரத-ஜலா காந்தார-
நீலோத்பலா
சல்ய-க்ராஹவதீ க்ருபேண வஹனீ கர்ணேன
வேலாகுலா |
அச்வத்தாம-விகர்ண-கோர-மகரா துர்யோதனு
வர்த்தினீ
ஸோத்தீர்ணு கலு பாண்டவை ரணநதீ கைவர்த்தக:
கேசவ: || 5-5 ||

பாராசர்ய-வச: ஸரோஜ-மமலம் கீதார்த்த-கந்தோத்
கடம்

लोके सज्जन-षट्पदै-रहरहः पेपीयमानं मुदा
भूयाद्भारत-पंकजं कलिमल-प्रध्वंसि नः श्रेयसे ॥ ५.६ ॥
मूकं करोति वाचालं पंगुं लंघयते गिरिम् ।
यत्कृपा तमहं वन्दे परमानन्द-माधवम् ॥ ५.७ ॥
यं ब्रह्मा वरुणेन्द्र-रुद्र-मरुतः स्तुन्वन्ति दिव्यैः स्तवै-
वेदैः सांग-पदक्रमोपनिषदै-र्गायन्ति यं सामगाः ।
ध्यानावस्थित-तद्गतेन मनसा पश्यन्ति यं योगिनो
यस्यान्तं न विदुः सुरासुरगणा देवाय तस्मै नमः ॥ ५.८ ॥

நாநாக்யானக-கேஸரம் ஹரிகதா-ஸம்போதனு போதிதம் |
லோகே ஸஜ்ஜன-ஷட்பதை-ரஹரஹ: பேபீயமானம் முதா
பூயாத்-பாரத-பங்கஜம் கலிமல-ப்ரத்வம்ஸி ந: ச்ரேயஸே || 5-6 ||
மூகம் கரோதி வாசாலம் பங்கும் லங்கயதே கிரிம் |
யத்க்ருபா தமஹம் வந்தே பரமானந்த-மாதவம் || 5-7 ||
யம் ப்ரஹ்மா வருணேந்த்ர-ருத்ர-மருத: ஸ்துன்வந்தி திவ்யை: ஸ்தவைர்-
வேதை: ஸாங்க-பதக்ரமோபநிஷதைர்-காயந்தி யம் ஸாமகா: |
த்யானுவஸ்தித-தத்கதேன-மனஸா பச்யந்தி யம் யோகினே
யஸ்யாந்தம் ந விது: ஸுராஸுரகணு தேவாய தஸ்மை நம: || 5-8 ||

लं-पृथिव्यात्मने गन्धं समर्पयामि । हं-आकाशात्मने पुष्पैः पूजयामि । यं-वाय्वात्मने धूपमाघ्रापयामि । रं-अग्न्यात्मने दीपं दर्शयामि । वं-अमृतात्मने अमृतं महानैवेद्यं निवेदयामि । सं-सर्वात्मने सर्वोपचारपूजां समर्पयामि ॥ ६ ॥

श्रीभगवद्गीता-मालामन्त्र-जपः ॥ ७ ॥

हृदयादि षडंग-न्यासः ॥ ८ ॥

भूर्भुवस्सुवरोमिति दिग्विमोकः ॥ ध्यानम् ॥ लमित्यादि पंचपूजा ॥ ९ ॥

समर्पणम् ॥

गुह्याति-गुह्य-गोप्ता त्वं गृहाणास्मत्-कृतं जपम् ।
सिद्धि-र्भवतु मे देव त्वत्प्रसादान्मयि स्थिरा ॥ १० ॥

லம்-ப்ருதிவ்யாத்மனே கந்தம் ஸமர்ப்பயாமி | ஹம்-ஆகாசாத்மனே புஷ்பை: பூஜயாமி | யம்-வாய்வாத்மனே தூபமாக்ராபயாமி || ரம் அக்ன்யாத்மனே தீபம தர்சயாமி | வம்-அம்ருதாத்மனே அம்ருதம் மஹாநைவேத்யம் நிவேதயாமி | ஸம் ஸர்வாத்மனே ஸர்வோபசார-பூஜாம் ஸமர்ப்பயாமி || 6 ||

ஸ்ரீபகவத் கீதா-மாலா-மந்த்ர-ஜப: || 7 ||

ஹ்ருதயாதி-ஷடங்க-ந்யாஸ: || 8 ||

பூர்ப்புவஸ்ஸுவரோமிதி திக்விமோக: || த்யானம் || லமித்யாதி பஞ்சபூஜா ||

ஸமர்ப்பணம் || 9 ||

குஹ்யாதி குஹ்ய-கோப்தா த்வம் க்ருஹாணாஸ்மத்-க்ருதம் ஜபம் |
ஸித்திர்ப்பவது மே தேவ த்வத்-ப்ரஸாதான்-மயி ஸ்திரா || 10 ||

अनुबन्धः ॥ ३ ॥

॥ श्रीमद्भगवद्गीता-होमविधिः ॥

शुक्लांबरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥ १ ॥
ओं भूः .... भूर्भूवस्सुवरोम् ॥ प्राणानायम्य ॥ २ ॥
संकल्पः ॥ अपवित्रः पवित्रो वा सर्वावस्थां गतोऽपि वा ।
यः स्मरेत् पुण्डरीकाक्षं स बाह्याभ्यन्तरः शुचिः ॥
मानसं वाचिकं पापं कर्मणा समुपार्जितम् ।
श्रीराम--स्मरणेनैव व्यपोहति न संशयः ॥ श्रीराम राम राम ॥
तिथि-र्विष्णुस्तथा वारो नक्षत्रं विष्णुरेव च ।
योगश्च करणं चैव सर्वं विष्णुमयं जगत् ।
श्री गोविन्द गोविन्द गोविन्द ॥

अद्य श्री भगवतः महापुरुषस्य विष्णोराज्ञया प्रवर्तमानस्य आद्यब्रह्मणः, द्वितीय-परार्धे, श्वेतवराहकल्पे, वैवस्वत-मन्वन्तरे, अष्टाविंशतितमे, कलियुगे, प्रथमेपादे जंबूद्वीपे, भारतवर्षे, भरतखण्डे, मेरोर्दक्षिणे पार्श्वे शकाब्दे अस्मिन् वर्तमाने, व्यावहारिके, प्रभावादि-षष्ठिसंवत्सराणां मध्ये, अमुकनाम-संवत्सरे-अयने-ऋतौ-मासे-पक्षे-तिथौ- वासरयुक्तायां, नक्षत्रयुक्तायां शुभनक्षत्र-शुभयोग - शुभकरण - एवंगुण-विशेषण विशिष्टायां अस्यां शुभतिथौ,

ममोपात्त-समस्त-दुरितक्षयद्वारा ज्ञानवैराग्य-सिद्ध्यर्थं श्रीकृष्णप्रसादसिद्ध्यर्थं श्रीमद्भगवद्गीता-होमं करिष्ये ॥ ३ ॥

अप उपस्पृश्य । प्राचिरुदीचीश्च तिस्र-स्तिस्रो रेखा लिखित्वा अद्भिरभ्युक्ष्य, तृणान्निरस्य । भूर्भुवस्सुवरोमित्यग्निं प्रतिष्ठाप्य ॥ ४ ॥

ओं रं रं रं रं रं रं रं रं वैश्वानर, जातवेद, इहावह, लोहिताक्ष, सर्वकर्माणि साधय स्वाहा इति मन्त्रेण मूलाधारोद्गतं संविदग्निं ललाटनेत्रद्वारा निर्गमय्य, बाह्याग्नौ संयोजयेत् । उत्तिष्ठ पुरुष हरित-पिंगल-लोहिताक्ष, देहि देहि ददापयिता मे शुद्ध्यन्तां ज्योतिरहं विरजा विपाप्मा भूयासं स्वाहा । इति प्रार्थ्य ॥ ५ ॥

परिस्तरणं पात्रसादनं च ॥ प्राक् तोयं निधाय । अग्निमिध्वा, प्रज्वाल्य । प्रागग्रै-र्दर्भै-रग्निं परिस्तृणाति । उदगग्राः पश्चात् पुरस्ताच्च । दक्षिणानुत्तरान् उत्तरानधरान् दर्भान् संस्तीर्य, द्वंद्वन्यञ्चि पात्राणि सादयति । प्रधानदर्वीं, आज्य-स्थालीं, प्रोक्षणीं, प्रणीतां, इतरदर्वीं, इध्मंच सादयित्वा । पात्राणि संमृश्य ॥ ६ ॥

प्रोक्षणी-पात्रमादाय, पवित्रमन्तर्धाय, अक्षतानवकीर्य, अप आसिच्य, उदगग्राभ्यां पवित्राभ्यां त्रिःप्रागुत्पूय, उत्तानानि

पात्राणि कृत्वा । इध्मं विस्रस्य, त्रिःप्रोक्ष्य । प्रोक्षणी-पात्रं दक्षिणतो निधाय ॥ ७ ॥

प्रणीता-पात्रमादाय, पुरतो निधाय, पवित्रमन्तर्धाय, अक्षतैः सह अद्भिः पूरयित्वा, त्रिःप्रागुत्पूय, समं प्राणै-र्हृत्वा, उत्तरेणाग्निं दर्भान् संस्तीर्य, तेषु सादयित्वा । वरुणाय नमः सकलाराधनैः स्वर्चितं इति संपूज्य । दर्भैः प्रच्छाद्य ॥ ८ ॥

अग्ने-र्दक्षिणतः ब्रह्माणं दर्भेषु निषाद्य । अस्मिन् श्रीमद्भगवद्गीताहोमकर्मणि ब्रह्माणं त्वां वृणे । ओं ब्रह्मणे नमः सकलाराधनैः स्वर्चितम् इति संपूज्य ॥ ९ ॥

अग्नौ आज्यं विलाप्य, आज्यस्थाल्या-माज्यं निरुप्य उदीचोऽङ्गारान्निरूह्य, तेष्वधिश्रित्य, ज्वलता तृणेनावद्योत्य, द्वे दर्भाग्रे प्रच्छिद्य, प्रक्षाल्य प्रत्यस्य । त्रिः पर्यग्नि कृत्वा, आज्यं कर्षन्ननुदगुद्वास्य, अंगारान् प्रत्यूह्य । उदगग्राभ्यां पवित्राभ्यां पुनराहार-माज्यं त्रिरुत्पूय । पवित्रग्रन्थिं विस्रस्य, अप उपस्पृश्य, प्रागग्र-मग्नौ प्रहरति । अथाग्नेः पश्चाद्दर्भानास्तीर्य । तेष्वाज्यस्थालीं सादयित्वा ॥ १० ॥

येन जुहोति तदग्नौ प्रतितप्य, दर्भै-रितरदर्वीं प्रधानदर्वीं च संमृश्य, पुनः प्रतितप्य, प्रोक्ष्य, आज्यस्थाल्यादुत्तरतो निधाय, दर्भानद्भिः संस्पृश्य अग्नौ प्रहरति ॥ ११ ॥

इध्म-मादाय, परिधीन् परिद्धाति । स्थविष्ठं उदगग्रं पश्चात् । अणीयांसं दीर्धं प्रागग्रं दक्षिणार्ध्यः । अणिष्ठो ह्रसिष्ठः प्रागग्रं उत्तरार्ध्यः । आधार-समिधौ आदाय, मध्यमं परिधि-मुपस्पृश्य, ऊर्ध्वे समिधौ आदधाति । अग्ने-र्दक्षिण-पूर्व-उत्तर-पूर्व-देशयोः आघार-समिधौ निधाय ॥ १२ ॥

अथाग्निं परिषिंचति । अदितेऽनुमन्यस्व, अनुमतेऽनु-मन्यस्व, सरस्वतेऽनुमन्यस्व, देव सवितः प्रसुव ॥ १३ ॥

अग्नि-पूजा ॥ चत्वारि श्रृंगास्त्रयो अस्य पादा द्वे शीर्षे सप्तहस्तासो अस्य । त्रिधा बद्धो वृषभो रोरवीति महोदेवो मर्त्याँ आविवेश ॥ एष हि देवः प्रदिशोऽनुसर्वाः पूर्वो हि जातः स उ गर्भे अन्तः । स विजायमानः स जनिष्यमाणः प्रत्यङ्मुखास्तिष्ठति विश्वतो मुखः ।

प्राङ्मुखो देव हे अग्ने अभिमुखो भव ॥ इति प्रार्थ्य ।

इन्द्राय नमः । अग्नये नमः । यमाय नमः । निर्ऋतये नमः । वरुणाय नमः । वायवे नमः । सोमाय नमः । ईशानाय नमः । इति अग्निमलंकृत्य ॥

हुतवहाय नमः । हुताशिने नमः । कृष्णवर्त्मने नमः । देवमुखाय नमः । सप्तजिह्वाय नमः । वैश्वानराय नमः । जातवेदसे नमः । यज्ञपुरुषाय नमः । अग्नये नमः । आत्मने नमः ॥ इति संपूज्य ॥ १४ ॥

होमद्रव्याणि ओं भूर्भुवस्सुवः इति प्रोक्ष्य। इध्ममादाय, द्विरभिघार्य। आज्येनाभ्यज्य। अस्मिन् श्रीमद्भगवद्गीता-होमकर्मणि ब्रह्मन् इध्ममाधास्ये। 'ओं आधत्स्व' इत्यनुज्ञातः हस्ताभ्यां इध्मं आदधाति ॥ १५ ॥

स्रुवेणाज्य-मादाय, तूष्णीं आघारौ आघारयति। सर्वाणि इध्म-काष्ठानि संस्पृश्य, इतरद्व्याँ वायव्या-दाग्नेयान्तं। प्रजापतय इदं न मम। प्रधान-दर्व्या नैर्ऋत्यादीशानान्तं। स्वाहा। इन्द्रायेदं न मम ॥

उत्तरार्धपूर्वार्धे, अग्नये स्वाहा। अग्नय इदं न मम। दक्षिणार्ध पूर्वार्धे, सोमाय स्वाहा। सोमायेदं न मम। समं पूर्वेण मध्ये, अग्नये स्वाहा। अग्नय, इदं न मम।

आरंभ-प्रभृति एतत्-क्षण-पर्यन्तं मध्ये संभावित-समस्त-दोष-प्राय-श्चित्तार्थं सर्वप्रायश्चित्तं होष्यामि ॥ ओं भूर्भुवस्सुवः स्वाहा ॥ प्रजापतय इदं न मम ॥ १६ ॥

ओं सर्वात्म-संयोग-पीठात्मने स्वाहा। धर्माय स्वाहा। अधर्माय स्वाहा। ज्ञानाय स्वाहा। अज्ञानाय स्वाहा। वैराग्याय स्वाहा। अवैराग्याय स्वाहा। ऐश्वर्याय स्वाहा। अनैश्वर्याय स्वाहा। वास्तुपुरुषाय स्वाहा ॥ १७ ॥

(i) अथावरण-होमः ॥ क्रां हृदय-देवाय स्वाहा। क्रीं शिरोदेवाय स्वाहा। क्रूं शिखा-देवाय स्वाहा। क्रैं कवच-

देवाय स्वाहा। क्लौं नेत्रदेवाय स्वाहा। क्लः अस्त्रदेवाय स्वाहा ॥ क्लीं कृष्णाय गोविन्दाय गोपीजनवल्लभाय स्वाहा ॥

(ii) वासुदेवाय स्वाहा। संकर्षणाय स्वाहा। प्रद्युम्नाय स्वाहा। अनिरुद्धाय स्वाहा। शांत्यै स्वाहा। श्रियै स्वाहा। सरस्वत्यै स्वाहा। रत्यै स्वाहा ॥

(iii) रुक्मिण्यै स्वाहा। सत्यभामायै। जांबवत्यै। नाग्नि-जित्यै। मित्रविन्दायै। कालिन्द्यै। लक्ष्मणायै। सुशीलायै ॥

(iv) पीतवर्णाय वसुदेवाय। यशोदायै कनकाभायै। नन्दाय कर्पूर-गौर-वर्णाय। राधायै कुंकुम-गौरवर्णायै। देवाय शंखकुन्द-धवलाय। कलापश्यामायै सुभद्रायै। गोपेभ्यः गोपीभ्यः स्वाहा ॥

(v) अर्जुनाय। दारुकाय। विष्वक्सेनाय। सात्यकये। गरुडाय। नारदाय। पर्वताय स्वाहा ॥

(vi) इन्द्रनिधये। नीलनिधये। मुकुन्दनिधये। मकर-निधये। अनन्तनिधये। कच्छपनिधये। विद्यानिधये। पद्मपर-मानन्द-मोक्षनिधये स्वाहा ॥

(vii) इन्द्राय स्वाहा। अग्नये स्वाहा। यमाय। निर्ऋतये। वरुणाय। वायवे। सोमाय। ईशानाय। ब्रह्मणे। आदि-शेषाय स्वाहा ॥

(viii) वज्राद्यायुधेभ्यः स्वाहा ॥ १८ ॥

(एवं अंगावरणादि वज्रावरणान्ते आवीतं भगवन्तं यजेत् ॥)

प्रधानहोमः ॥ प्रतिश्लोकावसाने, 'ओं क्लीं कृष्णाय गोविन्दाय गोपीजनवल्लभाय परब्रह्मणे स्वाहा' इति मन्त्रेण जुहुयात् ॥ (७०० आहुतयः) ॥ १९ ॥

ततो होमावशिष्टेन आज्येन स्रुचं पूरयित्वा पुष्पं फलं अग्रे निधाय स्रुवेणाच्छाद्य "ओं क्लीं कृष्णाय गोविन्दाय गोपीजनवल्लभाय स्वाहा" इति मन्त्रेण उत्थितो जुहुयात् ॥ २० ॥

व्याहृतिहोमः ॥ भूरग्नये च पृथिव्यै च महते च स्वाहा। अग्नये पृथिव्यै महत इदम् ॥ भुवो वायवे चान्तरिक्षाय च महते च स्वाहा। वायवे अन्तरिक्षाय महत इदम्। सुवरादित्याय च दिवे च महते च स्वाहा। आदित्याय दिवे महत इदम्। भूर्भुवस्सुवश्चन्द्रमसे च नक्षत्रेभ्यश्च दिग्भ्यश्च महते च स्वाहा। चन्द्रमसे नक्षत्रेभ्यो दिग्भ्यो महत इदम् ॥ २१ ॥

पूर्णाहुतिः ॥ ओं क्लीं ॥ इतः पूर्वं प्राण-बुद्धि-देह-धर्माधिकारतो जाग्रत्स्वप्न-सुषुप्त्यवस्थासु मनसा वाचा कर्मणा हस्ताभ्यां पद्भ्या-मुदरेण शिश्ना यत् स्मृतं यदुक्तं यत्कृतं तत्सर्वं ब्रह्मार्पणं भवतु स्वाहा ॥ ब्रह्मार्पणं ब्रह्महवि-र्ब्रह्माग्नौ ब्रह्मणा हुतम्। ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्मसमाधिना ॥ २२ ॥

प्रजापते न त्वदेतान्यन्यो विश्वा जातानि परिता बभूव। यत्कामास्ते जुहुमस्तन्नो अस्तु वयꣳ स्याम पतयो रयीणाꣳ स्वाहा। प्रजापतय इदम् ॥

भूःस्वाहा । अग्नय इदं । भुवः स्वाहा । वायव इदम् । सुवस्स्वाहा । सूर्यायेदम् ॥

यदस्य कर्मणोऽत्यरीरिचं यद्वा न्यून-मिहाकरम् । अग्नि-ष्टत्स्विष्टकृद्विद्वान्-सर्वँ स्विष्टँ सुहुतं करोतु स्वाहा । अग्नये स्विष्टकृत इदम् ॥ २४ ॥

परिध्यंजनम् । परिधिप्रहरणम् । मध्यमं प्रहृत्य अन्यौ युगपत् ॥

दर्वीद्वयेन संस्रावं परिधी-नभिजुहोति ॥ स्वाहा । वसुभ्यो रुद्रेभ्य-आदित्येभ्यः सँस्राव-भागेभ्य इदम् ॥

ओं भूर्भुवस्सुवः स्वाहा ॥ प्रजापतय इदम् ॥ २५ ॥

अस्मिन् होमकर्मणि अविज्ञात-प्रायश्चित्तानि करिष्ये । अनाज्ञातं यदाज्ञातं । यज्ञस्य क्रियते मिथु । अग्ने तदस्य कल्पय । त्वँहि वेत्थ यथातथँ स्वाहा । अग्नय इदम् ॥

पुरुष संमितो यज्ञः । यज्ञः पुरुषसंमितः । अग्ने तदस्य कल्पय । त्वँहि वेत्थ यथातथँ स्वाहा । अग्नय इदम् ॥

यत्पाकत्रा मनसा दीनदक्षा न । यज्ञस्य मन्वते मर्तासः । अग्निष्टद्धोता क्रतुविद्विजानन् । यजिष्टो देवाँ ऋतुशो यजाति स्वाहा ॥ अग्नय इदम् ॥

भूस्स्वाहा । अग्नय इदम् । भुवस्स्वाहा । वायव इदम् । सुवस्स्वाहा । सूर्यायेदम् । ओं भूर्भुवस्सुवः स्वाहा ॥ प्रजापतय इदम् ॥ २६ ॥

अस्मिन् होमकर्मणि मध्ये संभावित-मन्त्रलोप-तन्त्रलोप-द्रव्यलोप-क्रियालोप-आज्यलोप-न्यूनातिरिक्त विस्मृतिविपर्यास-प्रायश्चित्तार्थं सर्वप्रायश्चित्तं होष्यामि ॥ ओं भूर्भुवस्सुवः स्वाहा । प्रजापदय इदं न मम ॥ २७ ॥

इदं विष्णु-र्विचक्रमे त्रेधा निदधे पदम् । समूढ-मस्य पाꣳ सुरे । श्री विष्णवे स्वाहा ॥ श्री विष्णवे परमात्मन इदम् ॥

त्र्यंबकं यजामहे सुगन्धिं पुष्टिवर्धनम् । उर्वारुकमिव बन्धनान्मृत्योर्मुक्षीय मामृतात् ॥ नमो रुद्राय पशुपतये ॥ रुद्राय पशुपतय इदम् ॥ अप उपस्पृश्य ॥

सप्त ते अग्ने समिध-स्सप्त-जिह्वास्सप्त-ऋषय-स्सप्त धाम-प्रियाणि । सप्त होत्रा-स्सप्तधा त्वा यजन्ति । सप्तयोनीरा-पृणस्व घृतेन स्वाहा ॥ अग्नये सप्तवत इदम् ॥ आज्यपात्र-मुत्तरतो निधाय ॥ प्राणानायम्य ॥ २८ ॥

परिषेचनम् ॥ अदितेऽन्वमꣳस्थाः । अनुमतेऽन्वमꣳस्थाः । सरस्वतेऽन्वमꣳस्थाः । देव सवितः प्रासावीः ॥ २९ ॥

प्रणीतापात्रमादाय । प्रतिजलमिश्रम् । प्राच्यां दिशि देवो ऋत्विजो मार्जयन्ताम् । दक्षिणस्यां दिशि मासाः पितरो

मार्जयन्ताम् । प्रतीच्यां दिशि गृहाः पशवो मार्जयन्ताम् । उदीच्यां दिशि आप-ओषधयो वनस्पतयो मार्जयन्ताम् । ऊर्ध्वायां दिशि यज्ञः संवत्सरो यज्ञपति-र्मार्जयन्ताम् ॥ पुरस्तात् अक्षतोपरि निस्राव्य ॥ ब्राह्मणेष्वमृतꣳ हितं । येन देवाः पवित्रेण । आत्मानं पुनते सदा । तेन सहस्रधारेण । पावमान्यः पुनन्तु मा ॥ इत्यात्मानं प्रोक्ष्य ॥ ३० ॥

ब्रह्मन् वरं ते ददामि । ब्रह्मणे नमः । सकलाराधनैः स्वर्चितम् ॥ ब्रह्माणं उद्वास्य । प्रागादि परिस्तरणं उत्तरे विसृजेत् ॥ ३१ ॥

स्वाहा ॥ अग्ने-रुपस्थानं करिष्ये । अग्ने नय सुपथा राये अस्मान् विश्वानि देव वयुनानि विद्वान् । युयोध्यस्मज्जुहुराणमेनो भूयिष्ठां ते नम उक्तिं विधेम ॥ अग्नये नमः ॥

मन्त्रहीनं क्रियाहीनं भक्तिहीनं हुताशन । यद्धुतं तु मया देव परिपूर्णं तदस्तु ते । प्रायश्चित्तान्यशेषाणि तपः-कर्मात्मकानि वै । यानि तेषामशेषाणि श्रीकृष्णानुस्मरणं परम् ॥ अभिवादये नमस्कारः ॥ ३२ ॥

अग्निं आत्मन्युद्वासयामि । हृदये अंजलिं दद्यात् ॥३३॥

रक्षा ॥ स्वस्त्यस्तु विश्वस्य खलः प्रसीदतां ध्यायन्तु भूतानि शिवं मिथो धिया । मनश्च भद्रं भजता-दधोक्षजे आवेश्यतां नो मतिरप्यहैतुकी ॥ ३४ ॥

ஸ்ரீமத் பகவத் கீதை

சுலோகங்களின் அகராதி

ர

ஸ்ரீமத் பகவத்கீதை
உரையின் அகராதி

—★—

அ

ஆ

ம

இதே ஆசிரியர் உரை எழுதியவை

I. உபநிஷதங்கள்

ஈச-கேன-கட உபநிஷதங்கள் (பக்கம் 150) ... ரூ. 1 75
காலிகோ ... ரூ. 2 50
பிரச்ன-முண்டக-மாண்டூக்ய-ஐதரேய உபநிஷதங்கள் (பக்கம் 172) ... ரூ. 1 75
காலிகோ ... ரூ. 2 50
தைத்ரீய உபநிஷத்து (பக்கம் 91) ... ரூ. 1 50
காலிகோ ... ரூ. 2 50
சாந்தோக்ய-பிருஹதாரண்யக உபநிஷத்துக்களின் ஸாரம். பிரம்மஸூத்ரத்துடன் (மூன்றுவது பதிப்பு) (பக்கம் 320) ... ரூ. 3 50
காலிகோ ... ரூ. 4 50
மஹாநாராயண உபநிஷத்து (தைத்திரிய நாராயணவல்லி) (பக்கம் 146) ... ரூ. 3 00

II. பகவத்கீதை

ஸ்ரீமத் பகவத்கீதை (பாராயண கீதை) தமிழில் பொழிப்புரையுடன் (மூன்றுவது பதிப்பு) பக்கம் 170 ... ரூ. 1 75
ஸ்ரீமத் பகவத்கீதை மூலம் (தமிழ்) பாக்கட் சைஸ் ... ரூ. 1 00
ஸ்ரீமத் பகவத்கீதை வெண்பா (முத்து ஐயர் இயற்றியது) (பக்கம் 223) ... ரூ. 2 00

III. வேதாந்த ப்ரகரணம்

விவேக சூடாமணி (பக்கம் 392+XII) ... ரூ. 4 25
காலிகோ ... ரூ. 5 50

IV. வேதநூல்களும் பிரயோகங்களும்

ஸ்ரீ ருத்ரம்-சமகம் (மஹாங்யாஸத்துடன்-பக்கம் 296) ... ரூ. 4 00
காலிகோ ... ரூ. 5 00

புருஷ ஸூக்தம் (அச்சில்)			
தைத்திரீய மந்த்ரகோசம் :—			
நாகரத்தில் ஸ்வரத்துடன் முதல் பாகம்	...	ரூ.	1 75
,, இரண்டாம் பாகம்	...	ரூ.	2 00
ஸ்ரீதேவீமாஹாத்மியம்	...	ரூ.	8 00
ஸ்ரீதேவீமாஹாத்மியம் பாராயணம் (தமிழில் மூலம்)	...	ரூ.	2 00
தைத்திரீய மந்த்ரகோசம் (தமிழ்) உபநிஷத்து, ஸூர்ய நமஸ்காரம், ருத்ரம், சமகம், ஸூக்தங்கள், ஸ்வரத்துடன்	...	ரூ.	3 50
உபநயனம் (பக்கம் 104)	...	ரூ.	1 00
காலிகோ	...	ரூ.	1 50
ஜபவிதானம் (பக்கம் 90)	...	ரூ.	1 00
ஸந்தியாவந்தனம் (பக்கம் 144)	...	ரூ.	1 50
பிளாஸ்டிக் கவர்	...	ரூ.	2 00
பூஜாவிதானம் (அச்சில்)			
தேவீ ஸூக்தங்களும் உபநிஷதங்களும்	...	ரூ.	1 50

V. புராணங்கள்

ஸ்ரீமத் பாகவத ஸாரம்-முதல் பாகம் (ஸ்கந்தம் 1-9) (பக்கம் 560)	...	ரூ.	10 00
ஷ இரண்டாம் பாகம் (ஸ்கந்தம் 10-12) பக்கம் 560	...	ரூ.	12 50

VI. ஸ்தோத்ரங்கள்

ஸௌந்தர்யலஹரீ பாஷ்யம் (அச்சில்)			
ஸௌந்தர்யலஹரீ (மூலம்)	...	ரூ.	0 75
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம் ஆரும் பதிப்பு (அச்சில்)			
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் (பாராயணத்திற்குரியது) தமிழில்	...	ரூ.	0 75
,, நாகரம்-தமிழ்	...	ரூ.	1 50
ஸ்ரீ லலிதா த்ரிசதீ பாஷ்யம் பக்கம் 184	...	ரூ.	2 50
ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்ரம்	...	ரூ.	1 00
தேவீ ஸ்தோத்ரங்கள்	...	ரூ.	1 00
சிவ ஸ்தோத்ரங்கள்	...	ரூ.	0 75

சிவானந்தலஹரீ பாஷ்யம் (பக்கம் 160)	காலிகோ	...	ரூ.	2 75
சிவானந்தலஹரீ மூலம்	(அச்சில்)			
விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்	(பக்கம் 312)	...	ரூ.	3 50
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் (பாராயணத்திற்குரியது-பக்கம் 96)		...	ரூ.	1 50
ஸ்ரீக்ருஷ்ணகர்ணாம்ருதம்	(பக்கம் 271)	...	ரூ.	4 50
அஷ்டோத்தர சத நாமாவளிகள்	(பக்கம் 60)	...	ரூ.	0 75
ஸ்ரீ விஷ்ணு ஸ்தோத்ரங்கள்		...	ரூ.	1 00
ஸ்ரீ வித்யா (நவாவரண பூஜை—ஹோமவிதி - பாராயணம், பக்கம் 260)		...	ரூ.	5 00
	காலிகோ	...	ரூ.	6 50

OUR SANSKRIT ENGLISH SERIES

(With English Translation and copious notes)

			Rs. P.
Isavasya Upanishad		...	1-00
Kena Upanishad		...	1-00
Kathopanishad		...	2-00
Prasnopanishad		...	1-50
Mundaka Upanishad		...	1-50
Mandukya Upanishad		...	1-00
Aitareya Upanishad		...	1-75
Taittiriyopanishad		...	3-00
Svetasvatara Upanishad		...	2-00
Brihadaranyaka Upanishad		...	9-00
Mahanarayana Upanishad	Ordinary	...	6-00
,, ,,	Calico	...	7-00
Taittiriya-Mantra Kosa	Part I	...	1-75
,, ,,	Part II	...	2-00
Upadeshasahasri of Sri Sankara		...	6-00
Atmabodha of Sri Sankaracharya		...	4-00
Vakyavritti and Atmajnana Upadeshavidhi of Sri Sankaracharya		...	2-50
Yatindramata Dipika of Srinivasadasa		...	7-00
Stotraratna of Sri Yamunacharya		...	0-75
Narada Bhakti Sutras	Ordinary	...	4-50
,, ,,	Calico	...	5-50
Sri Rudraprasna		...	0-50
Universal Prayers	Ordinary	...	4-50
,, ,,	Calico	...	5-50
The Divine Life		...	5-50

			Rs. P.
The Devimahatmyam or Sri Durgasaptasati		...	3–50
Srimad Bhagavad Gita (With gloss of Sridharaswami)		...	9–00
,, (Pocket size)		...	2–50
Brahma-Sutra Bhashya of Sri Sankaracharya		...	25–00
Brahma-Sutras		...	9–00
The Last Message of Shri Krishna-Uddhava Gita		...	7–50
Vivekachudamani	Calico	...	5–50
	Ordinary	...	4–50
Ashtavakra Samhita	Calico	...	5–00
	Ordinary	...	4–00
Altar Flowers	Calico	...	5–00
	Ordinary	...	3–75
Bhasha-Pariccheda with Siddhanta-Muktavali		...	4–00
Vedantasara of Sadananda	Calico	...	4–00
	Ordinary	...	2–75
Minor Upanishad		...	2–00
Aparokshanubhuti or Self-Realisation		...	2–00
Vairagya Sathakam of Bhartruhari		...	1–50
Shiva Mahimna Stotram		...	1–25
Vedanta Sangraha of Sri Ramanuja		...	10–00
Vedanta-Paribhasha		...	6–00
Mandukya Upanishad with Gowdapada's Karika and Sankara's Commentary		...	10–00
The Quintessence of Vedanta		...	5–00
Pancikaranam		...	2–00
Drg-Drsya-Viveka		...	1–50
Vedic Prayers		...	1–50

SRI RAMAKRISHNA MATH

MYLAPORE :: MADRAS-600004.

तन्नो हंसः प्रचोदयात्

RAMAKRISHNA MATH

SRIMAD BHAGAVAD GITA **Price Rs. 8-00**